கலைஞரின்
கடிதங்கள்



46

05.10.2011 - முதல்
15.08.2012 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 46

05.10.2011 - 15.08.2012

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன் நூலகம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549 / 97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00** CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

A2253
8894-8116

தி.மு.க. தலைமைக் கழக
பொதுத்தேர்தல்
அறிக்கை குழு
அண்ணா நூல்
நிலையம்
சென்னை-18



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்”
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
3592. என் விருப்பத்தை வெளியிடுகிறேன்!	5-10-2011	23
3593. அய்யகோ! அ.தி.மு.க. ஆட்சியில் அரசு நிலம் அரோகரா!	10-10-2011	29
3594. அன்றும், இன்றும் ஒரே நிலைதான்!	30-10-2011	36
3595. உதவாதினி ஒரு தாமதம்; உடனே விழி; தமிழா!	31-10-2011	44
3596. சிற்றூர், பேரூர் தேர்தல்களிலும் சில்மிஷங்கள்!	1-11-2011	49
3597. அந்த இதயம்; இதையும் தாங்குமோ?	4-11-2011	56
3598. என் உடன்பிறப்புகள் ஏமாற மாட்டார்கள்!	7-11-2011	63
3599. அய்யரின் மனசாட்சியே அதைச் சொல்லும்!	8-11-2011	66
3600. யாருமே அங்கே இல்லையா?	10-11-2011	74

3601. இந்தப் புவியே அவர் புகழ் பாடட்டும்!	19-11-2011	79
3602. அறவழி - அமைதி வழி - அதுவே அண்ணா வழி!	12-12-2011	87
3603. மறைமலையார் கருத்தை மறைப்பதோ?	01-01-2012	94
3604. என்ன பதில் சொல்லப் போகிறார்?	08-01-2012	101
3605. நாம் தொடங்கிய நடமாடும் கோயில் திருப்பணி!	14-1-2012	107
3606. விஷம்; ஒரு துளி போதாதா?	3-2-2012	113
3607. அசந்துதான் போனார்கள்!	6-2-2012	127
3608. திராவிட இயக்க நூற்றாண்டு தொடக்கம்!	18-2-2012	133
3609. இன எழுச்சிக்கு எடுக்கும் விழா!	24-2-2012	139
3610. சொன்னது என்ன? என்ன? நடந்தது என்ன? என்ன?	28-3-2012	145
3611. அண்ணாவின் கனவை அழிக்கத் துடிக்கும் ஆரியமாயை!	03-04-2012	155
3612. அராஜகத்திற்கு முடிவுகட்ட; அணி திரள்வோம்!	08-04-2012	162
3613. புத்தியுள்ள தமிழா; நீ புரிந்துகொண்டால் சரி!	9-4-2012	167
3614. பாவம்; பன்னீர்செல்வம்!	14-4-2012	174

3615. பழைய கதை - மறந்துபோமோ?	15-4-2012	180
3616. குன்றின் மேலிட்ட விளக்காகும்; தனித் தமிழ் ஈழம்!	20-4-2012	189
3617. “பிறப்பொக்கும்” என்பது கூடாதாம்!	21-4-2012	195
3618. உண்மைத் தமிழர் உணர்ந்தே தீர்வர்!	22-04-2012	205
3619. காலத்தால் மறையாத காற்றில் கலந்த கீதம்!	25-4-2012	213
3620. என்று தணியும் ஈழத்தமிழர் தாகம்!	28-4-2012	220
3621. எதைக் கொண்டு; இதைப் பார்ப்பது?	5-5-2012	232
3622. அண்ணா பெயரால் கட்சி; கேலிக்கூத்து!	8-5-2012	238
3623. அரசியல் திருப்பம்; அன்று நடந்தது என்ன? என்ன?	14-5-2012	245
3624. காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ?	21-5-2012	251
3625. ஒரு சுயமரியாதைக்காரனின் சூளுரை!	23-05-2012	261
3626. மாநில அரசே செயல்படாத நிலையில்...	25-5-2012	266

3627. தாமதமின்றி - தக்கதோர் முடிவு காண்பீர்!	27-5-2012	272
3628. அலைகடலென ஆர்த்தெழுவோம்!	29-5-2012	278
3629. தி.மு.க.வின் மாநில சுயாட்சிக்கு ஜெ. பாடிய பின்பாட்டு!	7-6-2012	286
3630. விரிக்கிற் பெருகும்; விரிஞ்சி விடுகிறேன்!	8-6-2012	295
3631. ஜனநாயகம் கேலிப் பொருளாகி விடுவதா?	9-6-2012	304
3632. "OTHERWISE - ஜனாதிபதி"	10-6-12	310
3633. யார் பெற்ற பிள்ளைக்கு; யார் "தாய் முறை" கோருவது?	11-6-2012	315
3634. தலைமைச் செயற்குழு, தக்க முடிவெடுக்கும்!	21-6-2012	321
3635. களம் காணத் துடிக்குது, கழகப்படை!	27-06-2012	328
3637. "இன்னே செல்க! இனிதே வெல்க!"என வாழ்த்தி வழியனுப்புகிறேன்!	3-7-2012	335
3637. என் உயிரினுமேலான அன்பு உடன்பிறப்புக்காள்!	05-07-2012	342
3638. பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மையாமோ?	6-7-2012	343
3639. இவை எல்லாமே அரசியல்தானா?	09-07-2012	348

3640. என்ன நடக்கிறது தமிழகத்தில்?	13-7-2012	355
3641. குழப்பம் எனக்கூறி குதர்க்கம் விளைக்காதீர்!	19-7-2012	361
3642. முரசொலி எண்ணிக்கை மும்மடங்கு பெருக வேண்டும்!	24-7-2012	366
3643. ‘‘எல்லாம் நானே’’ என்பது நல்லோர் போற்றும் வழியல்ல!	26-07-2012	370
3647. ஈழத்தமிழர் இன்னல் களைந்திட வாரீர்!	02-08-2012	381
3648. விவசாயிகள் வேதனையும், விதவிதமான அறிக்கைகளும்!	05-08-2012	387
3649. வழக்கை எதிர்நோக்குகிறோம்!	15-8-2012	393

3592. என் விருப்பத்தை வெளியிடுகிறேன்!

உடன்பிறப்பே,

தி.மு. கழகத்தை மட்டுமே தாக்கிப் பேசிவந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளரான தோழர் ராமகிருஷ்ணன் தற்போது ஆளுங்கட்சியான அ.தி.மு.க. வையும் சிதம்பரம் கூட்டத்தில் கடுமையாகத் தாக்கிப் பேசியிருக்கிறார். அவரது பேச்சின் ஒரு பத்தியை மட்டும் எடுத்து வெளியிட்ட "தினமலர்",

> "உள்ளாட்சித் தேர்தலில் கூட்டணி அமைத்து போட்டியிடும் முதல் அணி நாங்கள் (சி.பி.எம்.) தான். நாங்கள் இல்லையென்றால் அ.தி.மு.க. தற்போது ஆட்சிக்கு வந்திருக்க முடியாது. ஏற்றி விட்ட ஏணியை உதைத்து தள்ளியிருக்கிறார். சட்டசபை தேர்தலில் பலமான அணி அமைத்து வெற்றி பெற்றோம் என்பதை மறந்து விட்டு ஜெயலலிதா செயல்படுகிறார்"

என்று பேசியதாக குறிப்பிட்டுள்ளது. ஏன், இன்றைய "தீக்கதிர்" நாளிதழிலே கூட,

> "அரசே தனது குடிமக்களைக் கொல்லக் கூடாது என்ற இயக்கம் உலகளவில் வலுப்பெற்று வருகிறது. ஆனால், தமிழகத்தில் இதற்கு முற்றிலும் மாறாக அரசு வன்முறை தலைவிரித்தாடுகிறது. காவல் துறையை சீர்திருத்துவதற்குப் பதிலாக கொம்பு சீவி விடுகிற காரியத்தை சட்டமன்றத்திலேயே ஜெயலலிதா அரங்கேற்றினார். அதன் தொடர் விளைவாக காவல்துறை கடிவாளம் இல்லாத குதிரையாக ஆட்டம் போடத் தொடங்கியுள்ளது. அ.தி.மு.க. அரசு பொறுப்பேற்ற ஐந்து மாதங்களில் எட்டு காவல் நிலைய கொலைகள் நிகழ்ந்

துள்ளன. இது மனித உரிமை ஆர்வலர்களிடையே பெரும் அதிர்ச்சியையும், கொதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. கடந்த தி.மு.க. ஆட்சியில் கடைசி ஒன்றரை ஆண்டுகளில் 8 காவல் நிலைய கொலைகள் நடந்தன. ஆனால், அ.தி.மு.க. ஆட்சியில் 5 மாதத்தில் காவல் நிலையங்களில் 8 பேரைக் கொன்று சாதனை படைத்து விட்டார்கள். அ.தி.மு.க. அரசு பொறுப்பேற்றது முதல் காவல் துறையினர் தொடர்ந்து அத்துமீறல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்ற புகார் பரவலாக உள்ளது. அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்போதுதான் குற்றங்கள் குறைவாக உள்ளது என்று ஊடகங்கள் மிகைப்படுத்தி செய்தி வெளியிடுகின்றன. ஆனால் உண்மை அதற்கு மாறாக உள்ளது."

என்று எழுதப்பட்டுள்ளது.

நெல் கொள்முதல் விலையை ஒவ்வொரு ஆண்டைப் போல இந்த ஆண்டும் உயர்த்தி ஜெயலலிதா இன்று அறிவித்திருக்கிறார். கம்யூனிஸ்ட் கட்சியின் சார்புடைய தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் இன்று விடுத்துள்ள அறிக்கையில், "நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 1500 விலை வழங்க வேண்டுமென்று விவசாய சங்கங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளதை கணக்கிலெடுத்துக் கொள்ளாத தமிழக அரசின் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறோம். தமிழக அரசின் இந்த ஊக்கத் தொகை அறிவிப்பு விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க உதவாது என்பதைச் சுட்டிக்காட்டுகிறோம்" என்று தெரிவித்திருக்கிறார்.

ஆனால் சிதம்பரம் கூட்டத்தில் பேசிய தோழர் ராமகிருஷ்ணன் அவர்கள் "இந்தத் தேர்தலில் தி.மு.க. வை படுதோல்வி அடையச் செய்ய வேண்டியது நமது கடமை" என்று நம் மீதும் தேவையில்லாமல் சீறிப் பாய்ந்திருக்கிறார். எதற்காக தி.மு. கழகத்தை படுதோல்வி அடையச் செய்ய வேண்டுமென்று ராமகிருஷ்ணன் கூறுகிறார்? திராவிட முன்னேற்றக் கழகம் என்ன கொள்கைரீதியாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மாறுபட்டதா? நூற்றுக்கு நூறு என்று இல்லாவிட்டாலும், நூற்றுக்கு 95 சதவிகிதம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகளை எதிர்க்கட்சியாக இருந்து பிரச்சாரம் செய்ததும்

- பிறகு அந்தக் கொள்கைகள் வெற்றியடைய போராடியதும் - ஆளுங்கட்சியாக இருந்து அந்தக் கொள்கைகளை சட்ட ரீதியாக நிறைவேற்றியதும் ராமகிருஷ்ணன் அறியாத செய்திகளா? மற்ற மார்க்சிஸ்ட் தோழர்கள் அதை அறிய மாட்டார்களா?

1971ஆம் ஆண்டு தி.மு. கழக அரசில் இந்தியாவிலேயே முதன் முறையாக "குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்கல்) சட்டத்தைக்"கொண்டு வந்து ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு அவர்கள் குடியிருக்கும் வீட்டுமனைகள் சொந்தமாக்கப்பட்டபோது - அதற்காக திருத்துரைப் பூண்டியில் நடைபெற்ற விழாவில் பேசிய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவரான தோழர் மணலி கந்தசாமி அவர்கள் "கம்யூனிஸ்ட் கட்சியினர் ரத்தம்சிந்தியும் நடைபெறாத காரியத்தை, கருணாநிதி ஒரு துளிமையினால் சாதித்துவிட்டார்" என்று கூறியது தோழர் ராமகிருஷ்ணனுக்குத் தெரியாத ஒன்றா?

வங்கிகளை நாட்டுடைமையாக்க பிரதமர் இந்திரா காந்தி முன் வந்தபோது - சிண்டிகேட் காங்கிரஸ் தலைவர்களின் எதிர்ப்பையும் மீறி - அவருக்கு தி.மு.கழகம் ஆதரவு அளித்ததும் - 1969 முதல் 1971 வரை நான் முதல் அமைச்சராக தமிழகத்தில் இருந்தபோது பேருந்துகளை நாட்டுடைமையாக்கியதும், போக்குவரத்துக் கழகங்களையெல்லாம் உருவாக்கியதும், குடிசை மாற்று வாரியம் கண்டதும், மேற்கு வங்கத்திலேயே இதுவரை நடைமுறைப்படுத்தாத கைரிக்ஷாக்களை ஒழித்து இலவச சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கியதும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகளுக்கு முரண்பாடானவைகளா?

சோஷலிச சமுதாய அமைப்பைக் காண விரும்பும் ஒரு அரசு, நிலச் சீர்திருத்தத்தில் கண் துடைப்பாகக் காரியமாற்றாமல் படிப்படியாக முற்போக்கான சட்டங்களைக் கொண்டு வருவதில் முனைப்பாக இருந்திடல் வேண்டும் என்ற அடிப்படையில் தி.மு. கழக ஆட்சியில் நில உச்சவரம்பு சட்டத்தைக் கொண்டு வந்து, ஒரு லட்சத்து 78 ஆயிரத்து 880 ஏக்கர் நிலம் உபரி நிலம் என்று கண்டறிந்து, கைப்பற்றி, அதனை தகுதியுள்ள நிலமற்ற ஒரு லட்சத்து 37 ஆயிரத்து 236 ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதும், அதில் 61 ஆயிரத்து 985 பேர் ஆதி திராவிடர்கள் என்பதும், 204 பேர் பழங்குடியினர் என்பதும் கம்யூனிசத்திற்கு

எதிரான கொள்கையா? இவைகள் எல்லாம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகளுக்கு விரோதம் என்று தோழர் ராம கிருஷ்ணன் கூறுகிறாரா?

நான் கடைப்பிடித்த மார்க்சிஸ்ட் கொள்கையின் விளைவாகத்தான் - மாக்ஸிம் கார்க்கி என்ற ரஷ்ய படைப்பாளியின் எழுத்தோவியமான "தாய்" காவியத்தை கவிதை வடிவில் எழுதி, அதற்கு முதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவர்களான தோழர்கள் என். சங்கரய்யா அவர்களும், ஆர். நல்லகண்ணு அவர்களும் அணிந்துரைகள் வழங்கியிருக்கிறார்கள். அந்த அணிந்துரைகளை தோழர் ராமகிருஷ்ணன் ஒருமுறை படித்துப் பார்த்தாலே கம்யூனிசத்தில் எனக்குள்ள ஈடுபாட்டினை அவர் எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

அவ்வளவு ஏன்? தோழர் ராமகிருஷ்ணன் என்னுடன் கலந்து கொண்ட எத்தனையோ கூட்டங்களில், நான் பேசும்போது தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும் என் வாழ்வில் சந்திக்காமல் இருந்திருப்பேனே யானால், நான் ஒரு கம்யூனிஸ்ட்டாகத்தான் இருந்திருப்பேன் என்று குறிப்பிட்டதை அவர் மறந்திருக்க முடியாது!

நான் என்ன, இன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா மாதிரி, குஜராத் முதல் அமைச்சர் நரேந்திர மோடி அவர்களை பதவியேற்பு விழாவிற்கு அழைத்தவனா? அல்லது அவர் அண்மையில் மேற்கொண்ட மூன்று நாள் உண்ணாவிரதத்திற்கு அ.தி.மு.க. சார்பில் ஜெயலலிதா இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை அனுப்பி ஆதரவு தெரிவித்தாரே, அப்படி ஆதரவு கொடுத்தவனா? ஆனால் இதையெல்லாம் கண்ட பிறகும், அந்த அ.தி.மு.க. வோடு உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் உடன்பாடு கண்டிட முன் வந்து, அலையாய் அலைந்து மூன்று நாட்கள் பத்திரிகையில் வந்ததுபோல குடிக்கத் தண்ணீர்கூடக் கொடுக்காமல் அலைக் கழித்து பேரம் படியாமல் வெறுங்கையோடு திரும்பி வரும் நிலையை ஏற்படுத்தியவனா?

நான் முதலமைச்சர் பதவியிலே இருந்த போது, இதே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் என்னை கோட்டையிலே சந்தித்து, ஜெயலலிதாவும் அவருக்கு வேண்டியவர்களும் சிறுதாவூர் கிராமத்தில் தலித்களுக்காக

ஒதுக்கப்பட்ட நிலத்தை கையகப்படுத்திக்கொண்டு விரட்டி விட்டார்கள், அதைப் பற்றி நீதி விசாரணைக்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டவுடன், அந்தக் கோரிக்கையை ஏற்று நீதியரசர் சிவசுப்ரமணியம் விசாரணைக் கமிஷன் அமைத்து உத்தரவிட்டேனே தவிர, மார்க்சிஸ்ட்களின் இந்தக் கோரிக்கை எங்கள் கட்சியின் கொள்கைகளுக்கு விரோதமானது என்று கூறியா புறக்கணித்தேன்? எதற்காக தோழர் ராமகிருஷ்ணன் தி.மு.கழகத்தை படுதோல்வி அடையச் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்?

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு உடன்பாடான எத்தனை காரியங்களை தி.மு. கழக ஆட்சியிலே அடுக்கடுக்காக அறிவித்து நிறைவேற்றியிருப்பேன்? தமிழ்நாட்டில் குடிசைகளே இல்லாத நிலையை உருவாக்க வேண்டும் என்பதற்காக வீடு வழங்கும் திட்டத்தை அறிவித்து மூன்று இலட்சம் வீடுகள் கட்டுவதற்கான ஏற்பாடுகள் எல்லாம் நடைபெறத் தொடங்கியதே, தற்போது அந்த வீடுகள் எல்லாம் என்ன ஆயிற்று? கம்யூனிஸ்ட்களுக்குத் தெரியாதா?

மே தினத்திற்கு ஊதியத்தோடு கூடிய விடுமுறை; சென்னையில் மே தினப் பூங்கா; அரசு அலுவலர்களுக்கு ரகசிய குறிப்பேட்டு முறையை ஒழித்தது; மீனவர்களுக்கு இலவச வீட்டு வசதித் திட்டம்; பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கிட சட்டம்; விவசாயிகளிடம் நேரடிக் கொள்முதல்; உள்ளாட்சித் தேர்தல்களில் மகளிர்க்கு 33 சதவிகித ஒதுக்கீடு; பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம்; அமைப்புசாரா தொழிலாளர்கள் அனைவருக்கும் பல்வேறு நல வாரியங்கள்; விவசாயத் தொழிலாளர்களுக்கு நல வாரியச் சட்டம்; நமக்கு நாமே திட்டம்; போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டம்; அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகச் சட்டம்; விவசாயிகளுக்கு கடன்ரத்து; சமச்சீர் கல்விச் சட்டம் என்று இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாமே; அனைத்தும் மார்க்சிஸ்ட்களுக்கு உடன்பாடான திட்டங்கள்தானே? எதற்காக தி.மு.க. வை படுதோல்வி அடையச் செய்ய வேண்டுமென்று தோழர் ராமகிருஷ்ணன் ஆசைப்படுகிறார்?

தோழர் ராமகிருஷ்ணன் இவ்வாறு கூறிய போதிலும், அந்தக் கட்சியில் உள்ள மற்ற தோழர்கள் அதனை ஏற்க மாட்டார்கள்

என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகமும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் கொள்கை ரீதியாக மாறுபட்ட கட்சிகள் அல்ல. அவ்வப்போது நடைபெறுகின்ற தேர்தல்களில் உறவுகள், உடன்பாடுகள் வராமல் போகலாம். ஒரு தேர்தலில் தனித்தனி அணியிலே இருக்கலாம், மற்றொரு தேர்தலில் ஒரே அணியிலே இருக்கலாம். எனவே அடிப்படையிலே எதிரெதிர் முகாமிலே இருக்க வேண்டிய கட்சிகள் அல்ல என்பதையும், தேர்தலிலே ஓரிரு இடங்களில் பெறுகின்ற வெற்றி பெரிதல்ல என்பதையும் இனிமேலாவது தோழர் ராமகிருஷ்ணன் மனதிலே கொண்டு கருத்துக்களை தெரிவிப்பது நல்லது என்பதே எனது விருப்பம்!

அன்புள்ள,

மு.க.

5-10-2011

3593. அய்யகோ! அ.தி.மு.க. ஆட்சியில் அரசு நிலம் அரோகரா!

உடன்பிறப்பே,

சென்னை மாநகரத்தின் இதயம் போன்ற பகுதியில் அண்ணா மேம்பாலத்தை ஒட்டி அரசுக்குச் சொந்தமான 13 காணி 4 கிரவுண்ட் 1262 சதுர அடி நிலம் "தோட்டக்கலைச் சங்கம்" என்ற ஒரு அமைப்பின் பெயரில் தோட்டக்கலை வி.கிருஷ்ணமூர்த்தி என்ற அ.தி.மு.க. பிரமுகரால் சுயலாப வேட்டைக்குப் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், அவ்வப்போது அங்குள்ள கட்டிடத்தை அவருடைய சொந்த அரசியல் நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்துவதாகவும், 1989ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபோது, வந்த புகார்களை யொட்டி நடவடிக்கை எடுத்து, விலை மதிப்பற்ற இந்த நிலத்தைப் பொதுமக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கில், சுற்றுப்புறச் சூழலுக்கு எவ்விதப் பாதிப்புமின்றி தோட்டக் கலையை வளர்த்து, தோட்டக்கலை தொடர்பான ஆராய்ச்சிகளை நடத்தி ஊக்குவித்திட இந்த இடத்தை அரசு கையகப்படுத்துவதென முடிவு செய்து, தோட்டக்கலைச் சங்கத்துக்குத் தாக்கீது அனுப்பப்பட்டது.

கழக அரசின் இந்த நடவடிக்கையை எதிர்த்து தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தி, சென்னை உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்தார். அந்த முறையீட்டினை ரத்து செய்த சென்னை உயர்நீதிமன்றம், தமிழக அரசின் வருவாய்த் துறைச் செயலாளர்; தோட்டக்கலைச் சங்கத்திற்கு நேரடி விசாரணைக்கு; வாய்ப்பினை வழங்க வேண்டுமென உத்தரவிட்டது. அதன்படி வருவாய்த் துறைச் செயலாளர் நேரடியாகவே விசாரித்து, நிலம் முழுவதையும் அரசே திரும்ப எடுத்துக் கொள்வதென முடிவு செய்து, அதனடிப்படையில் அரசாணையும் 5-8-1989 அன்று

வெளியிடப்பட்டது. அரசாணையின்படி, சென்னை மாவட்ட ஆட்சியரும் நிலத்தைத் திரும்ப எடுத்துக் கொண்டதாக அரசுக்கு அறிக்கையும் அனுப்பினார்.

பொது நோக்கத்திற்காக, கழக அரசு மேற் கொண்ட இந்த நடவடிக்கைக்கு எதிராகத் தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தி, தோட்டக் கலைச் சங்கத்தின் சார்பில் மீண்டும் சென்னை உயர் நீதி மன்றத்தில் நீதிப்பேராணை மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். 1989இல் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு நிலுவையிலே இருந்த போதே, 1991இல் ஆட்சி மாறிய காரணத்தால் 1996ஆம் ஆண்டு வரை நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சியில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. உயர்நீதிமன்றம் 19-6-1998 அன்று பிறப்பித்த உத்தரவில், நிலத்தைத் திரும்ப எடுத்துக் கொண்ட கழக அரசின் ஆணையை ரத்து செய்தது. ரத்து செய்த இந்த உத்தரவினை எதிர்த்து தமிழக அரசு (தி.மு.க. அரசு) உயர்நீதிமன்றத்தில் உடனடியாக மேல் முறையீடு செய்தது. அதன் மீது 20-8-1998 அன்று உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், தற்போதைய நிலையே தொடர வேண்டும் (Status quo as on date shall be maintained) என்று தற்காலிகமாக உத்தரவிடப்பட்டது.

2001ல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. தி.மு.க. ஆட்சியில் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட மேல் முறையீட்டில் இறுதித் தீர்ப்பு வழங்கப்படாமல்; வழக்கு நிலுவையில் இருந்தநிலையில்; 21-1-2004 அன்று அ.தி.மு.க. ஆட்சியில் - அரசின் எழுத்துப்பூர்வமான- அனுமதி இல்லாமலேயே; அரசு வழக்கறிஞர் - "நான் பெற்றிருக்கும் அறிவுரைகளின்படி, அரசு சார்பில் செய்துள்ள மேல் முறையீடுகளைத் திரும்பப் பெறுவதற்கு அனுமதி தரவேண்டும்" (As per instructions, I may be permitted to withdraw appeals) என்று உயர் நீதி மன்றத்தில் தெரிவித்து, தி.மு. கழக ஆட்சியில் தொடுத்திருந்த வழக்கினைத் திரும்பப் பெற்றுவிட்டார். இதில் அரசு வழக்கறிஞர் பின்பற்றிய முறை, அரசின் அலுவல் நடைமுறைகளுக்குக் கிஞ்சிற்றும் பொருந்தாததும், பொருத்தமில்லாததும் ஆகும்.

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில்; அரசு வழக்கறிஞரே அப்படிக் கேட்டதற்குப் பிறகு உயர் நீதி மன்றமும் வேறுவழியின்றி தி.மு.கழக ஆட்சியில் தொடர்ந்த வழக்கினைத் திரும்பப் பெற அனுமதித்து; மேல் முறையீட்டினை ரத்து செய்து உத்தரவிட்டது. உடனடியாக

3-3-2006 அன்று, நிலத்தைத் திரும்பவும் தோட்டக்கலைச் சங்கத்திடமே ஒப்படைக்க அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

இதற்கிடையே 2006ஆம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலுக்கான நடத்தை விதிமுறைகள் நடைமுறைக்கு வந்ததால்; 3-3-2006 அன்று வெளியிடப்பட்ட அரசாணை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

2006 சட்டப் பேரவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியைக் கைப்பற்றிய பின், தி.மு. கழக ஆட்சியில் 7-7-2006 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில்; தோட்டக்கலைச் சங்கத்தின் பிரச்சினை விவாதிக்கப்பட்டு தனிநபர் சுய லாப வேட்டையை ஆதரித்திடும் அ.தி.மு.க. ஆட்சியின் முடிவை ரத்து செய்து; உயர்நீதிமன்றத்தில் மீண்டும் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்து வழக்கினைத் தொடர முடிவு செய்யப்பட்டது. அந்த மனு மீது, சென்னை உயர்நீதிமன்றம் 4-4-2007இல் வழங்கிய ஆணையில் மேல்முறையீட்டு வழக்கினை நடத்திட அனுமதி அளித்தது. இதை எதிர்த்து, தோட்டக் கலைச் சங்கம் இந்திய உச்ச நீதி மன்றத்தில் பதிவு செய்த வழக்கு, 16-5-2007 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது.

சென்னை உயர் நீதி மன்றத்தில் கழக அரசு தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனுக்களின் மீதான வழக்கில், உயர்நீதிமன்றம் 11-4-2008 நாளிட்ட தீர்ப்பில்; கழக அரசு செய்த மேல் முறையீட்டு மனுக்களை அனுமதித்தும்; நிலத்தை அரசு திரும்ப எடுத்துக் கொள்ள பிறப்பித்த கழக அரசின் ஆணையினை ரத்து செய்து தனி நீதிபதி 19-6-1998 அன்று வழங்கிய தீர்ப்பினை தள்ளுபடி செய்தும் உத்தரவிட்டது. 11-4-2008 அன்று உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் :-

> "அரசாங்கத்தின் முன் அனுமதி பெறாமல்; வேளாண் தோட்டக் கலைச் சங்கம் "உட்லண்ட்ஸ்-டிரைவ்-இன் ரெஸ்டாரண்ட்"க்கு இந்த நிலத்தில் ஒரு பகுதியை ஏற்கனவே உள்குத்தகைக்கு விட்டிருந்தது. திரு.கிருஷ்ணமூர்த்தி, சங்கத்தின் கௌரவச் செயலாளராக ஆன பிறகு தனது சொந்த சொத்து போல இந்த நிலத்தைக் கையாள்வதாக நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இச்சங்கத்தின்

நிதி முறைகேடுகள் குறித்து பல குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து மாவட்டப் பதிவாளர், தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொண்டார். சங்கத்தின் மீது இத்தகைய கடுமையான குற்றச்சாட்டுகள் இருக்கும்போது; அரசு பொது நோக்கங்களுக்காக நிலத்தைத் திரும்பப் பெறுவதற்குச் சொன்ன காரணங்களைப் புறக்கணித்துவிட்டு; நிரூபணமாகாத குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், "அரசியல் காழ்ப்புணர்வு காரணம்" என்று கூறி அவர்கள் தொடுத்த நீதிப் பேராணைகளை தனி நீதிபதி அனுமதித்துள்ளார்.

அரசின் அனுமதி பெறாமல் மிகப் பெரிய விளம்பரப் பலகைகளை நிறுவியுள்ளதாகவும் மற்றும் தரைப் பகுதிக்கு சிமெண்ட் வேலைகள் செய்திருப்பதாகவும் கழக ஆட்சியின் போது, தலைமைச் செயலாளர், தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். ஆண்டு ஒன்றுக்கு ஐந்தாயிரம் ரூபாய் செலவில் மலர்க் கண்காட்சியை நடத்தியதைத் தவிர கடந்த 20 ஆண்டுகளில் எந்த முன்னேற்றமும் சங்கத்தால் செய்ததாகக் காட்டப்படவில்லை. இத்துடன், மலர்க் கண்காட்சியை நடத்தியது தொடர்பாக அதிக அளவில் பணம் வசூல் செய்தும், அதில் குறைந்த அளவே செலவு செய்தும், நிதி முறைகேடுகள் நடைபெற்றுள்ளதால் அச்சங்கத்தின் மீதும், அதன் செயலாளர் மீதும் உரிய அலுவலரால் விசாரணை செய்யப்பட வேண்டும். வருவாய் நிலை ஆணைகளின்படியும், அரசு வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் காலங்காலமாக குடியிருக்க வசதியின்றியுள்ள ஏழை யெளிய மக்களுக்கு இருப்பிடம் வழங்க வேண்டுமென்ற நெறிமுறைகள் ஒரு புறம் இருக்க; இச்சங்கத்தின் வசம் நிலங்கள் உள்ளதாலும், அதன் ஒரு பகுதியை மட்டுமே தோட்டக் கலை வளர்ச்சிக்காக அவர்கள் பயன்படுத்தி வருவதாலும், அரசால் குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களை சங்கத்தின் கௌரவச் செயலாளர் திரு.வி.கிருஷ்ண மூர்த்தி தனது சொந்த உபயோகத்திற்காக அதாவது வாடகைக்கார் மற்றும் மீனா அட்வர்டைசர்ஸ் என்ற பெயரிலான

விளம்பர நிறுவனத்திற்கும் பயன்படுத்தி வருவதாக ஆவணங்களின் மூலம் தெரிய வருவதால், மேற்படி நிலங்களைத் திரும்பப் பெறுவது குறித்த அரசின் நட வடிக்கையில் எவ்விதத் தவறும் இருப்பதாகக் கருத இயலாது.

திரு.வி.கிருஷ்ணமூர்த்தி தனது மனுவில் கார் மற்றும் விளம்பர நிறுவன வியாபாரம் நடத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார். நிலம் ஏற்கனவே அரசின் வசம் உள்ளதைக் கருத்தில் கொண்டும் அரசின் தலைமைச் செயலாளரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் அடிப்படையிலும் இந்நிலங்கள் பொதுக் காரியங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். உள்குத்தகைதாரர் தானாகவே இந்த இடத்தைக் காலி செய்ய வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே, சென்னை உயர்நீதிமன்றத்தின் இந்த ஆணையின் தொடர்ச்சியாக; தோட்டக் கலை கிருஷ்ணமூர்த்தி, உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ததால், உச்சநீதிமன்றம் 13-11-2009 அன்று வழங்கிய இடைக்கால ஆணையில் இந்த நிலம் ஏற்கனவே அரசின் கைவசம் உள்ளதால், தோட்டக்கலையின் மேம்பாட்டிற்காக அதைத் தொடர்ந்து அரசு பயன்படுத்துவதில் எந்தத் தவறும் இல்லை என்று கூறி விட்டது. எனவே சென்னை மாவட்ட ஆட்சியர் தோட்டக்கலைச் சங்கத்திடமிருந்து நிலத்தை எடுத்து, அரசு-தோட்டக்கலைத் துறையிடம் ஒப்படைத்தார்.

இந்த நிலத்தில் - சுற்றுப்புறச் சூழலைப் பேணிக் காத்திடவும், மலர்கள் - மூலிகைகள் - தாவரங்கள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைப் பொது மக்கள் உணர்ந்திடவும், தோட்டக்கலை ஆராய்ச்சிகளை ஊக்குவித்திடவும், பெரிய பூங்கா ஒன்றினை உருவாக்கிடத் திட்டமிட்டு; அதனைப் படிப்படியாக நிறைவேற்றிட முடிவு செய்து; முதலில் "டிரைவ்-இன்-உட்லண்ட்ஸ்" இருந்த பகுதியில் மிகச் சிறந்த பூங்கா ஒன்றினை உருவாக்கி அதனை நான் திறந்து வைத்தேன். அந்தப் பூங்காவை இன்றும் ஆயிரக்கணக்கானவர்கள் அன்றாடம் கண்டுகளித்து வருகின்றனர்.

பூங்காவுக்கு எதிர்ப்புறம், தோட்டக்கலைச் சங்கத்தின் அலுவலகம் செயல்பட்டு வந்த இடத்தில் பூங்காவினை விரிவாக்கம் செய்வதற்கு முன்; இடத்தைக் காலி செய்து அரசிடம்

ஒப்படைக்கக் கோரி தோட்டக்கலைச் சங்கத்திற்கு 15-12-2010, தி.மு. கழக ஆட்சியின் போது அன்று நோட்டீஸ் அனுப்பப்பட்டது. நோட்டீஸ் அனுப்புவதற்கு முன் நூறாண்டுகளுக்கு வில்லங்கங்கள் சரிபார்க்கப்பட்டு அந்த நிலம், அரசு நிலம் தான் என்று உறுதி செய்யப்பட்டது. இந்த நோட்டீசுக்கெதிராக, தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தி, சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார். அதில் அந்தச் சங்கத்திற்கு நேரடி விசாரணைக்கு வாய்ப்பளித்திடும்படி தீர்ப்பு வழங்கப்பட்டது. அதற்கிணங்க 2011 சட்டப் பேரவைத் தேர்தலுக்கு முன்பும், பின்பும் நேரடி விசாரணைக்கு அவருக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டன. ஆனால் மே திங்களில் பொதுத் தேர்தல் நடைபெறும் வரை நேரடி விசாரணைக்காக தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தி ஆஜராகவில்லை. பொதுத் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்ற பிறகு, 15-7-2011 அன்று அவர் சென்னை மாவட்ட ஆட்சியர் முன்பு திடீரென ஆஜராகி சில ஆவணங்களைத் தாக்கல் செய்திருக்கிறார்.

சென்னை மாவட்ட ஆட்சியரும், எங்கிருந்தோ செலுத்தப்பட்ட செல்வாக்கிற்கும், நெருக்கடிகளுக்கும், அரசியல் மேலாதிக்கத்திற்கும் பணிந்து - அரசு வழக்கறிஞரின் கருத்துரையினை ஒப்புக்காகப் பெற்று, தோட்டக்கலைச் சங்கம் அமைந்துள்ள 4 காணி 18 கிரவுண்ட் 1683 சதுர அடி நிலம் அந்தச் சங்கத்திற்கே உரியது என்று 22-8-2011 அன்று அ.தி.மு.க. ஆட்சியிலே உத்தரவிட்டுள்ளார்.

நிரந்தர நிலப்பதிவேட்டில் இந்த நிலம் அரசு நிலம் என்றே பதிவு செய்யப்பட்டுள்ளது. 100 ஆண்டுகளுக்கும் மேலாக வில்லங்கம் சரி பார்த்ததில் இந்த நிலம் அரசுக்குச் சொந்தமானதென்றே உறுதி செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து பல ஆண்டுகளாக இந்த நிலம் தொடர்பாக நடந்து வரும் வழக்குகளில் எந்தக் கட்டத்திலும் இந்த நிலம் தோட்டக்கலைக்குச் சொந்தமானது என்று சொல்லப்படவில்லை. இந்த நிலம் அரசு நிலம் என்பதால்தான் தோட்டக்கலைச் சங்கத்திடமிருந்து கைப்பற்றி, தமிழக அரசின் துறைகளில் ஒன்றான தோட்டக் கலைத் துறையிடம் 8-5-2008 அன்று கழக ஆட்சியில் ஒப்படைக்கப்பட்டது.

நிலைமைகள் இவ்வாறிருக்க, இந்த நிலம் தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தியின் சங்கத்திற்குச் சொந்தமானதென முடிவு

செய்ய, எவ்வித அடிப்படை முகாந்திரமும் இல்லை. அரசுக்குச் சொந்தமான இடம் என்று ஏற்கனவே முடிவு செய்ததும் மாவட்ட ஆட்சித் தலைவர்தான். தற்போதுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அந்த இடம் அரசுக்குச் சொந்தமானதல்ல என்று கூறச் செய்து, தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்திக்கு தாரைவார்க்க; ஆட்சிக்கு வந்த ஐந்தே மாதங்களில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவர்கள்தான் ஊழல் இல்லா நிர்வாகத்தை நடத்தப் போகிறார்களாம்.

உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறவுள்ள இந்த நேரத்தில் - அ.தி.மு.க. ஆட்சியினர் செய்துள்ள இந்தப் பெரிய ஊழலை வெளிப்படுத்தியிருக்கிறேன். இந்தத் தேர்தல்களில் மீண்டும் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுமேயானால் ஊழல்கள் தொடர வழி பிறக்கும் என்பதை நாட்டு மக்கள் நினைவிலே கொள்ள வேண்டுகிறேன்.

அ.தி.மு.க. ஆட்சியில் "நில அபகரிப்பு" என்ற பெயரில் எதிர்க்கட்சியினர் மீது ஏராளமான பொய் வழக்குகளைப் புனைந்து வரும் வேளையில்; சென்னை மாநகரத்தின் மையப் பகுதியில், 200 கோடி ரூபாய்க்கும் குறைவில்லாத மதிப்புடைய அரசு நிலம்; அ.தி.மு.க. ஆட்சியாளர்களின் ஆசிகளோடும், அதிகாரிகளின் துணையோடும் அபகரிக்கப்படும் அநீதியை நல்லவர்களும், நடுநிலை நாளேடுகளும் தட்டிக் கேட்க முன் வர வேண்டாமா? "நல்லவர்கள் நமக்கென்ன என்று இருந்துவிட்டால் நாடு என்னாவது?" என்று அறிஞர் அண்ணா அவர்கள் அன்று கேட்டதை; இம்மாநிலத்தில் உள்ள அனைவர்க்கும் இன்று நினைவூட்டுகிறேன்!

அன்புள்ள,

மு.க.

10-10-2011

3594. அன்றும், இன்றும் ஒரே நிலைதான்!

உடன்பிறப்பே,

"பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது" என்று தந்தை பெரியார் அவர்கள் அடிக்கடி கூறுவார்கள்! அதைப்போல இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையிலும் முதலமைச்சர் ஜெயலலிதாவின் உண்மையான மனப் போக்கும், செயல்பாடும் ஊரறிய வெளியாகியுள்ளன. பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவரின் தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்து தமிழர்கள் எல்லாம் ஒன்றிணைந்து வாதாடி, சட்டமன்றத்தின் சார்பிலும் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்ட நேரத்தில் முதலில் பிடிவாதமாக அதை மறுத்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, இறுதியாக தமிழர் களின் இன எழுச்சியைக் கண்ட பிறகு பேரவையிலே அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினார். அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியபோது ஜெயலலிதா தனது உரையில், அரசியல் அமைப்புச் சட்ட விதி 161 இன் கீழ் மாநில முதலமைச்சருக்கு இதில் அதிகாரம் இல்லை என்றும், மாநில கவர்னருக்கும் அதிகாரம் இல்லை என்றும் சொல்லியிருக்கிறார். இன்று வரை ஜெயலலிதா அதே கருத்தைத்தான், அதாவது இதிலே மாநில முதல் அமைச்சருக்கு அதிகாரம் இல்லை என்று தான் திரும்பத் திரும்பச் சொல்லிவருகிறார். இருந்த போதிலும், அவர் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியதையே மூன்று பேர்களின் உயிர்களையும் "அம்மா" காப்பாற்றிவிட்டார் என்றெல்லாம் கூறி நன்றி அறிவித்து "போற்றி" பாடினர் சிலர்!

ஆனால் தமிழகச் சட்டப் பேரவையில் 30-8-2011 அன்று அவர் 110வது விதியின்கீழ் படித்த அறிக்கையில் கருணாநிதி தலைமையிலான அமைச்சரவையின் முடிவினை ஏற்று மேதகு ஆளுநர் அவர்கள்

21-4-2000 அன்று ஒப்புதல் அளித்தார் என்று சொல்லியிருக்கிறார். நாம் கடைப்பிடித்த அதே முறையில்தான் இந்த மூன்று பேரின் உயிர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற அக்கறை தமிழக அரசுக்கும், ஜெயலலிதாவுக்கும் உண்மையிலேயே இருக்குமேயானால், தமிழக அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றி ஆளுநரின் பரிந்துரைக்கு அனுப்ப வேண்டுமென்று நானும், தமிழகத்திலே உள்ள வேறு சில கட்சிகளும் கோரிக்கை விடுத்திருந்தோம். இருந்தும் இன்று வரை அதனைச் செய்ய ஜெயலலிதா முன்வரவில்லை. அமைச்சரவையைக் கூட்டி தீர்மானம் நிறைவேற்ற முன்வராத நிலையில் தற்போது தமிழக அரசின் சார்பில் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட மூன்று பேரும் தூக்குத் தண்டனையை ரத்து செய்யக் கோரி தாக்கல் செய்த கோரிக்கை மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டு மென்று கூறியிருப்பதில் இருந்தே, "பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது" என்பது ஜெயலலிதாவிற்கு "புகழ் பாடிக்" கொண் டிருந்த சிலருக்கு நன்கு புலப்படும் என்று நம்புகிறேன்.

தி.மு. கழக ஆட்சியில் நடைபெற்றதைத்தான் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ நேற்றையதினம் செய்தியாளர்களிடம் கூறும் போது நினைவூட்டியதோடு இன்றைய தமிழக அமைச்சரவை 3 பேரின் தூக்குத் தண்டனையை ரத்து செய்யக்கோரி தீர்மானம் நிறைவேற்றி கவர்னருக்குப் பரிந்துரை செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். நான் அப்போது செய்ததையும், இப்போது சொன்னதையும் அவர் நினைவூட்டிய போதிலும், என்னையும் ஜெயலலிதாவையும் "ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள்" என்று கூறி தனது ஆத்திரத்தைக் கக்கியிருக்கிறார் என்பதையும் மறந்துவிடக் கூடாது. அவர் கழகத்திலே ஆற்றிய பணிக்காக மூன்று முறை மாநிலங்களவை உறுப்பினராக்கி, அருகிலேயே வைத்திருந்து பாராட்டிய நானும் - கடைசி நிமிடம் வரை காத்திருக்க வைத்து கழுத்தறுப்பு வேலை செய்த ஜெயலலிதாவும் வைகோவுக்கு ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாக தெரிகிறார்கள் என்றால், அவர் இன்னமும் திருந்த வில்லை என்பதைத்தான் காட்டுகின்றது. என் செய்வது? "பூனை இளைத்தால் எலி கூட "மச்சான்" முறை கொண்டாடும்" என்பது பழமொழி அல்லவா?

தூக்குத் தண்டனை கைதிகளுக்காக உயர் நீதிமன்றத்தில் திரு. ராம்ஜேத் மலானி அவர்களோடு இணைந்து வாதாடிய மற்றொரு மூத்த வழக்கறிஞர் திரு. காலின் கன்சால்வஸ் (Colin Gonsalves) கூறியதாக "இந்தியன் எக்ஸ்பிரஸ்" வெளியிட்டுள்ள செய்தியில், "The Chief Minister has the power to reduce Capital Punishment to life in Jail, and it is the right time to convene a Meeting and take a Cabinet Decision; ..... Jayalalithaa can exercise her power to stay the death sentence under Article 161 of the Constitution .... said one of the three advocates, Colin Gonsalves, who appeared before the High Court for the convicts."

("மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைப்பதற்கான அதிகாரம் முதல் அமைச்சருக்கு இருக்கிறது, அது தொடர்பாக அமைச்சரவையைக் கூட்டி முடிவு எடுப்பதற்கான சரியான தருணம் இது..... அரசியல் சட்டம் 161 வது பிரிவின் கீழ் மரண தண்டனையை நிறுத்தி வைப்பதற்கான அதிகாரத்தை ஜெயலலிதா பயன்படுத்த முடியும்..... என்று சென்னை உயர்நீதி மன்றத்தில் வாதாடிய மூன்று வழக்கறிஞர்களில் ஒருவரான திரு. காலின் கன்சால்வஸ் கூறியிருக்கிறார்.)

29-8-2011 அன்று 110வது விதியின் கீழ் சட்டப் பேரவையில் அறிக்கை படித்த முதலமைச்சர் ஜெயலலிதா, 19-4-2000 அன்று தி.மு. கழக ஆட்சி நடைபெற்ற போது நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற நளினி ஒருவருக்கு மட்டும் கருணை காட்டி மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கலாம் என்றும், மற்றவர்களின் கருணை மனுக்களை நிராகரிக்கலாம் என்றும் முடிவெடுக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி, தன்னையும் அறியாமல் நளினியின் மரண தண்டனை, ஆயுள் தண்டனையாகக் குறைவதற்கு; அடிப்படையில் தி.மு. கழக அரசு தான் காரணம் என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார். உச்ச நீதிமன்றம் நளினி உள்ளிட்ட இந்த நால்வரின் தூக்குத் தண்டனையை 11-5-1999 அன்று உறுதி செய்தது. அதே உச்ச நீதிமன்றத்தில் அவர்கள் தாக்கல் செய்த மறு ஆய்வு மனு 8-10-1999 அன்று நிராகரிக்கப்பட்டுவிட்டது. 17-10-1999 அன்று ஆளுநரிடம் அளித்த கருணை மனுக்களை அவர்

27-10-1999 அன்று நிராகரித்து விட்டார். இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில்தான்; 25-11-1999 அன்று; ஆளுநர் நிராகரித்த ஆணையை தள்ளுபடி செய்துவிட்டு, அமைச்சரவையின் ஆலோசனையைப் பெற்று புதிய ஆணை வழங்கிட தீர்ப்பளித்தது. அந்தச் சூழ்நிலையில்தான் 19-4-2000 அன்று கழக அமைச்சரவை கூடி முடிவெடுத்தது.

ஜெயலலிதா படித்த அதே அறிக்கையில் - "இந்த மூன்று நபர்களும் மேதகு குடியரசுத் தலைவருக்கு அளித்த கருணை மனுக்களை தமிழ்நாடு அரசு 28-4-2000 நாளிட்ட கடிதத்தின்படி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது" என்றும் சொல்லியிருக்கிறார். அவ்வாறு 28-4-2000 அன்று தி.மு. கழக அரசு மத்திய அரசுக்கு அந்த கருணை மனுக்களை அனுப்பி வைத்ததின் காரணமாகத்தான் அவர்கள் மூவரின் தண்டனை நிறைவேற்றப்படாமல் இந்த 11 ஆண்டுக் காலமும் அவர்கள் சிறையில் நீடிக்க முடிந்தது என்பதை ஜெயலலிதாவே தனது அறிக்கை மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார். அவ்வாறு அமைச்சரவையில் முடிவெடுத்து குடியரசுத்தலைவருக்கு அனுப்பிய மனு மீது கடந்த 11 ஆண்டுக் காலமாக குடியரசுத் தலைவர் அலுவலகம் முடிவெடுக்காமல் இருந்த காரணத்தால்தான் தற்போது உயர்நீதி மன்றத்தில், அதையே ஒரு காரணமாக வழக்கறிஞர்கள் எடுத்துக் கூறி, நீதி மன்றம் தண்டனையை ஒத்தி வைத்திருக்கிறது.

ஜெயலலிதா, 23-10-2008 தேதிய "நமது எம்.ஜி.ஆர்." இதழில் வெளியிட்ட அறிக்கையில் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?

> "தமிழகத்தில் அமைதி நிலவ பயங்கரவாத இயக்கமான தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட வேண்டும் என்று 1991 ஆம் ஆண்டு நான் தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு மத்திய அரசை வற்புறுத்தினேன். என்னுடைய பெருமுயற்சியின் காரண மாகத்தான் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் 14-5-1992 அன்று மத்திய அரசால் தடை செய்யப்பட்டது. ராஜீவ் காந்தி கொலை வழக்கில், நிர்ணயிக்கப்பட்ட நீதிமன்றத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட குற்றவாளியாக

வி. பிரபாகரன் அறிவிக்கப்பட்டுள்ளார். இப்படிப்பட்ட தடை செய்யப்பட்ட இயக்கத்திற்கு ஆதரவான செயல்கள் தமிழ்நாட்டில் தற்போது மீண்டும் நடைபெற்று வருகின்றன. இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்து ராமேஸ்வரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் திரைப்பட இயக்குநர்கள் சீமான், அமீர் ஆகியோர் கலந்து கொண்டு இந்திய இறையாண்மைக்கு எதிரான பல ஆட்சேபகரமான, தேச விரோத கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். இப்படி இந்திய இறையாண்மைக்கு எதிரான கருத்து களைத் தெரிவிப்பவர்கள் மீது கருணாநிதி இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை..... தற்போது தமிழகத்தில் எனது தலைமையிலான ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தால், தடை செய்யப்பட்ட இயக்கங்களுக்கு ஆதரவாக பேசியிருப்பவர்களை நிச்சயமாக கைது செய்திருப்பேன். எனது ஆட்சிக் காலத்தில் இது போன்று பேசியவர்கள் மீது "பொடா" சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்து அவர்களைச் சிறையில் அடைத்தேன். தற்போது "பொடா" சட்டம் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்ற அசட்டு தைரியத்தில் சிலர் பகிரங்கமாகவே தேசவிரோத கருத்துகளைப் பேச ஆரம்பித்து விட்டனர். "பொடா" இல்லா விட்டாலும், தற்போதுள்ள சட்ட விரோதமான நடவடிக்கை தடுப்புச் சட்டத்தின் கீழ் இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் நடவடிக்கை எடுக்க மைனாரிட்டி தி.மு.க. அரசின் முதலமைச்சருக்கு மனமில்லை. எப்போதெல்லாம் கருணாநிதி ஆட்சிக்கு வருகிறாரோ, அப்போதெல்லாம் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆதரவான பேச்சுக்கள் தமிழ்நாட்டில் பகிரங்கமாகவே நடைபெறுகின்றன. இப்படிப்பட்ட தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கத்தை ஆதரிப்பது என்பது ஒரு தேச விரோதச் செயல். இதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்கும் இடம் கிடையாது."

என்றெல்லாம் 2008ஆம் ஆண்டு ஜெயலலிதா அறிக்கை விட்டார்.

ஏற்கனவே தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு தி.மு. கழக ஆட்சியில் விடுவிக்கப்பட்ட இருவர் கொடுத்துள்ள வாக்கு மூலங்களை மீண்டும் நினைவூட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக தோழர் தியாகு - தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் காப்பாற்றப்பட்ட இடதுசாரி இயக்கத் தோழர்களில் ஒருவர். அவர் கூறியதை அப்படியே சொல்கிறேன், "கட்சி எடுத்த முடிவின்படி ஓரத்தநாடு பகுதியைச் சேர்ந்த முத்துதங்கப்பா என்பவர் 1970இல் படுகொலை செய்யப்படுகிறார். இதில் நான் உட்பட தோழர்கள் ரெங்கசாமி லெனின், குருமூர்த்தி ஆகிய மூவர் கைது செய்யப்பட்டு திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்படுகிறோம். எங்கள் மீதான வழக்கு செசன்ஸ் கோர்ட்டில் நடந்து 1972இல் எங்கள் மூவருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது. இதனை எதிர்த்து சென்னை உயர் நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்கிறோம். ஆனால் உயர் நீதிமன்றமும் எங்களின் தூக்குத் தண்டனையை உறுதி செய்கிறது. அப்போது தமிழக முதல்வராக கலைஞர் இருந்தார். உயர் நீதிமன்றத்தின் தூக்குத் தண்டனையைக் குறைக்குமாறு ஆளுநரிடம் நாங்கள் விண்ணப்பித்தோம். ஆளுநரும் தமிழக அரசிடம் இது குறித்து கருத்துரு கேட்டார். அப்போது கலைஞர் தனது அமைச்சரவையைக் கூட்டி எனது கருணை மனு மீது விவாதித்து ஆயுள் தண்டனையாக குறைக்கலாம் என்று முடிவு செய்து அதை ஆளுநருக்குப் பரிந்துரைத்தார். அதன்படி ஆளுநர் எங்களின் தூக்குத் தண்டனையை ரத்து செய்து ஆயுள் தண்டனையாகக் குறைத்தார். இதன் மூலம் தூக்குக்கயிற்றை முத்தமிட இருந்த நாங்கள் காப்பாற்றப்பட்டோம். தேசத்தின் குடியரசுத் தலைவருக்கும் மாநிலத்தின் ஆளுநருக்கும் எத்தனை முறை வேண்டுமானாலும் கருணை மனுக்கள் அனுப்பலாம். குடியரசுத் தலைவரால் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டாலும் தண்டனையை குறைக்க குடியரசுத் தலைவரிடமோ ஆளுநரிடமோ மாநில அரசு பரிந்துரைக்க முடியும். நமது அரசியல் சட்டத்தில்; அதிகாரம் உண்டு, அதிகாரம் இல்லை என்கிற சர்ச்சைகள் எப்போதும் நடப்பதுதான். அதுதான் இப்போது நடக்கிறது. அதிகாரம் இருக்கிறது என்கிறோம் நாம். ஆனால் ஜெயலலிதாவோ தனக்கு அதிகாரம் இல்லை என்கிறார். "அதிகாரமிருந்தால் காப்பாற்றுவேன்" என இதில் அர்த்தம் தொனிப்பதால், அதிகாரம் இருக்கிற குடியரசுத் தலைவருக்கு

மூவரையும் காப்பாற்றும்படி ஒரு வேண்டுகோளை ஜெயலலிதா விடலாமே? சட்ட அதிகாரமில்லை என்பவர் இதையாவது செய்யலாமே" என்று தோழர் தியாகு கூறி, அதனை "நக்கீரன்" வெளியிட்டுள்ளது.

தியாகுவைப் போலவே பெண்ணாடம் புலவர் கலிய பெருமாளின் தூக்குத் தண்டனையும் ரத்து செய்யப்பட்டது. அவர் தற்போது உயிரோடு இல்லை. 2007இல் மறைந்து விட்டார். அவரது இளைய மகன் சோழநம்பியார் "நக்கீரன்" இதழுக்கு அளித்த பேட்டியில், "போலீஸ் இன்ஃபார்மர் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் அப்பா கலியபெருமாள், எனது சகோதரர் வள்ளுவன், நான் மற்றும் என் குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் கைது செய்யப்படுகிறோம். வழக்கு விசாரணை கடலூர் அமர்வு நீதி மன்றத்தில் நடந்தது. 1971இல் அப்பா கலிய பெருமாளுக்கும் அண்ணன் வள்ளுவனுக்கும் நீதிபதி சிங்காரவேலு தூக்குத் தண்டனை விதித்தார். மற்ற எங்கள் 5 பேருக்கும் ஆயுள் தண்டனை. அண்ணன் வள்ளுவன் மட்டும் சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்து உயர்நீதி மன்றமே அவரது தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தது. அப்போது தோழர் கல்யாணசுந்தரம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்ததால், அவர் குடியரசுத் தலைவராக இருந்த வி.வி. கிரியைச் சந்தித்து கலியபெருமாள் பற்றி கூறியபோது, நீங்கள் மக்களிடம் கையெழுத்து வாங்கி அனுப்பி வையுங்கள் என்று ஒரு கருத்தை வெளிப்படுத்தினார் கிரி. அதன்படி பெண்ணாடத்தில் மாநாடு நடத்தி ஒரு லட்சம் கையெழுத்து பெற்று 1974இல் தமிழக ஆளுநருக்கு அனுப்பினோம். அவர் அதனை அப்போது முதல்வராக இருந்த கலைஞருக்கு அனுப்பினார். கலைஞர் தனது அமைச்சரவையில் இதனை விவாதித்து, மாநில அரசுக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி புலவர் கலிய பெருமாளின் தண்டனையைக் குறைக்கலாம் என்று சொல்லி அதன்படி முடிவெடுத்து ஆளுநருக்கு பரிந்துரைத்தார் கலைஞர். மாநில அரசின் பரிந்துரையை ஏற்று எனது அப்பாவின் தூக்குத் தண்டனையை ரத்து செய்து ஆயுள் தண்டனையாகக் குறைத்தார் ஆளுநர். எனவே மாநில முதல்வர் மனது வைத்தால் தூக்குத் தண்டனையிலிருந்து யாரையும் காப்பாற்ற முடியும், மாநில முதல்வருக்கு அப்படிப்பட்ட மனது இருக்கிறதா என்பதுதான் இப்போதைய கேள்வியாக இருக்கிறது" என்று விவரித்திருக்கிறார்.

இந்த இருவரின் கூற்றினை மனதிலே கொண்டுதான் மரணத்தின் பிடியிலிருந்து சிலர் விடுவிக்கப்படுவதற்கு காரணமாக இருந்தவர்களில் நானும் ஒருவன் என்ற அடிப்படையில் மத்திய மாநில அரசுகளை வலியுறுத்துகிறேன் என்று குறிப்பிட்டிருந்தேன்.

இந்திய அரசியல் சட்டம் பிரிவு 161 இன் கீழ் இந்த மூவரையும் காப்பாற்றிடத் தனக்கு அதிகாரம் இல்லை என்று யாரோ சொன்னதையே கெட்டியாகப் பிடித்துக் கொண்டு ஜெயலலிதா காலங்கடத்தாமல், இதில் தனக்கிருக்கும் அதிகாரத்தை இப்போதாவது உணர்ந்து கொண்டு தூக்குமேடைக்கும் - தொடரும் வாழ்க்கைக்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருக்கும் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூன்று பேர் உயிர்களையும் காப்பாற்றி உலகத் தமிழர்களின் உள்ளக் கிடக்கையை நிறைவேற்றிட முன்வர வேண்டும். இதில் பிடிவாதம் காட்டுவதும், காலங் கடத்துவதும் பின்னடைவுகளையே ஏற்படுத்தி விடும்.

அன்புள்ள,

மு.க.

30-10-2011

(குறிப்பு :- பொதுவாக "தூக்குத் தண்டனை" என்பதையே ஏற்றுக் கொள்ளாதவன் நான் என்பதை பல ஆண்டுகளுக்கு முன்பே கூறியிருக்கிறேன். இந்தக் கருத்தை கட்சி வேறுபாடு கருதாமல் பலமுறை வெளியிட்டிருக்கிறேன் - குறிப்பாக, தருமபுரி விவகாரத்தில் கூட!)

3595. உதவாதினி ஒரு தாமதம்; உடனே விழி; தமிழா!

உடன்பிறப்பே,

பழைய கால மன்னர்களின் படை வரிசையில் “ரத, கஜ, துரக, பதாதி” என்ற நான்கு வகை படைகள் இருக்குமாம்! அதாவது தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்று படைப்பிரிவுகள் போர்ப் படைத் தளபதிகளின் கீழ் அணிவகுத்து நிற்பார்களாம். நமது கழகத்திற்கு தற்போது 62 வயதாகிறது. ஜனநாயக இயக்கமாம் நமது கழகத்திற்கு உறுப்பினர்கள் சேர்க்கும் பணி தொடங்கப்பட வுள்ளது. அதற்கு முன்பு புதிய வாக்காளர்களைச் சேர்த்தல், பழைய வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொள்ளுதல் மற்றும் நீக்கல் ஆகிய பணிகளில் விரைந்து ஈடுபடுமாறு நமது பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர் அறிக்கை விடுத்துள்ளார். அந்தப் பணிகளை உடன்பிறப்புகளான நீங்கள் விரைவில் மேற்கொள்ள விருக்கிறீர்கள். ஓய்வு நேரத்தைக் குறுக்கி, உழைக்கும் நேரத்தை விரிவாக்கி, உறுப்பினர் சேர்க்கும் பணியை மேற்கொள்ள வேண்டும். நம்முடைய கழகம் உங்களைப் போன்ற லட்சோப லட்சம் உடன்பிறப்புகளின் எழில் வடிவம்! இன்றும் கழகத்தினுடைய இளமைப் பொலிவுக்கு உம் போன்ற உடன்பிறப்புகள் தரும் வலிவன்றோ காரணம்! எத்தனை எத்தனையோ சோதனைகளைத் தாங்கிப் பழக்கப்பட்ட எனக்கும் உங்களுக்கும் தற்போது வந்துள்ள சோதனைகள் பெரிதல்ல! சோதனைகளையும், வேதனைகளையும் தாங்கித் தாங்கி, எதிர்ப்புகளையெல்லாம் புறங்காணச் செய்து வெற்றி பெற்றுப் பழக்கப்பட்டவர்கள் நீங்கள். நீங்களே கழகம்! கழகமே நீங்கள்! நீங்கள் சிந்திய வியர்வைத் துளிகளின் விளைவே கழகம் ஈட்டிய வெற்றிகள்! கழகம் பெற்ற பெருமைகள்! கடந்திடும் சோதனைகள்! எனவே, கழகத்தை நான்; உங்கள் அசைவிலே, நடையிலே, பேச்சிலே, மூச்சிலேதான் காணுகிறேன்.

என்னென்ன விமர்சனங்கள்? எப்படி யெல்லாம் எழுதுகிறார்கள்? பேசுகிறார்கள்? அப்பப்பா? "குலைந்தது கட்சி! தொலைந்தது இனிமேல்! சீந்துவார் யாருமில்லை! சீராட்டும் பாராட்டும் பெறாமல் "சீ" என்றிகழப்பட்டு, தெருப்புழுதியிலே சேர்க்கப்பட்டுவிடும்! சட்டப்பேரவை தேர்தலில் எதிர்க் கட்சியாகக் கூட வர முடியவில்லை! அதையொட்டி நடை பெற்ற உள்ளாட்சித் தேர்தலிலே ஒரு மாநகராட்சியைக் கூடப் பிடிக்க முடியவில்லை! இடைத் தேர்தலிலோ வித்தியாசம் இரு மடங்காகி விட்டது! என்றெல்லாம் கூறி மாட கூடங்களில் இருந்து மமதையை மலையென மனத்தில் வளர்த்துக்கொண்டு, "வீழ்ந்தது கழகம், இனி எழவே முடியாது" என்றெல்லாம் எக்காளமிடுகின்றனர்!

1976ஆம் ஆண்டு "நெருக்கடி நிலை" அறிவிக்கப்பட்டு நடைபெற்ற கொடுமைகளைக் கண்டவர்கள்தானே நாம்! தலைவர்கள் எல்லாம் சிறையிலே! அங்கேயும் வன்முறைகள்! என்னைப் பார்த்தாலே சிறை! எனக்குக் காரோட்டினால் சிறை! ஏன், எனக்கு சாப்பாடு போட்டாலே சிறை! என்றெல்லாம் நடைபெற்று, கழகமே அவ்வளவுதான், இனி எழுந்திருக்கவே முடியாது, என்று இதயக் கோட்டை எழுப்பியோர் எத்தனை பேர்? அவர்களின் கனவுகளையெல்லாம் இடித்து நொறுக்கி, உடன்பிறப்பே! நீ யல்லவா நிமிர்ந்து நின்று சுடர் முகம் தூக்கி கோடிக் கதிரவன்கள் கூடி வந்ததுபோல ஒளி பரப்பி, எட்டுத் திசையும் முரசு கொட்டி முழக்கமிட்டாய்!

எரிச்சல் கணை - ஏசல் பாணம் - கண்டனச் சொற்கள் - சுடுமொழி - கடும் பார்வை - இத்தனையும் கொண்ட தீய சக்திகள், பிற்போக்குப் பிறவிகள், கழகம் பிறந்த காலந்தொட்டு இதனை அழிப்பதற்கு நேரம் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். கழகத்தை ஆதரித்து கருத்துக்கள் சொல்லப்பட்டால், அதற்கு ஏடுகளிலே இடம் கிடையாது, அதே நேரத்தில் கழகத்திற்கு எதிராக ஒரு வார்த்தை சொல்லப்பட்டால் முதல் பக்கத்திலேயே அதற்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிடும் போக்கு! அதிலே ஓர் இன்பம் காணும் நிலை! துரோகச் சிந்தையினர் தம் சுக வாழ்வு ஒன்றை மட்டுமே மனதிலே கொண்டு, பெற்ற தாயின் வயிற்றை கூர்வாள் கொண்டு குத்திக் கிழிப்பதைப் போல செயலாற்ற முனைகின்றனர். கையிலே காசில்லா போது, கழகத்திற்கு நேர்ந்த கொடுமைகளைச் சந்திக்க முன் நின்றவர்கள், கையிலே காசு

சேர்ந்த பிறகு, அதைக் காத்திடுவதற்காக கழகத்தையே காட்டிக் கொடுக்க முயலுகின்றனர்.

கழகமே நீயாக - நீயே கழகமாக ஆகிவிட்ட என் இதய மலர்களே! அந்த மலர்கள் தரும் மணமே! அந்த மணம் தரும் சுகமே! உயிரினும் மேலான உடன்பிறப்பே! துரோகத்தைத் தூள் செய்து பகையைப் புறங்கண்டு நீ தூக்கி உயர்த்தியிருக்கிற இரு வண்ணக் கொடியை காணும்பொழுதும், அந்தக் கொடியின் பட்டொளியில் 62 ஆண்டுக் கால இயக்கச் சரித்திரத்தைப் படிக்கும் பொழுதும், ஓரம்போகியார் எனும் ஒரு பெரும் கவிஞர் எழுதிய புறப்பாடல் ஒன்றை நான் உனக்கு நினைவுபடுத்திட விரும்புகிறேன். அந்தக் கவிஞர் பெருமான் எழுதிய பாடலில் இரண்டு நாட்டு மன்னர்கள் போரிடுகிறார்கள்.

“வருகதில் வல்லே வருகதில் வல்லென
வேந்துவிடு விழுத்தூ தாங்காங் கிசைப்ப
நூலரி மாலை சூடிக் காலின்
தமியன் வந்த மூதி லாளன்
அருஞ்சமந் தாங்கி முன்னின் றெறிந்த
ஒருகை யிரும்பிணத் தெயிறு மிறையாகத்
திரிந்த வாய்வா டிருத்தாத்
தனக்கிரிந் தானைப் பெயர்புற நகுமே!”

போர் மூண்டுவிட்ட சமயத்தில் மன்னன் ஒருவன் உடனே களம்புகுமாறு வீரர்களுக்கெல்லாம் செய்தி அனுப்புகிறான். பகை சாய்க்கும் குறியுடன் பல பகுதிகளிலிருந்தும் வீரர்கள் வந்து கூடுகின்றனர். போர் தொடங்கி விடுகிறது. அந்தப் போரில் கலந்து கொள்ள ஓடோடி வரும் ஒரு வீரனை மட்டும் புலவர் ஓரம் போகியாரின் விழிகள் வட்டமிடுகின்றன. அவன் தேர்ப்படையிலோ, யானைப் படையிலோ, புரவிப்படையிலோ இடம் பெற்று அந்தக் களத்திற்கு வரவில்லை. தன்னந் தனியனாக, நூலரி மாலையை அணிந்து கொண்டு, கையில் ஓர் வாளுடன் காலாட் படை வீரனாக களத்திலே நுழைகிறான். கடும் போரிடுகிறான்.

மானம் காக்கப்போரிடும் அந்தத் தமிழ்மறவர் குல திலகத்தையே ஓரம் போகியார் உற்றுப் பார்த்துக் கொண்டு

நிற்கிறார், உயர்ந்ததோர் குன்றின் உச்சி மீது ஏறி! புலவர் அல்லவா? எனவே குன்றேறி நின்று போர்க் களக் காட்சி காணுகிறார்! அந்த மாட்சியைத்தான் கவிதையாக வடிக்கிறார்!

அவர் உள்ளம் கவர்ந்த அந்த வீரன்; காலாட்படை வீரன்; எதிரிப் படை வீரனை நோக்கிப் பாய்கிறான். பகைவனோ யானை மீது இருந்து போரிடுபவன்! இவனோ பூமியின் தோளைத்தான் குதிரையின் முதுகெனக் கருதிக் கொண்டு வாள் சுழற்றுகிறான். அந்த வாள் வீச்சு, மாரிக்கால மின் வெட்டின் வீச்சு! யானை கீழே விழுகிறது, வீழ்கிறது. யானையை வீழ்த்திய அவன் வாளும் வளைந்து கோணி விடுகிறது. யானையின் மீதிருந்து விழுந்த வீரன், எழுந்து வந்து அவனைத் தாக்கி அழிப்பதற்குள் வாளை நிமிர்த்தியாக வேண்டும். என்ன செய்தான் தெரியுமா? ஓரம்போகியார் கவிதையிலே கூறுவதைக் கேள்!

அந்தப் போர்க்களத்தில் அவன் வாளை நிமிர்த்திக் கொள்ள உடனடியாக எந்த வசதியும் கிட்டவில்லை. எதிரியோ எழுந்து விட்டான்! விரைவில் நெருங்கி விடுவான்! நில அபகரிப்பு வழக்கு என்பான்! சொத்து சேர்த்து விட்ட வழக்கு என்பான்! பளிச் சென‌த் தோன்றியது ஒரு அரிய யோசனை அந்த மாவீரனுக்கு! கோணிய வாளை எடுத்தான் - அங்கே தன்னால் வீழ்த்தப்பட்டுக் கிடந்த யானையின் மத்தகத்திலே அந்த வாளை அழுத்தி நிமிர்த்துக் கொள்கிறானாம். அவனது வளைந்து போன வாளை நிமிர்த்துக் கொண்டான் என்பதைக் கண்டதும் எதிரிப்படையின் வீரன் எடுக்கிறான் ஓட்டம் - புறங்காட்டி ஓடுகின்ற அவனைப் பார்த்து அந்த வீரன் நகைக்கத் தொடங்கினான்.

உடன்பிறப்பே, ஓரம்போகியார் சித்திரிக்கும் அந்தத் திறன்மிகு தீரனாகத்தான் உன்னை -ஆம் - நமது கழகத்தை - நான் கருதுகிறேன். நான் தொடக்கத்தில் குறிப்பிட்டதைப் போல நமது விரோதிகள் ரதங்கள் ஏறி வந்து நம்மைத் தாக்க முயலலாம். நமக்கெதிரான விமர்சனங்கள் யானைகள் மீது ஏறி வந்து நம்மை எதிர்க்கலாம். துரோகிகளோ குதிரைப்படை கொண்டு வந்து நம்மை நிலை குலையச் செய்ய யத்தனிக்கலாம். நமது புறநானூற்றுப் புலவர் வியந்து பாராட்டிய வீரன் எதிரிப்படையை விரட்டியது போல, கொல்ல வரும் பகையை - தொல்லை தரும் துரோகத்தை நமது கழகம் வெற்றி கண்டாக வேண்டும். அந்த வெற்றி; கையிலே வேலோ வாளோ ஏந்திப் பெறுவதல்ல! இதயத்தில் உறுதியும்,

கொள்கையும் ஏற்றிப் பெறுவதாகும்! புறநானூற்று வீரன், தன்னந் தனியனாகக் காலாட்படையில் ஒருவனாக வருகிறான் என்கிறார் புலவர். கழகமோ, கடமையெனும் கட்கம் மேந்தி, கண்ணியம் எனும் கவசம் பூண்டு, கட்டுப்பாடெனும் கேடயம் கொண்டு, தனிமையில் விடப்பட்ட போதிலும், தளரா உறுதியுடனும், ஊக்கத்துடனும் எதிர்ப்புகளைப் புறங்கண்டு வெற்றிப் புன்னகையை ஈட்டிட வேண்டும்.

வெற்றி - வெற்றி - இடையிலே உள்ள ஒரு எழுத்து அகன்றால், இதுவே "வெறி" என்றாகி விடும்! எதிரிகள் அந்த "வெறி" யோடு செயல்படுகிறார்கள். அவர்களை எதிர் கொண்டு நாம் "வெற்றி"யினைப் பெற்றிட உழைப்போம் - ஒற்றுமையோடு உழைப்போம் - ஓய்வில்லாமல் உழைப்போம் - உறுதியோடு உழைப்போம்! கண்மணியாம் நமது கழகத்தை வளர்ப்போம்! உறுப்பினர்களை அணி அணியாகச் சேர்ப்போம்! புதிய வாக்காளர்களை பட்டியலில் இணைப்போம்! உதவாதினி ஒரு தாமதம் ; உடனே விழி ; தமிழ!

அன்புள்ள,

மு.க.

31-10-2011

3596. சிற்றூர், பேரூர் தேர்தல்களிலும் சில்மிஷங்கள்!

உடன்பிறப்பே,

உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் எப்படி நடைபெற்றன, வாக்கு எண்ணிக்கை எவ்வாறு நடைபெற்றது என்பதைப் பற்றிய விவரங்கள் ஒரு சில நாளேடுகளில், வார இதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன. வெற்றி பெற்ற எதிர்க் கட்சியினர் தோற்றதாகவும், தோற்றுப்போன ஆளும் கட்சியினர் வெற்றி பெற்றதாகவும் அங்கங்கே அறிவிக்கப்பட்டன என்றும், அந்த முறைகேடுகளில் சிலவற்றை ஏடுகளில் வெளியிட்டிருக்கிறார்கள். அவற்றில் ஒருசிலவற்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

உள்ளாட்சித் தேர்தலில் தோல்வியுற்ற இடங்களில் அ.தி.மு.க. வினர் தோல்விகளை தாங்கிக் கொள்ளாமல் அராஜகத்தின் உச்சத்திற்கு சென்று - வெற்றி பெற்றவர்களை தாக்குவது, அவர்களின் இல்லங்களை சூறையாடுவது, கட்சி அலுவலகங்களை அடித்து நொறுக்குவது, ரவுடிகளின் துணையோடு வீடு புகுந்து வீட்டில் இருக்கும் பெண்களை தாக்குவது என்பது போன்ற காரியங்களில் ஈடுபடுகிறார்கள். காவல் துறை அதிகாரிகளே அதற்கு துணை போகிறார்கள்.

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் சீயாத்தமங்கை ஊராட்சி தலைவர் தேர்தலில் தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் அன்பழகன் இரண்டாவது முறையாக மீண்டும் வெற்றி பெற்றார். இதனால் ஆத்திரம் அடைந்த அ.தி.மு.க.வினர் 21ம் தேதி இரவு சீயாத்தமங்கை தி.மு.க. தேர்தல் அலுவலகத்திற்குள் புகுந்து மேசை, நாற்காலிகள், மின் விசிறிகள் ஆகியவற்றை அடித்து உடைத்து நொறுக்கியதுடன் அலுவலக வாசலில் இருந்த 11க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்களையும் சேதப்படுத்தினார்கள். மேலும் அருகில் இருந்த தி.மு.க. கிளைச் செயலாளர்

முருகவேல், அவரது அக்கா இந்திராணி ஆகியோர் வீடுகளை உடைத்ததுடன் - தி.மு.க. வினரையும் தாக்கியுள்ளனர். இதில் 15க்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர். பலத்த காயம் அடைந்த சீயாத்தமங்கை நடுத்தெருவைச் சேர்ந்த முன்னாள் கிளைச் செயலாளர் குணசேகரன் நாகை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். மேலும் அ.தி.மு.க. வினரின் வன்முறைக் கும்பல் தி.மு.க. தேர்தல் 'பூத்' அலுவலகத்திற்கு தீ வைத்தனர். தி.மு.க.வினர் திட்டச்சேரி காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு நடவடிக்கை எடுக்காததை கண்டித்து அ.தி.மு.க.வினர் மீது உடனே நடவடிக்கை எடுக்கக்கோரி தி.மு.க. பொதுக்குழு உறுப்பினரும் சீயாத்தமங்கை ஊராட்சி மன்றத் தலைவருமான அன்பழகன் தலைமையில் சாலை மறியலில் ஈடுபட்டனர். இந்நிலையில் அ.தி.மு.க.வினரை தி.மு.க.வினர் தாக்கியதாக திட்டச்சேரி போலீசில் அ.தி.மு.க. வினர் பொய்ப் புகார் கொடுத்தனர். இதையடுத்து தி.மு.க. கொடுத்த புகாருக்கு எந்த நடவடிக்கையும் எடுக்காத போலீசார் ஆளும்கட்சிக்கு ஆதரவாக தி.மு.க.வினர் மீது பொய் வழக்கு போட்டுள்ளனர்.

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் குத்தாலம் ஊராட்சி மன்றத் தலைவராக தி.மு.க. வேட்பாளர் திருநீலகண்டன் 201 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். திருநீலகண்டன் வெற்றி பெற குத்தாலம் ஊராட்சி புலவநல்லூரை சேர்ந்த தி.மு.க. கிளைச் செயலாளரும் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவருமான சுரேஷ் (எ) கோவிந்தராஜ் தேர்தல் பணியாற்றியுள்ளார். இந்நிலையில் வாக்கு எண்ணிக்கை நடைபெற்ற 21ம் தேதி சுரேசின் மனைவி லதாவிற்கு திடீர் உடல் நலக் குறைவு ஏற்பட்டது. உடன் தனியார் மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்காக சேர்க்க வீட்டை பூட்டிவிட்டு சுரேஷ் குழந்தைகள் இருவரையும் தனது தந்தை ராமலிங்கத்திடம் விட்டு விட்டு சென்றுள்ளார். இந்நிலையில் 22ம் தேதி மாலை 6 மணியளவில் ஊராட்சி மன்றத் தலைவர் தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு தி.மு.க.விடம் தோல்வி அடைந்த ரவி (எ) சிவக்குமார் தனது அ.தி.மு.க.வை சேர்ந்த ரவுடி குண்டர்களுடன் பயங்கர ஆயுதங்களுடன் சுரேஷின் வீட்டிற்கு சென்று வீட்டின் ஜன்னல்கள் கண்ணாடிகளை உடைத்து வாசலில் இருந்த சைக்கிள், நாற்காலி போன்ற பொருட்களை உடைத்து நொறுக்கி பூட்டியிருந்த வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே நுழைந்து

வீட்டிற்குள் இருந்த டி.வி, விலை உயர்ந்த நாற்காலி, சோபா, மின்விசிறி, கட்டில் போன்ற பொருட்களை உடைத்து 'பூஜை' அறைக்குள் சென்று அங்கிருந்த படங்கள் - பூஜை பொருட்களை உடைத்து படுக்கை அறைக்குள் புகுந்து இரண்டு பீரோக்களை உடைத்து பீரோவில் இருந்த பொருட்களை அள்ளி வீசி அதில் இருந்த 7 பவுன் நகை, 16 ஆயிரம் ரூபாய் ரொக்கம் மற்றும் வெள்ளி பொருட்களையும் திருடிக் கொண்டும் சமையல் அறையில் இருந்த வீட்டு சாமான்களையும் சேதப்படுத்தியுள்ளனர்.

சுரேசின் வீட்டுக்கு வந்த அவரது தந்தை ராமலிங்கத்தை உருட்டுக் கட்டையால் தாக்கி சுரேசின் குழந்தைகளையும் அடித்துள்ளனர். பின்னர் பக்கத்து வீடான சுரேசின் சகோதரர் வீட்டையும் அ.தி.மு.க. ரவுடி கும்பல் உடைத்துள்ளது. அப்போது கிராமமக்கள் திரண்டதால் அ.தி.மு.க. கும்பல் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டது. இதுகுறித்து திட்டச்சேரி போலீசில் சுரேஷ் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிந்துள்ளனர். நடவடிக்கை இல்லை.

நாகை மாவட்டம் கீழ்வேளூர் ஒன்றியம் "இருக்கை" ஊராட்சி மன்றத் தலைவர் பதவிக்கு நடைபெற்ற தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்றது. இதில் ஆத்திரம் அடைந்த எதிர்க்கட்சியினர் இஸ்லாமிய சமுதாயத்தினர் தி.மு.க. விற்கு வாக்கு அளித்ததால்தான் தாங்கள் தோற்றதாகக் கூறி 22ம் தேதி அதிகாலை தொழுகையை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்த "இருக்கை" பள்ளிவாசலில் உலமாவான (அஜரத்) சதக்கத்துல்லா (வயது 35) வீட்டு வாசலில் வழி மறித்து ஊராட்சி மன்றத் தலைவர் பதவியை தி.மு.க. பிடித்ததற்கு இஸ்லாமிய சமுதாயத்தை சேர்ந்தவர்கள்தான் காரணம் என்று கூறி தாக்கியுள்ளனர். இதில் பலத்த காயம் அடைந்த பள்ளிவாசல் உலமா சதக்கத்துல்லா நாகை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

திருவாரூர் ஒன்றிய பள்ளிவாரமங்கலம் ஊராட்சித் தலைவர் பதவிக்கு, தி.மு.க.வைச் சேர்ந்த சேகரும், அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஜெகநாதனும் போட்டியிட்டனர். இதில், தி.மு.க. வேட்பாளர் சேகர் அதிக வாக்குகள் பெற்ற போதிலும், அ.தி.மு.க.வின் ஜெகநாதன் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வாக்கு எண்ணிக்கையில் குளறுபடி செய்துள்ளதால், மறுவாக்கு எண்ணிக்கை நடத்த வலியுறுத்தி, பள்ளிவாரமங்கலம் பகுதி மக்கள் அங்குள்ள கடைவீதியில் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

திருவாரூர் ஒன்றியத்திற்குட்பட்ட மாங்குடி ஊராட்சி மன்றத் தலைவர் தேர்தலில் தி.மு.க.வை சேர்ந்த துரைராஜ் வெற்றி பெற்றார். இங்கு தோல்வியடைந்த எதிர்க்கட்சியினர், தி.மு.க. வினரின் வீடுகள், கடைகள் மற்றும் வாகனங்களை அடித்து நொறுக்கி சேதப்படுத்தியுள்ளனர். இந்த தாக்குதலில் படுகாயமடைந்த அய்ரசி என்பவர், திருவாரூர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் செய்தியை படம் எடுக்கச் சென்ற பத்திரிகையாளர்கள், புகைப்படக்காரர்களையும், எதிர்க் கட்சியினர் கண்மூடித்தனமாக தாக்கி, கேமராக்களையும் சேதப்படுத்தியுள்ளனர்.

உத்திரமேரூர் அ.தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர், ஏ. கணேசன் அடாவடி நடவடிக்கைகள் மீது வாலாஜாபாத் பேரூராட்சி மன்ற 12வது வார்டு தி.மு. கழக வேட்பாளர் ரமேஷ் புகார் அளித்தும், காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக அ.தி.மு.க. வைச் சேர்ந்த அரிகிருஷ்ணன், தூண்டுதல் பேரில், சங்கர், திவாகர் ஆகியோர் தலைமையில் அ.தி.மு.க. வினர் கும்பலாக கழகத் தோழர் ரமேஷின் வீட்டிற்கு வந்து ரமேஷின் தாயாரை ஆபாசமாக பேசி ரகளை செய்தனர். அது பற்றியும் ரமேஷ் வாலாஜாபாத் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். காவல் துறையினர் அதைக் கண்டு கொள்ளாமல் இருந்த காரணத்தினால், அதிர்ச்சியடைந்த ரமேஷ் அங்கேயே இரத்த வாந்தி எடுத்து மயங்கி விழுந்து இறந்து விட்டார்.

சேலம் மாவட்டத்தில் முத்தாம்பட்டி ஊராட்சி மன்ற 3வது வார்டு உறுப்பினராக செட்டி என்பவரும், 4வது வார்டில் பழனி என்பவரும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. ஆனால் அவர்கள் வெற்றி பெற்றது செல்லாது என்று அவர்களின் வீடுகளிலும் நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டம் மல்ல மூப்பம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் பதவிக்கு போட்டியிட்ட ராணி 19 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் சான்றிதழ் வழங்காமல் அ.தி.மு.க. வைச் சேர்ந்த குமார் வெற்றி பெற்றதாக மீண்டும் அறிவித்து, சான்றிதழை அவரிடம் வழங்கி விட்டார்கள்.

இந்தப் புகார்கள் குறித்து தேர்தல் ஆணையரிடம் புகார் மனு அளித்தபோது, அதனை ஏற்க மறுத்ததோடு, அந்தப் புகாரை

மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கூறலாம் என்றும், இல்லாவிட்டால் நீதிமன்றத்தில் வழக்கு தொடரலாம் என்றும் தேர்தல் ஆணையர் கூறி விட்டாராம்.

திண்டுக்கல் மாவட்டம், பழனி அருகே இருக்கும் தும்மலப்பட்டி ஊராட்சித் தலைவருக்கு தி.மு.க. கதிரேசனும், அ.தி.மு.க. நாட்டுதுரையும் போட்டியிட்டனர். வாக்கு எண்ணப்பட்ட போது 41 ஓட்டு வித்தியாசத்தில் தி.மு.க. கதிரேசன் வெற்றி பெற்றதாக பி.டி.ஓ. பழனியப்பன் அறிவித்தார். அப்போது மேலேயிருந்து அவருக்கு தொலைபேசிகள் தொடர்ந்துவர, வெற்றி பெற்றதற்கான சான்றிதழை இரவு 3 மணி வரை கதிரேசனுக்குத் தராமல் இழுத்தடித்த பி.டி.ஓ. ரகசியமாக அ.தி.மு.க. நாட்டுதுரையிடம் கொடுத்துவிட்டு போய்விட்டார்.

கோயில் அம்மாப்பட்டி ஊராட்சியில் 16 ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தி.மு.க. வேலவனுக்கு பதிலாக, தோற்றுப்போன அ.தி.மு.க. சக்திவேல் வெற்றி பெற்றதாக மாற்றி அறிவித்திருக்கிறார்கள் அதிகாரிகள்.

வந்தவாசி பகுதியில் உள்ள எரமலூர் ஊராட்சி மன்றத் தலைவராக, தி.மு.க. வைச் சேர்ந்த மீராதேவி அறிவிக்கப்பட்டார். அப்போது அ.தி.மு.க. பிரமுகரான ரமேஷ், "நடப்பது எங்கள் ஆட்சி, அதனால் என் மனைவி ரமா வெற்றி பெற்றதாக அறிவிக்க வேண்டு"மென்று கூறி ரகளையில் ஈடுபட்டார். தி.மு.க. மீராதேவிக்கு விழுந்த வாக்குகளில் சிலவற்றை கிழித்தெறிந்து விட்டு, மீண்டும் மறு வாக்கு எண்ணிக்கை என்று கூறி, அதிலே அ.தி.மு.க. ரமா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

திருவாரூர் மாவட்டத்தில் மூன்றாம்சேத்தி ஊராட்சி தேர்தலில் சி.பி.ஐ. தோழர் ஆசைத்தம்பி 2 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். காலையில் சான்றிதழைப் பெறலாம் என்று கூறியதால் அவர் வீடு சென்றார். காலையில் சான்றிதழ் பெற அவர் வந்தபோது, முதல் நாள் இரவே ஆளுங்கட்சியினர் மிரட்டலுக்குப் பயந்து, அ.தி.மு.க. ராசேந்திரன் வெற்றி பெற்றதாக சான்றிதழ் கொடுக்கப் பட்டதாகக் கூறினார்கள். ஆசைத்தம்பி போராட்டத்தில் ஈடுபடுவேன் என்று சொன்ன தால், அவரிடமும் ஒரு வெற்றிச் சான்றிதழை பி.டி.ஓ. கொடுத்தார். இருவரிடமும் வெற்றிச் சான்றிதழ் இருந்ததால் யார் பதவி ஏற்பது என்ற

பிரச்சினை எழுந்தபோது, பி.டி.ஓ. இருவருக்கும் தொலைபேசி செய்து, ஒருவர் சான்றிதழை திருப்பிக் கொடுக்கவில்லை என்றால், தற்கொலை செய்து கொள்வேன் என்று கூறியதால், நீண்ட போராட்டத்திற்குப் பின் ஆசைத்தம்பி, (சி.பி.ஐ.) அங்கே பதவியேற்றார்.

மன்னார்குடி ஒன்றியத்தில் 5வது வார்டுக்குப் போட்டியிட்ட தி.மு.க. சுப்பையன் 945 வாக்குகள் பெற்று தனக்கு பின்னால் வந்த அ.தி.மு.க. சேகரை தோற்கடித்தார். இந்தச் செய்தி தேர்தல் ஆணையத்தின் இணையதளம் முதல் அனைத்துப் பத்திரிகைகளிலும் வெளிவந்தது. மறுநாள் வெற்றி சான்றிதழ் வாங்கச் சென்ற தி.மு.க. சுப்பையனுக்கு அதிர்ச்சி. 927 வாக்குகள் மட்டுமே பெற்ற அ.தி.மு.க. சேகர் வெற்றி பெற்றதாக மாற்றி அறிவிக்கப்பட்டார். தீக்குளிக்கப் போன சுப்பையனை நண்பர்கள் சமாதானம் செய்துள்ளனர். அதிகாரிகளோ, "நாங்கள் என்ன செய்றதுங்க, ஆளுங்கட்சிக்காரர்கள் மிரட்டி வெற்றிச் சான்றிதழை வாங்கிக் கொண்டு போய்விட்டார்கள்" என்று கூறியிருக்கிறார்கள்.

சேலம் மாவட்டத்தில், தாரமங்கலம் ஒன்றியத் தலைவர் பதவிக்கு மாதேஸ் என்பவர் அ.தி.மு.க. சார்பில் விண்ணப்பித்திருந்தார். ஆனால் அமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியோ மாதேசுக்கு சீட்டு கொடுக்காமல், காங்கேயன் என்பவரை தலைவர் வேட்பாளராக அறிவித்துவிட்டார். மாதேஸ் தனது ஆதரவாளர்களோடு சுயேச்சையாக களம் இறங்கியதோடு, அமைச்சரின் வேட்பாளரான காங்கேயன், அதே ஒன்றியத்தில் ஒப்பந்ததாராராக இருப்பதாக நிரூபித்து, அவரது வேட்பு மனுவை தள்ளுபடி செய்ய வைத்து விட்டார். ஒன்றியக் குழுவுக்கு தேர்வு பெற்ற அ.தி.மு.க. உறுப்பினர்கள் தனக்குக் கட்டுப்பட மாட்டார்கள் என்பதை புரிந்துகொண்ட அமைச்சர் பழனிச்சாமி, பதவியேற்பு நிகழ்ச் சிக்கு வந்த ஆறு அ.தி.மு.க. உறுப்பினர்களையும் கடத்திக் கொண்டு வரும்படி தாரமங்கலம் அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளர் சின்னச்சாமிக்கு உத்தரவிட்டார். அவரது கடத்தலுக்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொடுக்குமாறு காவல்துறையினருக்கும் அமைச்சரே உத்தரவிட்டார். அதன்படி 25ந்தேதி காலையில் ஓமலூர் துணை கண்காணிப்பாளர் முத்துக்கருப்பன், மற்றும் கண்காணிப்பாளர் பாஸ்கரன் தலைமையில் அ.தி.மு.க. உறுப்பினர்களை கடத்த

காவல் துறையினர் தாரமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் காத்திருந்தனர். பொதுமக்கள், பத்திரிகையாளர்கள் தொலைவில் தடுத்து நிறுத்தப்பட்டார்கள். அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளர் சின்னசாமியின் ஜீப் மற்றும் ஒரு "ஸ்கார்ப்பியோ" காரை மட்டும் அலுவலக வளாகத்திற்குள் செல்ல காவல் துறையினர் அனுமதித்திருக்கிறார்கள்.

ஒன்றியக் குழு உறுப்பினர்களாக பதவியேற்றுக் கொண்டு முதலில் வெளியே வந்த அ.தி.மு.க. பெண் உறுப்பினர்களான சுமதி, சாந்தி ஆகியோரையும், மாணிக்கம் என்ற கவுன்சிலரையும் போலீசார் ஒன்றியச் செயலாளரின் ஜீப்பில் ஏறும்படி கூற, அதற்கு அவர்கள் மறுக்க, இறுதியாக போலீசார் அவர்களை குண்டுகட்டாகத் தூக்கிக் கொண்டு போய் ஜீப்பில் ஏற்றியிருக்கிறார்கள். அவர்களுக்குப் பின்னால் வந்த மாதேஸ், கூச்சலிட, போலீசார் அவரை மடக்கிப் பிடித்து அடித்து உதைத்திருக்கிறார்கள். இதைக் கண்ட மாதேசின் ஆட்கள் போலீசாரை சுற்றி வளைத்துக் கொண்டார்கள். அதைப் பயன் படுத்திக் கொண்டு ஜீப்பில் அடைபட்டிருந்த பெண் கவுன்சிலர்கள் போலீசாரை தள்ளி விட்டு விட்டு வெளியே வந்துவிட்டார்கள். இந்த நிலையில் மாதேசுக்கு எதிராக காங்கேயனை விட்டு போலீசில் ஒரு புகாரையும் அமைச்சர் கொடுத்துள்ளார். சேலத்தில் நடைபெற்ற "திருவிளையாடல்"களில் ஒரு சிறு துளி இது!

உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை அ.தி.மு.க. அரசு நடத்திய லட்சணம்தான் இந்த விவரங்கள்!

அன்புள்ள,

மு.க.

1-11-2011

3597. அந்த இதயம்; இதையும் தாங்குமோ?

உடன்பிறப்பே,

மொழிக்கும் நாட்டுக்கும் தம்மையே அர்ப்பணித்து சரித்திரத்திலே சாகாத இடம் பெற்றோர், ஆன்ற தமிழ்ச் சான்றோர், கொள்கை மறவர்கள், குணக்குன்றுகளாய்க் குவலயம் போற்ற வாழ்ந்தோர், அகிலம் புகழ்ந்தேத்திடும் அறிஞர்கள், கலைஞர்கள், மக்கள் பணியில் மகத்தான சாதனை புரிந்த மாண்புக்குரிய பெரியோர் - ஆகியோர் தம் அரிய பெயர்களை வாழும் சமுதாயத்தின் உள்ளத்தில் ஒளி விளக்கேற்றிடும் வகையில் நினைவுபடுத்துவது; பண்பாடு போற்றிடும் ஓர் அரசின் அடிப்படைக் கடமைகளில் ஒன்று! எனவேதான் ஒவ்வொரு முறையும் கழக ஆட்சி தமிழகத்திலே மலரும் போதெல்லாம் அந்தப் பண்பாடு போற்றிப் பேணப்பட்டது என்பதை அனைவரும் அறிவர்.

உயிரோடு இருப்பவர்களின் பெயர்களை எந்தவொரு அரசுக் கட்டிடத்திற்கும் சூட்டக் கூடாது என்பது எம்.ஜி.ஆர். அரசின் கொள்கையாக இருந்தாலும், அவருடைய ஆட்சிக் காலத்திலேயே மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு அவருடைய பெயர் சூட்டப்பட்டது. ஆனால் அதன் தொடக்க விழா நடைபெற்ற நேரத்தில் எம்.ஜி.ஆர். மறைந்துவிட்டார். அதன் பிறகு ஜானகி அம்மையார் ஆட்சியிலும், ஆளுநர் ஆட்சியிலும் அந்தப் பல்கலைக் கழகத்திற்கு ஒரு நல்ல இடம்கூட ஒதுக்கப்படவில்லை. தரமணி என்ற இடத்திலே ஒரு சிறிய வாடகை வீட்டில் அது அனாதையாக இயங்கி வந்தது.

ஆனால் நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்று; 24-6-1989 அன்று சென்னை பிரசிடெண்ட் ஓட்டலில் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரியின் சார்பில் நடைபெற்ற ஒரு விழாவில் எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் "மருத்துவப் பல்கலைக் கழகம், மருத்துவப் பல்கலைக் கழகம்" என்று குறிப்பிட்டார்களே அல்லாமல், "எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம்" என்று

யாருமே குறிப்பிடவில்லை. அதனைச் சுட்டிக்காட்டி நான் பேசும்போது, "டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் மிக விரைவில் நல்ல உயர்ந்த மாட மாளிகை போன்ற கட்டிடங்களில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கக்கூடிய அளவிற்கு அமையும்" என்று அறிவித்தேன்.

நான் அறிவித்தவாறு 31-8-1989 அன்று தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத் தொடக்க விழா சென்னை பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்றது. அந்த விழாவிற்கு தமிழக ஆளுநராக இருந்த அண்மையில் மறைந்த திரு. அலெக்சாண்டர் தலைமை வகித்தார். அப்போது குடியரசு தலைவராக இருந்த திரு. ஆர். வெங்கட்ராமன் பல்கலைக் கழகத்தினைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். நான் உரையாற்றும்போது, "40 ஆண்டுக் காலம் கலைத்துறை, அரசியல் துறை ஆகிய இரண்டு துறைகளிலும் என்னோடு தோளோடு தோள்நின்ற எனது அருமை நண்பர், மறைந்த முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரால் தொடங்கப்பட்டு - ஆனால் அதிகாரபூர்வமாக இதுவரையில் தொடக்க விழா நிகழ்ச்சி நடைபெறாமல் இருந்து இன்று நடைபெறுகிறது.

"முக நக நட்பது நட்பன்று, நெஞ்சத் தகநக நட்பது நட்பு" என்ற வள்ளுவரின் குறள் மொழிப்படி, நட்பின் இலக்கணத்தை இதயத்தில் பதித்து இன்று தமிழகத்தின் தி.மு.க. அரசின் சார்பில் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் தொடக்க விழா நடைபெறுகிறது" என்று கூறித்தான் என் உரையைத் தொடங்கினேன்.

அந்தப் பல்கலைக் கழகத்திற்கான கட்டிட வடிவமைப்பைக்கூட நானேதான் வரைந்து கொடுத்தேன். ஆனால் எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகத்தின் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்ற அடுத்த ஆண்டே கழக ஆட்சி கலைக்கப்பட்டு விட்ட காரணத்தால், அந்தப் பணிகள் அடுத்து வந்த ஜெயலலிதா ஆட்சியிலே; எனது ஆட்சியில் அடிக்கல் நாட்டப்பட்டது என்ற காரணத் தாலோ என்னவோ - விரைவாக நடைபெறவில்லை. மீண்டும் 1996இல் நான்காவது முறையாக நான் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, கட்டிடப் பணிகளைத் துரிதப்படுத்தி, 31-7-1998 அன்று குடியரசுத் துணைத் தலைவராக இருந்த திரு. கிருஷ்ணகாந்த் அவர்களை அழைத்து ஆறு கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட

எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகக் கட்டிடங்கள் திறந்து வைக்கப் பட்டன. கட்டிட முகப்பில் அமைக்கப்பட்டிருந்த எம்.ஜி.ஆர். அவர்களின் சிலையினை நான் திறந்து வைத்து உரையாற்றினேன்.

மேலும் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவைப் போற்றிடும் வகையில் திரைப்படத் துறையினர் நீண்ட காலமாக வைத்த கோரிக்கையினை ஏற்று தமிழக அரசின் திரைப்பட நகருக்கு அவரது பெயரைச் சூட்டி மகிழ்ந்தேன்.

நனி நாகரிகம் போற்றும் இதே நல்ல எண்ணத்தோடுதான், "கடற்கரை சாலை" என்று அழைக்கப்பட்டு வந்த நீண்ட சாலைக்கு பெருந்தலைவர் பெயரால் "காமராஜர் சாலை" என்று பெயரிட்டு அழைக்கச் செய்தேன். இன்னும் சொல்லப்போனால், சென்னை மாநகர மேயர் பொறுப்பிலே தி.மு. கழகம் இருந்த தொடக்கக் காலத்திலேயே சென்னை மாநகரில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் சிலை திறந்து வைக்கப்பட்டது என்பதை யாரும் மறந்திருக்க முடியாது. காமராஜர் பிறந்த நாளை தமிழகமெங்கும் நினைவுகூர்ந்திடும் வகையில் "கல்வி வளர்ச்சி நாள்" என்ற பெயரில் அனைத்துக் கல்விக் கூடங்களிலும் கொண்டாட வேண்டுமென்று அறிவித்து, அதனை அடுத்து வருகின்ற ஆட்சியினர் மாற்றி விடக் கூடாதே என்பதற்காகவே சட்டமாகவே இயற்றினேன்.

சாதி மத பேதங்கள் நீங்கிடவும், அனைத்துச் சாதியினரும் ஒரே இடத்தில் சுமுகமாக வாழ்ந்திடவும் கழக ஆட்சியில் நடைமுறைப் படுத்தப்பட்ட சமத்துவபுரம் திட்டத்திற்கு - "பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம்" என்று பெயர் சூட்டியதோடு, ஒவ்வொரு சமத்துவ புரத்திலும் அவரது சிலையினை அமைக்கச் செய்தேன். மேலும் பெண்களுக்கு சொத்துரிமை, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை பெரியார் நினைவைப் போற்றிடும் வகையில் கழக ஆட்சியில் நிறைவேற்றினோம்.

சுதந்திரத்திற்குப் பிறகு தமிழகத்தில் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்று "தாடியில்லாத பெரியார்" என்று போற்றப்பட்ட ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் பெயரால், சென்னை அரசினர் தோட்டம், "ஓமந்தூரார் வளாகம்" என்று என்னால் பெயர் சூட்டப்பட்டதோடு, ஓமந்தூரில் அவருக்கு நினைவகம் ஒன்று எழுப்பப்பட்டு, சென்னையில் அமைச்சர்கள் வாழும் சாலைக்கு "ஓமந்தூரார் சாலை" என்றும் என்னால் பெயர் சூட்டப்பட்டது.

சென்னையில் செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு அருகில் கழக ஆட்சியில் கட்டப்பட்ட பத்து மாடிக் கட்டிடத்திற்கு தேசியக் கவிஞர் நாமக்கல்லார் பெயரைச் சூட்டி, "நாமக்கல் கவிஞர் மாளிகை" என்று அழைக்கச் செய்ததோடு, அந்த மாளிகையின் உச்சியில் அவர் எழுதிய உணர்ச்சி வரிகளான "தமிழன் என்று சொல்லடா; தலை நிமிர்ந்து நில்லடா" என்பதை எழுதி ஒளியூட்டச் செய்தேன்.

கோட்டம் முதல் குமரி வரை என்றழைத்திடும் வகையில் சென்னையில் "வள்ளுவர் கோட்டம்" என்றும், குமரி முனையில் வள்ளுவருக்கு 133 அடி உயரத்தில் அழகிய சிலை ஒன்றும், - பூம்புகாரில் எழுநிலை மாடத்துடன் கூடிய சிலப்பதிகாரக் கலைக் கூடம் என்று ஒன்றும் எழுப்பி - தமிழக வரலாற்றோடு வளர்த் தெடுக்கப்பட்ட கலைகளில் ஒன்றான சிற்பக் கலையின் சிறப்பை எடுத்துக்காட்ட என்னால் இயன்ற பணியாற்றினேன்.

பாஞ்சாலங்குறிச்சியில்; பரங்கியரை எதிர்த்துப் போராடிய வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமைத்துரை போன்றவர்களின் நினைவு நிலைத்திடும் வகையில் கோட்டை ஒன்றை எழுப்பியதோடு, கவர்னகிரியில் வீரன் சுந்தரலிங்கம் பெயரால் அழகிய நகரம் ஒன்றும் என்னால் உருவாக்கப்பட்டது.

சென்னையில் அம்பேத்கர் மணி மண்டபம்,

குமரியில் காமராஜர் மணி மண்டபம்

மூதறிஞர் ராஜாஜி நினைவிடம்

திருமங்கலத்தில் தியாகி விசுவநாததாஸ் நினைவில்லம்

நெற்கட்டும் செவலில் பூலித்தேவன் நினைவு மண்டபம்

நாகர்கோவிலில் பொதுவுடைமை வீரர் ஜீவாமணி மண்டபம்

பட்டுக்கோட்டையில் மக்கள் கவிஞர் கல்யாண சுந்தரம் மணி மண்டபம்

உடுமலையில் பகுத்தறிவு கவிராயர் நாராயணகவி மணி மண்டபம்.

இளந்தலைவர் ராஜீவ் காந்தி பெயரில் தகவல் தொழில் நுட்ப நெடுஞ்சாலை

சென்னையில் பெரியவர் பக்தவத்சலம் நினைவில்லம்

இடையன்குடியில் அறிஞர் கால்டுவெல் நினைவகம்

பசும்பொன் தேவர் பெயரில் கல்லூரிகள் மற்றும் மாபெரும் சிலை

குன்றக்குடியில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவு மண்டபம்

திருப்பத்தூரில் மருது பாண்டியர் நினைவிடம்

தில்லையாடி வள்ளியம்மை நினைவில்லம்

எட்டையபுரத்தில் பாரதியார் மணி மண்டபம்

சென்னை காந்தி மண்டப வளாகத்தில் மொழிப்போர் காவலர்களுக்கு மணிமண்டபம், தியாகிகள் மணி மண்டபம், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் மணி மண்டபம்

நாமக்கல்லில் கவிஞர் ராமலிங்கனார் நினைவில்லம்

மதுரை மாவட்டம் தும்பப்பட்டியில் தியாகி கக்கன் நினைவு மண்டபம்

மருதூரில் வள்ளலார் ராமலிங்க அடிகளார் நினைவில்லம்

நேதாஜி - சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் - தீரன் சின்னமலை - தியாகி சங்கரலிங்கனார் - தியாகி ஆர்யா என்கிற பாஷ்யம் - புதுக்கோட்டை மன்னர் ராஜகோபாலத் தொண்டைமான் - ராமசாமி படையாச்சியார் - நடிகர் திலகம் சிவாஜி கணேசன் போன்ற எண்ணற்றோர் நினைவைப் போற்றும் வகையில் திருவுருவச் சிலைகள்!

பேரறிஞர் அண்ணா - மறைமலை அடிகளார் - திரு.வி.க. - கலைவாணர் - மூப்பனார் போன்ற பெரியவர்களின் பெயரால் பாலங்கள்!

இத்தனையும் கழக ஆட்சியில் அமைக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள்தான்!

இவையெல்லாம் என் புகழை உயர்த்துவதற் காக அல்ல - கழக ஆட்சியினை விளம்பரப்படுத்துவதற்காகவும் அல்ல - வீரமும், ஈரமும் செறிந்த தமிழக வரலாறு, நாகரிகம், கலை, பண்பாடு

இவைகள் எல்லாம் சிறக்கவும், இறவாமல் என்றென்றும் இருக்கவும் பணியாற்றியவர்கள், துணை நின்றவர்கள், அவர்தம் பெயரில் இக்காலத்திலும் எக்காலத்திலும் நன்றியுள்ள மக்களால் நெஞ்சம் மணக்க நினைவு கூர்ந்திடப்பட வேண்டும் என்பதற்காகவே! இந்த உணர்வுகளையெல்லாம் எனக்கும் தன்மானம் உள்ள தமிழ் மக்கள் எங்கெங்கே வாழ்கிறார்களோ அவர்களுக்கும் பரப்பி, தமிழ் இனம் காக்க - தமிழ் மொழி காக்க - தளராது உழைத்தவரும், பூவிதழினும் மென்மையான புனித உள்ளம் கொண்டு - என் போன்றவர்களை ஆளாக்கியவரும் - பெரியார் வழி நின்று, மூட நம்பிக்கையெனும் இருள் விலக - முழு நிலவாய்த் தோன்றியவருமான - பேரறிஞர் அண்ணாவின் நினைவு தமிழர் உள்ளங்களில் என்றென்றும் தங்கிட வேண்டுமென்ற தணியாத தாகத்தால் - அண்ணா பெயரால் எத்தனையெத்தனையோ நினைவுச் சின்னங்களை அமைத்தேன். 1990ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அப்போது பிரதமராக இருந்த சமூக நீதிக் காவலர்

திரு. வி.பி. சிங் அவர்கள் வந்தபோது, விழா மேடையிலேயே - சென்னை மீனம்பாக்கம் உள்நாட்டு விமானத்தளத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் பெயரும்; பன்னாட்டு விமானத் தளத்திற்கு பேரறிஞர் அண்ணா பெயரும் சூட்டிடச் செய்தேன். எனினும் அவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல அகிலம் புகழ் அறிவுப் பண்ணையாக அவரது நினைவு போற்றும் வகையில் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம் ஒன்றை ஆசியாவிலேயே முதன்மையானதாக 172 கோடி ரூபாய்ச் செலவில் - சென்னையில் அமைத்தேன்.

உலகின் பல பகுதிகளிலே இருந்து இங்கே வந்து கண்டோர் வியக்கவும், வியந்து பாராட்டவும் எழில் மாடமாக மட்டுமின்றி என்னரும் திராவிட மக்களின் அறிவு வளர் கூடமாகவும், அந்த நூலகம் விளங்குகிறது என்பதைக் கண்டும் - கேட்டும் கழி பேருவகை கொண்டேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மரணப் படுக்கையில் அடையாறு புற்றுநோய் மருத்துவ மனையில் இருந்தபோது அறுவை சிகிச்சைக்காக மருத்துவர்கள் அழைத்த நேரத்தில், தான் படித்துக் கொண்டிருந்த புத்தகத்திலே ஒரு சில பக்கங்கள் மீதமுள்ளன என்றும், அதை படித்து முடித்துவிட்டு வருவதாகவும்

தெரிவித்தார்கள். அந்த அளவிற்கு புத்தகங்களைப் படிப்பதிலே அவர்களுக்கு ஆர்வம் இருந்ததை நேரடியாக அறிந்த நான், அவரது நூற்றாண்டு நிறைவினையொட்டி எழுப்பிய நினைவுச் சின்னமாக நூலகம் ஒன்றே அமைய வேண்டுமென்று விரும்பினேன். நூலகம் திறக்கப்பட்ட சில நாட்களுக்குப் பிறகு அதனைக் காண நான் சென்றபோது, அங்கே படித்துக் கொண்டிருந்த சுமார் 100 மாணவர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டு, தங்கள் உள்ளத்திலே வழிந்தோடிய மகிழ்ச்சிப் பெருக்கினை வெளிப்படுத்தி நன்றி தெரிவித்துக் கொண்டார்கள். ஆனால் அந்த நூலகத்தை காழ்ப்புணர்வு காரணமாக மருத்துவமனையாக மாற்றுவேன் என்று இன்றைய முதலமைச்சர் தெரிவித்திருக்கிறார் என்றால், எந்த அளவிற்கு அவரிடம் குரோதம் குடி கொண்டிருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளலாம். அவர் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த ஆறு மாத காலத்தில் தொடர்ந்து கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட

- சமச்சீர் கல்வித் திட்டம்,
- புதிய தலைமைச் செயலகக் கட்டிடம்,
- பாவேந்தர் செம்மொழி தமிழாய்வு நூலகம்,
- அண்ணா பல்கலைக் கழகங்கள் - ஒழிப்பு,
- தொல்காப்பியப் பூங்கா முடக்கம்,
- சென்னை புறநகர் காவல் துறை ஆணையரகம் ரத்து,
- செம்மொழிப் பூங்காவின் பெயர்ப் பலகை மறைப்பு

போன்ற பல திட்டங்களுக்கு மூடுவிழாக்களை தொடர்ந்து நடத்தி தமிழ்ப் பண்பாட்டுச் சின்னங்களையெல்லாம் ஒவ்வொன்றாக அழித்து வருகிறார்.

எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்றார் அண்ணா. ஆனால்; அண்ணனே! அந்த இதயம் இதையும் தாங்குமோ?

அன்புள்ள,

மு.க.

4-11-2011

3598. என் உடன்பிறப்புகள் ஏமாற மாட்டார்கள்!

உடன்பிறப்பே,

உலக அளவிலும் சரி, அல்லது இந்திய நாட்டளவிலும் சரி, எந்த இயக்கமும் ஒரு குறிப்பிட்ட குறிக்கோளை வென்றெடுப்பதற் காகவென்றே தொடங்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த ஒரே குறிக்கோளை அடைவதற்காக அந்த இயக்கம் எடுக்கின்ற முயற்சிகளில் அல்லது வகுக்கின்ற வழிகளில் மாற்றங்கள் ஏற்பட்டு அல்லது பிளவுகள் தோன்றி பல்வேறு கிளைகளாகப் பிரிந்தாலுங்கூட, குறிப்பிட்ட ஒரு மரத்தின் கிளைதான் அது என்ற நிலையில் இயங்குவதும், நம் கண் முன்னாலே காணுகின்ற சரித்திர உண்மைகளாகும்.

சுதந்திரம் என்ற ஒரே இலட்சியத்திற்காக காந்தி அடிகளால் வழி நடத்தப்பட்ட காங்கிரஸ் பேரியக்கம் என்னும் விடுதலை இயக்கத்தில் மாவீரர் சுபாஷ் சந்திரபோசும், பட்டாபி சீதா ராமைய்யாவும் பிரிந்து நின்று காங்கிரஸ் தலைமைக்குப் போட்டியிட்டபோது; "பட்டாபி சீதாராமையா தோல்வி தனது தோல்வி" என்கிற அளவிற்கு - வரிந்து கட்டிக் கொண்டு பணியாற்றிய வார்தா முனிவர், உத்தமர் காந்தியடிகள் அந்தப் போட்டியில் தோற்றுத்தான் போனார். இது வரலாற்று உண்மை.

அந்தப் போட்டியில் வென்ற சுபாஷ் சந்திர போஸ் இந்திய விடுதலைக்காக புரட்சி மார்க்கத்தைப் பின்பற்றி தேவர் திருமகனோடு இணைந்து ஐ.என்.ஏ. படையை உருவாக்கி, பிரிட்டிஷ்காரர்களோடு மோதியதும் அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

"வெள்ளையனே வெளியேறு" என்ற இலட்சியம் நிறைவேற வேண்டுமென்று அதற்காகத் துப்பாக்கி ஏந்தி தூக்குமேடைக்குச் சென்ற பகவத்சிங் ஒருபுறம்! அந்த பகவத்சிங் கொள்கை, கோட்பாடு ஏற்கத் தக்கதல்ல என ஒதுங்கி நின்று அமைதி வழியில்

அகிம்சா போராட்டம் நடத்திய அண்ணல் காந்தி அடிகள் மற்றொரு புறம்!

இந்தியச் சுதந்திரப் போராட்டத்திற்காக ஓரணியில் குரல் கொடுத்த பண்டித நேரு, ஜனாப் ஜின்னா இருவரும் அந்த ஓரணியிலேயே நீடிக்காமல் தனித்தனி அணியாகி, தனித்தனி நாடுகளாக - இந்தியா, பாகிஸ்தான் எனப் பிரிந்ததும் வரலாற்றின் ஒரு பகுதியாகும்.

பரந்த இந்தியாவில் மட்டுமல்ல; அந்த இந்தியாவில் ஒரு பகுதியான தமிழகத்தில் காந்தி அடிகளின் வழிநின்று காங்கிரஸ் இயக்கத்தை வளர்த்தோர் எனச் சொல்லப்படுபவர்களில் ராஜாஜி, காமராஜரிடையே ஏற்பட்ட வேறுபாடு "கோடு உயர்ந்தது, குன்றம் தாழ்ந்தது" என்ற சரித்திரத் தலைப்புகளாக ஆனதையும் யாரும் மறந்துவிட முடியாது.

காங்கிரசிலிருந்து "வைக்கம் வீரர்" பெரியார் பிரிந்ததும் - அவர் தலைமையை ஏற்றிருந்த சாமி சிதம்பரனார், ஜீவானந்தம், அய்யாமுத்து போன்றோர் அவரிடமிருந்து விலக நேர்ந்ததும்; அவ்வளவு ஏன்? அண்ணாவின் சேலம் மாநாட்டுத் தீர்மானத்தையேற்று, அய்யா பெரியார் முழங்கியதும்; அதன்பிறகு சில ஆண்டுகளில் "பெரியார் இன எழுச்சி சமுதாய இயக்கம் நடத்துவார்; நான் அந்த உணர்வுகள் அடங்கிய அரசியல் இயக்கம் நடத்துகிறேன்" என்று திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் கண்டதும்; இந்தியாவிலும், தமிழகத்திலும் எழுதப்பட்ட அரசியல் சரித்திரங்கள்! ஆனால், தனி வழி அமைத்துக் கொண்டு தனித்தனியே இயக்கம் நடத்திய யாரும் - (திருவாசகமணி பாலசுப்பிரமணியம்; ஒருவரைத் தவிர) - தொடக்கத்தில் கொண்ட குறிக்கோளை மாற்றிக் கொள்ளவும் இல்லை; மறந்துவிடவும் இல்லை!

"தினமலர்" பத்திரிகை திராவிட முன்னேற்றக் கழகத்தை இடித்துச் சிதைத்து குறுகலாக்குவதற்காக எடுக்கின்ற முயற்சிகளின் தொடர்ச்சியாக, "உடன்பிறப்புகள்" என்ற பெயரால் ஒரு கற்பனைக் கட்டுரையை வெளியிட்டிருக்கின்றது. அந்தக் கட்டுரையின் உள்நோக்கத்தை உண்மையான உடன்பிறப்புகள் அனைவருமே உணர்ந்தே இருப்பார்கள். ஏனென்றால் "தினமலர்" நம்மைக் கொஞ்சி மகிழ்வது; பூதகி; கண்ணனைக் கொஞ்சி

மகிழ்வது போல் நடித்து, அவனைக் கொல்லவே துணிந்தாள் என்று பாரதத்தில் ஒரு கிளைக்கதை உண்டே, அந்தக் கிளைக்கதையின் தலையாய கதாபாத்திரமான பூதகியின் பாத்திரத்தைத்தான் "தினமலர்" நாளேடு தாங்கிக் கொண்டு புறப்பட்டிருக்கிற தென்றால் அதில் துளியளவும் தவறில்லை.

அழகிய மங்கை உருவில் வந்து தாய்ப்பாசம் காட்டுவது போல் நடித்து, கண்ணனை பாலருந்தச் சொல்லி, அவனைக் கொன்றுவிட முற்பட்ட பாதகியாம் பூதகிக்கும், இன்று பசப்பு மொழி பேசி நம்மிடையே கசப்புணர்வை வளர்த்து கழகத்தை வீழ்த்திவிட பகற்கனவு காணும் படுபாவிகள் சிலருக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. அந்தப் படுபாவிகள் பத்திரிகை வடிவத்திலே நம்மிடையே வருவர். அந்த விஷ நாகங்களில் ஒன்று பச்சைப் பாம்பு வடிவெடுத்து, பச்சை வண்ண பசுங்கிளையில் தன்னை மறைத்துக் கொண்டு, பாகுமொழி பேசுவதைக் கண்டு - கேட்டு - உடன்பிறப்புகள் யாரும் ஏமாற மாட்டார்கள்! எச்சரிக்கையாகவே இருப்பார்கள்!

அன்புள்ள,

மு.க.

7-11-2011

3599. அய்யரின் மனசாட்சியே அதைச் சொல்லும்!

உடன்பிறப்பே,

தமிழ் மாநிலத் தேர்தல் ஆணையர் அளித்த பேட்டி ஒன்றில், "ஒரு மாநில முதல்வர் தனது செல்வாக்கால் தேர்தல் பணிகளில் குறுக்கிடாம இப்படியொரு உள்ளாட்சித் தேர்தல் நடக்க முடியுமான்னு தேர்தலைப் பார்வையிட வெளிமாநிலங்களிலிருந்து வந்த தேர்தல் ஆணையர்களே ஆச்சர்யப்பட்டாங்க" என்று கூறியிருக்கிறார். அவர் அவ்வாறு தமிழக முதல் அமைச்சருக்கு பாராட்டு தெரிவித்திருப்பதிலிருந்தே, அவர் யார் என்பதை நம்மால் நன்றாகப் புரிந்து கொள்ள முடிகிறதல்லவா?

ஓர் அரசு அதிகாரியைப் பற்றி, அவர் ஒரு பதவியிலே அமர்ந்து, சில நாட்களுக்குப் பிறகு அவரது நடவடிக்கைகளைக் கண்ட பிறகு தான் அவர் நடுநிலையாக நடக்கவில்லை, ஒருதலைப் பட்சமாக நடக்கிறார் என்றெல்லாம் சொல்வார்கள். ஆனால் அய்யரைப் பொறுத்த வரையில், தேர்தல் ஆணையர் பதவியில் அமர வைக்கப்பட்டவுடனேயே அவரைப் பற்றி அனைத்துக் கட்சிகளும், அவர் அ.தி.மு.க. ஆளாயிற்றே, அவரைப் போய் தேர்தல் ஆணையராக நியமிக்கிறார்களே, விரைவில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் வரப்போகிற தல்லவா, அதனால்தான் அவரை ஆளுங் கட்சிக்கு அனுசரணையாக நடப்பதற்காக என்றே, அ.தி.மு.க. அரசு அவரைத் தேர்ந்தெடுத்து, தேர்தல் ஆணையராக நியமித்துள்ளது என்றெல்லாம் விமர்சனங்கள் ஏடுகளில் வெளி வந்ததை யாரும் அவ்வளவு சீக்கிரத்தில் மறந்திருக்க முடியாது.

இன்னும் சொல்லப் போனால், தேர்தல் ஆணையரைக் கேள்வி கேட்ட "குமுதம்" செய்தியாளரே -- "ஆளுங்கட்சிக்கு ஆதரவா நீங்க செயல்பட்டீங்கங்கிற விமர்சனமும் ஒரு பக்கம் இருக்கே?" என்றும் - "தமிழ்நாடு அமைதிப் பூங்காவா இருக்கிறதா

தேர்தலுக்கு முன்னும் பின்னும் சொன்னீங்க, இது தேர்தல் ஆணையருக்கான வரம்பை மீறிய பேச்சு இல்லையா?" என்றும் - கேட்டிருப்பதிலிருந்தே அய்யர் எப்படிப்பட்ட அதிகாரி என்பதையும் அவர் தனது பொறுப்புக்கான வரம்புகளையெல்லாம் மீறி எந்த அளவிற்கு தமிழக அரசைப் புகழ்ந்து தள்ளுகிறார் என்பதையும் புரிந்துகொள்ள முடிகிறதா அல்லவா?

தேர்தல் ஆணையர் எந்த அளவிற்கு ஆளுங் கட்சியான அ.தி.மு.க.விற்கு வேண்டியவர் என்பதைப் பற்றி கழகத்தின் சார்பில் ஆளுநரிடமே புகார் மனு தரப்பட்டது. அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஆளுங்கட்சிக்கும், ஆளுங்கட்சியினருக்கு வேண்டியவர்களுக்கும் உதவி செய்ய வேண்டுமென்பதற்காகவே திரு. அய்யர் அவர்கள் டாஸ்மாக் மேலாண்மை இயக்குநராக நியமிக்கப்பட்டார். உள்ளாட்சி மன்றத் தேர்தலில், இந்த அதிகாரி ஆளுங்கட்சிக்கு ஆதரவாளராக இருந்த காரணத்தினால்தான், ஆளுங்கட்சிக்கு மட்டும் முன்கூட்டியே தெரிவித்துவிட்டு - மற்றக் கட்சிகளையெல்லாம் இருளிலே ஆழ்த்திடும் வகையில், 22-9-2011 அன்று வேட்பு மனு தாக்கல் செய்வது தொடங்க இருக்கையில்,

21-9-2011 அன்றுதான் தேர்தல் அட்டவணை யையே வெளியிட்டார். தேர்தல் அட்டவணையை அறிவித்தபோது தனித் தொகுதிகள், பெண்களுக்கான தொகுதிகள் எவையெவை என்பதை அறிவிக்கவில்லை. அரசியல் கட்சிகள் மட்டுமல்லாமல் வாக்காளர்களும் தேர்தல் பற்றிய விவரங்களை முழுமையாக தெரிந்து கொள்ள முடியாமல் தத்தளித்தனர்.

தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் இருந்த நேரத்தில் ஆளுங்கட்சி பல நலத் திட்டங்களை அறிவித்ததை, தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தும் எந்தவிதமான நடவடிக்கையையும் ஆணையர் எடுக்கவே இல்லை.தேர்தல் நடத்தை விதிமுறைகளுக்கு மாறாக தமிழக அரசின் அதிகாரிகள் பலர் மாற்றம் செய்யப்பட்டார்கள். அதையும் தேர்தல் ஆணையர் கண்டுகொள்ளவில்லை.

உள்ளாட்சித் தேர்தல்களை பாரபட்சமின்றி நேர்மையாக நடத்தக்கோரி சென்னை உயர் நீதி மன்றத்தில் கழகத்தின் சார்பில் வழக்கு தொடர்ந்தபோது, தலைமை நீதிபதி எம்.ஒய். இக்பால்

அவர்களும், நீதிபதி சிவஞானம் அவர்களும் 14-10-2011 அன்று வழங்கிய தீர்ப்பில், மாநகராட்சிக்கு உட்பட்ட அனைத்து வாக்குச் சாவடிகளிலும், வாக்குப்பதிவை முழுமையாக வீடியோ பதிவு செய்ய உத்தர விட்டனர். மற்ற இடங்களைப் பொறுத்தவரை பதற்றமான வாக்குச்சாவடிகளை வீடியோ பதிவு செய்வதுடன், உள்ளூர் காவலர்களுக்கு சரிசமமாக வெளி மாநிலக் காவல்துறையினரையும் பணியில் ஈடுபடுத்த வேண்டுமென்று தேர்தல் ஆணையத்தை நீதிபதிகள் அறிவுறுத்தியிருந்தனர். "வெப்-காமரா" மூலம் வாக்குப் பதிவை பதிவு செய்து நேரடியாக ஒளிபரப்புவதற்கான சாத்தியக் கூறுகளை மாநிலத் தேர்தல் ஆணையம் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் கூறியிருந்தனர். ஆனால் அய்யர் தலைமையிலான தேர்தல் ஆணையம் உயர் நீதி மன்றத்தின் இந்தத் தீர்ப்புகளின்படி செயல் படவே இல்லை. சென்னை மாநகரில் பல வாக்குச்சாவடிகளில் வீடியோ பதிவு செய்யப்படவே இல்லை என்பதை சென்னை வாழ் வாக்காளர்கள் ஒவ்வொருவரும் கண்டார்கள். ஏடுகள் எல்லாம் அதைப் பற்றி விரிவாக எழுதின. பிற மாநிலங்களிலிருந்து போதுமான காவல் துறையினர் பெறப்படவில்லை.

19-10-2011 அன்று சென்னை உயர் நீதி மன்ற நீதிபதிகள் இதுபற்றி பிறப்பித்த உத்தரவில் "சென்னை மாநகர மேயர் வேட்பாளர்களாக போட்டியிட்டவர்களும், கவுன்சிலர் வேட்பாளர்களாக போட்டியிட்டவர்களும் உயர் நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்புக்குக் கட்டுப்பட வேண்டும். எந்தெந்த வாக்குச் சாவடிகளில் வீடியோ பதிவு செய்யப்பட்டதோ அதனை நீதி மன்றத்தில் ஒப்படைக்க வேண்டும். மேலும் இது குறித்து இரண்டு வார காலத்திற்குள் தேர்தல் ஆணையம் பதிலளிக்க வேண்டும்" என்றும் கூறியிருந்தார்கள் என்றால், தேர்தல் ஆணையர் தேர்தல் முறையாக நடைபெற்றது என்று சொல்வதில் ஏதாவது பொருள் இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

மேலும் வாக்குப் பதிவின்போது சென்னை யிலும் மற்றும் பல்வேறு நகரங்களிலும் ஆளுங் கட்சியினர் பயங்கரமான வன்முறைகளிலே ஈடுபட்டார்கள். கழகத்தினர் பலர் தாக்கப் பட்டார்கள். அவைகளைப் பற்றி தேர்தல் ஆணையத்திடம் முறையிட்ட போதும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வாக்குப் பதிவை வீடியோ எடுக்கும் பணிக்காக 85 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், வெறும் ஏழு இலட்ச ரூபாய் மட்டுமே அதற்காக செலவிடப்பட்டது.

தேர்தல் ஆணையம் வெளியிட்ட புள்ளி விவரமே தவறானது என்றும், சுயேச்சைகளின் வெற்றியை எல்லாம் அ.தி.மு.க.வின் வெற்றியாக கணக்கிலே எடுத்துக் கொண்டு வெளியிட்டிருக்கிறது என்றும் "நக்கீரன்" தெரிவித்த செய்திக்கு தேர்தல் ஆணையம் இன்றுவரை ஏன் பதிலளிக்கவில்லை என்பதில் இருந்தே தேர்தல் ஆணையத்தின் தகுதி எத்தகையது என்று தெரிகிறது அல்லவா?

நடுநிலையோடு உள்ளாட்சித் தேர்தல்களை நடத்த வேண்டிய தேர்தல் ஆணையர், ஒரு கட்சிக்காரரைப் போல அளித்த பேட்டியில், கடந்த காலத்து உள்ளாட்சித் தேர்தலில் ஒரு நகராட்சியில் நகராட்சித் தலைவரைத் தேர்ந்தெடுக்க காலையில் நகராட்சி உறுப்பினர்கள் கூடினார்கள் என்றும், தலைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றும் ஆனால் ஓட்டுப்போட்டது சம்பந்தப்பட்ட நகராட்சியின் ஆணையர் என்றும், அதற்கு அவர் சொன்ன காரணம் நகராட்சி உறுப்பினர்கள் 16 பேருக்கும் பார்க்கும் திறன் இல்லை என்றும், அவர்களுக்காக நான் ஓட்டுப் போட்டு உதவி செஞ்சேன் என்றும் கூறினார் என்றும் சொல்லியிருக்கிறார். கடந்த உள்ளாட்சித் தேர்தலில் எந்த நகராட்சியில் இவ்வாறு நடைபெற்றது, அதற்கு என்ன ஆதாரம், ஏதாவது ஏடுகளிலே அப்படி செய்தி வந்ததா என்பதையும் எழுதியிருந்தால் எது உண்மை என்பது தெரிந்திருக்கும்! ஒரு நகராட்சியில் வெற்றி பெற்ற அத்தனை கவுன்சிலருக்கும் பார்க்கும் திறன் இல்லை என்று ஒரு நகராட்சியின் ஆணையரே சொல்வாரா? பொய் சொன்னாலும் பொருத்தமா சொல்ல வேண்டாமா? எந்த அளவிற்கு இன்றைய தேர்தல் ஆணையர் பாரபட்சமாக நடந்து கொள்கிறார் என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் வேண்டுமா? இப்படியெல்லாம் இந்த அய்யர் சொல்வார் என்பதால்தானே இவரைத் தேடிப் பிடித்து இந்தப் பதவியிலே அ.தி.மு.க. அரசு நியமித்திருக்கிறது!

அய்யர் தனது பேட்டியில், இந்தத் தேர்தலில் ஒரு மோசடி நடந்ததுன்னு யாராவது சொல்லட்டும் பார்க்கலாம் என்று கேட்டிருக்கிறார். அய்யர் ஆணையராக இருந்து செயல்பட்ட தேர்தல் ஆணையத்தின் மோசடிகளுக்கு இதோ ஒருசில உதாரணங்கள் :-

பழனி அருகே அ.தி.மு.க.வினர் வாக்குச் சாவடியை உள்புறமாக பூட்டிக் கொண்டு கள்ள வாக்குகளைப் போட்டார்கள். நெல்லை அருகே சுயேச்சை வேட்பாளர் ஒருவரை தாக்கி விரட்டி விட்டு, அ.தி.மு.க.வினர் கள்ள வாக்குகளை பதிவு செய்தார்கள். சென்னையில் திரு.வி.க. நகர் 76வது வார்டில் அடக்குமுறை அராஜகம் கட்டவிழ்த்து விடப்பட்டது. மேலும் பல இடங்களில் அ.தி.மு.க.வினர் வாக்குச் சாவடிகளை கைப்பற்றி வன்முறையிலே இறங்கினர். எதிர்க்கட்சியினர் பலர் வெட்டி தாக்கப்பட்டனர். மன்னார்குடி அருகே அ.தி.மு.க.

வேட்பாளரின் அட்டூழியத்தால் மக்கள் வாக்களிக்க முடியாமல் ஏமாற்றம் அடைந்தனர். திருப்பூர் மாவட்டத்தில் அரசு அலுவலர்களிடமிருந்து அ.தி.மு.க.வினர் பூத் சிலிப்புகளை பறித்து தங்கள் கட்சிக்காரர்களுக்கு மட்டுமே அவற்றை விநியோகித்தனர். இவ்வளவிற்கும் பிறகு தேர்தல் ஆணையர், தேர்தல் மிக அமைதியாக நடந்தது என்று செய்தியாளர்களுக்கு அறிவித்தார். 239 வாக்குச் சாவடிகளில் மறு வாக்குப் பதிவு நடத்த வேண்டுமென்று வைத்த கோரிக்கைக்கு செவி சாய்க்காமல் ஏதோ ஒப்புக்காக ஏழு வாக்குச் சாவடிகளில் மட்டும் மறு வாக்குப் பதிவு நடை பெற்றது. பழநி நகர் மன்றத் தலைவருக்கான தி.மு.கழக வேட்பாளர் வேலுமணி அ.தி.மு.க. வினரின் தூண்டுதல் பேரில் கைது செய்யப்பட்டார்.

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியக் குழு 6வது வார்டு உறுப்பினர் க. முத்துகுமார் 125 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக மாநிலத் தேர்தல் ஆணையப் பட்டியலிலேயே வெளியிடப்பட்டது. ஆனால், அ.தி.மு.க. தலையீட்டின் காரணமாய், மறுவாக்கு எண்ணிக்கை நடத்திட உத்தரவிட்டு, தி.மு.க. வேட்பாளரையும் முகவர்களை யும் மிரட்டிவிட்டு, அ.தி.மு.க. வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் 8வது வார்டு ஊராட்சிக் குழு - 9வது வார்டு ஊராட்சிக் குழு - காளையார்கோவில் 7வது வார்டு ஊராட்சிக் குழு ஆகிய இடங்களில் நடைபெற்ற தேர்தல் வாக்கு எண்ணிக்கையின் போது, தி.மு.க. வேட்பாளர்களுக்கு கிடைத்த வாக்குகளை, அ.தி.மு.க. வேட்பாளருக்கு கிடைத்த

வாக்குகளுடன் சேர்த்து எண்ணி, அ.தி.மு.க. வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியத் தில், தெசவிளக்கு ஊராட்சித் தலைவராக போட்டியிட்ட எம்.எஸ்.கிருஷ்ணன் 30 வாக்குகளில் வெற்றி பெற்றார். ஆனால் அ.தி.மு.க. வினரின் தலையீட்டின் காரணமாக அ.தி.மு.க. வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் ஒன்றியத்தில் பூந்தோட்டம் ஊராட்சித் தலைவர் பதவிக்கு போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் இரா. செல்வகுமார் 14 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்று, அது மாநிலத் தேர்தல் ஆணைய இணையதளத்திலும் பதிவு செய்யப்பட்ட பிறகு, அ.தி.மு.க. தலையீட்டின் காரணமாக அ.தி.மு.க. வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

வேலூர் மாவட்டம், திமிரி ஒன்றியத்தில் வளையாத்தூர் ஊராட்சித் தலைவர் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிட்ட திருமதி ஆர். சாந்தி, மூன்று வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக முதலில் அறிவித்துவிட்டு, இரவு 11 மணியளவில் அ.தி.மு.க. வேட்பாளர் 9 வாக்குகள் அதிகம் பெற்றதாகக் கூறி, அவர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் ஒன்றியத்தில் 16வது வார்டு ஒன்றியக் குழுவில் தி.மு.க. வேட்பாளர் டி.சி. சக்திவேல் 137 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். ஆனால் அ.தி.மு.க. வைச் சேர்ந்த பொன்னேரி சட்ட மன்ற உறுப்பினர் திரு. பொன். ராஜா வாக்கு எண்ணிக்கை மையத்திற்குள் நுழைந்து, அதிகாரிகளை மிரட்டி, அ.தி.மு.க. வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிக்கச் செய்தார்.

சோழவரம் ஒன்றியக் குழு 8வது வார்டு உறுப்பினருக்கான வாக்கு எண்ணிக்கையின் போது, தி.மு.க. வேட்பாளர் ஜே. கிருபாவதி வெற்றி பெற்றதை மாற்றி, அ.தி.மு.க. வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

ஆர்.கே. பேட்டை ஒன்றியத்தில் மாவட்ட ஊராட்சிக் குழுவின் 2வது வார்டு உறுப்பினர் தேர்தலில், தி.மு.க. வேட்பாளராக போட்டியிட்ட மா. ரகு அவர்களையும் அவரது முகவர்களையும் தேர்தல் அதிகாரிகள், மற்றும் காவல் துறை அதிகாரிகள் மிரட்டி

அப்புறப்படுத்திவிட்டு, அ.தி.மு.க.வினரை மட்டுமே வைத்து வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது.

நீலகிரி மாவட்டம், குன்னூர் ஒன்றியக்குழு 2வது வார்டு உறுப்பினர் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிட்ட திருமதி சரோஜா வாக்கு எண்ணிக்கையின் போது மூன்று வாக்குகள் பெற்று வெற்றி பெற்றதாக அறிவித்தபின், ஆளும் கட்சியான அ.தி.மு.க.வின் தூண்டுதலின்பேரில் மறுவாக்கு எண்ணிக்கை என்று அறிவித்து, அந்த மறு வாக்கு எண்ணிக்கையிலும் தி.மு.க. வேட்பாளர் இரண்டு வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். ஆனாலும் அ.தி.மு.க. வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

குன்னூர் ஒன்றியம் 8வது வார்டில் தி.மு.க. வேட்பாளர் திருமதி லட்சுமி வெற்றி பெறும் சூழ்நிலையில், உதய சூரியன் சின்னத்தில் விழுந்த வாக்குகளை இரட்டை இலை சின்னத்தின் கட்டில் சேர்த்து, அ.தி.மு.க.வினர் மிரட்டலுக்குப் பணிந்து அதிகாரிகள் துணையுடன் இரண்டாவது முத்திரையை குத்தி செல்லாத வாக்குகளாக செய்து, அ.தி.மு.க வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரையில், 17-10-2011 அன்று மதியம் 2.30 மணிக்கு மேல் அமைச்சர்கள் செந்தமிழன், கோகுல இந்திரா மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.பி. கலை ராஜன், வெற்றிவேல், பா. வளர்மதி ஆகியோர் தலைமையில் பல வாக்குச்சாவடிகளைக் கைப்பற்றி கள்ளவாக்குகளைப் போட்டிருக்கிறார்கள். அவ்வாறு தவறுகள் நடைபெற்ற வாக்குச்சாவடிகளில் மறு வாக்குப் பதிவு நடத்த வேண்டுமென்று தேர்தல் ஆணையரிடம் கழகத்தின் சார்பில் கழக வழக்கறிஞர்கள் முறையீடு செய்தும் தேர்தல் ஆணையம் அதைக் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை.

தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்த போது - சென்னை மாநகராட்சியில் "மஸ்டல் ரோல்" ஊழல் நடைபெற்றதாக பேரவையில் எதிர்க்கட்சியிலே இருந்த டாக்டர் ஹண்டே அவர்கள் குற்றஞ்சாட்டிய போது, "அதுபற்றி விசாரித்து உண்மையாக இருந்தால், மாநகராட்சியிலே ஆண்டு கொண்டிருப்பது தி.மு. கழகம் என்றாலும், மாநகராட்சியைக் கலைத்து விட உத்தரவு

பிறப்பிக்கப்படும்" என்று நான் கூறியதோடு, அவ்வாறே பிறகு சென்னை மாநகராட்சியைக் கலைத்து, தி.மு. கழகத்தைச் சேர்ந்த மாநகராட்சி மன்ற உறுப்பினர்களை கைது செய்தும் நடவடிக்கை எடுத்தேன் என்பது வரலாறு.

"ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பதைப் போல, தேர்தல் ஆணையர் அய்யர் உள்ளாட்சி மன்றத் தேர்தலில் எப்படி நடந்து கொண்டார் என்பதற்கு ஒரேயொரு உதாரணம் கூற வேண்டுமேயானால் இதுவரை இல்லாத அளவிற்கு - 1-11-2011 அன்று நடைபெற்ற 11வது அமைச்சரவைக் கூட்டத்தில் மாநிலத் தேர்தல் ஆணையர் அய்யருக்குப் பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்து தீர்மானமே நிறைவேற்றியிருக்கிறார்கள் என்றால் -- "அம்மாவை குளக்கரையிலே பார்த்தால், மகளை வீட்டிலே போய்ப் பார்க்க வேண்டுமா" என்ற பழமொழிதானே ஞாபகத்திற்கு வருகிறது!

தந்துள்ள இந்தப் பட்டியலில்; எது தவறு என்பதை "ஆண்டவன் அறிய" அய்யரே சொல்லட்டும். அதன் பிறகு அவரது நேர்மை - நடுநிலை பற்றி அவரது மனச்சாட்சியே அவருக்குச் சொல்லும்!

அன்புள்ள,

மு.க.

8-11-2011

3600. யாருமே அங்கே இல்லையா?

உடன்பிறப்பே,

"இரும்பு பிடித்தவன் கையும், சிரங்கு பிடித்தவன் கையும் சும்மா இருக்காது" என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அதைப் போல நம்முடைய முதலமைச்சர் ஜெயலலிதா எப்போது பதவிப் பொறுப்புக்கு வந்தாலும், அவருக்கு முந்தைய ஆட்சியில் மக்களுக்குப் பயன்படும் என்னென்ன நல்ல காரியங்கள் செய்யப்பட்டன என்று கண்டறிந்து, அவைகளுக்கெல்லாம் மூடு விழா நடத்துவதிலேயே மகிழ்ச்சி அடைபவர். மற்றவர்களின் துன்பத்தைக் கண்டு ரசிப்பதிலே சிலருக்கு ஒரு திருப்தி ஏற்படும் என்பார்கள். ஆங்கிலத்தில் அதற்கு "சாடிஸ்ட்" என்பார்கள். அந்த வகையில்தான் பல்லாண்டு காலமாக உழைத்து ஊதியம் பெற்று தங்கள் எளிய குடும்பங்களைக் காப்பாற்றி வந்தவர்களை வீட்டிற்கு அனுப்பி விட்டு அதிலே ஒரு தனி சுகம் காண முயலுகிறார். பண்பாட்டுச் சின்னங்களை அகற்றுவது - நினைவில் நிலைத்து நிற்பவைகளை இடிப்பது - தனக்குப் பிடிக்காதவர்களை சிறையிலே அடைப்பது - மாற்றுக் கருத்து தெரிவிப்போர் மீது பொய் வழக்கு தொடுப்பது - அரசு அலுவலர்களையெல்லாம் அடிமைகளாக நடத்துவது - அரசு அதிகாரிகளையெல்லாம் சவுக்காலடித்து வேலை வாங்குவேன் என்பது - ஆறு மாதங்களுக்கொருமுறை அமைச்சர்களை வீட்டிற்கு அனுப்புவது - ஆறு வாரங்களுக்கு ஒரு முறை அதிகாரிகளையெல்லாம் பந்தாடுவது - அரசின் வருவாயையெல்லாம் அரசு அலுவலர்களுக்கே செலவழிக்கிறேன் என்றுரைப்பது - பேச்சுரிமை, எழுத்துரிமையைப் பறிப்பது - என்று இவைகளையே தனது சாதனைகளாக நடத்திக் கொண்டிருக்கின்ற ஜெயலலிதா அரசு, அந்த வரிசையில் நேற்றையதினம் அறிவித்திருக்கின்ற மற்றொரு மூடுவிழா - 13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்களை கொஞ்சமும் இரக்கமின்றி வீட்டிற்கு அனுப்புகின்ற சாதனையாகும். தி.மு. கழக ஆட்சி

1989ஆம் ஆண்டு மீண்டும் அமைந்த போது, தமிழகத்திலே வேலை இல்லாத படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதற்காகத் தொடங்கிய ஒரு திட்டம்தான் மக்கள் நலப் பணியாளர்களை நியமித்த திட்டமாகும். இந்தத் திட்டத்தைத் தொடங்கிய போது மக்கள் நலப் பணியாளர்களுக்கு மாத ஊதியமாக 750 ரூபாய் மதிப்பூதியம் என்ற அளவிலே நியமனம் செய்யப்பட்டார்கள். ஆனால் இரண்டாண்டுகளில் 1991ஆம் ஆண்டு ஜெயலலிதா முதலமைச்சர் ஆனதும், அவருடைய பரந்த உள்ளம் காரணமாக 13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்களையும் டிஸ்மிஸ் செய்து 13-7-1991 அன்று முதல் வீட்டிற்கு அனுப்பிவிட்டார்.

1996ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்ததும், பதவியிழந்த 13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்களுக்கும் மீண்டும் வேலை வாய்ப்பளித்தோம். அதைப் போலவே பத்தாயிரம் சாலைப் பணியாளர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது. 2001ஆம் ஆண்டு ஜெயலலிதா மீண்டும் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்றதும், காழ்ப்புணர்ச்சி எதுவுமே இல்லாத அவர், கருணை உள்ளத்தோடு கழக ஆட்சியிலே நியமிக்கப்பட்ட 13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்களை வீட்டுக்கு அனுப்பி அவர்களின் வயிற்றெரிச்சலையும் சம்பாதித்துக் கொண்டார். 1-6-2001 முதல் மக்கள் நலப் பணியாளர்களையெல்லாம் பணி நீக்கம் செய்து ஜெயலலிதா ஆட்சியின் ஊரக வளர்ச்சித் துறை ஆணை எண். 149 அறிவித்தது. பணியிழந்த 13 ஆயிரத்து 247 பேரில் சுமார் பாதி பேர் பெண்களாகும்.

ஐந்தாண்டு காலம் பணியாற்றி மாதந்தோறும் ஊதியம் பெற்று வந்த அந்தக் குடும்பத்தினர் எல்லாம் திடீரென்று வேலையில்லை என்றால் வாழ்வாதாரத்திற்கு என்ன செய்வார்கள்? அந்த ஊதியத்தை நம்பி பல பேர் திருமணம் செய்து கொண்டிருப்பார்கள். பலர் தங்கள் பெண்களை திருமணம் செய்து கொடுத்திருப்பார்கள். அவர்களின் கதி எல்லாம் என்னவாகியிருக்கும்? அதைப் பற்றி ஜெயலலிதாவிற்கு என்ன கவலை? பல பேர் தற்கொலையே செய்து கொண்டு மாண்டார்கள். இந்த வேலையை நம்பி பலருக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்ட நிலையில் வேலை போனதால் திருமணங்கள் நிறுத்தப்பட்டு, அதை நம்பியிருந்த பல பெண்கள் நிர்க்கதிக்கு ஆளானார்கள்.

உதாரணமாக ஒருசிலவற்றைக் கூற வேண்டுமேயானால், நாகை மாவட்டம், கீழையூர் அருகேயுள்ள வைரவன்கட்டளை என்ற கிராமத்தைச் சேர்ந்த வீரப்பன் என்ற மக்கள் நலப் பணியாளர் வேலை போனதின் காரணமாக 11-6-2001 அன்று விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஒன்றிய மக்கள் நலப் பணியாளர் சி. கந்தசாமியின் வேலை பறி போன காரணத்தால், அவருடைய மனைவி பிரபா என்பவர் 11-6-2001 அன்று விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். 12-6-2001 அன்று நத்தம் ஒன்றிய மக்கள் நலப் பணியாளராகப் பணியாற்றி வந்த திலகர் என்பவரும் வேதனை தாங்காது தன் உயிரை மாய்த்துக் கொண்டார். இவர்களின் குடும்பத்திற்கு அப்போதே தி.மு. கழகத்தின் சார்பில் தலா 25 ஆயிரம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்பட்டது. அருப்புக் கோட்டையைச் சேர்ந்த ராமமூர்த்தி பணி பறி போனதும் சோகத்தில் பட்டினி கிடந்தே மாய்ந்து போனார். நாகை மாவட்டத்தில் தரங்கம்பாடியைச் சேர்ந்த இளங்கோவன் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். ராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டபம் கபிலன் வேலை போன காரணத்தால் பட்டினி கிடந்து உயிர் துறந்தார் என்று பட்டியல் நீளுகிறது. பணி நீக்கம் செய்யப்பட்ட மக்கள் நலப் பணியாளர்கள் நடத்திய எந்தப் போராட்டத்திற்கும் ஆட்சியாளர்கள் செவி சாய்க்கவில்லை.

2006ஆம் ஆண்டு தி.மு. கழகம் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றதும் - பணி நீக்கம் செய்யப்பட்ட அந்த மக்கள் நலப் பணியாளர்கள் என்னைச் சந்தித்து தங்கள் வேதனையை வெளிப்படுத்தினார்கள்.

1-6-2006 முதல் மீண்டும் அவர்கள் எல்லாம் தி.மு. கழக அரசினால் பணி நியமனம் பெற்றார்கள். பணி அளித்தது மாத்திரமல்லாமல், கால முறை ஊதியத்தின் கீழ் மக்கள் நலப் பணியாளர்களை கொண்டு வர வேண்டுமென்ற எண்ணத்தோடு தி.மு. கழக ஆட்சியில் 1-6-2009 முதல் ரூ. 2500 - 5000 மற்றும் ரூ. 500 தர ஊதியம் என்ற அளவில் அரசாணையும் பிறப்பிக்கப்பட்டது. இந்த ஆணை காரணமாக 12,653 மக்கள் நலப் பணியாளர்கள் பயன் பெற்றனர்.

மக்கள் நலப் பணியாளர்கள் முதியோர் கல்வியைப் பரப்புவதிலும் - குடிப் பழக்கத்தின் தீமைகளை மக்களுக்கு

உணர்த்துவதிலும் - தெரு விளக்குகளைப் பராமரிப்பதிலும் - மற்றும் சத்துணவு மையங்களைக் கவனிப்பதிலும் தங்களது பணிகளைச் செலுத்தி வந்தார்கள். அ.தி.மு.க. அரசு எப்போது பதவிப் பொறுப்புக்கு வந்தாலும், அரசு அலுவலர்களையெல்லாம் ஏதோ எதிரிகள் என்பதைப் போல நினைத்துச் செயல்பட்டு வருகிறது. அவர்களும் அரசின் ஓர் அங்கம் என்பதை ஏனோ மறந்து விடுகிறார்கள். 2002ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்ற போது அரசு அலுவலர்களை அடக்குவதற்காகவே எஸ்மா, டெஸ்மா என்ற பெயரில் அவசரச் சட்டங்களை யெல்லாம் இயற்றியதும், அதன் பிறகு கழக ஆட்சியிலே அந்தச் சட்டங்கள் எல்லாம் ரத்து செய்யப்பட்டதும் அரசு அலுவலர்களே நன்கறி வார்கள். மக்கள் நலப் பணியாளர்களைப் பொறுத்த வரை தற்போது அவர்கள் அரசுக்கு எதிராக எந்தப் போராட்டத்திலும் ஈடுபடவில்லை. ஏன் எந்தக் கோரிக்கையையும் கூட முன் வைக்கவில்லை. இந்த நிலையில் அவர்களை பணி நீக்கம் செய்வது அவசியம்தானா? 1989ஆம் ஆண்டு முதல் அவர்களை நாடாறு மாதம், காடாறு மாதம் என்பதைப் போல ஐந்தாண்டு கால தி.மு. கழக ஆட்சியில் பணியிலே நீடிப்பதும், அ.தி.மு.க. ஆட்சி அமைந்தால் அவர்களையெல்லாம் வீட்டிற்கு அனுப்புவதுமான கொடுமை நீடித்தால் அவர்களின் வாழ்க்கை என்னவாகும்? இந்த வயதுக்கு மேல் அவர்கள் வேறு வேலை தேடிக் கொள்ள முடியுமா? அவர்களின் குடும்பங்கள் என்ன நிலைக்கு ஆளாகும்? அரசாங்கம் என்றால் அதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டாமா? கருணை என்றால் என்ன விலை என்று கேட்பதா? புதிதாக பணி வாய்ப்பு தராவிட்டாலும், பணியாற்றியவர்களையெல்லாம் வீட்டிற்கு அனுப்பினால் அவர்கள் எங்கே போவார்கள்? அவர்களும் தமிழ்நாட்டுக் குடிமக்கள்தானே? இன்னும் சொல்லப்போனால் அவர்களும் வாக்களித்துத் தானே ஜெயலலிதா இன்று முதலமைச்சராகியிருப்பார். அவர்களின் பணி நீக்க ஆணையிலே கையெழுத்து போடுவதற்கு முன்பு ஒரு நிமிடம் முதலமைச்சர் அவர்களின் பிற்கால வாழ்க்கையைப் பற்றி நினைத்துப் பார்த்திருக்க வேண்டாமா? அவர்கள் எல்லாம் மிட்டா மிராசுகளா? முதலாளிகளா? ஒவ்வொரு மாதமும் முதல் தேதியன்று கிடைக்கும் ஊதியத்தைப் பெற்று, அதை வைத்து தங்கள் வாழ்க்கையை நடத்த வேண்டிய நிலையிலே இருந்தவர்கள் அல்லவா? திடீரென்று அவர்கள் எல்லாம் வேறெங்கே செல்வார்கள்? கடந்த முறை

ஜெயலலிதா ஆட்சியிலே அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்ட போது, பட்டினி கிடந்தும் தற்கொலை செய்து கொண்டும் பலர் மாண்டிட நேரிட்டதே, அந்த நிலையை மீண்டும் உருவாக்கலாமா? அரசுப் பொறுப்பிலே இருப்போர் அதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டாமா? ஏழை அழுத கண்ணீர் வீண் போகாது என்பார்களே? அந்தக் கண்ணீர் பெரும் படைக்கு ஈடானது என்பார்களே? அந்த ஏழைகளின் வயிற்றிலே ஒரு அரசு இப்படியெல்லாம் அடிக்கலாமா? கோடிக் கணக்கிலே அரசின் நிதியைச் செலவழித்துக் கட்டப்பட்ட தலைமைச் செயலகத்தை வீணாகப் போட்டு வைத்திருப்பதும் - அண்ணாவின் பெயரிலே உள்ள நூலகக் கட்டிடத்திலே குழந்தை களுக்கான மருத்துவமனையைத் தொடங்கப் போகிறேன் என்பதும் - அமைச்சர்களாக இருந்தவர்கள் மீதெல்லாம் பொய் வழக்குகளைச் சுமத்தி, அவர்களை சிறையிலே அடைத்து வைத்து இன்பம் காண்பதும் - ஒரு அரசுக்குரிய இலக்கணங்கள்தானா? இதற்கான ஆலோசனைகளை வழங்கக் கூடியவர்கள் யாருமே அங்கே இல்லையா?

அன்புள்ள,

மு.க.

10-11-2011

3601. இந்தப் புவியே அவர் புகழ் பாடட்டும்!

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டு மக்களின் ஏமாளித்தனத்தின் காரணமாக எப்படியோ ஆட்சிக்கு வந்துவிட்ட ஜெயலலிதா, வந்ததும் வராததுமாக வரவு செலவு திட்டத்தை அவையிலே வைப்பதற்கு முன்பாகவே தமிழக மக்கள் தலையில் சுமார் 4000 கோடி ரூபாய் அளவிற்கு வரியை சுமத்திவிட்டு; அத்துடன் இல்லாமல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் செய்யப்பட்ட நல்ல காரியங்களையெல்லாம் தொடர்ந்து கெடுத்து வரும் முயற்சியை மேலும் தொடர்ந்து; "ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனைக் கடிக்கின்ற" செயலாக இப்போது எல்லா மட்டத்திலும் வரி உயர்வு - கட்டண உயர்வு - பால் விலை உயர்வு - என்று பல உயர்வுகளை அறிவித்திருக்கிறார். "உயரப் போகிறோம்" என்றுதானே அவருக்கும், அவர் அணியின் வேட்பாளர்களுக்கும் அபரிமிதமான வாக்குகளை அளித்து அரியாசனத்தில் அமர்த்தியிருக்கிறார்கள். அய்யோ பாவம்! நிர்வாகத்தைச் சிறப்பாக நடத்தத் தெரியாமல், ஜெயலலிதா படும் பாட்டையும் - அவர் மக்களைப் படுத்தி வைக்கும் பாட்டையும் ஏழை, நடுத்தர மக்கள் இதயம் வெடித்து சாகிற அளவுக்கு வரி உயர்வு, கட்டண உயர்வு, விலை உயர்வு என்று இப்படி உயர்வு, உயர்வு எனக்கூறி தமிழக ஏழைபாழைகளை குழியில் தள்ளி வேடிக்கை பார்க்கும் விளையாட்டை அல்லவா இப்போது அவர் நடத்தி வருகிறார்! மக்களை பழி வாங்கும் காரியத்தை நடத்திக் கொண்டே, அந்தப் பழியைக் கடந்த கால அரசின் மீதும், மத்திய ஆட்சியின் மீதும் போடுவதற்கு அவர் பகீரதப் பிரயத்தனம் செய்திருக்கிறார். தி.மு. கழகம் ஆட்சியில் இருந்தபோது பெட்ரோல் விலையை, டீசல் விலையை மத்திய அரசு உயர்த்தவில்லையா? உயர்த்திக் கொண்டு தான் இருந்தார்கள். இருந்தாலும் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டுவிடக்

கூடாது என்பதற்காக அந்தச் சுமையையெல்லாம் தமிழக அரசு தாங்கிக் கொண்டு பொதுமக்கள் பாதித்து விடக் கூடாது என்பதற்காக பேருந்து கட்டணத்தை உயர்த்தாமல் பார்த்துக் கொள்ள வில்லையா? ஆவின் கட்டணத்தை அதிகமாக உயராமல் பார்த்துக் கொள்ளவில்லையா? மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. அதைவிடுத்து, நமக்கென்ன, சிரமப்படப்போவது மக்கள்தானே என்ற பாணியில் கண்ணை மூடிக்கொண்டு கட்டணங்களை ஜெயலலிதா உயர்த்தி அறிவித்திருக்கிறார்.

பேருந்து கட்டணங்களைப் பொறுத்தவரையில், சாதாரண புறநகர் பேருந்துகளுக்கு கிலோ மீட்டர் ஒன்றுக்கு 28 பைசா வீதம் தற்போது வசூலிக்கப்பட்டு வரும் கட்டணத்தை, 50 சதவிகித அளவிற்கு அதாவது மேலும் 14 பைசா என்ற அளவிற்கு உயர்த்தி, இனி கிலோ மீட்டர் ஒன்றுக்கு 42 பைசா என்று நிர்ணயித்திருக்கிறார்கள். 2006ஆம் ஆண்டு தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்பையேற்றபோது சாதாரண புறநகர் பேருந்துகளுக்கு கிலோ மீட்டர் ஒன்றுக்கு 28 பைசா என்றிருந்த கட்டணத்தை ஐந்தாண்டுகால ஆட்சியில் ஒரு பைசாகூட உயர்த்தவில்லை என்பதையும், ஆனால் ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்புக்கு வந்த ஆறு மாத காலத்திலேயே 42 பைசா அளவிற்கு பேருந்து கட்டணத்தை கிலோ மீட்டர் ஒன்றுக்கு என்று உயர்த்தியிருக்கிறார் என்பதையும் நினைவூட்ட விரும்புகிறேன்.

விரைவு மற்றும் செமி-டீலக்ஸ் புறநகர் பேருந்துகளுக்கு கிலோ மீட்டர் ஒன்றுக்கு தற்போது 32 பைசா வீதம் வசூலிக்கப்பட்டு வரும் கட்டணத்தை ஜெயலலிதா 75 சதவிகிதம் உயர்த்தி, அதாவது 24 பைசா வீதம் உயர்த்தி, இனி கிலோ மீட்டர் ஒன்றுக்கு 56 பைசா வீதம் வசூலிக்க ஆணையிட்டிருக்கிறார்.

சூப்பர் டீலக்ஸ் மற்றும் சொகுசு புறநகர் பேருந்துகளுக்கு தற்போது 38 பைசா வீதம் வசூலிக்கப்பட்டு வரும் கட்டணத்தை, இனி 60 பைசா என்று உயர்த்தியிருக்கிறார்.

புறநகர் பேருந்துகளைப் பொறுத்து இது நிலைமை என்றால், நகரப் பேருந்துகளைப் பொறுத்தவரையில், சென்னை நீங்கலாக இதரப் பகுதிகளில் தற்போதுள்ள குறைந்தபட்சக் கட்டணம் இரண்டு ரூபாய் என்பதை, மேலும் 50 சதவிகித அளவிற்கு, அதாவது ஒரு ரூபாய் அளவிற்கு உயர்த்தி, இனி மூன்று ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்.

நகரப் பேருந்துகளில் அதிகப்பட்சக் கட்டணமாக தற்போது 7 ரூபாய் வசூலிக்கப்பட்டு வருகிறது. அதை 70 சதவிகித அளவிற்கு உயர்த்தி, இனி 12 ரூபாய் கட்டணம் என்று நிர்ணயித்திருக்கிறார்.

சென்னை நகரப்பேருந்துகளைப் பொறுத்த வரையில், தற்போதுள்ள குறைந்தபட்சக் கட்டணம் 2 ரூபாய் என்பதை 3 ரூபாயாகவும், அதிகப்பட்சக் கட்டணம் 12 ரூபாய் என்பதை 14 ரூபாயாகவும் உயர்த்த முடிவு செய்திருக்கிறார்.

பேருந்துகட்டணங்கள் எந்த அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது என்பதற்கு உதாரணம் கூற வேண்டுமேயானால், திருச்சிக்கு இதுவரை டீலக்ஸ் பேருந்தில் பயணம் செய்ய 105 ரூபாய் கட்டணம் என்பது, இனி 180 ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. மதுரைக்கு இதுவரை 145 ரூபாய் என்பது 255 ரூபாயாகவும், நெல்லைக்கு இதுவரை 200 ரூபாய் என்றிருந்த கட்டணம் 350 ரூபாயாகவும், கோவைக்கு இதுவரை 165 ரூபாய் என்றிருந்த கட்டணம் இனி 290 ரூபாயாகவும் ஜெயலலிதாவின் கருணைப் பார்வையினால் மக்கள் அ.தி.மு.க.விற்கு பெருமனது வைத்து வாக்களித்த காரணத்தால், ஆட்சிக்கு வந்த ஆறே மாதங்களில் உயர்த்தப்பட்டுள்ளது.

முன்பெல்லாம் ரெயில் கட்டணம் அதிகம்மாகவும், பேருந்து கட்டணம் குறைவாகவும் இருக்கும். அதற்காகவே வசதி மிக்கவர்கள் ரெயிலிலும், வசதிக் குறைவானவர்கள் பேருந்துகளிலும் பயணம் செய்வார்கள். ஆனால் தற்போது பேருந்து கட்டணங்கள், ரெயில் கட்டணத்தைவிட எந்த அளவிற்கு கூடுதலாக்கப்பட்டுள்ளன என்றால் - திருச்சிக்கு ரயிலில் இரண்டாம் வகுப்பில் பயணம் செய்ய கட்டணம் 80 ரூபாய்தான். ஆனால் தற்போது ஜெயலலிதாவின் பேருந்தில் பயணம் செய்ய வேண்டுமென்றால் 180 ரூபாய் கட்டணமாகச் செலுத்த வேண்டும். மதுரைக்கு ரெயில் கட்டணம் 108 ரூபாய். ஜெயலலிதாவின் பேருந்து கட்டணம் 255 ரூபாய். தஞ்சைக்கு ரெயில் கட்டணம் 84 ரூபாய். ஜெயலலிதாவின் பேருந்து கட்டணம் 210 ரூபாய். நெல்லைக்கு ரெயில் கட்டணம் 132 ரூபாய். ஜெயலலிதாவின் நிர்வாகத் திறமை காரணமாக நடைபெறும் பேருந்தில் பயணம் செய்ய வேண்டுமென்றால், அதே நெல்லைக்கு 350 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும்.

2006ஆம் ஆண்டு முதல் 2011 மே திங்கள் வரை நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பேருந்து கட்டணம் ஒரு

பைசா கூட உயர்த்தப்படவில்லை என்பதையும், ஜெயலலிதா பதவியிலே இருந்தபோது பேருந்து கட்டணத்தை உயர்த்திய பிறகு தற்போது மீண்டும் அவர் பொறுப்புக்குவந்த ஒருசில மாதங்களிலேயே பேருந்துகட்டணத்தை உயர்த்தி பொதுமக்களை வாடச் செய்திருக்கிறார் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

பால் விலையையும் ஜெயலலிதா உயர்த்தியிருக்கிறார். அரசு என்பதையே மறந்துவிட்டு, தனியார் வியாபாரிபோல தனியார் நிறுவனங்களைவிட, ஆவின் பால் மிகவும் குறைவான விலைக்கு விற்கப்படுகிறது என்று ஜெயலலிதா அறிக்கை விடுத்துள்ளார். 14-2-2011 அன்று ஜெயலலிதா விடுத்த அறிக்கையில் "பால் தட்டுப்பாட்டினை உருவாக்கி, தட்டுப்பாடுகளை உருவாக்கும் தறிகெட்ட அரசாக மைனாரிட்டி தி.மு.க. அரசு விளங்குகிறது. பால் உற்பத்தியாளர்களை அழைத்து, பேச்சு வார்த்தை நடத்தி பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர வேண்டிய தி.மு.க. அரசு வழிப்பறி கொள்ளையர்களைப் போல நடந்து கொள்கிறது" என்றெல்லாம் கூறியதற்கு மாறாக, தற்போது பால் உற்பத்தியாளர்களை அழைத்துப் பேசாமல் தன்னிச்சையாகவே கொள்முதல் விலையையும், விற்பனை விலையையும் உயர்த்தியிருக்கிறார்.

பால் உற்பத்தியாளர்கள் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க கொடுத்துள்ள கோரிக்கை மிகவும் நியாயமானது என்று அறிக்கையிலே ஒப்புக் கொண்டுள்ள ஜெயலலிதா, பசும் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் கொள்முதல் விலையை 18 ரூபாயிலிருந்து 20 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார். எருமைப் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் கொள்முதல் விலையை 26 ரூபாயிலிருந்து 28 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார். அதாவது கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் மட்டுமே உயர்த்தியிருக்கிறார். அதே நேரத்தில் அந்தப் பாலை பொதுமக்களுக்கு விற்கும்போது எந்த அளவிற்கு விற்பனை விலையை உயர்த்தியிருக்கிறார் என்பதையும் மனதிலே கொள்ள வேண்டும்.

அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் சமன் படுத்திய பாலின் விலையை லிட்டர் ஒன்றுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 17 ரூபாய் 75 பைசாவிலிருந்து - 24 ரூபாயாக உயர்த்த முடிவெடுத்திருக்கிறார்கள். அதாவது லிட்டர் ஒன்றுக்கு 6

ரூபாய் 25 பைசா அளவிற்கு ஜெயலலிதா உயர்த்தியிருக்கிறார். மிகவும் அடித்தட்டிலே உள்ள ஏழையெளிய மக்கள் நாள் ஒன்றுக்கு காலையில் ஒரு லிட்டர், மாலையில் ஒரு லிட்டர் பால் வாங்கிக் கொண்டிருப்பார்களானால், இனி அவர்கள் மாதம் ஒன்றுக்கு தங்கள் குடும்ப செலவில் 375 ரூபாய் பால் ஒன்றுக்காக மட்டுமே அதிகமாக செலவிட வேண்டிய நிலைக்கு - பாவம், அ.தி.மு.க. விற்கு வாக்களித்த ஒரே குற்றத்தின் காரணமாக தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் 1-9-2009 அன்று பசும்பாலின் கொள்முதல் விலையை ரூ. 13.45லிருந்து ரூ. 15.64 ஆகவும், எருமைப் பால் விலையை 18 ரூபாயிலிருந்து 23 ரூபாயாகவும் - அதன் பின் 5-1-2011இல் பசும்பாலின் கொள்முதல் விலையை ரூ. 15.64 லிருந்து ரூ. 16.64 ஆகவும், எருமைப் பால் விலையை 23 ரூபாயிலிருந்து ரூ. 25.20 ஆகவும் - 16-2-2011 அன்று பசும்பாலின் கொள்முதல் விலையை ரூ. 16.64லிருந்து 18 ரூபாயாகவும், எருமைப்பால் விலையை ரூ. 25.20லிருந்து 26 ரூபாயாகவும் அதிகப்படுத்திக் கொடுத்தபோதிலும், அதனால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக பாலின் விற்பனை விலை லிட்டர் ரூ. 17.75 என்பதிலிருந்து ஒரு பைசாகூட உயர்த்தவில்லை என்பதும், விலைவாசியை நான் ஆட்சிக்கு வந்தால் குறைப்பேன் என்றும் வானத்தை வில்லாக வளைப்பேன் என்றும் கூறி ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா தற்போது ஒரே நேரத்தில் லிட்டர் ஒன்றுக்கு பாலின் விற்பனை விலையை ரூ. 6.25 உயர்த்தியிருக்கிறார் என்பதையும் நினைவிலே கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக மின் கட்டணத்தையும் உயர்த்தக்கோரி தமிழக மின்சார ஒழுங்கு முறை ஆணையத்தில் கோரிக்கை வைத்திருக் கிறார்கள். அதையேற்று மின் கட்டணங்களை உயர்த்தும்போது 11,700 கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் வரக்கூடுமென்று எதிர்பார்க்கிறார்கள். மின் கட்டணத்தை எந்த அளவிற்கு உயர்த்தப் போகிறார்கள் என்றால், யூனிட் ஒன்றுக்கு 25 பைசாவோ, 30 பைசாவோ அல்ல; யூனிட் ஒன்றுக்கு ஒன்றரை ரூபாய் கட்டணம் உயர்த்த திட்டமிட்டிருப்பதாக ஏடுகளில் செய்தி வந்துள்ளது.

ஜெயலலிதா கடந்த மே திங்களில் ஆட்சிப் பொறுப்பேற்றதும் சுமார் 4,000 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் வரத்தக்க அளவிற்கு

வரிகளை உயர்த்தினார். தற்போது மேலும் சுமார் 11 ஆயிரம் கோடி ரூபாய் கூடுதலாகக் கிடைக்கத்தக்க வகையில் உயர்த்த திட்ட மிட்டுள்ளார். அதையும் தவிர பேருந்து கட்டணங்களையும், பால் கட்டணங்களையும் உயர்த்தி அதன் மூலமாகவும் பொது மக்களை வறுத்தெடுக்க இருக்கிறார். மின் கட்டணத்தை உயர்த்தினால் - பேருந்து கட்டணங்களை ஏற்றினால் - பால் விலையை உயர்த்தினால் நம்முடைய மக்கள்தானே சிரமப்படுவார்கள் என்றெண்ணி, இவைகளை உயர்த்தாமல் ஐந்தாண்டுகள் ஆட்சி நடத்திய தி.மு.க. ஆட்சி எங்கே? தற்போது இந்தக் கட்டணங்களை யெல்லாம் உயர்த்திவிட்டு, அதற்கெல்லாம் காரணம் கருணாநிதிதான் என்றும், மத்திய அரசுதான் என்றும் பழியைத் தூக்கி மற்றவர்கள் மேல் போடும் ஜெயலலிதா ஆட்சி எங்கே?

பேருந்து கட்டண உயர்வு, பால் விலை உயர்வு, மின் கட்டண உயர்வு என்ற இந்த மூன்று பளுக்களையும் பொதுமக்கள் தலையிலே ஒரே நேரத்தில் சுமத்திய ஜெயலலிதாவை "தினமலர்" இதழினால் இப்போதுகூட கைவிட முடிய வில்லை. "மலைபோல் கடன்தொகை அதிகரித்து திவாலாகும் நிலையில் தத்தளித்துக் கொண் டிருக்கும் மின்சார வாரியம், போக்குவரத்துத் துறை மற்றும் ஆவின் ஆகிய மூன்று துறைகளையும் காப்பாற்றும் வகையில் ஜெயலலிதா இந்த முடிவினை எடுத்தார்" என்றும் - "ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த ஆறு மாதங்களாக, மக்கள் கசப்புறும் வகையில் எவ்வித முடிவுகளையும் எடுக்காமல், பல்வேறு நலத் திட்டங்களை ஜெயலலிதா செயல்படுத்தி வந்தார்" என்றும் - இந்த மூன்று உயர்வுகளையும் "கசப்பு மருந்து" என்றும் புகழ்ந்திருக்கிறது.

மக்கள் தலையில் இந்தச் சுமைகளை யெல்லாம் ஏற்றி வைத்துள்ள ஜெயலலிதா, தன்னைக் காப்பாற்றிக் கொள்கின்ற வரையில் இதற்கெல்லாம் காரணம் கடந்த கால தி.மு. கழக ஆட்சிதான், அந்த ஆட்சியில் கடன் பளு அதிகமாகிவிட்டது, அவற்றைக் குறைக்கத்தான் என்று பழியை நம்மீது போட்டிருக்கிறார். பொதுத் துறை நிறுவனங்களுக்கு கடன் சுமை இருப்பது உண்மைதான் என்ற போதிலும், அந்தச் சுமையை ஏழையெளிய பொதுமக்கள் தலையிலே சுமத்தக் கூடாது என்பதற்காகத்தான் இந்தக் கட்டணங்களையெல்லாம் கழக

ஆட்சியிலே அதிகப்படுத்தவில்லை. ஆட்சி என்பது மக்களுக்கு நன்மை செய்வதற்காக இருப்பதே தவிர, அவர்களைக் கொடுமைப் படுத்தி, கட்டணங்களை உயர்த்தி அதிலே இன்பம் காண்பதற்காக அல்ல. கழக ஆட்சிக் காலத்தில் அதிகாரிகள் நிறுவனங்களுக்குள்ள கடன் சுமைகளைக் குறைக்க இந்தக் கட்டணங்களையெல்லாம் அதிகப்படுத்த வேண்டுமென்று என்னிடமும் கூறுவார்கள். ஆனால் பொதுமக்கள்தானே, அதை ஏற்க வேண்டும்? அவர்கள் எங்கே போவார்கள்? அரசு கடன் பெற்றாவது மக்களுக்கு கெடுதல் வராமல் பாதுகாப்போம் என்றுதான் கூறியிருக்கிறேன். யார் பாதிக்கப்பட்டால் எனக்கென்ன, மக்கள்தானே இந்த உயர்வுகளை யெல்லாம் சந்திக்கப் போகிறார்கள், ஏற்றுங்கள் கட்டணங்களை, அதிலும் ஒரே நேரத்தில் மின் கட்டணம், பேருந்து கட்டணம், பால் கட்டணம் என்று அறிவிக்கலாம் என்று சொல்கின்ற மனப்பான்மை எனக்கில்லை. ஏனென்றால் என் இதயத்தில் இரக்கம் இருக்கிறது. ஒரு அரசு சிந்திக்க வேண்டாமா? ஒரே நேரத்தில் இந்த மூன்று கட்டணங்களையும் உயர்த்தினால் சாதாரண ஏழை, நடுத்தர மக்கள், மாதச்சம்பளத்தில் திட்டமிட்டு குடும்பம் நடத்துவோர் ஒவ்வொரு மாதமும் தங்கள் செலவு 500 ரூபாய் அதிகமானால் எப்படி அவர்களால் சமாளிக்க முடியும் என்றெல்லாம் நினைத்துப் பார்க்க வேண்டாமா? மற்ற மூத்த அமைச்சர்களாவது இதுபற்றி முதல்வருக்கு யோசனை கூற வேண்டாமா? அமைச்சரவைக் கூட்டம் அதற்காகத்தானே நடக்கிறது! கொலு பொம்மை களைப் போல வீற்றிருந்து, பாராட்டுரைகளை, புகழுரைகளை வழங்குவதிலேயே கவனத்தைச் செலுத்துவது மட்டும் நல்லதா? இந்த உயர்வுகள் குறித்து கருத்து தெரிவித்துள்ள பொதுமக்களில் திருவள்ளூரைச் சேர்ந்த குடும்பத் தலைவி ஒருவர், விலை உயர்வு காரணமாக, இனி குழந்தைகளுக்கு பால் கொடுப்பதற்குப் பதில், பாலில்லாத கறுப்பு டீ கொடுக்க வேண்டிய நிலை, மீண்டும் கற்காலத்துக்குத் திரும்பும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்று கூறியிருக்கிறார். ரங்கநாதபுரத்தைச் சேர்ந்த மற்றொரு குடும்பத் தலைவி, விலை ஏற்றத்தால் நடுத்தர மக்கள் பாதிக்கப்படுவர், பட்ஜெட் போட்டு குடும்பம் நடத்துபவர்கள் மிகவும் சிரமப்படுவர் என்று கூறியிருக்கிறார்.

ஜெயலலிதா தனது அறிக்கையில் இறுதியாக வெள்ளம் வரும் முன்பே அணை போட வேண்டும், மரணப் படுக்கையில் உள்ள இந்தப் பொதுத்துறை நிறுவனங்களுக்கு தற்போது

ஆக்சிஜன் வழங்கவில்லை என்றால், அவை செயலற்றுவிடும் என்பதற்காகத்தான் இந்த முடிவினை மேற்கொண்டதாகவும் கூறியிருக்கிறார். உண்மையில் அவர் "ஆக்சிஜன்" தருகின்ற முயற்சியில் ஈடுபடவில்லை. பொதுமக்கள் தலையிலே இந்தச் சுமைகளை யெல்லாம் சுமத்தி, இதுவரை அவர்களுக்குச் செலுத்தப்பட்டு வந்த "ஆக்சிஜன்" குழாயைக் கழற்றி விட்டிருக்கிறார் என்பதுதான் உண்மையாகும். இதுவரை வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு ஒரே நேரத்தில் மின் கட்டண உயர்வு, பால் விலை உயர்வு, பேருந்து கட்டண உயர்வு ஆகிய மூன்று சுமைகளை தமிழக ஏழை, நடுத்தர மக்களின் தலையில் ஏற்றி அவர்கள் தலைகளை நொறுங்கிட வைத்த பெருமைக்குரியவர் ஜெயா என்று இந்தப் புவியே அவர் புகழ் பாடட்டும்!

அன்புள்ள,

மு.க.

19-11-2011

3602. அறவழி - அமைதி வழி - அதுவே அண்ணா வழி!

உடன்பிறப்பே,

கேரள அரசும், மத்திய அரசும் கேரளாவில் தமிழ்நாட்டு மக்களுக்கு விரோதமாக நடைபெறும் வன்முறைச் செயல்களை தடுத்து நிறுத்தாமல், வன்முறைகள் கேரளாவில் தொடருமேயானால், கழகத்தின் செயற்குழு கூடி, உரிய முடிவெடுக்கும் என்று நான் செய்தியாளர்களிடம் கூறியதற் கிணங்க, கடந்த 9ஆம் தேதியன்று கழகச் செயற்குழு கூடி, இந்தப் பிரச்சினையிலே தமிழகத்தின் உறுதிப்பாட்டை நிலைநாட்டி, மத்திய அரசின் உடனடி கவனத்தை ஈர்ப்பதற்காக தமிழ கத்தில் உள்ள மாநகரங்களிலும், நகரங்களிலும், 12-12-2011 அன்று காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை ஒரு நாள் உண்ணாவிரதம் இருப்பதென்றும், அதற்கடுத்து முல்லைப் பெரியாறு அணையினால் பாசன வசதி பெறும் தேனி, மதுரை, சிவகங்கை, திண்டுக்கல், ராமநாதபுரம் மாவட்டங்களில் 15ஆம் தேதியன்று மாலை 3 மணி முதல் 5 மணி வரை மாபெரும் மனிதச்சங்கிலி அணிவகுப்பு நடத்துவதென்றும் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம்.

தமிழகத்தின் தலைநகரான சென்னையில், அண்ணா அறிவாலயத்தில், வடசென்னை, தென் சென்னை மாவட்டங்களின் சார்பில் நடைபெறவுள்ள உண்ணாவிரதத்தை நமது கழகப் பொதுச் செயலாளர், இனமானப் பேராசிரியர் அவர்கள் துவக்கி வைக்கவும், அன்று மாலையில் உண்ணா விரதத்தை முடித்து வைத்து உரையாற்றவும் இருக்கிறேன். காலை 8 மணி முதலே உண்ணா விரதத்தில் உன்னோடு அமர்ந்திருக்க எனக்கு விருப்பம்தான்! ஆனால் கழகத்தின் உடன்பிறப்புகள் எனது வயது கருதி, முழு நாளும் உண்ணாவிரதம் இருப்பது உடல்நலத்திற்கு

நல்லதல்ல என்று என்னைக் கேட்காமலேயே அவர்களாகவே முடிவு செய்திருக்கிறார்கள். என் உடல் உண்ணாவிரதத்திற்கு ஒத்துழைப்பு தருகிறதோ இல்லையோ, என் உள்ளம் எல்லாம் உண்ணா விரதத்திலேதான் ஊன்றி நிலைத்திருக்கும் என்பதை நீயும் அறிவாய், நானும் அறிவேன்.

கழகத்தின் சார்பில் எத்தனையோ அறப்போராட்டங்களை நாம் நடத்தியிருக்கிறோம். இலங்கைத் தமிழர்களுக்காக, காவேரி பிரச்சினைக்காக, மொழிப் பிரச்சினைக்காக என்று எத்தனையோ முறை உண்ணாவிரதம், மனிதச்சங்கிலி, ஆர்ப்பாட்டம், கைது என்றெல்லாம் நம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறோம்; வெற்றி கண்டிருக்கிறோம். ஆனால் இந்த முறை ஒருமைப்பாட்டைப் போற்றிப் பாதுகாக்க அன்றாடம் பாடுபட்டு வரும் நமது இந்தியாவில், நமது தமிழர்கள், நமக்கு பக்கத்திலே உள்ள அண்டை மாநிலத்திற்குள் செல்ல முடியாத நிலையில் ஒருசில சமூக விரோதிகளால் தடுக்கப்படுகின்ற நிலையை மத்திய அரசும், கேரள அரசும் கட்டுப்படுத்த முடியாமல் வேடிக்கை பார்க்கும் விபரீத நிலை இருக்கிறதே என்பதற்காக, அவர்களது உடனடியான கவனத்தைக் கவரும் வகையிலேதான் இந்த அறப்போராட்டத்தை அறிவித்திருக்கிறோம்.

இந்த அறப்போர் அறிவிப்புக்கான தீர்மானத்தை எழுதும்போது, கேரளாவிற்கும் நமக்கும் உள்ள சகோதர உறவுகளையெல்லாம் ஓரளவுதான் குறிப்பிட்டிருக்கிறோம். கேரள மாநிலத்தைச் சேர்ந்த பலர் தமிழகத்திலே பல முக்கிய பொறுப்புக்களிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தலைமைச் செயலகத்திலேயே பலர் உயர்நிலை அதிகாரிகளாக இருக்கிறார்கள். ஏன், கேரள மாநிலத்தின் இன்றைய தலைமைச் செயலாளராக உள்ள திரு.பிரபாகர், ஐ.ஏ.எஸ்., அவர்களே தமிழகத்தைச் சேர்ந்தவர் தான். நான் கடந்த ஆண்டு திருவனந்தபுரம் சென்றிருந்த போது தங்கும் விடுதிக்கே வந்து என்னைச் சந்தித்தவர்தான். எனவே ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளைப் போல பாசப் பிணைப்போடு பழகிக் கொண்டிருக்கும் இரு மாநிலத்தவரிடையே பேத உணர்வு வந்துவிடக் கூடாதல்லவா?

முல்லைப் பெரியாறு பாசன திட்டம், அப்போதைய திருவிதாங்கூர் அரசுக்கும் சென்னை மாகாண அரசுக்கும் இடையே

999 ஆண்டுகளுக்குக் குத்தகை அடிப்படையில் 29.10.1886 அன்று கையெழுத்தாகி நடைமுறைக்கு வந்த திட்டமாகும்.

இந்த ஒப்பந்தத்தின்படி, ஏறத்தாழ 8000 ஏக்கர் நிலம் தமிழ்நாட்டிற்குக் குத்தகையாக வழங்கப்பட்டது. ஒரு ஏக்கருக்கான குத்தகைக் தொகை ரூபாய் 5/- என நிர்ணயம் செய்யப்பட்டது.

இதன் பின்னர் 29.5.1970-ல் தமிழ்நாடு கேரளா அரசுகளுக்கிடையே இரண்டு துணை ஒப்பந்தங்கள் உருவாகின.

அவற்றில் ஒரு துணை ஒப்பந்தமானது, தமிழ்நாடு மின்உற்பத்தி செய்துகொண்டு அந்த மின் உற்பத்தி செய்ததற்கான இராயல்டி தொகையை கேரள அரசுக்கு அளிப்பதற்கு வழிவகை செய்கிறது.

மற்றொரு துணை ஒப்பந்தத்தில் ஒரு ஏக்கருக்கு குத்தகைத் தொகை ரூ.5/- என்பதிலிருந்து ரூ.30/- என உயர்த்துவதும், மீன்பிடிக்கும் உரிமையை அனுமதிப்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1979-ம் ஆண்டு பெரியாறு அணைக்கு அபாயம் ஏற்படும் என்று கேரள அரசு அச்சம் தெரிவித்தது. அதன் காரணமாக, மத்திய நீர்வளக் குழுமத்தின் தலைவர், 25.11.1979 அன்று அணையினைப் பார்வையிட்டு பெரியாறு அணை நல்ல முறையில் உள்ளது என்றும், தற்பொழுதுள்ள வடிவமைப்பிற்கு ஏற்றவாறு பலப்படுத்தலாம் என்றும் கருத்துத் தெரிவித்தார்.

அணையைப் பலப்படுத்துவது தொடர்பாக (1) அவசரகால நடவடிக்கை; (2) இடைக்கால நடவடிக்கை; (3) நீண்டகால நடவடிக்கை, என நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என்றும், அதன் பொருட்டு அணையின் நீர்மட்டத்தைத் தற்காலிகமாக 136 அடி வரையில் வைத்துக் கொள்ளலாம் என்றும் தெரிவித்தார்.

அவசரகால நடவடிக்கை மற்றும் கேபிள் நிறுவும் பணிகள் முடிவுற்றவுடன் அணையின் நீர்மட்டத்தை 145 அடிக்கு உயர்த்தலாம் என்று மத்திய நீர்வளக் குழுமம் 29.4.1980ல் தெரிவித்தது.

எனினும், கேரள அரசு; அணை பலப்படுத்தப்பட்ட பின்னரும் 136 அடி வரையிலேயே நீரைத் தேக்கிக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

இப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக பல முறை பேச்சுவார்த்தை நடைபெற்றும் முடிவு ஏதும் எட்டப்படவில்லை.

இதற்கிடையில், இப்பிரச்சனை குறித்து சென்னை மற்றும் கேரள உயர்நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்களை தமிழக அரசு உச்சநீதி மன்றத்திற்கு மாற்றி, உச்ச நீதிமன்றத்தில் கேரள அரசைச் சார்ந்த முல்லைப் பெரியாறு சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைப்பு தாக்கல் செய்திருந்த ரிட் மனுவுடன் சேர்க்கவும், உச்சநீதிமன்றத்தைத் தமிழ்நாடு அரசு அணுகியது.

19.5.2000ல் தமிழ்நாடு கேரள முதலமைச்சர்களிடையே மத்திய நீர் ஆதார அமைச்சரின் முன்னிலையில் இப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இந்த பேச்சுவார்த்தையில் ஒரு வல்லுநர் குழு அமைப்பதற்கு மத்திய அரசு முடிவு செய்து அவ்வாறே குழுவும் அமைக்கப்பட்டு, அக்குழுவும் தனது அறிக்கையினை மார்ச் 2001ல் அளித்தது.

முதற்கட்டமாக தற்பொழுதுள்ள 136 அடியிலிருந்து 142 அடிவரையில் தமிழ்நாடு நீரை தேக்கி வைத்துக்கொள்ளலாம் என்றும், தமிழ்நாடு மீதமுள்ள பலப்படுத்தும் பணிகளை செய்து முடிக்கலாம் என்பது போன்ற பரிந்துரைகளை இந்த வல்லுநர் குழு பரிந்துரைத்தது.

அதுமாத்திரமல்ல; முல்லைப் பெரியாறு அணை வழக்கில் உச்சநீதிமன்றம் 27.2.2006 அன்று அளித்த தீர்ப்பின் முக்கிய விவரங்கள்:-

(i) அணை பலமிழந்துவிட்டது என்ற கேரளாவின் கூற்றிற்கு எந்த விதமான முகாந்திரமும் இல்லை;

(ii) வல்லுநர் குழு பரிந்துரைத்தபடி தமிழ்நாடு 142 அடிவரையில் நீரை தேக்கிக் கொள்ளலாம் - மீதமுள்ள பலப்படுத்தும் பணிகளை மத்திய நீர்க் குழுமத்திற்கு திருப்தி அளிக்கக் கூடிய வகையில் செய்து முடித்தவுடன், வல்லுநர் குழு அணையை ஆய்வு செய்த பின்னர் உச்சமட்ட அளவான 152 அடிவரையில் தமிழ்நாடு நீரை தேக்கி வைக்கலாம் ;

(iii) கேரள அரசு மற்றும் அதன் அதிகாரிகள்; தமிழ்நாடு அரசின் சார்பில் பணிகளை செய்வதை தடுத்து நிறுத்தும்

போக்கினை கைவிட வேண்டும், (we see no reason for the State of Kerala to cause any obstruction / The State of Kerala and its officers are restrained from causing any obstruction)

ஆனால் இந்தத் தீர்ப்பினை அப்போதே மதிக்காமல் கேரள அரசு அதற்கடுத்த 16வது நாளில், நீர்ப்பாசன மற்றும் நீர்பாதுகாப்பு சட்டத்திற்குத் திருத்தங்களை மேற்கொண்டு, 18.3.2006 அன்று முதல் திருத்திய சட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவந்து, பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 136 அடியாக நிர்ணயம் செய்துள்ளது.

இதைச் சுட்டிக்காட்டி, உச்சநீதிமன்றத்தில் 31.03.2006 அன்று தமிழக அரசால் ஒரு வழக்கு தொடரப்பட்டது. அ.தி.மு.க. ஆட்சியிலே, அந்த வழக்கு பதிவுகூட செய்யப்படாமல் இருந்த நிலையில், மே திங்களில் ஆட்சிப் பொறுப்பேற்ற தி.மு. கழக அரசு, இந்தப் பிரச்சினையிலே முயற்சித்து, அதற்கான பதிவெண் 31.08.2006 அன்றுதான் பெறப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக உச்ச நீதி மன்றத்தின் ஆலோசனையின்படி இரு மாநில முதலமைச்சர்கள் கூட்டம் மத்திய நீர்வளத்துறை அமைச்சர் பேராசிரியர் சைபுதின் சோஸ் அவர்கள் தலைமையில் 29.11.2006 அன்று புதுதில்லியில் நடைபெற்றது.

அதில் தமிழக விவசாயிகளின் நிலை குறித்தும், முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்புத் தன்மை குறித்தும் நான் விளக்கியதோடு, கேரள அரசு அதன் திருத்திய சட்டத்தை ரத்து செய்ய பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டேன். ஆனால் அந்தக் கூட்டத்தில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

முல்லைப் பெரியாறு பிரச்சினை குறித்து கேரள முதல் அமைச்சருக்கும், மத்திய அமைச்சருக்கும், இந்தியப் பிரதமருக்கும் நான் எழுதிய பல கடிதங்களின் தேதிவாரியான பட்டியல் இதோ :-

14-9-2006, 4-10-2006, 26-10-2006 ஆகிய நாட்களில் கேரள முதல் அமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன்;

31-10-2006, 15-11-2006, 16-11-2006 ஆகிய நாட்களில் மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சருக்கு கடிதம் எழுதியிருக்கிறேன்;

23-11-2006 அன்று பிரதமருக்கு கடிதம் எழுதியிருக்கிறேன்;

அதே 23-11-2006 அன்று மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சருக்கும், பாதுகாப்புத் துறை அமைச்சருக்கும் கடிதம் எழுதியிருக்கிறேன்;

27-11-2006 அன்று மீண்டும் மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன்.

2-1-2007, 25-3-2007, மற்றும் 19-5-2007 ஆகிய நாட்களில் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன்.

18-12-2007 அன்று பிரதமரை நேரில் சந்தித்து முல்லைப் பெரியாறு பற்றி விளக்கிய போது தான், பிரதமர் என்னையும், கேரள முதல்வரையும் ஒரு முறை நேரில் சந்தித்துப் பேச வேண்டுமென்று கூறி, அவ்வாறே நாங்கள் சந்தித்துப் பேசினோம்.

20-12-2007 அன்று மீண்டும் பிரதமருக்குக் கடிதம் எழுதினேன்.

4-2-2008 அன்றும், 13-7-2009 அன்றும் கேரள முதல் அமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன்.

8-10-2009 அன்று பிரதமருக்குக் கடிதம் எழுதினேன். இந்தக் கடிதங்களில் பெரும்பாலானவை அவ்வப்போது ஏடுகளிலும் வெளிவந்துள்ளன.

உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் ஆணித்தரமான வாதங்கள் எடுத்து வைத்து வாதாடப்பட்டது. அதையொட்டித்தான், 10-11-2009 அன்று ஐந்து பேர் கொண்ட அதிகாரமுள்ள குழுவை அமைக்க உச்சநீதிமன்றம் ஆணையிட்டது. இக்குழுவிற்கு டாக்டர் ஏ.எஸ். ஆனந்த், முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அவர்கள் தலைவராக உள்ளார். இதையொட்டி 14-11-2009 அன்று நான் வெளியிட்ட அறிக்கையில், முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தலாம் என்று உச்சநீதி மன்றம் கடந்த

27-2-2006 அன்று தீர்ப்பளித்த அந்தத் தீர்ப்பு என்னவாயிற்று? உச்ச நீதிமன்றத் தீர்ப்புதான் எல்லாவற்றிற்கும் உச்சக் கட்டம் என்று சொல்லப்படுகிறதே, அப்படியானால் உச்ச நீதிமன்றத்தின் அந்தத் தீர்ப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டதா? கேரள அரசு, உச்சநீதிமன்றத்தின் அந்தத் தீர்ப்பை ஏற்க மறுத்து, 15-3-2006இல் புதிய சட்டத்திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றியது

சரியான நடை முறைதானா? ஒரு மாநில அரசே இவ்வாறு செய்தால் அதற்கு என்ன பரிகாரம்? ஒவ்வொரு மாநிலமும் நீதிமன்றங்களின் தீர்ப்பை மீறி சட்டத் திருத்தங்களை நிறைவேற்றினால், ஜனநாயகம் என்ன ஆவது? என்றெல்லாம் கேட்டிருந்தேன். இன்றளவும் அந்தக் கேள்விகளுக்கு விளக்கம் கிடைக்கவில்லை.

உச்சநீதிமன்றம் அப்போதே அதைப்பற்றி கேள்வி கேட்டு நடவடிக்கை எடுத்திருந்தால் தற்போது கேரளாவில் தமிழர்கள் தாக்கப்படும் நிலைமை ஏற்பட்டிருக்குமா என்பதைப் பற்றியெல்லாம் மத்திய அரசும், கேரள அரசும் அங்கேயுள்ள மக்களும் சிந்திக்க வேண்டுமென்பதற்காகவும், நமது கோரிக்கைகளான முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்பை, இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்படும் வரையில், மத்திய பாதுகாப்புப் படையினரின் பொறுப்பில் விடவேண்டும் - அணையின் நீர் மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்த அனுமதிக்க வேண்டுமென்று 2006ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் கேரள அரசுக்கு உத்தரவிட்டதை உடனடியாக நடை முறைப்படுத்த வேண்டும் - ஆகியவற்றை வலியுறுத்தியும் தி.மு. கழகம் இந்த அறப்போராட்டத்தை அறிவித்திருக்கிறது. கழகம் அறிவிக்கும் அறப் போராட்டங்களையெல்லாம் வெற்றியாக மாற்றித் தரும் கழக உடன்பிறப்புகள் இந்த முறையும் இந்த போராட்டங்களை வெற்றியாக்கிடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்பவே உள்ளது. இந்த அறப்போர்; அறவழி - அமைதி வழி - அதுவே அண்ணா வழி என்பதை மறந்து விடாதீர்கள்!

அன்புள்ள,

மு.க.

12-12-2011

3603. மறைமலையார் கருத்தை மறைப்பதோ?

உடன்பிறப்பே,

கடந்த மே திங்களில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்று பொறுப்புக்கு வந்தது முதல், மக்களுக்குத் தேவையான நன்மைகளைச் செய்கிறார்களோ இல்லையோ, தி.மு. கழக ஆட்சியில் நடைபெற்ற முக்கிய திட்டங்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்து திசை திருப்பும் செயலில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதை தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவார்கள். அது எந்த அளவிற்குப் போயிருக்கிறது என்றால், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சட்டமன்ற அலுவலகம், நாடாளுமன்ற அலுவலகம் என்பதைக் கூட மீண்டும் கைப்பற்றக் கூடிய அளவிற்குச் சென்றிருக்கிறது. வாழ்க அவர்களுடைய பரந்த சிறந்த உள்ளம்!

அந்த வரிசையில் ஒன்றாக நேற்றையதினம் நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக் குழுவிலே சிறப்புக்குரிய ஒரு தீர்மானமாக, தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு என்று திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்திலே சட்டம் இயற்றியதை மாற்றி விட்டு, சித்திரைத் திங்கள் முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டு என்று மாற்றிட பேரவையில் மசோதா ஒன்றினை அறநிலையத் துறை அமைச்சர் மூலமாக தாக்கல் செய்து குரல் வாக்கின் மூலம் நிறைவேற்றியதற்காக முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்து நிறைவேற்றியிருக்கிறார்கள். அதன் மூலமாக தி.மு. கழகத்திற்கோ அது நடத்திய ஆட்சிக்கோ அவமானமா என்றால் இல்லை.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், 23-1-2008 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் தனது உரையிலே செய்த அறிவிப்பில், “பெரும்

புலவரும், தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தவருமான மறைமலை அடிகளார் தலைமையில் ஐநூறுக்கும் மேற்பட்ட புலவர் பெருமக்கள், 1921ஆம் ஆண்டு சென்னை, பச்சையப்பன் கல்லூரியில் ஒன்றுகூடி, தமிழர்களுக்கென்று ஒரு "தனி ஆண்டு" தேவை என்று கருதி, அய்யன் திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டு ஒன்றினைப் பின்பற்றுவதென்றும், அதையே "தமிழ் ஆண்டு" எனக் கொள்வதென்றும், திருவள்ளுவர் பிறந்த ஆண்டு கி.மு. 31 என்றும் முடிவெடுத்தார்கள். அந்தக் கருத்தினை, 37 ஆண்டுகளுக்கு முன்பே, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏற்றுக் கொண்டு, 1971ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு நாட்குறிப்பிலும், 1972ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசிதழிலும் நடைமுறைப்படுத்திட ஆணை பிறப்பித்தார். திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும் தைத் திங்கள் முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என்பது, ஒட்டுமொத்தமாக எல்லாத் தமிழ் அறிஞர்களும் ஒப்புக் கொண்டுள்ள உண்மை என்பதால்; தைத் திங்கள் முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என அறிவித்து நடைமுறைப்படுத்திட கழக அரசு முடிவு செய்தது. எனவே, பொங்கல் திருநாளைத் தமிழர் திருநாளாகக் கொண்டாடி வரும் தமிழ்நாட்டு மக்கள்; இனி - தமிழ்ப் புத்தாண்டு பிறந்த நாளாகவும் இணைத்து இந்நாளை இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில், வாழை, மா, பலா என முக்கனித் தருக்களை நாட்டி; வண்ண வண்ணக் கோலங்களிட்டு; வரிசை விளக்குகளால் ஒளியுமிழ் இல்லங்கள் புது எழில் காட்டிட; புத்தாடை புனைந்து தமிழ் மானம், தன்மானம் போற்றிப் பாடியும், ஆடியும்; சமத்துவ உணர்வு பரப்பியும்; தமிழ்ப் புத்தாண்டு இதுவெனத் துள்ளும் மகிழ்ச்சியால் அன்பை அள்ளிப் பொழிவர்" என பலத்த கைதட்டலுக்கிடையில் அறிவித்தார். எனவே அந்த அறிவிப்பினைக் கூட கழக அரசின் அறிவிப்பாக ஆளுநர் அவர்கள்தான் தன் உரையிலே தெரிவித்தார்.

மறைமலை அடிகள் தலைமையில் தமிழ்த் தென்றல் திரு.வி. கல்யாண சுந்தரனார், தமிழ்க் காவலர் கா. சுப்பிரமணியப் பிள்ளை, சைவப் பெரியார் சச்சிதானந்தப் பிள்ளை, நாவலர் ந.மு. வெங்கடசாமி நாட்டார், நாவலர் சோமசுந்தர பாரதியார், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் உள்ளிட்ட அறிஞர் பெருமக்கள் எல்லாம் கலந்து கொண்ட அந்தக் கூட்டத்தில் அவர்கள் எடுத்த முடிவுகள் மூன்று :

1. திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டாகப் பின்பற்றுவது;
2. அதனையே தமிழாண்டு எனக் கொண்டாடுவது;
3. வழக்கத்தில் திருவள்ளுவர் காலம் கி.மு. 31ஐக் கூட்டினால் திருவள்ளுவராண்டு வரும் என்பதனை மேற்கொள்வது என்பனவாகும்.

அதன் பிறகு 1939ஆம் ஆண்டு திருச்சியில் அகில இந்திய தமிழர் மாநாடு சோமசுந்தர பாரதியார் தலைமையில் கூடியது. அதில், தந்தை பெரியார், கரந்தை தமிழ்ச் சங்கத் தலைவர் உமாமகேசுவரனார், பேராசிரியர் கா. சுப்பிரமணியம், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், திரு.வி.க., மறைமலை அடிகளார், பி.டி. இராஜன், ஆற்காடு ராமசாமி முதலியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பட்டுக்கோட்டை அழகிரி உட்பட பலரும் பங்கேற்றனர். அந்த மாநாடும் தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்றும், பொங்கல் திருநாளே தமிழர் திருநாள் என்றும் தீர்மானித்தது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்;

“நித்திரையில் இருக்கும் தமிழா!
சித்திரையல்ல உனக்குத் தமிழ்ப் புத்தாண்டு!
அண்டிப் பிழைக்க வந்த ஆரியர் கூட்டம் காட்டியதே
அறிவுக் கொவ்வாத அறுபது ஆண்டுகள்
தரணியாண்ட தமிழருக்கு
தைமுதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு”

என்று எழுதியிருக்கிறார் என்றால், தற்போது அ.தி.மு.க. பொதுக் குழுவிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானம், தமிழகத்திலே உலவிய அந்தத் தமிழறிஞர்களுக்கெல்லாம் இழைக்கப்படுகின்ற அவமானம் என்பதை தமிழர்கள் உணர்ந்து கொண்டால் அதுவே போதும்!

ஆளுநரின் அறிவிப்பு பேரவையில் படிக்கப்பட்ட மறுநாளே தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் விடுத்த அறிக்கையில் “தொன்மைக் காலம் தொட்டே சமயம் சார்ந்தும், இயற்கை வாழ்வு சார்ந்தும், மண்ணும் மனிதர்களும்

சார்ந்தும் விவசாய வாழ்வு சார்ந்தும் தைத்திங்கள் முதல் திருநாளே தமிழர் வாழ்வு சார்ந்த எழுச்சியும் மகிழ்ச்சியும் ஊட்டுகின்ற திருநாளாகும். மறைமலை அடிகளார் போன்ற மூத்த தனிப்பெரும் தமிழ் அறிஞர்கள் தைத் திங்கள் முதல் நாளைத் தொடக்கமாய்க் கொண்டு அய்யன் திருவள்ளுவர் பெயரில் தமிழ்ப் புத்தாண்டாய் அறிவித்ததை நடைமுறைப்படுத்த உள்ள முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றி, பாராட்டுக்கள்" என்று தெரிவித்திருந்தார்.

திராவிடர் கழகத் தலைவர், தமிழர் தலைவர், இளவல் வீரமணி அவர்களோ "தைத் திங்கள் முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம் என்ற நமது நீண்ட நாள் கோரிக்கைக்கு வெற்றி கிடைத்துள்ளது. தமிழர் பண்பாட்டு வரலாற்றுத் திசையில் புதியதோர் மறுமலர்ச்சி அத்தியாயம் இது. பாராட்டுகிறோம், மகிழ்ச்சி அடைகிறோம்" என்று கூறினார்.

கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் விடுத்த அறிக்கையில், "தைத்திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டின் தொடக்க நாள் என்று ஆளுநர் உரையில் கலைஞர் அரசு அறிவித்திருப்பது கண்டு உணர்வுமிக்க தமிழர்கள் கொண்டாடிக் கூத்தாடுகிறார்கள். எல்லா தேசிய இனங்களுக்கும் அழிக்க முடியாத சில அடையாளங்கள் உண்டு. தமிழர்களுக்கு நில அடையாளம் இருக்கிறது; இன அடையாளம் இருக்கிறது; ஆனால் கால அடையாளம் மட்டும் குழப்பத்தில் இருந்தது. அந்தக் குழப்ப இருள் உடைந்து விடிந்து இன்று வெளிச்சம் வந்திருக்கிறது. அய்யன் திருவள்ளுவரை கருத்துலகத்தின் அளவுகோலாய்க் காட்டியது திராவிட இயக்கம். இன்று காலத்தின் அளவுகோலாகவும் திருவள்ளுவரைக் கருதச் செய்திருக்கிறது கலைஞர் அரசு. இது சரித்திரத்தைச் சரி செய்யும் சரித்திரமாகும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட பல திட்டங்களுக்கு தற்போது ஒரு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டுச் சரித்திரத்திலே தமிழையே பகைத்துக் கொள்கிற - செம்மொழி என்றாலே வெறுக்கிற - ஒதுக்குகிற - புறக்கணிக்கிற எதிர் மறையானதொரு கூட்டம் இருக்கத்தான் செய்கிறது. அந்தக் காலத்திலும் இப்படி தமிழையே வெறுக்கின்ற புலவர்கள் ஓரிருவர் இருந்திருக்கிறார்கள். இதோ ஒரு கதை! நான்

ஏற்கனவே எழுதிய கதைதான்; இருந்தாலும் மீண்டும் ஒரு முறை நினைவுபடுத்துகிறேன்.

நக்கீரன் காலத்திலே குயக்கொண்டான் என்று ஒருவர் தமிழ்ச் சங்கத்திலே நடைபெற்ற ஒரு பட்டிமன்றத்திலே "ஆரியம் நன்று, தமிழ் தீது" என்று சொல்ல - உடனே நக்கீரனுக்கு கோபம் வந்து, "தமிழ் தீதென்றும், வடமொழி நன்று என்றும் சொன்ன நீ, சாகக் கடவாய்" என்று அறம் பாடினாராம். உடனே குயக் கொண்டான் கீழே விழுந்து இறந்து விடுகிறார். உடனே அங்கேயிருந்த சிலர் நக்கீரனைப் பார்த்து குயக் கொண்டாரைப் பிழைக்க வைக்க கேட்டுக் கொண்டார்கள். அதைக் கேட்ட நக்கீரன், "ஆரியம் நன்று தமிழ் தீதென்றுரைத்த காரியத்தால் காலன்கோட் பட்டானைச் - சீரிய அந்தண் பொதியில் அகத்தியனார் ஆணையினால் செந்தமிழை தீர்க்க சுவாகா!" என்று பாட, குயக் கொண்டான் உயிர் பெற்று எழுந்தானாம். இப்படி ஒரு கற்பனைக் கதை! பழங்காலத்தில் உலவிய கதை!

தமிழக அரசின் அறிவிப்பு வந்த நேரத்திலேயே மிகச் சிறந்த தமிழ் ஆய்வாளரான ஐராவதம் மகாதேவன் அவர்கள், "இன்றைய பஞ்சாங்கங்களை வானநூல், பருவங்களின் சுழற்சி ஆகிய வற்றின் தற்கால நிலையை அறிவியல் கண்ணோட்டத்துடன் - ஆராய்ந்துத் திருத்திக்கொள்ள நமக்குத் துணிவு இல்லையெனில், அறுவடை நாளாகிய பொங்கல் திருவிழாவைப் புத்தாண்டு என்று கொண்டாடுவதில் என்ன தவறு? வரலாற்று ரீதியில் பார்த்தாலும், இந்தியாவில் இன்று நடை முறையில் உள்ள பல புத்தாண்டுகளில் இதுவும் ஒன்று என ஏற்றுக் கொள்ளலாமே" என்றார்.

ஆளுநர் உரையிலே செய்யப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து அதே ஆண்டில் 29-1-2008 அன்று தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு சட்ட முன் வடிவை பேரவை முன் நான் அறிமுகம் செய்து, 1-2-2008 அன்று இச்சட்ட மசோதா மீதான விவாதம் நடைபெற்று அது நிறைவேறியது.

இப்போது மலேசியா நாட்டில் தமிழர்கள் தை முதல் நாளையே புத்தாண்டாகக் கொண்டாடி வருகிறார்கள். டாக்டர் மு. வரதராசனார் அவர்கள், "முன் காலத்தில் வருடப் பிறப்பு சித்திரை முதல் நாளாக இருந்ததில்லை. தை முதல் நாளைத்தான் வருடப் பிறப்பாகப் பெரியோர்கள் கொண்டாடினார்கள். அந்த நாளில் புதிய

ஆடைகளை வாங்கி உடுப்பார்கள். தெருவில் புது மண் போட்டு, செம்மண் இட்டு, ஒழுங்கு செய்வார்கள். ஊரெல்லாம் திருவிழா நடத்துவார்கள். இப்படி நகரங்களில் புத்தாண்டு பிறப்பாகப் பொங்கல் கொண்டாடுகிறார்கள்" என்று விளக்கியுள்ளார்.

தி.மு. கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்டது என்றால் அது இருக்கலாமா என்று அதற்கு முடிவுகட்ட அ.தி.மு.க. ஆட்சியில் ஒரு மசோதா பேரவையிலே அறிமுகப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டு, அதற்காகவும் தற்போது அ.தி.மு.க. பொதுக் குழுவிலே நன்றி தெரிவித்து தீர்மானம் நிறை வேற்றியிருக்கிறார்கள். பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் விடுத்த அறிக்கையில்; அ.தி.மு.க. அரசின் இந்த முடிவு தமிழ் உணர்வாளர்களை வேதனைப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்றும் திடீரென்று தமிழ்ப் புத்தாண்டை மீண்டும் சித்திரை மாதத்துக்கு மாற்றுவது முறையல்ல என்றும் அது மிகப் பெரிய வரலாற்றுப் பிழையாக அமைந்து விடும் என்றும் கூறியிருக்கிறார்.

மேலும் ஜெயலலிதா தனது பேரவை உரையிலே கழக ஆட்சி நிறைவேற்றிய சட்டம் யாருக்கும் பயன் அளிக்காத ஒன்று என்றும், அந்தச் சட்டம் இயற்றப்பட்டதை அடுத்து சென்னையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் கருணாநிதியின் "துதிபாடிகள்" அனைவரும் அதனைப் போற்றினர் என்றும் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காகத்தான் தமிழ்ப் புத்தாண்டு தை முதல் நாள் என்று அறிவிக்கப்பட்டதென்றும் பேசியிருக்கிறார். "துதிபாடிகள்" என்று அம்மையாரால் வர்ணிக்கப்படும் பேறு பெற்றவர்கள் யார் யார் தெரியுமா? நமது பேராசிரியர் அன்பழகனார், அண்ணா பல்கலைக் கழகத்திலும், இந்திரா காந்தி திறந்தவெளி பல்கலைக்கழகத்திலும் துணை வேந்தராக இருந்து பெரும்புகழ் பெற்ற வா.செ. குழந்தைசாமி, முனைவர் தமிழண்ணல், முனைவர் வ.அய். சுப்பிரமணியம், முனைவர் அகத்தியலிங்கம், முனைவர் அவ்வை நடராசன், முனைவர் இரா. நாகசாமி, தவத்திரு ஊரன் அடிகள், பேராசிரியர் கண. சிற்சபேசன், முனைவர் அ. அறிவொளி, முனைவர் சுதா சேஷையன், இலங்கை இ. ஜெயராஜ், முனைவர் சரசுவதி ராமநாதன், வழக்கறிஞர் த. ராமலிங்கம், பேராசிரியர் தி. ராசகோபாலன், முனைவர் இராம. சவுந்தரவல்லி, முனைவர் இரா. செல்வ கணபதி, புலவர் கோ. சாரங்கபாணி ஆகியோர்தான்!

அவர்கள் எப்படி வேண்டுமானாலும் செய்து விட்டுப் போகட்டும். நம்மைப் பொறுத்த வரையில் தைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு தொடங்கும் நாள்தான். அதே நேரத்தில் சித்திரைத் திங்கள் முதல் நாளில் விழா கொண்டாடுவோரை நாம் வேண்டாமென்று தடுக்கவும் இல்லையென்று அப்போதே அறிவித்துள்ளோம். நம்மைப் பொறுத்த வரையில் நாம் தைத் திங்கள் முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடிடுவோம்.

அன்புள்ள,

மு.க.

01-01-2012

42253
க894-8116
க.தொ.எ.46

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன் நூல் நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

3604. என்ன பதில் சொல்லப் போகிறார்?

உடன் பிறப்பே,

"நீங்கள் என்ன செய்வீர்களோ; எனக்குத் தெரியாது. அன்றாடம் என் பெயரில் ஏதாவதொரு அறிவிப்பு ஏடுகளிலே வெளி வர வேண்டும்" என்று நமது முதலமைச்சர் அவர்கள் விடுத்துள்ள வாய்மொழி ஆணைக்கிணங்க வெளிவரும் அறிவிப்புகளில் ஒன்றாக, 6-1-2012 தேதிய நாளேடுகளில் "கரும்புக்கான ஆதார விலை ரூ. 2,100 ஆக உயர்வு - ஜெயலலிதா உத்தரவு" என்ற தலைப்பில் வந்துள்ள அறிக்கையில், "எனது தலைமையிலான அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது" - "மானியம் வழங்க நான் உத்தர விட்டேன்" - "நான் ஒதுக்கீடு செய்துள்ளேன்" - "என்னுடைய இந்த நடவடிக்கைகளின் மூலம்" என்றெல்லாம் அடைமொழி அலங்காரம் கொடுத்து "இந்த ஆண்டு கரும்புக்கான ஆதார விலையை போக்குவரத்து செலவு 100 ரூபாய் உட்பட 2,100 ஆக உயர்த்த நான் உத்தர விட்டுள்ளேன்" என்று ஜெயலலிதா தெரிவித்ததாக, தமிழகத்தின் நாளேடுகள் கொட்டை எழுத்துக்களில் பிரசுரித்துள்ளன.

ஜெயலலிதா விடுத்துள்ள நீண்ட அறிக்கையில், கடந்த ஆண்டு எந்த அளவு கரும்பு கொள்முதல் விலையாக இருந்தது என்பதைப் பற்றி குறிப்பிடவே இல்லை. மேலும் "கரும்புக்கான ஆதார விலை உயர்த்தப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை மனதில் கொண்டு முதற்கட்டமாக இந்த ஆண்டு இந்த விலை உயர்வு" என்றும் ஜாக்கிரதையாகத் தெரிவித்திருக்கிறார்கள். அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே சொன்னது என்ன?

அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் பக்கம் 3இல் "கரும்பு உற்பத்தி புரட்சித் திட்டம்" என்ற தலைப்பில் "எத்தனால் எரிபொருள் உற்பத்தியைப் பெருக்குகிற வகையில், கரும்பு கொள்முதல் விலை; டன்னுக்கு 2,500/ரூபாயாக உயர்த்தப்படும் - அரசு கரும்பு ஆலைகள் நவீனப்படுத்தப்பட்டு நிர்வாகம் சீரமைக்கப்படும்" என்று கூறியிருந்தார்கள். தேர்தல் அறிக்கையிலே

2,500 ரூபாய் என்று சொல்லி விட்டு, தற்போது 2,100 ரூபாய் என்று அறிவிப்பதால்தான் எச்சரிக்கையாக முதற் கட்டமாக என்று கூறுகிறார்கள்! ஆனால் தேர்தல் அறிக்கையில் என்ன சொன்னார்கள் என்பதையும், முதற்கட்டமாக 2100 ரூபாய்தான் என்று தேர்தல் அறிக்கையில் சொல்லாமல் விட்டதையும் தற்போது மறைத்திருக்கிறார்கள். - மேலும் அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில்; கரும்பு உற்பத்தி 475.5 லட்சம் மெட்ரிக் டன்னில் இருந்து 1000 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்த்தப்படும் என்றும், ஒரு லட்சம் ஹெக்டேரில் கரும்பு பயிரிட நடவடிக்கை எடுக்கப்பட்டு, உற்பத்தி இரண்டு மடங்காகப் பெருக்கப்படும் என்றும் குறிப்பிட்டதற்கு மாறாக, நேற்றைய அறிக்கையில் ஜெயலலிதா, "342.5 லட்சம் டன்னாக இருந்த கரும்பு உற்பத்தி நடப்பாண்டில் 400 லட்சம் டன்னாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது" என்று தெரிவித்து, தேர்தல் அறிக்கையிலிருந்து தாங்கள் எவ்வளவு மாறுபட்டு வழுக்கி இருக்கிறார்கள் என்பதை தெளிவுபடுத்தியிருக் கிறார்கள்.

மத்திய அரசின் 21.10.2009ஆம் நாளிட்ட அவசர சட்டத்தில் மாநில அரசுகள் கரும்புக்கான பரிந்துரை விலையை அறிவிக்கக் கூடாது எனவும், மத்திய அரசு அறிவிக்கும் நியாயமான மற்றும் ஆதாய விலையைத்தான் (Fair and Remunerative Price) கரும்பு ஆலைகள் வழங்க வேண்டும் எனவும், மாநில அரசு பரிந்துரை விலையை அறிவிக்கக் கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், 9.5 சதம் சர்க்கரை பிழிதிறன் உள்ள ஒரு டன் கரும்புக்கு நியாயமான மற்றும் ஆதாய விலையாக (F R P) ரூ.1298.40 எனவும், ஒவ்வொரு 0.1 சத சர்க்கரை பிழிதிறனுக் கும் ரூ.13.70 எனவும் அறிவித்தது. ஆனால் அப்போது நமது கழக அரசு டன் ஒன்றுக்கு 1,437.40 ரூபாய் என்ற அளவில் கரும்புக்கு விலையை வழங்கியது. அது பற்றி 7.11.2009ஆம் நாளிட்ட தினமணி நாளிதழில் **"கரும்பு விவசாயிகளை பாதிக்கும் மத்திய அரசின் உத்தரவை எதிர்க்காதது ஏன்"** எனக் கேட்டு அறிக்கை வெளியிட்ட ஜெயலலிதா, "டன்னுக்கு ரூ. 2,500 வழங்க வேண்டும் என்று கரும்பு விவசாயிகள் கோரிக்கை விடுத்திருக்கும் நிலையில் மத்திய அரசின் அறிவிப்பினால் டன்னுக்கு ரூ. 139 குறைவாகப் பெறக்கூடிய அவல நிலைக்கு கரும்பு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். இந்தச் சூழ்நிலையில் தமிழக அரசு என்ன முடிவெடுக்கப் போகிறது? அவர்களது கபட நாடகங்களை இனி நடத்த முடியாது!" என்றெல்லாம் அவருக்கே உரிய மொழியில்

கேள்வி கேட்டிருந்தார். ஆனால் அப்படிக் கேள்வி கேட்ட ஜெயலலிதாவைப் பார்த்து இப்போது, கரும்புக்கு டன் ஒன்றுக்கு 2,500 ரூபாய் என்று ஏன் விலை நிர்ணயம் செய்யவில்லை என்று கரும்பு விவசாயிகள் கேட்க மாட்டார்களா என்ன?

கரும்புக் கட்டுப்பாட்டு சட்டம் 1966ன்படி, மத்திய அரசு அறிவிக்கும் சட்டபூர்வ குறைந்தபட்ச விலை, தமிழக விவசாயிகளுக்கு கட்டுப்படியாகவில்லை என்பதால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வரும்போதெல்லாம் சர்க்கரை ஆலை உரிமையாளர்களையும், விவசாயிகள், விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலை தனி அலுவலர்களையும் கொண்ட முத்தரப்பு கூட்டத்தைக் கூட்டி விவசாயிகளுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலையை மாநில அரசின் பரிந்துரை விலையாக அறிவித்து வழங்கி வந்தது.

ஆனால், 2001ல் ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. 5 ஆண்டு காலம் முத்தரப்பு கூட்டத்தைக் கூட்டியோ, விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், ஆலை உரிமையாளர்கள், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் தனி அலுவலர்களின் கருத்துக்களைக் கேட்டோ முடிவெடுக்காமலேயே மத்திய அரசு நிர்ணயித்த விலையை மட்டுமே வழங்கி வந்ததை கரும்பு விவசாயிகள் அனைவரும் அறிவார்கள், அதனை அவர்கள் நிச்சயம் மறந்திருக்க மாட்டார்கள்.

5 ஆண்டு காலமாக மத்திய அரசின் விலையோடு மாநில அரசின் பரிந்துரை விலையும் சேர்த்து கரும்பு விவசாயிகளுக்கு அ.தி.மு.க. ஆட்சியில் வழங்காமல், தி.மு.க. ஆட்சியில் 8.5 சத சர்க்கரை பிழிதிறன் கொண்ட ஒரு டன் கரும்புக்கு 2000-2001ல் மாநில அரசின் பரிந்துரை விலையாக அறிவித்து வழங்கிய ரூ.775/-ஐ மட்டுமே வழங்கி வந்ததை மறைப்பதற்கு, விவசாயிகள் மீது ஏதோ அக்கறை கொண்டவரைப் போல இப்போது அறிக்கை விட்டுக் கொண்டிருப்பது வேடிக்கையாக இருக்கிறது.

2001ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி ஜெயலலிதா தலைமையில் அமைந்த போது 9-11-2001 ஆம் நாள் அமைச்சரவை கூட்டத்தைக் கூட்டி, கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் மத்திய அரசின் சட்டப் பூர்வ குறைந்தபட்ச விலை மட்டும் தரப்படும், மாநில அரசின் பரிந்துரை

விலையை வழங்கமாட்டோம் என்று தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு ஜெயலலிதா தெரிவித்தார். அ.தி.மு.க. அமைச்சரவை நிறைவேற்றிய தீர்மானத்தின்படி 2001-2002 முதல் 2004-2005 வரை நான்காண்டு காலம் மத்திய அரசின் சட்டபூர்வ குறைந்தபட்ச விலையான ரூ. 795 மட்டும் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

2009-2010ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு 9.5 சதம் சர்க்கரை பிழிதிறன் கொண்ட ஒரு டன் கரும்புக்கு ரூ.1077.60/-ம் ஒவ்வொரு 0.1 சர்க்கரை பிழிதிறனுக்கும் ரூ.11.30/-ம் அளிப்பது விவசாயிகளுக்கு கட்டுப்படியாகாது என மாநில அரசு கருதியதால், பரிந்துரை விலையாக ரூ.359.80/- ஐ கூட்டி மாநில அரசின் பரிந்துரை விலையாக 9.5 சத சர்க்கரை பிழிதிறன் கொண்ட ஒரு டன் கரும்புக்கு ரூ.1437.40 என்றும், சராசரி பிழிதிறன் அடிப்படையில் கூடுதலாக ரூ.2260/எனவும், வண்டி வாடகையாக டன் ஒன்றுக்கு ரூ.90/ம் சேர்த்து ஆகமொத்தம் ஒரு டன் கரும்புக்கு சராசரியாக ரூ.1550/- வழங்கிய அரசு - ஜெயலலிதா பாணியிலே சொல்ல வேண்டுமென்றால் எனது தலைமையிலே நடைபெற்ற தி.மு. கழக அரசுதான்!

மத்திய அரசு 9.5 சதம் பிழிதிறன் கொண்ட ஒரு டன் கரும்புக்கு ரூ.1298.40 என விலை நிர்ணயம் செய்து அறிவிப்பதற்கு முன்பே, நமது மாநிலத்தில் முத்தரப்பு கூட்டத்தைக் கூட்டி விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள், ஆலை உரிமையாளர்கள், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை தனி அலுவலர்கள் ஆகியோரின் கருத்துக்களைக் கேட்டு ஒரு டன் கரும்புக்கு ரூ.1550/-விலை கிடைக்க 29.9.2009ல் ஆணையிடப்பட்டது.

உச்சநீதி மன்றம் கரும்பு விலை நிர்ணயம் சம்பந்தமாக அளித்த தீர்ப்பில் மத்திய அரசின் சட்டபூர்வ குறைந்தபட்ச விலையோடு மாநில அரசு கூடுதலாக பரிந்துரை வழங்கலாம் என 5-5-2004 அன்று தீர்ப்பு வழங்கிய பிறகு, அந்த தீர்ப்பை உடனடியாக அமல்படுத்தாமல், அதன் பிறகு 16 மாத காலம் சும்மாயிருந்துவிட்டு, 2006ஆம் ஆண்டு தமிழக சட்டமன்றத் தேர்தல் வந்ததை முன்னிட்டு ஒரு டன் கரும்புக்கு 1014 ரூபாய் என்று ஜெயலலிதா ஆட்சியிலே அறிவிக்கப்பட்டது. அறிவிக்கப்பட்டதே தவிர அந்தத் தொகை வழங்கப்படவில்லை. ஜெயலலிதா ஆட்சி புரிந்த அந்த நான்காண்டுகளுக்கு மட்டும்

விவசாயிகளுக்கு ஏற்பட்ட நட்டம் ஏறத்தாழ ரூ.440 கோடி என்பதை இன்றைய முதலமைச்சர் அவர்களுக்கு நினைவூட்டு கின்றேன்.

கரும்பு விலையைப் பொறுத்தவரையில் சொல்ல வேண்டுமேயானால், 2006-2007இல் கழக அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பின், அந்த ஆண்டு மத்திய அரசு டன் ஒன்றுக்கு கரும்பு விலையை 802.50 ரூபாய் என்று நிர்ணயித்தபோது, தமிழக அரசு 221.50 ரூபாய் உயர்த்தி, டன் ஒன்றுக்கு 1,024 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்தது.

2007-2008ஆம் ஆண்டு மத்திய அரசு நிர்ணயித்த கரும்பு விலையை டன் ஒன்றுக்கு ரூ. 811.80 என்பதை, ரூ. 222.20 உயர்த்தி , டன் ஒன்றுக்கு 1,034 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்தோம்.

2009-2010ஆம் ஆண்டு ஏற்கனவே நான் மேலே குறிப்பிட்டதைப் போல போக்குவரத்துக் கட்டணம் மற்றும் ஊக்கத் தொகையெல்லாம் சேர்த்து டன் ஒன்றுக்கு 1,550 ரூபாய் என்று கரும்புக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டது. இது பின்னர் 1,650 ரூபாய் அளவிற்கும் உயர்ந்தது.

2010-2011ஆம் ஆண்டு மேலும் 350 ரூபாய் டன் ஒன்றுக்கு உயர்த்தி, 2000 ரூபாய் என்று கரும்புக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டது. ஆக ஒவ்வொரு ஆண்டும் தி.மு. கழக ஆட்சியில் 200 ரூபாய் என்றும், 300 ரூபாய் என்றும், 350 ரூபாய் என்றும் கரும்புக்கு விலை கூடுதலாக நிர்ணயம் செய்யப்பட்டதற்கு மாறாக, தற்போது ஜெயலலிதா அரசு டன் ஒன்றுக்கு 2000 ரூபாய் என்பதை 2100 ரூபாயாக, அதாவது 100 ரூபாய் மட்டுமே டன் ஒன்றுக்கு உயர்த்தியுள்ளது. இதைத்தான் தமிழகத்தில் உள்ள ஏடுகள் எல்லாம் கரும்பு விலையை ஜெயலலிதா உயர்த்தியிருப்பதாக பூதாகாரமாக செய்தி வெளியிட்டிருக்கின்றன.

ஏடுகள் அவ்வாறு செய்தி வெளியிட்ட போதிலும், கரும்பு விவசாயிகளும், தமிழக விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் இந்த விலை நிர்ணயத்தை கடுமையாகக் கண்டித்திருக்கிறார்கள்.

“வழக்கமாக விவசாயிகள், ஆலை அதிபர்கள், அரசு அதிகாரிகள் அடங்கிய முத்தரப்பு குழுவினர் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் தான் விலை

அறிவிப்பது வழக்கம். ஆனால் தமிழக அரசு தன்னிச்சையாக விலை அறிவித்திருப்பது ஏமாற்றம் அளித்துள்ளது. அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கூறியபடி 2500 ரூபாயைக் கூட வழங்காமல், மின் தட்டுப்பாடு, கூலி உயர்வு போன்ற காரணங்களால் டன் ஒன்றுக்கு 3,000 ரூபாய் விலை அறிவிக்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் ஏற்காமல், தனியார் ஆலை உரிமையாளர் களுக்குச் சாதகமாக விலை அறிவிக்கப்பட்டது" என்று கூறி, அரசு மறு பரிசீலனை செய்து டன் ஒன்றுக்கு 3,000 ரூபாய் என்று அறிவிக்காவிட்டால், மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாகவும் கரும்பு விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர்க் கட்சியாக அ.தி.மு.க. இருந்த போது, தி.மு. கழக ஆட்சியிலே ஜனநாயக ரீதியாக கரும்பு விலை நிர்ணயம் செய்யப்பட்ட போதெல்லாம், அதைக் குறை கூறிக் குற்றம் சொன்ன ஜெயலலிதா, தற்போது கரும்பு விவசாயிகளின் செவிகளில் கசப்பான செய்தியைப் பாய்ச்சியதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்?

அன்புள்ள,

மு.க.

08-01-2012

3605. நாம் தொடங்கிய நடமாடும் கோயில் திருப்பணி!

உடன்பிறப்பே,

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்பது நமது திராவிட இயக்கத் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் வழங்கிய நல்லுரையாகும். அந்த உரையைப் பின்பற்றி ஏழைகளுக்கு உதவிட, ஏழைகளின் இன்னல் நீக்கி அவர்கள் முகத்தில் சிரிப்பைக் கண்டிட, நாளெல்லாம் பாடுபட்டு உழைத்து வருகின்ற இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். அந்தக் கழகத்தினுடைய ஆட்சி நடைபெறுகின்ற நேரத்தில் எல்லாம் பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம்.

நான் ஆரம்பப் பள்ளியிலே படித்த போதும் சரி - உயர்நிலைப் பள்ளியிலே கல்வி கற்ற நேரத்திலும் சரி - எங்கள் திருவாரூரில் இருக்கின்ற அகலமான - உயரமான கோவில் சுவர்களில் ஓர் அழகான விளம்பரம் எழுதப்பட்டிருக்கும். என்ன விளம்பரம் என்றால் "நடமாடும் கோவில் திருப்பணி" என்று அதிலே தலைப்பு தீட்டப்பட்டிருக்கும். நடமாடும் கோவில் திருப்பணி என்றால், ஏதோ கோயிலை நடமாடுகின்ற கோயில்களாக கட்டப் போகிறார்கள் என்று பொருள் அல்ல. அல்லது சிலர் அதற்கு விளக்கம் தந்தார்கள் - "மொபைல் ஆஸ்பிடல்" என்று! என்னுடைய தமிழ் ஆசிரியர், மகாவித்துவான் தண்டபாணி தேசிகர் அவர்கள், அதற்கு உரைத்த பொருள் என்னவென்றால், மனிதனின் உடலே நடமாடும் கோயில்தான் - அதிலே ஏற்படுகின்ற பழுதுகளைப் பார்ப்பதற்கு "திருப்பணி" என்று சைவ சித்தாந்தப்படி நாங்கள் சொல்கிறோம் - ஆகவே நடமாடும் கோயில் திருப்பணி என்றால் மருத்துவ உதவிதான் என்று அவர்கள் சொன்னார்கள். அந்த நடமாடும் கோயில் திருப்பணியைத்தான் திராவிட முன்னேற்றக் கழக அரசு எவ்வெப்போதெல்லாம் தமிழகத்திலே அமைகிறதோ, அப்போதெல்லாம் ஆற்றிக் கொண்டிருந்திருக்கிறது.

எடுத்துக்காட்டாக, பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டத்தை 1971ஆம் ஆண்டு தொடங்கினோம் - கண்ணொளி வழங்கும் திட்டத்தை 1972இல் தொடங்கினோம் - இலவச சைக்கிள் ரிக்ஷா திட்டத்தை 1973இல் தொடங்கினோம் - ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டத்தை 1974இல் தொடங்கினோம் - கருணை இல்லங்களை 1975இல் தொடங்கினோம் - மூவலூர் மூதாட்டியார் நினைவாக ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டத்தை - நாகம்மையார் நினைவு ஏழை மகளிர் இலவசப் பட்டப் படிப்பு திட்டத்தை - டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டத்தை உருவாக்கிய தி.மு. கழக ஆட்சிதான் "உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தை"யும் தொடங்கியது.

இதயத்தைப் பாதுகாக்க இளஞ்சிறார்களுக்கு - பள்ளிச் சிறார்களுக்கு "இருதயப் பாதுகாப்புத் திட்டம்" தி.மு. கழக ஆட்சியினால் தொடங்கப்பட்டது. குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சை செய்வதின் மூலம் - கழக ஆட்சியில் - 13 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் - 653 இளம் சிறார்க்கும், 1663 பள்ளி மாணவர்களுக்கும் இருதய அறுவை சிகிச்சைகள் இலவசமாகச் செய்யப்பட்டன. அவர்களும் உயிர் பிழைத்து நம்மிடையே நன்றி பாராட்டி உலவிக் கொண்டிருக்கின்ற காட்சியைப் பார்த்து நாமெல்லாம் உவகை கொள்கிறோம்.

இந்தத் திட்டத்தின் அடுத்தவொரு பணியாகத்தான் - காப்பீட்டுத் திட்டத்தை கழக அரசு ஆண்டு ஒன்றுக்கு 517 கோடி ரூபாய் செலவழிக்கும் வகையில் தொடங்கினோம். இந்த ஒரு திட்டம் மாத்திரமல்ல; இந்தத் துறையின் சார்பிலே மாத்திரம், "வருமுன் காப்போம் திட்டம்" - "ஏழைச்சிறார்கள் இருதய அறுவை சிகிச்சைத் திட்டம்" - "பள்ளிச் சிறார்க்கான இருதய அறுவை சிகிச்சைத் திட்டம்" - "ஏழை கர்ப்பிணிப் பெண்கள் ஊட்டச்சத்து உட்கொள்ள 6000 ரூபாய் நிதி உதவி வழங்கும் திட்டம்" - "ஆரம்ப சுகாதார மருத்துவமனைகள் அனைத்தும் 24 மணி நேரமும் இயங்கும் திட்டம்" - "அரசு ஊழியர்களுக்கான புதிய காப்பீட்டுத் திட்டம்" என்பன போன்ற பல திட்டங்கள் தி.மு. கழக ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டு ஏழையெளியோர் பயன் அடைந்தனர். குறிப்பாக உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 1 கோடியே 34 லட்சம் குடும்பங்கள் பதிவு

செய்து கொண்டு, 31-3-2011 வரை 3 இலட்சத்து 3 ஆயிரத்து 328 நோயாளிகளுக்கு 781 கோடியே 40 லட்ச ரூபாய்ச் செலவில் அங்கீகரிக்கப்பட்ட 702 மருத்துவமனைகளில் உயிர்காக்கும் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு அவர்கள் பயனடைந்தனர்.

தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நேரத்தில் எல்லாம் இவ்வாறு புதிய புதிய திட்டங்களை அறிவித்து நடைமுறைப்படுத்திய தன்னியில்; கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இல்லாத காலங்களில் தமிழகத்தை ஆண்ட கட்சிகள் நிறைவேற்றிய நல்ல திட்டங்களையும் வரவேற்று, யார் ஆட்சிக் காலத்தில் அந்தத் திட்டம் தொடங்கப்பட்டது என்றெல்லாம் எண்ணிடாமல், அந்தத் திட்டத்தினால் பயனடைவோரின் நலன்களை எண்ணிப் பார்த்து, அந்தத் திட்டங்களையும் செம்மையாகவும் சிறப்பாகவும் நடத்திடுவதற்கான முனைப்பிலே ஈடுபட்டது என்பதற்கும் பல்வேறு சான்றுகளைக் கூற முடியும்.

குறிப்பாக ஒன்றைக் கூறவேண்டு மேயானால், "புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்" -தி.மு. கழக ஆட்சியிலே தொடங்கப்பட்ட திட்டமல்ல. எனினும் அந்தத் திட்டத்தை அ.தி.மு.க. ஆட்சியைவிட தி.மு. கழக ஆட்சிதான் தீவிரமாகச் செயல்படுத்தியது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பெயரில் உள்ள திட்டமாயிற்றே, அதைத் தொடர்ந்து நடத்தலாமா? பெயரை வேண்டுமானால் மாற்றி விடலாமா? என்றெல்லாம் தி.மு. கழகம் கருதியதே இல்லை.

2006ஆம் ஆண்டு ஆட்சிக்கு தி.மு. கழகம் வந்த பிறகு அத்திட்டத்தின் விரிவாக்கமாக 15-7-2006 முதல் பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவுடன் வாரம் இரண்டு முறை முட்டை வழங்கும் திட்டத்தை அமல்படுத்தினோம். பின்னர் 15-7-2007 முதல், வாரம் ஒன்றுக்கு மூன்று முட்டைகள் வழங்கப்பட்டதும் தி.மு. கழக ஆட்சியிலேதான்! 17-9-2010 முதல் வாரம் ஐந்து முட்டைகள் தி.மு. கழக ஆட்சியில்தான் வழங்கப்பட்டன. இதன் மூலமாக மட்டும் 57 இலட்சத்து 74 ஆயிரத்து 673 பள்ளி மாணவ, மாணவியர் பயன் பெற்றனர். முட்டை சாப்பிடாத 37,249 குழந்தை களுக்கு சத்துணவுடன் வாழைப்பழம் வழங்கப்பட்டதும் தி.மு. கழக ஆட்சியிலேதான்.

அ.தி.மு.க. ஆட்சியில் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வந்த சத்துணவு சமையலர்கள், உதவியாளர்கள், அங்கன்வாடி உதவியாளர்கள் ஆகிய அனைவருமே தி.மு. கழக ஆட்சியிலே தான் சிறப்பு ஊதிய விகிதம் பெற்றார்கள். சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு அ.தி.மு.க. ஆட்சியில் அகவிலைப்படி தவிர ஏனைய படிகள் எதுவும் வழங்கப்படவில்லை. ஆனால் கழக ஆட்சியிலேதான், அவர்களுக்கு முதல் முறையாக 1-6-2009 முதல் மாதந்தோறும் வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி ஆகியவைகளும், 100 ரூபாய் மருத்துவப்படியும், 2000 ரூபாய் பண்டிகைக் கால முன் பணமும் வழங்கப்பட்டது. இன்னும் எழுதிக் கொண்டே போகலாம். எனவே தி.மு. கழக ஆட்சிக் காலத்தில், திட்டங்களின் பயன்கள்தான் கருதப்பட்டதே தவிர, அந்தத் திட்டம் யார் காலத்தில் தொடங்கப்பட்டது என்றெல்லாம் குறுகிய மனப்பான்மையோடு கருதியதில்லை.

ஆனால் கழக ஆட்சியில் தொடங்கப்பட்டது என்பதற்காக ஓமந்தூரார் வளாகத்திலே உள்ள தலைமைச் செயலகக் கட்டிடம், பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம், தைத்திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு நாள், செம்மொழித் தமிழாய்வு பாவேந்தர் நூலகம் போன்றவைகளை இன்றைய ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று அறிவித்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் குடிசை வீடுகளே இருக்கக் கூடாது என்ற உயரிய குறிக்கோளோடு கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டத்தை அ.தி.மு.க. அரசு மூடி விட்ட போதிலும், அந்தத் திட்டத்திற்குப் பதிலாக வேறொரு பசுமை வீடு வழங்கும் திட்டத்தைத் தொடங்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். அதைப் போலவே கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தை மூடி விட்டு, அதற்குப் பதிலாக மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். அதைப் பொறுத்த வரையில் நான் தொடங்கிய திட்டத்தை மூடி விட்டார்களே என்று எனக்கு வருத்தமில்லை. எந்தப் பெயரிலோ; எப்படியோ திட்டம் நடைபெற்று மக்கள் பயன்பெற்றால் போதுமென்றுதான் எண்ணுகிறேன், விரும்புகிறேன். தி.மு. கழக அரசால் தொடங்கப்பட்ட மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் 642 வகையான நோய்களுக்கு சிகிச்சை அளிக்க அனுமதி அளிக்கப்பட்டதற்கு மாறாக, தற்போது 1016 வகையான நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப் போகிறார்கள் என்றால்,

அதிலே எனக்கு மகிழ்ச்சிதான். ஏற்கனவே இருந்த காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பயனாளிகளாக இருந்து பழைய அட்டைகளை வைத்திருப்பவர்களும், புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் பயன் பெறலாம் என்றும் - ஏற்கனவே கழக ஆட்சியில் ஒரு குடும்பத்துக்கு நான்கு ஆண்டுகளுக்கு ஒரு இலட்சம் ரூபாய் உதவி என்றால், தற்போது ஒரு குடும்பத்துக்கு நான்கு ஆண்டுகளுக்கு நான்கு இலட்சம் ரூபாய் உதவி என்றும் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளதற்காக இந்தத் திட்டத்தை வரவேற்கிறேன்.

அ.தி.மு.க. அரசு கொண்டு வந்துள்ள இந்தத் திட்டத்தை நான் வரவேற்கும் அதே நேரத்தில், தி.மு. கழக அரசு இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்த போது அம்மையார் ஜெயலலிதா என்ன சொன்னார் என்பதை "தினமணி" தனது 12-1-2012 தேதிய தலையங்கத்திலேயே, **"தி.மு.க. அரசில் கொண்டு வரப்பட்ட கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்தவர் தமிழக முதல்வர் ஜெயலலிதா. தேர்தல் பிரசாரத்தின் போதும், அதற்கு முன்பும் கூட, இத்திட்டத்தால் மக்கள் பயனடைய வில்லை என்றும், காப்பீட்டு நிறுவனங்கள் மட்டுமே பயன் பெற்றன, இதற்கு பின்னணியில் ஆட்சியில் இருப்பவர்கள் இருக்கிறார்கள் என்று வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் குற்றம் சாட்டினார்"** என்றெல்லாம் நினைவு படுத்தியதோடு, தற்போது ஜெயலலிதாவால் தொடங்கப்படும் திட்டத்தை வரவேற்று பாராட்டியிருக்கிறார்கள். அன்றும் இதே "தினமணி" தான்! இன்றும் அதே "தினமணி" தான்! கழக அரசு இத்திட்டத்தைத் தொடங்கிய போது அதனை அம்மையார் குற்றஞ்சாட்டியதைப் போல நான் இந்தத் திட்டத்தை இப்போது குறைகூறாமல் வரவேற்கிறேன். அதே நேரத்தில் அம்மையார் அவர்கள் தி.மு. கழக அரசு கொண்டு வந்த மற்ற திட்டங்களையும் பகைமை நோக்கோடு பார்க்காமல், அந்தத் திட்டங்களையெல்லாம் நான் என்னுடைய சொந்தப் பணத்திலிருந்தோ, கழகத்தின் பணத்திலிருந்தோ நிறைவேற்றியது அல்ல, அதுவும் அரசின் பணம்தான் என்பதை மனதிலே கொண்டு, சற்று பரந்த நோக்கத்தோடு நடந்து கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன். அனைத்துமே அரசின் திட்டங் கள்தான்! எந்தத் திட்டத்தையும் தி.மு. கழக அரசின் திட்டம் என்றோ, அ.தி.மு.க. அரசின் திட்டம் என்றோ தனித்துப் பார்ப்பது நல்லதல்ல!

உதாரணத்திற்காகச் சொல்ல வேண்டுமே யானால், தலைமைச் செயலகம் ஒன்று புதிதாகக் கட்டப்பட வேண்டும் என்று ஜெயலலிதா அம்மையாரே பேரவையிலேயே ஏற்கனவே பலமுறை சொல்லியிருக்கிறார். அந்த எண்ணம் தி.மு. கழக ஆட்சியிலே நிறைவேற்றப்பட்டு விட்டது என்பதற்காக, அதனை ஏற்றுக் கொள்ள மறுத்தால் அதனால் யாருக்கு நஷ்டம்? அந்தத் தலைமைச் செயலகத்திலே பணியாற்றுகின்ற அதிகாரிகளும், அலுவலர்களும் இடப்பற்றாக்குறை காரணமாக எவ்வளவு இன்னல்களுக்கு ஆளாகிறார்கள் தெரியுமா? "அம்மையார் ஒருவரின் பிடிவாதம் காரணமாக நாமெல்லாம் அவதிக்கு ஆளாகிறோமே" என்று நாளும் நாளும் அவர்கள் பேசிக் கொள்வது அம்மையாரின் காதிலே விழுமா? ஆட்சி இன்று வரலாம், அடுத்த தேர்தலில் வராமல் போகலாம், மீண்டும் வரலாம். ஆனால் ஆட்சியிலே இருக்கின்ற நேரத்தில் - எதிர்க்கட்சியைப் பற்றியே குறுகிய நோக்கில் எண்ணிச் செயல்படாமல், மக்களின் நல்வாழ்க்கைக்காக நமது நேரத்தைச் செலவிடுவதுதான் சிறந்த ஜனநாயகம் என்பதை அம்மையார் அவர்கள் இனியாவது புரிந்து கொண்டு, கொஞ்சம் பெருந்தன்மையோடு செயல்பட வேண்டுமென்று விரும்புகிறேன், செயல்படுவார் என்று நம்புகிறேன். பார்க்கலாம்! நடமாடும் கோயில்களின் திருப்பணியே ஆட்சியாளர்களின் குறிக்கோளாக ஆகட்டும்!

அன்புள்ள,

மு.க.

14-1-2012

3606. விஷம்; ஒரு துளி போதாதா?

உடன்பிறப்பே,

"ஒரே மாதத்தில் பணிகளைச் செய்து சாதனை படைத்த இதுபோல ஒரு அரசைக் காட்ட முடியுமா?" என்று தமிழகச் சட்டசபையில் முதலமைச்சர் ஜெயலலிதா 31-1-2012 அன்று சவால் விட்டிருக்கிறார். யாரிடம் சவால் விட்டிருக்கிறார் என்றால் தே.மு.தி.க. புகாருக்கு மறுப்புக் கூறி சவால் விட்டிருக்கிறார். எந்தத் தே.மு.தி.க.? கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் எந்தத் தே.மு.தி.க. வுடன் தோழமை பூண்டு வெற்றி பெற்று, ஆட்சியைக் கைப்பற்றினார்களோ, அந்தத் தே.மு.தி.க.வின் தலைவரைப் பார்த்து - சட்டசபை எதிர்க்கட்சித் தலைவரைப் பார்த்து - அவர் அருவருக்கத்தக்க வகையில் நடந்து கொண்டதாகவும், அவருடன் கூட்டணி வைத்துக் கொண்டதற்காக வருத்தப்படுவதாகவும் கூறியிருக்கிறார். இந்த மாபெரும் சாதனையை வேறு எந்த ஆட்சியிலும் காண முடியாததுதான்! ஜெயலலிதா ஒருவரால்தான் இத்தகைய மாபெரும் சாதனையைச் செய்து காட்ட முடியும்.

முதலமைச்சர் இந்த ஒரு சாதனையை மட்டும்தான் செய்திருக்கிறாரா? முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு இந்த ஏழு மாதங்களில் ஆறு முறை அமைச்சரவையை மாற்றிய இமாலய சாதனையைப் போல வேறு எந்த ஆட்சியிலும் செய்யப்படவில்லைதான். எட்டு மாத காலத்தில் 9 அமைச்சர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்ட சாதனை என்ன? இருபது இலாகாக்கள் கைமாறியிருக்கின்றன. சட்டத் துறைக்கு மட்டும் மூன்று அமைச்சர்கள் - உணவுத் துறைக்கு மூன்று பேர் மாறியிருக்கிறார்கள். ஒரு வாரம் மட்டுமே பள்ளிக் கல்வித் துறை அமைச்சராக இருந்த அக்ரி கிருஷ்ணமூர்த்தி மற்றும் ஒரு வாரம் மட்டுமே வருவாய்த் துறை அமைச்சராக இருந்த எஸ்.பி. வேலுமணி ஆகியோர் நீக்கப்பட்ட சாதனை வேறு எங்கேயாவது உண்டா?

கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சராக இருந்து, பின்னர் ஏதோ ஒரு தவறுக்காக அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்ட என்.ஆர். சிவபதி மீண்டும் அமைச்சராகியிருக்கிறார். அப்படியென்றால், ஏற்கனவே அவர் செய்த தவறு சரியாகி விட்டதா?

அமைச்சர்கள் மட்டுமல்ல - அ.தி.மு.க. ஆட்சியிலே அதிகாரிகளின் நிலைதான் என்ன? எந்த ஆட்சியிலும் அதிகாரிகள் மாற்றம் என்பது சகஜம்தான். ஆனால் தற்போது நிலை என்ன? கலெக்டர்கள் எந்த அளவிற்கு பந்தாடப்படுகிறார்கள்? காவல்துறை அதிகாரிகளின் மாற்றம் எந்த அளவிற்கு நடைபெறுகிறது? ஏன் முதலமைச்சருடைய பாதுகாப்பு அதிகாரிகளின் நிலை என்ன?

கோவை மாவட்ட கலெக்டர் கருணாகரன் ஆறே மாதங்களில் மாற்றப்பட்டார். நேர்மையாக அங்கே பணியாற்றி வந்ததாகவும், நிர்வாகக் காரணங்களுக்காக இல்லாமல், ஆளுங்கட்சிப் பிரமுகரின் நிர்ப்பந்தம் காரணமாக அவரை விடுமுறையில் செல்லுமாறு கட்டாயப்படுத்தப்பட்டு மாற்றப்பட்டு விட்டார் என்றும் ஏடுகளிலே செய்தி வந்தது. கோவை கலெக்டராக அரிகரன் என்பவரை நியமனம் செய்து அவர் அங்கே சென்று பொறுப்பேற்றுக் கொண்டு சில நாட்கள்தான் பணியாற்றினார். அதற்குள் அவரை மீண்டும் பழைய பதவிக்கே மாற்றி விட்டு, ஏற்கனவே அந்த மாவட்டத்தில் பணியாற்றி, கட்டாய விடுப்பில் செல்லுமாறு பணிக்கப்பட்ட கருணாகரனை கோவை கலெக்டராக பணி நியமனம் செய்துள்ளார்கள்.

காஞ்சிபுரம் மாவட்ட கலெக்டராக இருந்த சிவசண்முகராஜா, ஒருசில மாதங்கள் மட்டுமே பணியாற்றிய நிலையில் ஜனவரி மாதத் துவக்கத்தில் கட்டாய விடுப்பில் செல்ல அறிவுறுத்தப்பட்டார். அந்தப் பதவிக்கு சென்னை மாநகராட்சி வருவாய் மற்றும் நிதிப் பிரிவு துணை கமிஷனராக இருந்த ஹனிஷ் சாப்ரா நியமிக்கப்பட்டுள்ளார்.

"தானே" புயலால் பெரிதும் பாதிக்கப்பட்ட கடலூர் கலெக்டர் திருமதி அமுதவள்ளி 20.1.2012 அன்று நிவாரணப் பணிகள் வேகமாக நடைபெற்ற நேரத்தில் திடீரென்று மாற்றப்பட்டார். என்ன காரணம்? நிவாரணப் பணிகள் சரியாக நிறைவேற்றப்பட வில்லை என்று அரசே கருதிய காரணத்தால்தானே அந்தக் கலெக்டர் சில மாதங்களிலேயே மாற்றம் செய்யப்பட்டார்?

சென்னை கலெக்டராக திருமதி எஸ். மதுமதி நியமிக்கப்பட்டார். The post of Chennai Collector has been lying vacant for more than six months. This could well be the longest period when the seat has remained unoccupied. V. Shobana, the last Chennai Collector, was transferred to Karur on June 6. 2011. ஆறு மாதத்திற்கு மேலாக தலை நகர் சென்னைக்கு கலெக்டர் நியமிக்கப்படவில்லை. மாவட்ட வருவாய்த்துறை அலுவலரே கலெக்டர் பொறுப்பு வகித்தார். அவர் தோட்டக் கலைக்குச் சொந்தமான நிலத்தை தனியார் ஒருவருக்கு தாரை வார்த்தார். அதனை முரசொலியில் நான் எழுதிக் காட்டிய பிறகு மீண்டும் மீட்கப்பட்டது. பிறகு கடந்த வாரம் சென்னை மாவட்டத்திற்கு திருமதி மதுமதி புதிய கலெக்டராக அறிவிக்கப்பட்டு, அவர் பொறுப்பேற்றுக் கொண்டார். என்ன நிலை? சென்னை மாவட்டக் கலெக்டராக மதுமதி பொறுப்பேற்று இரண்டு நாட்கள் கூட ஆகவில்லை. அவரை அந்தப் பொறுப்பிலிருந்து நீக்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் இத்தகைய சாதனைகளை வேறு எந்த ஆட்சியிலாவது காண முடியுமா?

திருமதி டி. சபீதா, ஐ.ஏ.எஸ்., அவர்கள் ஏற்கனவே அ.தி.மு.க. ஆட்சியில், முதல் அமைச்சருக்கு நெருக்கமாக பணியாற்றியவர் என்று சொல்லப்பட்ட போதிலும், தி.மு. கழக ஆட்சியிலே அவரை பள்ளிக் கல்வித் துறைச் செயலாளராக நியமனம் செய்தோம். ஆனால் அ.தி.மு.க. ஆட்சியிலே இவர் திடீரென மாற்றம் செய்யப்பட்டார். எத்தனை மாதங்கள்? ஒரு சில மாதங்களில் அவரை மீண்டும் பள்ளிக்கல்வித் துறை செயலாளராக மாற்றியிருக்கிறார்கள். முதலில் அவரை ஏன் மாற்றினார்கள்? பிறகு ஏன் அதே பதவியில் நியமனம் செய்தார்கள்?

அதுபோலவே, தமிழகத்தில், 6 பல்கலைக் கழகங்களில் தற்போது துணைவேந்தர் பதவிகள் காலியாக உள்ளன. துணை வேந்தர்களை நியமிப்பதற்கான தேர்வுக் குழுக்கள் இன்னும் அமைக்கப்பட வில்லை. இதுபோல், தமிழக உயர் கல்வி மன்றத் தில், துணைத்தலைவர், உறுப்பினர் - செயலர், உறுப்பினர்கள் இல்லாமல், வெற்றுக் கூடாரமாக உள்ளது. மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் பதவி மட்டுமல்ல, பதிவாளர் பதவியும் காலியாக உள்ளது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் பதிவாளர் பதவி காலியாக உள்ளது. கல்லூரிக் கல்வி இயக்குனர்,

மண்டல இயக்குநர் பதவிகளும் காலியாகவே உள்ளன. இத்தகைய சாதனைகளை வேறு ஆட்சியிலே காண முடியுமா? முடியாதுதான்.

ஆட்சிப் பொறுப்பேற்றதும் 3-6-2011 அன்று படித்த ஆளுநர் உரையில்; அ.தி.மு.க. அரசு தேவையான நடவடிக்கைகளை கடுமையாக மேற்கொண்டு சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி, மக்கள் அச்சமின்றி வாழ்க்கை நடத்த வழிவகுக்கும் என்று சொன்னார்கள். என்ன நிலை?

தமிழகத்தில் கொலை நடக்காத நாட்கள் உண்டா? கொள்ளை நடக்காத நாட்கள் உண்டா? வழிப்பறி, செயின் பறிப்பு எத்தனை, எத்தனை?

மே 13, 2011 முதல் அக்டோபர் 14, 2011 வரையில் 154 கொலைகள், 165 கொள்ளைகள், 102 செயின் பறிப்புகள், 27 வழிப்பறிச் சம்பவங்கள் தமிழகத்தில் நடைபெற்றுள்ளன.

கடந்த மாதம் வரை முதலமைச்சருக்கு மிக மிக வேண்டியவர்கள். ஆண்டுக்கணக்கில் அவருடன் ஒன்றாக ஒரே வீட்டில் இருந்தவர்கள். தற்போது அவருக்கு வேண்டியவர்கள் எல்லாம் தேடப்படுவோர் பட்டியலில்! அவர்கள் மீது தொடர் குற்றச்சாட்டுகள்! அந்தக் குற்றச்சாட்டுகளுக்குக் காரணம் என்ன? முதலமைச்சருக்கு வேண்டியவர்கள் என்பதால் அந்தக் குற்றங்களைச் செய்தார்கள் என்றால், அந்தக் குற்றச்சாட்டுகளில் முதலமைச்சருக்கும் தொடர்பு இருக்கிறதா இல்லையா? இத்தகைய சாதனை வேறு எந்த ஆட்சியிலேயாவது நடைபெற்றது உண்டா?

முதலமைச்சர் பொறுப்பிலே உள்ள - தமிழகக் காவல் துறையின் திறமைக்கு ஒரே ஒரு உதாரணம் - முதலமைச்சருக்கு மிகவும் வேண்டிய - தற்போது வேண்டாத - திவாகரன் என்ற தனிப்பட்ட ஒருவரைத் தேடுவதற்காக 2 கூடுதல் கண்காணிப்பாளர்கள், 4 துணை கண்காணிப்பாளர்கள், 9 இன்ஸ்பெக்டர்கள் என்று 9 தனிப்படைகள் அமைக்கப்பட்டு கடந்த ஒரு மாதமாகத் தேடி வருவதாகவும், இதுவரை கண்டுபிடிக்கப்பட வில்லை என்றும் சொல்லப்படுகிறது. இதே தவறு தி.மு.கழக ஆட்சியிலே நடைபெற்றிருந்தால், ஜெயலலிதா எத்தனை முறை "கையாலாகாத மைனாரிட்டி அரசு" என்று அறிக்கை வெளியிட்டிருப்பார்? பன்னீர்தான் பதில் அளிக்க வேண்டும்!

ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த பிறகு கடந்த ஏழெட்டு மாதங்களில் செய்த சாதனைகளைப் போல வேறு ஒரு அரசைக் காட்ட முடியுமா? இதோ சில சாதனைகள் -

1. தலைமைச் செயலகத்தை இடமாற்றம் செய்தது.
2. பாவேந்தர் செம்மொழித் தமிழாய்வு நூலகத்தை மாற்றியது.
3. சமச்சீர் கல்வித் திட்டத்தை ரத்து செய்து சட்டம் இயற்றியது.
4. தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு என்பதை மாற்றியது.
5. அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தை குழந்தைகள் நல மருத்துவ மனையாக மாற்றப் போவதாக அறிவித்தது.
6. முத்தமிழ்ப் பேரவைக்கு இடம் கொடுத்ததை ரத்து செய்தது.
7. மேலவை ரத்து தீர்மானம்.
8. மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை ரத்து செய்தது.
9. குடிசை வாழ் மக்களுக்கான காங்கரீட் வீடு வழங்கும் திட்டத்திற்கு மூடுவிழா நடத்தியது.
10. கழக முன்னணியினர் மீது நடவடிக்கை - குண்டர்கள் சட்டம் - முன்னணியினர் இல்லங்களில் சோதனை நடவடிக்கைகள்.
11. ஆட்சிக்கு வந்தவுடன் வரிகள் - பால்விலை உயர்வு - பேருந்துக் கட்டணம் உயர்வு - மின் கட்டணத்தை உயர்த்த பரிந்துரை.

பல ஆய்வுகளுக்குப் பிறகு, பல குழுக்கள் பரிந்துரைக்குப் பிறகு நிறைவேற்றப்பட்ட சமச்சீர் கல்வி பாடத் திட்டத்தை 200 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து அச்சடிக்கப்பட்ட சமச்சீர் கல்வி பாடத் திட்டப் புத்தகங்களையெல்லாம் நாங்கள் ஏற்க மாட்டோம், பழைய பாடத் திட்டம் தான் என்று சொன்னதோடு நிற்காமல் சட்டப் பேரவையிலேயே அவசர அவசரமாக சட்டத் திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றியது! இதை எதிர்த்து

உயர்நீதி மன்றத்தில் வழக்கு நடை பெற்றபோது, நீதியரசர்கள் எஸ். ராஜேஸ்வரன், திருமதி கே.பி.கே. வாசுகி ஆகியோர் "சமச்சீர் கல்விச் சட்டத்தின் நோக்கம் மிகத் தெளிவானது, சிறந்த வல்லுநர்களைக் கொண்ட ஆய்வுக்குழு விரிவாக ஆராய்ந்து, சமச்சீர் கல்வி முறையை அமல்படுத்த பரிந்துரை செய்துள்ளது, அந்தக் குழுவின் பரிந்துரைகளை எளிதாகப் புறக்கணித்து விட முடியாது. இது தவிர, ஏற்கனவே பெரும் தொகை செலவிடப்பட்டுள்ள நிலையில், மேலும் பெரும் தொகையைச் செலவிடுவது அவசியம்தானா? இவை பற்றியெல்லாம் அட்வகேட் ஜெனரல் அரசுக்கு தக்க ஆலோசனைகளை வழங்க வேண்டும்" என்று தெரிவித்தார்கள்.

அதற்குப் பிறகும், தமிழக அரசு இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதி மன்றம் சென்றது. உச்ச நீதி மன்ற நீதியரசர்கள் பி.எஸ். சவுகான், சுதந்திரகுமார் ஆகியோர் அளித்த தீர்ப்பில், "1 மற்றும் 6ஆம் வகுப்புகளுக்குக் கொண்டு வரப்பட்ட சமச்சீர்கல்வி தொடர்ந்து அமல்படுத்தப்பட வேண்டும். அதை இடையில் நிறுத்தினால் குழப்பம் ஏற்படும். 2 முதல் 5ஆம் வகுப்பு வரையும், 7ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரையும் இந்த ஆண்டே சமச்சீர் கல்வியை அமல்படுத்த வேண்டும். அந்தப் பாடத் திட்டத்தில் குறைபாடுகள் இருப்பின்

அதுகுறித்து ஆராய நிபுணர் குழு நியமிக்கப்பட்டு, அந்த நிபுணர் குழு தனது அறிக்கையை 2 வார காலத்தில் சென்னை ஐகோர்ட்டில் தாக்கல் செய்ய வேண்டும்" என்று கூறினார்கள்.

சென்னை ஐகோர்ட்டும் வழக்கை தொடர்ந்து விசாரித்து, உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியும், மற்றொரு நீதிபதியும் அளித்த தீர்ப்பில், "மாநில அரசு அதனுடைய அதிகார வரம்பை மீறியுள்ளது என்று கூறுவதற்கு எங்களுக்கு எந்தவிதத் தயக்கமும் இல்லை. தமிழக அரசு கொண்டு வந்த சட்டத்திருத்தம் செல்லாது. அதை ரத்து செய்கிறோம். சமச்சீர் சட்டத்தின்கீழ் வரும் கல்விக்கான பாடப் புத்தகத்தை மாணவர்களுக்கு உடனடியாக வழங்க வேண்டும்" என்றெல்லாம் கூறினார்கள். இந்தத் தீர்ப்பையும் எதிர்த்து தமிழக அரசு உச்ச நீதி மன்றம் சென்றது. உச்சநீதிமன்றம் தனது இடைக் கால உத்தரவில் ''சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு தடை விதிக்க முடியாது, 2-8-2011க்குள் சமச்சீர் பாடப் புத்தகங்களை விநியோகிக்க வேண்டும்"

என்று தெரிவித்தது. அதையும் தமிழக அரசு மதித்து சமச்சீர் பாடப் புத்தகங்களை விநியோகிக்கவில்லை. தமிழக அரசின் வழக்கறிஞர் சமச்சீர் கல்வியை நடப்பாண்டிலேயே அமல்படுத்துவதற்கான சாத்தியங்கள் இல்லை என்றார். உச்ச நீதிமன்றத்தில் சமச்சீர் கல்வி வழக்கின் இறுதி விசாரணை, நீதிபதிகள் பாஞ்சல், தீபக் வர்மா மற்றும் சவ்ஹான் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் நடைபெற்றது. எடுத்த எடுப்பிலேயே, நீதிபதிகள், "தி.மு.க. அரசின் சமச்சீர் கல்விச் சட்டம் செல்லும் என்று 2010 ஆம் ஆண்டே உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்த பின்னரும் - சமச்சீர் கல்வித் திட்டத்தை நிறுத்தி வைக்க தமிழக அரசு, சட்டத்திருத்தம் கொண்டு வந்தது ஏன்? அதற்கான அவசியம் என்ன?" என்று கேட்டனர். அரசுக்காக வாதாடிய வழக்கறிஞர் பி.பி. ராவ் அவர்களே, "தமிழக அரசுக்கு சரியான சட்ட ஆலோசனை வழங்கப்படவில்லை, தேவையில்லாத சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து பிரச்சினையில் சிக்கிக் கொண்டு விட்டோம்" என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். நீதிபதிகள் இறுதியாக வழங்கிய தீர்ப்பில், சமச்சீர் கல்வியை பத்து நாட்களுக்குள் அமல்படுத்த வேண்டும், எந்தவொரு சட்டத்தையும் ஆட்சி மாற்றம் காரணமாக மாற்றக் கூடாது, எதிர்கால விளைவுகளைக் கருத்தில் கொண்டே எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும், அரசியல் கட்சிகள் தங்களது விருப்பு வெறுப்புகளுக்காக கல்வி முறையை மாற்றக் கூடாது என்று கூறி, தமிழக அரசின் மனுவினை தள்ளுபடி செய்தார்கள். ஜெயலலிதாவிற்கு விழுந்த முதல் சம்மட்டி அடியாகவே இந்தத் தீர்ப்பு கருதப்பட்டது. இதுபோன்ற சான்றிதழ் வேறு எந்த அரசுக்காவது பதவிக்கு வந்த ஆறே மாதங்களில் கிடைத்தது உண்டா? இது ஒரு சான்றிதழ்தானா?

பேரறிஞர் அண்ணா நினைவு நூலகத்தை ஜெயலலிதா எழும்பூரில் உள்ள டி.பி.ஐ. வளாகத்திற்கு மாற்றப்போவதாக அறிவித்தார். அதுகுறித்த வழக்கில் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி இக்பால், நீதிபதி சிவஞானம் ஆகியோர் அடங்கிய முதன்மை அமர்வு "இப்படி ஒரு அருமையான, நவீன வசதி கொண்ட, நேர்த்தியான முறையில் உருவாக்கப்பட்ட சிறந்த நூலகத்தை இடம் மாற்றம் செய்வது ஏன்? மருத்துவமனை கட்டுவதென்றால் மெரினா கடற்கரையில் கட்டலாமே! அரசின் இந்த முடிவு உள் நோக்கம் கொண்டது" என்று குறிப்பிட்ட

நீதிபதிகள், நூலகத்தை மாற்றுவது குறித்து விளக்கம் அளித்திட அரசுக்கு நோட்டீஸ் அனுப்புமாறு உத்தரவிட்டனர்.

டி.என்.ராஜரத்தினம் நினைவு முத்தமிழ்ப் பேரவைக்காக கழக ஆட்சியில் கொடுக்கப்பட்ட இடத்தைத் திரும்பப் பெறுவதற்கான முயற்சியிலே ஜெயலலிதா அரசு ஈடுபட்டபோது, நீதியரசர் என்.பால் வசந்தகுமார் "ஒரு கையில் நிலத்தைக் கொடுத்து விட்டு, மறு கையில் நிலத்தைப் பறிப்பது எந்த விதத்தில் நியாயம்? ஆட்சிகள் மாறினாலும் அரசு ஒன்றுதானே? ஏன் திடீரென்று இப்படி முடிவெடுத்தீர்கள்? இதை நான் நிறுத்தி வைக்கிறேன். தாங்கள் வேண்டுமானால் பதில் மனுவினை நான்கு வாரத்தில் தாக்கல் செய்யலாம்" என்று கூறி பொதுப் பணித்துறை அனுப்பிய நோட்டீசுக்கு இடைக் காலத் தடை விதித்தார். இப்படி ஜெயலலிதாவின் சாதனைகளை எழுதிக் கொண்டே போகலாம்.

மக்கள் நலப் பணியாளர்கள், 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை, பணி நீக்கம் செய்து தமிழக அரசு கடந்த 8-11-2011ந் தேதி உத்தரவிட்டது. இதற்கான வழக்கில் நீதிபதி சுகுணா, பணி நீக்க உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதித்தார். 21-11-2011 அன்று வழக்கு விசாரணைக்கு வந்தபோது, கோர்ட் உத்தரவு நிறைவேற்றப்படவில்லை, மக்கள் நலப் பணியாளர்களை பணியில் சேர்க்கவில்லை என்று கூறப்பட்டது. உடனடியாக அவர்களை பணியில் சேர்க்க அனுமதிக்க வேண்டுமென்றும், கோர்ட் உத்தரவை நிறைவேற்றியதற்கான அறிக்கையை 23ஆம் தேதி தாக்கல் செய்ய வேண்டுமென்றும் நீதிபதி சுகுணா உத்தரவிட்டார். நீதிபதி சுகுணா பிறப்பித்த உத்தரவை எதிர்த்து தமிழக அரசு மனு தாக்கல் செய்தது. அதனை விசாரித்த தலைமை நீதிபதி இக்பால், நீதிபதி சிவஞானம் ஆகியோர் அடங்கிய முதல் பெஞ்ச், "முதலில் மாதம் 200 ரூபாய் தொகுப்பூதியம் அடிப்படையில், 1990ஆம் ஆண்டு மக்கள் நலப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். 1991ஆம் ஆண்டு அரசு மாறியதால் அவர்கள் நீக்கப்பட்டனர். 1997ஆம் ஆண்டு, அடுத்த அரசு வந்தபின், இவர்கள் 500 ரூபாய் தொகுப் பூதியத்தில் மீண்டும் நியமிக்கப்பட்டனர். 2001ஆம் ஆண்டு அரசு மாறியவுடன் இவர்கள் மீண்டும் பணியிலிருந்து நீக்கப்பட்டனர். 2006ஆம் ஆண்டு அடுத்த அரசு வந்த பின், 1000 ரூபாய் தொகுப் பூதியத்தில் நியமிக்கப்பட்டனர். மக்கள் நலப் பணியாளர்கள்

நியமனம், நீக்கம் என அரசின் விருப்பத்துக்கு ஏற்ப நடந்துள்ளது தெரிகிறது. இவர்கள் அனைவரும் தற்காலிகப் பணியாளர்கள் என வாதத்துக்கு கருதினாலும் கூட கடந்த 20 ஆண்டுகளாக பணியாற்றி உள்ளனர். ஒரு கையெழுத்தில் அவர்களை பணி நீக்கம் செய்ய வேண்டியிருந்தால் நீதியின் கொள்கைப்படியும், சட்டப் படியும் அவர்களை நீக்கும் முன்பு அவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து அரசு கருத்து கேட்கவில்லை. இதைக் கருத்தில் கொண்டுதான் தனி நீதிபதி சுகுணா இந்த வழக்கில் தடை உத்தரவை சரியாகப் பிறப்பித்துள்ளார். அதை நீக்க முடியாது. மக்கள் நலப் பணியாளர்களின் நிலையைப் பார்க்கும்போது கால்பந்து விளையாட்டு போல உள்ளது. உச்சநீதிமன்ற உத்தரவுப்படி சம்பளம் நிர்ணயம் செய்து ஒருவருக்கு அரசு பணி வழங்கிய பிறகு சரியான காரணம் இல்லாமல் அவரை நீக்குவது சட்ட விரோதமானது. இதை வன்மையாகக் கண்டிக்கிறோம். அரசு மாறும் போது மாறி மாறி உத்தரவு பிறப்பிப்பது கடும் கண்டனத்துக்குரியது, வேதனையானது, வருந்தத் தக்கது. எனவே அரசு கோரிக்கையை நிராகரிக்கிறோம். கடந்த ஆட்சியின் திட்டத்தில் மாற்றம் கொண்டு வந்தால் வந்த ஊழியர்களை வேறு பணியில் அமர்த்த வேண்டும், அதை விட்டு விட்டு அவர்களை டிஸ்மிஸ் செய்வது தவறு. இது எந்த விதத்தில் நியாயமானது. இது அரசியல் சார்புடையது என்பது தெரியும். இருந்தாலும் அதற்குள் நாங்கள் தலையிட விரும்பவில்லை'' என்று கூறினார்கள். ஆனால் தமிழக அரசின் சார்பில் இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார்கள். உச்சநீதிமன்றத்தில்

29-11-2011 அன்று நீதிபதிகள் டி.கே. ஜெயின், தவே ஆகியோர் இந்த மனுவை விசாரித்து, "தமிழகத்தில் என்னதான் நடக்கிறது? ஆட்சி மாறும்போது முந்தைய அரசின் திட்டங்களை ரத்து செய்வது ஏன்?" என்று கண்டனம் தெரிவித்தார்கள். இந்தச் சாதனையைப் போல வேறு எந்த ஆட்சியிலாவது நடந்தது உண்டா? இவ்வளவிற்குப் பிறகும் மக்கள் நலப் பணியாளர்களை பணியிலே அமர்த்தாமல் அப்பீலுக்குப் போவேன் என்கிறதே தமிழக அரசு! அந்த ஒரு சாதனை போதாதா?

ஜெயலலிதா, ஆட்சிக்கு வந்ததும் வராததுமாக வரவு செலவுத் திட்டத்தை அவையிலே வைப்பதற்கு முன்பாகவே

தமிழக மக்கள் தலையில் சுமார் 4000 கோடி ரூபாய் அளவிற்கு வரியைச் சுமத்திவிட்டு; அத்துடன் இல்லாமல் இப்போது எல்லா மட்டத்திலும் வரி உயர்வு - பஸ் கட்டண உயர்வு - பால் விலை உயர்வு - என்று பல உயர்வுகளை அறிவித்திருக்கிற சாதனைகள் தான் எத்தனை, எத்தனை? வேறு எந்த ஆட்சியிலாவது எட்டே மாதங்களில் இவ்வளவு சாதனைகளைப் புரிய முடியுமா?

கடந்த காலங்களில் ஜெயலலிதா விடுத்த ஒவ்வொரு அறிக்கையிலும், தமிழ்நாடு மின்வாரியத்தை தி.மு. கழக அரசும், முதல் அமைச்சராக இருந்த நானும் சீர்கேடு அடையச் செய்து விட்டதாக தொடர்ந்து குற்றஞ்சாட்டி விட்டு, தற்போது வரலாற்றில் இல்லாத அளவிற்கு மின் கட்டணங்களை உயர்த்த பரிந்துரை செய்திருக்கும் ஜெயலலிதாவின் சாதனையைப் போல வேறு யாராவது செய்ய முடியுமா?

இந்த ஆட்சியில் நடைபெறும் ஊழல் விவகாரங்களையெல்லாம் இடம் இல்லாததால் பிறகு பட்டியலிடுகிறேன். அரசினால் நடத்தப்படும் "டாஸ்மாக்" பொதுத் துறை நிறுவனத்திற்கு வர வேண்டிய வருவாய் ஆளுங்கட்சியினருக்குத் திருப்பி விடப்படுவதாக கடுமையான குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஆட்சிக்கு வந்த ஆறு மாத காலத்தில் "டாஸ்மாக்" நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராக இதுவரை மூன்று ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மாற்றப்பட்டுள்ளார்கள். அதற்குக் காரணமே ஊழல் தான் என்று சொல்லப்படுகிறது.

"Favouritism Alleged" என்ற தலைப்பில் ஆங்கில நாளிதழ் ஒன்று (26-11-2011) வெளியிட்ட செய்தியில், "Tasmac incurs loss in Tirupur - The State-run Tasmac, which operates retail liquor shops across the State, has allegedly showed favours to ruling party members in awarding bars, unmind ful of the revenue loss it caused. (திருப்பூரில் டாஸ்மாக் நிறுவனத்திற்கு இழப்பு - மாநிலத்தில் சில்லறை மதுபான விற்பனைக் கடைகளை நடத்தி வரும் அரசு நிறுவனமான "டாஸ்மாக்" தனக்கு வரும் இழப்பைப் பற்றிக் கவலைப்படாமல், ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு "பார்" களை வழங்குவதில் சலுகை காட்டுவதாகச் சொல்லப்படுகிறது.)

A reply given to an RTI petition filed by Mr. M. Karthikeyan, President of Tirupur District Bar Owners Association, has revealed that

Tasmac has been incurring Rs. 60 lakh monthly loss in Tirupur alone owing to alleged irregularities in awarding bar tenders. (திருப்பூர் மாவட்ட பார் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் திரு. எம். கார்த்திகேயன் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனு செய்து பெற்ற விவரத்தின்படி திருப்பூர் மாவட்டத்தில் மட்டும் பார் டெண்டர்கள் வழங்கியதில் காட்டப்பட்ட முறைகேடுகளால் "டாஸ்மாக்" நிறுவனத்துக்கு மாதம் ஒன்றுக்கு 60 லட்சம் ரூபாய் இழப்பு ஏற்படுவது வெளிவந்துள்ளது.)

Tirupur district generated a profit of Rs. 61.10 lakh every month from the 250 IMFL shops during the previous fiscal, while it has gone down to Rs. 1.66 lakh per month from the 209 shops under operation in the current financial year, the RTI reply reveals. (தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி கிடைத்துள்ள செய்தி; கடந்த நிதி ஆண்டில் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 250 டாஸ்மாக் கடைகளை டெண்டர் மூலமாக கொடுத்ததில், மாதம் 61.10 லட்சம் ரூபாய் அரசுக்கு இலாபம் கிடைத்து வந்தது. தற்போது இந்த நிதியாண்டில் செயல்பட்டு வரும் 209 கடைகள் மூலம் மாதம் ஒன்றுக்கு 1 லட்சத்து 66 ஆயிரம் ரூபாய் மட்டுமே வருவாய் கிடைக்கும்)

For instance, shops No. 1906, 1923, and 1927 located on P.N. Road, Kovai Main Road and Mangalam Road, have been auctioned for just Rs. 100 more than the upset price. Most of the shops were auctioned for less than Rs. 1000 more than the upset price, the RTI reply revealed.

(உதாரணமாக, பி.என். சாலை, கோவை மெயின் சாலை, மங்கலம் சாலை ஆகிய இடங்களில் உள்ள டாஸ்மாக் கடை எண்கள் 1906, 1923, 1927 ஆகியவை நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்ச விலையை விட வெறும் 100 ரூபாய் அளவிற்கே ஏலம் விடப்பட்டுள்ளது. பெரும்பாலான கடைகளை ஏலம் விடப்பட்ட போது குறைந்த பட்ச விலையை விட ஆயிரம் ரூபாய்க்குக் குறைவான தொகைக்கே ஏலம் விடப்பட்டுள்ளன)

Mr. Karthikeyan attributed the loss to deliberate undervalue of the auction price by local Tasmac officials to favour ruling party members. Of the 41 shops not auctioned this year, most were withheld only to favour nearby shops awarded to members of the ruling AIADMK,

he charged, adding that several applications were received after the deadline on the night before opening the tenders. Those who questioned the irregularities were booked under charges of bootlegging. (Deccan Chronicle-26/11/2011).

(உள்ளூர் அ.தி.மு.க. நிர்வாகிகளுக்கு சாதகமாக டாஸ்மாக் அதிகாரிகள் ஏலத் தொகையை வேண்டுமென்றே குறைத்து மதிப்பிட்டதால் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று திரு. கார்த்திகேயன் கூறுகிறார். 41 கடைகளை ஏலம் விடாததற்குக் காரணம், அவற்றின் அருகில் அ.தி.மு.க. வினரின் "பார்"கள் இருப்பதால், அவர்களுக்கு சாதகம் செய்வதற்காகவே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குற்றம் சாட்டுகிறார். மனுக்கள் வந்து சேர வேண்டிய காலத்திற்குப் பிறகு டெண்டர் திறக்கப்படுவதற்கு முந்தைய நாள் இரவோடு இரவாக பல விண்ணப்பங்கள் பெறுவதற்காகவும் இந்த முறைகேடுகளை தட்டிக் கேட்டவர்களை கள்ளச் சாராயம் காய்ச்சி விற்பதாக பொய்க் குற்றச்சாட்டில் கைது செய்துள்ளதாகவும் அவர் தெரிவித் திருக்கிறார்.)

நெடுஞ்சாலைத் துறையிலே நடைபெற்ற டெண்டர் பற்றி ஆளுங்கட்சி ஆதரவுப் பத்திரிகை ஒன்றில் 27-11-2011 வெளியிட்ட செய்தியில், "விழுப்புரம் நெடுஞ்சாலைத் துறை கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகத்தில், 24, 25 ஆம் தேதிகளில் விழுப்புரம், கடலூர், அரியலூர் மாவட்டங்களில் சாலைப் பணிகளுக்கான டெண்டர் நடந்தது. மாலை 3 மணியுடன் டெண்டர் நேரம் முடிந்தது. இருப்பினும் மாலை 5 மணிக்கு விழுப்புரம் கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகத்தில், அ.தி.மு.க. பிரமுகர்களின் கார்கள் அணிவகுத்து நின்றன. டெண்டர் நேரம் முடிந்தும், கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகத்தில் கூட்டம் அதிகம் இருந்ததால், ஒரு பத்திரிகை "போட்டோகிராபர்" படம் எடுத்தார். இதைப் பார்த்த கண்காணிப்புப் பொறியாளர் சிவக்குமார் மற்றும் அலுவலகப் பணியாளர்கள், டெண்டர் எடுக்க வந்திருந்த கட்சிப் பிரமுகர்களுடன் சேர்ந்து போட்டோகிரா பரை, அறைக்குள் வைத்து கதவைப் பூட்டினர். புகைப்படத்தை "டெலீட்" செய்யுமாறு கூறி மிரட்டினர். டெண்டர் நேரம் முடிந்து இரண்டு மணி நேரமாகியும் அ.தி.மு.க. பிரமுகர்கள், கண்காணிப்புப் பொறியாளர் சிவக்குமார் அறையில், தனிமையில் பேசியதை போட்டோ எடுத்ததால், ஆத்திரமடைந்த அதிகாரிகள்,

போட்டோகிராபரை மிரட்டியதோடு, படங்களை "டெலீட்" செய்ய வைத்து வெளியே அனுப்பினர்.

இரு தினங்கள் நடந்த டெண்டரில், அமைச்சர்களின் பரிந்துரை எனக் கூறி, சிலருக்கு பணியை வழங்க முடிவு செய்தனர். இதனால் மற்ற விண்ணப்பதாரர்களை அழைத்து, அடுத்த முறை உங்களுக்குப் பணி வழங்குகிறோம் என்று கூறி நிராகரித்தனர். சிலருக்கு அதிகாரிகளே குறிப்பிட்ட தொகை கொடுக்கச் செய்து, அவர்களை சரிக்கட்டினர். ஸ்பீடு போஸ்டில் வந்த 165 தபால்களை நேரத்தில் வாங்கி, டெண்டரை முறையாக நடத்தாமல் நிராகரித்து, போட்டியின் பலத்தைக் குறைத்து, தங்கள் விருப்பத்திற்கேற்ப டெண்டரை ஒதுக்கியுள்ளனர். இதனால் அரசுக்கு கூடுதலாக பல கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என, மூத்த காண்ட்ராக்டர்கள் தெரிவித்தனர். டெண்டரில் கணிசமான தொகை கை மாறியதால், தரமான முறையில் சாலை பணிகள் நடக்குமா என்பதிலும் சந்தேகம் எழுந்துள்ளது. மேலும் அந்த இதழில் செய்திகள் தொடர்ந்து எழுதப்பட்டுள்ளது. அரசின் செயல்பாடுகளுக்கு இதெல்லாம் ஒருசில உதாரணங்கள்.

திருக்கோவிலூர் அருகில் மண்டபம் என்ற ஊரில் இருளர் இனத்தைச் சேர்ந்த நான்கு பெண்களை நள்ளிரவில் போலீசார் பலாத்காரம் செய்ததை யொட்டி, சென்னை ஐகோர்ட்டில் வக்கீல் புகழேந்தி புகார் மனு அளித்தார். மனுவை விசாரித்த தலைமை நீதிபதி இக்பால், நீதிபதி சிவஞானம் ஆகியோர் "போலீசாரின் செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம். பெண்களை நள்ளிரவில் கைது செய்தது தவறு என்று அரசு வக்கீல் கூறியதை ஏற்றுக் கொள்கிறோம். பாதிக்கப்பட்ட பெண்களை உடனே மருத்துவ சோதனைக்கு அனுப்பாமல் ஒரு மாதத்துக்கு பின்பு அனுப்புவீர்களா? உடனடியாக அனுப்பி அதன் அறிக்கையை கோர்ட்டில் தாக்கல் செய்ய வேண்டும் என விழுப்புரம் எஸ்.பி.க்கு உத்தரவிடுகிறோம். 2 வாரத்தில் அரசு விரிவான பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும்." என்று கூறினார்கள்.

பரமக்குடியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சிக்கு திரு. ஜான் பாண்டியன் வரவிருந்ததை தேவையில்லாமல் தமிழக அ.தி.மு.க. அரசு தடுத்து தடை விதித்தது. அப்பாவிப் பொதுமக்கள் மீது குறிப்பாக ஆதிதிராவிடர்கள்மீது காவல் துறையினரின் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடு நடத்தியதில், அந்த

இடத்திலேயே 6 பேர் அநியாயமாக சுட்டுக் கொல்லப்பட்டனர். ஏராளமானவர்கள் படுகாயமடைந்து இன்னமும் பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சையும் பெற்று வருகின்றனர். இதுபோன்ற சாதனை வேறு எந்த ஆட்சியிலாவது உண்டா?

இதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல், அ.தி.மு.க. அரசு கழகத்தினர் மீதும், முன்னாள் அமைச்சர்கள் மீதும் பொய் வழக்குகளைப் புனைந்து கைது நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. வழக்குகளைப் போடுகிறது. அது போன்ற சாதனையைத்தான் வேறு எந்த ஆட்சியாவது செய்திட முடியுமா?

அ.தி.மு.க. ஆட்சியில் காவல் துறை விவகாரங்களில் கட்சிக்காரர்கள் தலையிடமாட்டார்கள் என்று முதலமைச்சர் ஜெயலலிதா கூறினார். அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்புக்கு வந்த ஒரு மாதத்திற்குள் சென்னையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி. சென்னையிலே 12-6-2011 அன்று நுங்கம்பாக்கம் காவல் நிலையத்தில் ஆளுங்கட்சியைச் சேர்ந்த சட்டப் பேரவை உறுப்பினர் ஒருவரும், ஏன் அமைச்சர் ஒருவரும் காவல் நிலையத்திற்கே அதுவும் இரவிலே சென்று காவல் நிலையத்தில் காவல் துறையினரால் பிடித்து வைக்கப்பட்டிருந்த ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஏழு பேரை வீட்டிற்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். காவல் துறை துணை கமிஷனர் மீது ஒரு அமைச்சரே புகார் கூறியிருக்கிறார். நியாயமாக நடவடிக்கை எடுத்த காவல் துறை அதிகாரி ஒரே நாளில் பட்டாலியனுக்கு மாற்றப்பட்டு விட்டார். என்னே நியாயம்? இந்த ஒரு சாதனை போதாதா?

இப்படி நான் எழுதிக் கொண்டே போகலாம்! எழுதாமல் இருக்கலாம் என்றுதான் எண்ணினேன். அம்மையார், பேரவையில் சாதனை பற்றி சவால் விட்டதாக ஏடுகள் எல்லாம் எழுதிய காரணத்தால், உடனடியாக என் நினைவுக்கு வந்தவைகளை இங்கே பட்டியலிட்டுள்ளேன். இந்த ஆட்சியின் சாதனைகளில் இது ஒரு துளிதான்! விஷம்; ஒரு துளி போதாதா?

அன்புள்ள,

மு.க.

3-2-2012

3607. அசந்துதான் போனார்கள்!

உடன்பிறப்பே,

முதலமைச்சர் ஜெயலலிதா ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு ஒன்றரை மணி நேரம் பதிலளித்து உரையாற்றியிருக்கிறார் - இல்லையில்லை - பதில் உரையை படித்திருக்கிறார். உரையின் தொடக்கத்திலேயே "அவை நடவடிக்கையில் கலந்துகொள்ளாத ஒரு மூத்த சட்டமன்ற உறுப்பினர்" என்று என்னை மறைமுகமாகத் தாக்கி, அதற்கு பதில் கூற தி.மு. கழக உறுப்பினர்களுக்கு அனுமதி மறுத்து, அவர்களையெல்லாம் வெளியேற்றிவிட்டு - அதற்கு முன்பாகவே இரண்டு நாட்களுக்கு முன்பு அவையின் எதிர்க்கட்சித் தலைவர் மீது அவசர அவசரமாக உரிமைப் பிரச்சினை கொண்டு வந்து, ஆளுநர் உரைமீது கூட எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றுவதற்கான வாய்ப்பினை வழங்காமல் - எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் வழங்கப்பட்ட கார், போலீஸ் பாதுகாப்பு போன்றவைகளைக் கூட பெருந்தன்மையாக அனுமதிக்காமல் - அவர்களையெல்லாம் அவைக்கு வராமல் செய்துவிட்டு - எதிர்த்துக் கேள்வி கேட்க யாரும் இல்லாத நிலையில் தனது பதில் உரையை முதலமைச்சர் ஆற்றி முடித்திருக்கிறார்.

பேச்சின் தொடக்கத்தில், "தோற்றது கழகமல்ல, வாக்காளர்களாகிய நீங்கள்"தான் என்று காஞ்சிபுரம் வீர வணக்க நாள் பொதுக் கூட்டத்தில் நான் பேசியதைக் குறிப்பிட்டு, அது தமிழக வாக்காளர்களையும், சட்டமன்றத்தையும் கொச்சைப்படுத்தி பேசியதாகச் சொல்லியிருக்கிறார். நான் சட்டமன்ற நடவடிக்கைகளில் கலந்துகொள்ளவில்லை என்பதைச் சுட்டிக்காட்டும் ஜெயலலிதா எதிர்க்கட்சியாக இருந்த போது ஓரிரு நாட்கள் மட்டுமே அவையின் நடவடிக்கைகளில் பங்கேற்றார் என்பதை தமிழகம் அறியும். இன்றைய தினம் வீம்புக்காக பழைய கட்டிடத்திலேயே அவையை நடத்துவதால், நல்ல உடல்

நலத்தோடு இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களே, உள்ளே நடந்து சென்று தங்கள் இருக்கைகளில் அமர முடியாமல் தவிக்கின்ற போது, எனது உடல் நிலையைக் கருத்தில் கொண்டால், பேரவைக்குள் சக்கர நாற்காலியில் சென்றமர்ந்து உரையாற்றுவதற்கான வசதி இல்லை என்பதையும் அவை உறுப்பினர்களே நன்கறிவார்கள். அவையில் நின்று கொண்டும், உட்கார்ந்து கொண்டும் பேசிய அம்மையார் குறிப்பிட்டுள்ள எனது காஞ்சிபுரம் பொதுக் கூட்டப் பேச்சில் வாக்காளர்களையும், சட்டமன்றத்தையும் எங்கே கொச்சைப்படுத்தியிருக்கிறேன். எனது காஞ்சிப் பேச்சில் இன்றைய ஆளுங்கட்சியைப் பற்றிக் கூட நான் எதுவும் கூறவில்லையே! மொழிப் போராட்டங்கள் பற்றித்தான் பேசினேன். ஆனால் நான் 2-2-2012 அன்று எழுதிய "உடன்பிறப்பு மடலில்" ஆளுநர் உரை பற்றி எழுதும்போது, இரண்டு பக்கங்களுக்கு அ.தி.மு.க. ஆட்சியின் தவறுகளையெல்லாம் பட்டியலிட்டிருக்கிறேனே, அதற்கெல்லாம் முதல் அமைச்சரின் பதில் எங்கே? அமைச்சரவை மாற்றம், அதிகாரிகள் மாற்றம், நீதிமன்றங்களின் தீர்ப்பு, பேருந்துக் கட்டண உயர்வு, பால் விலை உயர்வு, டாஸ்மாக் ஏலத்தில் நடைபெற்ற முறைகேடு, காவல் துறையினரே ஈடுபட்ட பாலியல் தவறுகள் என்றெல்லாம் சுட்டிக்காட்டியிருந்தேனே; அதற்கெல்லாம் முதல் அமைச்சரின் விளக்கம் என்ன? அந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்லாமல் நான் அவைக்கு வரவில்லை என்றெல்லாம் சொல்வதா பதில்?

நான் ஏதோ கொச்சைப்படுத்தி பேசியதாக முதலமைச்சர் சொல்லுகிறார்! ஆனால் அவரது நேற்றைய பேச்சிலேயே நான் அளித்த பேட்டியில், "இந்த மாதிரியான நேரங்களில் எந்த அரசாக இருந்தாலும், அந்த அரசோடு ஒத்துழைக்க வேண்டும் என்பதுதான் எதிர்க்கட்சியின் பணி என்று கருதுபவன் நான். எனவே அந்தப் பணியை முறையாகச் செய்திருக்கிறேன்" என்று கடலூரில் நான் கூறியதையும் குறிப்பிட்டிருக்கிறார். அது அண்ணா அவர்கள் எனக்குக் கற்றுக் கொடுத்த அரசியல் நாகரிகம். ஆனால் நான் சட்டமன்றத்திற்கே வர முடியாத நிலையை உருவாக்கிவிட்டு, அதையே கிண்டல் செய்து, என்னைத் தாக்கிப் பேரவையிலே பேசியிருப்பது இன்றைய முதலமைச்சர் கற்ற நாகரிகம்.

அவரது நீண்ட உரையில் கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் "தானே" புயல் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சிறப்பு தொகுப்புத் திட்டம் ஒன்றை, இதுபோன்று புயல், வெள்ளம்

ஏற்படுகின்ற நேரங்களில் எல்லாம் வழங்கப்படும் சலுகைகளை அறிவித்திருக்கிறார். அதிலேகூட 2000, 2008ஆம் ஆண்டுகளில் தி.மு. கழக ஆட்சியில் சிறிய இயற்கை சீற்றங்கள் ஏற்பட்ட போது செய்யப்பட்ட நிவாரண உதவியோடு ஒப்பிட்டுக் காட்டி தற்போது மிக அதிக அளவில் நிவாரண பணிகள் மேற்கொள்ளப்படுவதாகச் சொல்லியிருக்கிறார். எப்படியோ பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் கிடைப்பதை தி.மு. கழகம் வரவேற்கவே செய்கிறது.

அடுத்து முதலமைச்சர் ஜெயலலிதா தனது பதில் உரையில் கூடங்குளம் அணு மின் நிலையம் பற்றி அப்பகுதி மக்களிடையே நிலவி வரும் எண்ணங்கள் மற்றும் அச்ச உணர்வுகள் குறித்து மாநில அரசுக்கு அறிக்கை அளிக்கும் வகையில் மாநில அரசால் ஒரு வல்லுநர் குழு உடனடியாக நியமிக்கப்படும் என்று கூறியிருக்கிறார். ஆனால் இதே ஜெயலலிதா

19-9-2011 அன்று பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் இந்தப் பிரச்சினையில் சுமுகத் தீர்வு ஏற்படும் வரை, கூடங்குளம் அணு மின் நிலையத்தில் பணிகள் எதையும் தொடர வேண்டாம் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உரிய அறிவுரைகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். தற்போது மாநில அரசால் ஒரு வல்லுநர் குழுவினை உடனடியாக நியமிக்கப்படும் என்று அறிவித்துள்ள ஜெயலலிதா, அப்போதே இந்தக் குழுவினை அமைத்திருக்கலாம் அல்லவா? போராடுகின்ற மக்களை ஏமாற்றுவதற்காக அப்போது பிரதமருக்கு மாநில அரசின் சார்பில் கடிதம் எழுதப்பட்டதா? இப்போதும் அவர்களை ஏமாற்றுவதற்காகத்தான் மாநில அரசின் சார்பில் வல்லுநர் குழுவினை அமைக்கப் போவதாக ஜெயலலிதா அறிவித்திருக் கிறாரா? அது மாத்திரமல்ல; கூடங்குளம் போராட்டக் குழுவினரும், மத்திய அரசின் சார்பாக, மத்திய அமைச்சர் மாண்புமிகு நாராயண சாமி அவர்களும் முதல் அமைச்சரை சந்தித்த பிறகு, தமிழக அமைச்சரவை 22-9-2011 அன்று கூடி கூடங்குளம் அணு மின் நிலையம் பற்றிய அந்தப் பகுதி மக்களின் அச்சம் தீர்க்கப்படும் வரை அணு மின் நிலையப் பணிகளை நிறுத்தி வைக்குமாறு பிரதமரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானத்தை நிறைவேற்றினார்களே, அதுவும் அந்தப் பகுதி மக்களை ஏமாற்றுவதற்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானமா?

அடுத்து தனது பதிலுரையில் முதலமைச்சர் ஜெயலலிதா ஜூன் மாதம் முதல் மின் பற்றாக்குறை படிப்படியாகக் குறையும் என்றும், அடுத்த ஆண்டு மத்தியில் மின் பற்றாக்குறை முழுவதுமாக நீக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறார். அ.தி.மு.க. தேர்தலுக்கு முன்பாக தேர்தல் அறிக்கையில் தாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றால் நான்கு மாதங்களில் மின்வெட்டு இல்லாமல் செய்வோம் என்றார்கள். ஆனால் தற்போது அடுத்து ஆண்டு மத்தியில் மின் பற்றாக்குறை முழுவதையும் நீக்குவோம் என்கிறார்கள். கடந்த ஆண்டு ஆளுநர் உரைக்குப் பதிலளித்த போதும் முதலமைச்சர் ஜெயலலிதா நீண்ட நேரம் மின் தட்டுப்பாட்டைப் பற்றித்தான் பேசி அதற்கு நான் விரிவாக அப்போதே "வருமா; எதிர்காலத்தில் மின் பற்றாக்குறை?" என்ற தலைப்பில் 18-6-2011 அன்றே "முரசொலி"யில் எழுதியிருந்தேன். தற்போதும் அதே கருத்துக்களைத்தான் முதல் அமைச்சர் மீண்டும் பேசியிருக்கிறார். கடந்த ஐந்தாண்டுகளில் தி.மு.க. அரசு மின் திட்டங்களைச் செயற்படுத்தியிருந்தால் மின் பற்றாக்குறை ஏற்பட்டிருக்காது என்கிறார் ஜெயலலிதா.

2006ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சி அமைந்த பிறகு மின் உற்பத்திக்காக என்னென்ன செய்யப்பட்டது என்று விளக்குகிறேன்.

எண்ணூர் அனல் மின் நிலைய இணைப்பு மூலமாக 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஒன்று 8-12-2006இல் 3 ஆயிரத்து 136 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது; அதன் உற்பத்தி 2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் தொடங்கும்.

மேட்டூர் அனல் மின் நிலையத்தில் 3 ஆயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக்கூடிய ஒரு திட்டம் 2-5-2007இல் தொடங்கப்பட்டது; அதன் உற்பத்தி விரைவில் இயக்கத்திற்கு வரும்.

வடசென்னை அனல் மின் நிலையத்தில் 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக்கூடிய வகையில் 2 ஆயிரத்து 475 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் 26-6-2007இல் தொடங்கப்பட்டது; இதன் உற்பத்தி விரைவில் நடைமுறைக்கு வரும்.

உடன்குடியில் பி.எச்.ஈ.எல்., மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் இணைந்து கூட்டுத் திட்டத்தின் கீழ், ஒவ்வொன்றும் 800 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய இரண்டு திட்டங்கள்

15-10-2007இல் 8 ஆயிரத்து 362 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டன. இதில் ஓர் அலகு 2013ஆம் ஆண்டு மார்ச் திங்களிலும்; மற்றொரு அலகு 2013ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலும் நடைமுறைக்கு வந்து உற்பத்தியைத் தொடங்கும்.

வடசென்னை அனல் மின்நிலையத்திலேயே மேலும் 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக் கூடிய ஒரு திட்டம் 2 ஆயிரத்து 475 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 14-7-2008இல் தொடங்கப்பட்டது.

ஆயிரத்து 126 கோடி ரூபாய் செலவில், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளிலிருந்து, 183 மெகாவாட் இணை மின்சாரம் தயாரிக்கக்கூடிய திட்டம்,

14-12-2009இல் தொடங்கப்பட்டது. மொத்தம் 4183 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திட்டங்கள் தி.மு. கழக ஆட்சியில் தொடங்கப்பட்டன. 2006இல் தி.மு. கழக ஆட்சி அமைந்த பிறகு, வருங்காலத் தேவையை கருத்தில் கொண்டு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக 2010-2011இல் 1400 மெகாவாட் மின்சாரமும், 2011-2012இல் 3316 மெகாவாட் மின்சாரமும், 2012-2013இல் 1222 மெகாவாட் மின்சாரமும், 2013-2014இல் 1860 மெகாவாட் மின்சாரமும் - ஆக மொத்தம் 7798 மெகாவாட் மின்சாரம் பல்வேறு மின் திட்டங்களின் மூலமாகக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டது.

இந்தப் புள்ளி விவரங்கள், தி.மு. கழக ஆட்சியில் புதிதாக மின்சாரத்தை உற்பத்திச் செய்யக் கூடிய திட்டங்கள் எதையும் தொடங்கவில்லை என்ற குற்றச்சாட்டிற்குத் தேவையான திடமான விளக்கமாக அமையுமென்று கருதுகிறேன்.

2006ஆம் ஆண்டு தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்த பின்னர் பல்வேறு புதிய தொழிற்சாலைகள் ஆங்காங்கு தொடங்கப்பட்டதால் மின் தேவை அதிகமாயிற்று. 2001ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரை ஆட்சியிலே இருந்த, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலேயே எதிர்காலத்

தேவையைக் கணக்கிட்டு இந்த அளவிற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்குமானால், தற்போது தேவையான மின் உற்பத்தி தொடங்கப்பட்டிருக்கும், தமிழகத்திலே பற்றாக்குறை வந்திருக்காது.

2001 முதல் 2006 வரையிலான தனது ஆட்சிக் காலத்தில், தமிழ்நாடு மின் வெட்டே இல்லாத மாநிலமாக இருந்தது என்று ஜெயலலிதா சொல்லி பெருமைப்பட்டுக் கொள்கிறார். 1991 முதல் 1996ஆம் ஆண்டு வரை ஜெயலலிதா ஆட்சிக் காலத்திலே 16-10-1992 வரை தமிழ்நாட்டில் மின் கட்டுப்பாட்டு முறை இருந்ததா? இல்லையா? அது போலவே 3-10-1982 முதல் 26-7-1984 வரை அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே மின் கட்டுப்பாட்டு முறை இருந்ததா இல்லையா? 2006ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு அதிகத் தொழிற்சாலைகளை தமிழகத்திலே தொடங்காமல் இருந்திருந்தால் மின் கட்டுப்பாட்டு முறை வந்திருக்காதுதான். அதற்காக தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்காமல் ஓர் அரசு இருக்க முடியுமா?

அ.தி.மு.க. ஆட்சியிலே மின் உற்பத்தி திட்டங்களை அதிகமாகத் தொடங்காத காரணத்தால் கழக ஆட்சியிலே மின் பற்றாக்குறை ஏற்பட்டது. ஆனால் தி.மு.கழக ஆட்சியில் மின் உற்பத்தித் திட்டங்களைத் தொடங்கியதன் பயன் நிச்சயமாக வருங்காலத்தில் மின் பற்றாக்குறையை தமிழகத்தில் இல்லாமல் செய்திடும் என்று உறுதியாக நம்பலாம்.

சில நாட்களுக்கு முன்பு பேரவையில் பேசிய முதலமைச்சர் ஆளுநர் உரைக்கு தான் ஆற்றவிருக்கின்ற பதிலுரை கேட்டு எதிர்க் கட்சியினர் அசந்து போவார்கள் என்று கூறியிருந்தார். அது உண்மைதான்! அவரது ஒன்றரை மணி நேர உரை கேட்டு ஆளுங்கட்சியினரே "இதுதானா அசந்துபோக வைக்கக் கூடிய உரை" என்று அசந்துதான் போயிருப்பார்கள்! ஏனென்றால் அவரது உரையைக் கேட்க முக்கிய எதிர்க்கட்சியினரே இல்லையே?

அன்புள்ள,

மு.க.

6-2-2012

3608. திராவிட இயக்க நூற்றாண்டு தொடக்கம்!

உடன்பிறப்பே,

நாள்தோறும் உதயசூரியனோடு சேர்ந்து எழுகின்ற பழக்கமுடைய நான்; இன்றும் அவ்வாறே துயில் நீங்கி எழுந்தேன். என் செவிகளில் தம்பி சுப. வீரபாண்டியன் "கலைஞர் தொலைக்காட்சி"யில் உரை நிகழ்த்தும் குரல் கேட்டது - "ஒன்றே சொல்! - நன்றே சொல்!" என்ற தலைப்பில் அவர் ஆற்றிய உரையில் - திராவிடர் இயக்கச் சரித்திரம் பற்றி குறிப்பிட்டு விட்டு - அந்தத் திராவிடர் சங்கத்தின் நூற்றாண்டு இந்த ஆண்டு பெப்ரவரி முதல் தொடங்குகிறது என்றும், 2013ஆம் ஆண்டு அந்த இயக்கத்தின் நூற்றாண்டு நிறைவு பெறுகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியபோது, மறைந்த தம்பி முரசொலி மாறனும், மற்றொரு தம்பி மறைந்த கே.ஜி. இராதா மணாளனும், மற்றொரு தம்பி க. திருநாவுக்கரசும் எழுதிய "திராவிட இயக்க வரலாறு" எனும் நூலும் நினைவுக்கு வரவே; இது திராவிட இயக்க நூற்றாண்டு என்பதற்கான ஆண்டுக் குறிப்புகள் அந்த நூல்களில் இடம் பெற்றிருக்கிறதா என்பதை அறிந்திட அவற்றைப் புரட்டிப் பார்த்தேன்.

"திராவிட இயக்கத் தோற்றம்" என்ற துணைத் தலைப்பில் மாறன் எழுதியுள்ள "திராவிட இயக்க வரலாறு" எனும் நூலுக்கான முகப்புரையின் முதலாவது அத்தியாயத்தைப் படித்த போது, அதை அப்படியே வார்த்தை பிசகாமல் உனக்கு நினைவூட்ட வேண்டுமென்பதால் இந்தக் கடிதத்தில் அதனை இணைத்து எழுதுகிறேன். மாறன் எழுதியது வருமாறு :-

"இருபதாம் நூற்றாண்டின் துவக்க காலம்...

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், 1912 ஆம் ஆண்டு!

சென்னை நகரில் பணியாற்றிய அரசு ஊழியர்கள் சிலர்,

தாங்கள் பிராமணரல்லாதாராய் இருந்த ஒரே காரணத்தாலேயே உத்தியோகத் துறையில் புறக்கணிக்கப்பட்டதையும், வேலை உயர்வு - போன்ற நியாயமாகக் கிடைக்க வேண்டிய வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டதையும் உணர்ந்து, மனம் புழுங்கிக் கலந்துரையாடவும், இணைந்து செயல்படவும், ஒன்றுபட்டுத் தங்கள் குறைகளை எடுத்துரைக்கவும் 1912ஆம் ஆண்டு "மெட்ராஸ் யுனைட்டெட் லீக்" (Madras United League) என்னும் அமைப்பினை உருவாக்கினர்.

இந்த அமைப்பிற்கு வழிகாட்டியாகவும், துணையாகவும் இருந்தவர் அப்போது சென்னையில் சிறந்த டாக்டர்களில் ஒருவராக விளங்கிய நடேசனார் ஆவார். அவர்தாம் திராவிட இயக்கத்தின் நிறுவுநர். அவரே அந்த அமைப்பின் செயலாளராகவும் இருந்து அரும்பணியாற்றினார். ஓராண்டிற்குள் அந்த அமைப்பின் உறுப்பினர் தொகை 300 ஆயிற்று. "லீக்"கின் கூட்டங்கள் திருவல்லிக்கேணி பெரிய தெருவில் அமைந்திருந்த டாக்டர் நடேசனார் இல்லத்திலேயே நடைபெற்றன.

திரு. சரவண பிள்ளை (பின்னால் தஞ்சையில் "டெபுடி கலெக்டர்" ஆனவர்), திரு. ஜி. வீராசாமி நாயுடு, திரு.துரைசாமி முதலியார் (பொறியியல் துறையைச் சேர்ந்தவர்), திரு. எஸ். நாராயணசாமி நாயுடு (வருவாய் வாரியத்தின் ஷெரீப்பாகப் பணியாற்றியவர்) - போன்ற பின்னாளில் பெரும் உத்தியோகங்கள் ஏற்ற பிராமணரல்லாதார் "மெட்ராஸ் யுனைட்டெட் லீக்" அமைவதற்குப் பாடுபட்டதாகத் திரு. பி. ரெங்கசாமி நாயுடு கூறுகிறார்.

முதன் முதலாக அவர்கள் ஏற்றுக் கொண்ட சமுதாயப்பணி முதியோர் கல்வியாகும். அதன் உறுப்பினர்களாகவிருந்த அரசு ஊழியர்களே தங்களது மாலை நேர ஓய்வு காலத்தை இந்தப் பணிக்குச் செலவிட்டனர். ஆண்டுதோறும் பல்கலைக் கழகப் பட்டம் பெறும் பிராமணரல்லாத இளம் பட்டதாரிகளுக்கு வரவேற்பு நடத்தி, அவர்களை ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தி, அவர்களது சமுதாயக் கடமையை நினைவுறுத்துவதும் அந்த அமைப்பின் பணிகளில் ஒன்றாக இருந்தது. அப்போதெல்லாம் பல்கலைக் கழகப் பட்டம் பெறும் பிராமணரல்லாத மாணவர்கள் எண்ணிக்கை மிகமிகக் குறைவாக இருந்தமையால் இது சாத்தியமாயிற்று.

ஒருமுறை திவான்பகதூர் பி. கேசவப் பிள்ளை தலைமையில் அத்தகைய வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. (சர்) பி. தியாகராயர், பனகல் அரசர் போன்றோர் அந்த வைபவத்திற்கு வருகை தந்திருந்தனர். பட்டதாரிகளின் சார்பாக வரவேற்பிற்கு நன்றி கூறிப் பேசிய ஓர் இளைஞர் தமது பேச்சுத் திறனால் அனைவரது உள்ளத்தையும் கவர்ந்தார். அவர்தாம் பின்னாளில் நீதிக் கட்சிப் பிரமுகராகவும், சுதந்திர இந்தியாவின் முதல் நிதி அமைச்சராகவும் விளங்கிய (சர்) ஆர்.கே. சண்முகம் (செட்டியார்) ஆவார்.

1913ஆம் ஆண்டு "மெட்ராஸ் யுனைட்டெட் லீக்"கின் முதலாவது ஆண்டு நிறைவு விழாக் கூட்டம் டாக்டர் நடேசனாரின் மருத்துவமனையில் உள்ள தோட்டத்தில் நடைபெற்றது. அன்று அங்கு கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஓர் இனத்தின் தனித்தன்மையைக் கண்டறிந்து,

ஓர் இயக்கத்திற்கே பெயர் சூட்டிய தீர்மானமாகும். அது "மெட்ராஸ் யுனைட்டெட் லீக்" என்கிற பெயரை மாற்றுவது பற்றிய தீர்மானம்! சங்கத்தின் பெயர் அதன் நோக்கங்களைப் பிரதிபலிப்பதாக இல்லை - என்பதை அனைவரும் ஒப்புக் கொண்டு அதற்குச் சரியான பெயரைச் சூட்டும் விவாதம் நடைபெற்றது.

பிராமணரல்லாதார் சங்கம் - எனப் பெயரிடலாம் என்கிற கருத்து சொல்லப்பட்டது. அது எதிர்மறைப் (negative) பெயராக இருப்பதால் அப்பெயருக்குக் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு, இறுதியில், "மெட்ராஸ் யுனைட்டெட் லீக்" என்னும் பெயரை "திராவிடர் சங்கம்" (Dravidian Association)என்று மாற்றுவதென்று ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அன்று முதல் அந்தச் சங்கம் இயக்கிவிட்ட உணர்வுகள் திராவிட இயக்கம் என்று பெயர் பெறலாயின.

திராவிடர் சங்கம் - என்று பெயர் மாற்றப்பட்ட பிறகு அதன் உறுப்பினர் தொகை 500 ஆயிற்று.

1914ஆம் ஆண்டு திருவல்லிக்கேணி உயர் நிலைப் பள்ளி ஒன்றின் மாடியில் உள்ள கூடத்தில் திராவிட சங்கத்தின் முதலாண்டு நிறைவு விழா நடைபெற்றது. அந்நிகழ்ச்சியோடு பிராமணரல்லாத பட்டதாரிகளுக்கு ஒரு வரவேற்பும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விழாவிற்குத் தலைமை வகிக்க ஒப்புக் கொண்டிருந்த வெங்கடகிரி அரசர் உடல்நலக் குறைவு காரணமாக வரஇயலவில்லை. அப்போது ஸ்மால்காஸ் கோர்ட்டுகளின் பிரதம நீதிபதியாகவும் (Chief Judge of Small Cause Courts), பிறகு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாகவும் உயர்ந்த சி. கிருஷ்ணன் அந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். அன்றையதினம் சிறப்புரையாற்றியவர் டாக்டர் டி.எம். நாயர் ஆவார். கூடியிருந்த மாணவர்களும், அரசு ஊழியர்களும் என்றும் நினைவுகூரத்தக்க அரியதோர் உரையை அவர் ஆற்றினார். இளைஞர்கள் துணிவு பெற வேண்டுமென்றும், தங்கள் குறைபாடுகளைத் தைரியத்துடன் எடுத்து வைக்க வேண்டுமென்றும், அந்த அமைப்பின் தேவையைப் பொதுமக்கள் உணரு மளவிற்கு அதை வலிவுள்ளதாக்கப் பாடுபட வேண்டுமென்றும் அவர் வற்புறுத்தினார்.

"விழியுங்கள்! எழுங்கள்!! இன்றேல் என்றும் நீவிர் வீழ்ந்துபட்டோராவீர்!!!" ("Awake, Arise or be for ever fallen!") என்று கூறி அவர் தமது சொற்பொழிவை முடித்தாரென்றால் அன்றைய பிராமணரல்லாத இளைய தலைமுறையினரிடையே அவர் எத்தகைய எழுச்சியுரையாற்றினார் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

போதிய நிதி வசதி இல்லாத நிலையில் திராவிட சங்கம் இரண்டு கருத்து விளக்க நூல்களை 1915இல் வெளியிட்டது. அவற்றில் குறிப்பிடத்தக்கது "பிராமணரல்லாதார் கடிதங்கள்" ("Non-Brahmin Letters") என்பதாகும். அப்போதைய சென்னை மாகாணத்தில் பிராமணரல்லாதாரின் இழிநிலையை விளக்கி, அவர்களை ஒன்றுபட்டு இயங்கக் கோரும் 21 கடிதங்கள் அந்தப் பிரசுரத்தில் அடங்கியிருந்தன.

எஸ்.என்.கே. என்னும் புனைபெயரில் இந்த நூல் எழுதப்பட்டிருந்தது. இன்னொரு நூல் சர். சி. சங்கரன் நாயர் எழுதிய Dravidian Worthies என்பதாகும்.

- பிராமணரல்லாதார், பிரித்துக் கொட்டிய நெல்லிக்காய் மூட்டை போல ஒற்றுமையிழந்து சிதறிக் கிடக்கின்றனர்.
- ஒன்றுபட மறுப்பது மட்டுமல்ல; ஒருவருக்கொருவர் பொறாமையால் பிளவுபட்டும் இருக்கின்றனர்.
- கல்வி கற்பதில் கவனம் செலுத்தாமல், தங்கள்

பரம்பரைத் தொழிலையே மேற்கொண்டு அதிகபட்சம் "துபாஷி" களாக வேண்டும் - என்பதற்கு மேல் அவர்கள் குறிக்கோள் செல்வதில்லை.

- பிராமணரல்லாத முதலாளிகளாலேயே அவர்களது பிராமணரல்லாத சகோதரத் தொழிலாளிகள் இழிநிலையில் நடத்தப்படுகின்றனர்.
- இந்த இழிநிலைக்குப் பிராமணரல்லாதார் தங்களைத் தாங்களேதான் குற்றம் சாட்டிக் கொள்ள வேண்டும்.
- ஏனெனில், அவர்கள் அரசாங்கத் துறையில் உத்தியோக வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறியிருக்கின்றனர்.
- அதே நேரம் பிராமணர்களைப் பாருங்கள்! கல்வியின் முக்கியத்தை உணர்ந்து அதைப் பயன்படுத்திக் கொண்டு எவ்வளவு ஒற்றுமையாகச் செயல்படுகிறார்கள்!
- ஆனால், பிராமணரல்லாதார் "மனு ஸ்மிருதி"யின் மயக்கத்திலாழ்ந்து தங்களது கேடு கெட்ட நிலைக்குத் தாங்களேயல்லவா காரணமானவர்களாக இருக்கிறார்கள்!
- பிராமணரல்லாத சமூகத்தினர் சென்னை மாகாணப் பொது வாழ்வில் தங்களுக்குரிய இடத்தைப் பெற வேண்டுமானால் திராவிடர்கள் அனைவரையும் அமைப்பு ரீதியில் ஒன்று சேர்க்க வேண்டும்; திராவிடத் தாய் மொழிகளில் கற்பிக்கும் "தேசிய"க் கல்லூரியைத் துவக்க வேண்டும்.
- இத்தகைய உண்மைப் படப்பிடிப்பைக் கொண்ட பிரசுரங்கள், படித்த பிராமணரல்லாதாரிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வந்தன."

★

உடன்பிறப்பே,

தம்பி முரசொலி மாறனின் இந்தப் புத்தகத்திலிருந்தும், தம்பி சுப. வீரபாண்டியன் ஆற்றிய தொலைக்காட்சி உரையிலிருந்தும்

நடேசனார் தொடங்கிய அந்த "திராவிடர் சங்கம்" தான் இன்றைக்கு வளர்ந்துள்ள மொழி உணர்வு, பகுத்தறிவு உணர்வு, சமூக நீதிக்கெல்லாம் அடித்தளம் போன்றது என்பதை அறிந்து கொள்ளலாம். அந்த உணர்வுகளை ஏற்படுத்தக் கூடிய நமது திராவிட இயக்கத்தின் நூற்றாண்டு விழாவினை இந்த ஆண்டு முழுவதும் தமிழர்களாகிய, திராவிடர்களாகிய நாமனைவரும் கொண்டாட வேண்டியவர்களாக இருக்கிறோம். எனவே திராவிடர் இயக்கத்தின் நூற்றாண்டு விழா நமது கழகத்தின் சார்பில் - இந்த 2012ஆம் ஆண்டு தொடங்கி 2013ஆம் ஆண்டு வரையில் சிறப்பாக கொண்டாடுவதற்கான அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட வேண்டும். திராவிட இயக்கம் வளர்த்த பெரியவர்களின் பெருமைகளையெல்லாம் அந்த நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளில் நாம் பேசவேண்டும். திராவிட இயக்க நூற்றாண்டு விழா தமிழன் ஒவ்வொருவருக்கும் பெருமை சேர்க்கும் விழா என்பதை மனதிலே கொள்வோம். அதற்காக விழாவினை நாடெங்கும் எடுப்போம். திராவிட இயக்க நூற்றாண்டு விழா நாம் கொண்டாட வேண்டிய தன்மான உரிமைத் திருவிழா! குறிப்பிட்ட அந்த நாள்; எந்த நாள் என்று இல்லாமல் - இந்த ஆண்டு முழுவதுமே அந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாட முனைவோம் - அதற்கு இன்று முதல் முரசு ஒலிப்போம் - அந்த முழக்கம் இன்று பிப்ரவரி 18ல் தொடங்கட்டும்! பின்னர் மாவட்டத் தலை நகரங்களில் தொடங்கி இந்த நூற்றாண்டு விழா எழுச்சி நிறை விழாக்களாக நடக்கட்டும்! அங்கிங்கெனாதபடி எங்கெங்கும்! நடக்கட்டும்!

அன்புள்ள,

மு.க.

18-2-2012

3609. இன எழுச்சிக்கு எடுக்கும் விழா!

உடன்பிறப்பே,

திராவிட இயக்க 100ஆம் ஆண்டு தொடக்க விழா வரும் 27-2-2012 அன்று நமது தலைமைக் கழகத்தின் சார்பாக சென்னை அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் மாலை 5 மணியளவில் கழகப் பொருளாளர் தளபதி தம்பி மு.க.ஸ்டாலின் வரவேற்புரையாற்றிட; எனது தலைமையில், நமது இனமானப் பேராசிரியர் முன்னிலையில் நடைபெறும் என்ற அறிவிப்பு வெளி வந்திருப்பதைக் கண்டிருப்பாய்! அந்தத் தொடக்க விழாவில் தமிழர் தலைவர், இளவல், கி. வீரமணி அவர்களும், ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி, திரு.மோகன் அவர்களும், பேராசிரியர் நன்னன் அவர்களும், பேராசிரியர் தம்பி சுப.வீரபாண்டியன் அவர்களும் உரையாற்றவுள்ளனர். திராவிட இயக்கத்தின் தோற்றம் குறித்தும், அதன் மேன்மை பற்றியும் விளக்கிடவிருக்கிறார்கள்.

“ஒருவன் உள்ள வரையில் - குருதி
ஒரு சொட்டு உள்ளவரையில்
திராவிட நாட்டின் உரிமைக்குப் போரிடச்
சிறிதும் பின்னிடல் இல்லை!”

என்றார் பாவேந்தர் பாரதிதாசன்.

1856இல் “திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்” என்ற அரிய ஏட்டை எழுதிய ராபர்ட் கால்டுவெல் என்ற மொழி நூல் அறிஞர் தான், திராவிட மொழி பேசும் மக்கள் ஒரே இனத்தவர் என்று குறிப்பிட்டார். தென்னிந்திய மொழிகளையும், அவற்றைப் பேசும் மக்களையும் குறித்து எழுதிய போது, “திராவிடர்”

என்ற பெயரை அவர்தான் முதன்முதலாக உபயோகித்தார் என்ற குறிப்புகளும் உள்ளன. தமிழுக்குத் தொண்டாற்றி ஒப்பிலக்கணம் தந்த அந்த கால்டுவெல் வாழ்ந்து மறைந்த

இடையன்குடி இல்லத்தை நினைவு இல்லமாக ஆக்கிட கழக ஆட்சியிலேதான் ரூ. 18.50 இலட்சம் ஒதுக்கீடு செய்து 4-2-2010 அன்று அரசாணை வெளியிடப்பட்டது. அதன்படி அந்த இல்லம் புதுப்பிக்கப்பட்டு, கால்டுவெல் அவர்களின் மார்பளவு வெண்கலச்சிலையும் நிறுவப்பட்டு - 17.2.2011 அன்று காணொலிக் காட்சி வாயிலாக என்னால் திறந்து வைக்கப்பட்டன.

மனோன்மணியம் எழுதிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள், தனது பாடலான,

நீரார்ரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீரார்ரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கச்சிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதில்சிறந்த **திரவிடநல் திருநாடும்**
அத்திலக வாசன்னபோ லனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

என்பதில் "திரவிடநல் திருநாடு" என்று குறிப்பிட்டுள்ளார். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களின் காலம் 1855 முதல் 1897 ஆகும்.

1912ஆம் ஆண்டு தோன்றிய அமைப்பான சென்னை ஐக்கிய சங்கம் என்ற மெட்ராஸ் யுனைட்டெட் லீக் சங்கத்தின் முதலாவது ஆண்டு விழா 1913ஆம் ஆண்டு டாக்டர் நடேசனாரின் மருத்துவமனைத் தோட்டத்திலே நடைபெற்றபோது, சங்கத்தின் பெயர் அதன் நோக்கத்தைப் பிரதிபலிப்பதாக இல்லை, எனவே அந்தப் பெயரை மாற்ற வேண்டுமென்று ஒருசிலர் பேசிய நிலையில்தான், பெயரை எப்படி மாற்றலாம் என்று சில கருத்துக்கள் கூறப்பட்டன. அப்போது டாக்டர் நடேசனார் தான், "பார்ப்பனர் என்ற ஒரு சாதியைக் குறிப்பிட்டு, அச்சாதி அல்லாதவர்கள் என்று நாம் ஏன் சொல்ல வேண்டும்? நமக்கென்று ஓர் இனம் இல்லையா? அதற்கென்று ஒரு பெயர் இல்லையா?" என்று கேட்டு, "திராவிடச் சங்கம் என்று பெயர் மாற்றலாம், ஏனென்றால் நாமெல்லாம் திராவிடர்களாயிற்றே?" என்று முடிவினைத் தெரிவித்தார்கள். அந்த முடிவினை அனைவரும் ஒருமனதாக ஏற்றுக் கொண்டார்கள்.

டாக்டர் நடேசனாரின் கவனத்தை அந்த நேரத்தில் கவர்ந்தவர்களாக வெள்ளுடை வேந்தர் தியாகராயரும், டாக்டர் டி.எம். நாயரும் இருந்தார்கள். ஆனால் இவர்கள் இருவரும் சென்னை மாநகராட்சியில் நடைபெற்ற ஒரு பிரச்சினை காரணமாக வேறுபட்டு பேச்சு வார்த்தையின்றி இருக்கிறார்கள் என்பதை அறிந்து, அவ்விருவரையும் இணைத்து, ஒருசேரச் செயலாற்றச் செய்ய வேண்டுமென்று டாக்டர் நடேசனார் கருதினார்.

வெள்ளுடை வேந்தர் சர். பிட்டி தியாகராயர் திராவிட இனத்தின் மீது மாறாத அன்பு கொண்டவர். தொடக்கத்தில் தியாகராயர் பெரும் வைதீகராக இருந்தார். தன் இல்லத்திலேயே சிலை வைத்து புரோகிதரைக் கொண்டு பூஜை புனருத்தாரணம் எல்லாம் செய்து வந்தார். அப்படிப்பட்டவர் டாக்டர் நடேசனாருடன் தொடர்பு ஏற்பட்ட பிறகு, வைதீகத்திலிருந்து விலகி வந்து, பார்ப்பனர் ஆதிக்க எதிர்ப்பில் அதிகத் தீவிரம் காட்டத் தொடங்கினார். அப்படிப்பட்ட தியாகராயர் 1917 ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை மாகாண முதலாவது நீதிக் கட்சி மாநாட்டில் உரையாற்றும்போது, "பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிப்பது திராவிட மரபன்று. திருவள்ளுவர் முதலிய திராவிடத் தலைவர்கள் பிரம்மனின் முகத்துதித்தோர் யாம் என்று பெருமை பேசினாரில்லை. பிறப்பினால் ஏற்றத்தாழ்வு கற்பித்தோரும் நால்வகைச் சாதி இந்நாட்டில் நாட்டினோரும் ஆரியரே. அவ்வருணாச்சிரமக் கோட்டையை இடித்தெறிய 2400 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய புத்தர் முயன்றார், முடியவில்லை! பின்னர் வந்த பற்பல சீர்திருத்தவாதிகள் முயன்றனர், தோற்றனர். இராமானுசரும் புரோகிதக் கொடுமைகளைக் களைந்தெறிய ஒல்லும் வழியெல்லாம் முயன்றார், தோல்வியே கண்டார்! பார்ப்பனர் பிடி மேன்மேலும் அழுத்தமுற்றே வந்தது. தீண்டாமை - அண்டாமை - பாராமை முதலிய சமுதாயச் சீர்கேடுகளும் படிப்படியே பரவிப் பெருகலாயின. அத்தகைய பலம் பொருந்திய சாதிக் கோட்டையை தகர்த்தெறிய, இதுவே தக்க காலம்! இதுவே தக்க வாய்ப்பு!" என்று முழங்கினார்.

பி அண்ட் சி மில்லில் அப்போது ஒரு வேலை நிறுத்தப் போராட்டம். அதுகுறித்து தியாகராயருக்கும், ஆளுநராக இருந்த வெல்லிங்டன் பிரபுவுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்று, அதில் ஆத்திரமடைந்த தியாகராயர் வெளியே

வந்து விட்டார். அப்போது முதலமைச்சர் பதவியில் இருந்த பனகல் அரசர் தியாகராயர் வெளியே வந்ததைக் கேள்விப்பட்டு, உடனடியாக ஆளுநரைச் சந்தித்து, எம் தலைவரிடம் மன்னிப்புக் கேட்காவிட்டால், எங்கள் மந்திரிசபை ராஜினாமா செய்யும்" என்று தெரிவித்தாராம். ஆளுநரும் அவ்வாறே உடனடியாக மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்தாராம்.

டாக்டர் நடேசனாருக்கு துணைநின்ற மற்றொரு பெருமகன் டாக்டர் டி.எம். நாயர். ஆரியர் வருகையிலிருந்து அவர் பேச்சைத் தொடங்கினால், இடையிலே புராண, இதிகாசக் கதைகளையெல்லாம் கூறி மக்களை உணர்ச்சிக் கடலில் ஆழ்த்தக் கூடிய பேச்சாளர். "தென்னகத்தில் ஒன்றிரண்டு தவிர, மற்ற எல்லாப் பதவிகளிலும் பார்ப்பனர்கள் உட்கார்ந்து விட்டார்கள். உயர்நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்ட ஒன்பது இந்தியரில், எட்டு பேர் பார்ப்பனர்கள், ஒருவர் நாயர். உதவி கலெக்டர்கள் 146 பேரில் 77 பேர் பார்ப்பனர்கள். 125 மாவட்ட நீதிபதிகளில் 93 பேர் பார்ப்பனர்கள். மக்கள் தொகையில் நூற்றுக்கு மூன்று பேராக உள்ள பார்ப்பனர்கள், இத்தனை வேலைகளில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்" என்று இந்தப் புள்ளி விவரங்களை அடுக்கிச் சொல்லி, "இந்த அநீதியை இப்படியே தொடர விடலாமா?" என்று கர்ச்சிப்பார்.

டாக்டர் டி.எம். நாயர் 7-10-1917 அன்று சென்னை ஸ்பர்டாங் சாலை அருகே நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் ஆற்றிய உரையும் - சர். பிட்டி. தியாகராயர் 20-12-1918 அன்று நீதிக் கட்சியின் சார்பில் வெளியிட்ட "பார்ப்பனரல்லாதார் கொள்கை விளக்கம்" என்ற அறிக்கையும் -

திராவிடருக்கான ஆதி ஆவணங்கள் என்று போற்றப்படுகின்றன.

டாக்டர் நாயர் அவர்களின் புகழ் பெற்ற அந்த உரையில், "வீரத் திராவிடர்களே! என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். லண்டனிலும், சென்னையிலும் என்னைப் பெரிய டாக்டர் என்று சொல்கிறார்கள். நான் எம்.டி. பட்டதாரி. எனக்கு ஏராளமான வருமானம் வருகிறது. என் செலவு போக, என் வருமானத்தில் மீதப்படும் பணத்தையெல்லாம், என்னருமைத் தலைவர் திரு. பிட்டி தியாகராய வள்ளல் அவர்களைப் போன்று, உங்களைப்

போன்ற திராவிட மக்களைத் தட்டி எழுப்பும் நீதிக் கட்சியின் வளர்ச்சிக்காகச் செலவிடுவதில் பெருமைப்படுகிறேன். திராவிடத் தோழர்களே! நீங்கள் எல்லாம் உங்கள் உற்றார், உறவினர், பந்து மித்திரர், தோழர், தோழியர்களுக்கெல்லாம் சொல்லி, விளக்கி, நீதிக் கட்சியில் அங்கத்தினராகச் சேருங்கள்! கட்சிப் பத்திரிகைகளைப் படியுங்கள்! நம் பத்திரிகைகள் வளர்ந்தால் தான், நம் மக்களுக்குப் பலம் வரும். நம் எதிர்க்கட்சியான பார்ப்பனக் கூட்டம் நடுங்கும். உண்மை மக்களாட்சி உதயமாகும்." என்று முழங்கியதைத்தான் நான் இப்போதும் திரும்பக் கூற விரும்புகிறேன்.

"திராவிட இயக்க வரலாறு" என்ற முரசொலி மாறன் எழுதிய நூலில், உயர் பதவியில் ஒரு பிராமணர் நியமிக்கப்பட்டால் உடனே தனது நியமன அதிகார வரம்பிற்குட் பட்ட பிற பதவிகளிலும் தங்களது இனத்தாரைக் கொண்டு வந்து நிரப்புவதும், தொன்று தொட்டு இருந்துவரும் வழக்கமாகும் என்று எழுதியதோடு அதற்கு உதாரணங்கள் சிலவற்றையும் குறிப்பிட்டுள்ளார். வருவாய்த் துறை வாரியம் ஒருமுறை ஆய்வு நடத்திய போது ஜி. வெங்கட்ரமணையா என்கிற உயர் பதவி வகித்த பிராமணருக்கு உறவினர்களும், தொடர்புடையவர்களும் மாத்திரம் அந்தத் துறையில் 49 பேர் இருந்தது தெரியவந்ததாம். 1890-களில் செங்கற்பட்டிலும், சென்னை நகரிலும் தோன்றிய வெம்பாக்கம் அய்யங்கார் குடும்பம் (புகழ் பெற்ற சர். பாஷ்யம் அய்யங்கார் வகையறா) ஆங்கிலேயர் ஆட்சியில் கிடைக்கும் உத்தியோகங்களையெல்லாம் நன்கு நுகர்ந்தது. 1861லிருந்து 1921 வரை அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் ஐவர் சட்டசபை உறுப்பினர்களாகவும், இருவர் அட்டர்னி ஜெனரல்களாகவும், மூவர் உயர்நீதி மன்ற நீதிபதிகளாகவும், மூவர் ஸ்மால்காஸ் கோர்ட் நீதிபதிகளாகவும், மாண்டேகு-செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தத்தில் உதயமான ஆட்சியில் ஒருவர் உள்துறை அமைச்சராகவும், மூவர் மாநில அரசின் துணை செகரட்டரிகளாகவும் இருந்திருக்கின்றனர். மேலும் பலர் தாசில்தார்களாகவும், பப்ளிக் பிராசிகியூட்டர்களாகவும், டெபுடி கலெக்டர்களாகவும் இருந்தனர் என்று தம்பி மாறன் அந்த நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த உண்மை வரலாறுகளையெல்லாம் திராவிடர்களுக்கு - தமிழர்களுக்கு நினைவு படுத்தும் வகையில்தான் திராவிட இயக்க 100ஆம் ஆண்டு தொடக்க விழா நடைபெற வுள்ளது.

அந்த நிகழ்ச்சியில் நம்மைப்பற்றி புரிந்துகொள்ள - தெரிந்து கொள்ளத்தக்க பல விவரங்களை சான்றோர் பலர் விளக்கிட உள்ளார்கள். திராவிட இயக்க 100ஆம் ஆண்டு விழாவினை இந்த ஆண்டு முழுவதும் கொண்டாடப் போகிறோமே, தொடக்க விழாவில் கலந்து கொள்ளாமல் விட்டால் என்ன என்று நினைத்து விடக் கூடாது! ஏனென்றால் இது நம் இன எழுச்சிக்கு எடுக்கும் விழா! இடையில் இரண்டு நாட்கள்தான்! 27ஆம் தேதியன்று நேரில் சந்திப்போம்!

அன்புள்ள,

மு.க.

24-2-2012

3610. சொன்னது என்ன? என்ன? நடந்தது என்ன? என்ன?

உடன்பிறப்பே,

தமிழக அரசின் 2012-2013ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையினை நிதித்துறை அமைச்சர் 3 மணி நேரம் பேரவையில் படித்து முடித்திருக்கிறார். இதுவரை எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு 91 பக்கங்கள்! நிதி நிலை அறிக்கையிலே இடம் பெற வேண்டாமென்று அவர் கருதிய தனிப் பத்தி ஒன்றையும் நிதி நிலை அறிக்கையிலே இணைத்துப் படிக்காமல் தனியாகப் படித்திருக்கிறார். இந்த நிதிநிலை அறிக்கையினையும், கடந்த ஆண்டுகளில் வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளையும் படித்துவிட்டு ஒரு சில ஐயப்பாடுகளையும், கருத்துக்களையும் இங்கே குறிப்பிட்டுள்ளேன்.

தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த 2006ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரை புதிய வரிகளையே விதிக்கவில்லை.

2011-2012ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில், பத்தி 102இல், "கடந்த ஐந்தாண்டுகளில் பல திட்டங்களை இந்த அரசு புதிதாக அறிவித்து செயல்படுத்தி வந்தாலும், மக்களுக்குக் கூடுதல் வரிச்சுமை எதையும் ஏற்படுத்தி விடாமல் முதலமைச்சர் கலைஞர் தலைமையிலான இந்த அரசு கவனமாகச் செயல் பட்டுள்ளது" என்று குறிப்பிட்டுள்ளதிலிருந்து இதை அறியலாம்.

ஆனால் அ.தி.மு.க. அரசு 2011 மே திங்களில் பதவிக்கு வந்தவுடனேயே மக்களுக்கு வரி போட்டது. இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் பத்தி 131இல்,

"இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு மதிப்புக் கூட்டு வரி விகிதத்திலும், மதுபானங்கள், பீர் ஆகியவற்றின் மீதான மாநில கலால் வரியிலும் சில மாற்றங்களை கொண்டுவந்தது. சில ஆவணங்களின் பதிவுக் கட்டணங்களிலும் சில மாற்றங்களைக்

கொண்டு வந்தோம்" என்று கூறப்பட்டுள்ளது. வரிகளை உயர்த்தினோம் என்று சொல்வதற்குப் பதிலாக வரி மாற்றங்களைக் கொண்டு வந்தோம் என்று இந்த அரசு ஏமாற்றப் பார்க்கின்றது.

கழக ஆட்சியில் வரிவிதிக்கவில்லை என்றாலும் மக்களுக்கு நலத்திட்டங்களே உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட வில்லையா? கழக ஆட்சியில் வரிகள் விதிக்கவில்லையே தவிர, வருவாய் உயரவில்லை என்று யாரும் கூற முடியாது.

தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்த 2006-2007 ஆம் ஆண்டுக்கான வருவாய் வரவுகள் 38,731 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டது.

தி.மு. கழகம் ஆட்சியிலிருந்து இறங்கிய 2011-2012 ஆம் ஆண்டில் மொத்த வருவாய் வரவு 79,431 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப் பட்டது.

எனவே ஐந்தாண்டு காலத்தில் வருவாய் வரவுகள் மட்டும் தி.மு.கழக ஆட்சியில் எந்த விதமான புது வரிகளையும் விதிக்காமலேயே, 40,700 கோடி ரூபாயாகும். எனவே வரிகள் கழக ஆட்சியில் புதிதாக விதிக்கவில்லையே தவிர, அரசின் வருவாய் உயராமல் இல்லை. எனவே வரிகளை விதித்துத்தான் வருவாயை உயர்த்த வேண்டுமென்றில்லை. ஏற்கனவே உள்ள வரியை ஒழுங்காக வசூல் செய்தாலே வருவாயை உயர்த்திக் கொள்ளமுடியும்.

2011-2012 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டின்படி தமிழ்நாட்டின் சொந்த வரி வருவாய் ரூ. 59,932.31 கோடி. 2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டின்படி இது ரூ. 71,460.55 கோடியாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 19.24 சதவீத வளர்ச்சியாகும் என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் கழக ஆட்சியில் என்ன நிலை?

2010-2011 ஆம் ஆண்டில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் ரூபாய் 49,125 கோடி. 2011-2012 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டின்படி இது ரூபாய் 53,783 கோடி என்று மதிப்பிடப்பட்டு, திருத்த மதிப்பீட்டின்படி இது ரூ. 59,932 கோடியாக உயர்ந்தது. இது, 21.99 சதவீத வளர்ச்சியாகும். எனவே கழக ஆட்சியிலும் வரி வருவாய் அதிகமாகவே வந்துள்ளது என்பதை அறியலாம்.

2012-2013ஆம் ஆண்டிற்கான மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் மாநில அரசின் சொந்த வரி வருவாய் விகிதம் 10.35 ஆக இருக்கும் என்று நிதி நிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு பேராசிரியர் அவர்கள் 5-2-2011 அன்று படித்த 2011-2012ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதி நிலை அறிக்கையில் 2010-2011ஆம் ஆண்டிற்கான மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் விகிதம் 9.47 சதவீதமாக இருக்கும் என்று படித்த போதிலும், இன்றைய நிதியமைச்சர் 4-8-2011 அன்று படித்த திருத்த நிதி நிலை அறிக்கையில் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் விகிதம் 9.21 சதவீதமாக இருக்கும் என்று முன் கணக்குகளின்படி தெரிவித்தார்கள். அதுபோலவே இந்த நிதி நிலை அறிக்கையிலே மொத்த உற்பத்தி மதிப்பில் மாநில அரசின் சொந்த வரி வருவாய் விகிதம் 10.35 ஆக இருக்குமென்று இப்போது படித்தாலும், முன் கணக்குகளையெல்லாம் பார்க்கும்போது இந்த விகிதம் குறையலாம்.

2012-2013இல் வணிக வரியின் மூலம் பெறப்படும் வரவுகள் ரூபாய் 46,678.10 கோடியாக இருக்கும். இது கடந்த வரவு செலவு திட்ட மதிப்பைவிட 17.4 சதவீதம் வளர்ச்சி கொண்டதாக இருக்கும் என்று இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 2011-2012இல் திருத்த வரவு செலவுத் திட்டத்தின்படி, வணிக வரிகளின் வரவு ரூ. 37,196 கோடி - அது 2010-2011ஆம் ஆண்டு முன் கணக்குகளைவிட 20.50 சதவீத வளர்ச்சியைக் கொண்டது என்று திரு. பன்னீர்செல்வம் அவர்களே 4-8-2011 அன்று அவையில் படித்ததிலிருந்து கழக ஆட்சியிலும் வணிகவரி முறையாகவே வசூல் செய்யப்பட்டது என்பதை அறியலாம்.

"2012-2013இல் சம்பளம் குறித்த ஒதுக்கீடு ரூ. 29,212.36 கோடி மற்றும் ஓய்வூதியம் குறித்த செலவினத்திற்கான ஒதுக்கீடு ரூ. 13,023.50 கோடியாகும். இவ்வரவு செலவு திட்ட மதிப் பீட்டில் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் குறித்த செலவுகள் மொத்த வருவாய்ச் செலவுகளில் 43 சதவீதமாகும்" என்று நிதி நிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆனால் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னால் நமது முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட ஒரு

நிகழ்ச்சியில் அவர்கள் அரசு அலுவலர்களுக்கு ஊதியமாகவும், ஓய்வூதியமாகவும் அரசு மொத்த வருவாய்க் கணக்கில் 94 சதவீதம் செலவழிக்க வேண்டியுள்ளது என்று அரசு அலுவலர்களின் மனம் நோகப் பேசியதற்கு; அதை மறுத்து நாமெல்லாம் அப்போது புள்ளி விவரங்களுடன் விரிவாகப் பதில் கூறியதற்கு; மேலும் ஆதாரபூர்வமாக இப்போது இந்த நிதி நிலை அறிக்கையிலேயே அது 94 சதவிகிதமல்ல, 43 சதவிகிதம்தான் என்று நிதியமைச்சர் திரு. பன்னீர்செல்வம் குறிப்பிட்டுள்ளார் என்று கருதுகிறேன்.

2012-2013ஆம் ஆண்டில் வருவாய் உபரி ரூ.2,376.07 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருந்தாலும், 2012-2013ஆம் ஆண்டில் நிதிப்பற்றாக்குறை ரூ. 19,832.13 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 2.87 சதவிகிதமாகும். தி.மு. கழக ஆட்சியிலும் இதே அளவுக்கும், இதைவிட குறைந்த அளவிற்கும் தான் நிதிப் பற்றாக்குறை இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

“கடந்த 2011ஆம் ஆண்டு மே திங்களில் இந்த அரசு பொறுப்பேற்றபோது, மாநிலத்தின் நிதி நிலை மோசமான நிலையிலிருந்தது. மாநிலத்தின் வருவாய் பற்றாக்குறை 2009-2010ஆம் ஆண்டில் 3,531 கோடி ரூபாயாகவும், 2010-2011ஆம் ஆண்டில் 2,729 கோடி ரூபாயாகவும் இருந்தது” என்று நிதி நிலை அறிக்கையில் பத்தி 135இல் கூறியிருக்கிறார்கள். ஒரு அரசு பற்றாக்குறை பட்ஜெட் போடுகின்ற காரணத்தினால் மட்டுமே நிதி நிலை மோசமான நிலையிலே இருந்தது என்று அர்த்தமல்ல. இன்னும் சொல்லப்போனால் தற்போது அ.தி.மு.க. அரசு அவையில் படித்த நிதி நிலை அறிக்கையிலேயே இந்த ஆண்டு நிதிப் பற்றாக்குறை 19,832.13 கோடி ரூபாய் என்று சொல்லப்பட்டுள்ளது. தமிழக அரசின் நிதி நிலை வரலாற்றில் இந்த அளவிற்கு நிதிப்பற்றாக் குறை இருந்ததா என்று தெரியவில்லை. எனவே நிதிநிலை தற்போது ஜெயலலிதா ஆட்சியிலே மோசமாக உள்ளது என்று சொல்லிவிடலாமா? அதை இந்த அரசு ஏற்றுக் கொள்கிறதா?

கடந்த கால அரசை குறை கூற வேண்டும் என்ற எண்ணத்தோடு நிதி நிலை அறிக்கை பத்தி 138இல் மோசமான நிதி நிர்வாகம், பொறுப்பற்ற செலவினம், மாநிலத்தின் நிதி நிலையில் கடும் சீரழிவு, பெரிய சுமை என்றெல்லாம் வார்த்தைகளை அள்ளித்

தெளித்திருக்கிறார்கள். நிதித்துறையில் கடந்த கால அரசு எந்தத் தவறும் செய்துவிடவில்லை என்பதற்கு நான் ஒரே உதாரணம் கூற வேண்டுமேயானால் - கடந்த கால அரசு எந்த நிதிச் செயலாளரை வைத்துக்கொண்டு இங்கே பணியாற்றியதோ - அதே நிதிச் செயலாளரைத்தான் இந்த அரசும் இப்போது வைத்துக் கொண்டு இந்த நிதி நிலை அறிக்கையை தயாரித்து, கடைசிப்பத்தியிலே இந்த பட்ஜெட்டை தயாரிக்க உதவிய சண்முகம், ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கு நன்றி, நன்றி என்று கூறியிருப்பதிலிருந்தே கடந்தகால அரசை பின் தொடர முயலுகிறீர்கள் என்றுதான் பொருள். ஐ.ஏ.எஸ். அதிகாரிகளையெல்லாம் ஒவ்வொரு நாளும் பந்தாடுகின்ற இந்த அரசு நிதித் துறை செயலாளரை மட்டும் மாற்றாமல் இருக்கக் காரணம் என்ன? கடந்த காலத்தில் நிதிப் பிரச்சினை சரியாக இல்லாமல் இருந்திருந்தால் அவரை அ.தி.மு.க. அரசு தொடர்ந்து இந்தப் பொறுப்பிலேயே வைத்துக் கொண்டிருக்குமா?

அதுமாத்திரமல்ல; மேலும் நிதி நிலை அறிக்கை பத்தி 137இல் "13வது நிதிக்குழு நிர்ணயித்த நிதிக் குறியீடுகளுக்கு உட்பட்டே நமது வரவு செலவுத்திட்ட நிதி நிலைக் குறியீடுகள் உள்ளது என்பதை நான் இங்கு பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதில் வரையறுக்கப்பட்டபடி, மாநில அரசு வருவாய் உபரி தொடர்வதுடன், நிதிப் பற்றாக்குறை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவீத அளவிற்கும் குறைவாகவே இருக்கும். 2012-2013ஆம் ஆண்டின் இறுதியில் மாநிலத்தின் மொத்தக் கடன் 1,35,060.47 கோடி ரூபாயாக இருக்கும். எனினும், இது பதின் மூன்றாவது நிதிக்குழு அனுமதித்துள்ள அளவான, மாநில உற்பத்தி மதிப்பில் கடனின் விகிதாச்சார அளவு 24.8 சதவீதம் என்பதைவிட குறைவாக, 19.6 சதவீத அளவிலேயே இருக்கும்" என்று குறிப்பிட்டதிலிருந்தே தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் நிதிக் குறியீட்டில் எந்தத் தவறையும் செய்துவிட வில்லை என்பதை அறியலாம்.

2004-2005இல் தமிழகத்தில் ஏழ்மை நிலை 29.4 சதவிகிதம் என்று இருந்ததற்கு மாறாக; 2009-2010இல் 17.1 சதவிகிதம் என்று குறைந்திருக்கிறது என்றும்; அதாவது 72 லட்சம் பேர் ஏழ்மை நிலையிலிருந்து உயர்ந்திருக்கிறார்கள் என்றும் மத்திய திட்டக்குழு அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளதாக 21-3-2012 தேதிய "டைம்ஸ் ஆப் இண்டியா" ஆங்கில நாளிதழ்

வெளியிட்டுள்ளது. இந்தப் புள்ளிவிவரத்திலிருந்தே கழக ஆட்சிக் காலத்தில் நிதிநிலை மோசமாக இருந்ததா, மாறாக நன்றாக இருந்ததா என்பதை யாரும் புரிந்து கொள்ளலாம்.

கழக ஆட்சி வாங்கி வைத்து விட்டுப்போன கடன் சுமையை எல்லாம் நாங்கள் குறைக்க வேண்டியதாக உள்ளது என்று சொன்னார்களே, ஆட்சிக்கு வந்து ஒன்பது மாதங்கள் ஆயிற்றே? எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் கடனை அடைத்திருக்கிறார்கள்? கடனை அடைக்க வேண்டாம், புதிதாக வாங்காமலாவது இருந்தார்களா? நிதி நிலை அறிக்கையிலேயே 12,873.81 கோடி ரூபாய் அளவுக்கு மட்டுமே நடப்பாண்டில் கடன் பெற்றிருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல, வரும் ஆண்டில் வாங்கப் போகும் கடன் அளவை 18,387.47 கோடி ரூபாய் அளவிலேயே கட்டுப்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது என்றும் பெருமையாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த லட்சணத்தில் தான் ஆட்சிக்கு வந்தவுடன் - 2006ஆம் ஆண்டுக்கு முன்பு ஐந்தாண்டு காலம் ஆட்சியிலே இருந்தபோது அ.தி.மு.க. அரசு 50 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் கடன் வாங்கியதையே மறந்துவிட்டு, கழக அரசு கடன் சுமையை வைத்துவிட்டுப் போனதாகத் திரும்பத் திரும்பக் குற்றஞ் சாட்டினார்கள். இப்போது அவர்களே பதவிப் பொறுப்பிலே இருக்கிறபோது என்ன நிலைமை என்பதை மக்களிடம் மறைத்தாலும் மறைக்கலாம்; மனச்சாட்சியிடம் மறைக்க முடியுமா?

நிதியமைச்சர் படித்த நிதி நிலை அறிக்கை பத்தி 135இல், "2011-2012ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஓரளவு வருவாய் உபரியாக 173.87 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டது. இது தற்போதைய இறுதி மதிப்பீட்டில் 536.54 கோடி ரூபாய் என்ற அளவில் உள்ளது என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறியிருக்கிறார். ஆனால் கடந்த ஆண்டு பேராசிரியர் அவர்கள் 2011-2012ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதி நிலை அறிக்கையை அவையிலே வைத்தபோதே, பத்தி 106இல் "மொத்த வருவாய் வரவு ரூபாய் 79,413 கோடி என்றும், மொத்த வருவாய் செலவு ரூபாய் 78,974 என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக 2011-2012ஆம் நிதியாண்டின் இறுதியில் வருவாய்ப் பற்றாக்குறை நீங்கி, ரூபாய் 439 கோடி அளவிற்கு வருவாய் உபரி இருக்குமென

மதிப்பிடப்பட்டுள்ளது” என்று கூறியிருப்பதை அப்படியே மறைத்துவிட்டு, வருவாய் உபரியாக 173.87 கோடி ரூபாய் என்று இந்த ஆட்சியிலேதான் வருவாய் உபரி என்பதைப்போல பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நிதியமைச்சர் திரு.பன்னீர்செல்வம் படித்த நிதி நிலை அறிக்கை பத்தி 139இல், “பல முக்கியமான முயற்சிகளுக்கு மத்திய அரசு உதவிக் கரம் நீட்ட முன் வராத சூழ்நிலையிலும் கூட, நமது சொந்தக் கால்களின் வலுவிலேயே நின்று இந்தச் சாதனைகளைப் புரிந்துள்ளோம்” என்று கூறியிருக்கிறார். ஆனால் நிதி நிலை அறிக்கையின் பக்கம் 95இல் “மத்திய அரசு பகிர்ந்தளிக்கக் கூடிய மத்திய வரிகளில் 2012-2013ஆம் ஆண்டிற்கான பங்கு 15,032.47 கோடி ரூபாய் என்றும்; மத்திய அரசிடமிருந்து உதவி மானியங்களாக 8,064.29 கோடி ரூபாய் என்றும்” அவரே சுட்டிக்காட்டியிருப்பதை மறந்துவிட்டு சொந்தக் கால்களின் வலுவிலே நின்று சாதனைகளைப் புரிந்துள்ளோம் என்கிறாரே; அங்கேதான் இடிக்கிறது!

2011ஆம் ஆண்டு மே திங்களில் ஆட்சிக்கு வந்த பிறகு, மதிப்புக் கூட்டு வரி விகிதத்திலும், மதுபானங்கள், பீர் ஆகியவற்றின் மீதான மாநில கலால் வரியிலும், சில ஆவணங்களின் பதிவுக் கட்டணங்களிலும், வரியை உயர்த்திய அ.தி.மு.க. அரசு இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலும் 1500 கோடி ரூபாய்க்கு கூடுதல் வரிகளை சுமத்தியுள்ளது. ஐந்தாண்டு கால ஆட்சியில் எந்தவிதமான வரிகளையும் உயர்த்தாத தி.மு.க. அரசு எங்கே? ஆண்டுக் காண்டு வரிகளை உயர்த்தும் அ.தி.மு.க. அரசு எங்கே? என்பதை தமிழக மக்கள் ஒப்பிட்டுப் பார்த்தாலே உணர்ந்து கொள்ளலாமே!

தி.மு. கழக ஆட்சியில் குடிசை வீடுகளுக்குப் பதிலாக ஆண்டுக்கு 3 லட்சம் காங்கரீட் வீடுகள் வீதம் கட்டித்தரப்படும் என்று அறிவிக்கப்பட்டு பணிகள் சிறப்பாக நடைபெற்று வந்த நேரத்தில், அந்தத் திட்டத்திற்கு மூடு விழா நடத்தியதோடு, சூரிய ஒளி மூலம் மின் வசதி பெறும் 60 ஆயிரம் பசுமை வீடுகளை 1,080 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அ.தி.மு.க. அரசு 2011-2012ஆம் ஆண்டில் கட்டித்தரும் என்று நிதி நிலை அறிக்கையில் பத்தி 106இல் அறிவித்தார்கள். 60 ஆயிரம் வீடுகளில் எத்தனை வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள்?

நிதி நிலை அறிக்கை பத்தி 23இல் காவலர்களுக்கான குடியிருப்பு வசதியில் 100 சதவீத தேவையையும் நிறைவு செய்ய இந்த அரசு முடிவு செய்துள்ளது என்றும் இதற்காக கடந்த ஆண்டு 288 கோடி ரூபாய் செலவில் 3,440 குடியிருப்புகள் கட்ட ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் 2012-2013இல் 4,340 கூடுதல் குடியிருப்புகள் அமைக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் கடந்த ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட 3440 குடியிருப்புகளில் 1463 குடியிருப்புகள் மட்டுமே கட்டப்பட்டு ஒப்படைக்கப்பட்டதாக ஏடுகளிலே செய்தி வந்துள்ளது. ஏற்கனவே அறிவிக்கப்பட்ட வீடுகளையே இன்னும் கட்டி முடிக்கப்படாத நிலையில் மேலும் 4,340 வீடுகளைக் கட்டப்போவதாக அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கை பத்தி 68இல் "அரசாலும், பல்வேறு கூட்டு முயற்சிகளாலும் மொத்தம் 22,800 கோடி ரூபாய் முதலீட்டில் 3,800 மெகாவாட் மின்சார உற்பத்தி கூடுதலாகக் கிடைக்கும்" என்று சொன்னார்களே? என்னவாயிற்று?

பத்தி 71இல் ஆண்டுக்கு 20,000 தெரு விளக்குகள் வீதம் 1000 கிராமங்களில் 248 கோடி ரூபாய் செலவில் சூரிய சக்தியில் எரியும் ஒரு லட்சம் தெரு விளக்குகளை அமைக்கும் ஒரு மகத்தான திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும் என்று சொன்னார்களே? என்ன வாயிற்று? ஒரு லட்சம் தெரு விளக்குகளில் எத்தனை விளக்குகளை அமைத்திருக்கிறார்கள்?

அதே பத்தியில், 2011-2012ஆம் ஆண்டில் 200 கிராமங்களில் 20 ஆயிரம் தெரு விளக்குகள் சூரிய எரி சக்தியை பயன்படுத்தும் வகையில் மாற்றி அமைக்கப்படும் என்று சொன்னார்களே, எத்தனை கிராமங்களில் அமைத்திருக்கிறார்கள்?

சூரிய ஒளியில் மின்சாரம் தயாரிக்கும் பூங்கா ஒன்றை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் அமைக்கும் என்று சொன்னார்களே, எங்கே அந்த பூங்கா உள்ளது என்று பதிலுரையில் சொல்வார்களா?

தமிழகத்தில் மின் வெட்டு பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் புதிய பல மின் உற்பத்தி திட்டங்களை நிதி நிலை அறிக்கையிலே அறிவிக்க வேண்டுமென்பது பல வல்லுனர்களின் கருத்து என்றும், ஆனால் வெறும் 1500 கோடி ரூபாய் மட்டுமே

அந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருப்பதால் மின் துறை வல்லுனர் களும், பொருளாதார வல்லுனர்களும் ஏமாற்றம் அடைந்துள்ளனர் என்றும் ஏடுகளில் செய்தி வந்துள்ளது. சென்னைப் பல்கலைக் கழகப் பொருளாதார அளவியல் துறை பேராசிரியர் சீனிவாசன் மின் உற்பத்திக்கான முதலீடுகளை உயர்த்த வேண்டிய கட்டாயம் உள்ளது, பல்வேறு நிதிக் கட்டுப்பாடுகளுடன் உருவாக்கப்பட வேண்டிய மாநில நிதி அறிக்கையில் இத்திட்டத்திற்கு போதுமான நிதி ஒதுக்கீடு இல்லாமல் இருக்கிறது என்று கூறியிருக்கிறார். எந்த வழியைப் பின்பற்றி மின்வெட்டை அரசு தீர்க்கப் போகிறது என்ற எதிர்பார்ப்புக்கு தமிழக பட்ஜெட்டில் விடை எங்கும் இல்லை. ஒரு வேளை, கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட மின் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மின் உற்பத்தியைத் தொடங்கும்போது மின் வெட்டு மறைந்து விடும் என்ற உண்மையினை மறைத்திட முயற்சிக்கிறார்களா?

பத்தி 72இல் உலக வங்கியின் நிதி உதவியுடன் 2,500 கி.மீ. நீளமுள்ள நெடுஞ்சாலைகளை 5000 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தும் பணியை இந்த அரசு மேற்கொள்ளும் என்று சொன்னார்களே, அதற்கான விவரம் தெரியவில்லை. கூறுவார்களா?

2011-2012ஆம் ஆண்டில், தகுதியுள்ள மாணவர்களுக்கு 9.12 இலட்சம் மடிக்கணினிகளை வழங்குவதற்கு, 912 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று படித்தார்கள். ஆனால் 3 லட்சம் மடிக்கணினிகள் வாங்க உத்தரவு கொடுக்கப்பட்டதாகவும், அதுவும் வந்து சேரவில்லை என்கிறார்கள். என்ன உண்மை?

புதிய நில ஆர்ஜித கொள்கை வகுக்கப்படும் என்று கடந்த ஆண்டு சொன்னார்களே, என்னவாயிற்று?

பத்தி 94இல், "கிராமங்களில் வாழும் இளம் பெண்களுக்கு 'சானிடரி நாப்கின்' இலவசமாகவே வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதனால் இந்த ஆண்டுக்கு 46 கோடி ரூபாய் செலவாகும்" என்று பேரவையில் படித்தார்கள். எத்தனை பேருக்கு இதுவரை கொடுத்துள்ளார்கள்?

விவசாயத் தொழிலாளர் நல வாரியம் உட்பட 35 அமைப்புசாராத் தொழிலாளர் நலவாரியங்களில் 2 கோடியே 13 லட்சத்து 55 ஆயிரத்து 884 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு,

அவர்களில் 21 லட்சத்து 41 ஆயிரத்து 692 அமைப்பு சாரா தொழிலாளர் குடும்பங்களுக்கு தி.மு. கழக ஆட்சியில் 1011 கோடியே 62 லட்சத்து 81 ஆயிரத்து 687 ரூபாய் உதவித் தொகை அளிக்கப்பட்டது. ஆனால் தற்போது அந்த வாரியங்கள் தொடருமா, அந்த உதவித் தொகை அளிக்கப்படுமா என்பது, இந்த வரவு செலவு திட்டத்தை வரவேற்றவர்களுக்குத்தான் வெளிச்சம்!

அரசு அலுவலர்கள் மேல் இந்த அரசுக்கு எப்போதும் உள்ள கோபம் நீடிக்கிறது என நினைக்கிறேன். கழகம் ஆட்சியில் இருந்த போதெல்லாம் மத்திய அரசு எவ்வெப்போதெல்லாம் அகவிலைப்படியினை உயர்த்துகிறதோ, அதே நாளிலிருந்து தமிழக அரசும் தனது அலுவலர்களுக்கு அகவிலைப்படியினை உயர்த்தி வழங்கிடும் நடைமுறையைப் பின்பற்றி வந்தது. ஆனால் தற்போது மத்திய அரசு தனது அலுவலர்களுக்கு 7 சதவிகிதம் அகவிலைப்படி உயர்வை அறிவித்துள்ள போதிலும், தமிழக அரசு இந்த நிதி நிலை அறிக்கையிலே அது பற்றி மூச்சே விடவில்லை.

மொத்தத்தில் அ.தி.மு.க. அரசின் 2012-2013 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில்; விலைவாசியைக் குறைப்பதற்கோ அல்லது கட்டுப்படுத்துவதற்கோ - வேலை வாய்ப்புகளை உருவாக்கி மக்களிடம் வாங்கும் சக்தியைப் பெருக்குவதற்கோ - எவ்விதக் குறிப்பும் இடம் பெறவில்லை. பல உண்மைகளை மறைத்து, சிலவற்றைத் திரித்து திசை திருப்பும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. கடன் சுமை குறைக்கப்படவில்லை; ஆனால் வரிச் சுமை புதியதாக ஏற்றப்பட்டிருக்கிறது. மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்பட வில்லை. வெறும் வார்த்தை ஜாலங்களே நிறைந்திருக்கின்றன. இவை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடப் பயன்படுமா? சொன்னது என்ன? என்ன? நடந்தது என்ன? என்ன?

அன்புள்ள,

மு.க.

28-3-2012

3611. அண்ணாவின் கனவை அழிக்கத் துடிக்கும் ஆரியமாயை!

உடன்பிறப்பே,

தமிழர்களின் நீண்டகாலக் கனவான சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு தி.மு.கழகம் நீண்ட காலமாகத் தொடர்ந்து முயற்சி செய்து, 2005ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2ந்தேதி யன்று ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர் திருமதி சோனியாகாந்தி மற்றும் என்னுடைய முன்னிலையிலே பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் மதுரைக்கே வருகை தந்து, அந்தத் திட்டப் பணிகளைத் தொடங்கிவைத்து, திட்டப் பணிகளும் வேகமாக நடைபெற்றுவந்த நேரத்தில், அந்தத் திட்டம் நிறைவுற்றுவிட்டால் தி.மு.கழகத்திற்கும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கும் மிக முக்கியமான திட்டத்தைச் செயல்படுத்திய சாதனையின் காரணமாகச் சிறப்பான பெயர் வந்துவிடும் என்ற தீய எண்ணத்தோடு ஒரு கூட்டம் அதனைக் கெடுக்கின்ற முயற்சியிலே ஈடுபட்டு, நீதிமன்றம் வரை சென்று அந்தச் சேது சமுத்திரத் திட்டத்திற்கு முட்டுக் கட்டைபோடும் முயற்சியில் ஓரளவு வெற்றியும் கண்டது. அவர்களின் அந்த முயற்சிக்கு அந்தக் கூட்டம் "ராமர் பாலம்" வழியிலே உள்ளது, சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றினால் ராமர் பாலத்திற்கு குந்தகம் ஏற்படும் என்று காரணம் கூறியது. அவர்களின் அந்த முயற்சிக்கு மேலும் துணை புரியும் வகையில்தான் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இரண்டு நாட்களுக்கு முன்பு இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில், "ராமர் பாலத்தை தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்கும் வகையில் உச்சநீதி மன்றத்தில் மத்திய அரசு பதில் மனுதாக்கல் செய்ய வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் 23.7.1967 அன்று முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள்

கூட்டணிக் கட்சிகளுடன் சேர்ந்து எழுச்சி நாள் கூட்டங்கள் நடத்த முடிவு செய்தார். அதனையொட்டி, தமிழக சட்டப்பேரவையில் அனைவருடைய ஆதரவையும் கோரினார். அப்பொழுது அண்ணா அவர்கள்,

"சேது கால்வாய் திட்டம் - தூத்துக்குடி துறைமுகத் திட்டம் இரண்டும் ஒருங் கிணைந்தால் அதைத் தமிழகத்தின் ' சூயஸ் கால்வாய்' என்று கருதலாம்.

இப்போது சிலோனைச் சுற்றி கொழும்பு துறைமுகத்திற்குப்போய் கிட்டத்தட்ட 600 மைல்கள் சுற்றிக்கொண்டு வருகின்ற வெளிநாட்டுக் கப்பல்கள், இத்திட்டம் நிறைவேற்றப்படுவதன் மூலம் அந்நிலை மையை தவிர்த்துவிட இயலும்.

வெளிநாட்டுக் கப்பல்கள் - பிரமாண்டமான கப்பல்கள் இப்போது தூத்துக்குடி துறைமுகத்தில் நிற்க முடியாது. ஆழ்கடல் துறைமுகமாக இருக்குமானால் பெரிய கப்பல்கள் வர பல நாட்டுக் கப்பல்கள் வரத்தக்க பெரிய அனைத்து நாட்டுத் துறைமுகமாக மாறும்.

அப்படி மாறும்போது பல்வேறு வகையான தொழில்கள் கிடைக்கும். அப்படி கிடைக்குமானால் பொருளாதார வளர்ச்சி நிரம்ப ஏற்படும்"

- என்று கூறி தமிழக சட்டமன்றத்தில் சேது சமுத்திரத் திட்டத்தை வலியுறுத்தினார்.

இந்தச் சேது சமுத்திரத் திட்டத்தின் தொடக்க விழாவைத் தடுக்க வேண்டும் என்பதற்காக சிலர் நீதிமன்றத்தின் மூலமாக தடைபெற முயன்றனர்.

அது தொடர்பான வழக்கில், சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களின் பெஞ்ச்,

"தேசிய நலனுக்காக கொண்டு வரப்படும் சேது சமுத்திரத் திட்டத்தை தடை செய்யும் நோக்கத்தோடு மனுதார் நீதி மன்றத்துக்கு விரைந்து வந்து வழக்கு தொடுத்துள்ளார். சேது சமுத்திர திட்டம் நாட்டிற்கு நல்ல பலனை கொடுக்கும் என்பது எல்லோருக்கும்

தெரிந்த ஒன்றாகும். ஏனென்றால் தற்போது கப்பல்கள் இலங்கை நாட்டைச்சுற்றி வங்காள விரிகுடா கடலுக்கு வரவேண்டியுள்ளது. பாக் ஜலசந்தியிலே குறுக்காக கப்பல் கால்வாய் அமைத்தால் பெருமளவு பணமும், நேரமும் சேமிக்கப்பட ஏதுவாகும். இந்தக் கால்வாய் திட்டம் நல்ல விளைவுகளை ஏற்படுத்தும். ஆகவே விழா வுக்கு தடை கிடையாது".

-என்று கூறி தீர்ப்பளித்தது.

சேது சமுத்திரத் திட்டம் வந்துவிடக் கூடாது என்று தற்போது உள்மனதில் கெட்ட நோக்கோடு திட்டமிட்டு செயலாற்றும் அ.தி.மு.க.வினர் 2001 அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் இதே சேது சமுத்திரத் திட்டம் பற்றி என்ன குறிப்பிட்டார்கள் தெரியுமா?

"சேது சமுத்திரத் திட்டத்தால் நம் நாடு மட்டும் அல்ல, தென்கிழக்கு ஆசிய நாடுகளும் கடலோரப்பகுதிகளில் அமைந்துள்ள நாடுகள் அனைத்தும் பயன் அடையும். வாணிபமும் தொழிலும் பெருகும். அந்நிய முதலீடு அதிகரிக்கும். அந்நியச் செலாவணி அதிகம் கிடைக்கும். கப்பலின் பயணத் தூரம் பெருமளவுக்குக் குறையும். எரிபொருளும் பயண நேரமும் மிச்சமாகும். ஏற்றுமதி, இறக்குமதி அதிகரிக்கும். குறிப்பாக, ராமநாதபுரம் போன்ற மிகப் பிற்பட்ட தமிழக தென் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படும். வேலை வாய்ப்பு பெருகும். தூத்துக்குடி துறைமுகம் சர்வதேச அளவில் விரி வடையும். சுற்றுலா வளர்ச்சி அடையும். இன்ன பிற நன்மைகளைத்தர இருக்கும் இத்திட்டத்தின் தேவையை முக்கியத்துவத்தை உணர்ந்து, நிதி நெருக்கடியை ஒரு சாக்காகக் கூறிக்கொண்டிருக்காமல், உலக வங்கிபோன்ற சர்வதேச நிறுவனங்களுடன் மத்திய அரசு தொடர்பு கொண்டு வேண்டிய நிதியைத் தேடி இத்திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து ஒரு காலக்கெடுவுக்குள் இத்திட்டத்தை நிறைவேற்றும்படி மைய அரசை விடாது தொடர்ந்து வலியுறுத்தும்"

மீண்டும் 10.5.2004 அன்று வெளியிடப்பட்ட அ.தி.மு.க. நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில்,

"தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியிலும், நாட்டின் ஒட்டுமொத்தத் தொழில் மேம்பாட்டிலும் முக்கிய பங்காற்றவிருக்கும் சேது சமுத்திரத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க, மைய ஆட்சியில், அமைச்சுப் பொறுப்பில் ஐந்தாண்டு காலம் இருந்த தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. கட்சிகள் தவறி விட்டதை இந்த நாடு நன்கறியும். இத் திட்டத்திற்குப் போதிய நிதியினை உடனடியாக ஒதுக்கி, ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றிட வேண்டுமென்று அமைய இருக்கும் மைய அரசை அதி.மு.க. வலியறுத்தும்."

என்று கூறியிருந்தார்கள்.

இதற்குப் பிறகுதான் சேது சமுத்திரத் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு வேகமாக நடந்து வந்த நேரத்தில், அதனைத் தடுப்பதற்கான முயற்சியில் சிலர் ஈடுபட்ட நிலையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 2009ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில் -

"தமிழர்களின் நீண்டகால கோரிக்கையான சேதுக்கால்வாய் திட்டம் தமிழக முதல்வர் கலைஞர் தொடர்ந்து வலியுறுத்தியதின் காரணமாக 272005 அன்று தொடங்கப்பட்டு பணிகள் நிறைவடையும் நேரத்தில் மத காரணங்களைக் காட்டி தடை செய்யப்பட்டுள்ளது. உச்சநீதி மன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை மத்திய அரசு விரைந்து முடித்து, இத்திட்டத்தின் எஞ்சிய பணிகளை முடித்து தமிழ்நாட்டின் தென்மாவட்ட பொருளாதார வளர்ச்சிக்கும், இந்தியாவின் பாதுகாப்பிற்கும் வழிகோல வேண்டும் என்று தி.மு.கழகம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளும்"

என்று தெரிவித்திருந்தோம்.

ஆனால் 16-4-2009 அன்று, அ.தி.மு.க. சார்பாக வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில் சேது சமுத்திரத்திட்டம் பற்றி இறுதியாகக் கூறப்பட்டிருப்பது என்ன?

"……அதிக வேகமும் மிக அதிக எடைகொண்ட சரக்குகளை ஏற்றிச் செல்லும் திறனும் கொண்ட கப்பல்கள் பயணிக்கும் இன்றைய நவீன யுகத்தில், இது தற்காலத்திற்கு ஒவ்வாத திட்டம் என்ற உண்மை வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளது. இப்போது திட்டமிட்டுள்ளபடி இந்தக் கால்வாய் திட்டம் நிறைவேற்றப்படுவதால், நாட்டிற்கு குறிப்பிடத்தக்க அளவுக்கு எந்தப் பொருளாதார ஆதாயமும் கிடைக்க வாய்ப்பே இல்லை. மேலும், நாடு முழுவதும் உள்ள கோடிக்கணக்கான மக்களின் மத உணர்வுகளைப் புண்படுத்தும்"

என்றெல்லாம் அ.தி.மு.க. கூறி, இந்தத் திட்டத்தையே ரத்து செய்ய வேண்டும் என்றார்கள்.

சேதுத் திட்டம் வேண்டுமென்று நாமெல்லாம் குரல் கொடுக்கின்ற நேரத்தில் - மதத்தைக் காட்டி சிலர் எதிர்க்கிறார்கள், புராணத்தைக் காட்டி எதிர்க்கிறார்கள்; கடவுளின் பெயரைச் சொல்லி, அந்தப் பாலத்தை இடித்தால் நாட்டிற்கே ஆபத்து, இந்தியாவிற்கே ஆபத்து என்றெல்லாம் சொல்லி பிரச்சாரம் செய்கிறார்கள்; நீதி மன்றம் செல்கிறார்கள்; இன்னும் சிலர் இவர்களுக்கு ராமனைப் பிடிக்காது, ராமனுக்கு விரோதிகள், ஆகவேதான் ராமர் பாலத்தை இடிக்கத் தொடங்குகிறார்கள் என்று நம்மைப் பார்த்துச் சொல்கிறார்கள். அவர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். ராஜாஜி அவர்களின் நினைவிடத்திற்கு என்ன சின்னம் வைக்கலாம் என்று என்னிடம் கேட்டபோது, அவருக்குப் பிரியமான கடவுள் ராமர், அவருடைய கிரீடத்தையே கோபுரமாக வையுங்கள் என்று நான் கூறி, அதைத்தான் அங்கே வைத்திருக்கிறார்கள். ராமர் பெயரால் உள்ள எதுவும் இருக்கக் கூடாது என்பதற்காகவா அந்தப் பாலம் வேண்டாமென்கிறோம். இல்லாத பாலத்தை இடிப்பதாக ஏன் பிரச்சாரம் செய்கிறீர்கள் என்றுதான் கேட்கிறோம்.

இன்னும் சொல்லவேண்டுமேயானால், வாஜ்பாய் அவர்கள் பிரதமராக இருந்த காலத்திலேயே எங்களின் வலியுறுத்தலின் பேரில் 1996ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மத்திய அரசின் சார்பாக தூத்துக்குடி துறைமுக நிர்வாகம், நாக்பூரில் உள்ள தேசிய

சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனத்துக்கு சுற்றுச் சூழல் ஆய்வுப் பணியை வழங்கியது. அக்டோபர் 2002இல், அந்த "நீரி" நிறுவனத்தின் பரிந்துரையான "ஆடம்ஸ் பிரிட்ஜ்" எனப்படும் (இதைத்தான் ராமர் பாலம் என்கிறார்கள்) ஆதாம் பாலத்தை வெட்டிச் செல்லும் வழித் தடம்தான் சிறப்பானது என்று முடிவு செய்யப்பட்டது.

அ.தி.மு.க. தனது 2001ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே பக்கம் 83-84இல்,

> "இந்திய தீப கற்பத்தைச் சுற்றி இதுவரை தொடர்ச்சியான கப்பல் போக்குவரத்திற்கு ஏற்ற பாதைகள் இல்லை. மேற்கிலிருந்து கடல் வழியாக கிழக்கு நோக்கி கப்பல்கள் செல்ல வேண்டுமானால் இலங்கையைச் சுற்றிக் கொண்டுதான் செல்ல வேண்டியுள்ளது. இதற்குத் தீர்வாக அமைவதுதான் சேதுசமுத்திரத் திட்டம். இத்திட்டத்தின்படி ராமேஸ்வரத்திற்கும், இலங்கையின் தலை மன்னாருக்கும் இடையில் ஆடம்ஸ் பிரிட்ஜ் பகுதியில் கப்பல் போக்குவரத்திற்குத் தடையாக உள்ள மணல் மேடுகள், பாறைகள் அகற்றி ஆழப்படுத்தி கால்வாய் அமைப்பது சேது சமுத்திரத் திட்டத்தின் தலையாய நோக்கம்"

என்று "ஆடம்ஸ் பிரிட்ஜ்" என்றும் மணல் மேடுகள், பாறைகள் என்றெல்லாம் வர்ணித்து விட்டு, இப்போது திடீரென பிரதமருக்கு, "ராமர் பாலத்தை தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்க வேண்டும்" என்று தமிழக முதலமைச்சர் கடிதம் எழுதியிருக்கிறார் என்றால் ஏன் இந்த இரட்டைவேடம் - முன்னுக்குப் பின் முரண்பாடு என்று தமிழகமக்கள் புரிந்துகொள்ள வேண்டாமா?

கூடங்குளம் அணு மின் நிலையத்தைத் தொடங்கும்போது வாயை மூடிக் கொண்டிருந்து விட்டு, பத்தாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் செலவழித்து, அத்திட்டம் முடிவடைகின்ற நேரத்தில் அந்தத் திட்டம் கூடாது என்று எதிர்ப்பது எப்படியோ, அப்படித்தான் சேது சமுத்திரத் திட்டம் தொடங்கப்பட்டபோது வாயை மூடி மௌனமாக இருந்துவிட்டு, தற்போது பல கோடி ரூபாய்களைச் செலவழித்து முடித்து விட்ட நிலையில் ராமர் பாலம் என்ற பெயரைப் பயன்படுத்தி முட்டுக்கட்டைபோட நினைப்பது

சரிதானா - தமிழகத்தின் வளர்ச்சிக்கு ஏற்றது தானா - அறிவியல் ரீதியாக ஏற்புடையது தானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதனால்தான் நமது கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி சோனியா காந்தி அவர்களையும், பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களையும் நேரில் சந்தித்து சேது சமுத்திரத் திட்டத்தை விரைவில் முடித்திட உதவிட வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். கழகத்தின் சார்பில் நானும் அந்தக் கோரிக்கையை ஏற்க வேண்டுமென்று மத்திய அரசை மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் ஏதாவதொரு கற்பனைக் காரணத்தை முன்வைத்து, இத்திட்டத்திற்கு ஊறு விளைவிக்க நினைப்போர் யார் என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் புரிந்து கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அவர்கள் கொள்கைக் குழப்பவாதிகளா? தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு குழி தோண்டும் குதர்க்க வாதிகளா? என் செய்வது? "ஆரிய மாயை" - எழுதிய அண்ணாவின் கனவையே அழிக்கத் துடிக்குதே "ஆரியமாயை!"

அன்புள்ள,

மு.க.

03-04-2012

3612. அராஜகத்திற்கு முடிவுகட்ட; அணி திரள்வோம்!

உடன்பிறப்பே,

அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற 2011 மே திங்கள் முதல் ஏழையெளிய தமிழக மக்களை வாட்டி வதைத்திடும்வண்ணம் தொடர்ந்து புதிய வரி விதிப்பு, பால் விலை உயர்வு, பேருந்துக் கட்டண உயர்வு, மின் கட்டண உயர்வு என்று வரலாறு காணாத அளவில் விதிக்கப்பட்டுள்ள நிலையில், மின்சாரமாவது முறையாக வழங்கப்படுகிறதா என்றால் அதுவும் இல்லை. கிராமங்களிலும் நகரங்களிலும் உள்ள மக்கள் பல மணி நேரம் மின்வெட்டு கொடுமை காரணமாக இருளில் படாதபாடு படுகிறார்கள். தேர்வு நேரத்தில் மாணவர்கள் படிக்க இயலாமல் திணறுகிறார்கள். ஆனால் ஆட்சியாளர்கள் இதுபற்றியெல்லாம் கிஞ்சிற்றும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. எதிர்க்கட்சி யினரை எந்தெந்த வழிகளில் எல்லாம் பழி வாங்கலாம், அவர்கள் மீது என்ன வழக்குகளைத் தொடுக்கலாம், முடிந்து போன வழக்குகளையெல்லாம் தூசி தட்டி மீண்டும் கிளப்பலாம் என்பதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளார்கள். இதற்கிடையே அவர்களிடையே "உள்நாட்டு" குழப்பம் வேறு. அக்காளும், தங்கையும் கும்பகோணம் மகாமகத்திற்குச் சென்று ஒருவருக்கொருவர் மாறி மாறி தீர்த்த அபிஷேகம் செய்து கொண்ட சம்பவம், பிறகு கோயில் கோயிலாகச் சென்று பூஜை புனருத்தாரணம் செய்து கொண்டு விட்டு, இப்போது தமிழ் மக்கள் காதுகளிலே பூ சுற்ற எண்ணி தவறு செய்தவர்களைத் தண்டிக்கப் போகிறேன், வீட்டை விட்டே அனுப்பி விட்டேன் என்றெல்லாம் கதைகளை ஜோடித்து, அவரது ஆட்சியிலே கடந்த ஒன்பது மாத காலமாக அளப்பரிய தவறுகளைச் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறேன் என்ற பெயரால் பரபரப்பை உண்டாக்கி விட்டு, தற்போது அக்காளும் தங்கையும் சேர்ந்து கோவில்களுக்கு விடியற்காலையிலேயே அபிஷேகம் செய்யப் புறப்பட்டு விட்டார்கள். இதைப்பற்றி இந்தக் கிழமை "ஆனந்த

விகடன்"; கட்டுரை ஒன்றை எழுதியுள்ளது. அந்தக் கட்டுரையின் ஒரு பகுதியினை இங்கே சுருக்கித் தருகிறேன்:

"மக்களை மடையர்களாக நினைக்கும் அரசியல் தலைவர்கள் இருக்கும் நாட்டில் தான் இது மாதிரி எல்லாம் நடக்கும். ஜெயலலிதா - சசிகலா நட்பு - பிரிவு - மீண்டும் நட்பு - இதைத்தான் ஞாபகப்படுத்துகிறது! சசிகலாவின் பெயரைப் பயன்படுத்தி அவரது சொந்தங்கள் மற்றும் நண்பர்கள் தங்களைத் தாங்களே அ.தி.மு.க. பொதுச் செயலாளர்களாக நினைத்துக் கொண்டு செயல்பட்டது சசிகலாவுக்கும் தெரியாது என்பது மட்டும் அல்ல; தனக்கும் இதுபற்றித் தெரியாது என்று ஜெயலலிதா சொல்ல வருவதையும் நம்ப முடியாது. சசிகலாவுக்கு இந்த மாதிரியான விஷயங்கள் தெரியுமா; தெரியாதா என்பது நாட்டுக்கு முக்கியமான சமாசாரம் அல்ல. ஏனென்றால் சசிகலா இந்த நாட்டு மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பில் இல்லை. ஆனால் அந்தக் கடமை ஜெயலலிதாவுக்கு உண்டு. காண்ட்ராக்ட் எடுப்பது - கமிஷன் வாங்குவது - ஆட்களை நியமிப்பது - அதிகாரிகளை மாற்றுவது - மாவட்டச் செயலாளர்களுடன் மல்லுக்கு நிற்பது - மந்திரிகளிடம் பணம் கேட்பது - எம்.எல்.ஏ.க்களிடம் மாமூல் வசூலிப்பது என்பது மாதிரியான எத்தனையோ சமாசாரங்கள் சசிகலாவின் குடும்பத்தினர், நண்பர்கள் என்று சொல்லிக் கொண்ட பலரால் நடத்தப்பட்டன. எதுஎதுவோ நடந்தபோது எல்லாம் கண்டும் காணாததுபோல் இருந்த ஜெயலலிதா, திடீரென சதி சதி சதி என்று கிளர்ந்து எழுந்ததற்கு என்ன காரணம்? ஜெயலலிதா அவர்களே, இன்னொரு நாடகத்தைப் பார்க்கும் மன நிலையில் தமிழ்நாடு இல்லை !"

★

ஜெயலலிதா நடத்துவது நாடகம் என்று இவ்வாறு தோலுரித்துக் காட்டியிருக்கிறது "ஆனந்த விகடன்".

அவையிலே தாக்கல் செய்த நிதி நிலை அறிக்கையிலே தி.மு. கழக ஆட்சியிலே சட்டம், ஒழுங்கு சீர் கெட்டு விட்டது என்று

படித்தார்கள். ஆனால் தற்போது என்ன நிலை? நினைத்தால் கைது - மனது வைத்தால் விடுதலை - எதற்கெடுத்தாலும் குண்டர் சட்டம் - நள்ளிரவிலும்கூட எவர் வீட்டிலும் நுழைந்து எதை வேண்டுமென்றாலும் பேசி காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லலாம் என்ற சூழல் - கொலை நடக்காத நாட்கள் தமிழகத்திலே உண்டா? கொள்ளை நடக்காத, செயின் பறிப்பு நடக்காத நகரங்கள் உண்டா ?

எதற்கெடுத்தாலும் பழிவாங்கும் போக்கு! கடந்த கால ஆட்சியில் செய்யப்பட்ட நல்ல திட்டங்களையெல்லாம் தேடித் தேடிப் பார்த்து அதற்கு மூடு விழா செய்ய முனைகின்ற சம்பவங்கள் ஒன்றா? இரண்டா? ஆயிரம் கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட புதிய தலைமைச் செயலகம் பொது மக்களுக்காகப் பயன்படுத் தப்படாமல் கலனாகிக் கொண்டிருக்கின்றது.

அந்தக் கட்டிடத்தை ஒட்டி எழுப்பப்பட்ட தலைமைச் செயலகத்தின் இரண்டாவது கட்டப் பணிகள் முழுமையடையாமல் அப்படியே நின்று கொண்டிருக்கின்றன. கையிலேயே வெண் ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவதைப் போல ஜெயலலிதா வீம்புக்காக இந்தப் பணிகளை அப்படியே விட்டு விட்டு, நாமக்கல்லார் மாளிகையை 28 கோடியிலே புதுப்பிக்கப் போகிறேன் என்று புறப்பட்டிருக்கிறார். அதுபோலவே அண்ணா நூற்றாண்டு நினைவுநூலகம் ஆசியா கண்டத்திலேயே மிகப் பெரிய அளவிலே கட்டப்பட்டது; அதை மாற்றப் போகிறேன் என்றார் ஜெயலலிதா. தற்போது அது நீதிமன்றத் தடையினால் தப்பிப் பிழைத்திருக்கின்றது. செம்மொழி ஆய்வு நிறுவனம், தமிழர்களின் எத்தனை ஆண்டுக் காலக் கனவு அது. ஆனால் இப்போது செம்மொழி என்று சொன்னாலே அம்மையாருக்குப் பிடிக்கவில்லை. ஏன்; செம்மொழிப் பூங்காவைக்கூட வறண்ட பாலைவனமாக்குவேன் என்கிறார். மறைமலை அடிகளார் தலைமையில் தமிழ்ப் புலவர்கள் 500 பேர் கூடி முடிவெடுத்த தைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு என்பதை ஏற்க மறுத்து "ஆரியமாயை"க்கு கைலாகு கொடுத்து விட்டார். விரைவில் வருகின்ற "சித்திரை" முதல் நாளை சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று அரசிடமிருந்து வாய்மொழி ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதாம். 1800 கோடி ரூபாய் செலவில் துறைமுகம் - மதுரவாயிலை இணைக்கக் கூடிய, சென்னை

மாநகருக்குப் பெரிதும் பயன் தரக்கூடிய "பறக்கும் சாலை" திட்டம் இந்தியப் பிரதமர் அவர்களே நேரில் வந்து அடிக்கல் நாட்டிய திட்டம் - 500 கோடி ரூபாய்க்கு மேல் செலவழிக்கப்பட்டு விட்டது - மத்திய அரசின் அந்தத் திட்டத்தை நிறுத்து என்று ஆணையிடுகிறார். மத்திய அரசின் செயலாளரே நமது தலைமைச் செயலாளருக்கு அந்தத் திட்டம் பற்றிய அத்தனை ஆய்வுகளும் நடந்து முடிந்த பிறகுதான் திட்டம் தொடங்கப்பட்டது என்று விளக்கமளித்துள்ளார். அதுபோலவே தமிழகத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையான சேது சமுத்திரத் திட்டத்திற்காக அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோதே எழுச்சி நாள் நடத்தி, திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து வலியுறுத்தி, 2005ஆம் ஆண்டு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் கிடைக்கப்பெற்று, காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா அம்மையார் முன்னிலையில், பிரதமர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட அந்த திட்டத்திற்கான பணிகள் எல்லாம் முடிவுறும் கட்டத்தில் "ராமர் பாலம்" என்ற பெயரைப் பயன்படுத்தி அத்திட்டத்தையே கிடப்பில் போடப் பார்க்கிறார்!

கூடங்குளம் அணு மின் நிலையப் பணிகள் ஏற்கனவே திட்டமிட்டபடி ஆறு மாதங்களுக்கு முன்பே நடந்து முடிந்து தமிழகத்திற்கு ஆயிரம் மெகாவாட்டுக்கு மேல் மின்சாரம் தற்போது கிடைத்துக் கொண்டிருக்க வேண்டியதையே மாற்றிடுகின்ற அளவிற்கு, போராட்டக்காரர்களுடன் சேர்ந்து அந்தத் திட்டத்தை தொடரக் கூடாது என்று அமைச்சரவையிலே தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்குக் கடிதமும் எழுதி, தற்போது அதிலேயும் இரட்டை நிலை எடுத்து தன்னைக் காட்டிக் கொண்டிருக்கின்ற மாபாதக செயல்!

பாவம், பரிதாபத்திற்குரிய மக்கள் நலப் பணியாளர்கள்! அவர்கள் தி.மு. கழக ஆட்சியிலே நியமனம் செய்யப்பட்டவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக - அ.தி.மு.க. ஆட்சிக்கு வரும்போதெல்லாம் அவர்களை பணியிலிருந்து நீக்குகின்ற குரூரம்! உயர்நீதிமன்றம், உச்ச நீதி மன்றம் ஆகியவை; அவர்களை மீண்டும் பணியிலே சேர்க்க வேண்டுமென்று தீர்ப்புக்கு மேல் தீர்ப்பு கூறியும், பணியிலிருந்து நீக்கப்பட்ட காரணத்தால் இதுவரை 20க்கு மேற்பட்ட மக்கள் நலப் பணியாளர்கள் தங்கள் இன்னுயிரையே பலி கொடுத்ததற்குப் பிறகும் மனம் இரங்காமல்

13 ஆயிரம் குடும்பங்களை நடுத்தெருவிலே நிற்க வைத்துப் பிடிவாதம் காட்டுகின்ற முதலமைச்சரின் ஈவு இரக்கமற்ற போக்கு!

சட்டமன்ற மரபுகளையெல்லாம் குழி தோண்டிப் புதைத்து விட்டு, எதிர்க்கட்சியினர் முழுமையாக கருத்துக்களைச் சொல்வதற்கு அனுமதி மறுத்து ஜனநாயகத்திற்கெதிராக சதிராட்டம் போடுகிறது ஜெயலலிதா அரசு! "நானே எல்லாம்; நானே இந்த மாநிலம்!" என்ற தன்முனைப்பு!

ஜெயலலிதா அரசின் இத்தனை அடாவடிச் செயல்களையும், அட்டூழிய நடவடிக்கைகளையும், தமிழ் - தமிழர்க்கெதிரான போக்குகளையும் கண்டிக்கின்ற வகையிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாளை - ஏப்ரல் 9 திங்கள்கிழமையன்று, மாவட்டத் தலைநகரங்களில் எல்லாம் அறப்போர் ஆர்ப்பாட்டங்களும் - அதனைத் தொடர்ந்து ஏப்ரல் 15 ஞாயிற்றுக்கிழமையன்று, தமிழகம் முழுவதிலும் கழகத்தின் சார்பில் கண்டனப் பொதுக்கூட்டங்களும் நடைபெறவுள்ளன. எனவே ஏப்ரல் 9ஆம் தேதி நடைபெறுகின்ற அறப்போர் ஆர்ப்பாட்டங்களிலும், ஏப்ரல் 15ஆம் தேதி நடைபெறுகின்ற கண்டனப் பொதுக் கூட்டங்களிலும் கழகத் தோழர்களும், பொது மக்களும் ஆயிரம், இலட்சம் எனக் கலந்து கொண்டு, அ.தி.மு.க. வின் கொடுங்கோல் ஆட்சிக்கு எச்சரிக்கை கொடுப்போம்! அராஜகத்திற்கு முடிவு கட்ட; அணி திரள்வோம்!

அன்புள்ள,

மு.க.

08-04-2012

3613. புத்தியுள்ள தமிழா; நீ புரிந்துகொண்டால் சரி!

உடன்பிறப்பே,

நான் நேற்றையதினம் எழுதிய கடிதத்தில், "மறைமலை அடிகளார் தலைமையில் தமிழ்ப் புலவர்கள் 500 பேர் கூடி முடிவெடுத்த தைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு என்பதை ஏற்க மறுத்து "ஆரியமாயை"க்கு கைலாகு கொடுத்துவிட்டார் ஜெயலலிதா! -விரைவில் வருகின்ற "சித்திரை" முதல் நாளை சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று அரசிடமிருந்து வாய்மொழி ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதாம்" என்று எழுதியிருந்தேன். ஆனால் நேற்று மாலையிலேயே ஏடுகளில் வந்த செய்தி, வாய்மொழி ஆணையாக அல்ல, அதிகாரப்பூர்வமாக வெளிவந்துள்ள செய்தி, "சித்திரை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு தினமாகும்" என்றும் அந்த நாளை மிகமிகக் கோலாகலமாக விமரிசையாகக் கொண்டாட வேண்டுமென்றும் முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார் என்றும்; தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் ஏப்ரல் 13ந்தேதியன்று இதற்காக நடத்தப்போகும் விழாவில் முதல் அமைச்சரே பங்கேற்று விருதுகளை வழங்கப்போகிறார் என்றும் சொல்லப்பட்டுள்ளன.

நான் நேற்றையதினம் எழுதியிருந்ததைப் போல கடந்த மே திங்களில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்றுப் பொறுப்புக்கு வந்தது முதல், அதுவே நிரந்தரமான வெற்றி - இனி தோல்வி என்பதே இல்லை என்ற இறுமாப்பில்; தி.மு.கழக ஆட்சியில் நடைபெற்ற முக்கியத் திட்டங்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் செயலில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதை தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவார்கள்.

23-1-2008 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் தனது உரையிலே செய்த அறிவிப்பில்,

"பெரும்புலவரும், தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தவருமான மறைமலை அடிகளார் தலைமையில் ஐநூறுக்கும் மேற்பட்ட புலவர் பெருமக்கள், 1921ஆம் ஆண்டு சென்னை, பச்சையப்பன் கல்லூரியில் ஒன்றுகூடி, தமிழர்களுக்கென்று ஒரு "தனி ஆண்டு" தேவை என்று கருதி, அய்யன் திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டு ஒன்றினைப் பின்பற்றுவ தென்றும், அதையே "தமிழ் ஆண்டு" எனக் கொள்வ தென்றும், திருவள்ளுவர் பிறந்த ஆண்டு கி.மு.31 என்றும் முடிவெடுத்தார்கள். அந்தக் கருத்தினை, 37 ஆண்டுகளுக்கு முன்பே, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏற்றுக் கொண்டு, 1971ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு நாட்குறிப்பிலும், 1972ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசிதழிலும் நடைமுறைப்படுத்திட ஆணை பிறப்பித்தார். திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும் தைத் திங்கள் முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என்பது, ஒட்டுமொத்தமாக எல்லாத் தமிழ் அறிஞர்களும் ஒப்புக் கொண்டுள்ள உண்மை என்பதால்; தைத் திங்கள் முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என அறிவித்து நடைமுறைப்படுத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது. எனவே, பொங்கல் திருநாளைத் தமிழர் திருநாளாகக் கொண்டாடி வரும் தமிழ்நாட்டு மக்கள்; இனி - தமிழ்ப் புத்தாண்டு பிறந்த நாளாகவும் இணைத்து இந்நாளை இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில், வாழை, மா, பலா என முக்கனித் தருக்களை நாட்டி; வண்ண வண்ணக் கோலங்களிட்டு; வரிசை விளக்குகளால் ஒளியுமிழ் இல்லங்கள் புது எழில் காட்டிட; புத்தாடை புனைந்து தமிழ்மானம், தன்மானம் போற்றிப் பாடியும், ஆடியும்; சமத்துவ உணர்வு பரப்பியும்; தமிழ்ப் புத்தாண்டு இதுவெனத் துள்ளும் மகிழ்ச்சியால் அன்பை அள்ளிப் பொழிவர்"

என பலத்த கைதட்டலுக்கிடையில் அறிவித்தார். தி.மு.கழக ஆட்சியில் செந்தமிழரெல்லாம் பெருமகிழ்ச்சியும், பெருமிதமும் கொள்ளத்தக்க வகையில் செய்யப்பட்ட அறிவிப்பு இது என்ற ஒன்று போதாதா ஜெயலலிதாவுக்கு! உடனே அதற்கு எதிர் நடவடிக்கையைத் தொடங்கி விட்டார்.

மறைமலை அடிகள் தலைமையில் தமிழ்த் தென்றல் திரு.வி. கல்யாணசுந்தரனார், தமிழ்க் காவலர் கா. சுப்பிரமணியப்பிள்ளை, சைவப் பெரியார் சச்சிதானந்தப்பிள்ளை, நாவலர் ந.மு. வெங்கடசாமி நாட்டார், நாவலர் சோமசுந்தர பாரதியார், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் உள்ளிட்ட அறிஞர் பெருமக்கள் எல்லாம் கலந்து கொண்ட அந்தக் கூட்டத்தில் அவர்கள் எடுத்த முடிவுகள் மூன்று :-

1. திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டாகப் பின்பற்றுவது;

2. அதனையே தமிழாண்டு எனக் கொண்டாடுவது;

3. வழக்கத்தில் திருவள்ளுவர் காலம் கி.மு. 31ஐக் கூட்டினால் திருவள்ளுவராண்டு வரும் என்பதனை மேற்கொள்வது என்பன வாகும்.

அதன் பிறகு 1939ஆம் ஆண்டு திருச்சியில் அகில இந்தியத் தமிழர் மாநாடு நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் கூடியது. அதில், தந்தை பெரியார், கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் உமாமகேசுவரனார், பேராசிரியர் கா.சுப்பிரமணியம், தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், திரு.வி.க., மறைமலை அடிகளார், பி.டி. இராஜன், ஆற்காடு ராமசாமி முதலியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பட்டுக்கோட்டை அழகிரி உட்பட பலரும் பங்கேற்றனர். அந்த மாநாடும் தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்றும், பொங்கல் திருநாளே தமிழர் திருநாள் என்றும் கூறியது.

திராவிடர் கழகத் தலைவர், தமிழர் தலைவர், இளவல் வீரமணி அவர்களோ "தைத் திங்கள் முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம் என்ற நமது நீண்ட நாள் கோரிக்கைக்கு வெற்றி கிடைத்துள்ளது. தமிழர் பண்பாட்டு வரலாற்றுத் திசையில் புதியதோர் மறுமலர்ச்சி அத்தியாயம் இது. பாராட்டுகிறோம், மகிழ்ச்சி அடைகிறோம்" என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆளுநரின் அறிவிப்பு வெளிவந்த மறுநாளே தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் விடுத்த அறிக்கையில் "தொன்மைக் காலம் தொட்டே சமயம் சார்ந்தும், இயற்கை வாழ்வு சார்ந்தும், மண்ணும் மனிதர்களும் சார்ந்தும், விவசாய வாழ்வு சார்ந்தும் தைத் திங்கள் முதல் திருநாளே தமிழர் வாழ்வு சார்ந்த எழுச்சியும் மகிழ்ச்சியும் ஊட்டுகின்ற

திருநாளாகும். மறைமலை அடிகளார் போன்ற மூத்த தனிப்பெரும் தமிழ் அறிஞர்கள் தைத் திங்கள் முதல் நாளைத் தொடக்கமாய்க் கொண்டு அய்யன் திருவள்ளுவர் பெயரில் தமிழ்ப் புத்தாண்டாய் அறிவித்ததை நடை முறைப்படுத்த உள்ள முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றி, பாராட்டுக்கள்" என்று தெரிவித்திருந்தார்.

கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் விடுத்த அறிக்கையில், "தைத்திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டின் தொடக்க நாள் என்று ஆளுநர் உரையில் கலைஞர் அரசு அறிவித்திருப்பது கண்டு உணர்வுமிக்க தமிழர்கள் கொண்டாடிக் கூத்தாடுகிறார்கள். எல்லா தேசிய இனங்களுக்கும் அழிக்க முடியாத சில அடையாளங்கள் உண்டு. தமிழர்களுக்கு நில அடையாளம் இருக்கிறது; இன அடையாளம் இருக்கிறது; ஆனால் கால அடையாளம் மட்டும் குழப்பத்தில் இருந்தது. அந்தக் குழப்ப இருள் உடைந்து விடிந்து இன்று வெளிச்சம் வந்திருக்கிறது. அய்யன் திருவள்ளுவரை கருத்துலகத்தின் அளவுகோலாய்க் காட்டியது திராவிட இயக்கம். இன்று காலத்தின் அளவுகோலாகவும் திருவள்ளுவரைக் கருதச் செய்திருக் கிறது கலைஞர் அரசு. இது சரித்திரத்தைச் சரி செய்யும் சரித்திரமாகும்" என்று எழுதியிருந்தார்.

மலேசியா நாட்டில் தமிழர்கள் தற்போது தை முதல் நாளையே புத்தாண்டாகக் கொண்டாடி வருகிறார்கள். டாக்டர் மு.வரதராசனார் அவர்கள், "முன் காலத்தில் வருடப் பிறப்பு சித்திரை முதல் நாளாக இருந்ததில்லை. தை முதல்நாளைத்தான் வருடப் பிறப்பாகப் பெரியோர்கள் கொண்டாடி னார்கள். அந்த நாளில் புதிய ஆடைகளை வாங்கி உடுப்பார்கள். தெருவில் புது மண் போட்டு, செம்மண் இட்டு, ஒழுங்கு செய்வார்கள். ஊரெல்லாம் திருவிழா நடத்துவார்கள். இப்படி நகரங்களில் புத்தாண்டு பிறப்பாகப் பொங்கல் கொண்டாடுகிறார்கள்" என்று விளக்கியுள்ளார்.

ஆனால் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா 23-8-2011 அன்று பேரவையில் கூறும்போது, "தமிழ்ப் புத்தாண்டை தை மாதம் தொடங்க எந்த ஆதாரமும் இல்லை. ஆனால் சித்திரையில் தொடங்குவதற்கு பல ஆதாரங்கள் உள்ளன. கருணாநிதி தன் சுய விளம்பரத்துக்காக, மக்கள் மனஉணர்வை புண்படுத்தும் வகையில் கொண்டுவரப்பட்ட சட்டம் ரத்து செய்யப்பட்டுவிட்டது" என்றார்.

கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட இந்த நல்ல முயற்சியில் நஞ்சைக் கலந்து நசுக்கு வதைப்போல், தற்போது ஒரு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டுச் சரித்திரத்திலே தமிழையே பகைத்துக்கொள்கிற - செம்மொழி என்றாலே வெறுக்கிற - ஒதுக்கு கிற - புறக்கணிக்கிற பெரும் பிற்போக்குத்தனமான ஒரு கூட்டம் இருக்கத்தான் செய்கிறது. அந்தக் காலத்திலும் இப்படி தமிழையே வெறுக்கின்ற புலவர்கள் ஓரிருவர் இருந்திருக்கிறார்கள். அதைப் பற்றி நான் அப்போதே ஒரு கதையின் மூலம் விளக்கியிருக்கிறேன்.

நக்கீரன் காலத்திலே குயக்கொண்டான் என்று ஒருவர் தமிழ்ச் சங்கத்திலே நடைபெற்ற ஒரு பட்டிமன்றத்திலே "ஆரியம் நன்று, தமிழ் தீது" என்று சொல்ல - உடனே நக்கீரனுக்குக் கோபம் வந்து, "தமிழ் தீதென்றும், வடமொழி நன்று என்றும் சொன்ன நீ, சாகக் கடவாய்" என்று அறம் பாடினாராம். உடனே குயக் கொண்டான் கீழே விழுந்து இறந்துவிடுகிறார். உடனே அங்கேயிருந்த சிலர் நக்கீரனைப் பார்த்து ; குயக் கொண்டாரைப் பிழைக்க வைக்க கேட்டுக் கொண்டார்களாம். அதைக் கேட்ட நக்கீரன், "ஆரியம் நன்று தமிழ் தீதென்றுரைத்த காரியத்தால் காலன்கோட் பட்டானைச் - சீரிய அந்தண் பொதியில் அகத்தியனார் ஆணையினால் செந்தமிழை தீர்க்க சுவாகா!" என்றுபாட, குயக் கொண்டான் உயிர் பெற்று எழுந்தானாம்.

தமிழக அரசின் அறிவிப்பு வந்த அந்த நேரத்திலேயே மிகச் சிறந்த தமிழ்க் கல்வெட்டு ஆய்வாளரும் அறிஞருமான ஐராவதம் மகாதேவன் அவர்கள்,

> "இன்றைய பஞ்சாங்கங்களை வான நூல், பருவங்களின் சுழற்சி ஆகியவற்றின் தற்கால நிலையை அறிவியல் கண்ணோட்டத்துடன் - ஆராய்ந்து திருத்திக்கொள்ள நமக்குத் துணிவு இல்லையெனில், அறுவடை நாளாகிய பொங்கல் திருவிழாவைப் புத்தாண்டு என்று கொண்டாடுவதில் என்ன தவறு?" என்றார்.

தி.மு. கழக ஆட்சியில் ஆளுநர் உரையிலே செய்யப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து அதே ஆண்டில் 29-1-2008 அன்று 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்ப்புத்தாண்டு சட்டமுன் வடிவை பேரவை முன் நான் அறிமுகம் செய்தேன். 1-2-2008 அன்று இச்சட்ட மசோதா மீதான விவாதம் நடைபெற்று காங்கிரஸ் கட்சியின் சார்பில்

ஈ.எஸ்.எஸ். ராமனும், பா.ம.க. சார்பில் கி.ஆறுமுகமும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் என். நன்மாறனும், இந்தியக் கம்யூனிஸ்ட் சார்பில் வை.சிவபுண்ணியமும், ம.தி.மு.க. சார்பில் அப்போது அங்கேயிருந்த மு.கண்ணப்பனும், விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் கு.செல்வமும் அந்த மசோதாவினை வரவேற்றுப் பேசி அது நிறைவேறியது.

இப்படியெல்லாம் போற்றப்பட்ட, பாராட்டப்பட்ட ஒரு முடிவு நடைமுறைப்படுத்தப்பட தி.மு. கழக ஆட்சியிலே சட்டமாகக்கொண்டு வரப்பட்டு 2008ஆம் ஆண்டு முதல் செயல் பட்டுவந்தது. தி.மு.கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்டது என்றால் அது அப்படியே உயிரோடு இருக்கலாமா என்று எப்போதும் எண்ணுகின்ற அம்மையார் ஜெயலலிதா ஆட்சியிலே அது மாற்றப்பட்டுவிட்டது. அவரது அந்த அறிவிப்பினை பா.ஜ.க. அப்போதே அவசர அவசரமாக வரவேற்றது. அதிலிருந்தே இந்தத் தீர்மானத்தின் உள்நோக்கத்தைப் புரிந்துகொள்ளலாம்.

அ.தி.மு.க. ஆட்சியில் ஜெயலலிதாவினால் கொண்டுவரப்பட்ட அந்த மசோதாவை அவையிலே இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் எதிர்த்தன என்ற தகவலை செய்தியாளர்கள் என்னிடம் தெரிவித்து அதுபற்றி கருத்துக் கேட்டபோது அவர்களின் தமிழ் உணர்வுக்குத் தலைவணங்குகிறேன் என்று அப்போதே பதில் கூறினேன். அதன் பின்னர், பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில்; அ.தி.மு.க. அரசின் அந்த முடிவு தமிழ் உணர்வாளர்களை வேதனைப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்றும் திடீரென்று தமிழ்ப் புத்தாண்டை மீண்டும் சித்திரை மாதத்துக்கு மாற்றுவது முறையல்ல என்றும் அது மிகப் பெரிய வரலாற்றுப் பிழையாக அமைந்து விடும் என்றும் தெரிவித்தார். தமிழர் தலைவர் கி. வீரமணி அவர்களும் இந்த முடிவினை வன்மையாகக் கண்டித்து செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்திருக்கிறார். அவர்களுடைய இந்தத் தமிழ் உணர்வுக்கு நான் அப்போதே நன்றி தெரிவித்திருக்கிறேன். இன்னும் சொல்ல வேண்டுமேயானால் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களே,

“நித்திரையில் இருக்கும் தமிழா!
சித்திரையல்ல உனக்குத் தமிழ்ப் புத்தாண்டு
அண்டிப் பிழைக்கவந்த ஆரியர்

கூட்டம் காட்டியதே
அறிவுக் கொவ்வாத அறுபது ஆண்டுகள்
தரணியாண்ட தமிழருக்கு
தைம்முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு!''

என்று பாடியதையும் நினைவு கூர விரும்புகிறேன். ஆனால் தமிழ்நாட்டு மக்கள் சற்று ஒரு கணம் எண்ணிப் பார்க்காமல் செய்த தவறின் காரணமாக எப்படியெல்லாம் கேடுகள் தமிழுக்கும், தமிழகத்திற்கும் நேர்ந்து வரு கின்றன என்பதைக் காணும்போது நெஞ்சம் விம்முகிறது!

மறைமலை அடிகளாவது மண்ணாங்கட்டியாவது! பாரதிதாசனாவது பலநூறு புலவர்களாவது! இவர்களையெல்லாம் மதிக்க வேண்டுமென்று என்ன இருக்கிறது! ஆரியம், இவர்களையும் இவர்களது கொள்கைகளையும் தமிழ் உணர்வுகளையும் காலில் போட்டு மிதிக்குமே தவிர மதிக்கவே மதிக்காது என்பதற்கு தமிழக அரசு இப்போது எடுத்துள்ள இந்த நிலைதான் உதாரணம்! புத்தியுள்ள தமிழா; இதை நீ புரிந்துகொண்டால் சரி!

அன்புள்ள,
மு.க.
9-4-2012

3614. பாவம்; பன்னீர்செல்வம்!

உடன்பிறப்பே,

2011ஆம் ஆண்டு மே திங்களில் ஆட்சிக்கு வந்த பிறகும், ஆட்சிக்கு வருவதற்கு முன்பும் அ.தி.மு.க.வினர் வாய்ப்பு கிடைக்கின்ற போதெல்லாம் திரும்பத் திரும்பச் சொல்லிவருகின்ற குற்றச்சாட்டு, தி.மு. கழக ஆட்சியில் வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் வீடுகள் அல்லது மனைகள் தி.மு. கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கும், தி.மு. கழக தலைமைக் கழகத்திலே பணியாற்றுபவர்களுக்கும், முதல் அமைச்சரிடம் பாதுகாவலர்களாகப் பணியாற்றியவர்களில் ஒரு சிலருக்கும் முறைகேடாக வழங்கப்பட்டுவிட்டன என்பதாகும். அந்தக் குற்றச்சாட்டுக்கு பல முறை ஆதாரப்பூர்வமாக முறைப்படி இந்த வீடுகள் அல்லது மனைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும், தவறு எதுவும் நடைபெறவில்லை என்றும் சட்டப் பேரவையிலும், வெளியிலும் சுட்டிக்காட்டிய தோடு, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அ.தி.மு.க. வைச் சேர்ந்த யார் யாருக்கு அந்த வீடுகள் அல்லது மனைகள் வழங்கப்பட்டன, எந்தெந்த அதிகாரிகளுக்கும், ஏன் அ.தி.மு.க. தொழிற்சங்க அமைப்பு ஒன்றுக்கே கூட வழங்கப்பட்டன என்பதை யெல்லாம் விளக்கமாக எழுதிய பிறகும், பேரவையில் அந்தத் துறையின் அமைச்சருக்கு குற்றச்சாட்டு கூறுவதைத் தவிர வேறு எதுவும் பேசுவதற்கு வக்கற்ற நிலையில், அவர்களது "அம்மா"வை அகமகிழச் செய்வதற்காக சொன்ன குற்றச்சாட்டினையே மீண்டும் கூறி அது ஏடுகளில் வெளி வந்துள்ளது.

அண்ணா அறிவாலய அலுவலகத்தில் பணியாற்றுவோருக்கு 5 கோடி ரூபாய் சந்தை மதிப்பிலான நிலம் 1.48 கோடி ரூபாய்க்கு கொடுக்கப்பட்டதாக ஒரு குற்றச்சாட்டு. வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலம், மற்றவர்களுக்கு என்ன விலைக்கு வழங்கப்பட்டதோ அதே விலைக்குத்தான் அண்ணா அறிவாலயத்தில் பணியாற்றுவோருக்கும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான அந்த மனைகள் எவ்வளவு ரூபாய்க்கு விற்கலாம் என்று அரசின் நிதித் துறைச் செயலாளரும் இடம் பெற்றுள்ள வாரியத்தினால் முடிவெடுக்கப்பட்டு தீர்மானிக்கப்பட்ட பிறகுதான் அந்த வீடுகள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறதே தவிர, அறிவாலயத்திலே பணியாற்றுவோர் என்பதால் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள வீட்டைக் குறைத்து மதிப்பிட்டு இவர்களுக்காக வழங்கப்படவில்லை. முன்மாதிரிகளின் அடிப்படையில், முறைப்படி, விதிகளுக்குட் பட்டே வழங்கப்பட்டது. அறிவாலயத்திலே பணியாற்றுவோர் என்பதற்காக சிறப்புச் சலுகை எதுவும் காட்டப்படவில்லை.

அதுமாத்திரமல்ல; நான் முதல் அமைச்சராக இருந்த போது என்னிடம் பாதுகாவலர்களாக பணியாற்றிய சிலருக்கு வீட்டு வசதி வாரிய வீட்டு மனைகள் தரப்பட்டுள்ளன. அவர்களுக்கு வீட்டு வசதி வாரிய மனைகள் தரப்பட்டதில் என்ன தவறு? அவர்களுக்கு தரப்படக் கூடாது என்று ஏதாவது விதி இருக்கிறதா? அல்லது அந்த மனைகளுக்கு உரிய விலை பெறாமல் வழங்கப்பட்டுவிட்டதா? அல்லது மற்றவர்களைவிட விலை குறைத்து தரப்பட்டுவிட்டதா? அல்லது அ.தி.மு.க. ஆட்சியிலே இவர்களைப் போல பணியாற்றியவர்களுக்கு இதுபோன்ற வீடுகள் அல்லது மனைகள் வழங்கப்படவே இல்லையா? ஏன், அரசு செயலாளர்களாக இருந்தவர்களுக்கு, முதலமைச்சர் இல்லத்திலே பணியாற்றியவர்களுக்கு, அமைச்சர்களாக, சட்டமன்ற உறுப்பினர்களாக பணியாற்றியவர்களுக்கு, அவர்களது உறவினர்களுக்கு வீட்டு வசதி வாரிய மனைகள் வழங்கப்பட்டதே கிடையாதா? அவர்களுக்கெல்லாம் வீட்டு மனைகளை வழங்கிய போதே, மற்றவர்களுக்கு வழங்கப்பட்டதைவிட அதிகத் தொகை நிர்ணயம் செய்தா வழங்கப்பட்டது? முதலமைச்சரிடம் பாதுகாவலர்களாக பணியாற்றியவர்களுக்கு வீட்டு வசதி வாரிய மனைகள் வழங்கப்பட்டது குறித்து உயர் நீதி மன்றத்திலேயே வழக்கு ஒன்று தொடுக்கப்பட்டு, நீதிபதி அவர்களே அந்த வழக்கினை தள்ளுபடி செய்துவிட்டார். எனினும் மீண்டும் மீண்டும் அ.தி.மு.க. அரசு அரைத்த மாவையே திரும்பத் திரும்ப அரைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அரசு விருப்புரிமையின் கீழ் வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான வீடுகள், மனைகளில் 15 சதவிகிதம், தி.மு. கழக

ஆட்சிக் காலத்திலே மட்டுமல்ல, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலும் வழங்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் 10 சதவிகிதமாக இருந்த இந்த ஒதுக்கீட்டு அளவு அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் 15 சதவிகிதமாக ஜெயலலிதா முதல் அமைச்சராக இருந்தபோது அதிகப்படுத்தினார். இன்னும் கூற வேண்டுமேயானால், தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் இந்த விருப்புரிமை முறை பற்றி சிலர் குறை கூறியவுடன், அந்த அரசு விருப்புரிமையே இனி ரத்து செய்யப்படும் என்று கழக ஆட்சியில் முடிவெடுத்து அறிவிக்கப்பட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில், ஜெயலலிதா முதல் அமைச்சராக இருந்த போதுதான், தலைமைச் செயலாளராக இருந்த திரு. என். நாராயணன், ஐ.ஏ.எஸ்.க்கு 1993ஆம் ஆண்டு 4,115 சதுர அடி, அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் மகன் கே.எஸ். கார்த்தீசனுக்கு பெசண்ட் நகர் பகுதியில் 1995ஆம் ஆண்டு 4,535 சதுர அடி, முன்னாள் அமைச்சர் நாகூர் மீரான் துணைவியார் நூர் ஜமீலாவுக்கு கொட்டி வாக்கத்தில் 1993ஆம் ஆண்டு 2,559 சதுர அடி, நாடாளுமன்ற உறுப்பினர் தம்பிதுரை மனைவி டாக்டர் பானுமதி தம்பிதுரைக்கு அண்ணா நகரில் 7 கிரவுண்ட் நிலம், அ.தி.மு.க. வின் தொழிலாளர் பேரவைக்கு அண்ணா நகரில் 3 கிரவுண்ட் நிலம், 2004ஆம் ஆண்டு தேவாரம், ஐ.பி.எஸ்., கே விஜயகுமார், ஐ.பி.எஸ்., ஆர். நடராஜ், ஐ.பி.எஸ்., உட்பட பல ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கு சோழிங்கநல்லூரில் தலா 4,800 சதுர அடி, முதல் அமைச்சரிடம் செயலாளராக இருந்த டி. நடராஜன் ஐ.ஏ.எஸ்.க்கு 1995ஆம் ஆண்டு திருவான்மியூரில் 6,784 சதுர அடி என்று ஒரு நீண்ட பட்டியலே உள்ளது. இவ்வாறு கொடுத்ததை தவறு என்று நான் கூறவில்லை. ஒவ்வொரு ஆட்சியிலும் தொடர்ந்து வழக்கமாக வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான வீட்டு மனைகள் வழங்கப்பட்டு வருவதைப் போலத்தான், தி.மு. கழக ஆட்சியிலும் வழங்கப்பட்டன. இது வழக்கத்திற்கு மாறானதோ, விதிமுறைகளை மீறியதோ எதுவும் இல்லை. அதை எடுத்து வைத்துக் கொண்டு திரும்பத் திரும்ப இந்த ஆட்சியினர் குற்றம் சாட்டுவதால், அ.தி.மு.க. ஆட்சியில் இத்தகைய வீட்டு மனைகள் யார் யாருக்கு வழங்கப்பட்டன என்ற விவரங்களை நான் தெரிவிக்க வேண்டியதாயிற்று.

இவ்வாறு வீடு பெற்ற வேறு சில பெயர்களையும் சொல்ல வேண்டுமேயானால், சி.ஆர். சரஸ்வதி, பி. காளிமுத்து,

ஐ.பி.எஸ்., மாலிக் பெரோஸ்கான் ஐ.ஏ.எஸ்., சி.ஆர். ராஜேஷ், தங்கத் தமிழ்ச் செல்வன், பி.ஏ. ராமையா ஐ.ஏ.எஸ்., அனுராதா காதி ராஜீவன் ஐ.ஏ.எஸ்., எஸ். கபிலன் ஐ.ஏ.எஸ்., எச்.பி.என். ஷெட்டி ஐ.ஏ.எஸ். அவர்களின் மகன் டாக்டர் தீபக், கே. செல்வராஜ், மார்கபந்து, குருவிக்கரம்பை சண்முகம், கோவைத் தம்பி, ராகவன் ஐ.ஏ.எஸ்., ராமதாஸ் ஐ.ஏ.எஸ்., இன்றைய மேயர் சைதை துரைசாமி, வரதராஜுலு ஐ.ஏ.எஸ்., அவர்களின் மகன் சியாம் சுந்தர், சீனிவாசன் ஐ.ஏ.எஸ்., ஏ.ஆர். வெங்கடேசன், எல். சுதாகர் ரெட்டி, ஆதி ராஜாராம், இக்பால் முகமது ஐ.பி.எஸ்., லால் ரெய்னா சைலோ ஐ.ஏ.எஸ்., சரஸ்வதி எம்.எல்.ஏ., பால்கங்காவின் மனைவி சந்திரிகா, திருமதி மல்லிகா எம்.எல்.ஏ., ஆறுமுகம் எம்.எல்.ஏ., மோகன் ராவ், டி.என். ரெங்கநாதன், இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன், எம்.ஜி.ஆர். ஓட்டுநர் பூபதி, ஏ.பி. முகமது அலி ஐ.பி.எஸ்., முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி. மோகன் துணைவியார் பி. பூங்காவனம், எஸ். ஆண்டித் தேவர் மனைவி பிலோமினா, வி.எஸ். பஞ்சவர்ணம், ஆர். கண்ணன் ஐ.ஏ.எஸ்., நாமக்கல் மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் கே.பி.பி. பாஸ்கரனின் மனைவி பி. உமா, அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த எஸ். அன்பழகனின் துணைவியார் வி. தமிழரசி, முதல்வரின் செயலாளர் எஸ்.எஸ். ஜவகர் பாபு ஐ.ஏ.எஸ்., வி. ராமு ஐ.ஏ.எஸ்., எஸ். போஸ், ஐ.ஆர்.எஸ்., இன்னும் பட்டியல் நீளமாக உள்ளது. அ.தி.மு.க. ஆட்சியிலேயே ஒன்றுக்கு மேற்பட்ட மனைகளைப் பெற்றவர்கள் என்று பார்த்தால் பி. செந்தில், கீதா, கே. சுந்தர்ராஜ், பி. வினோத் குமார், டி. பாலமுருகன், டி. பாலசுப்ரமணியன், டி. சக்திவேல், எம். லெட்சுமிகாந்தன், பி. மாணிக்கவாசகம், எஸ். சுந்தரேசன் என்று பட்டியல் போய்க் கொண்டே இருக்கின்றது. ஸ்பெஷல் டாஸ்க் போர்ஸில் பணியாற்றியவர்கள் என்று ஒரு நீண்ட பட்டியல் வீட்டு மனைகள் இலவசமாகவே அ.தி.மு.க. ஆட்சியில் வழங்கப்பட்டது. அதுமாத்திரமல்ல, முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் பாதுகாப்பு அதிகாரிகளாகப் பணியாற்றிய ராமகிருஷ்ணன், ராஜேந்திரன், திருமலைச்சாமி, பெருமாள்சாமி, வீரபெருமாள் போன்றவர்களுக்கும், இன்னும் அவர்கள் வீட்டிலேயே இருந்த கிருஷ்ணமராஜ், அசோகன், பாலாஜி, வடிவேல், சுப்பிரமணியம் போன்ற காவலர்களுக்கு அரசின் விருப்புரிமை அடிப்படையில்தான் இந்த வீட்டு மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. அ.தி.மு.க. ஆட்சியில் இத்தனை வீட்டு மனைகள்

வாரி வழங்கி முறைகேடு நடைபெற்றது என்று பேரவையில் அந்தத் துறையில் அமைச்சர் வெளியிடாதது ஏன்? எதிர்க்கட்சியினர் அதைப்பற்றி விளக்கமளிக்க அனுமதி தர மறுப்பதேன்? ஆனால் தற்போது அதை பெரிய குற்றமாகக் கூறி அந்த மனைகளைப் பெற்றவர்களின் இல்லங்களுக்குச் சென்று லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனையிடுவதும், அதனை சில ஏடுகள் வேண்டுமென்றே புழுதிவாரித் தூற்றும் நோக்கத்தோடு பெரிய அளவிலே விளம்பரம் செய்வதும் நியாயமா என்பது தான் நம்முடைய கேள்வி.

வீட்டு வசதி வாரிய மனை ஒதுக்கீட்டிலே மாத்திரமல்ல; கோவையிலே குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் கழக ஆட்சியில் கட்டப்பட்ட சில வீடுகளில் ஏதோ குறைபாடு என்றதும், முறைப்படி கழக ஆட்சியிலேயே அதற்கான நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டு, அந்தத் துறையின் அமைச்சரே நேரில் சென்று அண்ணா பல்கலைக் கழகத்தின் தொழில் நுட்பப் பேராசிரியர்களை அணுகி அவர்களின் கருத்துக்களையும் பெற்று பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சட்டப்பேரவையிலேயே இந்தப் பிரச்சினையை அப்போது எதிர்க்கட்சியாக இருந்த அ.தி.மு.க. வினர் எழுப்பியபோது, அந்தத் துறையின் அமைச்சர் விரிவாக விளக்கம் அளித்தார். ஆனால் அதையெல்லாம் அப்படியே மறைத்து விட்டு குடிசையிலும் கொள்ளை, கோட்டையிலும் கொள்ளை என்றெல்லாம் அடுக்கு மொழியில் அவதூறு பேசுவதும், அதற்குப் பதிலளிக்க கழகத்தினர் எழுந்தால் அனுமதி மறுப்பதும் கூண்டோடு வெளியேற்றுவதும் என்ன நாகரிகமோ?

கோட்டையிலே அமர்ந்து கொண்டு இன்று கொள்ளை அடிப்பது யார்? கொடை நாட்டை கொள்ளை அடித்தவர்கள் யார்? சிறுதாவூரை கொள்ளை அடித்தவர்கள் யார்? 66 கோடி ரூபாய்க்கு சொத்து சேர்த்து விட்டு, பெங்களூரு நீதி மன்றத்திலே வாய்தா கேட்டு வழக்கு விசாரணையை பல்லாண்டு காலமாக இழுத்தடித்துக் கொண்டிருப்பவர் யார்? சுற்றியிருந்தவர்கள் மீதெல்லாம் அன்றாடம் கொள்ளையடித்த புராணங்கள் புகார்களாக வந்து கொண்டிருக்கிறதே? இவையெல்லாம் ஊருக்குத் தெரியாது என்ற நோக்கில் எப்படியோ வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்து விட்டோம் என்ற இறுமாப்போடு, அவையின் முன்னவரே எதற்கெடுத்தாலும் அவையில் அமைதியை உண்டாக்குவதற்குப் பதிலாக அவரே 2 ஜி, அலைக்கற்றை ஒதுக்கீடு என்றெல்லாம் வாய் நீளம் காட்டுவதுதான்

அவையை நடத்துகின்ற இலட்சணமா? அலைக் கற்றை வழக்கு நடந்து கொண்டிருக்கிறதே தவிர தீர்ப்பு வழங்கப்பட்டு விடவில்லையே? அலைக்கற்றை அனுமதி பெற்றவர்களிடம் கலைஞர் தொலைக்காட்சி கடன் பெற்று - அந்தக் கடனையும் வங்கிகள் மூலமாக முறைப்படி காசோலையாகப் பெற்று, பிறகு வட்டியுடன் காசோலையாகவே திரும்ப அந்தக் கடனையும் அடைத்ததற்குப் பிறகும், அந்தத் தொலைக்காட்சி நிறுவனத்தின் அன்றாட செயல்பாடுகளில் எந்தவிதமான தொடர்பும் இல்லாத, அதே நேரத்தில் அதிலே ஒரு பங்குதாராராக மட்டும் இருந்த நிலையில் அதை பெரிய தவறு இழைத்து விட்டதைப் போல - "பெங்களூரு" வழக்கைப் போல பேரவையிலே சொல்லி வருகிறார் பன்னீர்செல்வம்! அலைக்கற்றை பற்றிய வழக்கு இந்திய உச்ச நீதி மன்றம் உள்ளிட்ட நீதி மன்றங்களிலே நடந்து கொண்டிருக்கும் போது பேரவையில் பேசக் கூடாது என்ற மரபினைக் கூட, அவையின் முன்னவரே மதிக்க வில்லை என்றால், பாவம், அவர் அப்படியெல்லாம் அடாவடியாகச் செயல்பட்டால்தான் முதல்வரின் நம்பிக்கையைப் பெற முடியும், தொடர்ந்து அமைச்சராக நீடிக்க முடியும் என்ற நிலைதானே அங்கே உள்ளது.

அன்புள்ள,

மு.க.

14-4-2012

3615. பழைய கதை - மறந்துபோமோ?

உடன்பிறப்பே,

அரசியலுக்காகவும் - சுய விளம்பரத்துக்காகவும் நான் தமிழ்ப் புத்தாண்டை மாற்றியதாக - தமிழறிஞர்களுக்கு விருது வழங்கிய விழாவில் என்னைப் பற்றிய அர்ச்சனையைத்தான் ஜெயலலிதா முழு நேரமும் பாடியிருக்கிறார்.

தை மாதம் தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம் என்பதைச் சித்திரை முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டு என்று ஜெயலலிதா மாற்றி யிருக்கிறார்.

அதற்கு என்ன ஆதாரம் சொல்லியிருக்கிறார் என்றால், "சித்திரையே வா! நம் வாழ்வில் நல் முத்திரை பதிக்க வா" என்று சொல்லும் மரபு இருக்கிற காரணத்தால் சித்திரை மாதமே தமிழ்ப் புத்தாண்டுக்கு உரிய பொருத்தமான நாள் ஆகும் என தெய்வத்திரு மதுரை ஆதினம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்" என்று ஜெயலலிதா பேசியிருக்கிறார். மதுரை ஆதினம் குறிப்பிட்டு விட்டாராம்! எப்படிப்பட்ட ஆதாரம்?

சித்திரை மாதம் தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம் என்பதற்கு இதுதான் ஆதாரமா?

மேலும் சித்திரை முதல் நாளைத் தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்க நாள் என்று நானே கடந்த காலத்தில் கூறியிருக்கிறேன் என்பதை ஜெயலலிதா ஆதாரமாகச் சொல்கிறார்.

தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டின் தொடக்க நாள் என்று தி.மு. கழக ஆட்சியில் 2008ஆம் ஆண்டு அறிவித்து அதனைச் சட்டமாக ஆக்கும் வரை - சித்திரை முதல்நாளே தமிழ்ப் புத்தாண்டாக அதிகாரப் பூர்வமாகக் கருதப்பட்டு வந்தது. அந்த நேரத்தில் சித்திரைத் திருநாள்தானே தமிழ்ப் புத்தாண்டு என்று அழைக்கப்பட்டு வந்தது. அந்த நிலையில் அப்படித்தானே அழைத் திருக்க முடியும்!

"தை மாதம் முதல் நாளைத் தமிழ்ப் புத்தாண்டாகச் சட்டத்தின் மூலம் மாற்றி அமைத்தார் கருணாநிதி. யார் கேட்டது இந்தச்

சட்டத்தை? இந்தச் சட்டத்தினால் மக்களுக்கு என்ன பயன்?" என்று ஜெயலலிதா பேசி யிருக்கிறார்.

தைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு என்பதை மாற்றி ஜெயலலிதா வந்ததும் வராததுமாக சித்திரைத் திங்கள் முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டு என்று சட்டம் கொண்டு வந்தாரே, அவரிடம் யார் கேட்டது இந்தச் சட்டம் வேண்டும் என்று? அவர் மாற்றிய சட்டத்தினால் மக்களுக்கு என்ன பயன்? என்று நாம் திருப்பிக் கேட்க முடியாதா?

சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு மண்டபம் அரசு விழாக்களுக்குத்தான் வழங்கப்படும்.

கட்சி நிகழ்ச்சிகளுக்குத் தரப்பட மாட்டாது. நடைபெற்றதோ அரசு விழா.

13ஆம் தேதி அங்கே நடைபெற்ற விழாவில் ஜெயலலிதா என்னென்ன பேசியிருக்கிறார்?

அரசு விழாவில் பேசியதெல்லாம் எனக்காக செய்யப்பட்ட அர்ச்சனைகள்தான்!

முதலமைச்சர் என்றால் அதுவும் ஜெயலலிதா என்றால் எங்கே வேண்டுமானாலும், எது வேண்டுமானாலும் பேசலாமா?

தமிழ் மொழியை உலகம் முழுவதும் பரப்புவதற்காக அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மதுரையிலும், தஞ்சையிலும் உலகத் தமிழ் மாநாடுகளை நடத்தினார்களாம்! ஜெயலலிதா கூறியிருக்கிறார்.

தி.மு. கழக ஆட்சியில் சென்னையிலும், கோவையிலும் நடந்த உலகத் தமிழ் மாநாடு தமிழ் மொழியை உலகம் முழுவதும் பரப்பு வதற்காக அல்லவா? கோவை மாநாட்டிற்குப் பெயரே தமிழ்ச் செம்மொழி மாநாடுதானே?

தஞ்சையில் ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த போது நடத்திய உலகத் தமிழ் மாநாட்டின் லட்சணம் என்ன என்பது தமிழர்களுக்குத் தெரியாதா?

அந்த மாநாட்டில் கலந்து கொள்ள வந்த வெளிநாட்டுத் தமிழறிஞர்கள், கா. சிவத்தம்பி உட்பட எந்த அளவிற்கு அவமானப்படுத்தப்பட்டார்கள்? மாநாட்டில் கலந்து கொள்ள விடாமல் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

23-8-2011 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் பேசும்போதே, ஜெயலலிதா "தமிழ்ப் புத்தாண்டைத் தை மாதம் தொடங்க எந்த ஆதாரமும் இல்லை. ஆனால் சித்திரையில் தொடங்குவதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. கருணாநிதி தன் சுய விளம்பரத்துக்காக, மக்கள் மனஉணர்வைப் புண்படுத்தும் வகையில் கொண்டு வரப்பட்ட சட்டம் ரத்து செய்யப்பட்டு விட்டது" என்று கடுமையாகச் சாடியிருக்கிறார்.

பல்கலைக் கழக நூற்றாண்டு மண்டபத்தில் பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா ஆதாரப்பூர்வமாக பேசுவதாக எண்ணிக் கொண்டு, "சித்திரையில் தொடங்கி பங்குனி வரையிலான தமிழ் மாதத்தில், அம்மாதத்தின் பௌர்ணமி அன்று வரும் நட்சத்திரத்தின் பெயரே அம்மாதத்தின் பெயராகும். உதாரணமாக, சித்திரை மாதம் பௌர்ணமி அன்று சித்திரை நட்சத்திரம் வருவதால், அந்த மாதத்தின் பெயர் சித்திரை ஆகும். இதே போன்று வைகாசி மாதம் பௌர்ணமி அன்று விசாகம் நட்சத்திரம் வருவதால், அந்த மாதத்தின் பெயர் வைகாசி ஆகும். இப்படி ஒவ்வொரு மாதத்திற்கும் இந்த அடிப்படையிலேயே பெயர்கள் வைக்கப்பட்டன" என்று சொல்லியிருக்கிறார்.

ஜெயலலிதாவின் பேச்சு எந்த அளவிற்கு உண்மை என்பதைப் பார்க்கலாம்! தை மாதத்தில் பௌர்ணமி "பூசம்" நட்சத்திரத்தில்தான் வருகிறது. ஆனால் அந்த மாதத்திற்குப் பூசம் என்ற பெயர் உள்ளதா? மாசி மாதத்தில் பௌர்ணமி "மகம்" நட்சத்திரத்தில்தான் வருகிறது. ஆனால் அந்த மாதத்திற்கு மகம் என்று பெயர் இல்லையே? பங்குனி மாதத்தில் பௌர்ணமி "உத்திரம்" நட்சத்திரத்தில்தான் வரும். அந்த மாதத்திற்கு உத்திரம் என்று பெயர் இல்லை. 27 நட்சத்திரங்களில் சித்திரை, கார்த்திகை தவிர மற்ற பெயர்களில் மாதப் பெயர்கள் இல்லையே; இதற்கெல்லாம் முதலமைச்சர் நாளை சட்டப்பேரவையில் விதி 110இன் கீழ் அறிக்கை படிப்பார் என்று நம்புவோமாக!

சென்னைப் பல்கலைக் கழகத்தால் 1912ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்ட தமிழ்ப் பேரகராதியில் சித்திரை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்று கூறப்பட்டதாக முதலமைச்சர் ஜெயலலிதா பேசியிருக்கிறார்.

ஆனால் அவரே கூறியபடி அ.தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் -

முதலமைச்சர் ஜெயலலிதா புரவலராக இருந்த நேரத்தில் - வெளியிடப்பட்ட "வாழ்வியற் களஞ்சியம்" - தொகுதி 13 - பக்கம் 43இல் "ஆடிப் பட்டத்தில் தேடி விதைத்து உழைத்து உணவுப் பொருள்களைத் திரட்டிய மக்கள் உத்தராயணம் தொடக்கமுறும் தைத் திங்கள் முதல் நாளன்று நன்றியுணர்வுடன் மழைக்கும் வேளாண்மைப் பெருக்கத்திற்கும் காரணமான சூரியனை வழிபடுகின்றனர். "சங்கிராந்தி"யன்று கடவுளுக்குச் சிறப்பான வழிபாடுகள், விழாக்கள் ஆகியன செய்ய வேண்டுமென்று பிருகுசங் கிதை என்னும் நூல் கூறுகின்றது. ஒரு "தேவநாள்" என்பது ஒரு மானிட ஆண்டு என்றும், **அத்தேவநாளின் பகற்பொழுதின் தொடக்கமே தை முதல் நாள் என்றும் அதுவே விழாவாகச் சிறப்பித்துச் செய்யப்படுகின்றது என்றும் ஆகமங்களிலிருந்து அறிய முடிகின்றது.**" என்று கூறப்பட்டிருக்கிறது என்பதை அம்மையாருக்கு மிகவும் பிடித்த ஆகம உதாரணத்திலிருந்தே குறிப்பிட்டுக் காட்டுகிறேன்.

2004ஆம் ஆண்டு, ஜெயலலிதா முதலமைச்சராக இருந்து, அவரே அணிந்துரையும் வழங்கியுள்ள "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி" - நான்காம் மடலம் - மூன்றாம் பாகம் - 111வது பக்கத்தில் "தை" என்பதற்கு பொருள் கூறப்பட்டுள்ளது. ஜெயலலிதாவிற்கு பேச்சு தயாரித்துக் கொடுத்தவர்கள் அந்த நூலையாவது வாங்கி அம்மையாரிடம் காட்டியிருக்கலாம் அல்லது அவர்களே படித்துப் பார்த்திருக்கலாம். அந்த நூலில் தை என்பதற்குப் பொருளாக "தமிழாண்டின் தொடக்க மாதம்" (first month of Tamil year); திருவள்ளுவராண்டின் தொடக்க மாதம் (first month of Thiruvalluvar year) என்றுள்ளது. மேலும் அங்கேயே இச் "சுறவ" மாதமே தமிழாண்டின் தொடக்கம் என்றும் அச்சிடப்பட்டுள்ளது.

அதுபோலவே "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி" - மூன்றாம் மடலம் - இரண்டாம் பாகம் நூலும் அம்மையாரின் அணிந்துரையுடன் வெளியிடப்பட்டுள்ளது. அங்கேயும் சித்திரை என்பதற்குப் பொருளாக தமிழாண்டின் முதல் மாதமாகக் கருதப்படும் "மேழம்" என்று கூறிவிட்டு - "சுறவமே" தமிழாண்டின் தொடக்கம்; மேழத்தைக் கொள்வது பொருத்த மன்று என்று எழுதியுள்ளார்கள். சுறவம் என்றால் தை மாதம்; மேழம் என்றால் சித்திரை மாதமாகும்.

மேலும் ஜெயலலிதா பல்கலைக் கழக நூற்றாண்டு மண்டபத்தில் பேசும்போது, "1935ஆம் ஆண்டு பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில், "திருவள்ளுவர் காலம் இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதென்பது எளிதிற் பெறப்படும். கிறிஸ்து பிறப்பதற்கு 30 ஆண்டுகட்கு முன் திருவள்ளுவர் பிறந்தார் என்பது நான் ஆராய்ந்து கண்ட முடிவாகும்" என மறைமலை அடிகளார் கூறியதாக ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி வெளியிடப்பட்ட மலரில் சிறுவை நச்சினார்க் கினியன் கூறியிருக்கிறார்" என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் கிறிஸ்து பிறப்பதற்கு 30 ஆண்டுகளுக்கு முன்பு அல்ல, 31 ஆண்டுகளுக்கு முன்புதான் திருவள்ளுவர் பிறந்தார் என்பதுதான் மறைமலை அடிகளாரின் கருத்துமாகும். அந்தக் கருத்தைத்தான் அரசு ஏற்றுக் கொண்டு பின்பற்றி வருகின்றது. இதைத்தான் மறைமலை அடிகளாரின் மகனும், மறைமலையடிகள் வரலாற்றினை நமக்குத் தொகுத்து வழங்கியவருமான மறை. திருநாவுக்கரசு அவர்கள், "மறைமலை அடிகளின் கருத்துப்படி திருவள்ளுவர் கிறித்துவுக்கு 31 ஆண்டுகள் முற்பட்டவர்" என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

அது மாத்திரமல்ல; அம்மையார் குறிப்பிட்டுள்ள 1981ஆம் ஆண்டு மதுரையில் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முன்னின்று நடத்திய ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டினையொட்டிய மலரினை என் வீட்டிலே உள்ள நூலகத்தி லிருந்து தேடிப்பிடித்து சிறுவை நச்சினார்க் கினியன் எழுதிய கட்டுரை 407ஆம் பக்கத்தில் வந்ததை முழுவதும் படித்தேன். அதில் அம்மையார் குறிப்பிட்ட பகுதி 408ஆம் பக்கத்தில் இருந்தாலும், 407ஆம் பக்கத்திலே அவரே என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பது தமிழகத்தின் நெடுநாளைய பழமொழி. சூரியன் சுற்றும் நிலையின் கணக்கினைக் கொண்டு, அந்நாளில் தை முதல் ஆனி ஈறாக ஒரு பகுதியும் ஆடி முதல் மார்கழி ஈறாக மற்றொரு பகுதியும் விளங்கின. ஆடி முதல் மார்கழி ஈறாக உள்ள காலம் இருள் நிலை கொண்டது. தை முதல் ஆனி ஈறாகக் கொண்ட காலம் பகல் நிலை கொண்டது. ஆண்டின் இரவுக் காலமாகிய ஆடி முதல் மார்கழி ஈறாக உள்ள காலத்தில் - அதாவது ஆடிக் காற்றிலும், அடுத்துள்ள ஐப்பசி மழையிலும், மார்கழிப் பனியிலும் குளிரிலும் இடர்ப்படும் பொழுது மக்கள்

உள்ளத்தில் "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற நம்பிக்கை ஒலி பேரொலியாய்க் கேட்கிறது. இந்த இரவு நிலை மாறிப் பகல்நிலை பெற்றுப் பயன்தரும்

தைப் பிறப்பு நாளைப் புத்தாண்டின் புனித நாளாய், பிறப்பு நாளாய்ப் பழந்தமிழர் கொண்டாடி வந்தனர். இன்றுங்கூட, தைப் பிறப்பைத் தனிப் பெருஞ்சிறப்பாகத் தமிழர்கள் கொண்டாடி வருகிறார்கள். ஆகவே நாம் தைத் திங்களையே ஆண்டின் முதல் திங்களாய்க் கணக்கெடுத்துச் செயற்படுத்துவோம்"

– என்று அவரே எழுதியிருப்பதை அம்மையாருக்குப் பேச்சு எழுதிக் கொடுத்தவர்கள் பார்க்க மறந்து விட்டார்களா? அல்லது பார்த்து விட்டு அம்மையார் மாட்டிக் கொண்டு விழிக் கட்டும் என்று மறைத்து விட்டார்களா?

திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும் தைத்திங்கள் முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டு தொடக்கம் என்பது, ஒட்டுமொத்தமாக எல்லாத் தமிழறிஞர்களும் ஒப்புக் கொண்டுள்ள உண்மை என்பதால் - தைத் திங்கள் முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என்று அறிவித்து நடைமுறைப் படுத்திட கழக அரசு முடிவு செய்துள்ளது என்று 23-1-2008 அன்று ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டது. 1-2-2008 அன்று சட்டப் பேரவையில் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இதே நிலை தொடருமேயானால் தமிழுக்குச் செம்மொழி என்ற தகுதியை எப்படி கொடுக்கலாம்? அது கருணாநிதி செய்து கொண்ட சுய விளம்பரம், அரசியலுக்காகச் செய்து கொண்ட ஏற்பாடு என்று சொன்னாலும் சொல்லக் கூடும். ஏனென்றால் செம்மொழி என்றாலே, அம்மையாருக்கு அவ்வளவு பாசம்! எட்டிக்காய் தின்றது போல! ஆட்சிக்கு வந்த முதல் நாள் செம்மொழித் தமிழாய்வு நூலகத்தையே தூக்கி வெளியிலே போட்டவர் ஜெயலலிதா. இன்றளவும் அந்த நூலகத்திற்கு இடம் கொடுத்தபாடில்லை.

சென்னைத் தீவுத் திடலில் 6.3.2006 அன்று நடைபெற்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணி தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் திருமதி.சோனியாகாந்தி அவர்கள்,

'மத்தியிலே ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு ஏற்பட்டவுடன் தமிழ் மொழியை செம்மொழியாக

அறிவித்திருக்கிறோம். அதன்மூலம் வரலாற்றுப் புகழ்மிக்க தமிழ்மொழிக்கு பாரம்பரியமும் கலாச்சாரப் பெருமையும் தரக்கூடிய மிகப் பெரிய தகுதியினை இந்திய அரசு தந்திருக்கிறது. தமிழ் மொழியைச் செம்மொழியாக்கிய அந்த வரலாற்றுச் சாதனையின் முழுப் பெருமையும் பங்கும் டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும். தமிழைச் செம்மொழியாக்குவதில் அவரது பங்கு மகத்தான ஒன்று என்பதை இந்த மேடையிலே நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்'

- என்று பாராட்டினார். இப்படியெல்லாம் இவனுக்குப் பாராட்டுக் கிடைக்கலாமா என்ற வயிற்றெரிச்சல் காரணமாகத்தான் தேடித் தேடிப் பார்த்து கழக ஆட்சியில் நம்மால் செய்யப்பட்ட சாதனைகளையெல்லாம் மாற்றுவதற்கான முயற்சியிலே ஈடுபட்டுள்ளார். அதிலே ஒன்றுதான் இந்தத் தமிழ்ப் புத்தாண்டு நாளை மாற்றுகின்ற செயலாகும்.

சித்திரை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டா? தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டா? என்ற கேள்வியை எழுப்பி,

"நித்திரையில் இருக்கும் தமிழா
சித்திரையல்ல உனக்குப் புத்தாண்டு
அண்டிப் பிழைக்க வந்த
ஆரியக் கூட்டம் காட்டியதே
அறிவுக்கொவ்வாத அறுபதாண்டுக் கணக்கு
தரணியாண்ட தமிழருக்குத்
தைம்முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு"

என்று பாட்டிலே பாடி வைத்த பாவேந்தர் பாரதிதாசன், என்னுடைய சுய விளம்பரத்திற்காக அவர் பாடியதா இக்கவிதை!

தை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாக ஏற்காத நிலையில், அ.தி.மு.க. அரசு திருவள்ளுவர் ஆண்டினை என்ன செய்யப் போகிறது? தி.மு.கழக ஆட்சியில்தான் 1969இல் திருவள்ளுவர் ஆண்டு ஈராயிரம் ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது. 1972இல் கழக ஆட்சி நடைபெற்றபோதுதான் திருவள்ளுவர் ஆண்டு என்பதை ஏற்று, அரசு இனிமேல் நடைமுறைப்படுத்திட வேண்டும் என்று ஆணையிடப்பட்டது. 1971ஆம் ஆண்டு

முதல் தமிழ்நாடு அரசு நாட்குறிப்பிலும், 1972ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசிதழிலும் மற்றும் 1981 முதல் தமிழ்நாடு அரசின் அனைத்து அலுவலகங்களிலும் திருவள்ளுவர் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஏன் இன்றளவும் கழக நாளிதழ் "முரசொலி"யின் முகப்பில் "திருவள்ளுவர் ஆண்டு 2043" என்றுதான் எழுதப்பட்டுள்ளது. எனவே திருவள்ளுவர் ஆண்டு தொடங்கும் தை முதல் நாள்தான் தமிழர்க்குப் புத்தாண்டு நாள்.

மலேசியா நாட்டில் வாழ்கின்ற தமிழர்கள் தை முதல் நாளையே தங்களது புத்தாண்டாகக் கொண்டாடி வருகிறார்கள்.

தமிழறிஞர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள்,

"முன் காலத்தில் வருடப் பிறப்பு சித்திரை முதல் நாளாக இருந்ததில்லை. தை முதல் நாளைத்தான் வருடப் பிறப்பாகப் பெரியோர்கள் கொண்டாடினார்கள். அந்த நாள் முதல் எல்லாருடைய வாழ்வும் பல வகையிலும் புதிய வாழ்வாக இருக்க வேண்டும் என்று ஏற்படுத்தி வீட்டில் புதுமை, தெருவில் புதுமை, ஊரெல்லாம் புதுமை, மனதிலும் புதுமை, புதிய பச்சரிசியைப் பொங்குவார்கள். புதிய ஆடைகளை வாங்கி உடுப்பார்கள். தெருவில் புது மண் போட்டு, செம்மண் இட்டு, ஒழுங்கு செய்வார்கள். ஊரெல்லாம் திருவிழா நடத்துவார்கள். இப்படி நகரங்களில் புத்தாண்டுப் பிறப்பாகப் பொங்கல் கொண்டாடுகிறார்கள்"

– என்று விளக்கியிருக்கிறார்.

முதலமைச்சர் ஜெயலலிதா தன் பேச்சுக்கு ஆதாரமாக விஞ்ஞான ஆராய்ச்சியிலும் ஈடுபட்டு, சித்திரை மாதம் வான நூலையும், பருவங்களின் சுழற்சியையும் அடிப்படையாகக் கொண்டது என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்.

அதற்கு விடையளிப்பது போல, சௌதி மன்னர் பல்கலைக் கழக லேசர் துறை பேராசிரியர் விஞ்ஞானி டாக்டர் வ. மாசிலாமணி அவர்கள் "தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு" என்ற தலைப்பில் எழுதியுள்ள நீண்டதொரு கட்டுரையில்,

"ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகச் சூழலில், கிராமத்து வானியல் விஞ்ஞானிகளின் கணக்குப்படி தைத்

திங்கள் வையத்திற்கு எல்லாம் புத்துணர்வு கிட்டும் மாதம் என்று சரியாகவே கணக்கிட்டிருக்கிறார்கள். அதனால்தான் மார்கழி கடைசி நாள் பழையனவும், சோம்பலும் கழியும் போகியாகவும் தை முதல் நாளை சூரியனுக்கு நன்றி சொல்லும் பொங்கலாகவும் கொண்டாடியிருக்கிறார்கள்.... சூரியன் தென்கோடி சென்று நின்று திரும்பி நம்மையெல்லாம் நோக்கும் நாள்தான் உலக உயிர்கள் புத்துணர்ச்சி பெறும் நாள். அந்த நாள் ஜனவரி 14. அந்த நாளைக் கொண்டு துவங்குவது தான் வானியல் வழியான சரியான ஆண்டுத் துவக்கம். ஜனவரி 14க்கு அதாவது தை முதல் நாளுக்கு இத்துணை சிறப்பு இருக்கிறது. இந்தக் கட்டுரை படிக்கும் விஞ்ஞான ஆர்வலர்கள் மற்றும் மாணவர்களுக்கு ஒரு வேண்டுகோள். "இண்டர்நெட்" போய் perhelion என்று தட்டுங்கள். கட்டாயம் புத்தாண்டுக்கு தைத் திங்களே பொருத்தம் என்பீர்கள்"

-என்று விளக்கியிருக்கிறார்.

எனவே தைத் திங்கள் முதல் நாள்தான் தமிழ்ப்புத்தாண்டின் துவக்கம் என்பதை மாற்றி சித்திரை என்று ஜெயலலிதா அறிவித்துள்ள செயல் வழக்கம் போலவே அவருடைய காழ்ப் புணர்ச்சி, கழக அரசு நடைமுறைப்படுத்திய செயல்களுக்கெல்லாம் ஊறு தேட முற்படுகின்ற சூழ்ச்சிகளிலே ஒன்றே தவிர வேறல்ல!

தமிழ்ப் புத்தாண்டு தைத் திங்கள் முதல் நாள் என்று நான் சுய விளம்பரத்திற்காகச் செய்தேனா? அல்லது அதை மாற்றி சித்திரைத் திங்கள் என்று தற்போது அறிவிக்கும் இன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா சுய விளம்பரத்திற்காகச் செய்கிறாரா என்பதை; பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தை என்றுமில்லாமல் இப்போது புதிதாக தி.மு.க.வினரையும் முன்னாள் முதலமைச்சரையும் ஏசிப் பேசி அரசியலுக்காகப் பயன் படுத்தியுள்ள அநாகரிகச் செயல் குறித்து ஜெயலலிதாவின் கும்பல்தான் விளக்க வேண்டும்!

அன்புள்ள,

மு.க.

15-4-2012

3616. குன்றின் மேலிட்ட விளக்காகும்; தனித் தமிழ் ஈழம்!

உடன்பிறப்பே,

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக செய்தியாளர்கள் என்னைச் சந்தித்து வினாக்கள் தொடுத்தபோது; "இதுவரை உங்களுடைய நிறைவேறாத ஆசை என்ன என்ற கேள்விக்கு "தனி ஈழம்" என்று பதிலளித்திருந்தீர்கள்; அந்தத் "தனி ஈழம்" தொடர்பாக பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற கோரிக்கை தற்போது எழுந்துள்ளதே?" என்ற கேள்வி ஒன்றுக்கு "தனி ஈழம்" வழங்குவதற்கு தமிழர்கள் மத்தியில் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று எழுந்துள்ள கோரிக்கை வரவேற்கத்தக்கதே; ஐக்கிய நாடுகள் மன்றத்தின் தலையீட்டின் பேரில் இதைப்போல பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டு ஒருசில நாடுகள் தனி நாடுகள் என்ற அங்கீகாரத்தைப் பெற்றிருக்கின்றன; அதன் அடிப்படையில் தமிழர்கள் மத்தியில் பொது வாக்கெடுப்பு நடத்தி, அந்த வாக்கெடுப்பு முடிவின் அடிப்படையில் "தனி ஈழம்" கிடைப்பதற்கு ஐக்கிய நாடுகள் மன்றம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்; அதற்கு நமது இந்திய அரசு தேவையான அழுத்தம் தர வேண்டும்" என்று நான் பதிலளித்து, அனைத்து ஏடுகளிலும் அது வெளிவந்துள்ளது. அதனைத் தொடர்ந்து பல தொலைபேசிகள் - தம்பி கவிப்பேரரசு வைரமுத்து போன்றோர் - அதைப்பற்றி என்னிடம் பேசியதைத் தொடர்ந்து சற்று விரிவாக இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

இந்தக் கேள்விக்கும் பதிலுக்கும் அடிப்படையாக அமைந்தது கடந்த 12-4-2012 தேதிய நமது "விடுதலை" நாள் இதழில் முதல் பக்கத்தில் வந்த ஒரு செய்திதான்! அந்தச் செய்திக்கு தலைப்பே "தமிழ் ஈழத்துக்கான வாக்கெடுப்பு". அதில்,

> "தமிழ் ஈழம் வேண்டுமா வேண்டாமா என்பது குறித்த முடிவை தமிழர் விருப்பத்துக்கே விட்டு விடுவது

என்ற நிலையை ஐ.நா. சபை விரைவில் எடுக்கும் என்று தெரிகிறது. இதுகுறித்த வாக்கெடுப்பு ஒன்றை இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நடத்துவது குறித்த ஆலோசனைகளை சில நாடுகள் ஐ.நா.வில் தொடங்கியிருப்பதாகத் தெரிகிறது. இதன் மூலம் வட்டுக்கோட்டை தீர்மானம் என்ற ஈழப் போராட்டத்தின் அடிப்படை சாசனத்தை சர்வதேசம் அங்கீகரிக்கும் சூழல் உருவாகியுள்ளது.

கொசோவோ, தெற்கு சூடான், கிழக்கு திமோர், மாண்டி நீக்ரோ ஆகியவற்றை தனி நாடாக பிரகடனப்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையால் நடத்தப்பட்ட வாக்கெடுப்புகளே காரணமாக அமைந்தன. அதேபோல இலங்கையிலும் வாக்கெடுப்பு நடத்துவது குறித்து சிலர் ஆலோசிக்கத் துவங்கியுள்ளனர். அவ்வாறு வாக்கெடுப்பு நடந்தால் அதில் பங்கேற்று வாக்களிக்க வெளிநாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களுக்கும் வாய்ப்பளிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது."

இந்தச் செய்தியினைத் தொடர்ந்துதான் நான் என்னுடைய பதிலை எழுதியிருந்தேன்.

கிழக்கு தைமூர் 16ஆம் நூற்றாண்டில் போர்ச்சுகல் நாட்டின் காலனி ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. 1975ஆம் ஆண்டு கிழக்கு தைமூர் தனிச் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்து கொண்டது. ஆனால் அதே ஆண்டு இந்தோனேசியாவால் படையெடுக்கப்பட்டு, அந்த நாட்டின் 27வது மாகாணமாக இணைத்துக் கொள்ளப்பட்டது. 1999ஆம் ஆண்டிலேதான் ஐக்கிய நாடுகள் மன்றத்தின் தலையீட்டின் பேரில் கிழக்கு தைமூருக்கு சுய நிர்ணய உரிமை வழங்கப்பட்டது. 2002ஆம் ஆண்டு மே 20ஆம் நாளன்று 21ஆம் நூற்றாண்டின் சுய நிர்ணய உரிமை பெற்ற முதல் நாடாக சரித்திரத்திலே இது இடம் பெற்றது.

கிழக்கு தைமூர் நாட்டைப் போலவேதான், யூகோஸ்லோவியா நாட்டிலிருந்து மாண்டி நீக்ரோ எனும் தனி நாடு, 3-6-2006 அன்றும்; செர்பியாவிலிருந்து கொசோவோ எனும் தனி நாடு 17-2-2008 அன்றும்; சூடான் நாட்டிலிருந்து தெற்கு சூடான் எனும்

தனி நாடு 2011ஆம் ஆண்டிலும் ஐக்கிய நாடுகள் மன்றத்தின் தலையீட்டின் பேரில் பொது வாக்கெடுப்பு நடைபெற்று உருவாக்கப்பட்டன. அதேபோன்ற ஒரு நடைமுறையைத்தான் தனித் தமிழ் ஈழத்தைப் பொறுத்தவரை பின்பற்ற வேண்டுமென்று நாம் கோருகிறோம். அதற்குத்தான் இந்திய அரசின் ஒத்துழைப்பை நாடுகிறோம்.

இந்த வாக்கெடுப்பு பற்றி, நான் இப்போதல்ல, 14-10-1987 அன்று சென்னையில் சைதாப்பேட்டையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசும்போதே,

> "ஒப்பந்தத்தில் ஒரு முக்கியமான ஷரத்து-வட கிழக்கு பகுதிகள் இரண்டு மாகாணங்கள்-அவை இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து ஈழத்தமிழ் மாநிலமாக தமிழர் தாயகமாக ஒரு மாநில அரசு அங்கே உருவாகக்கூடிய அளவிற்கு அதிக அதிகாரங்களைக் கொண்ட சுயாட்சி உரிமையோடுகூடிய ஒரு மாநில அரசு உருவாகக்கூடிய அளவிற்காவது இடைக் காலத்தில்-**குறிக்கோள் தமிழ் ஈழம் என்றிருந்தாலும்கூட**, ஒரு ஏற்பாடு ஒப்பந்தத்தில் வேண்டும் என்று போராளிகள் கேட்டார்கள். நாமும் அதைத்தான் வலியுறுத்தினோம். ஆனால் வடக்கு, கிழக்கு மாநிலங்கள் இப்பொழுது ஒன்றாக ஒரு நிர்வாகத்திலே வரும் என்றாலுங்கூட, சில மாதங்களுக்குப் பிறகு "ரெபரெண்டம் (வாக்கெடுப்பு)" வைக்கப்படும். பொதுமக்களுடைய வாக்கெடுப்பு நடைபெறும். அதிலே கிழக்கு மாகாண மக்கள் வடக்கு மாகாணத்தோடு இணைந்திருக்க சம்மதித்தால் இரண்டும் ஒன்றாக தொடர்ந்திருக்கும். இல்லையேல் வடக்கு மாகாணம் தனி, தமிழர்களை அதிகமாகக் கொண்டிருக்கின்ற கிழக்கு மாகாணம் தனி. இரண்டும் ஒரு மாகாணமாக இருக்கமுடியாது என்று ஒப்பந்தத்தில் ஒரு ஷரத்து காணப்பட்டது.

கேட்டபோது சொன்னார்கள். பொது வாக்கெடுப்பு நடைபெற்றால் கூட, அது நியாயமாக நடைபெறும்; இந்திய அரசு இலங்கை அரசு என்ற இரண்டு அரசுகளும் தலையிடாமலேயே அந்தப் பொது வாக்கெடுப்பு நடைபெறும் என்றெல்லாம் சொன்னார்கள்" என்று விளக்கிப் பேசினேன்.

ஆனால் ஒப்பந்தம் கையெழுத்தான அடுத்த வாரமே, இலங்கையிலே, கொழும்பிலே ஜெயவர்த்தனா, ராஜீவ் காந்திக்கு பக்கத்திலே அமர்ந்து ஒப்பந்தத்திலே கையெழுத்து போட்ட ஜெயவர்த்தனா - கிழக்கு மாகாண மக்கள் விரும்பினால் இணைந்திருக்கலாம்; இல்லாவிட்டால் தனித்திருக்கலாம் என்ற கருத்தமைந்த ஷரத்தை எழுதிக் கையெழுத்துப் போட்ட அதே ஜெயவர்த்தனா - "அப்படி ஒரு பொதுத் தேர்தல் வரும்போது, வாக்கெடுப்பு நடத்தும் போது, நான் கிழக்கு மாகாணத்திற்குச் செல்வேன், கிழக்கு மாகாணம், வடக்கு மாகாணத்தோடு இணைகின்ற அந்தக் கருத்திற்கு எதிராகப் பேசுவேன்" என்று சொன்னார்.

எனவே ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டு விட்டு, அப்போதே அதற்கு மாறாக இலங்கை அதிபர் பேசினார்.

27-8-1983 அன்று சென்னையில் நடைபெற்ற தி.மு. கழகப் பொதுக் குழுவில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலேயே,

"This Council does not think that it would be possible for the Tamils in Sri Lanka to live in peace with the Sinhalese under the same flag and preserve their culture, individuality, language and way of life in the wake of the recent perpetration of genocide. Therefore, this Council feels that a separate Tamil EELAM, shall be the only remedy and permanent solution to the problem and extends its whole-hearted support for all such efforts that shall be aimed at creating a new Tamil EELAM"

(நடைபெற்ற இனநாசக் கோரக் கொலை களுக்கும் சொத்து சேதத்திற்கும் பிறகு இனியும் தமிழர்களும், சிங்களவர்களும் ஒரே அரசமைப்பின் கீழ் தங்கள் உயிரையும் உடைமையையும் தனிக் கலாச்சாரத்தையும், மொழியையும் வாழ்க்கை முறையையும் காப்பாற்றிக்கொண்டு வாழ முடியும் என்று இந்தப் பொதுக் குழுவால் கருத முடியவில்லை. எனவே விடுதலை பெற்ற தனித் தமிழ் ஈழம் தான் இதற்கு நிரந்தரப் பரிகாரம் என்று இந்தப் பொதுக்குழு கருதுகிறது. அதற்கான முயற்சிக்கு தி.மு. கழகம் ஈழத் தமிழர்களுக்கு தன் மனப்பூர்வமான ஆதரவை நல்கும் என்றும் இந்தப் பொதுக்குழு தெரிவித்துக் கொள்கிறது)

இந்தத் தீர்மானத்தை 1983ஆம் ஆண்டே முன்மொழிந்தவன் நான். இதை வழி மொழிந்தது பொதுச் செயலாளர் பேராசிரியர்.

இந்தத் தீர்மானத்தை விளக்கி 28-8-1983 அன்று சென்னை கடற்கரையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் நான் உரையாற்றும்போது, "இலங்கையில் இந்தியப் படை நுழைந்து ஈழத் தமிழகத்தை உருவாக்கித் தருமானால், இங்கே காங்கிரஸ் கட்சியே ஆளட்டும், பத்தாண்டு காலத்திற்கு ஆட்சிக்கு வர தி.மு.க. முயற்சி எடுக்காது" என்று நான் பேசினேன்.

1976ஆம் ஆண்டு ஈழத்தில் வட்டுக்கோட்டை என்ற இடத்தில் நடைபெற்ற மாநாட்டில் - ஈழத் தந்தை செல்வா அவர்கள் "தமிழர் ஐக்கிய முன்னணி" என்பதை "தமிழர் விடுதலை ஐக்கிய முன்னணி" எனத் திருத்தி அறிவித்ததோடு - ஈழத் தமிழகம் - சுதந்திரம் பெற வேண்டுமென்ற பிரகடனத்தை வெளியிட்டார். ஆனால் அதற்கு அடுத்த ஆண்டே அந்தப் பெருமகன் மறைந்து விட்டார்.

உடன்பிறப்பே, தனித் தமிழ் ஈழம் என்பது வரலாற்று ரீதியாக தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமையாகும். ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன் இலங்கையும், தமிழ் நாடும் ஒரே நிலப்பகுதியாக இருந்தன என்ற உண்மையினை பல ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்துள்ளனர். இலங்கை, கடலால் பிரிக்கப்படுவதற்கு முன்பு வாழ்ந்த மக்களின் வழித்தோன்றல்களே ஈழத் தமிழர்கள் ஆவர். ஆதி இரும்புக் காலம் என்று கூறப்படுகின்ற; மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையில் தமிழ் மக்கள் சிற்றரசு அமைத்து வாழ்ந்ததற்கான ஆதாரம் புதைபொருள் அகழ்வாராய்வின்போது கிடைத்துள்ளது. இக்கால கட்டத்தில் கந்தரோடை, தமிழ்ச் சிற்றரசின் தலைநகராக இருந்துள்ளது என்று வரலாற்றாசிரியர்கள் கருதுகிறார்கள். இந்தப் பின்னணியிலேதான் - இலங்கை வரலாற்றில் கண்டியை 1815 வரை ஆண்ட தமிழ் மன்னர் கண்ணுச்சாமி என்கிற விக்ரமராஜ சிங்கன் வெள்ளையருடன் நடந்த போரில் தோல்வியுற்று கைது செய்யப்பட்டு, தமிழ் நாட்டில் வேலூரில் சிறைவைக்கப்பட்டிருந்தார். 16 ஆண்டுகள் சிறையில் இருந்த அந்த மன்னர் வேலூரில் சிறையிலேயே மாண்டு போனார். அந்த மன்னரின் பெயரையும் இலங்கைத் தமிழர்களின் பழம்பெரும் வரலாற்றையும் மறந்துவிடாமல் நினைவூட்ட கழக அரசு காலத்தில்

1.7.1990 அன்று வேலூரில் அவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் "முத்து மண்டபம்" அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

"தென்றிசையைப் பார்க்கின்றேன்;
என் சொல்வேன் என்றன்
சிந்தையெல்லாம் தோள்களெலாம் பூரிக்கு தடடா!
அன்றந்த லங்கையினை ஆண்டமறத் தமிழன்
ஐயிரண்டு திசைமுகத்தும் தன்புகழை வைத்தோன்"

என்ற பாவேந்தர் பாரதிதாசனின் எழுச்சிக் கவிதை வரிகளை எண்ணிப் பார்க்கும் போதெல்லாம்; சரித்திரத்தின் தொடர்ச்சியாக, தனித் தமிழ் ஈழம் மலர்ந்திட வேண்டும் என்ற தாகம் என்னுள் ஏற்படுவதை நான் ஏக்கத்தோடு உணருகிறேன்.

"தனித் தமிழ் ஈழம்" எனும் விடுதலை கீதம் தரணியெங்கும் வாழும் தமிழர்களின் செவிகளிலே இடையறாது ஒலித்துக் கொண்டிருக்கின்றது. இலங்கை மண்ணில் தமிழர்கள் சிந்திய இரத்தமும், கொடுத்த உயிர்ப் பலிகளும், நிச்சயம் வீண் போகாது. இன்றில்லாவிட்டால் நாளை - நாளை இல்லா விட்டால் நாளை மறுநாள் - தனித் தமிழ் ஈழம் நிச்சயம் உருவாகும்! ஈழத் தமிழினத்தின் இணையற்ற அடையாளம் குன்றின் மேலிட்ட விளக்காக குவலயத்திலே ஒளி வீசும்!

அன்புள்ள,
மு.க.
20-4-2012

3617. "பிறப்பொக்கும்" என்பது கூடாதாம்!

உடன்பிறப்பே,

பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியம் பேரவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, கழகத்தின் சார்பில் தங்கம் தென்னரசு அவர்கள் அந்தத் துறையின் முன்னாள் அமைச்சர் என்ற முறையில், என்னென்ன சாதனைகள் செய்யப் பட்டன என்பதை தலைப்புச் செய்தியாகக் கூறுகிறேன் என்று பேசத் தொடங்கியதுமே, அந்தத் துறையின் அமைச்சர் குறுக்கிட்டு தேவையில்லாமல் "தி.மு.க. தலைவர், கனிமொழி இவர்களைப் பற்றிய சுயசரிதைகளை எல்லாம் படிப்பதுதான் சமச்சீர் கல்வியா" என்று என்னையும் என் குடும்பத்தினரையும் இழுத்துப் பதில் சொல்லி, பேரவைத் தலைவரும் அதை அனுமதித்து அவைக் குறிப்பில் இடம் பெறச் செய்திருக்கிறார்கள். ஏடுகளில் எல்லாம் இந்தச் செய்தி வெளிவந்துள்ளது.

சமச்சீர் கல்வித் திட்டத்தை அ.தி.மு.க. அரசு, அது தி.மு.க. அரசினால் கொண்டு வரப்பட்ட திட்டம் என்பதற்காகவே எதிர்த்தது. இத்திட்டம் பற்றி உயர்நீதிமன்ற நீதிபதிகள் திரு.எஸ். ராஜேஸ்வரன், திருமதி கே.பி.கே. வாசுகி ஆகியோர்,

> "சமச்சீர் கல்விச் சட்டத்தின் நோக்கம் மிகத் தெளிவானது. சிறந்த வல்லுநர்களைக் கொண்ட ஆய்வுக் குழு விரிவாக ஆராய்ந்து சமச்சீர் கல்வி முறையை அமல்படுத்த பரிந்துரை செய்துள்ளது, அந்தக் குழுவின் பரிந்துரைகளை எளிதாகப் புறக்கணித்து விட முடியாது, இது தவிர ஏற்கனவே பெரும் தொகை செலவிடப்பட்டுள்ள நிலையில், மேலும் பெரும் தொகையைச் செலவிடுவது அவசியம்தானா? இதைப் பற்றியெல்லாம் அட்வகேட் ஜெனரல் அரசுக்கு தக்க ஆலோசனைகளை வழங்கவேண்டும், மேலும் ஏற்கனவே அமலில் உள்ள ஒரு சட்டத்தை, இந்த நீதிமன்றத்தால்

உறுதிப்படுத்தப்பட்ட சட்டத்தை, அமைச்சரவைக் கூட்டத்தின் கொள்கை முடிவு மூலம் நிறுத்தி வைக்க முடியுமா?"

என்றெல்லாம் கேட்டார்கள். பின்னர் உச்ச நீதி மன்றம் சமச்சீர் கல்வித் திட்டத்தை இந்த ஆண்டில் இருந்தே நடைமுறைப்படுத்த வேண்டுமென்று தீர்ப்பு அளித்த பிறகு வேறு வழியின்றி அ.தி.மு.க. அரசு அதை ஏற்றுக் கொள்ள வேண்டி யதாயிற்று.

கல்வித் துறை சார்பில் அப்போது அனைத்து முதன்மைக் கல்வி அதிகாரிகளுக்கும் அனுப்பப் பட்ட சுற்றறிக்கையில் சமச்சீர் கல்விப் பாடப் புத்தகங்களில் நீக்கப்பட வேண்டிய பகுதிகளை ஸ்டிக்கர் ஒட்டி மறைத்து விட்டும், சில இடங்களில் கறுப்பு நிற மார்க்கர் பேனா கொண்டு அடித்து விட்டும் வழங்க வேண்டும் என்று ஆணையிட்டார்கள்.

"தி.மு.க. தலைவர் மற்றும் கனிமொழி ஆகியோரின் சுயசரிதைகளை எல்லாம் படிப்பது தான் சமச்சீர் கல்வியா?" என்று கேட்ட அமைச்சரோ, அதை அனுமதித்த முதலமைச்சரோ, அதனை அவைக் குறிப்பில் இடம் பெறச் செய்த பேரவைத் தலைவரோ எந்தச் சமச்சீர் கல்விப் பாடத்தில் என்னுடைய சுயசரிதையோ, கனிமொழியின் சுய சரிதையோ இடம் பெற்றுள்ளது என்று கூறுவார்களா? கல்வித் துறையின் சார்பில் சுற்றறிக்கை அனுப்பியவர்கள் அப்படிப்பட்ட பகுதிகள் இருந்தால் அதையும் ஸ்டிக்கர் ஒட்டி மறைத் திருக்க வேண்டியதுதானே? சமச்சீர் கல்விப் பாடத்திட்டத்திலிருந்து எதையெதை மறைத்தார்கள்?

முதல் வகுப்பு தமிழ்ப் பாடப் புத்தகத்தில் 69, 70, 79, 80 ஆகிய நான்கு முழுப் பக்கங்களையும் நீக்க வேண்டுமாம்! அந்தப் பக்கங்களில் என்ன உள்ளது தெரியுமா? 69ஆம் பக்கத்தில் "வண்ணம் தீட்டுவேன்" என்ற தலைப்பில் ஒரு ஆப்பிள் படம் போடப்பட்டுள்ளது. அதில் பாதிப் பகுதிக்கு சிகப்பு வண்ணம் பூசப்பட்டுள்ளது. மீதிப் பகுதிக்கு மாணவன் வண்ணம் தீட்ட வேண்டும். இந்தத் தாளினையே நீக்க வேண்டுமாம். என்ன காரணம் என்றால், கறுப்பு சிகப்பு தி.மு. கழகத்தின் வண்ணமாம். அ.தி.மு.க. கொடியில் கறுப்பு சிகப்பே இல்லையாம்! நல்ல புத்திசாலிகள்....ஹி....ஹி....ஹி....

80ஆம் பக்கத்தில் தமிழ் மாதங்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. அந்த மாதங்கள் தை மாதம் முதல் தொடங்கியிருப்பதால் அந்த முழுப் பக்கத்தையும் கிழிக்கச் சொல்லி விட்டார்கள்.

3வது வகுப்பு தமிழ்ப் பாடப் புத்தகத்தில் 67வது பக்கத்தில் "2 படங்கள் மற்றும் ஜூன் 23 - 27, 2010ல் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு கலைநிகழ்ச்சி, ஊர்வலக் காட்சி ஸ்டிக்கர் ஒட்டி மறைக்கப்பட வேண்டும்" - என்று சுற்றறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது.

3வது வகுப்பு ஆங்கிலப் புத்தகத்தில் 26வது பக்கத்தில், கடைசிப் பத்தி நீக்கப்பட வேண்டுமாம். அதிலே என்ன இருக்கிற தென்றால், "உலகத் தமிழ் மாநாடு 2010 ஜூன் மாதம் 23ந்தேதி முதல் 27ந்தேதி வரை கோவையில் நடைபெற்றது" என்ற பகுதி அழிக்கப்பட வேண்டுமாம். இவர்கள்தான் தமிழ்த்தாய் விருது வழங்குகிறார்களாம்?

அதே புத்தகத்தின் 27வது பக்கத்தில் "அந்த மாநாட்டுக்குத் தலைவராக முதலமைச்சர் இருந்தார். மாநாட்டுக் கண்காட்சி பயனுள்ளதாக இருந்தது" என்ற பகுதி அழிக்கப்பட வேண்டுமாம். மாநாட்டுத் தலைவராக நான் இருந்தேன் என்று கூட இல்லை,

"முதலமைச்சர்" இருந்தார் என்றுதான் உள்ளது. ஆனாலும் அதனை அழிக்க வேண்டுமென்று தமிழக அ.தி.மு.க. அரசு கூறியிருக்கின்றது. இதைத்தான் அமைச்சர் சிவபதி என்னுடைய சுயசரிதை என்கிறாரா?

75வது பக்கத்தில், முதல் பத்தி நீக்கப்பட வேண்டும். அதாவது "செவ்வியல் மொழிகளிலே செம்மாந்த மொழி நம் செந்தமிழ் மொழி என்று தொடங்கும் அந்தப் பத்தி முழுவதும் கறுப்பு நிற மார்க்கர் கொண்டு அடிக்கப்பட வேண்டும்" - இது சுற்றறிக்கை. அந்தப் பத்தியில் உள்ள வாசகங்கள் என்ன தெரியுமா? "செவ்வியல் மொழிகளிலே செம்மாந்த மொழி நம் செந்தமிழ் மொழி. தமிழக அரசால் கோவையில் நடத்தப் பெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி முதல் மாநாட்டில் பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் "இனியவை நாற்பது" என்ற பெயரில் அலங்கார ஊர்திகள் இடம் பெற்றிருந்தன. அவை தமிழ் மொழியின்

தொன்மையையும் பண்பாட்டுச் சிறப்பையும் வெளிப்படுத்தின" என்ற வார்த்தைகளில் ஏதாவது ஒரு வார்த்தை தி.மு. கழகத்தைப் பற்றியோ, என்னைப் பற்றியோ பெருமையாகக் கூறுவதாக இருக்கிறதா என்பதை தமிழ் மக்கள்தான் கூற வேண்டும்!

4-வது வகுப்பு சமூக அறிவியல் புத்தகத்தில் 111வது பக்கத்தில் சென்னை சங்கமம் பற்றிய பகுதி ஸ்டிக்கர் ஒட்டி மறைக்கப்பட வேண்டும். அதாவது நாட்டுப்புறக் கலைகள் மக்களுக்கு புத்துணர்ச்சி அளித்து கலை உணர்ச்சிக்கு விருந்தளிக்கின்றன. நாட்டுப்புறக் கலைகளை வளர்த்திட தமிழக அரசு ஆண்டுதோறும் சென்னை சங்கமம் நிகழ்ச்சிகளை நடத்தி நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ஊக்கமளித்து வருகிறது என்ற பகுதி கறுப்பு நிற மார்க்கர் கொண்டு அடிக்கப்பட வேண்டும் என்று கல்வித்துறை சார்பில் சொல்லியிருக்கிறார்கள். நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ஊக்கமளிப்பது குற்றமா என்று தெரியவில்லை. இந்த வரிகளை அழிக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இதைத்தான் தமிழக கல்வி அமைச்சர், கனிமொழி பற்றிய சுயசரிதை என்கிறாரா?

5வது வகுப்பு சமூக அறிவியலில் 80-வது பக்கத்தில் 3வது படம் நீக்கப்பட வேண்டும். அதாவது புதிய தலைமைச் செயலகக் கட்டிடம் ஸ்டிக்கர் ஒட்டி மறைக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் படம் மிகவும் சிறிதாக புதிய தலைமைச் செயலகம் என்பது கூட தெரியாத அளவிற்கு உள்ளது. அதைக் கூட இந்தப் புத்தகத்தில் வெளிவந்து விடக் கூடாது என்று நினைக்கிறார்கள் என்றால் எந்த அளவிற்கு அ.தி.மு.க. ஆட்சியாளரின் இதயத்தில் காழ்ப்புணர்ச்சி இடம் பெற்றுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

6வது வகுப்பு தமிழ்ப் பாடப் புத்தகத்தில் பக்கம் 56இல் அப்துல் ரகுமானின் புதுக்கவிதை - தாகம் - முழு பக்கமும் ஸ்டிக்கர் ஒட்ட வேண்டும் என்கிறது அரசு உத்தரவு. அந்தக் கவிதையில், **"வேலிக்கு வெளியே தலையை நீட்டிய என் கிளைகளை வெட்டிய தோட்டக்காரனே, வேலிக்கு அடியில் நழுவும் என் வேர்களை என்ன செய்வாய்? - அப்துல் ரகுமான்"** என்று உள்ளது. இந்தக் கவிதையை எதற்காக ஸ்டிக்கர் ஒட்டி மறைக்கச் சொல்கிறார்கள் என்று தெரிய வில்லை. கவிக்கோ மீதுள்ள கோபமா?

அதே புத்தகத்தில் பக்கம் 129இல் “தமிழ்ப் புத்தாண்டுச் சிறப்பிதழ் - கவிதை - தைத் தமிழ்ப் புத்தாண்டே வருக” என்ற வார்த்தைகள் இடம் பெற்றதற்காக அந்தப் பக்கம் முழுவதையும் நீக்க வேண்டுமாம். அடுத்து 130வது பக்கத்தில் இலவசப் பயண அட்டை விண்ணப்பப் படிவம் என்ற தலைப்பில் மாணவன் பெயர், பள்ளியின் பெயர், புறப்படும் இடம், சேரும் இடம் என்ற விவரங்களைப் பூர்த்தி செய்யும் படிவம் உள்ளது. அந்தப் பக்கத்தையே முழுவதுமாக நீக்க வேண்டுமென்று எதற்காகச் சொல்லியிருக்கிறார்கள் என்று கண்டறிய முடியவில்லை.

6ஆம் வகுப்பு ஆங்கிலப் புத்தகம் பக்கம் 53இல் இரண்டாவது பத்தியில் உள்ள “தப்பாட்டம்” என்ற பகுதியை முழுவதுமாக நீக்க வேண்டுமாம். தப்பாட்டம் என்றால் என்ன என்பதையும், சிலப்பதிகார காலத்திலே அது இடம் பெற்றிருந்தது என்பதையும் அந்தப் பத்தியில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அந்தப் பத்தியின் இறுதியில் “பொங்கல் விழாவின்போது சென்னை சங்கமம் நிகழ்ச்சியில் தப்பாட்டம் நடைபெறுவதை பார்த்திருக்கிறீர்களா?” என்று ஒரு வாக்கியம் இடம் பெற்ற காரணத்தால் அந்தப் பத்தி முழுவதையும் நீக்கச் சொல்லியிருக்கிறார்கள்.

6ஆம் வகுப்பு - அறிவியல் பாடப் புத்தகத்தில் 81ஆம் பக்கத்தில் உள்ள சட்டக்காந்தம் படம் மறைக்கப்படவேண்டுமாம். காரணம் அந்தப் படத்தின் வண்ணம் கறுப்பு, சிகப்பு போல இருக்கிறதாம்.

6ஆம் வகுப்பு - சமூக அறிவியல் பாடப் புத்தகத்தில் - பக்கம் 11 இல் “அண்மையில் தமிழக அரசு கொண்டு வந்துள்ள கலைஞர் உயிர்க் காப்பீட்டுத் திட்ட நிதி உதவியால் எங்குமுள்ள வசதியற்ற மக்களும் செலவு மிகுதியாகக் கூடிய உயர்ந்த மருத்துவமனையில் தரமான சிகிச்சை பெற்று வருகின்றனர்” என்பதை ஸ்டிக்கர் ஒட்டி மறைக்க வேண்டுமாம்!

பக்கம் 12இல் மூன்றாவது வரியில் உள்ள “அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்” என்ற வார்த்தைகளை நிரந்தர மார்க்கர் பேனா வைத்து அழிக்க வேண்டுமாம்! பக்கம் 17இல் “அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்”, “வாழ்ந்து காட்டுவோம் திட்டம்” என்ற வார்த்தைகளையும் நிரந்தர மார்க்கர் பேனா வைத்து அழிக்கவேண்டுமாம்! இவர்கள் ஆட்சியில் “அண்ணா” என்ற பெயரே ஆட்சேபணைக் குரியதாகி விட்டதா?

பக்கம் 24இல் "வருபவர் தமிழக முதல்வர் கலைஞர் என்பது குறிப்பிட வேண்டியதாகும்" என்ற வார்த்தைகளை அழிக்க வேண்டுமாம். புத்தகத்தில் என்ன உள்ளதென்றால், "கருவுற்ற தாய்மார்கட்கு நல்ல சத்துணவு கிடைத்திட வழிசெய்ய மகப் பேறுக்கு முன் மூன்று மாதத்திற்கும், பின் மூன்று மாதத்திற்குமாக, மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் ஆறாயிரம் ரூபாய் அரசே வழங்கும் நல்ல திட்டத்தை அறிவித்து நிறைவேற்றி வருபவர் தமிழக முதல்வர் கலைஞர் என்பது குறிப்பிட வேண்டியதாகும்" என்றிருக்கிறது. இதில் கடைசியாக உள்ள வார்த்தைகளை அரசின் அறிவுரைப்படி நீக்கி விட்டால் நிறைவேற்றி..... என்பதோடு வாக்கியம் முடியாமல் அப்படியே இருக்கும். அதைத்தான் மாணவர்கள் படிக்க வேண்டுமென்று இந்த அரசு கூறுகிறது.

பக்கம் 82இல் "தமிழக முதல்வர் கலைஞரின் கருத்தினை ஏற்று, கடந்த 2004ஆம் ஆண்டு மையஅரசு தமிழ் ஒரு செம்மொழி என்று அறிவித்துள்ளது. இதிலிருந்து தமிழின் இணையற்ற சிறப்பு விளங்கும்" என்ற வார்த்தைகளை அழிக்க வேண்டுமாம். இவற்றில் என்ன தவறு என்பதை படிப்பவர்களே தெரிந்து கொள்ளலாம். அதே பக்கத்தில் தமிழ் நாடு படம் இருப்பதை மறைக்க வேண்டுமாம். காரணம் அதில் சோழர் வாழ்ந்த பகுதியை கறுப்பு வண்ணம் கொண்டும், சேரர் ஆண்ட பகுதியை சிகப்பு வண்ணம் கொண்டும், பாண்டியர் ஆண்ட பகுதியை நீல வண்ணம் கொண்டும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இந்த மூன்று வண்ணங்களில் கறுப்பு, சிகப்பு வண்ணங்கள் இடம் பெற்றிருப்பதால் அந்தப் படத்தையே மறைத்து விட வேண்டுமாம்!

7-வது வகுப்பில் 98-வது பக்கத்தில் தொ.பொ. கிருஷ்ணசாமி பாவலர், கந்தசாமி, என்.எஸ். கிருஷ்ணன், அறிஞர் அண்ணா, கலைஞர் மு. கருணாநிதி, டி.கே.எஸ். சகோதரர்கள், ஆர்.எஸ். மனோகர் முதலியோர் இவர்தம் அடியொற்றி நாடகக் கலை வளர உறுதுணை புரிந்தோராவர் என்ற பகுதி கறுப்பு நிற மார்க்கர் கொண்டு அடிக்கப்பட வேண்டும் - என்று சுற்றறிக்கையிலே காணப்படுகிறது. "தமிழ் நாடக முன்னோடிகள்" என்ற தலைப்பில் பரிதிமாற்கலைஞர், சங்கரதாசு சுவாமிகள், பம்மல் சம்பந்தனார் போன்றவர்களைப் பற்றி விரிவாக எழுதிவிட்டு இறுதியாக ஒரு பத்தியில் மேலே சொன்ன பெயர்களையெல்லாம் குறிப்பிட்டு இவர்களும் நாடகக் கலை வளர துணை புரிந்தோர்கள் என்று

சொல்லும்போது என் பெயரையும் சேர்த்து விட்டார்களாம், அதற்காக அண்ணா, என்.எஸ். கிருஷ்ணன் போன்றவர்களின் பெயர்களையெல்லாம் சேர்த்து கறுப்பு நிற மார்க்கரால் அடிக்க வேண்டுமென்று அண்ணாவின் பெயரை வைத்துக் கொண்டுள்ள ஆட்சியிலே ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பது வெட்கக்கேடா அல்லவா?

9-வது வகுப்பு தமிழ்ப் பாடப் புத்தகத்தில், பக்கம் 203இல் "தமிழ்ப் புத்தாண்டின் தொடக்க விழா" என்ற தொடர் கறுப்பு நிற மார்க்கர் கொண்டு அடிக்க வேண்டும் என்கிறது சுற்றறிக்கை. அதிலே என்ன இருக்கிறது என்றால், "தமிழர் திருநாளாம் பொங்கல் விழா; தைத்திங்கள் நாள் விழா; தமிழ்ப் புத்தாண்டின் தொடக்க விழா; தமிழினத்தின் தனிவிழா; பண்பாட்டுப் பெருவிழா" என்பதுதான் அதிலே உள்ள வார்த்தைகள். தைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டின் தொடக்க விழா என்பதை கறுப்பு நிற மார்க்கர் கொண்டு அடிக்க வேண்டுமாம்.

பத்தாம் வகுப்பு தமிழ் பாடப் புத்தகத்தில் பக்கம் 17இல் "மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் நிறைவுற்றது" என்ற தொடர் கறுப்பு நிற மார்க்கர் கொண்டு அடிக்கப்பட வேண்டும் என்று சுற்றிக்கையில் உள்ளது. என்ன காரணமாம்? "தமிழைச் செம்மொழி என அறிவிக்க வேண்டும் என்ற முயற்சி 1901இல் தொடங்கி, 2004 வரை தொடர்ந்தது. நடுவணரசு 2004ஆம் ஆண்டு அக்டோபரில் தமிழைச் செம்மொழியாக ஏற்பளித்தது. இத்தொடர் முயற்சி மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் நிறைவுற்றது" என்று உள்ளதில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் நிறைவுற்றது என்பதை கறுப்பு நிற மார்க்கர் கொண்டு அடிக்கப்பட வேண்டும் என்கிறார்கள்.

அதே புத்தகத்தில் 89வது பக்கத்தில் "அறிந்து கொள்வோம் என்ற பகுதி முழுவதும் நீக்கப்பட வேண்டும்" என்கிறது சுற்றறிக்கை. அந்தப் பகுதியில் நான் எழுதிய கவிதை ஒன்று இடம் பெற்றுள்ளது. அதனை முழுவதும் நீக்க வேண்டுமாம். 100வது பக்கத்தில் "கலைஞரின் இனிய நடையை படித்தறிக. கொடிநாள்..... வெற்றி உங்களை தேடி வந்து மாலையிடும் என்ற பகுதி ஸ்டிக்கர் ஒட்டி மறைக்கப்பட வேண்டும்" - இது

சுற்றறிக்கை. கொடிநாள் பற்றி நான் எழுதிய ஒரு உரைநடையை, நான் எழுதியது என்பதால் அதனை மறைக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் மறைத்தது பற்றி எனக்கொன்றும் வருத்தமில்லை.

இதிலே வேதனையிலும் ஒரு வேடிக்கை! ஒவ்வொரு புத்தகத்திலும் அய்யன் திருவள்ளுவரின் படம் அச்சடிக்கப்பட்டிருந்தது. அதன் கீழே திருவள்ளுவரின் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற எழுத்து எழுதப் பட்டிருந்தது. அந்த வார்த்தைகள் என் கையெழுத்திலே இருந்தன என்பதற்காக அந்த வார்த்தைகளையே எடுக்கச் சொல்லி அ.தி.மு.க. அரசு கூறிவிட்டு - தற்போது பேரவையில் ஒரு அமைச்சர் என்னுடைய சுயசரிதையும், என் மகள் சுய சரிதையும் சமச்சீர் கல்விப் பாடப் புத்தகங்களிலே இடம் பெற்றது என்று சொல்லியிருக்கிறார் என்றால், எப்படியெல்லாம் உண்மைக்கு மாறாக புளுகுகிறார்கள் என்பதற்கு இதைவிட ஒரு எடுத்துக்காட்டும் வேண்டுமா?

239வது பக்கத்தில் "பாவேந்தர் செம்மொழித் தமிழாய்வு நூலகம் சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் இயங்கி வருகிறது என்ற தொடர் கறுப்பு நிற மார்க்கர் கொண்டு அடிக்கப்பட வேண்டும்" இது சுற்றறிக்கை. சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் இயங்கி வந்த பாவேந்தர் செம்மொழித் தமிழாய்வு நூலகத்தை இரவோடு இரவாக அப்புறப்படுத்திய ஆட்சி என்பதால் அந்த வாசகங்களை நீக்கச் சொல்லியிருக்கிறார்கள் போலும்!

பொதுவாக எல்லா வகுப்புப் பாடப் புத்தகங்களிலும் இடம் பெற்றுள்ள செம்மொழி வாழ்த்தை ஸ்டிக்கர் ஒட்டி மறைக்க வேண்டுமாம். அப்படி அந்த வாழ்த்தை மறைக்க வேண்டிய அளவிற்கு அதிலே உள்ள வாசகங்கள் என்ன தெரியுமா?

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் -
பிறந்த பின்னர், யாதும் ஊரே, யாவரும் கேளிர்!
உண்பது நாழி உடுப்பது இரண்டே
உறைவிடம் என்பது ஒன்றேயென
உரைத்து வாழ்ந்தோம் -
உழைத்து வாழ்வோம்.
தீதும் நன்றும் பிறர் தர வாரா எனும்

நன் மொழியே நம் பொன் மொழியாம்!
போரைப் புறம் தள்ளி
பொருளைப் பொதுவாக்கவே
அமைதி வழி காட்டும் அன்பு மொழி
அய்யன் வள்ளுவரின் வாய்மொழியாம்!
ஓரறிவு முதல் ஆறறிவு உயிரினம் வரையிலே
உணர்ந்திடும் உடலமைப்பை பகுத்துக் கூறும்
ஒல்காப் புகழ் தொல்காப்பியமும்
ஒப்பற்ற குறள் கூறும் உயர் பண்பாடு
ஒலிக்கின்ற சிலம்பும், மேகலையும்
சிந்தாமணியுடனே வளையாபதி
குண்டலகேசியும்
செம்மொழியான நம் தமிழ் மொழியாம்!
கம்ப நாட்டாழ்வாரும்
கவியரசி அவ்வை நல்லாரும்
எம்மதமும் ஏற்றுப் புகழ்கின்ற
எத்தனையோ ஆயிரம் கவிதை நெய்வோர் - தரும்,
புத்தாடை அனைத்துக்கும்
வித்தாக விளங்கும் மொழி!
அகமென்றும் புறமென்றும் வாழ்வை
அழகாக வகுத்தளித்து
ஆதி அந்தமிலாது இருக்கின்ற இனிய மொழி -
ஓதி வளரும் உயிரான உலக மொழி -
நம் மொழி - நம் மொழி - அதுவே
செம்மொழி - செம்மொழி - நம் தமிழ் மொழியாம்!
வாழிய வாழியவே! வாழிய வாழியவே!
வாழிய வாழியவே!

இந்த வார்த்தைகளில் மாணவர்கள் படிக்கக் கூடாத - படித்தால் அவர்கள் எதிர்காலம் பாழாகிடக் கூடிய வார்த்தை ஏதாவது ஒன்று இருக்கிறதா?

ஒரே குற்றம், இந்தச் செம்மொழி வாழ்த்துப் பாடலை எழுதியது நான் என்பதுதான். நான் எழுதிய செம்மொழி வாழ்த்துப் பாடலையும் பாருங்கள்!

அதே நேரத்தில் ஜெயலலிதா முதல் அமைச்சராக இருந்த போது அவர் தஞ்சையிலே நடத்திய உலகத் தமிழ் மாநாட்டுப் பாடலில் உள்ள பின்வரும் வார்த்தைகளையும் பாருங்கள்.

"என்றும் உள்ள தென் தமிழ் போல்
இனிக்கும் தமிழின் இலக்கியம் போல்
என்றும் மொழிக்கு புகழ் சேர்க்க
இனிய முதல்வர் வாழியவே"

"அவ்வை ஆண்டாள் அம்மையுமே
அழகுறப் பாடி தமிழ் வளர்த்தார்
அன்னை முதல்வர் ஜெயலலிதா
ஆட்சியில் இருந்து வளர்க்கின்றார்"

"பாரதத் தாயும் தமிழ்த் தாயும்
பாங்குடன் சேர்ந்து மிளிர்வது போல்
*வாரா*து வந்த மாமணியாம்*
வாழ்க அன்னை ஜெயலலிதா"

உலகத் தமிழ் மாநாட்டு வாழ்த்துப் பாடலில் தமிழை வாழ்த்துவதற்குப் பதிலாக இவ்வாறு ஜெயலலிதாவின் புகழ் பன்மடங்கு பெரிதுபடுத்தப்பட்டுப் பாடப்பட்டது போல, தி.மு. கழக ஆட்சியில் நடத்தப்பட்ட செம்மொழி வாழ்த்துப் பாடலில் முதல் அமைச்சரைப் பாராட்டி ஏதாவது ஒரு வார்த்தை இடம் பெற்றுள்ளதா? ஆனாலும் அதனைக் கிழிக்க வேண்டும் என்றார்கள்!

உடன்பிறப்பே, இப்படியெல்லாம் செய்தவர்கள் இன்று அதையெல்லாம் மறைத்து விட்டு, என்னுடைய சுயசரிதையும், என் மகள் கனிமொழியின் சுய சரிதையும் சமச்சீர் கல்வியில் இடம் பெற்றதாக ஒரு அமைச்சரே பேரவையில் பொய் கூறியிருக்கிறார். அது தவறான செய்தி என்பதை மறுத்துரைக்க கழக உறுப்பினர்களுக்கு வாய்ப்பு தரவில்லை. எனவேதான் சட்டமன்றத்தில் சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு இல்லாததால் மக்கள் மன்றத்திலே சொல்ல தி.மு. கழகம் முன்வந்துள்ளது.

அன்புள்ள,
மு.க.
21-4-2012

3618. உண்மைத் தமிழர் உணர்ந்தே தீர்வர்!

உடன்பிறப்பே,

பேரவையில் நியாயமான பிரச்சினைகளை எழுப்புவதற்கும், அவதூறுகளையும், ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளையும் சொல்லும்போது உரிய பதில் அளிப்பதற்கும் பேரவைத் தலைவரோ, ஆளுங்கட்சியோ வாய்ப்பு அளிக்காத நிலையில், ஏற்கனவே திட்டமிட்டபடி, அ.தி.மு.க.வின் தோழமைக் கட்சியைச் சேர்ந்த ஒருவரைப் பேசுமாறு பேரவைத் தலைவரே 19-4-2012 அன்று அழைக்கிறார். உடனே அவர் எழுந்து, அரசைப் புகழோ புகழ் என்று புகழ்ந்து பேச, அதைத் தொடர்ந்து முதலமைச்சர் ஜெயலலிதா எழுந்து, ஒரு நீண்ட அறிக்கையினைப் படித்ததோடு, அதனைச் செய்தியாளர்களுக்கும் அளித்துள்ளார்கள். அந்த நீண்ட அறிக்கை முழுவதும் தைத் திங்கள் முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்பதற்கு நான் அடுக்கடுக்கான ஆதாரங்களோடு எழுதியதற்கும், ஜெயலலிதா தெரிவித்த பதில்கள் எல்லாம் எவ்வளவு தவறானவை என்பதை நிரூபித்து எழுதியதற்கும் விளக்கம் என்ற பெயரால் எழுதிப் படித்த "சமாளிப்புகள்" தானே தவிர அடிப்படையில் அவற்றில் எதுவும் உண்மை இல்லை.

அரசு விழாவில் ஜெயலலிதா பேசும்போது, தமிழ் மொழியை உலகம் முழுவதும் பரப்புவதற்காக அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இரண்டு உலகத் தமிழ் மாநாடுகளை நடத்தினோம் என்று சொன்னதால், தி.மு. கழக ஆட்சிக் காலத்திலும் இரண்டு உலகத் தமிழ் மாநாடுகளை நடத்தினோமே, அதுமட்டும் தமிழ் மொழியை உலகம் முழுவதும் பரப்புவதற்காக அல்லவா? என்று கேட்டிருந்தேன். அதற்கு நேரடியாகப் பதில் சொல்லத் தெரியாத ஜெயலலிதா, கோவையில் நடைபெற்ற மாநாடு கருணாநிதியின் சுய விளம்பரத்திற்காக நடத்தப்பட்ட "தன்னல தம்பட்ட மாநாடு" என்றும் பேரவையிலே கூறியிருக்கிறார்.

பொதுவாக பேரவையில் 110வது விதியின் கீழ் அறிக்கை படிக்கும்போதும், யாரோ ஒரு உறுப்பினர் ஒரு ஐயத்தை எழுப்பி அதற்குப் பதில் அளிக்கின்ற போதும் குற்றச்சாட்டுகள் இருக்கக் கூடாது என்பது மரபு. மரபுக்கும், அ.தி.மு.க. அரசுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கிறீர்களா? அவர்களுக்கு மரபாவது, மண்ணாங்கட்டியாவது? இருந்தாலும் முதல் அமைச்சர், பேரவையிலேயே படித்திருக்கிறாரே; நான் விளக்கம் தராமல் இருக்கலாமா? அம்மையார் ஜெயலலிதா நடத்திய தஞ்சை உலகத் தமிழ் மாநாட்டிலே பாடிய வாழ்த்துப் பாடலிலேயே ஜெயலலிதா பெயரை பல இடங்களிலே பாராட்டிக் குறிப்பிட்டே பாடப் பட்டது. ஆனால் கழக அரசு நடத்திய கோவை மாநாட்டில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பா என்னால் எழுதப்பட்டதே தவிர, அந்தப் பாடலில் என்னைப் பற்றிய பாராட்டு எதுவுமே கிடையாது. தஞ்சையில் அம்மையார் ஜெயலலிதா நடத்திய மாநாட்டிற்காக வருகை தந்த இலங்கைத் தமிழ் அறிஞர் கா. சிவத்தம்பி உட்பட பலர் மாநாட்டில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படவே இல்லை. இன்னும் சொல்லப்போனால் வெளிநாட்டுத் தமிழறிஞர்கள் எல்லாம் விரட்டப்பட்டார்கள் என்று ஏடுகளிலேயே அப்போது செய்தி வந்தது. ஆனால் கோவையில் கழக அரசு நடத்திய மாநாட்டிற்கு ஜார்ஜ் ஹார்ட், அஸ்கோ பார்போலா, வாசெக், கா. சிவத்தம்பி, உல்ரிக் நிக்லாத், கிரிகோரி ஜேம்ஸ், அலெக்சாண்டர் துதியான்கி, ஆண்ட்ரீஸ் கத்தோலியஸ், சீன நாட்டைச் சேர்ந்த கலையரசி, தாமஸ் லேமன் ஆகிய வெளி நாட்டு அறிஞர்கள் எல்லாம் வருகை தந்து பாராட்டினார்கள். முன்வரிசையிலே அமர்ந் திருந்தார்கள். ஆனால் ஜெயலலிதா, முன் வரிசையிலே என் குடும்பத்தினரும், தி.மு.க. வைச் சேர்ந்த "தலைசிறந்த தமிழறிஞர்களும்" அமர்ந்திருந்ததாக கிண்டல் செய்துள்ளார். என்னுடைய குடும்பத்தினர் முன் வரிசையிலே அமர்வதே பழித்துப் பேசப்படக்கூடிய பாவகரமான ஒன்றா? தி.மு.க.வில் தமிழறிஞர்களே கிடையாதா? அ.தி.மு.க.விலே தான் தலை சிறந்த தமிழறிஞர்கள் எல்லாம் இருக்கிறார்களா? என்னுடைய குடும்பத்தினர் முன் வரிசையிலே அமரலாமா என்று கேட்கின்ற ஜெயலலிதா சட்டப்பேரவையிலே நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றுக்கு தன் உடன்பிறவாச் சகோதரியை அழைத்து வந்து மரபுக்கு மாறாக துணை சபாநாயகர் அமர வேண்டிய இடத்திலே உட்கார

வைத்தாரே, அது எந்த வகையிலே சரியானது? ஜெயலலிதாவே பேரவைத் தலைவரின் ஆசனத்தில் அமர்ந்து கொண்டாரே, அது எவ்வகை மரபு என்பதை ஜெயலலிதாதான் விளக்க வேண்டும்.

சென்னை பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் பேசிய ஜெயலலிதா பௌர்ணமி எந்த நட்சத்திரத்தில் வருகிறதோ, அந்த நட்சத்திரத்தின் பெயர்தான் மாதத்தின் பெயராக அமைந்துள்ளது என்று கூறியதை யொட்டி, சித்திரை, கார்த்திகை மாதங்களைத் தவிர மற்ற மாதங்கள் எல்லாம் நட்சத்திரங்களின் பெயர்களில் இல்லையே என்று நான் கேட்டிருந்தேன். அதற்கு பேரவையில் பதிலளித்த முதலமைச்சர் ஜெயலலிதா, அந்தப் பெயர்கள் எல்லாம் திரிந்து மாதங்களாகி விட்டன என்று வழக்கம்போல சமாளிக்கப் பார்த்திருக்கிறார். உதாரணமாக விசாகம் என்பது வைகாசியாகவும் - அனுஷம் என்பது ஆனியாகவும் - பூராடம் என்பது ஆடியாகவும் - திருவோணம் என்பது ஆவணியாகவும் - மிருகசீர்ஷம் என்பது மார்கழியாகவும் - பூசம் என்பது தை யாகவும் - மகம் என்பது மாசி மாதமாகவும் - உத்திரம் என்பது பங்குனியாகவும் வார்த்தைகள் திரிந்து விட்டதாகச் சொல்லியிருக்கிறார். தமிழறிஞர்கள் இந்த மேதா விலாச விளக்கத்தை ஏற்க முடிந்தால் சரி! சென்னப் பட்டினம் சென்னை என்று மருவியதைப் போலத்தான் இந்தச் சொற்கள் எல்லாம் மாறிவிட்டன என்கிறார். நன்றாகவே காதில் பூ சுற்ற முயன்றிருக்கிறார்! நான் மேலும் கேட்கிறேன்; நட்சத்திரங்களின் பெயர்கள் எல்லாம் திரிந்துதான் மாதங்களின் பெயர்களாக உள்ளன என்று கூறும் ஜெயலலிதா அவர்களே, இந்தப் பெயர்கள் எல்லாம் திரிந்தன என்றால், நட்சத்திரங்களின் பெயர்களை மட்டும் ஏன் பழைய பெயரிலேயே உச்சரிக்கிறார்கள்? நட்சத்திரங்களின் பெயர்களும் அல்லவா திரிந்து வழங்கப்பட்டிருக்க வேண்டும்?

தொல்காப்பியர் "திங்கள் முன்வரின் இக்கே சாரியை" - இகர ஈற்று மாதப் பெயர்கள் (ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, மார்கழி, மாசி, பங்குனி) - "இக்கு" சாரியை பெறும் என்றும் "திங்களும் நாளும் முந்து கிளந்தன்ன" ஐகார ஈற்று மாதப் பெயர்கள் (சித்திரை, கார்த்திகை, தை) முன் சொன்னவாறு இக்கு சாரியை பெறும் என்றும் கூறியுள்ளாரே, அப்படியென்றால் இந்தப் பெயர்கள் எல்லாம் தொல்காப்பியர் காலத்திலேயே திரிந்து விட்டன என்று ஜெயலலிதா சொல்கிறாரா?

அதுபோலவே சங்க இலக்கியங்களில் எல்லாம் மாதப் பெயர்கள் இடம் பெற்றுள்ளனவே, அப்படியென்றால் சங்க இலக்கியங்களுக்கு முன்பாகவே ஜெயலலிதா சொல்வதைப்போல நட்சத்திரங்களின் பெயர்கள் எல்லாம் இத்தகைய மாதப் பெயர்களாக திரிந்து விட்டனவா?

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டு மலரிலே சிறுவை நச்சினார்க்கினியன் எழுதிய ஒரு கட்டுரையை அம்மையார் ஜெயலலிதா மேற்கோள் காட்டிப் பேசியிருந்த காரணத்தால், அதே கட்டுரையின் முதல் பகுதியில், அதே சிறுவை நச்சினார்க்கினியன் தை மாதம் பற்றி எழுதியதை அப்படியே வரி பிறழாமல் குறிப்பாக "நாம் தைத் திங்களையே ஆண்டின் முதல் திங்களாய்க் கணக்கெடுத்துச் செயற்படுத்துவோம்" என்று அவர் எழுதியிருக்கிறார் என்று நான் பதிலாகத் தந்திருந்தேன். தற்போது அம்மையார் முன் பக்கத்தில் சிறுவை நச்சினார்க்கினியன் என்று தெரிவித்துள்ள கருத்தைப் பற்றி தான் எதுவும் சொல்லவில்லை என்று அப்படியே புறமுதுகிட்டுள்ளார். நச்சினார்க்கினியன் பற்றி நூற்றாண்டு விழா மண்டபத்திலே முதலமைச்சர் ஜெயலலிதா குறிப்பிட்டாரா இல்லையா? அதே நச்சினார்க்கினியன் தைத் திங்களையே ஆண்டின் முதல் திங்களாகச் செயல்படுத்தலாம் என்று சொல்லியிருக்கிறாரா இல்லையா? அதைத்தான் தி.மு. கழக அரசு, தமிழறிஞர்கள் சொன்னதையெல்லாம் ஒப்புக்கொண்டு சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று கூறியதே தவிர தானாக இட்டுக்கட்டி எதையும் செய்துவிடவில்லை.

"வாழ்வியற் களஞ்சியம்" என்ற நூலில் "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர, "தை பிறந்தால் புத்தாண்டு பிறக்கும்" என்று குறிப்பிடப்படவில்லை என்று சொல்லி யிருக்கிறார் ஜெயலலிதா! என்ன செய்வது? ஜெயலலிதா போன்றவர்கள் எல்லாம் முதலமைச்சராக வருவார்கள், அவர்களுக்கு இப்படியெல்லாம் சந்தேகம் வரும் என்பது அந்த நூலாசிரியருக்குத் தெரியவில்லை போலும்! ஆனால் நான் இந்தப் பதிலை எழுதும்போது கொட்டை எழுத்துக்களில், தமிழ் ஆண்டின் தொடக்கமே தை முதல் நாள் என்றும், அதுவே விழாவாகச் சிறப்பித்துச் செய்யப்படுகின்றது என்றும் அந்த நூலிலே உள்ளது என்பதை எழுதிக் காட்டியிருக்கிறேன். இந்தப் பொருள் புரியாமல் தை பிறந்தால் வழி பிறக்கும் என்றுதான்

அதிலே உள்ளது என்று ஜெயலலிதா பேரவையில் உண்மைக்குப் புறம்பாகச் சொல்லியிருக்கிறார்.

அடுத்து ஜெயலலிதா "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி" என்ற நூலினை மேற்கோள் காட்டி, அந்த நூலில் தமிழாண்டின் தொடக்க மாதம் தை என்று குறிப்பிட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார் திரு. கருணாநிதி, அந்த நூலில் 113வது பக்கத்தில் "இச்செய்தி தமிழ் ஆண்டு எனும் நூலிலிருந்து தொகுக்கப்பட்டது" என்றிருப்பதை தனக்கு வசதியாக திரு. கருணாநிதி மறைத்துவிட்டார்" என்று பேரவையிலே படித்துக் காட்டியிருக் கிறார். தமிழக அரசினால் - தமிழக அரசின் செலவில் - முதலமைச்சர் ஜெயலலிதாவின் அணிந்துரையுடன் வெளியிடப்பட்ட "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி" யிலேயே தை என்பதற்குப் பொருளாக "தமிழாண்டின் தொடக்க மாதம், திருவள்ளுவ ராண்டின் தொடக்க மாதம்" என்றெல்லாம் இருப்பதை நான் சுட்டிக்காட்டியிருந்தேன். அந்தச் செய்தி தமிழ் ஆண்டு எனும் நூலிலிருந்து தொகுக்கப்பட்டது என்பதை நான் மறைத்துவிட்டேன் என்கிறார் ஜெயலலிதா. சொற்பிறப்பியல் பேரகர முதலியில் பொருள் கூறும்போது, அதை எந்தப் புத்தகத்திலிருந்து எடுத்தாண்டு இருக்கிறோம் என்பதை விளக்கியிருக்கிறார்கள். அதிலே என்ன தவறு? இன்னும் சொல்லப்போனால், அம்மையார் அரை வாக்கியத்தைத்தான் எழுதியுள்ளார். முழு வாக்கியத்தையும் நான் கூறுகிறேன். அதாவது "திருக்குறள் மணி புலவர் இறைக்குருவனார் இயற்றிய திருவள்ளுவர் ஆண்டு அல்லது தமிழ் ஆண்டு எனும் நூலிலிருந்து இச்செய்தி தொகுக்கப் பட்டது" என்று உள்ளது. ஆக நான் கூறியதற்கு மற்றும் ஓர் ஆதாரமாக புலவர் இறைக் குருவனார் அவர்களும் தை மாதம் தமிழாண்டின் தொடக்க மாதம் என்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பதைத்தானே அம்மையார் ஜெயலலிதா ஒப்புக் கொண்டிருக்கிறார். இறைக்குருவனார் போன்ற புலவர் பெருமக்கள் எல்லாம் தெரிவித்த யோசனையை ஏற்றுத்தான் இந்தச் சட்டத்தை நான் பிறப்பித்தேன் என்பது உறுதியாகிறதா; அல்லவா? இறைக்குருவனார் கருத்தை யேற்றுத்தானே அந்த நூலில் அந்தப் பொருளை இடம் பெறச் செய்திருக்கிறார்கள். அந்த நூலை முழுவதும் படித்து விட்டுத்தானே முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார் அந்நூலுக்கு அணிந்துரை கொடுத்தார்? இப்போது அவரே அந்தக்

கருத்தை மாற்றிக் கொள்ளலாமா? தமிழ்நாட்டில் இருக்கின்ற தமிழ் அறிஞர்களே, புலவர்களே, சான்றோர்களே அம்மையார் வைத்த வாதம் சரியா? நான் தருகின்ற விளக்கம் சரியா? என்பதை சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் இருந்து நீங்களே பதில் கூறுங்கள்.

அடுத்து முதலமைச்சர் ஜெயலலிதா மிகத் தெளிவாக ஒரு ஐயத்தைக் கேட்டிருக்கிறார். 1963ஆம் ஆண்டு நான் சட்டப்பேரவையில் உரையாற்றியதைக் குறிப்பிட்டு, அப்போதே திருவள்ளுவர் தை மாதத்தில்தான் பிறந்தார் என்று கூறி ஏன் விடுமுறை நாளாக அந்த நாளை அறிவிக்குமாறு கேட்கவில்லை என்று கேட்டுள்ளார். தமிழறிஞர்களும், புலவர்களும் என்னிடம் 1963ஆம் ஆண்டுக்கு முன்பே இந்தக் கோரிக்கையைச் சொல்லியிருப்பார்களானால் நான் அப்போதே அதைக் கூறியிருக்க முடியும். அவர்களிடம் இதைக் கேட்டால், 1969ஆம் ஆண்டுக்குப் பிறகு அண்ணா மறைந்து நீ முதலமைச்சராக ஆவாய் என்று எங்களுக்கு எப்படித் தெரியும் என்பார்கள்? இந்தக் கேள்விக்குத்தான் நான் மயிலை கூட்டத்திலேயே தெளிவாக; "சூரியன் கிழக்கே உதிக்கிறது, மேற்கே மறைகிறது" என்று முன்பு சொன்னார்கள். பிறகுதான் விஞ்ஞானிகள் அது தவறான கூற்று, சூரியன் ஒரே இடத்தில் தான் இருக்கிறது; பூமிதான் தன்னைத் தானே சுற்றிக் கொண்டு, சூரியனையும் சுற்றுகிறது என்று கூறியபிறகு அதை ஏற்றுக் கொண்டோம். அதைப்போலவே பூமி தட்டையாக உள்ளது என்று சொல்லப்பட்டது. பிறகு விஞ்ஞானிகள் கண்டு பிடித்துச் சொன்ன பிறகு, பூமி உருண்டை என்பதை ஏற்றுக் கொண்டோம். ஏன் இதை முன்பே சொல்ல வில்லை என்றா கேட்க முடியும்?" என்று குறிப்பிட்டேன்.

அதுமாத்திரமல்ல; இதிலே எந்த ஆண்டு முடிவெடுக்கப்பட்டது என்பது பிரச்சினையல்ல. "தினமணி" நாளிதழில் கட்டுரை ஒன்றை எழுதியிருந்த திரு. சாமி தியாகராசன் எனக்குக் கூட கடிதம் ஒன்றை , 1921ஆம் ஆண்டில் மறைமலை அடிகள் தலைமையில் பச்சையப்பன் கல்லூரியில் பேசி முடிவெடுத்தார்கள் என்பதற்கு ஆதாரம் இல்லையே என்று எழுதியிருந்தார். எப்போது முடிவெடுத்தார்கள் என்பதைவிட என்ன முடிவெடுத்தார்கள் என்பதுதான் முக்கியம். முடிவெடுத்தவர்கள் யார் என்பதுதான் முக்கியம். அந்த அடிப்படையில்தான் கழக ஆட்சியில் முடிவெடுக்கப்பட்டது. இதிலே உள்ள முக்கிய குறையே;

தமிழர்களுக்கு என்று முறையான வரலாறு இல்லை என்பதுதான். இந்தக் குறை என்னால் மாத்திரமல்ல; நம்முடைய தமிழறிஞர்கள் பலராலும், வரலாற்றுப் பேராசிரியர்களாலும் உணரப்பட்டது.

பொறியாளர் வே. வரதராசன் அவர்கள் எழுதிய "தமிழர் நாகரீகம்" என்ற நூலில் "1921ஆம் ஆண்டு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்க் கடல் மறைமலை அடிகளார் தலைமையில் தமிழ் அறிஞர்களும், சான்றோர்களும், புலவர்களும் ஒன்று கூடி ஆராய்ந்து திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டு பின்பற்றுவதென முடிவெடுத்தனர். திருவள்ளுவர் காலம் கி.மு. 31 என்றும் அதையே திருவள்ளுவர் ஆண்டு தொடக்கம், தைத் திங்கள் முதல் நாள் (பொங்கல் திருநாளில்) எனவும் முடிவெடுத்தனர்" என்றுள்ளது.

1937ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சென்னையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் - தந்தை பெரியார், உமாமகேசுவரனார், பேராசிரியர் கா. சுப்பிரமணியன், தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், தமிழ்த் தென்றல் திரு.வி.க., மறைமலை அடிகளார், பி.டி. ராஜன், ஆற்காடு ராமசாமி முதலியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பட்டுக்கோட்டை அழகிரி போன்றோர் கலந்து கொண்ட அவையில் - தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு தொடக்கம் என்று நாவலர் சோமசுந்தர பாரதியார் தனது தலைமையுரையில் வலியுறுத்தியிருக்கிறார்.

9-5-1971இல் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில் திருச்சியில் நடைபெற்ற தமிழகப் புலவர் குழுவின் முப்பதாம் கூட்டத்தில் தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் விழா என முடிவு செய்யப்பட்டது.

மேலும் கடந்த இரண்டு நாட்களாக நமது "விடுதலை" நாளிதழில் அமெரிக்காவில் நாசா விண் மையத்தில் பணியாற்றும் பிரபல விஞ்ஞானி முனைவர் நா. கணேசன் அவர்கள் எழுதிய நீண்ட கட்டுரையில் இந்தப் பொருள் பற்றி விரிவான விளக்கங்களையும், எந்தெந்தப் புலவர்கள், தமிழறிஞர்கள் கடந்த காலத்தில் தை முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டு என்று தெரிவித்தார்கள் என்றும் எழுதப்பட்டுள்ளது.

இந்தப் புலவர் பெருமக்கள் எல்லாம் தெரிவித்த யோசனைகளின் அடிப்படையிலேதான் - எந்த ஆண்டு அந்த

யோசனை தெரிவிக்கப்பட்டது என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு என்ற உண்மை அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதால் 2008இல் நான் இவற்றையெல்லாம் அறிந்து ஆய்ந்த பிறகு முடிவெடுத்து அறிவித்தேன் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். ஆனால் முதலமைச்சர் ஜெயலலிதா பேரவையில் விடுத்துள்ள அறிக்கையில் நான் முறையாக எதையும் ஆய்வு செய்யாமல், தன்னிச்சையாக, தான்தோன்றித்தனமாக சட்டத்தை இயற்றினேன் என்று கூறியிருக்கிறார். தைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு என்பதை தற்போது சித்திரைத் திங்கள் என்று அம்மையார் மாற்றியிருப்பது தான் எதையும் ஆய்வு செய்யாமல் காழ்ப்புணர்வோடு செய்யப்பட்ட செயல். அவர்தான் தன்னிச்சையாக, தான்தோன்றித்தனமாக தமிழினத்தைத் திசை திருப்பும் வகையில் நடந்து கொண்டுள்ளார் என்பதைத் தமிழக வரலாறு ஒருநாள் நிச்சயமாக மெய்ப்பிக்கும்! தமிழர்களின் சரியான அடையாளத்தை அழித்திட முற்படுவது அக்கிரமம்! அதற்குப் பொய்யான நியாயம் கற்பித்திட முயலுவதும் புல்லர்கள் சிலர் புயம் தட்டிப் புறப்படுவதும் அராஜகம் என்பதை உண்மைத் தமிழர் விரைவில் உணர்ந்தே தீர்வர்!

அன்புள்ள,

மு.க.

22-04-2012

3619. காலத்தால் மறையாத காற்றில் கலந்த கீதம்!

உடன்பிறப்பே,

20-4-2012 அன்று "குன்றின் மேலிட்ட விளக்காகும்; தனித் தமிழ் ஈழம்" என்ற தலைப்பில் நான் எழுதிய கடிதத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டினையடுத்து வாக்கெடுப்புகள் நடத்தி தனி நாடாக பிரகடனப்படுத்தப்பட்ட கொசோவா, தெற்கு சூடான், கிழக்கு திமோர், மாண்டி நீக்ரோ ஆகியவற்றைப் பற்றியெல்லாம் விவரித்ததோடு, "தனித் தமிழ் ஈழம்" எனும் விடுதலை கீதம் தரணியெங்கும் வாழும் தமிழர்களின் செவிகளிலே இடையறாது ஒலித்துக் கொண்டிருக்கின்றது என்றும் தனித் தமிழ் ஈழம் நிச்சயம் உருவாகும்; ஈழத் தமிழினத்தின் இணையற்ற அடையாளம் குன்றின் மேலிட்ட விளக்காக குவலயத்திலே ஒளி வீசும் என்றும், இன்றைய சூழலில் ஏற்கனவே வரலாற்றில் உள்ள முன்னுதாரணங்களைப் பின்பற்றி ஐக்கிய நாடுகள் மன்றம் ஈழத் தமிழர்கள் மத்தியில் பொது வாக்கெடுப்பு நடத்தி, தனி ஈழம் உருவாகிட உதவிட வேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தேன்.

என்னுடைய வேண்டுகோளுக்குப் பிறகு இலங்கை அதிபர் ராஜபக்ஷேயின் தம்பி கோத்தபய ராஜபக்ஷே என்னைக் கடுமையாக விமர்சித்துப் பேசி நாளேடுகள் எல்லாம் அந்தச் செய்தியினை வெளியிட்டிருந்தன. அதன் தொடர்ச்சியாக 23-4-2012 தேதிய ஆங்கில நாளேடு ஒன்றில் கடுமையான தலையங்கம் - தனித் தமிழ் ஈழத்திற்கு விரோதமாக எழுதப்பட்டிருப்பதையும் கண்டேன். மேலும் இலங்கைக்குச் சென்ற இந்திய நாடாளுமன்றக் குழுவின் தலைவர் திருமதி சுஷ்மா சுவராஜ் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தலைவர் டி.கே. ரெங்கராஜன் அவர்களும் இலங்கையிலே உள்ளவர்கள் தற்போது தமிழ் ஈழத்தை கோரவில்லை என்பதைப் போல சொல்லியிருக்கிறார்கள்.

நான் எனது முந்தைய கடிதத்திலேயே "தமிழ் ஈழம்" கோரிக்கை எப்போது எழுந்தது, அதற்கு ஆதரவாக தி.மு.கழகம்

எப்போது முதல் குரல் கொடுத்து வருகிறது என்பதையெல்லாம் எழுதியிருந்தேன். தமிழ் ஈழம் கோரிக்கை ஏன் எழுந்தது என்பதை ஒரு கணம் எண்ணிப் பார்த்தால் அந்தக் கோரிக்கையிலே இருக்கும் நியாயத்தை உணர்ந்து கொள்ள முடியும். 8,000 சதுரமைல் பரப்பில் வாழும் 35 லட்சம் சிறுபான்மை ஈழத் தமிழர்கள் 110 லட்சம் பெரும்பான்மை சிங்களவர்களால் அடக்கி ஒடுக்கப்பட்டதாலும்; நீண்ட நெடுங்காலமாகவே தமிழர்களும் சிங்களவர்களும் வேறு வேறு மொழிகளையும், மதங்களையும், கலாச்சாரங்களையும் பூகோள எல்லைகளையும் கொண்டிருந்தும்கூட, இந்த இரு வேறு தேசிய இனங்களின் அடிப்படை வேறுபாடுகளைக் கிஞ்சிற்றும் கருதிப் பார்க்காது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் ஒரே ஆட்சி திணிக்கப்பட்டதாலும்; இந்த ஒற்றையாட்சி அமைப்பின்கீழ் பெரும்பான்மை சிங்கள இனம், தமிழ் மக்களை அடிமைப் படுத்தும் புதிய எஜமானர்களாக தம்மை ஆக்கிக் கொண்டு, தமிழர்களை இரண்டாந்தரக் குடிமக்களாகவே நடத்திட முயற்சித்ததாலும்; மற்றும் தேயிலை, ரப்பர் தோட்டங்களில் தொழிலாளர்களாக இருந்த பத்து லட்சம் தமிழர்களின் குடியியல் உரிமைகளைப் பறித்து அவர்கள் அனைவரும் நாடற்றவர்களாக ஆக்கப்பட்டதாலும்; 1956ஆம் ஆண்டு சிங்கள மொழியை மட்டுமே இலங்கை முழுவதற்கும் ஆட்சி மொழியாக ஆக்கி தமிழர்களுக்கு கல்வி உரிமை, வேலை வாய்ப்பு உரிமை ஆகியவற்றை மறுத்து அவர்களை அன்னிய நாடுகளுக்குச் சென்று குடியேற நிர்ப்பந்தம் செய்ததாலும்; 1960-61இல் கல்விச் சாலைகளை தேசிய மயமாக்கியதன் மூலம் தமிழர்களின் கல்விக் கெதிரான பாரபட்சமான மனிதாபிமானமற்ற கொள்கைகளைப் பின்பற்றியதாலும்; தமிழர்களை சிங்கள மொழி மூலம் கல்வி கற்க கட்டாயப்படுத்தியதாலும் "தனித் தமிழ் ஈழம்" என்ற கோரிக்கை தன்னியல்பாகவே 50 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்களிடையே எழுந்தது என்பதையும், அதன் விளைவாக பல்வேறு போராளிக் குழுக்கள் உருவாகி ஆயுதம் தாங்கிய போராட்டத்தை நடத்திட வேண்டிய கட்டாயம் உருவானது என்பதையும் வரலாற்றைப் பூரணமாகப் படித்துப் பார்த்தால் தெரிந்து கொள்ள முடியும்.

இதனையடுத்து 29-7-1987 அன்று ஏற்பட்ட "கொழும்பு" ஒப்பந்தம் இக்கட்டான அன்றைய நிலையில் ஈழத்தமிழர்களுக்கு ஏதாவது ஒரு சிறிய ஒளிக்கீற்றையாவது வழங்கிடுமென்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் "குறைபாடுகள்

மலிந்தது என்பது மட்டுமல்ல; தூய்மையான உள்ளத்தோடு செய்யப்பட்ட ஒப்பந்தமும் அல்ல" என்று 1987ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதத்திலேயே "கரிகாலன் பதில்கள்" என்ற தலைப்பில் நான் சொல்லியிருக்கிறேன். மேலும், இந்த ஒப்பந்தத்தின் விளைவுகளைப் பற்றி - "கொண்டைக்கு ஒரு செண்டு மல்லிகை கேட்டாளாம், கொண்ட கணவனிடம்; அந்தக் குணக்கேடனோ கொண்டை உள்ள மட்டும் இவள் செண்டு கேட்டுத் தொல்லை தந்தபடிதான் இருப்பாள்; எனவே செண்டு தேடிடும் சங்கடம் நமக்கில்லாமல் இருக்க, இவள் கொண்டையை அறுத்தெறிவோம் என்றானாம்!" என்று அண்ணா அவர்கள் சொன்னதையும் சுட்டிக்காட்டி எழுதியிருந்தேன். 1987இல் ராஜீவ் காந்தி - ஜெயவர்த்தனா இடையிலான ஒப்பந்த அடிப்படையில் இலங்கை அரசியல் சட்டத்திற்கு 13வது திருத்தம் என்று ஒன்று கொண்டு வரப்பட்டது. அந்தத் திருத்தத்தின் மூலமாகத்தான் தமிழர்கள் வாழும் பகுதிகளுக்கு அதிகாரப் பரவல் ஏற்படுத்திக் கொடுக்க முடியும். ஆனால் அந்தத் திருத்தத்தை அரை மனதுடன் ஏற்றுக் கொண்ட இலங்கை அரசு இன்று வரை அதை நிறைவேற்றும் எண்ணம் தனக்கில்லை என்பதை தெளிவாக்கி வருகிறது. அதனால் தான் இன்றைய இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்ஷே அவர்கள், "இலங்கையில் தமிழர்களுக்கு, அவர்களுடைய பாரம்பரியமான நிலப் பகுதிகளை இணைத்து வடக்கு, கிழக்கு மாகாணங்களை உருவாக்குவதும்; இந்தியாவில் உள்ளதைப் போல அந்த மாகாணங்களுக்கு உரிய அதிகாரங்களை வழங்குவதும்; சாத்தியம் தானா?" என்று வினவியிருக்கிறார்.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செய்தித் தொடர்பாளர், திரு. சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியிருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். 1990களில் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிப்பது தொடர்பாக மங்கல மூனிசிங்கே தலைமையில் அமைக்கப்பட்ட நாடாளுமன்றத் தேர்வுக் குழு, நூற்றுக்கு மேற்பட்ட முறை கூடி, விவாதித்ததற்குப் பிறகும் அந்தக் குழுவின் பரிந்துரைகள் எதுவும் இதுவரை நடைமுறைக்கு வரவில்லை என்றும்; இதன் பிறகு அமைக்கப்பட்ட மற்றொரு நாடாளுமன்றக் குழு அதிகாரப் பகிர்வுடன் கூடிய அரசியல் சாசன வரைவைத் தயாரித்தளித்து, எதிர்க்கட்சியினர் இந்த வரைவை நாடாளுமன்றத்திற்குள்ளேயே எரித்ததால் அந்த முயற்சியும் கைவிடப்பட்டது என்றும்; ராஜபக்ஷே பதவிக்கு

வந்த பிறகு அதிகாரப் பகிர்வு தொடர்பாக தீர்வு காண்பதற்கு நிபுணர் குழுவின் உதவியுடன் செயல்படக்கூடிய அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் யோசனைகளும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும்; 2010ஆம் ஆண்டில் போர்ப் படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஆணையம் அமைக்கப்பட்டு, ஆணையம் அளித்த அறிக்கையை முழுமையாக அமல்படுத்த முடியாதென இலங்கை அமைச்சர்கள் பெரிஸ், நிமல் சில்வா ஆகியோர் வெளிப்படையாகவே அறிவித்து விட்டனர் என்றும்; கடந்த ஜனவரியில் இலங்கைக்கு வந்த இந்திய வெளி உறவுத் துறை அமைச்சர் திரு. எஸ்.எம். கிருஷ்ணாவிடம் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிக்கப்படுமென அதிபர் ராஜபக்ஷே உறுதியளித்து விட்டு - திரு. கிருஷ்ணா இந்தியாவுக்கு திரும்பும் முன்பே அப்படியொரு உறுதியை தான் அளிக்கவில்லையென ராஜபக்ஷே மறுத்தார் என்றும்; தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் முழுமையான பேச்சுக்களுக்குப் பிறகு, நாடாளுமன்றக் குழுவை அமைத்து ஒப்புதல் பெறலாமென்று ராஜபக்ஷே கூறியிருந்தும் கூட - அவர் சொன்னதற்கு மாறாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்புடனான பேச்சுக்களிலிருந்து இலங்கை அரசு தன்னிச்சையாக விலகிக் கொண்டதென்றும்;

இப்படி வாக்குறுதிகளை மீறுவதையே இலங்கை அரசு வழக்கமாக கொண்டிருக்கும் வரலாற்றினையும் சுட்டிக்காட்டி சுரேஷ் பிரேமச்சந்திரன் விவரித்திருக்கிறார்.

திரு. சுரேஷ் பிரேமச்சந்திரன் தோலுரித்துக் காட்டியிருக்கும் இலங்கை அரசு தொடர்ந்து பின்பற்றி வரும் தமிழர் விரோத வரலாற்று நிகழ்வுகளின் பின்னணியில் பார்த்தால்; தற்போது திருமதி சுஷ்மா சுவராஜ் தலைமையில் சென்ற இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவிடம் அதிபர் ராஜபக்ஷே அளித்திருக்கும் உறுதிமொழிகள் அனைத்தும் ஏமாற்றும் தந்திரோபாயங்கள் தான் என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம்.

இலங்கை சென்று வந்த இந்த இந்தியக் குழு வெளியிட்டிருக்கும் செய்திகளில் இருந்து - முள்வேலி முகாம்களிலும் சிறைக் கொட்டடிகளிலும் ஆயிரமாயிரம் தமிழர்கள் இன்னமும் வாடி வதங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதும்; காணாமல் போன மற்றும் கடத்தப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்களைப் பற்றிய தகவல்கள் கூட இல்லை என்பதும்;

இரண்டாண்டுகளுக்குப் பிறகும்கூட மறு வாழ்வு மற்றும் மறு குடியமர்வுப் பணிகள் முழுமை பெறவில்லை என்பதும்; தமிழர்கள் வாழும் பகுதிகளிலும் ஏன், கோயில்களிலும் கூட ராணுவத்தினரைக் குவித்துவைத்து, மனித உரிமைகளுக்கெதிராக இலங்கை அரசு தமிழர்களை எந்த நேரமும் அச்சத்தின் இறுக்கமான பிடிக்குள்ளேயே இருக்கும்படி செய்திருக்கிறது என்பதும் தெரிய வருகின்றன.

தோழர் டி.கே. ரெங்கராஜன் வெளியிட்டுள்ள இன்னொரு தகவல் நமது உள்ளத்தை உலுக்குகிறது. "மட்டக்களப்பு பகுதிகளுக்குச் சென்றபோது எங்களுக்கு வேதனையான நிலை ஏற்பட்டது. உண்மையிலேயே நான் கண்ணீர் விட்டேன். இலங்கை போரில் 35,000 தமிழ்ப் பெண்கள் விதவைகளாகி உள்ளதைப் பார்த்தோம். இவர்களில் 13 ஆயிரம் விதவைகள் 23 வயதுக்கும் குறைவானவர்கள்" என்று அவர் சொல்லியிருக்கிறார்.

தனி ஈழம் வேண்டுமென்று இலங்கையில் யாரும் வலியுறுத்தவில்லை என்று சொல்லி யிருக்கும் டி.கே. ரெங்கராஜன் அவர்களின் கவனத்திற்கு ஒரு நிகழ்வினை நினைவூட்ட விரும்புகிறேன். 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலுக்கு முன்பு, 1976இல் வட்டுக்கோட்டை என்ற இடத்தில் நடைபெற்ற மாநாட்டில், அனைத்துத் தமிழ் மக்களின் விடுதலைக் கூட்டணி, மலையக மக்களுடைய அமைப்பு என எல்லோரும் ஒன்றிணைந்து "தனித் தமிழ் ஈழம்" தான் என்ற முடிவினைத் தீர்மானமாக வடித்தெடுத்து; அதனையே முன் வைத்து தேர்தலிலே போட்டியிட்டார்கள். தமிழ்ப் பகுதிகளில் நடைபெற்ற தேர்தலில், ஒரு தொகுதியைத் தவிர 18 தொகுதிகளில் அவர்கள் வெற்றி பெற்றார்கள். "தனித் தமிழ் ஈழம்" தான் என்பது 1977 ஆம் ஆண்டிலேயே தமிழ் மக்கள் முன்வந்து தந்த தீர்ப்பு. ஆனால் 35 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுள்ள நிலை - உலகெங்கிலும் பரவியிருக்கும்

தமிழர்களின் உள்ளக் கிடக்கை தனித் தமிழ் ஈழம் என்ற ஒரே திசையை நோக்கியே மேலும் உறுதிப்பட்டிருக்கிறது.

> "கியூபா ஒரு சின்னஞ்சிறிய நாடு. அதன் மக்கள் தொகை அறுபது லட்சம். அந்த நாட்டின் எல்லையைக் கொண்டோ, மக்கள் தொகையைக் கொண்டோ அதனை மதித்து விட முடியாது. உலக அளவில் சிந்திக்கக் கூடிய

ஒரு நாடாக இடம் பெற காரணமாக இருந்த - இருக்கிற பிடல் காஸ்ட்ரோ, பல்கலைக் கழக மாணவர் பேரவைத் தலைவராக இருந்த போது அந்த நாட்டின் வெற்றிக்கான விதையை விதைத்தார். மிகப் பெரிய வல்லரசான அமெரிக்காவிற்கு பக்கத்திலே மிகச் சிறிய நாடான கியூபா இருந்து கொண்டு, ஏகாதிபத்தியத்திற்கு அடி பணிய மாட்டேன் என்று குரல் எழுப்பி உலக மக்களையெல்லாம் வியந்து நோக்கச் செய்யும் அளவிற்கு கடந்த ஐம்பதாண்டு காலமாக வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றது"

என்று கியூபாவைப் பற்றியும், அந்த நாட்டின் விடுதலை வீரன் பிடல் காஸ்ட்ரோவைப் பற்றியும் நான் 14-11-2007 அன்று "முரசொலி"யில் எழுதியிருந்ததை; தனித் தமிழ் ஈழம் என்ற இன்றைய கோரிக்கையோடு ஒப்பிட்டுப் பார்த்து திரு. டி.கே. ரெங்கராஜன் உண்மையை உணர்வார் என்று நம்புகிறேன்.

அரசியல் தீர்வு - அதிகாரப் பரவல் என்பதெல்லாம் செயல்முறைக்கு வராத வெறும் சொற்களாகவே இருந்து வருவதாலும்; உலக அரங்கில் எவரிடமும் தரும் எந்த உறுதி மொழியையும் காப்பாற்றும் அடிப்படை நேர்மை உணர்வு இலங்கை அரசிடம் கிஞ்சிற்றும் இல்லாததாலும்; தனித் தமிழ் ஈழம் எனும் இலட்சியத்தை வென்றெடுப்பதற்காக இலட்சக்கணக்கான உயிர்களைப் பலியிட்டும் - இலட்சக்கணக்கான தமிழர்கள் சொந்த நாட்டில் தமது உடைமைகளை இழந்து, உறவுகளைத் துறந்து, உலக நாடுகளின் தெருக்களில் அனாதைகளாகவும், அகதிகளாகவும் கதி கலங்கி கண்ணீர் சிந்தியும் - மிகப் பெரிய விலையைத் தந்து விட்டதாலும்; இலங்கைத் தமிழர்கள் தனித் தமிழ் ஈழத்திற்குக் குறைவான எதற்கும் தங்களை தயார்ப்படுத்திக் கொள்வதற்கோ, சமாதானப்படுத்திக் கொள்வதற்கோ ஒருக்காலும் சம்மதிக்க மாட்டார்கள்!

இலங்கை இனப் பிரச்சினைக்கு அமைதியான முறையில் தீர்வு காண அமிர்தலிங்கம் போன்றோரும், அயல் நாட்டவரும் முன்னெடுத்துச் சென்ற முயற்சிகள் அனைத்தும் முனை முறித்துப் போடப்பட்டன. போடப்பட்ட ஒப்பந்தங்கள் உளப்பூர்வமாகப் போடப்படாததால், அவை காகிதக் கூளங்களாக்கப்பட்டு, காற்றிலே பறக்க விடப்பட்டுவிட்டன. விடுதலைப் போராளிகளின் ஆயுதம் தாங்கிய போராட்டமும், ராணுவங்களின் அசாதாரணமான

பலப் பிரயோகத்தின் மூலம் நசுக்கப்பட்டுவிட்டது. தமிழர்களுக்கு சம உரிமை வழங்குவதற்கு, சிங்களப் பேரின வாதத்திற்குச் சிறிதும் மனம் இடம் தரவில்லை.

இலங்கைத் தமிழர் பிரச்சினையை - அடக்குமுறை அடாவடிகளாலோ, அதிகார அத்துமீறல்களாலோ, சர்வாதிகார சதிராட்டங்களாலோ - தீர்த்து விட முடியாது. இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு மேலும் தாமதமோ தயக்கமோ இன்றி தீர்வு காணப்பட வேண்டு மென்பது காலத்தின் கட்டளை. அதைக் கால வரையறையின்றி ஒத்தி வைத்து விட முடியாது.

ஈழ விடுதலைக் கீதம் எழுப்பியவர்களை கொன்று புதைத்து விட்டாலும்; அந்தக் கீதம் காற்றிலே கலந்து விட்டது; காற்றிலிருந்து அந்தக் கீதத்தைப் பிரிக்க முடியாது; காற்றின் மூலம் அந்தக் கீதம் உலகத் தமிழர்களின் உணர்வுகளில் எல்லாம் இரண்டறக் கலந்து விட்டது என்னும் பொருள்பட கவிஞர் ஈரோடு தமிழன்பன் எழுதிய,

“வீணையை
உடைத்தெறிந்து விடலாம் -
மீட்டப்பட்ட பாட்டு - காற்றில்;”

என்ற பாடல் வரிகளே இப்போது எனது நினைவில் பளிச்சிடுகின்றன.

“சோனார் பங்களா” எனச் சொல்லப்பட்ட பங்களா தேஷ் விடுதலைப் போரில், முஜிபுர்ரகுமானுக்கு உதவிட, இந்தியா கையாண்ட அணுகுமுறையைப் போன்ற ஒன்றையா, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் கையாள வேண்டுமென்று நான் கோரிக்கை விடுத்தேன். ஜனநாயக ரீதியில், ஐ. நா. மன்றமும், அனைத்துலகமும் ஏற்றுக் கொண்டுள்ள நடைமுறையையொட்டி, தமிழர்களிடையே பொது வாக்கெடுப்பு நடத்தி தனி ஈழம் பற்றி முடிவு செய்யப்பட வேண்டும் என்று தானே, அறிஞர் அண்ணா அவர்களின் வழி நின்று மக்களாட்சியின் மாண்புகளை என்றைக்கும் மதித்துப் போற்றுபவன் என்ற முறையில், குறிப்பிட்டு எழுதியுள்ளேன்!

அன்புள்ள,
மு.க.
25-4-2012

3620. என்று தணியும் ஈழத்தமிழர் தாகம்!

உடன்பிறப்பே,

இலங்கையிலே ஈழத் தமிழர்களுக்கு எதிராக போர் நடைபெற்ற போது; இன்றைக்கு ஈழத் தமிழர்கள்பால் நாம் காட்டுகின்ற உணர்வு பூர்வமான அக்கறையை, அன்றே காட்டியிருக்கக் கூடாதா? இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போராட்டத்தை அப்பொழுது அங்கே ஆயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் கொல்லப்பட்டதை நாம் தடுத்து நிறுத்தியிருக்கலாமே; என்ற ஒரு எண்ணம், ஆதங்கம் இங்குள்ள தமிழர்கள் சிலருக்கு மாத்திரமல்லாமல், தரணியெங்கும் பரவிக்கிடக்கிற தமிழர்களில் சிலருக்கும் இருப்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது!

ஆனால் அவர்களுக்கே தெரியும்! இந்தப் போரில் விடுதலைப் போராளிகள் வெற்றி முகட்டை எட்டாமல் வீழ்ந்து போனதற்குக் காரணம், அவர்கள் ஓரணியாய் நின்று போரிடாததுதான் என்பது ஓர் புறமிருக்க; பல்வேறு அணிகளாக இருந்த போராளிகளும் ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டு - தமிழர் உயிரை தமிழரே பறிப்பதற்கு காரணகர்த்தாக்களாக ஆகிவிட்டார்கள். சகோதரயுத்தம் வேண்டாம் என்று காலில் விழாத குறையாக அவர்கள் ஒவ்வொரு அணியினரின் கரம் பிடித்து கெஞ்சிக் கேட்டுக் கொண்டுங்கூட, அந்த அணிகளிடையே இருந்த உட்பகையை நம்மால் தீர்க்கவும் முடியவில்லை; அதன் காரணமாக ஏற்பட்ட விடுதலைப் போராட்டத்தின் வீழ்ச்சியைத் தடுக்கவும் முடியவில்லை.

அணிகளின் தலைவர்கள் ஒருவரையொருவர் மாய்த்துக் கொண்டு - ஓர் இனம் பெற வேண்டிய வெற்றியின் கால கட்டத்தையே தள்ளிப் போட்டு விட்ட சோக நிகழ்வை யார்தான் அவர்கள் உண்மையான தமிழரெனின் எண்ணிப் பார்த்துக் கண்ணீர் வடிக்காமல் இருக்க முடியும்!

இந்தச் சோக அலைகளுக்கிடையே 2008-2009ஆம் ஆண்டுகளில் இலங்கையில் இறுதிப் போர் நடைபெற்று ஈழத் தமிழ் இனம் உதிரமும் உயிரும் சிந்திய அந்தக் கோர நிலைமை களை - இலங்கையிலே ஏற்படாமல் தடுத்திட அங்கே போர் நிறுத்தம் ஏற்படுவதற்கான என்னென்ன முயற்சிகளிலே ஈடுபட்டோம் என்பதையும், இந்திய பேரரசாம் மத்திய அரசு எவ்வாறெல்லாம் இயன்றவரை அதற்கு ஒத்துழைப்பு நல்கியது என்பதையும் ஞாபகப்படுத்துவது என்னுடைய கடமையாகும்.

கழக அரசின் சார்பாக இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக 14-10-2008 அன்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி, இலங்கையில் இரண்டு வார காலத்திற்குள் போர் நிறுத்தம் செய்ய இந்திய அரசு முன்வராவிட்டால், தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பதவி விலகிட நேரிடும் என்று ஒரு தீர்மானமே நிறைவேற்றப்பட்டது. அதையொட்டி, கழகத்தைச் சேர்ந்த மக்களவை உறுப்பினர்கள், மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் பதவி விலகல் கடிதங்களை என்னிடம் கொண்டுவந்து கொடுத்துவிட்டார்கள். அப்போது ம.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த தம்பிகள் எல். கணேசன், செஞ்சி ராமச்சந்திரன், மற்றும் இந்திய யூனியன் முஸ்லீம்லீக் கட்சியைச் சேர்ந்த பேராசிரியர் காதர் மொய்தீன் ஆகியோர் கூட தங்கள் பதவி விலகல் கடிதங்களை என்னிடம் கொடுத்து விட்டார்கள். தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அன்றே பிரதமருக்கு அந்தத் தீர்மானம் தம்பி டி.ஆர். பாலு மூலமாக அனுப்பப்பட்டது. அதனை ஆய்வு செய்த பிரதமர், அரசியல் ரீதியான தீர்வு காண மத்திய அரசு அனைத்து நடவடிக்கை களையும் விரைவாக எடுத்திடும் என்று பாலுவிடம் உறுதி கூறி, அது அப்போதே அனைத்து ஏடுகளிலும் வெளிவந்தது. அதே நாளில் பிரதமர் அளித்த பேட்டியிலும் -

> "இலங்கையில் ஏற்பட்டுள்ள இனப் பிரச்சினை மிகவும் கவலை அளிப்பதாக உள்ளது. இப்பிரச்சினைக்கு ராணுவம் மூலம் தீர்வு என்பது சரியாக அமையாது. இலங்கையின் இறையாண்மையையும், அங்கு வசிக்கும் தமிழர்களின் மனித உரிமையையும் மதிக்கும் வகையில் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இலங்கை இனப் பிரச்சினைக்கு

தீர்வு காண முழு ஈடுபாட்டுடன் மத்திய அரசு முயற்சி மேற்கொள்ளும்" என்று கூறியிருந்தார்.

18-10-2008 அன்று பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் நேரடியாகவே தொலைபேசியில் இலங்கை அதிபர் ராஜபக்சேயுடன் பேசினார். 22-10-2008 அன்று மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்கள் இலங்கைத் தமிழர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளதாக நாடாளுமன்றத்திலே குறிப்பிட்டார். 24-10-2008 அன்று சென்னையில் பிரமாண்டமான "மனிதச் சங்கிலி" ஒன்றினை நடத்தினோம். 26-10-2008 அன்று திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் சென்னை வந்து என்னிடம் சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேல் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்துப் பேசினார். சென்னையில் அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "நார்வே நாட்டின் முயற்சியின் பேரில் ஏற்பட்ட சண்டை நிறுத்தம் தொடருவதை உறுதி செய்ய வேண்டுமென்று கலைஞர் வலியுறுத்தினார். போர்ப் பகுதிகளில் அவதிப்படும் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஐக்கிய நாடுகள் மன்றம் மற்றும் இந்திய அரசின் மூலமாக மனிதாபிமான உதவிகள் அளிக்க இலங்கை அரசு உறுதி அளித்துள்ளது" என்று கூறினார். 12-11-2008 அன்று இலங்கைத் தமிழர்களுக்காக தமிழகச் சட்டப்பேரவையில் தீர்மானம் ஒன்றினை நான் முன்மொழிந்து அது நிறைவேற்றப்பட்டது. 4-12-2008 அன்று தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துக் கொண்டு டெல்லி சென்று பிரதமரைச் சந்தித்து, இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்களை இலங்கைக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். அதன் பின்னர் பிரணாப் முகர்ஜி அவர்கள் இலங்கைக்கு நேரிலேயே சென்று ராஜபக்சேயுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

27-12-2008 அன்று நடைபெற்ற கழகப் பொதுக் குழுவிலே இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து தீர்மானம் நிறைவேற்றினோம்.

12-1-2009 அன்று தமிழர் தலைவர் கி. வீரமணி, பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ், விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவன் என்னைச் சந்தித்ததைத் தொடர்ந்து மத்திய அமைச்சராக இருந்த டி.ஆர். பாலுவையும், மாநிலங்களவை

உறுப்பினர் கனிமொழியையும் பிரதமரிடமும், சோனியா காந்தியிடமும் நிலைமைகளை விளக்கச் செய்தேன். ஆனால் 18-1-2009 தேதிய நாளிதழ்களில் ஜெயலலிதாவின் பெயரால் வந்த ஒரு பேட்டியில், "இலங்கை வேறு நாடு, எனவே அந்த நாட்டுப் பிரச்சினையில் தலையிடுவதற்கு ஒரு எல்லை உண்டு. இலங்கையில் ஈழம் என்ற ஒரு நாடு இன்னும் அமையவில்லை. இலங்கைத் தமிழர்களைக் கொல்ல வேண்டும் என்று சிங்கள ராணுவம் எண்ணவில்லை. ஒரு போர் நடைபெறும்போது அப்பாவி மக்கள் கொல்லப்படுவது இயல்பு. இதில் எந்த நாடும் விதி விலக்கு அல்ல" என்று கூறியிருந்தார்.

28-3-2009 அன்று நான் இலங்கையிலே உடனடியாக போர் நிறுத்தம் ஏற்பட இந்தியா உதவிட வேண்டுமென்று கேட்டு பிரதமருக்கும், திருமதி சோனியா காந்தி அவர்களுக்கும் எழுதிய கடிதத்திற்கு, 31-3-2009 அன்று திருமதி சோனியா காந்தி அவர்கள் எனக்கு எழுதிய நீண்ட பதில் கடிதத்தில்,

"நம்முடைய பிரதமர் அவர்கள் உங்களுக்கு எழுதிய கடிதத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அனைவரின் சார்பாக இலங்கையில் அண்மையில் நடைபெறும் சம்பவங்கள் குறித்து ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் சார்பில் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளை விவரித்திருப்பதைப் பற்றி நானும் உங்களுக்கு உறுதி கூற விரும்புகிறேன்..... தற்போது இலங்கையில் நடைபெற்று வரும் போர், அதன் காரணமாக அங்குள்ள தாய்மார்கள், குழந்தைகள் உள்ளிட்ட அப்பாவித் தமிழர்கள் அனுபவித்து வரும் பெரும் துயரங்கள், நம்மை மிகுந்த கவலைக்கு ஆளாக்கியுள்ளது. அவர்களைப் பாதுகாக்கவும், அவர்களின் நலன்களைப் பேணவும் தேவையான முயற்சிகள் அனைத்தையும் இலங்கையின் அதிகாரவர்க்கம் மேற்கொள்ள வேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். உள்ளபடியே அதற்கான முதல் கட்டமாக போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும். நமது அரசு இலங்கை அரசுடன் பல்வேறு வகையான கருத்துருக்களின் மீது தொடர்பு கொண்டு வருகிறது. குறிப்பாக போர் நிறுத்தத்தைப் பற்றியும்

தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது. போர் நிறுத்தம் ஏற்பட்டால்தான் அப்பாவி மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம் பெயர முடியும்" என்றெல்லாம் தெரிவித்திருந்தார்கள்.

அதன் பின்னர் 5-4-2009 அன்று என்னைச் செய்தியாளர்கள் சந்தித்தபோது, "இலங்கையில் விடுதலைப் புலிகளின் அனைத்து இடங்களையும் ராணுவம் கைப்பற்றி விட்டதாகவும், அவர்களது ராணுவத் தளங்கள் அழிக்கப்பட்டு விட்டதாகவும், பிரபாகரனும், அவருடைய புதல்வரும் தமிழர்கள் வாழ்கிற பகுதியில் மறைந்திருப்பதாகவும் செய்திகள் வந்திருக்கிறதே" என்று என்னைக் கேட்ட நேரத்தில் "போர் நிறுத்தம் வேண்டுமென்று கடந்த ஆறு மாத காலமாகத் தொடர்ந்து சொல்லி வருகிறோம். எங்கள் குரலை மதித்து வெளிநாடுகளிலே உள்ள அரசுகள், ஐ.நா. மன்றத்தினர், வெளிநாட்டுத் தூதுவர்கள் மூலமாக இலங்கைக்குச் சொல்லி வருகிறார்கள். போரை நிறுத்துங்கள் என்று இந்திய அரசினர் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் ராஜபக்ஷே போரை நிறுத்த வில்லை. அதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்" என்று கூறினேன்.

7-4-2009 அன்று பிரதமர் மன்மோகன்சிங், திருமதி சோனியா காந்தி, வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி, உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் ஆகியோருக்கு நான் அனுப்பிய தந்தியில் "இலங்கையில் ஒட்டுமொத்த தமிழின மக்கள் கூண்டோடு அழிக்கப்படுவதிலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்றும், அங்கு போர் நிறுத்தத்தை உறுதி செய்து அமைதிப் பேச்சு வார்த்தைக்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றும் கேட்டுக் கொண்டேன்.

இறுதிப் போரிலே இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றுவதற்காக நான் மட்டுமல்ல, இந்திய அரசு மாத்திரமல்ல, பெரிய நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், நார்வே போன்றவைகள் வெளியிட்ட அறிக்கையிலேயே இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டு மென்றும், பாதுகாப்பான பகுதி மீது இலங்கை போர் விமானங்கள் குண்டு வீசுவதை நிறுத்த வேண்டுமென்றும் சொன்னார்கள். அதற்கும் மேலாக ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் பான்-கி-மூன் தொலைபேசி மூலமாகவே இலங்கை அதிபர் ராஜபக்ஷேயை தொடர்பு கொண்டு

இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டுமென்றும், மனிதாபிமான முறையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். ஐக்கிய நாட்டு சபை உயர் அதிகாரி ஒருவரும் அப்போது ராஜபக்சேயுடன் பேசியிருக்கிறார்.

9-4-2009 அன்று சென்னையில் என் தலைமையில் "இலங்கை அரசே போரை நிறுத்து" என்று முழக்கமிட்டவாறு பிரம்மாண்டமான பேரணி ஒன்று நடைபெற்றது. இலங்கை அதிபர் ராஜபக்சே இலங்கையில் இரண்டு நாள் போர் நிறுத்தம் செய்யப்படும் என்று அறிவித்தார். விடுதலைப் புலிகள் ஆதரவு கட்சி எம்.பி.க்களை இந்தியாவிற்கு பேச்சுவார்த்தை நடத்த வருமாறு இந்திய அரசு அழைப்பு விடுத்தது. 12-4-2009 அன்று ஈழத் தந்தை செல்வாவின் மகன் சந்திர ஹாசன் அளித்த பேட்டியில் "முதல்வர் கலைஞரின் ராஜ தந்திரமான வேண்டுகோள் தான் இலங்கைப் போர் நிறுத்தத்திற்குக் காரணமாக அமைந்தது" என்று கூறினார். மத்திய உள் துறை அமைச்சர், நண்பர் ப. சிதம்பரம் அவர்கள் 14-4-2009 அன்று விடுத்த அறிக்கையில் இலங்கையில் போர் நிறுத்தம் தொடர்ந்திட வேண்டும் என்று இலங்கை அரசை இந்தியா தொடர்ந்து வற்புறுத்தும் என்றார். தமிழர் தலைவர் இளவல் கி. வீரமணி அவர்கள் விடுத்த அறிக்கையில் "உலக நாடுகளின் வற்புறுத்தல்கள் காரணமாக 48 மணி நேர போர் நிறுத்தத்தை ராஜபக்சே அரசு அறிவித்துள்ளது. தமிழ்நாட்டின் முதல் அமைச்சர் கலைஞர் தரும் இடையறாத அழுத்தம்தான் இதற்கு முக்கியமான காரணம். இந்திய அரசும் இதில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கவில்லை" என்று குறிப்பிட்டார்.

21-4-2009 அன்று பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங், ஐக்கிய முற்போக்கு கூட்டணித் தலைவர் திருமதி சோனியா காந்தி, வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த பிரணாப் முகர்ஜி ஆகியோருக்கு நான் அனுப்பிய தந்தியில், "இலங்கையில் போர் நிலைமை ஆபத்தானதாக உள்ளது. தமிழர்கள் அனுபவித்து வரும் சிரமங்கள் மிக அபாயமான நிலையை எட்டியுள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்பு உட்பட அனைத்து நாடுகளும் உடனடியாகப் போர் நிறுத்தத்தை அறிவிக்கும்படி இலங்கை அரசு மீது நிர்ப்பந்தம் செலுத்தியுள்ளன. இலங்கையிலுள்ள இலட்சக்கணக்கான தமிழர்களின் உயிர்களைக் காப்பாற்ற இலங்கையில் உடனடியாகவும், நிரந்தரமாகவும் போர் நிறுத்தம் செய்ய இலங்கை

அரசுக்கு இறுதி எச்சரிக்கை விடும்படி வலியுறுத்துகிறேன்" என்று கேட்டுக் கொண்டேன்.

"நாதியற்ற ஈழத் தமிழரைக் காத்திட நடுவணரசுக்கு வேண்டுகோள்" என்ற தலைப்பில் உருக்கமிகு உடன்பிறப்பு கடிதம் ஒன்றை 21-4-2009 அன்று நான் எழுதியதோடு, இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற, மத்திய அரசு போர் நிறுத்தத்திற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கோரி 23-4-2009 அன்று ஒரு நாள் வேலை நிறுத்தம் நடத்தப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு அறிக்கை விடுத்தேன். அந்த வேலை நிறுத்தத்திற்கு அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பு தர வேண்டு மென்று கேட்டு, காங்கிரஸ், அ.தி.மு.க., சி.பி.எம்., சி.பி.ஐ., திராவிடர் கழகம், பா.ஜ.க., ம.தி.மு.க., தே.மு.தி.க., விடுதலைச் சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லீம் லீக், எம்.ஜி.ஆர். கழகம், பா.ம.க., புதிய தமிழகம் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுக்கும், பத்திரிகைகளுக்கும் கடிதம் எழுதினேன். அந்த வேலை நிறுத்தம் அமைதியாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற்றது.

நான் அனுப்பிய தந்தியின் அடிப்படையில் 22-4-2009 அன்று இரவு டெல்லியில் பிரதமர் அவர்கள் மத்திய அமைச்சர்கள், அதிகாரிகள் கொண்ட அவசரக் கூட்டம் ஒன்றினைக் கூட்டி, அப்பாவித் தமிழர்கள் மீதான போரினை இலங்கை உடனடியாக நிறுத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். அதனை இலங்கை அரசுக்கு நேரில் வலியுறுத்துவதற்காக பிரதமரின் சிறப்புத் தூதுவர்கள் கொண்ட உயர் மட்டக் குழு ஒன்று கொழும்பு சென்றது. அதே நாளில், இலங்கையில் பாதிக்கப் பட்டிருந்த தமிழர்களுக்காக 936 மெட்ரிக் டன் எடை கொண்ட 6 கோடியே 46 லட்சத்து 16 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நிவாரணப் பொருள்கள் 40 ஆயிரம் சிப்பங்களில் இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட உயர் மட்டக் குழுவினர் கொழும்பில் ராஜபக்சேயை நேரில் சந்தித்து, உடனடியாக போரை நிறுத்த ஆவன செய்ய வேண்டுமென்ற இந்தியாவின் வேண்டுகோளைத் தெரிவித்தனர். 24-4-2009 அன்றிரவு அண்ணா அறிவாலயத்திற்கு உள்துறை அமைச் சராக இருந்த ப.சிதம்பரம் அவர்கள் வந்து, என்னைச் சந்தித்து விவரங்களையெல்லாம் விளக்கினார். அதே நாளில்

பிரதமர் அவர்களும் தொலைபேசியில் என்னுடன் பேசி மத்திய அரசு எடுத்த முயற்சிகளை யெல்லாம் கூறினார்.

அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒபாமா அவர்கள் சார்பில் வெள்ளை மாளிகையிலிருந்து 25-4-2009 அன்று வெளியிடப்பட்ட அறிக்கையில், இலங்கை அரசு ராணுவத் தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டுமென்றும், இலங்கை விவகாரத்தில் இந்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை ஆதரிப்பதாகவும் தெரிவித்திருந்தது. 26-4-2009 அன்று இலங்கையில் போர் நிறுத்தம் குறித்து செய்தியாளர்கள் என்னைக் கேட்டபோது, ஓரிரவு பொறுத்திருந்து பார்ப்போம் என்று கூறினேன்.

அதே 26-4-2009 அன்று விடுதலைப் புலிகள் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஐ.நா. சபை ஆகியவற்றின் கோரிக்கையை ஏற்று போர் நிறுத்தம் செய்கிறோம். இந்தக் கால வரையற்ற போர் நிறுத்தம் உடனே அமலுக்கு வரும். இலங்கை ராணுவம் நடத்தி வரும் போரால் தமிழ் மக்கள் அனுபவிக்கும் துன்பம் உச்ச நிலையை எட்டியுள்ளது. இலங்கை அரசும் போர் நிறுத்ததத்தை அறிவிக்க வேண்டும் என்று அறிவித்தார்கள். ஆனால் யாரும் எதிர்பாராத நிலையில் இலங்கை அரசு அந்த அறிவிப்பை "ஜோக்" என்று கேலி செய்தது. 26ஆம் தேதி வந்த இந்தத் தகவல்களுக்கு பின் அன்றிரவு முழுவதும் நான் தூங்கவில்லை. போர் நிறுத்தம் பற்றி இலங்கை அரசு ஏதாவது அறிவித்ததா என்று டெல்லியிலே தொடர்பு கொண்டு கேட்டுக் கொண்டே இருந்தேன். உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் அவர்களை பல முறை தொடர்பு கொண்டேன். பிரதமரும் என்னோடு தொடர்பு கொண்டார். வெளிநாடுகளிலிருந்து ஏராளமான தமிழர்கள் என்னை தொலைபேசியிலே தொடர்பு கொண்டு பேசிக்கொண்டே இருந்தார்கள். அதிகாலை 4 மணி வரையிலே தொலைக்காட்சியில் நல்ல செய்தி வருமா என்று எதிர்பார்த்தேன். எந்தச் செய்தியும் வரவில்லை. இலங்கை அரசு போரை நிறுத்தவில்லை என்ற செய்திதான் கிடைத்தது. அதற்குப் பிறகுதான் 5 மணி அளவில் என் வீட்டாரிடம் அறிவாலயம் செல்கிறேன் என்று கூறி விட்டு, அண்ணா நினைவிடத்திற்குச் சென்றேன். அதே ஆண்டு ஜனவரி மாதத்தில் மிகப் பெரிய அறுவை சிகிச்சை ஒன்றை என்

முதுகிலே இந்த வயதிலே செய்து கொண்டு, நடக்க முடியாத நிலையில் சக்கர வண்டியிலே பயணம் செய்து கொண்டிருந்த நான் என் உடல் நிலையைப் பற்றியோ வேறு எதைப் பற்றியோ கவலைப்படாமல் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பது என்ற முடிவோடு தான் யாருக்கும் கூறாமல், கூறினால் அனுமதிக்க மாட்டார்கள் என்பதால், நானாக முடிவெடுத்துச் சென்றேன். அதேநாள் காலையில் உண்ணாவிரதப் பந்தலில் என்னைச் சந்தித்த செய்தியாளர்களிடம், "சிங்கள அரசு போர் நிறுத்தம் செய்ய முன்வராத காரணத்தால், என்னையே நான் அர்ப்பணித்துக் கொள்ள, நம்முடைய தமிழர்களுக்காக என் உயிரை யும் வழங்க, இலங்கை அரசு வாங்கிய பலிகளிலே ஒரு பலியாக நானும் அமைய, அடையாளப்பூர்வமாக எல்லாத் தமிழர்களின் சார்பாக இந்த உண்ணாநோன்பை நான் மேற்கொண்டிருக்கிறேன்" என்றுதான் தெரிவித்தேன்.

நான் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த அதே நாளில் பகல் 11 மணி அளவில் இலங்கை பாதுகாப்பு கவுன்சில் கூடி ஆலோசனை நடத்தியது. முல்லைத் தீவில் நடத்தப்பட்டு வரும் போர், அதன் தொடர்ச்சியாக நான் உண்ணாவிரதம் இருப்பது உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து அந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது என்றும், அதன் முடிவில் இலங்கை வடக்குப் பகுதியில் நடத்தப்பட்டு வந்த போரை முடிவுக்குக் கொண்டு வர தீர்மானிக்கப்பட்டு, 12 மணி அளவில் இலங்கை அரசு ஓர் அறிக்கையினை வெளியிட்டது. அந்த அறிக்கையில்

> "இலங்கை வடக்கில் நடைபெற்று வந்த போர் முடிந்துவிட்டது. வடக்கு பகுதியில் இனி கனரக ஆயுதங்களை பயன்படுத்த வேண்டாம் என்று ராணுவத்துக்கு உத்தர விடப்பட்டுள்ளது. விமானத்தில் இருந்து குண்டு வீசுவதும் நிறுத்தப்படுகிறது. வடக்கில் சிக்கியுள்ள பொது மக்களை பாதுகாப்புடன் மீட்கும் பணிகளில் இலங்கை ராணுவத்தினர் ஈடுபடுவார்கள். இனி அப்பாவி மக்களை பாதுகாக்கும் பணிக்கு முன்னுரிமை அளிக்கப்படும்"

என்று கூறப்பட்டிருந்தது.

இலங்கை அரசு வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில்; அன்றைய மத்திய வெளி உறவுத் துறை அமைச்சர் திரு. பிரணாப்

முகர்ஜி அவர்கள் 27-4-2009 அன்று வெளியிட்ட அறிக்கையில், "போர் நடவடிக்கைகள் முற்றுப்பெற்று விட்ட தென்றும், கனரகத் துப்பாக்கிகள், போர் ஆயுதங்கள் போன்றவை குடிமக்களை பெருமளவிற்குக் கொல்லும் என்பதால் இலங்கை பாதுகாப்புப் படைகள் அவற்றைப் பயன்படுத்தக்கூடாது என்று ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை அரசு அறிவித்துள்ளது. குடிமக்களை மீட்பதற்கும், அவர்களைக் காப்பாற்றுவதற்கும் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதில் இலங்கைப் பாதுகாப்புப் படைகள் இனி கவனம் செலுத்தும்" என்று குறிப்பிட்டதோடு, அதன் நகல் ஒன்றினையும் நான் உண்ணாவிரதம் இருந்த இடத்திற்கே அனுப்பி, உண்ணா விரதத்தை என்னை முடித்துக் கொள்ளும்படி பிரதமரும், சோனியா காந்தி அம்மையாரும் கேட்டுக் கொண்டனர்.

உண்ணாவிரதம் இருந்த இடத்திற்கே திராவிடக் கழகத் தலைவர் கி. வீரமணி, காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ஜி.கே.வாசன், ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், இலக்கியச் செல்வர் குமரிஅனந்தன், சி.ஞான தேசிகன் எம்.பி., டி.சுதர்சனம் எம்.எல்.ஏ., டி.யசோதா எம்.எல்.ஏ., கோபண்ணா, எஸ்.எம். இதயதுல்லா, இராயபுரம் மனோ, கராத்தே தியாகராஜன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், புரட்சிபாரதம் கட்சித் தலைவர் பூவை ஜெகன் மூர்த்தி எம்.எல்.ஏ., எம்.ஜி.ஆர். கழகத் தலைவர் ஆர்.எம். வீரப்பன், சிறுபான்மை ஆணையத்தின் தலைவர் வின்சென்ட் சின்னதுரை, விவசாய தொழிலாளர் கட்சி தலைவர் பொன்குமார், முன்னாள் எம்.பி. பு.தா. இளங்கோவன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் பொதுச் செயலாளர் சையத் சர்தார், எம். ஜெய்னுல்ஆபிதீன், கமுதி பஷீர், திருப்பூர் சத்தார், காயிதே மில்லத் பேரன் தாவூத் மியான்கான், பேராயர் எஸ்றா. சற்குணம், மதச்சார்பற்ற ஜனதாதளத் தலைவர் ஜி.ஏ. வடிவேலு, லியாகத் அலிகான், முன்னாள் அமைச்சர் அரங்கநாயகம், திருவாவடுதுறை ஆதினம் முத்து குமார சுவாமிகள், கவிப்பேரரசு வைரமுத்து, குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், கவிக்கோ அப்துல் ரகுமான், கவிஞர் மு.மேத்தா, நக்கீரன் கோபால், எழுத்தாளர் கந்தசாமி, இரயில்வே தொழிற்சங்க தலைவர் மு.கன்னையன்,

சன் தொலைக்காட்சி இயக்குநர் கலாநிதிமாறன், நல்லி குப்புசாமி செட்டியார், காந்தி கண்ணதாசன், நமது திராவிடக்

கழகத் தலைவர் திருமதி. ஓவியம், தொலைக்காட்சி முன்னாள் இயக்குநர் நடராஜன், சி.கே.பெருமாள், அண்ணாவின் புதல்வர் சி.என்.ஏ.இளங்கோவன், சிறுபான்மை ஆணைய உறுப்பினர் இனிகோ இருதயராஜ், காவியக் கவிஞர் வாலி, இயக்குநர் சிகரம் கே.பாலசந்தர், ஈழத் தந்தை செல்வாவின் புதல்வர் சந்திரஹாசன், மறவன்புலவு இலங்கை அறிஞர் க.சச்சிதானந்தம், தலைமைச் செயலக சங்கத் தலைவர் கணேசன், சின்னத்திரை கலைஞர்கள் கூட்டமைப்பு தலைவர் விடுதலை, இளவேனில், வழக்கறிஞர் காந்தி, சுப. வீரபாண்டியன், நடிகர்கள் எஸ்.எஸ். இராஜேந்திரன், சத்யராஜ், எஸ்.வி. சேகர் எம்.எல்.ஏ, இராதாரவி, நடிகை விஜயகுமாரி, நடிகர்கள் செல்வா, பிரசாந்த் மற்றும் அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எல்லாம் நேரில் வந்து உண்ணாவிரதத்தை கைவிடும்படி வலியுறுத்திய பிறகு மதியம் 1 மணி அளவில் நான் உண்ணா விரதத்தை முடித்துக் கொண்டேன்.

ஆனால் அதற்குப் பின்னரும் இலங்கை சிங்கள அரசு ராஜபக்ஷேயின் சிங்கள பேரினவாதப் பிடிவாதத்தினால் களத்தில் நின்ற போராளிகளையெல்லாம் கொன்று குவித்தனர். போராட்டத்தை நிறுத்துவதற்கான எவ்வளவோ முயற்சிகளை நாம் மேற்கொண்டோம், அதற்கு உறுதுணையாக மத்திய அரசும், பிரதமரும், மத்திய அமைச்சர் பெருமக்களும் இருந்தும் கூட, சிங்கள அரசினர் அளித்த வாக்குறுதிகளையெல்லாம் ஒவ்வொரு முறையும் மீறி, போரைத் தொடர்ந்து, நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி சகோதர யுத்தத்தினால் ஏற்பட்ட சரிவைப் பயன்படுத்திக் கொண்டு வெற்றி வாகை சூடினர். வீழ்ந்தது தமிழின எழுச்சி ஈழத் தமிழகத்தில்! எந்த ஒரு இனத்தின் எழுச்சியும் வீழ்வதும் தாழ்வதும்; பின்னர் வெற்றிச் சிகரம் ஏறுவதும் உலக வரலாற்றில் காணக்கூடிய ஒப்பற்ற உதாரணங்கள். ஒற்றுமை இல்லாத காரணத்தாலும் ஒருவரை ஒருவர் தீர்த்துக் கட்டும் காரணத்தாலும் தொடர்ந்து வீழ்ந்துபட்டு வருகின்ற இனமாக தமிழ் இனம் இருந்தாலுங் கூட அந்த இனத்திற்கு தமிழ் ஈழத்தில் தற்காலிகமாக ஏற்பட்டிருப்பது; நிரந்தரமானதல்ல என்பதையும்; அது நிரந்தரமாக இருந்துவிடக் கூடாது என்பதையும் - அசையாத நம்பிக்கையுடன் மனத்தில் கொண்டு களத்தில் மறைந்த மாவீரர்கள் அனைவருக்கும் இறுதி வணக்கத்தைத் தெரிவித்து -

இனியும் தமிழ் இனம் தலை நிமிர்ந்தே வாழ்வதற்கு - நமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் தருவதற்கு தயங்க மாட்டோம் என்ற உறுதியுடன்;

அண்ணல் காந்தி காட்டிய வழியில்;
அறிஞர் அண்ணா வகுத்த நெறியில்;
தன்மான உணர்வைத் தட்டியெழுப்பிய
தந்தை பெரியார் போதித்த பாதையில்;
ஈழத் தந்தை செல்வா ஊட்டிய உணர்வில்;
அறப்போர் தொடர்ந்திட அணி வகுப்போம்!

அன்புள்ள,
மு.க.
28-4-2012

3621. எதைக் கொண்டு; இதைப் பார்ப்பது?

உடன்பிறப்பே,

"துக்ளக்" ராமசாமியார்; இலங்கைப் பிரச்சினையில் தி.மு.க.வின் நிலை என்ன என்ற ஒரு கேள்விக்கு 2-5-2012 தேதிய இதழில், தி.மு.க.வின் இலங்கைப் பிரச்சினை நிலை கெலிடாஸ்கோப் மாதிரி, ஒவ்வொரு அசைவுக்கும் நிறம் மாறும், டிசைன் மாறும் என்றெல்லாம் பதில் அளித்து, அதற்கு நமது "விடுதலை" நாளிதழில் சிறப்பானதோர் பதிலை தலையங்கமாகவே தீட்டியிருக் கிறார்கள்.

"ஈழத் தமிழர் பிரச்சினையில் தி.மு.க. வின் நிலைப்பாட்டை விமர்சிக்கக் கிளம்பியிருக்கும் திருவாளர் சோ.ராமசாமி, ஈழத்தமிழர் பிரச்சினையிலும் சரி, அ.இ.அ.தி.மு.க., அதன் பொதுச் செயலாளர் ஜெயலலிதா அவ்வப்போது எடுத்து வந்திருக்கிற முரண்பாடுகள் பற்றியும் ஒரே ஒரு வரிகூட எழுதாதது ஏன்? முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டத் தயங்குவது ஏன்? அல்லது அஞ்சுவது ஏன்?"

என்று கேட்டுள்ளது விடுதலை!

4-10-1990 தேதியிட்ட "இந்தியன் எக்ஸ்பிரஸ்" ஆங்கில நாளேட்டுக்கு ஜெயலலிதா அளித்த பேட்டியில் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி ஜெயலலிதா முதன் முதலாகக் கூறியது என்ன தெரியுமா?

> "சிங்கள ராணுவமும், காவல் துறையும் இலங்கையில் தமிழ் இனத்தை அழிப்பதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். விடுதலைப் புலிகள் இயக்கம் துணிவான போராட்டத்தில் ஈடுபட்டு சிங்கள ராணுவத்தை எதிர்த்து தீரத்துடன் போர் நடத்தி வருகிறது. கடந்த இரு மாதங்களில் தமிழ்நாட்டில் புகார் கூறும் அளவுக்கு

எந்தவிதமான நடவடிக்கைகளிலும் விடுதலைப் புலிகள் ஈடுபடவில்லை. இப்போது விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு நாட்டின் அரசாங்கத்தை எதிர்த்துப் போர் நடத்தி வருகின்றது. இது ஒரு அதி தீரமான செயல்.

விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டால் இலங்கையில் உள்ள தமிழினம் முழுவதும் அழிந்து விடும் என்பதை நாம் மனதில் நிறுத்த வேண்டும். விடுதலைப் புலிகளின் வெற்றி இலங்கைத் தமிழர்களின் வெற்றியாகும். அவர்களுக்கு உதவும் வகையில் எதுவும் செய்வதற்குப் பதிலாக தமிழக முதலமைச்சர் கருணாநிதி தன்னைப் பாதுகாத்துக் கொள்வதிலேயே கவனம் செலுத்தி வருகிறார். அவருடைய அனைத்து சக்தி மற்றும் கவனம் முழுவதும் முதலமைச்சரின் நாற்காலி யைப் பாதுகாத்துக் கொள்வதற்கே அர்ப்பணிக்கப்பட்டு வருகிறது. கருணா நிதியின் மனோபாவம் இவ்வாறு இருந் தால் இதற்கு மாறாக வேறுவிதமாகச் செயல்படுவதை வி.பி. சிங்கிடம் நாம் எதிர்பார்க்க முடியாது.

மாறியுள்ள சூழ்நிலையில் ஒரே மருந்து தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளை ஒட்டுமொத்தமாக ஆதரிப்பதுதான். தனது அதிகாரத்திற்கு உட்பட்ட இயன்ற அனைத்து உதவிகளையும் முதலமைச்சர் வழங்கவேண்டும். விடுதலைப் புலிகளை இந்திய அரசு நூற்றுக்கு நூறு ஆதரிக்க வேண்டும்”

இந்தப் பேட்டியில் ஜெயலலிதா கூறியபடி தான் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அவர் நடந்து வருகிறாரா? சோ. ராமசாமியாருக்கு மனச்சாட்சி இருக்கிறதா? அவருக்கு உண்மை தெரியாதா? விடுதலைப் புலிகளிடம் ஜெயலலிதா கொண்ட இதே பாசம் நீடித்ததா?

1990ஆம் ஆண்டு அக்டோபரில் செய்தியாளர்களிடம்; நான் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இல்லை என்று கூறிய அதே ஜெயலலிதாதான், 30-12-1990 அன்று அன்றைய குடியரசுத் தலைவராக இருந்த திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களைச் சந்தித்து, தி.மு.க. அரசு விடுதலைப் புலிகளின் செயல்களுக்கு உடந்தையாக உள்ளது என்று புகார் மனு தயாரித்துக் கொடுத்தார்.

சோ.ராமசாமியாரின் ஆதரவுக்கு இன்று ஆளாகியுள்ள ஜெயலலிதா 1997ஆம் ஆண்டு தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்தபோது, இலங்கைத் தமிழர் பிரச்சினை எழுந்த நேரத்தில் என்ன சொன்னார் தெரியுமா?

"சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்க கருணாநிதி முயல்கிறார் - விடுதலைப் புலிகள் தமிழகத்தில் மீண்டும் தலை தூக்கி விட்டார்கள்"

என்று அறிக்கை அல்லவோ ஜெயலலிதா விடுத்தார்.

"இலங்கை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை உடனடியாக இலங்கை அரசு கைது செய்து, இந்திய அரசிடம் ஒப்படைப்பதற்கு மத்திய அரசு உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று இச்சட்டப்பேரவை வற்புறுத்துகிறது. மேலும், தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் இயக்கத்தைச் சேர்ந்த எந்த ஒருவரையும் இந்தியத் திருநாட்டிற்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது என்றும் மத்திய அரசை இப்பேரவை வற்புறுத்துகிறது. இலங்கை அரசின் அனுமதியைப் பெற்று நமது இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பி பிரபாகரனை சிறை பிடித்துக் கொண்டுவர வேண்டும்."

என்று தமிழகச் சட்டப் பேரவையில் 16-4-2002 அன்று தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றிய ஜெயலலிதா, இலங்கைப் பிரச்சினையில் ஒரே நிலையான கொள்கை உடைய வராக சோ. ராமசாமியாரின் கண்ணுக்குத் தெரிகிறாராம். அது மாத்திரமா?

இலங்கையில் ராஜபக்ஷேயின் சிங்களப் படையினர் அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்தபோது, அதனைக் கண்டித்து தமிழகத்தில் ஊர்வலங்களும், பொதுக்கூட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்ற போது,

"இலங்கைத் தமிழர்களைக் கொல்ல வேண்டுமென்று இலங்கை ராணுவம் எண்ணவில்லை. ஒரு யுத்தம் - ஒரு போர் நடக்கும்போது அப்பாவி மக்கள் கொல்லப் படுவார்கள். இதில் எந்த நாடும் விதி விலக்கல்ல. எங்கே யுத்தம் - போர் நடந்தாலும் அப்பாவி மக்கள் கொல்லப்படுகிறார்கள். ஆனால் இன்று இலங்கையில்

> என்ன நடக்கிறதென்றால், இலங்கைத் தமிழர்களை பாதுகாப்பான இடத்திற்குச் செல்லவிடாமல் விடுதலைப் புலிகள் அவர்களைப் பிடித்து வைத்துக் கொண்டு வலுக்கட்டாயமாக ராணுவத்தின் முன்னால் அவர்களை ஒரு கேடயமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்"

என்று 17-1-2009 அன்று அறிக்கை விடுத்த ஜெயலலிதா, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஒரே நிலையான கொள்கை உடையவராக

> சோ.ராமசாமியாரின் பேனாவுக்குத் தோன்றுகிறாராம்.

> விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவுத் தலைவராக இருந்த தமிழ்ச் செல்வன் மறைந்தபோது 4-11-2007 தேதியிட்ட "முரசொலி"யில் நான் ஒரு இரங்கல் கவிதை எழுதினேன் என்பதற்காக, ஜெயலலிதா, வெளியிட்ட அறிக்கையில் "புலிகளுடன் கருணாநிதிக்கு ரகசியத் தொடர்பு இருக்கிறது என்பதற்கு இதுவே சான்று. அது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது" என்று தெரிவித்த ஜெயலலிதா சோ.ராமசாமியாரின் பார்வையில் நிலையான கொள்கை உடையவராகத் தெரிகிறாராம், நான்தான் முரண்பாடான கொள்கையை உடையவனாம்!

அது மட்டுமா? இலங்கையில் தமிழ் இனப் படுகொலையைக் கண்டித்து, போர் நிறுத்தம் உடனே அறிவிக்கப்பட வேண்டுமென்று தமிழகத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றிய போது - இதே ஜெயலலிதாதான்,

> "விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக கருணாநிதி செயல்படுகிறாரோ என்ற சந்தேகம்தான் தமிழக மக்கள் மனதில் எழுந்துள்ளது. இலங்கையில் தற்போது நடக்கும் உள்நாட்டுப் போரை நிறுத்துவதற்கான அதிகாரம் இந்திய அரசிடம் இல்லை" என்று கூறியதோடு - இலங்கையில் நடக்கும் யுத்தம் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் என்னும் பயங்கரவாத இயக்கத்திற்கு எதிரான யுத்தம் என்றும் - அதனால்தான் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்கள் இறந்ததற்கு கருணாநிதி இரங்கற்பா எழுதுகிறார்"

என்றும் அறிக்கை விடுத்து - அந்த அறிக்கையை; தமிழக ஏடுகள் எல்லாம் வெளியிட்டதை சோ. ராமசாமியார் வசதியாக மறந்து விட்டாரா?

இலங்கையில் வாழுகின்ற ஈழத் தமிழர்களின் உரிமைகளுக்காகவும் - இரண்டாம் நிலை குடிமக்கள் என்று ஒதுக்கப்படுவதிலிருந்து அந்த மக்கள் இலங்கையில் - எல்லா உரிமைகளையும் பெற்று சமத்துவமாகவும், சமநீதியும் பெற்று வாழும் வகை வகுக்கப்பட வேண்டும் என்றும், அதற்காக 1956 முதல் ஆட்சியில் இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் தொடர்ந்து குரல் கொடுத்து வரும் தி.மு.கழகத்தையும் - அந்தக் கழகத்தின் தலைவனாக இருக்கின்ற என்னையும் இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே குறை கூறுவதற்கு சோ. ராமசாமியாரோ அல்லது அ.தி.மு.க.வோ தகுதி உடையவர்கள் தானா?

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட "அமைதிப்படை" இலங்கைத் தமிழர்களையே கொன்று குவித்துவிட்டு இந்தியத் தாயகம் திரும்பிய நேரத்தில் முதல் அமைச்சராக இருந்த நான் அவர்களை வரவேற்கச் செல்ல மறுத்துவிட்டேன். அதைப்பற்றி அப் போது ஜெயலலிதா "இலங்கைக்குச் சென்று விட்டு நாடு திரும்பிய இந்திய அமைதிப் படையை வரவேற்கச் செல்லாதவர்தான் தி.மு.க. தலைவர் கருணாநிதி" என்று விமர்சனம் செய்தது சோ.ராமசாமியாருக்கு நினைவில்லையா?

இலங்கையிலே இறுதிக்கட்டப் போர் என்று சொல்லத்தக்க அளவிற்கு 2008-2009ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற போது 14-10-2008 அன்று அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை முதலமைச்சர் என்ற முறையில் ஒவ்வொரு கட்சியின் தலைவருக்கும் நானே அழைப்புக் கடிதத்தில் கையெழுத்திட்டு அனுப்பினேன். ஆனால் அந்தக் கூட்டத்தை ஜெயலலிதா "கண் துடைப்பு நாடகம்" என்று கூறி புறக்கணிப்பு செய்தார். சோ. ராமசாமியாருக்கு இதுவும் தெரியுமெனக் கருதுகிறேன்.

இலங்கைத் தமிழர்களைக் காக்க வேண்டுமென்ற பிரச்சினையில் 1956ஆம் ஆண்டிலிருந்து நான் மேற்கொண்ட நடவடிக்கைகளையெல்லாம் தேதிவாரியாக ஏற்கனவே நான் எழுதியிருக்கிறேன். நான் ஈடுபட்ட இந்த 55 ஆண்டுக்கால

இலங்கைத் தமிழர் பிரச்சினையில், இலங்கைத் தமிழர்களின் நலன்கள் பொறுத்த விஷயத்தில் நான் எந்த நேரத்திலும் யாருக்கும் விட்டுக் கொடுத்ததாகக் கூற முடியாது. ஆனால் ஜெயலலிதாவின் முரண்பாடு பற்றி எதைக் கொண்டு பார்ப்பது என்று சோ. ராமசாமிதான் சொல்ல வேண்டும்.

அன்புள்ள,

மு.க.

5-5-2012

3622. அண்ணா பெயரால் கட்சி; கேலிக்கூத்து!

உடன்பிறப்பே,

கடந்த ஒரு மாத காலமாக தமிழகச் சட்டமன்றப் பேரவை தொடர் கூட்டம் நடைபெற்று வருகின்றது. நிதி நிலை அறிக்கை மீதான பொது விவாதம் முடிவுற்று, தொடர்ந்து பல்வேறு துறை குறித்த மானியக் கோரிக்கைகள் மீது அமைச்சர்கள் நிதிகோரி ஒவ்வொரு நாளும் விவாதங்கள் நடைபெறுகின்றன. பேரவை நடைபெறுகின்ற நேரத்தில் ஒவ்வொரு நாளும் எதிர்க்கட்சிகளின் சார்பில் ஒத்திவைப்பு தீர்மானங்களும், கவன ஈர்ப்பு தீர்மானங்களும் அன்றாடம் தமிழகத்திலே ஏற்படுகின்ற நிலைகள் குறித்து பேரவைத் தலைவரிடம் அளிக்கப் பெற்று, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பொருள் பற்றிய கவன ஈர்ப்புத் தீர்மானத்தையோ, ஒத்திவைப்பு தீர்மானத்தையோ எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்ப அனுமதிக்கப்பட்டு, அதன் மீது அந்தத் தீர்மானத்தைக் கொடுத்தவர் கருத்துக்களைக் கூறி, அதற்கு அந்தத் துறையின் அமைச்சர் பதிலளிப்பதுதான் தொன்றுதொட்டு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற அவை மரபாகும். ஆனால் தற்போதெல்லாம் ஒத்திவைப்பு தீர்மானங்களையோ, கவன ஈர்ப்பு தீர்மானங்களையோ கொடுப்பதற்கே எதிர்க்கட்சிகளை அவைக்கே வரவிடாமல் செய்து, அன்றாடம் முதலமைச்சர் அவையிலே விதி 110இன் கீழ் அறிக்கை மட்டுமே படித்து, அதைப் பாராட்டி தோழமைக் கட்சியினர் எல்லாம் பேசுகின்ற நிலைதான் நடந்து வருகின்றது.

ஆனால் தமிழகத்திலே கடந்த பல நாட்களாக சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தி, வேலை நிறுத்தத்தில் 4-4-2012 முதல் கடந்த ஒரு மாத காலமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

நெய்வேலி ஒப்பந்தத் தொழிலாளர்கள் பத்து அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி 21-4-2012 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். வேலை நிறுத்தம் 17வது நாளை எட்டியுள்ளது. 7-5-2012 அன்று ஜீவா ஒப்பந்தத் தொழிலாளர் சங்கம் சார்பில் ரயில் மறியல் போராட்டமும், தொ.மு.ச., சி.ஐ.டி.யு., பா.ம.க., யு.டி.யு.சி. உள்ளிட்ட தொழிற்சங்கக் கூட்டமைப்பு சார்பில் உண்ணா விரதப் போராட்டமும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விசைத்தறி நெசவாளர்கள் அது போலவே மின்வெட்டு காரணமாக தொழிலைத் தொடர்ந்து நடத்த முடியவில்லை என்று கூறி, திருப்பூர், கோவை, ஈரோடு, சேலம் மாவட்டங்களிலே வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

அ.தி.மு.க. அரசின் வறட்டுப் பிடிவாதம் காரணமாக முறையாக அரசிலே பல ஆண்டுக் காலமாகப் பணியாற்றி வந்த 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் நலப் பணியாளர்கள், உச்ச நீதி மன்றம், உயர் நீதி மன்றம் என்று முறையிட்டு, நீதியினைப் பெற்றுக் கொண்டு, வேலை கிடைக்காமல் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இந்தப் போராட்டங்களைப் பற்றியோ, வேலை நிறுத்தங்களைப் பற்றியோ அ.தி.மு.க. அரசு ஏதாவது கவலைப்படுகிறதா? இந்தப் பிரச்சினைகளைப் பேரவையிலே விவாதிக்க வேண்டுமென்று ஒத்திவைப்பு தீர்மானங்களோ, கவன ஈர்ப்புத் தீர்மானங்களோ அனுமதிக்கப்பட்டு அதற்குப் பதிலளிக்கப்பட்டிருக்கிறதா என்றால் கிடையாது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் ஒப்பந்தத் தொழிலாளர்கள் 13 ஆயிரம் பேர் தங்களின் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஏப்ரல் 21ஆம் தேதியிலிருந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்தப் பிரச்சினையில் தங்களுக்கு சம்மந்தம் இல்லை என்றும், மத்திய அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டது என்றும் தமிழக அமைச்சர் பேரவையிலேயே பதில் கூறிவிட்டார். உண்ணாவிரதப் போராட்டத்தை நெய்வேலி நகருக்குள் நடத்தக் கூடாது, தேவைப்பட்டால் மந்தாரக் குப்பத்தில் வைத்துக் கொள்ளலாம் என்று தமிழக போலீசார் தெரிவித்துள்ளனராம். போராடுகின்ற

தொழிலாளர்களின் கோரிக்கைகளில் ஒன்று, நெய்வேலி அனல் மின்சார உற்பத்தி முழுவதையும் தமிழ்நாட்டின் பயன்பாட்டுக்கே வழங்கிட வேண்டும் என்பதுமாகும். எனவே மாநில அரசுக்கு நேரடியாக இதிலே தொடர்பு இல்லாவிட்டாலும் மத்திய அரசிடம் வலியுறுத்தி அங்கே பாதிக்கப்பட்ட தமிழகத் தொழிலாளர்களின் பிரச்சினையைத் தீர்க்க முன்வந்திருக்கலாம்.

2008ஆம் ஆண்டு நெய்வேலி தொழிலாளர்கள் இதே பிரச்சினைக்காக தி.மு. கழக ஆட்சியில் போராட்டம் அறிவித்தவுடன் அந்த ஆலையில் உள்ள அனைத்து தொழிற்சங்கத் தலைவர்களையும் அழைத்துப் பேசி, அங்கே ஒரு சுமுக முடிவு கண்டு உடன்பாடு ஏற்பட வழிவகை வகுத்தது தி.மு.கழக ஆட்சி. நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளை மத்திய அரசு விற்பனை செய்ய முயற்சித்த போது, அதனை எதிர்த்துப் போராட்டம் நடத்திய அனைத்துத் தொழிற் சங்கங்களுக்கும் ஆதரவுக் கரம் நீட்டி, மத்திய அரசுக்கு நானே கடிதம் எழுதி, அந்தப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டது.

ஆனால் மாநிலத்தில் உள்ள அ.தி.மு.க. அரசு இந்தப் பிரச்சினையிலே அக்கறையின்றி இருந்தாலும், மத்திய அரசும், இந்தத் துறையின் அமைச்சரும் உடனடியாக நெய்வேலி நிர்வாகத்தோடு தொடர்புகொண்டு, போராடுகின்ற தொழிலாளர்களின் கோரிக்கைகளை, அழைத்துப் பேசி சுமுக முடிவு காண முன் வரவேண்டுமென்றும், அதற்கு பிரதமர் அவர்கள் ஆவன செய்திட வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோலவேதான் கூட்டுறவு சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களின் பிரச்சினை. சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு என்பது தென்னிந்திய சர்க்கரை ஆலை அதிபர்களுடன் நான்கு ஆண்டுக்கு ஒருமுறை மத்திய தொழிற் சங்கங்கள் பேசி ஒப்பந்தங்கள் காணுவதாகும். 2001-2006ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த அ.தி.மு.க. அரசு, தொழிலாளர் சங்கங்களை அழைத்துப் பேசிடாமலேயே, 17-1-2006இல் தன்னிச்சையாக ஓர் அரசாணையைப் பிறப்பித்து, ஒப்பந்தக் காலத்தை தானாகவே நீடித்து விட்டது. ஆனால் 2006ஆம் ஆண்டு மே திங்களில் தி.மு. கழக ஆட்சி பொறுப்புக்கு

வந்த பிறகு, தொழிலாளர்களின் கோரிக்கைகளையேற்று, குறிப்பாக தொ.மு.ச. பேரவையின் வேண்டுகோள்படி, தனியார் ஆலைகளைப் போலவே, கூட்டுறவு மற்றும் பொதுத் துறை ஆலைத் தொழிலாளர்களுக்கும் ஊதிய உயர்வு 1-4-2009 முதல் வழங்கிட 8-10-2008 அன்று அரசாணை ஒன்றைப் பிறப்பித்தது என்பதை சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் நன்றாகவே அறிவார்கள். அதன் பிறகு தனியாருடன் தொழிற் சங்கங்கள் செய்து கொண்ட ஊதிய ஒப்பந்த பலனில் 90 சதவிகிதத்தை கூட்டுறவு மற்றும் பொதுத்துறை தொழிலாளர்களுக்கும் வழங்கிட தி.மு.கழக அரசு 14-9-2010 அன்று ஆணை பிறப்பித்து, அதன் மூலம் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் 80 சதவிகித ஒப்பந்த பலன் வழங்கப் பட்டது. இதற்குப் பிறகு பொதுத்துறை மற்றும் கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கங்கள், அத்துறை களில் ஒரு சிலர் பெற்று வந்த அரசு ஊழியருக்கு இணையான ஊதியத்தைப்போல வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வைத்து போராட்டம் நடைபெற்றது. இவர்களின் இந்தக் கோரிக்கை குறித்து - அப்போது பொதுத்தேர்தல் நடைபெற வேண்டிய காலம் நெருங்கிவிட்டதால் 1-3-2011 அன்று, தி.மு.கழக அரசு ஒரு குழுவினை அமைத்து ஆய்வு செய்திட வேண்டுமென்று ஆணை பிறப்பித்தது. அதற்கடுத்த இரண்டு மாதங்களில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டது. ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின், 1-8-2011 அன்று அந்தக்குழு தனது பரிந்துரைகளை அரசுக்கு வழங்கியது. ஆனால் அந்தப் பரிந்துரைகளை பரிசீலனை செய்து நிறைவேற்றித்தர வேண்டிய அ.தி.மு.க. அரசு, பேச்சுவார்த்தைகள் என்ற பெயரில் தொழிலாளர் பிரச்சினைக்கு தீர்வு காணாமல் கால தாமதம் செய்து கொண்டே இருக்கிறது. அதிலே எந்த முடிவும் எடுக்கப்படாததால், சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் தற்போது போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் போராட்டத்தின் காரணமாக ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும், இலட்சக்கணக்கான கரும்பு விவசாயிகளின் குடும்பங்களும் - விளைந்த கரும்பை ஆலைக்கு அனுப்ப இயலாத காரணத் தால் பெரும் இழப்புக்கு ஆளாகிய நிலையில் - சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவு சர்க்கரை

ஆலைகள், அரசு சர்க்கரை ஆலைகள் எதுவும் இயங்காத காரணத்தால், உரிய நேரத்தில் கரும்பு வெட்டுவதற்கு விவசாயிகளுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கரும்புக்கு கொள்முதல் விலை 2500 ரூபாய் டன் ஒன்றுக்கு வழங்கப்படும் என்று அறிவித்துவிட்டு, தற்போது அந்த விலையைக்கூட வழங்க முன் வராமல், 2100 ரூபாய் என்று அறிவித்துள்ள அ.தி.மு.க. அரசு தற்போது சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களின் பிரச்சினையையும் தீர்க்க முன்வராமல் உள்ளது.

அடுத்து, மின் கட்டண உயர்வை எதிர்த்து, மின் கட்டணம் செலுத்தாத விசைத்தறிக் கூடங்களின் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டதைக் கண்டித்து, கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம் மாவட்டங்களில் காலவரையற்ற வேலை நிறுத்தத்தை விசைத்தறியாளர்கள் தொடங்கியிருக்கிறார்கள். இதனால் 49 கோடி ரூபாய் ஜவுளி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக திருப்பூர் மாவட்டத்தில் பல்லடம், அவிநாசி, தெக்கலூர், பெருமா நல்லூர், மங்கலம், திருப்பூர், கோவை மாவட்டத்தைச் சேர்ந்த சோமனூர், சூலூர் பகுதிகளில் மட்டும் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட விசைத்தறிகள் உள்ளன. விசைத்தறிகளுக்கு முதல் 500 யூனிட்டுக்கு மட்டும் இலவச மின்சாரம் இருந்த போதிலும் அதற்குமேல் ஒரு யூனிட்டுக்கு 4 ரூபாய் என்று கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மற்ற தொழில்களோடு ஒப்பிடும்போது விசைத்தறிக்கான மின் கட்டணம் 110 சதவிகிதம் உயர்ந்துள்ளது என்று கூறி போராட்டம் நடத்துகிறார்கள். இவர்களின் வேலைநிறுத்தம் காரணமாக ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளார்கள். ஆனால் இதுபற்றியும் அ.தி.மு.க. அரசு கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

மக்கள் நலப் பணியாளர்கள் பற்றி நீதி மன்றங்கள் மீண்டும் பணி கொடுக்க உத்தரவு கொடுத்த பிறகும் அ.தி.மு.க. மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்வதில்தான் அக்கறை செலுத்துகிறதே தவிர, மனிதாபிமானத்தோடு அவர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பளிக்க முன்வருவதாக இல்லை.

இதுவரை 19 மக்கள் நலப்பணியாளர்கள் தங்கள் இன்னுயிரை அ.தி.மு.க. ஆட்சியாளர்களின் வறட்டுப் பிடிவாதத்திற்காக பலி கொடுத்தும்கூட, மனம் இரங்குவதாகத் தெரியவில்லை.

இந்தப் பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் பேரவைக்கு வந்தால் எங்கே தி.மு.க. உறுப்பினர்கள் பேசி விடுவார்களோ என்பதற்காக, வராமலிருக்க என்ன செய்யலாம் என்று திட்டமிட்டு செயல்பட்டார்கள். ஆளுங்கட்சி, தனது எதிர்க் கட்சி உறுப்பினர்களிடமிருந்து என்ன கருத்து சொல்லப்படுகிறது என்பதைக் கேட்டறிந்து செயல்பட்டால்தான் முறையான ஆட்சியாகத் தொடர முடியும். அதைத்தான் அய்யன் வள்ளுவரும் "இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பாரிலானும் கெடும்" என்றார். நான் இப்படிச் சொல்வதால், "தி.மு.கழக ஆட்சியில் அப்படித்தான் செயல் பட்டீர்களா?" என்று யாராவது கேட்கக் கூடும். ஆமாம், அப்படித்தான் செயல்பட்டோம். உதாரணமாக, 13-11-2008 அன்று மின்சாரம் பற்றிய விவாதம் நடைபெற்ற போதுகூட - நான் அவையிலே இல்லாத நேரத்தில் - பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டுவிட்டார்கள் என்ற செய்தியினை அறிந்து - அய்யோ, அவர்கள் மின்சாரம் பற்றிய விவாதத்தில் கலந்து கொள்ள வேண்டுமென்று அக்கறையோடு இருந்தார்களே, வெளியேற்றப்பட்டுவிட்ட காரணத்தால், மின்சார விவாதத்தில் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடுமே என்று எண்ணி - நானே தொலைபேசியில் எதிர்க்கட்சித் துணைத் தலைவருடன் தொலைபேசியிலே பேசிட முயற்சித்து - அது கிடைக்காத காரணத்தால் - ஆளுங் கட்சியைச் சேர்ந்த தம்பிகள் மு.க.ஸ்டாலின், துரைமுருகன் வீரபாண்டி ஆறுமுகம், கே.என். நேரு ஆகிய அமைச்சர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு - எதிர்க்கட்சித் தலைவரின் அறைக்கே சென்று அ.தி.மு.க.வினரைச் சமாதானம் செய்து மின்சாரம் பற்றிய விவாதத்திலே கலந்து கொள்ள வாருங்கள் என்று அழைக்கச் செய்தேன். மேலும் பேரவைத் தலைவரோடும் தொலைபேசியிலே பேசி, வெளியேற்றப்பட்ட ஆணையைத் திரும்பப் பெற்று, அவர்களையெல்லாம் கலந்து கொள்ள வாருங்கள் என்று அவையிலேயே அழைப்பு விடுக்கவும் கேட்டுக்கொண்டேன். அவரும் அவ்வாறே அழைப்பும் விடுத்தார்.

ஆனால் இத்தனைக்கும் பிறகு என்ன காரணத்தாலோ அவர்கள் அவைக்கு வரவும் இல்லை. மின்சார விவாதத்திலே கலந்து கொள்ளவும் இல்லை. ஆனாலும் அண்ணா கற்றுக் கொடுத்த அந்தப் பண்பாட்டுடன் நாம் நடந்து கொண்டோம் என்ற மன ஆறுதல் எனக்குக் கிடைத்தது. ஆனால் அண்ணா பெயரால் இன்னமும் கட்சி நடத்துபவர்களோ?

அன்புள்ள,

மு.க.

8-5-2012

3623. அரசியல் திருப்பம்; அன்று நடந்தது என்ன? என்ன?

உடன்பிறப்பே,

சென்னையில் 11-5-2012 அன்று நடைபெற்ற ஒடிசா மாநில 76வது ஆண்டு விழாவில், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவும், ஒடிசா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக்கும் கலந்து கொண் டிருக்கிறார்கள். அந்த விழாவில் நமது முதலமைச்சர் பேசும்போது, ஒடிசா முதல்வரான நவீன் பட்நாயக் அவர்களின் தந்தையான பிஜூபட் நாயக்கை மூன்று முறை வரவேற்றிருப்பதாகவும், மிகச் சிறந்த தலைவராக சாதனை புரிந்தவராக திகழ்ந்த பிஜூ பட்நாயக் அவர்களின் மகன் நவீன் பட்நாயக்கை வரவேற்பதில் மகிழ்ச்சி அடைவதாகவும் தெரிவித்ததோடு, பிஜூ பட்நாயக் தனக்கு தந்தை போன்றவர் என்றும், அந்த உணர்வுகளை தனது சகோதரரைப் போன்ற நவீன் பட்நாயக் அவர்களுடன் பகிர்ந்து கொள்வதாகவும் குறிப்பிட்டதை ஏடுகளில் படித்தபோது மறைந்த பிஜூ பட்நாயக் அவர்களைப் பற்றி நான் பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய "நெஞ்சுக்கு நீதி" - மூன்றாம் பாகத்தில் எழுதியிருந்தது என் ஞாபகத்திற்கு வந்ததையொட்டி, அதை அப்படியே இங்கே தந்துள்ளேன்.

★★★

"1979, செப்டம்பர் 6ஆம் தேதி தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். டெல்லியிலே இருந்தார். அன்று மாலையில் அவர் இந்திரா காந்தியைச் சந்திப்பதாக இருந்தது. ஆனால் அந்தச் சந்திப்பு நடைபெறவில்லை. அதற்குக் காரணம்; எம்.ஜி. ஆருக்கு ஏற்பட்ட குழப்பம் என்று "எக்ஸ்பிரஸ்" போன்ற ஏடுகள் எழுதின. குழப்பத்திற்குக் காரணம்; அதே நாள் காலையில் அவர், பிரதமர் சரண்சிங்கைச் சந்தித்தபோது "அ.தி.மு.க., இந்திரா காங்கிரசுடன் உறவு கொள்வதாக இருந்தால் காபந்து சர்க்காரில் மத்தியில்

அமைச்சர்களாக இருக்கும் இரண்டு அ.தி.மு.க. அமைச்சர்களும் பதவி விலகி விடுவதுதான் நியாயமாகும்" என்று சரண்சிங், எம்.ஜி.ஆரிடம் கூறிவிட்டார். எனவே எம்.ஜி.ஆர்., இந்திரா காந்தியைச் சந்திக்காமலே திரும்பி விட்டார்.

அதே செப்டம்பர் 6ஆம் தேதி மாலையில் டெல்லியிலிருந்து மத்திய அமைச்சர் பிஜு பட்நாயக்; தொலைபேசி வாயிலாக என்னைத் தொடர்பு கொண்டு, முக்கியமான அரசியல் விஷயம் பேச வேண்டுமென்றும் சென்னைக்கு வந்து என்னைச் சந்திப்பதாகவும் கூறினார். நானும் அவர் என்னை சென்னைக்கு வந்து சந்திப்பதை ஒப்புக்கொண்டேன். இதற்கிடையில் ஏடுகளில் தி.மு.க.வையும் அ.தி.மு.க. வையும் இணைப்பதற்கான முயற்சிகளில் பிஜு பட்நாயக் ஈடுபடப் போவதாகச் செய்திகள் வந்தன.

செப்டம்பர் 8ஆம் தேதி வேலூர் நிகழ்ச்சிக்குச் சென்றிருந்த என்னிடம் இது பற்றிக் கேட்டனர். "பூம்புகாரில் நிருபர்களிடம் பேசிய முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., தி.மு.க., அ.தி.மு.க., இரண்டும் ஒன்றாக இணைவதில் என்ன தவறு என்று கூறியிருக்கிறார். ஆனால் அதே நாள் மாலையில் காரைக்கால் பொதுக் கூட்டத்தில் தி.மு.க. நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறாது என்று அறை கூவல் விடுத்துப் பேசியிருக்கிறார். எதற்கும் பொறுத்திருந்து பார்க்கலாம்" என்று கருத்துப்படப் பதில் அளித்தேன்.

என்னிடம் தொலைபேசியில் கூறியவாறு

12-9-79 அன்று பிஜு பட்நாயக் சென்னையில் என் வீட்டில் என்னைச் சந்தித்து தி.மு.க., அ.தி.மு.க., இணைப்புக் குறித்துப் பேசினார். நீண்ட நேரம் இருவரும் விவாதித்த பிறகு; ஏற்கனவே நான் கழகப் பொதுச்செயலாளருடனும் கழக முன்னணித் தலைவர்களுடனும் கலந்து பேசி எடுத்த முடிவுக்கேற்ப ; இரு கட்சிகளும் இணைந்திடச் சில நிபந்தனைகளைச் சொன்னேன்.

1. இரு கட்சிகளும் இணைந்து தி.மு.க. என்ற பெயரில்தான் இயங்கவேண்டும்.
2. அக்கட்சிக்கு அண்ணா படம் பொறித்த கொடியே இருப்பதில் எங்களுக்கு எந்த மறுப்பும் இல்லை.
3. முதலமைச்சராக இப்போதுள்ள எம்.ஜி. ஆர். அவர்களே அப்பதவியில் நீடிக்கட்டும்.

4. இரு கட்சிகளும் இணைவது என்பதற்காகத் தி.மு.க.வில் இப்போதுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் யாருக்கும் அமைச்சர் பதவி எதுவும் தேவையில்லை.

5. இரு கட்சிகளும் இணைந்த பிறகு, உரிய நேரத்தில் தலைமைக் கழகத்தின் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் மற்றும் நிர்வாகப் பொறுப்புகள் குறித்து முடிவு செய்து கொள்ளலாம்.

6. முக்கியமான விஷயம் : எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியில் இடஒதுக்கீட்டில் கொண்டு வந்துள்ள சமூக நீதிக்குப் புறம்பான ஒன்பதாயிர ரூபாய் உச்சவரம்பு ஆணை; பொருளாதார அடிப்படையில் இடஒதுக்கீடு என்பது உடனடியாகத் திரும்பப் பெறப்பட வேண்டும்.

இவற்றைக் கேட்டவுடன்; பிஜு பட்நாயக் அவர்கள் மிகவும் மகிழ்ந்து உற்சாகத்துடன் "இந்த நிபந்தனைகளை எம்.ஜி.ஆர். ஏற்றுக் கொள்ள எந்தக் கஷ்டமும் இருக்காது. நான் இப்போதே எம்.ஜி.ஆர். இல்லம் செல்கிறேன். இன்றைக்கே உங்கள் இருவரையும் சந்திக்க வைக்கிறேன்" என்றார். அதற்கு நான்; "அவரைச் சந்திப்பதில் எனக்கொன்றும் மறுப்பு இல்லை. சந்திப்பதற்கு முன்பு கழக முன்னோடிகள் அனைவரிடமும் நான் கலந்து பேச வேண்டும். பொதுச் செயலாளர் வெளியூர் சென்றுள்ளார். இன்று மாலையில்தான் வருகிறார். அவரையும் மற்றவர்களையும் கலந்து பேசிக் கொள்கிறேன். எனவே சந்திப்புக்கு நாளைய தினம் ஏற்பாடு செய்யுங்கள்" என்றேன். மறுநாள் 13-9-1979 அன்று சந்திக்க முடிவாயிற்று.

அதற்குள் மாநில முழுவதுமுள்ள மாவட்டக் கழகச் செயலாளர்கள், தலைமைக் கழகச் செயலாளர்களுடன் தொடர்பு கொள்ளப்பட்டு, அவர்கள் அனைவரும் 13ந்தேதி காலையில் சென்னை வந்து சேர்ந்திடவே - அவர்களின் கருத்துக்களையும் நானும் பொதுச் செயலாளரும் கேட்டறிந்தோம்.

அதன்பிறகு அன்று 11 மணியளவில் பிஜு பட் நாயக் முன்னிலையில் நானும் எம்.ஜி.ஆரும் சென்னை சேப்பாக்கம் அரசினர் விடுதியில் சந்தித்துப் பேசினோம். அப்போது கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர், அ.தி.மு.க. சார்பில் நாவலர் நெடுஞ்செழியன், பண்ருட்டி ராமச்சந்திரன் ஆகியோர்

உடனிருந்தனர். பிறகு நானும் எம்.ஜி.ஆர். அவர்களும் அந்த விடுதியின் வேறொரு அறையில் தனிமையில் பேசினோம். பிஜுபட்நாயக்கிடம் நான் தெரிவித்த கருத்துக்களும் நிபந்தனைகளும் உண்மைதானா என்று எம்.ஜி.ஆர். வியப்புடன் கேட்டார். இரு கட்சிகளும் இணைந்து தி.மு.க. என்ற பெயரில் இயங்க வேண்டுமென்பதற்கு தி.மு.க. என்ற பெயரில்தான் ஏற்கனவே பல இடங்களில் கட்டிடங்கள், சொத்துக்கள் இருக்கின்றன என்பது மட்டுமல்லாமல், தி.மு.க. என்பதுதான் அண்ணா உருவாக்கிய கழகம்; எனவே அந்தப் பெயரே நிலைக்கலாம் என்பதையும் அவரிடம் விளக்கினேன். அண்ணாவின் படத்தைப் பதித்துள்ள கொடியே இணைந்து விடப்போகும் கட்சியின் கொடியாக இருக்கட்டுமென்றும் கூறினேன். மற்றும் பிஜு பட்நாயக்கிடம் கூறிய மற்றவைகளையும் எம்.ஜி.ஆரிடம் விளக்கினேன். அவர் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டது மட்டுமல்லாமல், ஒரு குறிப்பிட்ட நாளில் இரண்டு கட்சிகளின் செயற்குழு, பொதுக் குழுக்களையும் வெவ்வேறு இடங்களில் கூட்டி இரு கட்சிகளின் இணைப்புத் தீர்மானத்தை நிறைவேற்றி விடலாம் என்றும் அறுதியிட்டுக் கூறினார்.

பின்னர் இருவரும் நாங்கள் தனித்துப் பேசிக் கொண்டிருந்த அறையிலிருந்து வெளியே வந்து பிஜு பட்நாயக்கிடமும் அங்கிருந்த இரு கட்சிகளின் தலைவர்களிடமும் பேச்சின் முடிவு குறித்துத் தெரிவித்தோம். செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் எங்களைச் சூழ்ந்து கொண்டு கை குலுக்கினர். புகைப்படமெடுத்தனர். நிருபர்களின் கேள்விக்குப் பதில் அளித்த போதும் நான், எம்.ஜி.ஆர். இருவருமே இரு கட்சிகளின் செயற் குழு, பொதுக்குழுக்களில் விவாதித்து முடிவு அறிவிக்கப்படுமென்று கூறினோம்.

செப்டம்பர் 13ம் தேதி நாங்களிருவரும் பிஜுபட் நாயக் முன்னிலையில் சந்தித்துப் பேசியதற்கு மறுநாள் 14-9-79 அன்று வேலூர் பொதுக் கூட்டத்தில் பேசிய எம்.ஜி.ஆர். அவர்கள் தி.மு.க., அ.தி.மு.க. இணைப்புப் பற்றி உறுதியான கருத்து எதுவும் தெரிவிக்காதது மட்டுமல்ல; அவரை மேடையில் வைத்துக் கொண்டே அவரது அமைச்சர்கள் தி.மு. கழகத்தையும், என்னையும் மிகக் கடுமையாகவும், தரக்குறைவாகவும் தாக்கிப் பேசியிருக்கிறார்கள்.

சேப்பாக்கம் அரசினர் விடுதியில் நாங்கள் சந்தித்துப் பேசிய பிறகு வேலூர் பொதுக் கூட்டத்திற்கு இடையில் என்ன நடந்தது என்று தெரியாது.

வேலூருக்குப் பிறகு இணைப்புப் பற்றிப் பேச்சுத் தொடர வில்லை. வேலூர் கூட்டத்துப் பேச்சுக்களினால் புண்பட்ட தி.மு.கழக முன்னணியினரும்; இணைப்பு என்பதில் தங்களுக்குள்ள மாறுபாடான கருத்தைத் தலைமைக்குத் தெரிவிக்கத் தொடங்கினர். யு.என்.ஐ. செய்தி நிறுவனத்தினர், என்னை அணுகி, "தொடர் நடவடிக்கை என்ன?" என்று கேட்டபோது "இரு தரப்பிலும் தொடர் நடவடிக்கை இல்லை. இரு கட்சிகளின் தேர்தல் உடன்பாடுகள் வெவ்வேறாகதானிருக்கக் கூடுமெனக் கருதுகிறேன்" என்று பதில் அளித்தேன்.

ஆனால் பிஜூபட்நாயக், தனது முயற்சி வெற்றி பெற்று விட்டது என்ற மகிழ்ச்சியுடன் டெல்லியிலிருந்து எனக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்துத் தெரிவித்து இணைப்புக்கான அடுத்த முயற்சிகள் எப்படியிருக்கின்றன என்று விவரம் கேட்டார். நான் அவரிடம் வேலூரில் நடைபெற்ற அ.தி.மு.க. கூட்டம் பற்றியும் அந்தக் கூட்டத்தில் எம்.ஜி.ஆரும், மற்ற அமைச்சர்களும் பேசிய கருத்துக்கள் இணைப்புக்கான அடிப்படையில் இல்லாதது மட்டுமல்ல; இணைப்புக் கூடாது என்ற நிலையில் இருந்தது என்பதையும், எனவே தி.மு.க. முன்னணியினரும், பல்வேறு மட்டங்களில் உள்ள செயல்வீரர்களும் இணைப்புக்கு இப்போது சாதகமாக இல்லையென்று கூறினேன். அவர் என்னை உடனே புறப்பட்டு டெல்லி வருமாறு கேட்டுக் கொண்டார்.

இதற்கிடையே இந்திரா காந்தி அமைச்சரவையில் ஓர் அமைச்சராக இருந்தவரும், இந்திரா காந்திக்கு மிகவும் நம்பிக்கைக்குரியவராகவும் இருந்த ஸ்டீபன் அவர்கள், தம்பி முரசொலி மாறனுடன் டெல்லியில் தொடர்பு கொண்டு, இந்தியாவின் நன்மைக்காகவும், ஒரு நிலையான ஆட்சி அமைய வேண்டுமென்பதற்காகவும் நடந்தவைகளையெல்லாம் மறந்து விட்டு மீண்டும் தி.மு.க. வுடன் இந்திரா காங்கிரஸ் தேர்தல் உடன்பாடு கொள்ள விரும்புவதாகத் தெரிவித்து; இரண்டு மூன்று முறை மாறனிடம் அக்கருத்தை அவர் வலியுறுத்தவே, மாறன் அதுபற்றி எனக்குத் தகவல் தெரிவித்தார்.

1971ஆம் ஆண்டுக்கு முன்பு பிரதமர் இந்திரா காந்தி வங்கிகளை தேசிய உடைமை ஆக்கியது, மன்னர் மானியங்களை ஒழித்தது போன்ற செயல்களுக்காகத் தி.மு.க.வும், இடதுசாரி கட்சிகளும் அவரை ஆதரித்ததைத் தொடர்ந்து, குடியரசுத் தலைவர் தேர்தலில் இந்திரா காந்தியின் ஆதரவு பெற்ற வேட்பாளரான வி.வி. கிரியை ஆதரித்து வெற்றி பெறவும் செய்தது ஒரு கட்டம். அதன் பிறகு நடைபெற்ற நாடாளுமன்றச் சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. இந்திரா காங்கிரசுடன் உடன்பாடு கொண்டு நாடாளுமன்றத்திற்கு மட்டும் இந்திரா காங்கிரசுக்கு ஒன்பது இடங்களை விட்டுக் கொடுத்து வெற்றி பெறச் செய்தது. அதன் பின்னர் 1975ல் நெருக்கடிக் காலப் பிரகடனம், அதற்கு தி.மு.க. பெரும் எதிர்ப்பு, 1976இல் ஆட்சிக் கலைப்பு - மிசாக் கொடுமை இத்தனைக்கும் பிறகு, மீண்டும் தி.மு.க.வுடன் தேர்தல் உடன்பாடு கொள்ள 1980ல் இந்திரா காந்தி பெருமுயற்சி எடுத்து, என்னையும் உடனடியாகப் புறப்பட்டு டெல்லிக்கு வந்து தன்னைச் சந்திக்குமாறு கூறுகிறார் என்றால்; அது அரசியலில் ஒரு பெரிய திருப்புமுனைதானே! அதுபற்றி எல்லாம் தொடர்ந்து உன்னிடம் தொடர்பு கொண்டு பேசவும் எழுதவும்தானே போகிறேன்".

அன்புள்ள,

மு.க.

14-5-2012

3624. காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ?

உடன்பிறப்பே,

தமிழகத்திலே நிதியமைச்சர் என்று ஒருவர் இருக்கிறார்! இவருக்கு நிதி நிலை அறிக்கை என்ற புத்தகத்தை அவையிலே படிப்பதற்கு மட்டுமே அதிகாரம் உண்டு. பேரவையில் அவ்வப்போது எழுந்து நின்று எதிர்க்கட்சிகளைத் தாக்கிப் பேசி மட்டுமே, தான் இருப்பதைக் காட்டிக்கொள்ள முயற்சிப்பார்! தற்போது திடீரென்று ஓர் அறிக்கை கொடுத்துள்ளார்!

ஒவ்வொரு ஆண்டும் கூட்டத் தொடர் முடிகின்ற நாளன்று, பேரவையில் தணிக்கைத் துறை அதிகாரியின் அறிக்கை ஒன்றை பேரவையிலே வைப்பார்கள். அந்த அறிக்கையில் அரசின் பல்வேறு துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள் பற்றிய கணக்குகள் ஆய்வு செய்யப்பட்டு ஒரு சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியிருப்பார்கள். அதைப் படித்து விட்டு நாளேடுகள் அந்தக் குறைபாடுகளை தங்கள் இதழ்களிலே வெளியிடுவார்கள். அதைப் போலவே இந்த ஆண்டும் அந்த தணிக்கை அறிக்கை ஏடுகளிலே வெளி வந்ததும், நமது நிதியமைச்சருக்கு ஏதோ குற்றச்சாட்டுகளைப் போல சொல்லியிருக்கிறார்களே, இது நமது துறை ஆயிற்றே என்ன செய்யலாம் என்று பார்த்து, அந்த அறிக்கையிலே கூறப்பட்டிருப்பது எல்லாம் கடந்த கால ஆட்சியைப் பற்றிய விவரங்களாகும் என்று அவராகவே அவசர அவசரமாக ஓர் அறிக்கையை ஏடுகளிலே விடுத்துள்ளார். பாவம்! பேரவை நடைபெற்று முடிகிற வரை இவருக்கு எப்படியாவது 110வது விதியின் கீழ் ஓர் அறிக்கையைப் படித்தாவது, ஏடுகளிலே வெளிவரச் செய்துவிட வேண்டுமென்று நினைத்தது நடக்கவில்லை. இப்போது கிடைத்தது ஒரு வாய்ப்பு என்று அறிக்கை விடுத்துள்ளார்.

“தணிக்கைத் துறை அதிகாரியின் அறிக்கை; அம்மா

அவர்கள் தலைமையிலான அரசின் செயல்பாடுகள் தொடர்பாக எழுப்பப்படுகின்ற குற்றச்சாட்டுகள் போன்ற தோரணத்தை ஏற்படுத்தியுள்ளது" என்று அமைச்சர் பன்னீர் செல்வம் சொல்லியிருக்கிறார். ஆனால், தணிக்கைத் துறை அதிகாரியின் அறிக்கையைப் பார்த்த யாருக்கும் அத்தகைய தோற்றம் ஏற்படவில்லை. அமைச்சர் பன்னீர் செல்வம் அவர்களுக்குத்தான் அப்படி தோற்ற மளிக்கின்றது போலும்! எப்படியோ அப்படியொரு காரணத்தைக் கூறிக் கொண்டு அறிக்கை விடுத்துள்ளார்.

தணிக்கைத் துறை அதிகாரியின் அறிக்கை என்றாலே எந்த அரசு நடைபெற்றாலும் அரசின் பல துறைகள் பற்றியும், குறிப்பாக பொதுத் துறை பற்றியும், கணக்கு வழக்குகளைத் தணிக்கை செய்து ஆண்டுதோறும் அறிக்கை அளித்து, அதனை பேரவையிலே உறுப்பினர்களுக்கு வழங்குவது வாடிக்கையாக நடைபெறுகின்ற ஒன்று. அ.தி.மு.க. ஆட்சியிலே நடைபெற்ற கணக்கு வழக்குகளைப் பற்றியும் தணிக்கை அதிகாரிகள் பல அறிக்கைகளைக் கொடுத் திருக்கிறார்கள். அவற்றிலும் இதுபோன்ற ஒரு சில குறைபாடுகளைத் தெரிவித்திருக்கிறார்கள். நிதியமைச்சர் அவரது துறையின் செயலாளரை அழைத்துக் கேட்டால் இதைப் பற்றியெல்லாம் விளக்கமாகக் கூறுவார்!

"தமிழ்நாட்டில் பொதுத் துறை நிறுவனங்கள் மொத்தத்தில் கடுமையான இழப்பை எய்தியுள்ளன" என்று தணிக்கை அறிக்கை தெரிவிப்பதாக அமைச்சர் சொல்லியிருக்கிறார். பொதுவாக பொதுத் துறை நிறுவனங்கள் இலாப நோக்கோடு நடத்தப்படுவதல்ல. அ.தி.மு.க. ஆட்சியிலேயும் எல்லா பொதுத் துறை நிறுவனங்களும் இலாபத்தோடு இயங்கவில்லை. கட்டணங்களை கடுமையாக உயர்த்தி - விலையை தாறுமாறாக அதிகரித்து மக்களைக் கசக்கிப் பிழிந்தால், பொதுத் துறை நிறுவனங்கள் இலாபத்தோடு நடத்திட முடியும். ஆனால் அது ஒரு மக்கள் நலச் சர்க்காரின் இலக்கண மல்ல! யார் எக்கேடு கெட்டால் எனக்கென்ன என்று கண்ணை மூடிக்கொண்டு கட்டணங்களை உயர்த்தினால் இலாபம் ஏற்படத்தான் செய்யும்.

முதலமைச்சர் ஜெயலலிதா தனது 20-11-2011 தேதிய அறிக்கையில், அரசு பொதுத் துறை நிறுவனங்கள் எல்லாம் நஷ்டத்தில் இயங்கக் காரணம், கடந்த கால தி.மு.க.

ஆட்சிதான் என்று சொல்லியிருக்கிறார். அதை அப்படியே "காப்பி" அடித்துத்தான், தற்போது நிதித் துறை அமைச்சரும் கூறியிருக்கிறார். சில உதாரணங்களைக் கூறுகிறேன்.

அரசு பொதுத் துறை நிறுவனங்களில் ஒன்று "சிப்காட்". 2001-2002ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் 11.76 கோடி ரூபாய் நஷ்டம். 2002-2003ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் 29.15 கோடி ரூபாய் நஷ்டம்.

2006-2007ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் 56.69 கோடி ரூபாய் இலாபம்.

2007-2008ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் 96.54 கோடி ரூபாய் இலாபம்.

2008-2009ஆம் ஆண்டு 90.38 கோடி ரூபாய் இலாபம். 2009-2010ஆம் ஆண்டு, தணிக்கைக்கு முன்பு 93.11 கோடி ரூபாய் இலாபம்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், "டிக்" - இதுவும் பொதுத் துறை நிறுவனங்களில் ஒன்று. 31-3-2010 வரை இக்கழகம் 1 லட்சத்து 4 ஆயிரத்து 949 நிறுவனங்களுக்கு ஒட்டு மொத்தமாக 7 ஆயிரத்து 672 கோடி ரூபாய் கடன் வழங்கியுள்ளது. 2009-2010ஆம் ஆண்டில் மட்டும் இக்கழகம் சுமார் 15 ஆயிரம் நபர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கியுள்ளது. தொடர்ந்து ஏழாண்டு காலமாக இந்தப் பொதுத் துறை நிறுவனம் இலாபத்தில்தான் இயங்குகிறது. 2009-2010ஆம் ஆண்டில் மட்டும் சுமார் நாற்பது கோடி ரூபாய் அளவிற்கு இந்த நிறுவனம் இலாபம் அடைந்துள்ளது. அதற்கு முந்தைய ஆண்டுகளோடு ஒப்பிடும் போது இது மிக அதிகமான லாபம் ஆகும். அந்த முந்தைய ஆண்டோடு ஒப்பிடும்போது இந்த வளர்ச்சி 36.58 சதவிகிதம்.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் - மற்றொரு பொதுத் துறை நிறுவனம்.

2004-2005ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் 39 கோடி ரூபாய் இலாபம்.

2007-2008 ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் 163 கோடி ரூபாய் இலாபம்.

2009-10ஆம் ஆண்டிற்கு மட்டும், நிகர இலாபம் 155 கோடி

ரூபாயாக மதிப்பிடப்பட்டது.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கழகம் என்று அரசின் மற்றொரு பொதுத் துறை நிறுவனம்.

2009-2010ஆம் ஆண்டுக்கான நிகர இலாபம் 26.08 கோடி ரூபாயாகும்.

தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் - இதுவும் ஒரு அரசு பொதுத் துறை நிறுவனம்தான். 1979ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

2009-2010ஆம் ஆண்டில் இந்த நிறுவனம் தோராயமாக 19.28 கோடி ரூபாய் (தணிக்கைக் குட்பட்டது) இலாபம் ஈட்டும் என எதிர்பார்க்கப்பட்டது. 2010-2011ஆம் ஆண்டிலும் இதே அளவு இலாபம் ஈட்டும் என்று கணக்கிடப்பட்டது.

2010-2011ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு 10,294.64 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று அ.தி.மு.க. அரசு தொடர்ந்து சொல்லிக் கொண்டிருப்பதை நிதியமைச்சரும் சொல்லியிருக்கிறார். தற்போது அ.தி.மு.க. அரசு செய்திருப்பதைப் போல மின் கட்டணங்களை உயர்த்தியிருந்தால், பத்தாயிரம் கோடி ரூபாய் மின் வாரியத்திற்கு இழப்பு ஏற்பட்டிருக்காது. ஆனால் கழக அரசு மின் வாரியத்திற்கு இழப்பு ஏற்பட்டாலும், மக்கள் சிரமத்திற்கு ஆளாகிவிடக் கூடாது என்று நினைத்தது! இப்போதும் அப்படித்தான் நினைக்கிறது.

இழப்பு பற்றி இப்போதல்ல; திரு. பன்னீர் செல்வம் பேரவைக்கு அளித்த நிதி நிலை அறிக்கையிலேயே இரண்டாவது பத்தியிலேயே "மாநில அரசு ஒரு இலட்சம் கோடி ரூபாய்க்குக் கூடுதலான கடன் சுமையில் மூழ்கியுள்ளது" என்று குறிப்பிட்டிருப்பதைப் பார்த்து, மாநில அரசின் கடன் சுமையைக் குறைப்பதற்கு பல்வேறு வகையான திட்டங்களையும், யோசனைகளையும் நிதி நிலை அறிக்கையிலே தெரிவிப்பார் என்று எண்ணி அதை முழுவதும் படித்த போது - இறுதியாக 2011-2012ஆம் ஆண்டுக்கு அரசு பெறப் போகும் கடன் 17,261 கோடி ரூபாய் என்று குறிப்பிட்டிருந்தார்.

தமிழக அரசின் கடன் விவரங்கள் பற்றி அரசின் சார்பில் பலமுறை ஏற்கனவே விளக்கம் அளித்துள்ளேன். இந்த ஆட்சியினர் மீது

1. 25 லட்சம் கோடி ரூபாய் கடன் சுமையை தி.மு.கழக அரசு

ஏற்றி வைத்து விட்டதாகத் திரும்பத் திரும்பச் சொல்வது தவறு.

31-3-2006 அன்றே, ஜெயலலிதா ஆட்சி புரிந்த ஐந்தாண்டு காலத்திற்குப் பிறகு; தமிழக அரசின் மொத்தக் கடன் பொறுப்பு 57 ஆயிரத்து 457 கோடி ரூபாயாகும். இது ஜெயலலிதா, தி.மு. கழக அரசின் மீது ஏற்றி வைத்து விட்டுச் சென்ற கடன் சுமை. அந்தக் கடன் சுமையைக் குறைக்க தி.மு.கழக அரசு எந்த வரியையும் விதிக்கவில்லை. ஆனால் ஜெயலலிதா தான் ஆட்சிக்கு வந்த ஓராண்டு காலத்திற்குள்ளாகவே சுமார் 4000 கோடி ரூபாய் அளவிற்கு வரிகளைச்சுமத்திவிட்டு, பால் விலையை உயர்த்திவிட்டு, பேருந்துக் கட்டணத்தை அதிகரித்துவிட்டு, மின் கட்டணத்தை ஏற்றி விட்டு கடந்த கால அரசைக் குறை கூறுவதில் நியாயம் என்ன இருக்கிறது?

நிதியமைச்சர் பன்னீர்செல்வம் தனது நீண்ட அறிக்கையில், "2010-2011ஆம் ஆண்டில் அரசின் வருவாய்ப் பற்றாக்குறை ரூ. 2,728 கோடி. இதைக் கருத்திற் கொண்டு, அ.தி.மு.க. அரசு வருவாயை அதிகரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. 2011-2012ஆம் ஆண்டில் வருவாய்ப் பற்றாக்குறை அறவே ஒழிக்கப்பட்டுள்ளது. ரூபாய் 536.54 கோடி அளவுக்கு வருவாய் உபரி ஏற்பட்டுள்ளது. எனவே தற்போதுள்ள அரசுதான், மாநிலத்தின் நிதி நிலையை சரி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது" என்று பெருமைப்பட்டுக் கொண்டுள்ளார். அதாவது தி.மு. கழக ஆட்சியில் வருவாய்ப் பற்றாக்குறை இருந்தது என்றும், அ.தி.மு.க. ஆட்சியில் 536.54 கோடி ரூபாய் அளவுக்கு பெரு முயற்சி செய்து வருவாய் உபரியாக ஆக்கியதைப் போலவும் சொல்லியிருக்கிறார்.

2011ஆம் ஆண்டு மே திங்களில் அ.தி.மு.க. பதவியேற்பதற்கு முன்பு 5-2-2011 அன்று

தி.மு. கழக அரசின் சார்பாக இடைக்கால நிதி நிலை அறிக்கை நமது பேராசிரியர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டது. அந்த நிதி நிலை அறிக்கையின் பக்கம் 51இல் "2011-2012ஆம் நிதியாண்டின் இறுதியில் வருவாய்ப் பற்றாக்குறை நீங்கி ரூபாய் 439 கோடி அளவிற்கு வருவாய் உபரி இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது" என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து கழகம் ஆட்சியில் இருந்தபோதே தாக்கல் செய்யப்பட்ட நிதி

நிலை அறிக்கையிலேயே 439 கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் உபரி இருக்கக் கூடிய அளவிற்கு நிலைமை இருந்தது என்பதை நிதியமைச்சர் பன்னீர் செல்வம் வசதியாக மறைத்து விட்டு, கழக ஆட்சியிலே வருவாய்ப் பற்றாக்குறையாகத்தான் இருந்ததைப் போலவும், அ.தி.மு.க. ஆட்சியிலேதான் வருவாய் உபரி, அவர்களின் திறமையினால் தான் செய்யப்பட்டதைப் போலவும் பீற்றிக் கொண்டிருப்பதை நினைத்தால் சிரிப்புதான் வருகிறது!

ஏனென்றால் "அன்று வந்ததும் அதே நிலா ; இன்று வந்ததும் அதே நிலா" என்பதைப் போல - அப்போது கழக ஆட்சியிலே நிதித் துறைச் செயலாளராக இருந்தவர்தான், இப்போது அ.தி.மு.க. ஆட்சியிலேயும் நிதித் துறைச் செயலாளராக இருக்கிறார்! வருவாய்ச் செலவுகளில் சிலவற்றைக் குறைத்து விட்டால், வருவாய் உபரி! எனவே வருவாய் உபரி வந்து விட்ட காரணத்தினாலேயே நிதி நிலை சீரடைந்து விட்டதாகப் பொருள் அல்ல.

வருவாய் உபரியோ, பற்றாக்குறையோ ஒட்டுமொத்த நிதி நிலையில் இறுதியாக என்ன நிலை என்பதுதான் முக்கியம்!

கடந்த ஆண்டு கழக ஆட்சியில் பேராசிரியர் நிதிநிலை அறிக்கை படித்தபோது

2011-2012 ஆம் ஆண்டில் நிதிப்பற்றாக்குறை ரூபாய் 13,507 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டது. அந்த நிதிப் பற்றாக்குறை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 2.32 சதவிகிதம். ஆனால் தற்போது அறிக்கை கொடுத்துள்ள நிதி அமைச்சர் பன்னீர்செல்வம்

26-3-2012இல் படித்த நிதி நிலை அறிக்கையில் உள்ளவாறு 2012-2013ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறை ரூ. 19,832.13 கோடியாக இருக்குமென்றும், அந்த நிதிப் பற்றாக்குறை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 2.87 சதவிகிதம் என்றும் கூறப்பட்டிருப்பதை மீண்டும் ஒருமுறை படித்துப் பார்த்தால் அ.தி.மு.க. ஆட்சியில் நிதி நிலைமையை வலுப்படுத்தியிருக்கிறார்களா என்பதை அ.தி.மு.க. அரசின் நிதி நிலை அறிக்கையிலிருந்தே புரிந்து கொள்ள முடிகிறதல்லவா?

திரு. பன்னீர்செல்வம் அண்மையில் படித்த நிதி நிலை அறிக்கையில் பத்தி 137இல்;

"2012-2013ஆம் ஆண்டின் இறுதியில் மாநிலத்தின் மொத்தக் கடன் 1,35,060.47 கோடி ரூபாயாக இருக்கும். எனினும், இது பதின்மூன்றாவது நிதிக் குழு அனுமதித்துள்ள அளவான, மாநில உற்பத்தி மதிப்பில் கடனின் விகிதாச்சார அளவு 24.8 சதவீதம் என்பதை விட குறைவாக, 19.6 சதவீத அளவிலேயே இருக்கும்" என்று குறிப்பிட்டிருப்பதிலிருந்தே; தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் நிதிக் குறியீட்டில் எந்தத் தவறையும் கழக ஆட்சி செய்துவிடவில்லை என்பதை அறியலாம். ஆனாலும் தி.மு.கழக அரசு கடன் சுமையை வைத்துவிட்டதாக அமைச்சர் தனது அறிக்கையிலே சொல்லி இருக்கிறார்.

இன்னும் கூற வேண்டுமேயானால் தமிழக அரசின் கடன் சுமை பற்றி பேரவையில் ஒரு உறுப்பினர் பேசியபோது முதலமைச்சர் ஜெயலலிதா குறுக்கிட்டு "மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது, மாநிலத்தின் மொத்தக் கடன் அளவு கவலையை அளிப்பதாக இங்கே தெரிவித்தார். மாநில அரசுக்கு உள்ள மொத்தக் கடன் அளவு 1,18,610 கோடி ரூபாய். மாநில அரசின் தற்போதைய கடன் சுமை,

2011-2012ஆம் ஆண்டின் இறுதியின் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 20.39 விழுக்காடு அளவே இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது 13வது நிதிக் குழு நிர்ணயித்துள்ள அளவான 24.50 விழுக்காட்டிற்கும் குறைவாகவே இருக்கும். ஆக 13வது நிதிக் குழு என்ன சொல்லியிருக்கிறதென்றால், ஒரு மாநில அரசுக்கு 24.50 விழுக்காடு வரை கடன் இருக்கலாம் என்று சொல்லியிருக்கிறது. ஆகவே மாநில அரசின் கடன் 20.39 விழுக்காடு என்ற அளவில் அதைவிடக் குறைவாகவே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று 8-8-2011 அன்று பதிலளித்திருப்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

தமிழக அரசின் கடன் அளவு 13வது நிதிக்குழு தெரிவித்ததற்கு குறைவாகவே உள்ளது என்று அம்மையாரே அவையிலே சொல்லிவிட்டு, அவரும் அமைச்சரும் தற்போது கழக ஆட்சியில் ஏராளமான கடன் சுமையை வைத்துவிட்டுப் போய்விட்டார்கள் என்று கூறுவது நியாயமா?

கழக ஆட்சி வாங்கி வைத்துவிட்டுப் போன கடன் சுமையை எல்லாம் தாங்கள் குறைக்க வேண்டியதாக உள்ளது என்று

சொல்கிறார்களே, ஆட்சிக்கு வந்து ஓராண்டு ஆகிறதே; எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் கடனை அடைத்திருக்கிறார்கள்? கடனை அடைக்க வேண்டாம், வாங்காமலாவது இருந்தார்களா? நிதி நிலை அறிக்கையிலேயே 12,873.81 கோடி ரூபாய் அளவுக்கு மட்டுமே நடப்பாண்டில் கடன் பெற்றிருப்பதாக பெருமையாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதுமாத்திரமல்ல, வரும் ஆண்டில் வாங்கப் போகும் கடன் அளவை 18,387.47 கோடி ரூபாய் அளவிலேயே கட்டுப் படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது என்றும் பெருமையாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த லட்சணத்தில்தான் ஆட்சிக்கு வந்தவுடன் - 2006ஆம் ஆண்டுக்கு முன்பு ஐந்தாண்டு காலம் ஆட்சியிலே இருந்த போது அ.தி.மு.க. அரசு 50 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் கடன் வாங்கியதையே மறந்து விட்டு, கழக அரசு கடன் சுமையை வைத்து விட்டுப் போனதாகத் திரும்பத் திரும்பக் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

தணிக்கைத் துறை அறிக்கை பற்றி கழக ஆட்சியிலே நடைபெற்ற சம்பவங்கள் என்று தேவையில்லாமல் வம்புக்கு இழுத்த அமைச்சர் பன்னீர்செல்வத்திற்கு ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன்.

திரு. தீ. தீத்தன்! இவர் யார் தெரியுமா? மாநிலக் கணக்காய்வுத் தலைவர், (தணிக்கை) II, தமிழ்நாடு. இவரது பெயர் 2-8-2004 வரை தமிழகத்திலே பெரும்பாலோருக்குத் தெரியாது. ஆனால் 6-8-2004 அன்று அவரது பெயர் இந்தியா முழுவதும் பிரபலமாகி விட்டது. யாருடைய உபயம் தெரியுமா? சாட்சாத் இன்றைய நமது தமிழக முதலமைச்சரின் உபயம்தான்.

இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் மார்ச் 31, 2003 உடன் முடிந்த ஆண்டிற்கான அறிக்கை; தமிழக சட்டப்பேரவையிலே 31-7-2004 அன்று வைக்கப்பட்டது. இந்த அறிக்கை குறித்த சில விபரங்களை அந்த அறிக்கையிலே கையெழுத்திட்ட அதிகாரியான தீத்தன் நிருபர்களிடம் 2-8-2004 அன்று தெரிவித்தார் என்பது செய்தி.

> அப்போது ஆண்டுவாரியாக அரசுக்கு ஏற்பட்ட இழப்பு என்று கூறி 1999-2000ஆம் ஆண்டு முதல் 2003-2004ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டும் எந்த அளவிற்கு அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்

காட்டியிருந்தார். அதில் அவர் ஆண்டுவாரியாகத்தான் சொல்லியிருந்தாரே தவிர, எந்தக் கட்சி ஆட்சியிலே என்று கூறிடவில்லை. இன்னும் சொல்லப் போனால் அந்த அதிகாரி தி.மு.கழகம் ஆட்சிப்பொறுப்பிலே இருந்த 1999-2000ஆம் ஆண்டில் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு எவ்வளவு என்பதையும் நிருபர்களிடம் எடுத்துக் கூறியிருந்தார்.

இவ்வாறு தமிழ்நாட்டிலுள்ள மாநிலக் கணக்காயர் (தணிக்கை) நிருபர்களிடம் கூறியது என்பது பெரும் அதிர்ச்சியாக உள்ளதாகவும், சுதந்திர இந்திய வரலாற்றில் இதுபோன்று எப்போதும் நடந்ததில்லை என்றும், அரசியல் சாசனத்திற்கு முரணானது என்றும் எடுத்துக் கூறி அப்போது தமிழக முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா ஒரு முழுப் பக்க அறிக்கையினை ஒரு அதிகாரிக்குப் பதில் கூறி சரித்திரத்திலேயே இல்லாத அளவிற்கு அறிக்கையாகக் கூட அல்ல, அரசின் சார்பாக விளம்பரமாகவே முழுப் பக்கத்திற்குக் கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழகத்திலே உள்ள ஏடுகளுக்கு மட்டும் விளம்பரக் கட்டணமாக இந்த அரசு அப்போது செலவிட்ட தொகை 52 இலட்சத்து 14 ஆயிரத்து 560 ரூபாய். வேடிக்கை இத்துடன் முடிந்து விடவில்லை! இன்னும் பாருங்கள்!

அந்த ஒரு பக்க அறிக்கை கல்கத்தாவிலிருந்து வெளியிடப்படும் 'ஸ்டேட்ஸ்மென்' நாளேட்டிலும், டெல்லியிலும் சண்டிகாரிலும் வெளியாகும் 'பயோனிர்' ஆங்கில நாளேட்டிலும், 'பைனான்ஷியல் எக்ஸ்பிரஸ்' நாளேட்டிலும், 'இந்துஸ்தான் டைம்ஸ்' ஆங்கில நாளிதழிலும், 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளிதழிலும், 'எகானமிக் டைம்ஸ்' ஆங்கில நாளிதழிலும் ஒரு பக்கம் விளம்பரம் செய்வதற்காக மட்டும் தமிழக மக்களின் வரிப்பணம் 1 கோடியே 22 லட்சத்து 81 ஆயிரத்து 100 ரூபாய் கொட்டி அழப்பட்டது. கேட்டால், தற்போது அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்து ஓராண்டு முடிவடைந்து விட்டதைக் கொண்டாடுவதற்காக தமிழகத்திலும், அகில இந்திய அளவிலும் செய்யப்பட்ட விளம்பரத்திற்கான தொகை 25 கோடி ரூபாய்க்கு மேல் என்று சில ஏடுகள் வெளியிட்டிருப்பதைக் காணும்போது, தணிக்கை அதிகாரிக்காக செலவிட்ட ஒரு கோடி ரூபாய் அதிகம் இல்லை

என்பார்கள்.

அந்தத் தணிக்கைத் துறை அதிகாரியை இதோடு விட்டார்களா? இல்லை. இது தொடர்பாக அன்றைய அ.தி.மு.க. நாடாளுமன்றக் கட்சித் தலைவர் பி.ஜி. நாராயணன், மலைச்சாமி, எம்.பி., ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்தனர். அதில், தணிக்கை அதிகாரி தேவை இல்லாமல் பேட்டியளித்ததாகவும், சட்டமன்றத்தில் தெரிவிக்க வேண்டிய கருத்தை பத்திரிகைகளிலே வெளியிட்டதாகவும், அவரை பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்றும் கோரியிருந்தனர்.

இப்படியெல்லாம் ஓர் அதிகாரி மீது, அவர் தன் கடமையை ஆற்றினார் என்பதற்காக நட வடிக்கை எடுத்தவர்கள் ஆட்சியிலேதான், நிதியமைச்சர் தணிக்கை துறை அறிக்கையில் காணப்பட்ட சில புள்ளி விவரங்களை முன் வைத்து கழக அரசின் மீது சேறு வாரி வீச முற்படுகிறார். "கறைச்சேற்றால் தாமரையின் வாசம் போமோ? காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ" என்ற புரட்சிக் கவிஞரின் வைர வரிகள்தான் ஞாபகத்திற்கு வருகின்றன.

அன்புள்ள,

மு.க.

21-5-2012

3625. ஒரு சுயமரியாதைக்காரனின் சூளுரை!

உடன்பிறப்பே,

ஜூன் 3 -

என்னுடைய 89வது பிறந்த நாள் என்று நீயும், உன்னைப்போன்ற உடன்பிறப்புகளும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தவாறு வாழ்த்து முத்துக்களை என்மீது வாரி இறைப்பீர்கள் என்று எனக்குத் தெரியும்.

உள்ளன்போடு என்னை நேசிக்கும் பேராசிரியப் பெருந்தகை அவர்கள் எனக்கு வாழ்த்துக் கட்டுரை எழுதி ஆங்காங்கு நீயும், ஏனைய உடன்பிறப்புகளும் அந்நாளை அகமும் முகமும் மலர்ந்திட நீயும், நின் குடும்பத்தினரும் குதூகலத்துடன் கொள்கை நெறி குன்றாமல் கொண்டாட வேண்டுமென்று, குற்றால அருவியென தமிழைக் கொட்டி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்ணாவுக்குப் பிறகு எனக்கு வாய்த்த அண்ணனாக; அவர் இருப்பதை எண்ணி யெண்ணி என் பணியில் மேலும் துடிப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும் எனக்கு அவரது வாழ்த்துக் கட்டுரை எத்துணை இன்பத்தை பொழிந்திடக் கூடியது என்பதை எங்கள் இருவரையும் எழுபதாண்டு காலத்திற்கு மேலாக அறிந்துள்ள திராவிடச் செல்வங்களாம் உனக்கும், உன் போன்றார்க்கும் நான் விளக்கி எழுதத் தேவையில்லை.

அவரைப் பெரிதும் மதிக்கும் நான் யார் என்பதையும் - அன்பைப் பொழிந்து என்னை வாழ்த்திடும் அவர் யார் என்பதையும் இருவரும் ஒருவருக்கொருவர் அறிந்தே இருக்கிறோம்.

பெரியார் பாசறையின் மாணவர்களாக - அண்ணாவின் பாடி வீட்டுத் தோழர்களாக - அவரும், நானும் புகழோடு தோன்றிய அந்தக் காலந்தொட்டு - இன்று சூரியனுக்கு ஆதரவு திரட்டி சுயமரியாதை உணர்வின் சூடு தணியாமல் திராவிடத் தமிழர்கள் வாழ வேண்டும் என்ற குறிக்கோள் நிறைவேறிட அமைந்த

பாசறையாம் தி.மு.கழகத்தில்; அதற்கு நீர் பாய்ச்சி வேர் வளர்த்து விழுதுகளும், கிளைகளும் தழைத்தோங்கும் தருணத்தில், அதனைப் பாதுகாக்கும் வேலியின் காவலர்கள் பலர் இருந்தும்; அந்தக் காவலர்கள் வரிசையில் தலைமைக் காவலர்களாக நானும், அவரும் நெடிதுநாள் உழைத்து; அவர் 90வது அகவையையும், நான் 89வது அகவையையும் அடைந்திருக்கிறோம் என்றால்; நாங்கள் இந்த வாழ்க்கையில் இன்பத்தை துய்த்தோம் இல்லை; இல்லற சுகத்தைப் பெரிதென எண்ணிக் கிடந்தோ மில்லை !

சோதனை, வேதனை என்று சுழன்றோடும் வாழ்க்கையில், இயற்கை இழுத்துச் செல்லும் திசையில் சென்றும் - இலட்சிய வெற்றி யடைந்திட வேண்டும் என்ற உறுதி ஒன்றையே உயிராகக்கொண்டு; உழைத்து, களைத்து - இன்றைக்கு உன் போன்றோர் ஊட்டும் உற்சாகத்தால்; கை வண்டியில் நகர்ந்தும் - கம்பு ஊன்றி நடந்தும் - கண்மணி என நாம் போற்றும் கொள்கைகளைக் காத்திடத்தான் இந்த வயதிலும் துடித்துக் கொண்டிருக்கிறோம்.

எங்களுக்குத் துணையாக தளபதிகளும்; தளகர்த்தர்களும்; தானாடாவிடினும் தன் தசை யாடும் என்ற உறவும் உணர்வும் ஒரு சிறிதும் அகலாத "உடன்பிறப்புக்களே" என எப்போது நான் உச்சரிப்பேன் எனத் தவம் கிடக்கும் தன்மானத் தமிழ்த் திராவிடர் பட்டாளமும் - எண்ணிக்கையில் ஐம்பது இலட்சம் பேரை நெருங்குகிற வண்ணம், ஒரு பெரும் கடலாக காட்சி தரும் இந்தக் கழகக் கோட்டையில் தொடர்ந்து 43 ஆண்டுகளுக்கு மேலாக காவல் பணி புரிகிறேன்.

அதற்காக நீ எனக்கு நடத்தவிருக்கும் பிறந்த நாள் விழாவினை நன்றி தெரிவிக்கும் விழாவாக நான் நினைப்பேனே தவிர, எனக்குப் பொருத்தமான விழா ஒன்றை; தேவையான விழா ஒன்றை ; பேராசிரியரும், நீயும், உன் போன்றோரும் எடுத்தீர்கள் என எண்ணி நான் என்னை ஏமாற்றிக் கொள்பவனல்ல என்பதை நீ அறிவாய் அல்லவா?

இன்னும் பெருந்தொண்டு; பெரியார் வழி நடக்கும் தொண்டு! பேரறிஞர் அண்ணாவின் மொழிகளை இதயத்தில் பதித்து, தொடரும் தொண்டு என்ன என்பதை அறிந்து என்றென் றும் இந்த இனம் காக்கும் தலைவர்கள்தான் நம்மை வழி நடத்துகிறார்கள்

என்ற நம்பிக்கையோடு தொடர்ந்து நடைபோடுவாய் எனக் கூறும் இந்த வேளையில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரங்களை, பெரியாரும், அண்ணாவும் நமக்காக உச்சரித்தார்கள் என்று எண்ணுவது மட்டுமல்லாமல்; எதற்காக உச்சரித்தார்கள் என்பதையும் சிந்தித்து தெளிவுபெற வேண்டும். தெளிவு பெற்று நமது இயக்கப் பணியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏற்படும் நெளிவுகளை நிமிர்த்தி; கட்டுப்பாடு போற்றி களங்களில் நாம் காணும் வெற்றிகளுக்கு பின்னரும் கண்ணியம் கவசமாகட்டும்! ஒற்றுமை உரமாகட்டும்! என்றுரைக்கின்றேன்.

தேர்தல் வெற்றிகள் மட்டுமல்ல நமக்கு முக்கியம்! நம் இன ஒற்றுமையை உருவாக்கினோம் எனும் நிலைதான் என்றென்றும் கரிகால்பெருவளத்தான் கட்டிய "கல்லணை" போன்ற உறுதியை நமக்குத் தரவல்லது. இதையெல்லாம் மனத்தில் கொண்டுதான் நமது அமைப்புக்களில் ஏற்படும் கீறல்களையும், பிளவுகளையும் போக்குவதற்கு வழி காண நானும், பொதுச் செயலாளரும், தலைமைக் கழகத்தின் தளகர்த்தர்களும் அமர்ந்து பேசி மாவட்டந்தோறும் கழகத்தில் கட்டிக் காக்கப்படும் ஒற்றுமை, சுட்டிக்காட்டப்படும் வேற்றுமை இவற்றையெல்லாம் கணக்கிட்டு - இவற்றுக்கோர் இறுதி முடிவு காணக் குழு ஒன்றினை; தலைமைக் கழகச் சார்பில் நியமித்தோம். அந்தக் குழுவினர் நாம் குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று, நிலைமைகளை ஆராய்ந்து, ஒரு தரப்பு புகார்களை மட்டும் கணக்கில் கொள்ளாமல், இரு தரப்பு நியாயங்களையும் எடுத்து விளக்கிடும் அறிக்கை ஒன்றை தலைமைக்கு தந்துள்ளார்கள். அந்த அறிக்கைத் தொகுப்பைக் காணும் நேரத்தில் அண்ணா பெயரால் வெளியிடப்பட்டிருந்த நூல் ஒன்று எனக்குக் கிட்டியது.

"குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை" என்று மதுரை மாநில மாநாட்டையொட்டி, அண்ணா எழுதிய அருமையான எழுத்தோவியம் அது. "குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை" என்று அண்ணா சொல்லிய அந்த வாசகத்தை துணைக்கு வைத்துக்கொண்டு குழுவினர் கொண்டு வந்து தந்த அறிக்கைத் தொகுப்பை நானும் பேராசிரியரும் பார்வையிட்டோம்.

கட்டுப்பாடு மீறியோர் என்ற தலைப்பில் இடம் பெற்றிருந்தோரும்; அவர்களின் பெயர்கள் அறிக்கையிலே இடம் பெற்றிருப்பதை அறிந்து, தெரிந்து, தாம் இழைத்தது குற்றம்தான்

எனத் தெளிந்து; என்னையும், பேராசிரியரையும் மற்றும் தலைமைக் கழகத்தினரையும் தொடர்பு கொண்டு "பிழை பொறுத்தருள்க" என்றும் கேட்கிறார்கள். "இனி பிழை நேராது" என்ற உறுதியும் அளிக்கிறார்கள். பிழை புரிந்தோர் யாரென்ற பட்டியலையும் பார்க்கின்றோம். இனி அப்பிழை நேராது என்று குற்றத்தை ஒப்புக் கொண்டு தொடர்ந்து நமது கொடியின் கீழ் நின்று; தொண்டு புரிய துடிப்பவர்களையும் காணுகின்றோம். இவர்களில் யார் பிழை புரிந்தோர் - யார் மீது வீண் பழி என்பதை ஆராய்ந்து அளவிட்டுத் தீர்ப்புச் சொல்ல நிலைமையும் இடம் தராது; நேரமும் போதாது!

இலட்சக்கணக்கில் உறுப்பினராய் இருப்போரில் புகார்களுக்கு ஆட்பட்டோர் தொகை; அப்படி ஒன்றும் அளவிடற்கரியதல்ல! விரல் விட்டு எண்ணக் கூடிய அளவிலே உள்ளதுதான்! கட்டுப்பாட்டுக்குப் பெயர்போன பெரியாரின் நிழலில் வளர்ந்த நாம் "குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை" என்ற அண்ணா வின் பொன்மொழியையும் தள்ளி விடுவதற்கில்லை.

புகாருக்கு உரியவர்கள் மீது நடவடிக்கை என்கிறபோது; அந்தப் புகார்களைக் கொடுத்தவர்கள் மீதும் புகார் இருப்பதை நாங்கள் அறியாமல் இல்லை. இதற்குத் தீர்வு என்ன? "குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை" என்ற அண்ணாவின் பொன்மொழிதான் நமக்குத் தற்காலிகத் தீர்வு!

அப்படியென்றால் கழகத்திற்குத் துரோகம் புரிந்தோர், கழகத்தின் வெற்றிக்கு முட்டுக் கட்டையிட்டோர் - தலைமைக் கழகத்தின் தண்டனைக்கு உள்ளாக மாட்டார்களா; எனக் கேட்கலாம்! தண்டனையைவிட மேலான கண்டனத்திற்கு உள்ளாவார்கள் என்பதும், எதிர்காலத்தில் எச்சரிக்கையுடன் கவனிக்கப்படுவார்கள் என்பதும் நான் அளிக்கும் உறுதியான வாக்குறுதியென தம்பிமார்கள் நம்பிடுவார்களாக!

தவறிழைத்தோரைப் புரிந்து கொண்டோம் என்பதும்; கழகத்திற்குத் துரோகம் இழைத்தோர் திருந்தக் கூடும் என்ற நம்பிக்கையும் தான் - இதற்கு மேலும் இந்த இனமான இயக்கத்திற்கு எள்ளளவு இழிவு தேடிட எண்ணுவோர் எவராயினும் "மறப்போம் மன்னிப்போம்" என்றில்லாமல், கழகத்தை இழிமொழிக்கு உள்ளாக்காமல், இறுதிவரை கட்டுப்பாடு காப்போம் என்ற உறுதியை எனது பிறந்த நாள் வாழ்த்துக்களுடன் நானும்

பெறுகிறேன். நீங்களும் பெற்றிடுவீர்!

நமது படைக்கலனாம் இனமானக் கொள்கையையும் - பாசறைகளாம் கழக அமைப்புகளையும் - திராவிட இயக்க நூற்றாண்டு விழா கொண்டாடுகிற இந்த நேரத்தில் மேலும் வலுப்படுத்திடவும் - இங்கே தமிழகத்தில் தன்மான உணர்வு பெருகிடவும் - ஈழத்தில் தனித் தமிழ்நாடு உருவாகிடவும் -

"வஞ்சகர் வந்தவர் தமிழால் செழித்தார்;
வாழ்வினில் உயர்ந்த பின் தமிழையே பழித்தார்"

என்ற புரட்சிக் கவிஞரின் புயல் வரிகளுக்குப் பொருள் புரிந்து போர் முரசம் ஆர்த்திடவும் - நம்மைத் தயார்படுத்திக் கொள்ள சூளுரை ஏற்பதே இந்தச் சுய மரியாதைக்காரனின் பிறந்த நாள் வாழ்த்தாகும் என; என் உயிரினும் மேலான உடன்பிறப்புகளுக்குத் தெரிவித்து வணங்குகிறேன்!

அன்புள்ள,

மு.க.

23-05-2012

3626. மாநில அரசே செயல்படாத நிலையில்...

உடன்பிறப்பே,

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் ஒப்பந்தத் தொழிலாளர்கள் 13 ஆயிரம் பேர், பத்து அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி 21-4-2012 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை குறித்து 8-5-2012 தேதிய "முரசொலி"யில், உடன்பிறப்பு மடலில் நான் எழுதும்போது, "மாநிலத்தில் உள்ள அ.தி.மு.க. அரசு இந்தப் பிரச்சினையிலே அக்கறையின்றி இருந்தாலும், மத்திய அரசும், இந்தத் துறையின் அமைச்சரும் உடனடியாக நெய்வேலி நிர்வாகத்தோடு தொடர்புகொண்டு போராடுகின்ற தொழிலாளர்களின் கோரிக்கைகளை; அழைத்துப்பேசி சுமுக முடிவுகாண முன்வர வேண்டுமென்றும், அதற்கு பிரதமர் அவர்கள் ஆவன செய்திட வேண்டும்" என்றும் கேட்டுக்கொண்டேன்.

பேரவை நடைபெற்றபோது, 3-5-2012 அன்று கேள்வி நேரம் முடிந்ததும், கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் நெய்வேலி தொழிலாளர்கள் பணி நிரந்தரம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர், தொழிலாளர்களின் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர மத்திய அரசு எவ்வித நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை, எனவே மாநில அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர்.

உடனே தமிழக அரசின் தொழிலாளர் நலத் துறை அமைச்சர், திரு. சி.த. செல்லப்பாண்டியன் எழுந்து என்.எல்.சி. தொழிலாளர்களின் போராட்டப் பிரச்சினை தமிழக அரசின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது அல்ல, எனவே அதில் தலையிட முடியாது என்று பதிலளித்தார். (தினமணி 4-5-2012) இதிலே தலையிட முடியாது என்று பேரவையில் பதிலளித்த இதே அமைச்சர், 8-5-2012 அன்று மீண்டும் பேரவையில் என்.எல்.சி., தொழிலாளர்கள் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர

மத்திய அரசின் தொழிலாளர் நல ஆணையம் பேச்சு நடத்தித் தீர்வுகாண வேண்டும். மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.க. இப் பிரச்சினைக்கு தீர்வுகாண வலியுறுத்த வில்லை. என்.எல்.சி., தொழிலாளர்களின் போராட்டத்துக்குத் தீர்வுகாண மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தும் என்றார். (தினமணி 9-5-2012)

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் இந்த ஒப்பந்தத் தொழிலாளர்கள் பிரச்சினை என்பது இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை தொடர்கின்ற ஒன்றாகும். நெய்வேலி நிலக்கரி நிறுவனம் தொடங்கப்பட்ட காலந்தொட்டு பணிபுரிந்து ஒப்பந்தப் பிரச்சினை 1994ஆம் ஆண்டில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் முயற்சியின் காரணமாக ஓரளவு தீர்த்து வைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் தொழில்கூட்டுறவு சேவை சங்கம் தொடங்கப்பட்டு (Neyveli Lignite Corporation Industrial Co-operative Service Society) அதில் 5000 ஒப்பந்தத் தொழிலாளர்கள் பதிவு செய்து, அதன் மூலம் இடைத்தரகர்களை (Contractors) நீக்கி, அவர்களுக்கு கூட்டுறவு சங்கமே ஊதியம் வழங்கி வந்தது. பின்னர் நிர்வாகத்தில் பணி காலியாகும் பொழுதெல்லாம், ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்தி சுமார் 4000 தொழிலாளர்கள் தற்போது நிரந்தரத் தொழிலாளர்களாகப் பணியாற்றி வருகிறார்கள். மீதமுள்ள சுமார் 800 பேர் கூட்டுறவு சங்கத்தில் நிரந்தரப்படுத்தப்படாமல் பணியாற்றி வருகிறார்கள்.

1994க்குப்பின், தொடர்ந்து ஒப்பந்தத் தொழிலாளர்களாக வந்தவர்களை கூட்டுறவு சங்கத்திலே உறுப்பினர்களாக்க நிர்வாகம் தவறிவிட்டதால், மீண்டும் இடைத்தரகர்களின் ஆதிக்கம் தொடர ஆரம்பித்தது. இதனால் 2008ஆம் ஆண்டில் தி.மு.கழக ஆட்சியின் போது போராட்டம் நடைபெற்றது. அப்போதும் 13 ஆயிரம் தொழிலாளர்கள் அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழகத்தில் ஆட்சியிலே இருந்த தி.மு. கழகம் மாநில அரசுக்கு இதிலே அக்கறை இல்லை என்று சொல்லாமல், முதலமைச்சராக இருந்த நானே இந்தப் பிரச்சினையிலே தலையிட்டு 16-6-2008 அன்று தொழிற்சங்கமும், நிர்வாகமும், டெல்லி தலைமை தொழிலாளர் ஆணையர் முன்பாக ஓர் முத்தரப்பு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி ஒப்பந்தத் தொழிலாளர்கள் 5000 பேர்களை கூட்டுறவு சங்கத்தில் பதிவு செய்வது; ஒப்பந்தத்

தொழிலாளர்கள் பெற்றுவந்த ஊதியத்தைவிட, மாதம் ரூ. 750/- உயர்வு தரவும் இசைவு தந்து ஒப்பந்தம் ஏற்பட்டதால் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டு தொழிலாளர்கள் பணிக்குத் திரும்பினர்.

அதன் பின்னர் கூட்டுறவு சங்கத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்களை பதிவு செய்வதில் நிர்வாகம் கால தாமதம் செய்ததால், 2010ஆம் ஆண்டு மீண்டும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அப்பொழுதும் தமிழக முதலமைச்சராக இருந்த நான்

15-10-2010 அன்று பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுக்கு கடிதம் எழுதினேன். அதன் பின்னர் நிர்வாகத்தை அழைத்துப்பேசி, மாதம் 1,040 ரூபாய் உயர்வாக ஏற்றுக்கொள்ளச் செய்தேன். இதனை தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் தலைவர்கள் மட்டும் ஏற்றுக்கொண்டார்கள். மற்றத் தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். உடனே நான் அழைத்துத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும், 26-10-2010 அன்று தலைமைச் செயலகத்திற்கே அழைத்துப்பேசினேன். அந்தக் கூட்டத்தில் தொ.மு.ச. சார்பில் செ.குப்புசாமி, மு.சண்முகம் மற்றும் வேல்முருகன் எம்.எல்.ஏ., ஒப்பந்தத் தொழிற்சங்கப் பொதுச் செயலாளர் அன்பழகன், ஏ.ஐ.டி.யு.சி., சேகர், குப்புசாமி, வெங்கடேசன், சுகுமாறன், குப்புசாமி, சக்கரபாணி மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். அரசின் சார்பில் துணை முதல்வர் மு.க.ஸ்டாலின், மின் துறை அமைச்சராக இருந்த ஆர்க்காடு வீராசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக இருந்த எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளராக இருந்த மாலதி, ஐ.ஏ.எஸ்., ஆகியோரும் கலந்துகொண்டு பேச்சுவார்த்தை நடத்தி, நிர்வாகத்தையும் சம்மதிக்கவைத்து, உயர்வு ரூ. 1,040 என்பதை ரூ. 1,560 என்ற அளவிற்கு உயர்த்தியும், மேலும் பல சலுகைகளையும் வழங்கச் செய்தேன். இந்த ஒப்பந்தத்தில் அப்போது தொழிலாளர் முன்னேற்றச் சங்கப்பேரவை, பாட்டாளி தொழிற் சங்கம், ஏ.ஐ.டி.யு.சி., சி.ஐ.டி.யூ., ஏ.ஐ.யு.டி.யு.சி., ஏ.டி.பி., ஐ.என்.டி.யு.சி., ஆகிய சங்கங்கள் கையொப்பமிட்டனர். நான் நடத்திய பேச்சுவார்த்தையின் பயனாக தொழிற்சங்கப் பிரதிநிதிகள் திருப்தியடைந்து பணிக்குத் திரும்பினார்கள். எனக்கு நன்றி தெரிவித்தார்கள். இது 2010ஆம் ஆண்டு கழக ஆட்சியில் நடைபெற்றது. ஆனால் இப்போது என்ன நிலைமை?

தற்போது நிர்வாகம் ஒப்பந்தத் தொழிலாளர்களை கூட்டுறவு சேவை சங்கத்தில் பதிவு செய்வதை நீதிமன்ற வழக்குகளைக் காரணம் காட்டி கால தாமதம் செய்து வருகிறது. அதன் காரணமாக தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

இதற்கிடையே 9-5-2012 அன்று கடலூர் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர், நண்பர் கே.எஸ்.அழகிரி மத்திய நிலக்கரித்துறை அமைச்சரைச் சந்தித்து, தொழிற்சங்க நிர்வாகிகளிடம், நிறுவனத் தலைவரே பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். தி.மு.கழக ஆட்சியில், நெய்வேலி தொழிலாளர்களின் பிரச்சினைக்காக நானே தலையிட்டு முயற்சி எடுத்தவாறு, தற்போது எடுக்கா விட்டாலும் 10-5-2012 அன்று கடலூர் மாவட்ட ஆட்சியர் தலைமையில் முத்தரப்பு பேச்சு வார்த்தை என்.எல்.சி. பயிற்சி வளாகத்திலே நடந்தது. நான்கு சுற்றுப் பேச்சுவார்த்தை நடந்தும் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட வில்லை.

நெய்வேலி ஒப்பந்தத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர, மத்திய அரசு தலையிட வேண்டும் என்று மக்களவையில் தி.மு.கழக நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் தம்பி டி.ஆர். பாலு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்து பேசியிருக்கிறார். என்.எல்.சி. ஒப்பந்தத் தொழிலாளர்கள் நடத்தி வரும் போராட்டம் 30 நாட்களைத் தாண்டிவிட்டது. 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நெய்வேலி ஒப்பந்தத் தொழிலாளர்கள் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்தப் போராட்டம் குறித்து, என்.எல்.சி. நிர்வாகமும், மத்திய அரசும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், இந்தப் போராட்டத்தில் மின் உற்பத்தி 2,490 மெகாவாட்டாக இருந்தது, தற்போது 1,690 மெகாவாட்டாக குறைந்துள்ளது என்றும் டி.ஆர்.பாலு மக்களவையிலே பேசியிருக்கிறார். மாநிலங்களவையிலும் இதே பிரச்சினைக்காக தம்பி திருச்சி என்.சிவா வலியுறுத்தியிருக்கிறார். அவர் பேசியவுடன் அந்தப் பிரச்சினையில் தாங்களும் இணைந்து கொள்வதாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் து.ராஜா, மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் தபன்குமார் சென், கழக உறுப்பினர்கள் வசந்திஸ்டான்லி, அ.அ. ஜின்னா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

நெய்வேலியில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாததைத் தொடர்ந்து கடந்த 15ஆம் தேதியிலிருந்து சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகத் தலைமை ஆணையர் அலுவலகத்தில் முத்தரப்பு பேச்சு வார்த்தை நடந்தபோதிலும், உடன்பாடு ஏற்படவில்லை. தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்வது தொடர்பாக உச்சநீதி மன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை விரைந்து முடிக்க என்.எல்.சி. நிர்வாகம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று அப்போது கூறப்பட்டுள்ளது.

தி.மு. கழக ஆட்சியில் நெய்வேலி ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தியபோது எத்தகைய நடைமுறை மேற்கொள்ளப்பட்டது என்பதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். ஆனால் இப்போது என்ன நிலைமை? தமிழக அரசு என்று ஒன்று இருக்கிறதா? ஆனால் அவர்கள் மத்தியில் ஒரு அரசு இருப்பதாகவே தெரியவில்லை என்று குறை கூறுகிறார்கள். அதிகாரிகள் மட்டத்தில் ஏதோ பேச்சுவார்த்தை நாள் கணக்கில் நடக்கிறதே தவிர, முதல் அமைச்சரோ, அமைச்சரோ இதிலே ஏன் தலையிடவில்லை? தொழிற்சங்கத் தலைவர்களை முதல் அமைச்சரோ, அமைச்சரோ அழைத்துப் பேசியிருக்க வேண்டாமா? ஏன் பேச வில்லை? எங்கே பத்திரிகைகள் இதைப் பற்றி எழுதி விடுவார்களோ என்பதற்காக அவர்களின் வாயை அடைக்க முழுப்பக்க விளம்பரங்கள் மக்கள் கொடுத்த வரிப் பணத்தில் அன்றாடம் வாரி வாரி வழங்கப்படுகிறது.

நான் தொழிலாளர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் வேலை நிறுத்தம் செய்வதையெண்ணி கவலைப்பட்டு துடி துடித்துப் போகின்ற அரசு அல்ல தற்போது நடப்பது! உங்கள் வேலை நிறுத்தம் தொடருமேயானால், உங்கள் குடும்பத்தினர்தான் பாதிக்கப்படுவார்கள். வேலை நிறுத்தம் தொடருமேயானால் மின் உற்பத்தியும் மேலும் பாதிக்கப் படக்கூடும். இதையெல்லாம் எண்ணிப் பார்த்து, விரைவில் உங்கள் போராட்டத்தை முடித்துக்கொண்டு மீண்டும் பணியிலே தொடருவதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாநிலத்தில் அரசே இல்லாத நிலையில் மத்தியிலே ஆளுகின்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாவது; **இந்தப் பிரச்சினையிலே மேலும் கால தாமதம் செய்யாமல், அலட்சியம்**

இல்லாமல், உடனடியாக நிர்வாகத்தினரை அழைத்துப்பேசி தொழிலாளர்களோடு பேச்சுவார்த்தை நடத்துவதில் சுமுக முடிவுகாண முன்வர வேண்டுமென்று அந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் உள்ள கட்சிகளில் ஒரு கட்சியின் தலைவன் என்ற முறையிலே மீண்டும் ஒருமுறை வற்புறுத்தி வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அன்புள்ள,

மு.க.

25-5-2012

3627. தாமதமின்றி - தக்கதோர் முடிவு காண்பீர்!

உடன்பிறப்பே,

மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் அங்கம் வகிக்கின்ற கட்சிகள் என்ற பட்டியலில் தி.மு.கழகம் மட்டுமல்ல; திரு.சரத் பவார் தலைமை வகிக்கும் தேசியவாத காங்கிரசும், செல்வி மம்தா பானர்ஜி தலைமை வகிக்கும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியும், திரு. பரூக் அப்துல்லா தலைமையில் இயங்கும் தேசிய மாநாடு கட்சியும், வேறு சில கட்சிகளும் சேர்ந்து, பெரும்பான்மையான காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு அளித்து மத்தியில் ஆட்சி நடைபெறுகிறது. அந்த ஆட்சியில் இடம் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சியின் தோழமைக் கட்சிகள் எல்லாம் தற்போது மத்திய அரசு செய்துள்ள பெட்ரோல் விலை உயர்வை ஏற்றுக் கொள்ளவில்லை. இன்னும் சொல்லப்போனால் ஒருசில தோழமைக் கட்சிகள் தனித்தனியாக போராட்டங்களையே அறிவித்துள்ளன. திரிணாமுல் காங்கிரஸ் கட்சி இன்றைய தினம் மம்தா பானர்ஜி, முதலமைச்சராக இருக்கும் நிலையில், மத்திய அரசிலும் அங்கம் வகிக்கும் நிலையில் அவர்களே தலைமையேற்று பெட்ரோல் விலைக்கு எதிராக பேரணி ஒன்றை நடத்துகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரும் 30ஆம் தேதி மத்திய, மாநில அரசு அலுவலகங்கள் முன்னால் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தவிருக்கிறோம். அது பற்றிக்கூட செய்தியாளர்கள் சிலர் என்னிடம் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.க., கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தலாமா என்று கேட்டார்கள். மக்கள் நலன்களைப் புறந்தள்ளும் எந்த அரசும் செயல்பட முடியாது என்று நான் அவர்களுக்கு அப்போது பதில் அளித்தேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் மத்தியில் எந்தக் கட்சியோடு தோழமை பூண்டு மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றாலும் அப்போது "குறைந்த பட்சத் திட்டங்கள்" (Common Minimum

Programme) என்ற பெயரால் நாட்டு மக்களின் நலன்களையே முதன்மையாகக்கொண்டு ஆட்சி செய்வதென்று உறுதிமொழி கொடுத்துத்தான் ஆட்சியிலே பங்கேற்று இருக்கிறோம். மத்தியில் ஆளுகின்ற பொறுப்பையேற்றுள்ள கட்சி எடுக்கும் அத்தனை முடிவுகளையும் ஏற்றுக் கொள்வதாக இருந்தால், தோழமைக் கட்சி என்று ஒன்றே தேவையில்லையே, அதற்கு அந்தக் கட்சியிலேயே இணைந்து கொள்ளலாமே! அதே நேரத்தில் மத்தியில் ஆளும் கட்சியோடு தோழமையாகச் சேர்ந்து அங்கம் வகிக்கின்ற நிலையில் மத்திய அரசு எடுக்கின்ற ஒவ்வொரு முடிவுகளையும் எங்களைக் கேட்டுக் கொண்டுதான் செய்ய வேண்டுமென்ற அளவிற்கு தொந்தரவு செய்வதும் தோழமைக் கட்சிகளுக்கு அழகல்ல; நிர்வாகத்தில் ஒரு தேக்க நிலையையும் அது உருவாக்கிவிடும். அதே நேரத்தில் பெட்ரோல் விலை உயர்வு போன்ற காரியங்களில் தோழமைக் கட்சி என்ற உணர்வோடு நாட்டு மக்களின் உள்ளத்தில் இருப்பதை மத்திய அரசுக்குத் தெரிவிப்பது எங்களது கடமை என்ற உணர்வோடுதான் செயல்படுகிறோம்.

இதில் கம்யூனிஸ்ட் கட்சிகளின் மாநிலச் செயலாளர்களான தோழர்கள் ஜி. ராமகிருஷ்ணனும், தா.பாண்டியனும் மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.கழகத்தைக் குறை கூறுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது என்று எண்ணு கிறார்கள். பெட்ரோல் விலை உயர்வைக் காரணமாகச் சொல்லி, மத்திய அரசுக்கு அளிக்கும் ஆதரவை தி.மு.க. வாபஸ் பெற வேண்டும் என்றே தா.பாண்டியன் சொல்லியிருக்கிறார். இந்த இரண்டு கட்சிகளும் 2011ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழகச் சட்டமன்றப் பொதுத்தேர்தலின்போது அ.தி.மு.க. வுடன் சேர்ந்து கூட்டணி அமைத்து, தேர்தல் பிரச்சாரம் செய்து, அ.தி.மு.க.வை தமிழகத்திலே ஆளுங்கட்சியாக ஆக்குவதற்கான பெரு முயற்சியிலே ஈடுபட்டன.

ஆனால் ஆட்சியிலே அமர்ந்த பிறகு, அ.தி.மு.க. அரசு பால் விலையை உயர்த்தியது; பேருந்து கட்டணத்தை உயர்த் தியது; மின் கட்டணத்தை எப்போதும் இல்லாத அளவிற்கு உயர்த்தியது, விலைவாசி உயர காரணமாக அமைந்தது. இந்தக் கொடுமைகளையெல்லாம் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் அ.தி.மு.க. வின் தோழமைக் கட்சிகள் என்பதற்காக கண்டிக்காமல் இல்லை. நீங்கள் எங்களைக் கலந்து கொள்ளாமல் விலை

உயர்வைச் செய்த காரணத்தால், நாங்கள் உங்களை எதிர்க்க மாட்டோம் என்றோ, தோழமையிலிருந்து விலகிவிடுவோம் என்றோ அறிவித்துவிடவில்லை. முதலமைச்சர் பேரவையில் வெளியிடுகின்ற ஒவ்வொரு அறிவிப்பையும் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் போட்டி போட்டுக் கொண்டு பாராட்டிய நிலையில்தான் அ.தி.மு.க. ஆட்சி செய்கின்ற தவறுகளையும் தோழமையாக இருந்து கொண்டே கண்டிக்கச் செய்தார்கள். ஆனால் ஆளுகின்ற முதலமைச்சர் தான் ஒரே பிடிவாதமாக இருந்து தான் உயர்த்தியது உயர்த்தியதுதான், தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்தான் என்று கடுமையாக இருந்து, தோழமைக் கட்சிகளின் வேண்டுகோள்களையும் ஏற்க மறுத்தார். இன்னும் கூற வேண்டுமேயானால், அ.தி.மு.க.வின் மிக நெருங்கிய தோழமைக் கட்சி என்ற அளவில் தா. பாண்டியன் தலைமையிலான இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இருந்த போதிலும், ஜின் 12ஆம் தேதி நடைபெறவுள்ள புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில், ஏற்கனவே அந்தத் தொகுதியில் அ.தி.மு.க. கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு மறைந்தது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் என்றபோதிலும், ஒரு மரியாதைக்காகக்கூட, கூட்டணி நாகரிகம் கருதி, அந்தக் கட்சியை அழைத்துப் பேசாமல், தன்னிச்சையாக தாங்களாகவே தேர்தல் தேதி அறிவிப்பதற்கு முன்பாகவே, அ.தி.மு.க. அங்கே நிற்குமென்றும், வேட்பாளர் யார் என்றும் அறிவித்துவிட்டது. உடனே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வெகுண்டெழுந்து இனி அ.தி.மு.க.வோடு எங்களுக்குத் தோழமையே இல்லை என்று அறிவித்துவிட வில்லையே! மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அங்கே பொதுவேட்பாளராக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் களையே நிறுத்தலாம், தாங்கள் ஆதரவு தரத் தயார் என்று சொன்ன பிறகும், அதனை காதிலேயே வாங்கிக் கொள்ளாமல், தாங்கள் அங்கே போட்டியிடவே போவதில்லை என்று "ஜகா" வாங்கிய தா. பாண்டியன், தி.மு.க.வை மத்திய அரசிலிருந்து விலக வேண்டுமென்று யோசனை கூறுவது சரிதானா என்பதை அவரே சிந்திக்கட்டும்.

இதேபோல இந்த விலை உயர்வு குறித்து தி.மு.கழகம் எதிர்ப்பதற்கு தகுதி இல்லை யென்றும், நீலிக்கண்ணீர் வடிப்பதாகவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்திருக்

கிறது. ஆனால் இதே மார்க்சிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத்து, எடுத்துச் சொல்லியும்கூட, மக்கள் நலப் பணியாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்வது பற்றியும், பஸ் கட்டணத்தைக் குறைப்பது பற்றியும் ஜெயலலிதா அரசு வாய் திறக்கவில்லை என்பதற்காக அந்தக் கட்சியினர் எதிர்த்து குரல் எழுப்பாமல் இருந்து விட்டார்களா என்பதை அவர்களே சிந்திக்கட்டும்.

பெட்ரோல் விலை உயர்வுப் பிரச்சினையில் எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல, தோழமைக் கட்சிகள் மட்டுமல்ல, மத்தியில் ஆளும் காங்கிரஸ் கட்சியிலே உள்ளவர்கள் அனைவரும் கூட ஏற்றுக் கொள்கின்ற முடிவு அல்ல. காங்கிரஸ் கட்சியின் சார்பில் நேற்றைய தினம் வந்த செய்தியிலேகூட பெட்ரோல் விலை உயர்வினை அரசு மறுபரிசீலனை செய்ய உள்ளதாக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மத்திய அமைச்சர் நண்பர் நாராயணசாமி அவர்களே தெரிவித்தார். துறையின் அமைச்சர் வெளிநாட்டிலே இருப்பதாகவும், பிரதமர் அவரை உடனடியாக தலைநகரத்திற்கு இந்தப் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக வரச் சொல்லியிருப்பதாகவும், எனவே முடிவிலே மாற்றம் வரலாம் என்றும் தெரிவித்திருக்கிறார். ஆனால் அந்த அறிவிப்பின்படி மத்திய அமைச்சர் திரு.ஜெய்பால் ரெட்டி அவர்கள் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில், "பெட்ரோல் விலையை உயர்த்தும் முடிவை எண்ணெய் நிறுவனங்கள் எடுத்துள்ளன. அதேநேரத்தில் இந்த முடிவால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. மக்கள் உணர்வுக்கு மாறாக அரசால் செயல்பட முடியாது. சர்வதேச நிலைமைக்கு ஏற்ப எடுக்கப்பட்டுள்ள எண்ணெய் நிறுவனங்களின் இந்த விலை உயர்வு விரும்பத்தக்கதோ அல்லது மகிழ்ச்சி அளிக்கும் முடிவோ அல்ல. சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்வு நிலையான ஒன்றல்ல. அவ்வப்போது மாறுதலுக்கு உட்பட்டது. எனவே தற்போது உயர்த்தப்பட்டுள்ள பெட்ரோல் விலை உயர்வை வாபஸ் பெறுவது பற்றி மத்திய அரசு ஒரு முடிவை எடுப்பதற்கு முன்பாக சில நாட்கள் பொறுமையுடன் காத்திருந்து நிலைமையை உன்னிப்பாக கவனிக்க வேண்டியுள்ளது" என்று கூறியிருக்கிறார். ஆனால் இந்தப் பதிலையே சில ஏடுகள் ஜெய்பால் ரெட்டி பெட்ரோல் விலை உயர்வைக் குறைக்க மறுத்துவிட்டார் என்று செய்தி வெளியிட்டுள்ளன. அந்த ஏடுகளைப் படிக்கும் பொதுமக்கள், கடந்த 2011ஆம் ஆண்டில் மட்டும் நான்கு முறை பெட்ரோல் விலை உயர்த்தப்பட்டதையும் - இந்த முறை முன்

எப்போதும் இல்லாத அளவுக்கு ஒரேயடியாக ரூபாய் 7.50 லிட்டர் ஒன்றுக்கு உயர்த்தப்பட்டதையும் எண்ணி மிகுந்த குழப்பத்தில் ஆழ்ந்திருக் கிறார்கள்.

ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு எட்டு ரூபாயும், ஒரு லிட்டர் டீசலுக்கு ரூ. 13.64ம், நட்டம் ஏற்படுவதாக எண்ணெய் நிறுவனங்கள் கூறுவதாலும்; ரூபாயின் மதிப்பு வரலாறு காணாத அளவுக்கு மிகவும் சரிந்து விட்டதால், வெளிநாடுகளிலிருந்து கச்சா எண்ணெய் வாங்க மத்திய எண்ணெய் நிறுவனங்கள் செலவிடும் டாலரின் அளவு அதிகரித்து விட்டதாலும்; பெட்ரோல் விலை உயர்வு லிட்டர் ஒன்றுக்கு தற்போது ரூ. 7.50 என உயர்த்தப் பட்டுள்ள நிலையில்; மற்ற நாடுகளில் இதே பெட்ரோல் விலை என்று பார்த்தால் பாகிஸ்தானில் ஒரு லிட்டர் பெட்ரோல் 59 ரூபாய்க்கு விற்கப் படுகிறது. சீனாவில் ஒரு லிட்டர் பெட்ரோல் 37 ரூபாய்க்கும், வங்காள தேசத்தில் ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ. 43.40க்கும், அமெரிக்காவில் ரூ.61.70க்கும் விற்கப்படுவதாக ஏடுகளில் செய்தி வந்திருப்பதையும் கவனித்தால், இந்தியாவில் ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ. 78 என்று விற்பது முறைதானா என்பதை மத்திய அரசு எண்ணிப் பார்த்திட முன் வர வேண்டும்.

நாடு முழுவதும் மிகக் கொந்தளிப்பாக உள்ள நிலைமைகளை மத்திய அரசிலே உள்ளவர்கள் புரிந்துகொண்டு, தாங்கள் எடுத்த முடிவிலே உறுதியாக இருப்போம் என்றெல்லாம் பிடிவாதம் பிடிக்காமல், விட்டுக்கொடுத்து, மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க முன் வருவதுதான் மக்கள் நலச் சர்க்காரின் கடமை என்ற அளவில் ஒன்றிரண்டு நாட்களில் தற்போது செய்யப்பட்டுள்ள பெட்ரோல் விலை உயர்வை, அப்படியே ரத்து செய்ய இயலாவிட்டாலும், பெருமளவுக்குக் குறைத்து, நல்லதோர் சுமுக முடிவு காண முன்வர வேண்டுமென்று ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் அங்கம் வகிப்பவர்களில் நானும் ஒருவன் என்ற முறையில் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் தமிழக அரசும் ஏற்கனவே கழக அரசில் செய்ததைப்போல பெட்ரோல் விலை உயர்வில் விதிக்கின்ற விற்பனை வரியைக் குறைத்துக் கொள்வோம் என்ற உறுதியினை மக்களுக்குத் தெரிவிக்க முன் வர வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை மத்திய, மாநில அரசுகள்

ஏற்று அறிவிக்க வலியுறுத்திடும் வகையில், தி.மு.கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ள 30ஆம் தேதிக்கான கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மாவட்டக் கழகச் செயலாளர்களும், முன்னணியினரும் செய்ய வேண்டுமென்றும், அந்த ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடிக்க கழகத் தோழர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

27-5-2012

3628. அலைகடலென ஆர்த்தெழுவோம்!

உடன்பிறப்பே,

மத்திய அரசு பெட்ரோல் விலையை லிட்டர் ஒன்றுக்கு ரூ. 7.50 உயர்த்தியிருக்கிறது. மாநில அரசு பால் விலையை உயர்த்தியிருக்கிறது; பேருந்துக் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறது; மின் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறது.

மத்திய, மாநில அரசுகளின் இந்த நடவடிக்கைகளைக் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாளை 30-5-2012 அன்று மாவட்டத் தலைநகரங்களில் கண்டன ஆர்ப் பாட்டங்கள் நடைபெறவுள்ளன. அதிலே நீயும், உன் போன்ற உடன்பிறப்புகளும் கலந்து கொண்டு நமது உணர்வினை மத்திய, மாநில அரசுகளுக்குத் தெரிவிக்கவிருக்கிறோம். அதற்கான ஆயத்தப் பணிகளில் நீங்கள் இந்நேரம் ஈடுபட்டிருப்பீர்கள் என்பதை நான் நன்கறிவேன்.

இந்தியாவில் உள்ள அனைத்து மாநில மக்களும் மத்திய அரசின் பெட்ரோல் விலை உயர்வுக்காக மட்டும் போராட்டங்களில் ஈடுபட்டிருக்கின்ற நிலையில்; நாம் மாத்திரம் தான் மத்திய, மாநில அரசுகளின் விலை உயர்வு நடவடிக்கைகளைக் கண்டித்துப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். மத்திய அரசாவது பெட்ரோல் விலையை உயர்த்தும் முடிவை எண்ணெய் நிறுவனங்கள் எடுத்துள்ளன, அதே நேரத்தில் இந்த முடிவால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளையும் கருத்தில்கொள்ள வேண்டியுள்ளது, மக்கள் உணர்வுக்கு மாறாக அரசால் செயல்பட முடியாது, சர்வதேச நிலைமைக்கேற்ப எடுக்கப்பட்டுள்ள எண்ணெய் நிறுவனங்களின் இந்த விலை உயர்வு விரும்பத்தக்கதோ அல்லது மகிழ்ச்சிஅளிக்கும் முடிவோ அல்ல; சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்வு நியாயமான ஒன்றல்ல, அவ்வப்போது மாறுதலுக்கு உட்பட்டது, எனவே தற்போது உயர்த்தப்பட்டுள்ள பெட்ரோல் விலை

உயர்வை வாபஸ் பெறுவது பற்றி மத்திய அரசு ஒரு முடிவை எடுப்பதற்கு முன்பாக சில நாட்கள் பொறுமையுடன் காத்திருந்து நிலைமையை உன்னிப்பாக கவனிக்க வேண்டியுள்ளது என்று நம்பிக்கையைத் தெரிவித்துள்ளது. ஆனால் தமிழக அரசோ பால் விலை உயர்வையோ, பேருந்துக் கட்டண உயர்வையோ, மின் கட்டண உயர்வையோ திரும்பப்பெறும் எண்ணத்திலேயே இல்லை. ஏனென்றால் இவர்கள் மக்களுக்குப் பயந்தவர்கள் அல்ல, எதிர்க்கட்சிகளுக்கும் பயந்தவர்கள் அல்ல, ஏன் தோழமைக் கட்சி களையே தூக்கி எறியக் கூடிய அளவுக்கு பெரும்பான்மையாக பேரவையிலே இருக்கிறார்கள்.

பெட்ரோல் விலை உயர்வுக்கு எண்ணெய் நிறுவனங்கள் எடுத்த முடிவுதான் காரணம் என்றும், உலகச் சந்தையில் ஏறிவரும் விலை உயர்வு மற்றும் டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு வீழ்ச்சியடைந்துள்ளதால், எண்ணெய் நிறுவனங்களுக்கு அரசாங்கம் தரும் மானியம் உயர்ந்து வருகிறது என்றும், அதனைத் தொடர இயலா தென்றும், எனவேதான் பெட்ரோல் விலை உயர்வு என்றும் மத்திய அரசின் சார்பில் கூறப்பட்டாலும், பெட்ரோலுக்கு அரசு தரும் மானியத்தை விட வரிகள் மூலம் மிக அதிகமாக மத்திய, மாநில அரசுகள் வருவாயைப் பெறுகின்றன. உதாரணமாக 2010-2011ஆம் ஆண்டில் மத்திய அரசு பெட்ரோலுக்காக மானியமாக தந்த தொகை நாற்பதாயிரம் கோடி ரூபாய். அதே நேரத்தில் பெட்ரோல் விற்பனையில் வரிகள் மூலமாக அரசு பெற்ற வருவாய் ஒரு லட்சத்து 36 ஆயிரம் கோடி ரூபாய். அதாவது அரசு பெற்ற நிகர வருமானம் 96 ஆயிரம் கோடி ரூபாய். "பெட்ரோல் விலையில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் வரிகள் மட்டும் 46 சதவிகிதம்; அதாவது மத்திய அரசுக்கு எக்சைஸ் வரி 25 சதவிகிதம்; இறக்குமதி வரி 4 சதவிகிதம்; மாநிலங்களின் வாட் வரி 17 சதவிகிதம் என மொத்தம் 46 சதவிகிதம் வரியாக மத்திய, மாநில அரசுகளால் பெட்ரோல் விலையில் பெறப்படுகின்றன" என்று "தீக்கதிர்" இதழ் கூறுகிறது. தமிழகத்தில் மாநில அரசு பெட்ரோல் மீது வரியாக 27 சதவிகிதம் பெறுகிறது. மத்திய, மாநில அரசுகள் இரண்டுமே தாங்கள் பெறுகின்ற இந்த வரி விகிதத்திலிருந்து கணிசமாகக் குறைத்துக் கொண்டாலே, பெட்ரோல் விலை உயர்வு பொதுமக்களைப் பாதிக்காத அளவிற்குச் செய்ய முடியும். எனவே மத்திய, மாநில அரசுகள், அவர்களும் நம்மோடு சேர்ந்து; வருத்தப்படுவது போலக் காட்டிக் கொள்ளாமல்; தாங்களாக

முன் வந்து, தாங்கள் வசூலிக்கும் வரிகளை பெருமளவிற்குக் குறைத்துக் கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்தத்தான் நாளை நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டம்.

நம்முடைய மாநிலத்தில் என்ன நிலை?

ஜெயலலிதா, ஆட்சிக்கு வந்ததும் வராததுமாக வரவு - செலவு திட்டத்தை அவையிலே வைப்பதற்கு முன்பாகவே தமிழக மக்கள் தலையில் சுமார் 4000 கோடி ரூபாய் அளவிற்கு வரியை சுமத்திவிட்டு; அத்துடன்- பஸ் கட்டண உயர்வு - பால் விலை உயர்வு - மின் கட்டண உயர்வு என்று பல உயர்வுகளை அறிவித்திருக்கிறார். மக்களை பழிவாங்கும் காரியத்தை நடத்திக் கொண்டே, அந்தப் பழியைக் கடந்த கால அரசின் மீதும், மத்திய ஆட்சியின் மீதும் போடுவதற்கு அவர் பகீரதப் பிரயத்தனம் செய்திருக்கிறார். தி.மு.கழகம் ஆட்சியில் இருந்த போது பெட்ரோல் விலையை, டீசல் விலையை மத்திய அரசு உயர்த்தவில்லையா? உயர்த்திக் கொண்டுதான் இருந்தார்கள். இருந்தாலும் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக அந்தச் சுமையையெல்லாம் தமிழக அரசு தாங்கிக் கொண்டு பொதுமக்கள் பாதித்து விடக்கூடாது என்பதற்காக பேருந்து கட்டணத்தை உயர்த்தாமல் பார்த்துக்கொள்ள வில்லையா? ஆவின் கட்டணத்தை அதிகமாக உயராமல் பார்த்துக் கொள்ளவில்லையா?

பேருந்துக் கட்டணங்களைப் பொறுத்த வரையில், சாதாரண புறநகர் பேருந்துகளுக்கு கிலோ மீட்டர் ஒன்றுக்கு 28 பைசா வீதம் வசூலிக்கப்பட்டு வந்த கட்டணத்தை, கிலோ மீட்டர் ஒன்றுக்கு 42 பைசா என்று ஜெயலலிதா உயர்த்தியிருக்கிறார்.

விரைவு மற்றும் செமி-டீலக்ஸ் புறநகர் பேருந்துகளுக்கு கிலோ மீட்டர் ஒன்றுக்கு 32 பைசா வீதம் வசூலிக்கப்பட்டு வந்த கட்டணத்தை ஜெயலலிதா கிலோ மீட்டர் ஒன்றுக்கு 56 பைசா வீதம் வசூலிக்க ஆணையிட்டிருக்கிறார்.

சூப்பர் டீலக்ஸ் மற்றும் சொகுசு புறநகர் பேருந்துகளுக்கு 38 பைசா வீதம் வசூலிக்கப்பட்டு வந்த கட்டணத்தை, 60 பைசா என்று உயர்த்தியிருக்கிறார்.

நகரப் பேருந்துகளைப் பொறுத்தவரையில், சென்னை நீங்கலாக இதரப் பகுதிகளில் குறைந்தபட்சக் கட்டணம் இரண்டு ரூபாய் என்றிருந்ததை, மூன்று ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறார்.

நகரப் பேருந்துகளில் அதிகப்பட்சக் கட்டண மாக 7 ரூபாய் வசூலிக்கப்பட்டு வந்தது. அதை 12 ரூபாய் கட்டணம் என்று நிர்ணயித்திருக்கிறார்.

சென்னை நகரப் பேருந்துகளைப் பொறுத்த வரையில், குறைந்தபட்சக் கட்டணம் 2 ரூபாய் என்பதை 3 ரூபாயாகவும், அதிகப்பட்சக் கட்டணம் 12 ரூபாய் என்பதை 14 ரூபாயாகவும் உயர்த்தியிருக்கிறார்.

முன்பெல்லாம் ரெயில் கட்டணம் அதிகமாகவும், பேருந்துக் கட்டணம் குறைவாகவும் இருக்கும். அதற்காகவே வசதி மிக்கவர்கள் ரெயிலிலும், வசதிக் குறைவானவர்கள் பேருந்துகளிலும் பயணம் செய்வார்கள். ஆனால் தற்போது பேருந்துக் கட்டணங்கள், ரெயில் கட்டணத்தைவிட எந்த அளவிற்கு கூடுதலாக்கப்பட்டுள்ளன என்றால் - திருச்சிக்கு ரெயிலில் இரண்டாம் வகுப்பில் பயணம் செய்ய கட்டணம் 80 ரூபாய்தான். ஆனால் தற்போது ஜெயலலிதா வின் பேருந்தில் பயணம் செய்ய வேண்டுமென்றால் 180 ரூபாய் கட்டணமாகச் செலுத்த வேண்டும். மதுரைக்கு ரெயில் கட்டணம் 108 ரூபாய். ஜெயலலிதாவின் பேருந்துக் கட்டணம் 255 ரூபாய். தஞ்சைக்கு ரெயில் கட்டணம் 84 ரூபாய். ஜெயலலிதாவின் பேருந்துக் கட்டணம் 210 ரூபாய். நெல்லைக்கு ரெயில் கட்டணம் 132 ரூபாய். ஜெயலலிதாவின் நிர்வாகத் திறமை காரணமாக நடைபெறும் பேருந்தில் பயணம் செய்ய வேண்டுமென்றால், அதே நெல்லைக்கு 350 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும்.

2006ஆம் ஆண்டு முதல் 2011 மே திங்கள் வரை நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பேருந்துக் கட்டணம் ஒரு பைசா கூட உயர்த்தப்படவில்லை என்பதையும், ஜெயலலிதா ஏற்கனவே 2006ஆம் ஆண்டுக்கு முன்பு பதவியிலே இருந்தபோது; பேருந்துக் கட்டணத்தை உயர்த்திய பிறகு; தற்போது மீண்டும் அவர் பொறுப்புக்கு வந்த ஒருசில மாதங்களிலேயே பேருந்துக் கட்டணத்தை உயர்த்தி பொதுமக்களை வாடச் செய்திருக்கிறார்.

14-2-2011 அன்று ஜெயலலிதா விடுத்த அறிக்கையில்

“பால் தட்டுப்பாட்டினை உருவாக்கி, தட்டுப்பாடுகளை உருவாக்கும் தறி கெட்ட அரசாக மைனாரிட்டி தி.மு.க. அரசு விளங்குகிறது. பால் உற்பத்தியாளர்களை அழைத்து, பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினையை

முடிவுக்குக் கொண்டு வர வேண்டிய தி.மு.க. அரசு வழிப்பறி கொள்ளையர்களைப்போல நடந்து கொள்கிறது”

என்றெல்லாம் கூறியதற்கு மாறாக, பால் உற்பத்தியாளர்களை அழைத்துப் பேசாமல் தன்னிச்சையாகவே கொள்முதல் விலையையும், விற்பனை விலையையும் உயர்த்தியிருக்கிறார்.

பால் உற்பத்தியாளர்கள் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க கொடுத்துள்ள கோரிக்கை மிகவும் நியாயமானது என்று அறிக்கையிலே ஒப்புக்கொண்டுள்ள ஜெயலலிதா, பசும் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வந்த கொள்முதல் விலையை 18 ரூபாயிலிருந்து 20 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார். எருமைப் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வந்த கொள்முதல் விலையை 26 ரூபாயிலிருந்து 28 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார். அதாவது கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் மட்டுமே உயர்த்தியிருக்கிறார். அதே நேரத்தில் அந்தப் பாலை பொதுமக்களுக்கு விற்கும்போது எந்த அளவிற்கு விற்பனை விலையை உயர்த்தியிருக்கிறார் என்பதையும் மனதிலே கொள்ள வேண்டும்.

அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் சமன்படுத்திய பாலின் விலையை லிட்டர் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வந்த 17 ரூபாய் 75 பைசாவிலிருந்து - 24 ரூபாயாக உயர்த்த முடிவெடுத்திருக்கிறார். அதாவது லிட்டர் ஒன்றுக்கு 6 ரூபாய் 25 பைசா அளவிற்கு ஜெயலலிதா உயர்த்தியிருக்கிறார். மிகவும் அடித்தட்டிலே உள்ள ஏழையெளிய மக்கள் நாள் ஒன்றுக்கு காலையில் ஒரு லிட்டர், மாலையில் ஒரு லிட்டர் பால் வாங்கிக் கொண்டிருப்பார்களானால், இனி அவர்கள் மாதம் ஒன்றுக்கு தங்கள் குடும்ப செலவில் 375 ரூபாய்; பால் ஒன்றுக்காக மட்டுமே அதிகமாக செலவிட வேண்டிய நிலைக்கு - பாவம், அ.தி.மு.க. விற்கு வாக்களித்த ஒரே குற்றத்தின் காரணமாக தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் 1-9-2009 அன்று பசும்பாலின் கொள்முதல் விலையை ரூ. 13.45லிருந்து ரூ. 15.64 ஆகவும், எருமைப் பால் விலையை 18 ரூபாயிலிருந்து 23 ரூபாயாகவும் - அதன் பின் 5-1-2011இல் பசும்பாலின் கொள்முதல் விலையை ரூ. 15.64 லிருந்து ரூ.16.64 ஆகவும், எருமைப் பால் விலையை 23

ரூபாயிலிருந்து ரூ. 25.20 ஆகவும் - 16-2-2011 அன்று பசும்பாலின் கொள்முதல் விலையை ரூ. 16.64லிருந்து 18 ரூபாயாகவும், எருமைப்பால் விலையை ரூ. 25.20லிருந்து 26 ரூபாயாகவும் பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி அதிகப் படுத்திக் கொடுத்தபோதிலும், அதனால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக பாலின் விற்பனை விலை லிட்டர் ரூ. 17.75 என்பதிலிருந்து ஒரு பைசாகூட உயர்த்தவில்லை என்பதும், விலைவாசியை நான் ஆட்சிக்கு வந்தால் குறைப்பேன் என்றும் வானத்தை வில்லாக வளைப்பேன் என்றும் கூறி ஆட்சிக்கு வந்த ஜெயலலிதாதான் ஒரே நேரத்தில் லிட்டர் ஒன்றுக்கு பாலின் விற்பனை விலையை ரூ. 6.25 உயர்த்தியிருக்கிறார்.

2001ஆம் ஆண்டு ஜெயலலிதா முதல் அமைச்சராக வந்தபோது, 1-12-2001 முதல் மின் கட்டணங்களை உயர்த்தினார்.

தி.மு.கழக ஆட்சிக் காலத்தில்; தமிழ்நாடு மின்சார வாரியம், 18-1-2010 அன்று மின் கட்டணத்தை மாற்றி அமைப்பதற்கான மனுவை தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையத்திடம் தாக்கல் செய்தது. அதனை பல்வேறு கட்டங்களில் பரிசீலித்து 31-7-2010 அன்று மின் கட்டண மாற்றங்கள் அறிவிக்கப்பட்டன. அதன்படி இரண்டு மாதங்களுக்கு 600 யூனிட்களுக்கு குறைவாக மின்சாரம் பயன்படுத்தும் வீட்டு மின்நுகர்வோர், குடிசைவாசிகள், விசைத்தறி மின் நுகர்வோர், கைத்தறி மின் நுகர்வோர், பொது வழிபாட்டிடங்கள் மற்றும் வேளாண் மின் நுகர்வோருக்கு எந்தவிதமான மின் கட்டண உயர்வும் செய்யப்படவில்லை.

இரண்டு மாதத்திற்கு 600 யூனிட்களுக்கு மேல் மின்சாரம் பயன்படுத்தும் வீட்டு மின்நுகர்வோருக்குக்கூட யூனிட் ஒன்றுக்கு ஒரு ரூபாய் உயர்த்தப்பட்டது. தொழில் மின் நுகர்வோரில், உயர் அழுத்த வகையினருக்கு யூனிட் ஒன்றுக்கு 50 காசுகளும் மற்றும் தாழ்வழுத்த வகையினருக்கு யூனிட் ஒன்றுக்கு 30 காசுகளும் மின் கட்டணம் உயர்த்தப்பட்டது.

இன்னும் சற்று விளக்கமாக கூற வேண்டுமேயானால், தமிழகத்தில் அப்போது வீடுகளுக்கு மின்சாரம் உபயோகிப்போர் மொத்தம் 149.86 இலட்சம் பேரில் 134.67 இலட்சம் பேருக்கு எந்தவிதமான மின் கட்டண உயர்வும் கழக ஆட்சியில் செய்யப்படவில்லை. 600 யூனிட்டுகளுக்கு மேல் மின்சாரம் பயன்படுத்தும்

3 லட்சத்து 21 ஆயிரம் பேர்களுக்கு மட்டுமே யூனிட் ஒன்றுக்கு ஒரு ரூபாய் என்ற அளவிற்கு கழக ஆட்சியிலே மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டது. ஆனால் அதற்கே அப்போது பா.ம.க. நிறுவனரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி போன்ற வேறு சில கட்சியினரும் கண்டனம் தெரிவித்தார்கள். குறிப்பாக இன்றைய முதலமைச்சர், ஜெயலலிதா அவர்கள் 2-8-2010 அன்று விடுத்த அறிக்கையில்,

> "விலைவாசியைக் குறைக்க நடவடிக்கை எடுக்கச் சொன்னால், விலைவாசியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கிறார் முதல்வர் கருணாநிதி. இரண்டு மாதத்துக்கு 600 யூனிட் மின்சாரத்துக்கு மேல் பயன்படுத்தும் வீடுகளுக்கு மின் கட்டண உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான வீடுகளில் மாதம் 300 யூனிட் மின்சார பயன்பாடு என்பது சர்வ சாதாரணம். மேலும் வாடகை வீடுகளில் குடியிருக்கும் ஏழை எளிய மக்கள் கூடுதல் மின்சார கட்டணத்துக்கு ஆளாக்கப்படுவார்கள். மின் கட்டண உயர்வால் வீட்டு வாடகையும் உயரலாம். தொழிற்சாலைகள், சிறு, குறுந்தொழில்கள், குடிசைத் தொழில்கள், கல்வி நிறுவனங்கள் என எல்லா தரப்புக்கும் மின் கட்டண உயர்வால் கடும் பாதிப்பு ஏற்படும். மின் கட்டண உயர்வால் அத்தியாவசியப் பொருள்களின் விலையும் மேலும் உயரக்கூடும். சாமானிய மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள இந்தக் கூடுதல் சுமையை உடனடியாக நீக்க தி.மு.க. அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்"

என்று என்னை வலியுறுத்திக் கேட்டுக் கொண்ட ஜெயலலிதா, இப்போது அவரே அந்த அறிக்கையினை நினைவுபடுத்திக் கொண்டு ஆவன செய்ய வேண்டும்.

ஜெயலலிதாவின் இந்தப் பொற்கால (?) ஆட்சியிலே, ஆட்சிக்கு வந்த ஓராண்டில் மின் கட்டணத்தை எந்த அளவிற்கு உயர்த்தியிருக்கிறார்கள் என்பதை இந்த மாதம் நீங்கள் ஒவ்வொருவரும் மின் கட்டணம் செலுத்தும் போது அனுபவ பூர்வமாக நேரிலேயே உணர்ந்து கொள்ளலாம்.

மின் கட்டணத்தை உயர்த்தினால் - பேருந்துக் கட்டணங்களை ஏற்றினால் - பால் விலையை உயர்த்தினால் நம்முடைய மக்கள் தானே சிரமப்படுவார்கள் என்றெண்ணி, இவைகளை உயர்த்தாமல் ஐந்தாண்டுகள் ஆட்சி நடத்திய தி.மு.க. ஆட்சி எங்கே?

தற்போது இந்தக் கட்டணங்களையெல்லாம் உயர்த்திவிட்டு, அதற்கெல்லாம் காரணம் கருணாநிதிதான் என்றும், மத்திய அரசுதான் என்றும் பழியைத் தூக்கி மற்றவர்கள் மேல் போடும் ஜெயலலிதா ஆட்சி எங்கே?

இவற்றையெல்லாம் கண்டித்துத்தான் நாளை நாம் நடத்தும் கண்டன ஆர்ப்பாட்டம். அலை கடலென ஆர்த்தெழுவோம்! அங்கே உன்னைச் சந்திக்கின்றேன்!

அன்புள்ள,

மு.க.

29-5-2012

3629. தி.மு.க.வின் மாநில சுயாட்சிக்கு ஜெ. பாடிய பின்பாட்டு!

உடன்பிறப்பே,

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா டெல்லி சென்று திட்டக்குழுக் கூட்டத்தில் மிக வேகமாக உரையாற்றிவிட்டு - மத்திய அரசு மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை அடுக்கி விட்டு - அந்த உரையை ஏடுகளுக்கெல்லாம் வழங்கிவிட்டு - சென்னைக்குத் திரும்பி விட்டார்! டெல்லி செய்தியாளர் ஒருவர் இந்தப் பயணம் பற்றி வெளியிட்ட செய்தியில், "தமிழகத்திற்கான மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டை இறுதி செய்வதற்காக டெல்லி வந்திருந்த முதல்வர் ஜெயலலிதா, மத்திய திட்டக் கமிஷன் மற்றும் மத்திய அரசு மீது, மிகக் கூரிய விமர்சனத்தை சுமத்தினார். தமிழக அரசு சிறப்பு நிதி, கூடுதல் நிதி என, நிறைய கேட்டும், எதையும் தர மத்திய அரசு மறுத்துவிட்டது. தமிழகத்துக்கான திட்ட ஒதுக்கீட்டில் 3,000 கோடி ரூபாய் மட்டுமே மத்திய அரசின் பணம்; மீதியெல்லாம் தமிழகத்தின் சொந்தப் பணம். சென்னையில் இருந்து டெல்லிக்கு வந்து, எங்களது பணத்தை எவ்வாறு செலவு செய்வது என்பதற்கான அனுமதியைப் பெற்றுச் செல்லும் நிலைமை உள்ளது என்று கடுமையாகத் தாக்கிப் பேசியதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது" என்று விளக்கியிருக்கிறார்.

ஜெயலலிதா டெல்லி செல்லும் போதெல்லாம் மத்திய அரசை குறை கூறுவதை தனது வழக்கமாகக் கொண்டிருந்தபோதிலும், திட்டக் குழு பற்றி அவர் கூறியுள்ள கருத்துக்கள்; திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்கள்தான்! கழகம் ஆட்சியிலே இருந்த போதெல்லாம் திட்டக் குழுவிலே நாம் தெரிவித்த கருத்துக்கள்தான்! ஆதாரத்தோடு கூற வேண்டுமேயானால் 36 ஆண்டுகளுக்கு முன்பு தம்பி முரசொலி மாறன் எழுதிய "மாநில சுயாட்சி" நூலில் 14வது அத்தியாயத்தின் தலைப்பே "திட்டக்குழு" என்பதுதான். அந்த அத்தியாயத்தில் சில பகுதிகள் வருமாறு :-

- மத்திய - மாநில உறவிலே ஒரு பெரும்பரபரப்பையும், சச்சரவையும் ஏற்படுத்தியிருப்பது திட்டக்குழு ஆகும்.
- தனது இராட்சச நிதி பலத்தை வைத்துக் கொண்டு மத்திய அரசு மாநில அரசை அடக்கி ஆள்கிறது.
- தேசிய வளர்ச்சிக்குழுவை எப்போது கூட்டலாம் என்பது பற்றிக் கூட முன் கூட்டியே எங்களைக் கலப்பதில்லை; நினைத்த போதெல்லாம் கூட்டுகிறார்கள்
  என்று ஒருமுறை தமிழக முதல்வர் கலைஞர் கூடக் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்.
- திட்டக்குழு செயல்படும் விதம் பாராளுமன்ற ஜனநாயக முறைக்கு எதிராக இருக்கிறது.
- கூட்டாட்சியில் அனைத்து மாநிலங்களும் ஏற்றத் தாழ்வின்றிச் சமமாக நடத்தப்பட வேண்டும்; ஆனால் திட்டக்குழுவோ இதுவரை நியாயமாக நடந்து கொண்டதாக பெயர் வாங்கவேயில்லை.
- வளர்ச்சி அடைந்துவிட்டதாகக் கூறப்படும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களும், பின்தங்கியிருப்பதாகக் கூறப்படும் பீகார் போன்ற மாநிலங்களும் பொருளாதார சுபீட்சம் காண வேண்டுமானால் - அதற்கு

  ஒரே வழி தங்கள் தலைவிதியைத் தாங்களே - மத்திய அரசின் கட்டுப்பாடு அறவே நீங்கி - தீர்மானித்துக் கொள்ளும் மாநில சுயாட்சிதான்!

இந்தக் கருத்துக்களைத்தான் "மாநில சுயாட்சி" என்ற தலைப்பின் கீழ் 1974ஆம் ஆண்டு முதல் தி.மு.கழகம் எதிரொலித்து வருகிறது.

14-3-1974 அன்று நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு பதில் அளிக்கும்போது மத்திய அரசின் உதவி பற்றி சற்று விரிவாகவே பேசியிருக்கிறேன். அதில் ஒரு பகுதி வருமாறு:-

"மத்திய அரசு அல்லது திட்டக் குழு அல்லது நிதிக்குழு ஆகியவை நம்முடைய மாநிலத்திற்கு அநீதி வழங்குகின்ற சூழ்நிலை தென்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுவது அரசுப் பொறுப்பில் இருக்கும் எங்களுடைய கடமையாக இருக்

கிறதே அல்லாமல் வேறல்ல. நிதி ஆணைக் குழுவில் என்ன செய்திருக்கிறார்கள்? ஒரு புதிய தலைப்பு. "நிர்வாகத்தைச் சீரமைத்து மேம்படுத்துவதற்கான மானியம்" (Upgradation Grants) என்பதே அந்த மானியம். அந்தத் தலைப்பில் சில மாநிலங்களுக்கு உதவித் தொகை சிறப்புத்தொகை அளிக்கப்படுகிறது. அதைப்பெற முடியாத மாநிலங்கள் எவை யெவை? தமிழ்நாடு, குஜராத், கேரளம், மராட்டியம் ஆகிய இந்த நான்கு மாநிலங்களும் அந்த மானியத் தொகையைப் பெறமுடியவில்லை. இந்த மாநிலங்களுக்கு கல்வி, மக்கள் நல்வாழ்வுபோன்ற துறைகளில் அதிகச் செலவு செய்திருக்கிறது என்ற ஒரு காரணம் காட்டி இந்த மானியம் தரமறுக்கப்பட்டிருக்கிறது."

10-3-1975 அன்று பேரவையில் நான் பேசும் போது, "மாநில ஆண்டுத் திட்டத்தை மத்திய திட்டக் குழுவோடு கலந்துபேசி முடிவு செய்கிறோம். மத்தியத் திட்டக்குழு மாநில திட்டத்தின் அளவு எந்த அளவில் இருக்க வேண்டும் என்றுதான் குறிப்பிடுகிறது. அதே நேரத்தில் மத்திய அரசிடமிருந்து மொத்தமாகக் கிடைக்கும் உதவியின் அளவையும் குறிப்பிடு கிறது. உங்களுடைய வருவாய் (Resources) என்ன, உங்களுடைய வருவாயை எப்படிப் பெருக்குவீர்கள், வரிகளை அதிக மாக்குவதாலோ அல்லது பல்வேறு வருவாய் இனங்களைப் பெருக்குவதாலோ உங்களுடைய வருவாய் எவ்வளவு இருக்கும் என்றெல்லாம் கேட்டு திட்டத்திற்கு அனுமதி கொடுக்கிறார்கள்.

நாம் 160 கோடி கூட போட்டுக் கொள்ளலாம். நாம் 140 கோடி என்ற அளவுக்கும் இணங்கலாம். ஆனால் அதிலே நாம் 143 கோடி என்று இந்த ஆண்டு இணங்கியிருக்கிறோம் என்றால், அதில் மத்திய அரசு மானியமாகவும், கடனாகவும் வழங்குகிற தொகைதான் மத்திய உதவி. 143 கோடியில் மத்திய அரசு வழங்குகிற மானியம் கடன் உள்பட மொத்தத் தொகை 41 கோடியே 15 லட்சமாகும்" என்று நான் ஏற்கனவே திட்டக்குழு, நிதிக்குழு ஆகியவற்றின் அணுகுமுறை பற்றியும், மத்திய அரசு வழங்கும் மானியம் - கடன் பற்றியும் பேசியிருக்கிறேன்.

முதலமைச்சர் ஜெயலலிதா திட்டக்குழுவில் பேசும்போது, 11வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஏற்கனவே 85,344 கோடிதான் ஒதுக்கப்பட்ட தென்றும் தற்போது 12வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இரண்டு லட்சம் கோடியை எய்துவதற்கு வரையறுக்கப்பட்டுள்ளது

என்றும் கூறி, அது 11வது ஐந்தாண்டுத் திட்டத்தைக் காட்டிலும் இரு மடங்காகும் என்று பெருமைப்பட்டுக் கொண்டுள்ளார்.

தி.மு.கழகம் ஆட்சியிலே இருந்தபோது, பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கீடான ரூபாய் 40 ஆயிரம் கோடியைவிட, இரண்டு மடங்குக்கும் அதிகமாகத்தான் 11வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 85 ஆயிரத்து 344 கோடி ரூபாயாக நிதி ஒதுக்கீடு செய்ய உறுதி செய்யப்பட்டது.

இவ்வாறு ஐந்தாண்டுகளுக்கு ஒதுக்கப்படும் நிதியைத்தான் அடுத்து வருகின்ற ஐந்தாண்டுகளில் மாநிலங்கள் செலவழிக்க பகிர்ந்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதில் கடந்த ஆண்டைவிட, இந்த ஆண்டு திட்ட ஒதுக்கீடு அதிகம் என்றெல்லாம் பெருமைப் பட்டுக் கொள்வதில் பொருள் இல்லை. அத்துடன் இந்த 2012-13ஆம் ஆண்டிற்கு 28 ஆயிரம் கோடி ரூபாய் செலவிட மத்திய திட்டக்குழு ஒப்புதல் அளிக்கிறது என்றால், அது ஏதோ மத்திய அரசோ, திட்டக்குழுவோ மாநிலங்களுக்கு நேரடியாகத் தருகின்ற தொகை என்று அர்த்தம் அல்ல. மாநிலங்கள் அந்த அளவிற்கு அந்த ஆண்டில் செலவழிக்க மத்தியத் திட்டக்குழு ஒப்புதல் அளிக்கிறது அவ்வளவுதான்! இதை நான் ஏற்கனவே பலமுறை சட்டமன்றத்தில் விளக்கியிருக்கிறேன்.

ஐந்தாண்டுகளுக்கு எவ்வளவு ஒதுக்கீடு என்று திட்டக் குழு நிர்ணயிக்கும்போதுகூட, உதாரணமாக 11வது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக கழக ஆட்சிக் காலத்தில் 85 ஆயிரத்து 344 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டபோது, மாநிலத்தின் சொந்த நிதி ஆதாரத்திலிருந்து திரட்டப்படும் நிதியளவு ரூ. 17,498.78 கோடி என்றும், நடுவண் அரசின் நிதி உதவி 15,873.19 கோடி ரூபாய் என்றும், மாநிலம் எழுப்பும் கடன் வழியாக பெறப்படும் நிதி ரூ. 55,708.50 கோடி என்றும், மாநில பொதுத்துறை நிறுவனங்களின் எதிர்மறை பங்களிப்பு ரூ. 5,336.47 கோடி என்றும், உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு ரூ. 1,600 கோடி என்றும் பல இனங்களின் அடிப்படையிலேதான் அமைந்தது. அது போலவே 12வது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக இரண்டு இலட்சம் ரூபாய்க்கான ஒதுக்கீடும் பல இனங்களின் அடிப்படையிலேதான் அமையும். எனவே தமிழ்நாட்டிற்கு திட்ட நிதி ஒதுக்கீடாக மத்திய திட்டக்குழு நிர்ணயித்துள்ள 28 ஆயிரம் கோடி ரூபாயில் வெறும் 3 ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே மத்திய அரசின் ஒதுக்கீடு, எஞ்சிய

25 ஆயிரம் கோடி ரூபாயும் தமிழக அரசின் நிதி என்றெல்லாம் வருத்தப்படுவதோ, குற்றம் சொல்வதோ சரியல்ல. ஒவ்வொரு மாநில திட்ட நிதி ஒதுக்கீடு முழுவதையும் மத்திய அரசே ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றால் அது எப்படி இயலும்? எங்கள் பணத்தைச் செலவிட பாடம் நடத்துகிறது திட்டக் கமிஷன் என்றெல்லாம் முதலமைச்சராக இருப்பவர் அங்கலாய்த்துக் கொள்வது அவ்வளவு நாகரிகமும் அல்ல. ஜெயலலிதாவின் பேச்சுக்கு பதில் அளிக்கும் வகையில் திட்டக் கமிஷன் துணைத் தலைவர் திரு.மான்டேக் சிங் அலுவாலியா அவர்கள், "திட்ட ஒதுக்கீடு தொடர்பான ஆலோசனைகள் மிக முக்கியம். ஏனென்றால் மாநிலங்களின் திட்டங்களுக்கு மத்திய அரசும் நிதி தருகிறது. இந்த ஆலோசனைக் கூட்டம் பணத்தை ஒதுக்குவதற்காக மட்டும் நடத்தப்படவில்லை. பல்வேறு விவகாரங்கள் பற்றி ஆலோசனை நடத்துவதற்கும் பயன்படுகிறது. திட்டங்கள் எப்படி செயல்படுத்தப்படவேண்டும் என்று மத்திய அரசுக்கு மாநிலங்கள் யோசனை கூற இந்தக் கூட்டம் உதவுகிறது. இந்த ஆலோசனை வளர்ச்சிக்கு உதவுகிறது" என்று சொல்லியிருக்கிறார்.

இதைப்பற்றி நான் 7-3-1973 அன்று நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசும்போது, "திட்டக்குழு மாநிலங்களுடைய திட்டச் செலவுக்காக ஒதுக்குகின்ற தொகையில் உதவியாகத் தருவது, கடன் உதவியாகத் தருவது 70 சதவீதம், மானியமாகத் தருவது 30 சதவீதம்தான் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அதிலே நான் சொல்வது இந்த உதவி மானியத்தைப் பொறுத்த வரையில் நிதி ஆணைக் குழுவின் பொதுவான பரிந்துரைப்படி, திட்டக்குழு மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டுமென்பதாகும்" என்று குறிப்பிட்டேன். அதற்குப் பிறகு வந்த நிதி ஆணைக் குழுவின் பரிந்துரைகள் மாறியிருக்கின்றன.

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு திட்ட ஒதுக்கீடு அதிகம் - தி.மு.கழக ஆட்சியில் பெற்ற திட்ட ஒதுக்கீட்டுத் தொகையைவிட தற்போது அதிகத் தொகையை திட்டக் குழு ஒதுக்கியுள்ளது என்றெல்லாம் பெருமைப்பட்டுக் கொள்வதில் எந்தவிதமான பொருத்தமும் இல்லை. ஏனென்றால் திட்டக்குழு ஒவ்வொரு ஆண்டும் திட்ட ஒதுக்கீட்டிற்கான ஒப்புதலைத் தரும்போது, கடந்த ஆண்டு திட்டக் குழு எவ்வளவு தொகை ஒதுக்கீட்டிற்கு

ஒப்புதல் தந்ததோ, அதைவிட அதிகமான தொகையைத்தான் அடுத்த ஆண்டு ஒதுக்கீடாக அறிவிக்கும்.

2006-2007ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு ரூபாய் 12,500 கோடி. 2007-2008ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு ரூபாய் 14 ஆயிரம் கோடி. 2008-2009ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டு மதிப்பீடு ரூபாய் 16 ஆயிரம் கோடி. 2009-2010ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டு மதிப்பீடு ரூபாய் 17 ஆயிரத்து 500 கோடியாகும். 2010-2011ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு 20 ஆயிரத்து 68 கோடி ரூபாய் - அதாவது 2006ஆம் ஆண்டைவிட 2007ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு 1500 கோடி ரூபாய் அதிகம். 2007ஆம் ஆண்டைவிட 2008ஆம் ஆண்டு 2000 கோடி ரூபாய் அதிகம். 2008ஆம் ஆண்டை விட 2009ஆம் ஆண்டு 1500 கோடி ரூபாய் அதிகம். 2009ஆம் ஆண்டைவிட 2010ஆம் ஆண்டு 2,500 கோடி ரூபாய் அதிகம். எனவே திட்ட ஒதுக்கீடு என்பது ஒவ்வொரு ஆண்டும் அதற்கு முந்தைய ஆண்டின் திட்டச் செயல்திறன் அடிப்படையில் படிப்படியாக உயர்ந்து கொண்டுதான் இருந்திருக்கின்றது. தி.மு. கழக ஆட்சியில் திட்ட ஒதுக்கீடு உயரவே இல்லை; அம்மையார் வந்துதான் அரும்பாடு பட்டு இதைச் சாதித்திருக்கிறார் என்பதைப் போல சில ஏடுகள் எழுதியிருப்பதில் நியாயம் எதுவும் இல்லை.

2005-2006இல் அ.தி.மு.க. அரசு தமிழகத்திலே இருந்தபோது அந்த ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு 9,100 கோடி ரூபாய் என்பது அதற்கு முந்தைய ஆண்டான 2004-2005ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடான 8000 கோடி ரூபாயைவிட 1100 கோடி ரூபாய், அதாவது 13.8 சதவிகிதம் கூடுதலாகும். ஆனால் 2006ஆம் ஆண்டு தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு 6-6-2006 அன்று முதலமைச்சராக இருந்த நான், டெல்லி சென்று அப்போதும் மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவராக இருந்த மாண்டேக்சிங் அலுவாலியா அவர்களோடு விவாதித்து தமிழகத்திற்கு அந்த ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீடாகப் பெற்ற தொகை 12,500 கோடி ரூபாய். அதாவது அ.தி.மு.க. ஆட்சியில் அதற்கு முந்தைய ஆண்டு ஒப்புதல் அளித்த 9,100 கோடி ரூபாயை விட 3,400 கோடி ரூபாய் அதிகம். எனவே 2006ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சியில் முதல் ஆண்டிலேயே கூடுதலாகப் பெற்ற தொகை அப்போதே 3400 கோடி ரூபாய் என்பதை மனதிலே

கொண்டால் ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் கடந்த ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியினர் கூடுதலாகப் பெற்றுள்ளது 3400 கோடி ரூபாய் தான் என்பது பெரிய முன்னேற்றம் அல்ல என்பதைப் புரிந்து கொள்ளலாம். சதவிகித அடிப்படையில் கணக்கிட்டால் கூட தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த 2006-2007இல் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு அதற்கு முந்தைய அ.தி.மு.க. ஆட்சியைவிட 37.16 சதவிகிதம் கூடுதலாகும். ஆனால் கடந்த ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியினர்; தி.மு.க. பெற்ற ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டைவிட 17.28 சதவிகித அளவிற்குத்தான் கூடுதலாகப் பெற்றுள்ளார்கள்.

3-5-2010 அன்று கழக ஆட்சியில், திட்டக் குழு விவாதம் நடைபெற்று முடிந்தவுடன், நானும், திட்டக் குழுத் துணைத் தலைவர் திரு.அலுவாலியா அவர்களும் இணைந்தே செய்தியாளர்களைச் சந்தித்தபோது, திரு. அலுவாலியா அவர்கள் செய்தியாளர்களிடம் "இன்றைய தினம் நாங்கள் ஒரு நல்ல சிறப்பான கூட்டத்தை நடத்தினோம். இந்தக் கூட்டத்தில் நன்றாக விரிவான விவாதத்தை நடத்தியிருக்கிறோம். திட்டக்குழு உறுப்பினர்களும் நானும் தமிழக அரசையும் குறிப்பாக முதல் அமைச்சர் அவர்களையும் தமிழ்நாட்டில் மேற்கொண்டு வரும் சிறப்பான திட்டங்களுக்காக வெகுவாகப் பாராட்டினோம். சமுதாய நலத் திட்டங்கள், நீர் மேலாண்மை திட்டங்கள் தமிழகத்தில் சிறப்பாகச் செயல்படுவதைப் பற்றி திட்டக்குழு உறுப்பினர்கள் பாராட்டினார்கள்" என்று கழக அரசின் செயல் திறனைப் பாராட்டிச் சொன்னார்.

முதலமைச்சர் ஜெயலலிதாவின் நேற்றைய டெல்லிப் பயணம் பற்றி "தினமலர்" நாளேடு வர்ணிக்கும்போது, "மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டை இறுதி செய்ய வரும் முதல்வர் எப்போதுமே திட்ட ஒதுக்கீடு எவ்வளவு என்பது பற்றி திட்டக் கமிஷன் அலுவலகத்தில் கமிஷனின் துணைத் தலைவர் உடனிருக்க அறிவிப்பது வழக்கம். ஆனால் நேற்று நிலைமை வேறு மாதிரி இருந்தது. முதல்வரைச் சந்திப்பதற்காக நூற்றுக்கணக்கான பத்திரிகையாளர்கள் காத்திருந்தனர். ஆனால் பேச்சுவார்த்தை முடிந்தவுடன் பத்திரிகையாளர்களைச் சந்திப்பதை முதல்வர் தவிர்த்துவிட்டார். பத்திரிகையாளர்கள் குழம்பினர். தமிழ்நாடு இல்லத்திற்கு வரும்படி நிருபர்களுக்கு அவசர அழைப்பு வரவே, அங்கு அனைவரும் விரைந்தனர். அங்கு முதல்வர்

சென்னைக்குக் கிளம்ப ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். நிருபர் களைச் சந்திக்க தமிழ்நாடு இல்லத்தில் எந்தவித ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. முதல்வர் காரில் ஏறப்போகும் இடத்தில் நிருபர்கள் நிறுத்தப்பட்டிருந்தனர். முறையான "மைக்" வசதியும் செய்யப்படவில்லை. சில பத்திரிகையாளர்களுக்கும் போலீசாருக்கும் கடும் வாக்குவாதம் மூண்டு பிரச்சினை உருவாகியது. பிறகு முதலமைச்சர் ஜெயலலிதா நிருபர்களிடம் ரத்தினச் சுருக்கமாக நிதி ஒதுக்கீடு பற்றிய கேள்விக்கு மட்டும் பதிலளித்துவிட்டுப் புறப்பட்டுவிட்டார்" என்று எழுதியிருக்கிறது.

முதலமைச்சர் ஜெயலலிதா திட்டக் குழுவில் பேசும்போது தமிழக அரசின் சார்பில் நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டங்களை வரிசைப்படுத்தி, மத்திய அரசு அதற்கெல்லாம் நிதி உதவி செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அது பொதுவான நடைமுறை. யார் முதலமைச்சராக இருந்தாலும் அப்படித்தான் கேட்பது வழக்கம். உதாரணமாக நான் முதலமைச்சராக இருந்தபோது, 6-6-2006 அன்று திட்டக் குழுவிலே பேசும்போது, விவசாயிகளுக்கான கூட்டுறவுக் கடன் ரத்துச் செலவினைத் திட்டச் செலவாகக் கருத வேண்டுமென்றும்; சிறிய, நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள், குளங்களைச் சீரமைக்க மானியத்தை விரைவில் வழங்க வேண்டுமென்றும்; அனைத்துக் குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்க தாராளமாக நிதி உதவி செய்ய வேண்டும் என்றும்; ஜூலை 15, கல்வி வளர்ச்சி நாள், எனவே கல்வியை வளர்க்க, குழந்தைகளின் ஊட்டச் சத்து நலத்தினை உயர்த்த அதிக நிதி தாருங்கள் என்றும் கேட்டுக் கொண்டேன். மாநில அரசின் இந்தத் திட்டங்களுக்கெல்லாம் மத்திய அரசின் முழு உதவியைப் பெறுவதற்கு நீங்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அதைப் பின்பற்றித்தான் இந்த ஆண்டும் முதலமைச்சர் ஜெயலலிதா தனது பேச்சில் கேட்டுக் கொண்டுள்ளார்.

மத்திய திட்டக் குழுக் கூட்டம், அதில் மாநில முதலமைச்சரின் உரை என்பதெல்லாம் ஆண்டுதோறும் நடைபெறும் நிகழ்வு. மாநிலத்தின் சார்பில் "பத்து" வேண்டுமெனக் கேட்பதும், விரிவான விவாதத்திற்குப் பிறகு மத்தியத் திட்டக் குழு "ஆறுதான்" தர இயலுமென ஒப்புக்கொள்வதும் அனுபவரீதியாக ஆண்டாண்டு காலமாக நாம் கண்டுவரும் நடைமுறைதான். இப்பொழுதும்

அப்படித்தான் நடைபெற்றிருக்கிறது. இதிலே மத்திய அரசின் மீதும், ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி மீதும் தனக்குள்ள வெறுப்பை வெளிப்படுத்தவும், குற்றம் சுமத்தவும் திட்டக் குழு கூட்டத்தை ஒரு வாய்ப்பாக ஜெயலலிதா பயன் படுத்திக்கொள்ள முயற்சி செய்திருக்கிறார். இதில் புதுமை காணவோ, புரட்சியை நடத்தி விட்டதாகச் சொல்லிக் கொள்ளவோ தகுதியான அடிப்படை எதுவும் இல்லை! தி.மு.க. வின் மாநில சுயாட்சிக்கு திட்டக்குழு கூட்டத்தில் முதலமைச்சர் ஜெயலலிதா பின்பாட்டுப் பாடியிருக்கிறார்!

அன்புள்ள,

மு.க.

7-6-2012

3630. விரிக்கிற் பெருகும்; விரிஞ்சி விடுகிறேன்!

உடன்பிறப்பே,

"ஈழத் தமிழர் சாவை தடுக்காமல் சமாதிக்கு பூவைக்க நினைக்கிறார் கருணாநிதி - தா.பாண்டியன் குற்றச்சாட்டு" - இது 7-6-2012 தேதிய "ஜனசக்தி" நாளிதழின் "பேனர்" செய்தியாகும். திருவாரூரில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்தான் "தா" பாண்டியன் இவ்வாறு நம்மீது பழி சுமத்தி யிருக்கிறார்.

புதுக்கோட்டை சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தல் ஜூன் 12ஆம் தேதியன்று நடைபெறவுள்ளது. அந்தத் தொகுதியில் ஏற்கனவே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராக இருந்த முத்துக்குமரன் இளம் வயதிலேயே விபத்தில் சிக்கி மாண்டதன் காரணமாக அந்தத் தொகுதியிலே இடைத் தேர்தல் நடைபெறுகிறது. கடந்த பொதுத் தேர்தலில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளராக முத்துக்குமரன் போட்டியிட்ட போது, அவர் அ.தி.மு.க.வின் தோழமைக் கட்சியாக இருந்தவர். அ.தி.மு.க.வும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் இன்னமும் தோழமையாகத்தான் உள்ளது. அந்த முறையில் - அரசியல் நாகரிகப்படி - ஜனநாயக நெறிப்படி புதுக்கோட்டை இடைத்தேர்தலில் அ.தி.மு.க. அணியின் சார்பில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிதான் போட்டியிட வேண்டும். ஆனால் அ.தி.மு.க. கடந்த பொதுத்தேர்தலில் தனக்குக் கிடைத்த மிருகப் பெரும்பான்மை காரணமாக தனது தோழமைக்கட்சிகளையெல்லாம் தூசுக்கு சமமாகக்கூட மதிப்பதில்லை. அதற்கு அடையாளமாகத்தான், புதுக்கோட்டை தொகுதியிலே கடந்த முறை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிட்டு வெற்றிபெற்ற போதிலும், அவர்களை மரியாதைக்காகக் கூட அழைத்துக் கேட்காமல், தன்னிச்சையாகவே புதுக்கோட்டையில் அ.தி.மு.க. போட்டியிடப் போவதாக தெரிவித்து, வேட்பாளரின் பெயரையும் அறிவித்தார்கள். அவர்கள் அவ்வாறு செய்ததற்காக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில்

ஒரு சிறு வருத்தம்கூடத் தெரிவிக்கவில்லை. இருந்தாலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் போன்ற வேறு சில கட்சிகள், அந்தத் தொகுதியிலே கடந்த முறை வெற்றி பெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வேட்பாளர் நிறுத்தப்பட்டால், அவரைப் பொது வேட்பாளராகக் கருதி மற்றக் கட்சிகள் எல்லாம் போட்டியிடாமல் ஆதரவு தெரிவிக்கலாம் என்றுகூடச் சொல்லிப் பார்த்தார்கள். அதையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக் கொள்ள வில்லை.

இந்த அளவிற்கு "சுயமரியாதை"யை பெருந் தன்மையோடு(?) ஆளுங்கட்சிக்கு விட்டுக் கொடுத்ததோடு மட்டுமல்ல; நேற்றைய தினம் தலைமைச் செயலகத்திற்கே சென்று கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழகத் தலைவர்களான தா.பாண்டியனும், நல்லகண்ணுவும் மரியாதை நிமித்தமாகச் சந்தித்துப் பேசினார்கள் என்ற புகைப்படமும் "ஜனசக்தி"யிலே முதல் பக்கத்திலே வெளிவந்துள்ளது. இவர்கள் இருவரும் சந்தித்ததோடு, புதுக்கோட்டை தொகுதியிலே வெற்றிபெற்று, துர்மரணமடைந்த தோழர் முத்துக்குமரனின் மனைவியையும், குழந்தைகளையும் முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்திக்க வைத்திருக்கிறார்கள். ஜெயலலிதாவும் எங்கே புதுக்கோட்டை மக்கள் அ.தி.மு.க. வின் நன்றி கொன்ற செய்கையை எண்ணிப் பார்த்து, இடைத்தேர்தலில் அ.தி.மு.க. விற்கு வாக்களிக்காமல் போய்விடுவார்களோ என்றெண்ணி இவர்களைப் பார்க்க ஒப்புதல் அளித்து சந்தித்திருக்கிறார். அது அவர்களுடைய கட்சிப் பிரச்சினை. அந்தக் கட்சியின் தொண்டர்கள் பிரச்சினை, எப்படியோ போகட்டும். ஆனால் திருவாரூர் சென்ற தா. பாண்டியன் தேவையில்லாமல் என்னைப் பற்றி "ஈழத் தமிழர் சாவைத் தடுக்காமல் சமாதிக்கு பூ வைக்க கருணாநிதி நினைப்பதாக" ஏன் பேட்டி அளிக்க வேண்டும்?

உண்மையிலேயே ஈழத் தமிழர் சாவைத் தடுக்க நாம் முயற்சிக்கவில்லையா?

2008-2009ஆம் ஆண்டுகளில் இலங்கையில் இறுதிப் போர் நடைபெற்று ஈழத் தமிழ் இனம் உதிரமும் உயிரும் சிந்திய அந்தக் கோர நிலைமைகளை - இலங்கையிலே ஏற்படாமல் தடுத்திட நாம் எதுவும் செய்யவில்லையா? கழக அரசின் சார்பாக இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக 14-10-2008 அன்று அனைத்துக்

கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி, இலங்கையில் இரண்டு வார காலத்திற்குள் போர் நிறுத்தம் செய்ய இந்திய அரசு முன் வரா விட்டால், தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பதவி விலகிட நேரிடும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட வில்லையா? அதையொட்டி, கழகத்தைச் சேர்ந்த மக்களவை உறுப்பினர்கள், மாநிலங் களவை உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் பதவி விலகல் கடிதங்களை என்னிடம் கொண்டு வந்து கொடுக்கவில்லையா? தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அன்றே பிரதமருக்கு அந்தத் தீர்மானம் தம்பி டி.ஆர்.பாலு மூலமாக அனுப்பப் படவில்லையா? அதனை ஆய்வு செய்த பிரதமர், அரசியல் ரீதியான தீர்வுகாண மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் விரைவாக எடுத்திடும் என்று பாலுவிடம் உறுதி கூறவில்லையா? பிரதமர் அளித்த பேட்டியிலும்-

"இலங்கையில் ஏற்பட்டுள்ள இனப் பிரச்சினை மிகவும் கவலை அளிப்பதாக உள்ளது. இப் பிரச்சினைக்கு ராணுவம் மூலம் தீர்வு என்பது சரியாக அமையாது. இலங்கையின் இறையாண்மையையும், அங்கு வசிக்கும் தமிழர்களின் மனித உரிமையையும் மதிக்கும் வகையில் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இலங்கை இனப் பிரச்சினைக்கு தீர்வு காண முழு ஈடுபாட்டுடன் மத்திய அரசு முயற்சி மேற்கொள்ளும்" என்று கூற வில்லையா?

18-10-2008 அன்று பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் நேரடியாகவே தொலைபேசியில் இலங்கை அதிபர் ராஜபக்சேயுடன் பேசவில்லையா? 22-10-2008 அன்று மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்கள் இலங்கைத் தமிழர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளதாக நாடாளுமன்றத்திலே குறிப்பிடவில்லையா? 24-10-2008 அன்று சென்னையில் பிரமாண்டமான "மனித சங்கிலி" ஒன்றினை நாம் நடத்தவில்லையா? 26-10-2008 அன்று திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் சென்னை வந்து என்னிடம் சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேல் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்துப் பேசவில்லையா? பிரணாப் முகர்ஜி அவர்கள் சென்னையில் செய்தியாளர்களிடம் கூறும்போது, "நார்வே நாட்டின் முயற்சியின் பேரில் ஏற்பட்ட சண்டை நிறுத்தம் தொடருவதை உறுதி செய்ய வேண்டுமென்று

கலைஞர் வலியுறுத்தினார். போர்ப்பகுதிகளில் அவதிப்படும் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஐக்கிய நாடுகள் மன்றம் மற்றும் இந்திய அரசின் மூலமாக மனிதாபிமான உதவிகள் அளிக்க இலங்கை அரசு உறுதி அளித்துள்ளது" என்று கூறவில்லையா? 12-11-2008 அன்று இலங்கைத் தமிழர்களுக்காக தமிழகச் சட்டப் பேரவையில் தீர்மானம் ஒன்றினை நான் முன்மொழிந்து அது நிறைவேற்றப்பட வில்லையா? அந்தத் தீர்மானத்தையும் ஜெயலலிதா அதே சட்டமன்றத்தில் இலங்கைத் தமிழர் போராட்டத்திற்கு எதிராக நிறைவேற்றிய தீர்மானத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க பாண்டியனுக்கு மனம் வரவில்லையா? 4-12-2008 அன்று தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துக் கொண்டு டெல்லி சென்று பிரதமரைச் சந்தித்து, இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்களை இலங்கைக்கு அனுப்ப வேண்டு மென்று கேட்டுக் கொள்ள வில்லையா? அதன் பின்னர் பிரணாப் அவர்கள் இலங்கைக்கு நேரிலேயே சென்று ராஜபக்சேயுடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லையா? 27-12-2008 அன்று நடைபெற்ற கழகப் பொதுக்குழுவிலே இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து தீர்மானம் நிறைவேற்ற வில்லையா?

12-1-2009 அன்று தமிழர் தலைவர் கி. வீரமணி, பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ், விடுதலை சிறுத்தைகள் தலைவர் தொல்.திருமாவளவன் ஆகியோர் என்னைச் சந்தித்ததைத் தொடர்ந்து மத்திய அமைச்சராக இருந்த டி.ஆர். பாலுவையும், மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழியையும் பிரதமரிடமும், சோனியாகாந்தியிடமும் நிலைமைகளை விளக்கச் செய்யவில்லையா?

இதையெல்லாம் நாம் செய்தது ஈழத் தமிழர் சாவை தடுப்பதற்கான முயற்சிகள் இல்லையா? இவ்வளவையும் செய்த நான் ஈழத்தமிழர் சாவைத் தடுக்க நினைக்க வில்லையாம்; ஆனால் 18-1-2009 தேதிய நாளிதழ்களில் ஜெயலலிதாவின் பெயரால் வந்த ஒரு பேட்டியில், "இலங்கை வேறு நாடு, எனவே அந்த நாட்டுப் பிரச்சினையில் தலையிடுவதற்கு ஒரு எல்லை உண்டு. இலங்கையில் ஈழம் என்ற ஒரு நாடு இன்னும் அமையவில்லை. இலங்கைத் தமிழர்களைக் கொல்ல வேண்டும் என்று சிங்கள

ராணுவம் எண்ணவில்லை. ஒரு போர் நடைபெறும்போது அப்பாவி மக்கள் கொல்லப்படுவது இயல்பு. இதில் எந்த நாடும் விதி விலக்கு அல்ல" என்று இலங்கை ராணுவத்திற்கு ஆதரவாகப் பேசிய ஜெயலலிதாதான் ஈழத் தமிழர் சாவை தடுக்க நினைத்தார் என்று தா. பாண்டியன் அவரைப் போய் சந்தித்துவிட்டு, என்மீது பழி போட்டுப் பேசுவது நியாயமா?

28-3-2009 அன்று நான் இலங்கையிலே உடனடியாக போர் நிறுத்தம் ஏற்பட இந்தியா உதவிட வேண்டுமென்று கேட்டு பிரதமருக்கும், திருமதி சோனியாகாந்தி அவர்களுக்கும் எழுதிய கடிதத்திற்கு, 31-3-2009 அன்று திருமதி சோனியா காந்தி அவர்கள் எனக்கு எழுதிய நீண்ட பதில் கடிதத்தில், "நம்முடைய பிரதமர் அவர்கள் உங்களுக்கு எழுதிய கடிதத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அனைவரின் சார்பாக இலங்கையில் அண்மையில் நடைபெறும் சம்பவங்கள் குறித்து ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் சார்பில் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளை விவரித்திருப்பதைப் பற்றி நானும் உங்களுக்கு உறுதி கூற விரும்புகிறேன்..... தற்போது இலங்கையில் நடைபெற்று வரும் போர், அதன் காரணமாக அங்குள்ள தாய்மார்கள், குழந்தைகள் உள்ளிட்ட அப்பாவித் தமிழர்கள் அனுபவித்து வரும் பெரும் துயரங்கள், நம்மை மிகுந்த கவலைக்கு ஆளாக்கியுள்ளது. அவர்களைப் பாதுகாக்கவும், அவர்களின் நலன்களைப் பேணவும் தேவையான முயற்சிகள் அனைத்தையும் இலங்கையின் அதிகார வர்க்கம் மேற்கொள்ள வேண்டுமென்று நாங்கள் எதிர் பார்க்கிறோம். உள்ளபடியே அதற்கான முதல் கட்டமாக போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும். நமது அரசு இலங்கை அரசுடன் பல்வேறு வகையான கருத்துருக்களின் மீது தொடர்பு கொண்டு வருகிறது. குறிப்பாக போர் நிறுத்தத்தைப் பற்றியும் தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது. போர் நிறுத்தம் ஏற்பட்டால்தான் அப்பாவி மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம் பெயர முடியும்" என்றெல்லாம் தெரிவித்திருந்தார்களே; அதெல்லாம் உண்மை இல்லையா?

அதன் பின்னர் 5-4-2009 அன்று என்னைச் செய்தியாளர்கள் சந்தித்தபோது, "இலங்கையில் விடுதலைப் புலிகளின் அனைத்து இடங்களையும் ராணுவம் கைப்பற்றிவிட்டதாகவும், அவர்களது ராணுவதளங்கள் அழிக்கப்பட்டு விட்டதாகவும், பிரபாகரனும்,

அவருடைய புதல்வரும் தமிழர்கள் வாழ்கிற பகுதியில் மறைந்திருப்பதாகவும் செய்திகள் வந்திருக்கிறதே" என்று என்னைக் கேட்ட நேரத்தில் "போர் நிறுத்தம் வேண்டுமென்று கடந்த ஆறு மாத காலமாகத் தொடர்ந்து சொல்லி வருகிறோம். எங்கள் குரலை மதித்து வெளிநாடுகளிலே உள்ள அரசுகள், ஐ.நா. மன்றத்தினர், வெளிநாட்டுத் தூதுவர்கள் மூலமாக இலங்கைக்குச் சொல்லி வருகிறார்கள். போரை நிறுத்துங்கள் என்று இந்திய அரசினர் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் ராஜபக்ஷே போரை நிறுத்தவில்லை. அதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்" என்று நான் கூறியது, ஈழத் தமிழர் சாவைத் தடுக்க வேண்டும் என்பதற்காக இல்லையா?

7-4-2009 அன்று பிரதமர் மன்மோகன்சிங், திருமதி சோனியா காந்தி, வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி, உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோருக்கு நான் அனுப்பிய தந்தியில் "இலங்கையில் ஒட்டு மொத்த தமிழின மக்கள் கூண்டோடு அழிக்கப்படுவதிலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்றும், அங்கு போர் நிறுத்தத்தை உறுதி செய்து அமைதிப் பேச்சுவார்த்தைக்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றும் கேட்டுக்கொண்டேனே, தா.பாண்டியன் அதை அறிய மாட்டாரா? இறுதிப் போரிலே இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றுவதற்காக நான் மட்டுமல்ல, இந்திய அரசு மாத்திரமல்ல, பெரிய நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், நார்வே போன்றவைகள் வெளியிட்ட அறிக்கையிலேயே இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டுமென்றும், பாதுகாப்பான பகுதி மீது இலங்கை போர் விமானங்கள் குண்டு வீசுவதை நிறுத்த வேண்டுமென்றும் சொன்னார்கள். அதற்கும் மேலாக ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர், பான்-கி-மூன் தொலைபேசி மூலமாகவே இலங்கை அதிபர் ராஜபக்ஷேயை தொடர்பு கொண்டு இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டுமென்றும், மனிதாபிமான முறையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். ஐக்கிய நாட்டு சபை உயர் அதிகாரி ஒருவரும் அப்போது ராஜபக்சேயுடன் பேசியிருக்கிறார்.

9-4-2009 அன்று சென்னையில் என் தலைமையில் "இலங்கை அரசே போரை நிறுத்து" என்று முழக்கமிட்டவாறு பிரம்மாண்டமான பேரணி ஒன்று நடைபெற்றது. இலங்கை

அதிபர் ராஜபக்சே இலங்கையில் இரண்டு நாள் போர் நிறுத்தம் செய்யப்படும் என்று அறிவித்தார். விடுதலைப் புலிகள் ஆதரவு கட்சி எம்.பி.க்களை இந்தியாவிற்கு பேச்சுவார்த்தை நடத்த வருமாறு இந்திய அரசு அழைப்பு விடுத்தது. 12-4-2009 அன்று ஈழத் தந்தை செல்வாவின் மகன் சந்திரஹாசன் அளித்த பேட்டியில் "முதல்வர் கலைஞரின் ராஜ தந்திரமான வேண்டுகோள் தான் இலங்கைப் போர் நிறுத்தத்திற்குக் காரணமாக அமைந்தது" என்று கூறினார். மத்திய உள்துறை அமைச்சர், நண்பர்

ப.சிதம்பரம் அவர்கள் 14-4-2009 அன்று விடுத்த அறிக்கையில் இலங்கையில் போர் நிறுத்தம் தொடர்ந்திட வேண்டும் என்று இலங்கை அரசை இந்தியா தொடர்ந்து வற்புறுத்தும் என்றார். தமிழர் தலைவர் இளவல் கி. வீரமணி அவர்கள் விடுத்த அறிக்கையில் "உலக நாடுகளின் வற்புறுத்தல்கள் காரணமாக 48 மணி நேர போர் நிறுத்தத்தை ராஜபக்சே அரசு அறிவித்துள்ளது. தமிழ்நாட்டின் முதல் அமைச்சர் கலைஞர் தரும் இடையறாத அழுத்தம்தான் இதற்கு முக்கியமான காரணம். இந்திய அரசும் இதில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கவில்லை" என்று குறிப்பிட்டார்.

21-4-2009 அன்று பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங், ஐக்கிய முற்போக்கு கூட்டணித் தலைவர் திருமதி சோனியா காந்தி, வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த பிரணாப் முகர்ஜி ஆகியோருக்கு நான் அனுப்பிய தந்தியில், "இலங்கையில் போர் நிலைமை ஆபத்தானதாக உள்ளது. தமிழர்கள் அனுபவித்து வரும் சிரமங்கள் மிக அபாயமான நிலையை எட்டியுள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்பு உட்பட அனைத்து நாடுகளும் உடனடியாகப் போர் நிறுத்தத்தை அறிவிக்கும்படி இலங்கை அரசு மீது நிர்ப்பந்தம் செலுத்தியுள்ளன. இலங்கையிலுள்ள இலட்சக்கணக்கான தமிழர்களின் உயிர்களைக் காப்பாற்ற இலங்கையில் உடனடியாகவும், நிரந்தரமாகவும் போர் நிறுத்தம் செய்ய இலங்கை அரசுக்கு இறுதி எச்சரிக்கை விடும்படி வலியுறுத்துகிறேன்" என்று கேட்டுக் கொண்டேன். இவைகள் எல்லாம் எதற்காக? ஈழத் தமிழர் சாவை தடுத்து நிறுத்திட வேண்டும் என்பதற்காகத்தானே?

"நாதியற்ற ஈழத் தமிழரைக் காத்திட நடுவணரசுக்கு வேண்டுகோள்" என்ற தலைப்பில் உருக்கமிகு உடன்பிறப்பு கடிதம்

ஒன்றை 21-4-2009 அன்று நான் எழுதியதோடு, இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற, மத்திய அரசு போர் நிறுத்தத்திற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கோரி 23-4-2009 அன்று ஒரு நாள் வேலை நிறுத்தம் நடத்தப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு அறிக்கை விடுத்தேன். அந்த வேலை நிறுத்தத் திற்கு அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பு தர வேண்டுமென்று கேட்டு, காங்கிரஸ், அ.தி.மு.க., சி.பி.எம்., சி.பி.ஐ., திராவிடர் கழகம், பா.ஜ.க., ம.தி.மு.க., தே.மு.தி.க., விடுதலை சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லீம்லீக், எம்.ஜி.ஆர். கழகம், பா.ம.க., புதிய தமிழகம் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுக்கும், பத்திரிகைகளுக்கும் கடிதம் எழுதினேன். அந்த வேலை நிறுத்தம் அமைதியாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற்றது.

நான் அனுப்பிய தந்தியின் அடிப்படையில் 22-4-2009 அன்று இரவு டெல்லியில் பிரதமர் அவர்கள் மத்திய அமைச்சர்கள், அதிகாரிகள் கொண்ட அவசரக் கூட்டம் ஒன்றினைக் கூட்டி, அப்பாவித் தமிழர்கள் மீதான போரினை இலங்கை உடனடியாக நிறுத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். அதனை இலங்கை அரசுக்கு நேரில் வலியுறுத்துவதற்காக பிரதமரின் சிறப்புத் தூதுவர்கள் கொண்ட உயர் மட்டக்குழு ஒன்று கொழும்பு சென்றது. அதே நாளில், இலங்கையில் பாதிக்கப் பட்டிருந்த தமிழர்களுக்காக 936 மெட்ரிக் டன் எடை கொண்ட 6 கோடியே 46 லட்சத்து 16 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நிவாரணப் பொருள்கள் 40 ஆயிரம் சிப்பங்களில் இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட உயர்மட்டக் குழுவினர் கொழும்பில் ராஜபக்சேயை நேரில் சந்தித்து, உடனடியாக போரை நிறுத்த ஆவன செய்ய வேண்டுமென்ற இந்தியாவின் வேண்டு கோளைத் தெரிவித்தனர். 24-4-2009 அன்றிரவு அண்ணா அறிவாலயத்திற்கு உள்துறை அமைச்சராக இருந்த ப.சிதம்பரம் அவர்கள் வந்து, என்னைச் சந்தித்து விவரங்களையெல்லாம் விளக்கினார். அதே நாளில் பிரதமர் அவர்களும் தொலைபேசியில் என்னுடன் பேசி மத்திய அரசு எடுத்த முயற்சிகளையெல்லாம் கூறினார். இவைகள் எல்லாம் ஈழத் தமிழர் சாவை தடுத்திட தி.மு. கழகமும், அதன் தலைவராகிய நானும், கழக அரசும் எடுத்த முயற்சிகள் இல்லையா? ஆனால் தா.பாண்டியன் இதையெல்லாம் மறைத்துவிட்டு சமாதிக்கு பூ

வைக்க நினைக்கிறேன் என்று பேட்டி அளித்திருப்பது சரி தானா?

புதுக்கோட்டையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தனது கட்சியின் தொண்டர்கள் எண்ணத்திற்கு மாறாக; தனது வேட்பாளரை நிறுத்தாமல் அ.தி.மு.க.விற்கு விட்டுக் கொடுத்ததற்கு காரணம்; மாநிலங்களவை உறுப்பினர் பதவி தர அ.தி.மு.க. ஒப்புக் கொண்டதுதான் என்று "தினமணி"யில் எழுதப்பட்டிருந்ததே, அதற்கு தா.பாண்டியன் பதில் சொல்லட்டும்! தேவையில்லாமல் தி.மு.க. மீது தா. பாண்டியன் குறை சொல்வதை இனியாவது நிறுத்திக் கொள்ளட்டும்! விரிக்கிற் பெருகும்; விரிவஞ்சி விடுகிறேன்!

அன்புள்ள,

மு.க.

8-6-2012

3631. ஜனநாயகம் கேலிப் பொருளாகி விடுவதா?

உடன்பிறப்பே,

மத்திய உள்துறை அமைச்சர், திரு. ப.சிதம்பரம் அவர்கள் சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதியில் 2009ஆம் ஆண்டு போட்டியிட்டு, 3,354 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று, மத்திய அரசில் நிதித்துறை அமைச்சராக, தற்போது உள்துறை அமைச்சராகப் பணியாற்றி வருகிறார். அந்தத் தேர்தலில் அவரை எதிர்த்து நின்ற அ.தி.மு.க. வேட்பாளர் திரு. ராஜகண்ணப்பன், அந்தத் தொகுதியில் ப.சிதம்பரம் அவர்கள் வெற்றி பெற்றது செல்லாது என்று வழக்கு தொடுத்துள்ளார். ராஜ கண்ணப்பனைப் பற்றிச் சொல்ல வேண்டுமேயானால், முதலில் அ.தி.மு.க. வில் அமைச்சராக இருந்து, பின்னர் அங்கே அவருக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு அளிக்கப்படாத நிலையில், தி.மு.கழகத்தில் சேர்ந்து, தேர்தலில் போட்டியிட்டு தி.மு. கழகச் சட்டப் பேரவை உறுப்பினராகப் பணியாற்றி, அமைச்சர் பதவி இங்கே கிடைக்காத நிலையில் மீண்டும் அ.தி.மு.க.விலே சேர்ந்து, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ப.சிதம்பரம் அவர்களை எதிர்த்துப் போட்டியிட்டவர் ஆவார்.

திரு. ராஜகண்ணப்பன் அவர்கள் உள்துறை அமைச்சர் திரு.ப.சிதம்பரம் அவர்கள் மீது தொடுத்த தேர்தல் வழக்கில் 29 குற்றச்சாட்டுகளைக் குறிப்பிட்டிருந்தார். அந்த வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் விசாரணையில் உள்ளது. இந்த நிலையில் ப.சிதம்பரம் அவர்கள் ராஜ.கண்ணப்பன் தாக்கல் செய்த புகாரில் உள்ள குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்று தெரிவித்து, வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருந்தார். ராஜ.கண்ணப்பன் தெரிவித்த 29 குற்றச்சாட்டுகள் உண்மைதானா? அதிலே ஆதாரம் இருக்கிறதா என்று இன்னமும் நீதி மன்றம் விசாரிக்கவில்லை. இடையில் அந்த

வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கோரிக்கை விடுத்த ப.சிதம்பரம் அவர்களின் மனுவினை விசாரித்து, ராஜகண்ணப்பன் தெரிவித்த 29 குற்றச்சாட்டுகளில், இரண்டு குற்றச்சாட்டுகளில் எவ்வித ஆதாரமும் இல்லை, அந்த இரண்டு குற்றச்சாட்டுகளையும் தள்ளிவிடுகிறேன், மற்ற குற்றச்சாட்டுகளைப் பற்றி விசாரணை நடத்துகிறேன் என்றுதான் சொல்லியிருக்கிறார். நீதிபதி அவ்வாறு சொல்லியது 7-6-2012 அன்றுதான்! அவ்வாறு தீர்ப்பு சொல்லி 24 மணி நேரம் கூட ஆகவில்லை; அதற்குள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அவசர அவசரமாக நேற்றைய தினமே ப. சிதம்பரம் அவர்கள் உடனடியாக மத்திய அமைச்சர் பதவியிலிருந்து விலக வேண்டுமென்றும், அவர் விலகாவிட்டால் பிரதமர் அவர்கள், ப.சிதம்பரத்தை பதவியை விட்டு நீக்க வேண்டுமென்றும் அறிக்கை விடுகிறார் என்றால், எப்படிப்பட்ட ஒரு முதல் அமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம்? மத்திய அரசில் தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர் உள்துறை அமைச்சராக இருக்கிறார். அவரை பதவியிலிருந்து விலகச் செய்ய வேண்டும் என்பதிலே இந்த அளவிற்கு ஆர்வக் கோளாறா? என்ன நீதி மன்றம், ப.சிதம்பரம் குற்றவாளி என்றா தீர்ப்பளித்துவிட்டது? விசாரணையை இனி மேல்தான் நடத்த வேண்டும் என்றுதானே சொல்லியிருக்கிறது. ப. சிதம்பரம் அவர்களின் கோரிக்கையை ஏற்று, ராஜகண்ணப்பன் தெரிவித்த இரண்டு புகார்களைத் தள்ளிவிட்டு, மற்றவை பற்றி விசாரணை நடத்தவேண்டு மென்றுதானே நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. அதற்குள் என்ன அப்படி அவசரம்?

அதுமாத்திரமல்ல; குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில் உள்ள ஒருவரை பதவியை விட்டு விலக வேண்டுமென்று சொல்கின்ற முதலமைச்சர் ஜெயலலிதாவின் நிலைமை என்ன? நீங்கள் குற்றவாளிதான் என்று இதுவரை எத்தனை நீதிபதிகள் தீர்ப்பளித்திருக்கிறார்கள்? டான்சி வழக்கின் கதி என்ன? நீங்கள் வாங்கிய நிலத்தையே அரசுக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டு, மனச்சாட்சிபடி நடந்துகொள்ள வேண்டுமென்று உச்சநீதி மன்றமே தீர்ப்பளிக்க வில்லையா? சொத்துக் குவிப்பு வழக்கு என்னவாயிற்று? இதுவரை நீங்கள் வாங்கிய வாய்தாக்கள் எத்தனை? அதிலே நீங்கள் நிரபராதி என்று தீர்ப்பளித்தாகி விட்டதா? நீங்கள் அந்த வழக்கினை இழுத்தடிப்பதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளே, நீங்கள்தான் குற்றவாளி, அதை மறைப் பதற்காகத்தான் இவ்வாறெல்லாம்

இழுத்தடிக்கிறீர்கள் என்று தமிழ் நாட்டு மக்களே பேசிக் கொள்ளவில்லையா? உங்கள் நிலை அவ்வாறு இருக்கும்போது, இன்னொருவரைப் பார்த்து அமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கொள்ளுங்கள் என்று சொல்வதில் ஏதாவது நியாயம் இருக்கிறதா?

இது ஒரு உதாரணம் மாத்திரமல்ல; 2001ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலின்போது ஜெயலலிதா தேர்தலில் போட்டியிட முடியாத அளவுக்கு நீதிமன்றத் தீர்ப்புகள் அவரைக் குற்றவாளி என்று கூறி வெளிவந்திருந்தன. இருந்தாலும் அவர் நான்கு தொகுதிகளில் தனது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தார். அதனால் வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப் பட்டன. அப்போது 6-5-2001 தேதிய "ஆனந்தவிகடன்" இதழ் தனது தலையங்கத்தில் "இந்தத் தேர்தலில் ஜெயலலிதாவின் அணுகுமுறை நியாய தர்மங்களையெல்லாம் மீறிய ஒன்றாக இருந்துவருகிறது. வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்ட பின்னரும், சட்டசபை உறுப்பினராகத் தேர்வு செய்யப்படு வதற்கான தகுதியை தான் இழந்துவிட்ட பிறகும், தன்னுடைய திட்டத்தை ஜெயலலிதா மாற்றிக் கொண்டதாகவே தெரியவில்லை. அ.தி.மு.க. கூட்டணி ஜெயித்தால்; தானே முதல்வராக இருப்பேன் என்று போகும் இடமெல்லாம் அவர் பறைசாற்றி வருகிறார். அரசியல் மரபுகள் பற்றியெல்லாம் மக்களுக்கு என்ன தெரியும் என்ற நினைப்பில் தன்னை முதல்வராக முன்னிறுத்திப் பேசினால்தான் மக்கள் வாக்களிப்பார்கள் என்ற சிந்தனையில் மக்களையே முட்டாளாக்கத் துணிந்திருப்பது வேதனைக்குரிய விஷயம். போட்டியிடுவதற்கு தடை ஏற்பட்ட பிறகு, அந்தத் தீர்ப்பை முழு மனதோடு ஏற்று "எங்கள் கூட்டணியை வெற்றி பெறச் செய்யுங்கள், அப்படி செய்தால், என் சார்பாக உங்களுக்கு ஏற்புடைய ஒரு தலைவரை முதல்வர் பதவியில் அமர்த்துவேன், நல்லாட்சி வழங்கப் பாடுபடுவேன்" என்று ஜெயலலிதா சொல்லியிருந்தால், அது ஒப்புக் கொள்ளக் கூடியதாக இருக்கும்" என்று எழுதியது.

ஆனாலும் ஜெயலலிதா அப்போது என்ன செய்தார் தெரியுமா? தேர்தல் முடிவுகள் வெளி வந்து, அ.தி.மு.க. பெரும்பான்மையான இடங்களில் வெற்றிபெற்ற நேரத்தில், தேர்தல் முடிவுகள் வெளிவந்து கொண்டிருந்த அதே நாளில், சட்டமன்றக் கட்சித் தலைவராக தான் தேர்ந்தெடுக்கப்பட்டதாகக் கூறி, ஆளுநரைச்

சந்தித்து அன்றையதினமே பதவிப் பிரமாணமும் செய்து கொண்டார். தமிழக ஏடுகள் எல்லாம் அதனைக் கண்டித்து எழுதின. அவ்வாறு முறைகேடாக பதவியேற்ற ஜெயலலிதா 13-11-2001 அன்று பதவியை விட்டு விலக வேண்டிய நெருக்கடிக்கு ஆளானதெல்லாம் தமிழ்நாட்டு வரலாறு.

இப்படிப்பட்ட பெரும் புகழுக்குரிய (?) ஜெயலலிதாதான், தற்போது நீதி மன்றம் இன்னமும் விசாரணையைத் தொடங்காத நிலையில் மத்திய உள்துறை அமைச்சரைப் பார்த்து பதவி விலகு என்றும், பிரதமரிடம் அவரை பதவியை விட்டு விலக்குங்கள் என்றும் கூறி அறிக்கை விடுத்துள்ளார்.

"வேலிக்கு ஓணான் சாட்சி" என்பதைப் போல முதலமைச்சர் ஜெயலலிதா விடுத்த அறிக்கையையொட்டி பா.ஜ.க.வும் மத்திய அமைச்சரவையிலிருந்து ப.சிதம்பரம் அவர்களை நீக்க வேண்டுமென்று அறிக்கை விடுத்துள்ளது. அந்தச் செய்தியை வெளியிட்ட "இந்து" நாளிதழே கூட, சிதம்பரம் அவர்களைப் பற்றி உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்த ஒருசில மணிகளில் பா.ஜ.க.வும், அ.தி.மு.க.வும் அவரை பதவி விலகக் கோரி அறிக்கை விட்டுள்ளதாக எழுதி யிருக்கிறது. மேலும் "இந்து" நாளிதழ் இதைப் பற்றி இன்று (8-6-2012) எழுதியுள்ள தலையங்கத்தில்,

"The High Court's decision allowing the trial against Mr. Chidambaram to take place should not be interpreted - as some of his political opponents have chosen to - as evidence of his guilt. No conclusion should be drawn about the merits of the petition and the calls for his resignation over this are unreasonable. The Court's decision only means that the charges, with the exception of two that have been struck off, will now be examined in detail during the trial. However, in the interest of justice and in recognition of the centrality of elections to our constitutional framework, this should take place as expeditiously as possible"(திரு. சிதம்பரம் அவர்களுக்கு எதிரான வழக்கில் விசாரணையை அனுமதித்து உயர் நீதி மன்றம் வழங்கியுள்ள உத்தரவை - அவரது அரசியல் எதிரிகள் சிலர் புரிந்து கொண்டிருப்பதைப்போல - குற்றத்திற்கான ஆதாரம் என்று கருதிவிடக் கூடாது. அவருக்கெதிராக

உள்ள வழக்கின் தகுதிகளைப் பற்றி இப்போது எந்த முடிவும் மேற்கொள்ளப்பட முடியாது. **எனவே அவர் பதவியிலிருந்து விலக வேண்டும் என்று கேட்பதில் எந்த வித நியாயமும் கிடையாது.** அவருக்கெதிராகத் தொடுக்கப்பட்டுள்ள வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் இரண்டு குற்றச்சாட்டுகளை உயர் நீதி மன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. மற்றக் குற்றச்சாட்டுகளைப் பற்றி விரிவாக விசாரணை மேற்கொள்ளப்பட உள்ளது. எனினும், நீதிநிலை நாட்டப்பட வேண்டுமென்பதற்காகவும், நமது அரசியல் சட்டத்தின் பாரபட்சமற்ற தன்மையை அங்கீகரிக்கும் நோக்கிலும் விசாரணை எவ்வளவு விரைவாக நடைபெற வேண்டுமோ, அவ்வளவு விரைவாக நடந்து முடியவேண்டும்)

என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளது.

"அவசரக் குடுக்கை" என்பார்களே, அதைப் போல நமது முதலமைச்சர் ஜெயலலிதாவும், வேறு சிலரும் சிதம்பரம் அவர்கள் பதவி விலக வேண்டுமென்று கொடுத்துள்ள அறிக்கை பற்றி, அருமை நண்பர், ப. சிதம்பரம் அவர்களே பதில் அளித்து கூறும்போது, "சில அரசியல் தலைவர்களின் அறியாமையை நினைத்து திகைப்பாக இருக்கிறது. தற்போதைய எம்.பி.க்களுக்கு எதிராக 111 தேர்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளன. இந்த வழக்கில் குற்றச்சாட்டுகள் மட்டுமே உள்ளன. விசாரணை இன்னும் தொடங்கவே இல்லை. ஒரு சாட்சி கூட விசாரிக்கப்பட வில்லை. குற்றச்சாட்டுகளை ரத்து செய்ய மனு தாக்கல் செய்தோம். அந்த மனு, பாதியளவுக்கு ஏற்கப்பட்டுள்ளது. குற்றச்சாட்டுகள் ரத்து செய்யப்பட்டால், அது தேர்தல் வழக்கு தொடர்ந்தவருக்குத்தான் பின்னடைவே தவிர, எனக்கல்ல" என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார். என்ன இருந்தாலும், ப. சிதம்பரம் அரசியல்வாதி மட்டுமல்லவே; திறமையான மூத்த வழக்கறிஞரும் அல்லவா?

குற்றச்சாட்டு எழுப்பப்பட்ட உடனேயே ஒருவர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்பது சட்ட விதிமுறைகளின்படி நியாயமாகாது. குற்றச்சாட்டு, விரிவான விசாரணையின் மூலம், ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட வேண்டும். ஜெயலலிதா

ஆட்சியில்தான் புகாரைப் பெற்றுக்கொண்டு அதில் பூர்வாங்க ஆதாரம் ஏதுமிருக்கிறதா என்று விசாரித்து ஆராயாமல் அவசர அவசரமாகக் கைது நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. (இதற்கு உதாரணம் வேண்டுமென்றால், ஜெயலலிதா தன் பக்கத்திலே உள்ள தன் உடன்பிறவாச் சகோதரியின் கணவரிடமோ, உறவினரிடமோ கேட்டால் நான் சொல்வது உண்மைதான் என்று கூறுவார்கள்). அதுபோன்ற சட்டத்திற்குப் புறம்பான அரைகுறை நடவடிக்கையைத் தேர்தல் தொடர்பான வழக்குகள் அனுமதிப்பதில்லை. ஜெயலலிதாவும் வேறு சிலரும் சொல்வதைப்போல முதல் நிலையிலேயே - விசாரித்து தீர்ப்பு அளிப்பதற்கு முன்பே ராஜினாமா செய்ய வேண்டுமென்றால் சட்ட நெறிமுறைகளும், இந்திய ஜனநாயகமும் கேலிப் பொருள்களாகிவிடும்! கணக்கற்ற 'வாய்தா' வாங்குவோருக்கும் இது பொருந்தி விடும்!

அன்புள்ள,

மு.க.

9-6-2012

3632. "OTHERWISE - ஜனாதிபதி"

உடன்பிறப்பே,

இன்றைய தினமணி நாளேட்டில் "கடவுளுக்குத்தான் வெளிச்சம்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதப்பட்டுள்ளது. அதன் தொடக்கமே "பொறுப்பான பதவிகளில் தகுதியானவர்கள் அமரும்போது தான் அந்தப் பதவிக்குப் பெருமை, பதவியால் அலங்கரிக்கப்படுபவர் களைவிட யாரால் அந்தப் பதவி அலங்கரிக் கப்படுகிறது என்பதைப் பொறுத்துத்தான் மரியாதை. அரசியல் சட்ட அமைப்புகளான குடியரசுத் தலைவர், உச்ச நீதிமன்ற நீதிபதி, தலைமைத் தேர்தல் ஆணையர், தலைமைத் தணிக்கை ஆணையர், தலைமை ஊழல் கண்காணிப்பு ஆணையர், ஆளுநர்கள் போன்ற எல்லா பதவிகளுமே சரியானவர்கள் பதவியில் இருந்தால் மட்டுமே அந்தப் பதவிக்கும் பெருமை, தேசத்துக்கும் பெருமை" என்று ஆரம்பிக்கின்றது. இந்தக் கருத்துக்குச் சொந்தக்காரர் யார் தெரியுமா? எஸ். குரு மூர்த்தி. அவர் யார் என்பதை விளக்கத் தேவையில்லை; அனைவரும் அறிந்த உண்மை என்பதால்!

அந்த கட்டுரையாளர் குறிப்பிடும் இந்தப் பதவிகளில் எல்லாம் "அவாள்" அமர்ந்தால்தான் அந்தப் பதவி அலங்கரிக்கப்படுமாம்; அப்போதுதான் அந்தப் பதவிக்குப் பெருமையாம். குறிப்பாக குடியரசுத் தலைவர் பதவியிலே ஆர். வெங்கட்ராமன் இருந்தபோது தான் சரித்திரத்தில் இடம் பெற்றாராம். ஆனால் மற்ற குடியரசுத் தலைவர்கள் எல்லாம் அந்தப் பதவியை அலங்கரிக்கவில்லையாம்! விதிமுறைகளை நிலைநாட்டிய குடியரசுத் தலைவர் (ரூல்புக் பிரசிடென்ட்) என்று ஆர். வெங்கட் ராமன் பெயர் பெற்றவராம்! எப்படி ஆர். வெங்கட்ராமன் விதிமுறைகளை நிலை நாட்டினார் என்பதற்கு ஓர் உதாரணம் நம் தமிழ்நாட்டை வைத்தே கூறலாமே?

1990ஆம் ஆண்டு தமிழகச் சட்டமன்றத்தில் மொத்தம் 234 இடங்களில் தி.மு.கழகம் 142 இடங்களைப் பெற்றிருந்தது. அந்த அளவிற்கு பெரும்பான்மை இருந்த போதிலும், பிப்ரவரி

2ந்தேதியன்று தமிழகச் சட்டப் பேரவையில் நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்படவிருந்த நிலையில் அவசர அவசரமாக ஜனவரி 30ஆம் தேதி இரவு ஆட்சி கலைக்கப்பட்டது. இந்திய நாட்டின் தந்தை உத்தமர் காந்தி அடிகளை கோட்சே எனும் கொடியவன் சுட்டுக் கொன்ற நாள் ஜனவரி 30 தான்! அதே நாளில் இந்தியாவின் ஜனநாயகத்தை தமிழகத்தைச் சேர்ந்த அ.தி.மு.க. வினரின் ஆலோசனைப்படி அப்போது பிரதமராக இருந்த சந்திரசேகரும், குடியரசுத் தலைவராக இருந்த ஆர். வெங்கட்ராமனும் சேர்ந்து கூட்டு சதி நடத்திக் கொன்று குவித்தார்கள். அந்தச் சதிக்கு முழுக்க முழுக்க உடன்பாடாகச் செயல்பட்ட குடியரசுத் தலைவராக இருந்த ஆர். வெங்கட்ராமன் அவர்களைத்தான் தினமணி கட்டுரையாளர் விதிமுறைகளை நிலைநாட்டி சரித்திரத்தில் இடம் பெற்றவர் என்று புகழ்ந்துரைத்துள்ளார்.

ஆளுநரிடம் அறிக்கை பெறாமலேயே, இந்திய அரசியல் சட்ட வரலாற்றில் முதல் முறையாக 356வது பிரிவில் உள்ள "Otherwise" என்கிற ஒரு வார்த்தையைப் பயன்படுத்தி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மையான உறுப்பினர்களைக் கொண்ட ஒரு அரசை, சட்டத்தின் சந்து பொந்துகளைத் தேடி நுழைந்து அன்றைய தினம் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் கலைத்தார் என்பதை தமிழகம் நன்றாகவே அறியும். இன்னும் ஆதாரத்தோடு கூற வேண்டுமேயானால் 25-12-1990 அன்று சென்னைக்கு சங்கராச்சாரியாரைச் சந்திப்பதற்காக அன்றைய பிரதமர் சந்திரசேகர் சென்னைக்கு விமானத்தில் வந்தபோது, விமான நிலையத்தில் முதலமைச்சர் என்ற முறையில் நானும், அப்போது ஆளுநராக இருந்த பர்னாலா அவர்களும் மற்றும் பேரவைத் தலைவர், அமைச்சர்கள், அதிகாரிகள் சென்று வரவேற்றோம். அப்போது விமான நிலையத்திற்கு எதிர்க்கட்சியிலே இருந்த ஜெயலலிதாவும் வருகை தந்து பிரதமரை வரவேற்றார். எதிர்க்கட்சியாக அ.தி.மு.க. இருந்தபோது, எப்போதாவது பிரதமரை வரவேற்க ஜெயலலிதா விமான நிலையத்திற்கே வந்தது உண்டா? கிடையாது. ஆனால் 1990இல் ஜெயலலிதா விமான நிலையத்திற்கே வந்து பிரதமரை வரவேற்றார். காஞ்சிபுரத்தில் செய்தியாளர்கள் பிரதமர் சந்திரசேகரிடம் தமிழக அரசு கலைக்கப்படும் என்று சொல்கிறார்களே என்று கேட்டபோது, "யார் இந்த வதந்தியைக் கிளப்பினார்களோ எனக்குத் தெரியாது. நான் பொதுவாக எச்சரிக்கை செய்வதில்லை. எங்கேயாவது நாட்டில்

குழப்பமோ, சட்டம் ஒழுங்கோ பாதிக்கப்பட்டால் மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம். வேறு ஒன்றும் இல்லை" என்று பதிலளித்தார்.

ஆனால் அதே நாள் மாலையில் பிரதமர் சந்திரசேகருக்கு ஜெயலலிதா வீட்டில் தேனீர் விருந்து அளிக்கப்பட்டது. பிரதமரை வழியனுப்ப விமான நிலையத்திற்கே ஜெயலலிதா வந்தார். அங்கேயிருந்த செய்தியாளர்களிடம் தமிழக அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டுமென்று பிரதமரிடம் வலியுறுத்தியதாகக் கூறினார். கதை இத்துடன் முடியவில்லை.

அதற்கடுத்த நாள், சென்னையில் ராஜ்பவனில் தங்கியிருந்த குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் அவர்களை ஜெயலலிதா சந்தித்தார். அவரிடமும் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சரியில்லை, இலங்கைப் போராளிகளைக் கைது செய்வதாக முதல்வர் கருணாநிதி கூறுவது வெறும் கண்துடைப்பு என்றெல்லாம் புகார்களைக் கூறினார். மீண்டும் ஒருமுறை ஜெயலலிதா குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் அவர்களைச் சந்தித்து புகார் மனு ஒன்றையே கொடுத்தார். அந்தப் புகார் மனுவிலும் விடுதலைப் புலிகளின் செயல்களுக்கு தி.மு.க. அரசு உடந்தையாக இருப்பதாகக் கூறினார்.

10-1-1991 அன்று மாநிலங்களவையில் முரசொலி மாறனின் கேள்விக்குப் பதிலளித்த பிரதமர் சந்திரசேகர், "எந்தவொரு மாநிலத்திலும் அரசியல் சட்டம் 356வது பிரிவைப் பயன்படுத்தி குடியரசுத் தலைவரின் ஆட்சியைப் பிரகடனம் செய்ய அரசாங்கம் விரும்பவில்லை" என்று உறுதியளித்தார். ஆனால் மத்திய அரசு தி.மு. கழக அரசைக் கலைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு தமிழக ஆளுநராக இருந்த பர்னாலா அவர்களை டெல்லிக்கு அழைத்து அறிக்கை கொடுக்குமாறு கேட்டபோது, அந்த பஞ்சாப் சிங்கம் பர்னாலா அதற்கு மறுத்துவிட்டார். அந்த நிலையில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்கள் தலைமையில் தேசிய முன்னணியின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று, குடியரசுத் தலைவர், தினமணி கட்டுரையாளர் "விதி முறைகளை நிலை நாட்டிய திரு.ஆர். வெங்கட்ராமன்" என்று யாரைப் பாராட்டி எழுதியிருக்கிறாரோ, அவரைச் சந்தித்து ஜனநாயக விரோதமாக நடவடிக்கை எடுக்காதீர்கள் என்று கேட்டுக் கொண்ட பிறகும்,

அந்தக் கோரிக்கையை ஏற்காமல், தமிழக ஆட்சியைக் கலைத்தவர் தான் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள்!

திரு. வெங்கட்ராமன் அவர்கள் இதையெல்லாம் செய்த பிறகும், நமக்கு அவரிடம் நேரடியாக எந்தப் பகையும் இல்லை. இதையெல்லாம் இப்போது தெரிவிக்க வேண்டுமென்றும் நமக்கு எண்ணம் இல்லை. இதெல்லாம் நடந்து முடிந்து போன சம்பவங்கள். ஆனால் இவைகளையெல்லாம் ஞாபகமூட்டுமாறு தினமணி கட்டுரையாளர் நம்மைப் பிடித்துத் தள்ளுகிறார். ஆர். வெங்கட் ராமன் அவர்களை இவர்கள் பாராட்டுவது பற்றிக் கூட நமக்கு கவலையில்லை. ஆனால் அந்தப் பதவியில் இருந்த மற்றவர்களையெல்லாம் எந்த அளவிற்கு தூசுக்குச் சமமாக இழிவுபடுத்தி தினமணிக் கட்டுரையாளர் எழுதியிருக்கிறார் தெரியுமா?

- குடியரசுத் தலைவர் வி.வி.கிரி, இந்திரா காந்தி அனுப்பும் உத்தரவு எதுவாக இருந்தாலும், கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்டார்.
- "ரப்பர் ஸ்டாம்ப்" என்கிற கேலிப் பெயருக்கு ஆளானவர். சிறுபான்மையினத்தைச் சேர்ந்த பக்ருதீன் அலி அகமது, ஆளும் கட்சியின் கைப்பாவையாகவும், படித்துப் பார்க்காமல் கையொப்பமிடும் இயந்திரமாகவும் செயல்பட்ட அவலம் நடைபெற்றது.
- பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த கியானி ஜெயில் சிங் தரம் தாழ்ந்த அரசியல்வாதி போலச் செயல்பட்டவர்.

இவ்வாறு குடியரசுத் தலைவர் பதவி நாற்காலியிலே அமர்ந்திருந்த இந்தப் பெருமகன்களைப் பற்றி எழுதிய தினமணி கட்டுரையாளர், பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு குடியரசுத் தலைவர் பதவி தனது இழந்த மரியாதையையும், பெருமையையும் மீண்டும் பெற்றது ஆர். வெங்கட்ராமன், குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது தான் என்று எழுதியிருக்கிறார் என்றால் அது என்ன நியாயம் என்பதை "அவாள்" தான் கூற வேண்டும்.

கடைசியாக இன்றைய குடியரசுத் தலைவர், முதன் முதலாக ஒரு பெண்மணி அந்தப் பெருமைமிகு பதவியிலே அமர

வேண்டுமென்று இந்தியாவே எண்ணி, தி.மு.கழகமும் அதற்குப் பெருமுயற்சியெடுத்துக் கொண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட அம்மையார் பிரதிபா பாட்டீல் பற்றி இந்தக் கட்டுரையாளர் என்ன எழுதுகிறார் தெரியுமா?

"நேரு குடும்பத்தில் சமைப்பது - வரும் பார்வையாளர்களுக்கு டீ, காபி கொடுப்பது - பாத்திரங்களைக் கழுவுவது என்று கௌரவம் பார்க்காமல் சேவை செய்திருக்கிறார் - பத்துப் பாத்திரம் தேய்த்த நன்றி விசுவாசத்துக்குக் கொடுக்கப்பட்ட பதவி" என்றெல்லாம் யாரோ கூறியதாக தினமணி கட்டுரையாளர் எழுதியிருக்கிறார் என்றால், இந்திய அரசியல் சட்டத்தின் தலைமைப் பதவியையே ஒருவர் தவறாக விமர்சனம் செய்திருக்கிறார் என்ற காரணத்திற்காக அரசே அவர் மீது வழக்குக் கூட போடலாம்!

கட்டுரையை முடிக்கும்போது கூட "ஏதாவது வீட்டு வேலை நன்றாகச் செய்யும் ஊழியர்" ஒருவரை அந்தப் பதவிக்கு நியமனம் செய்யலாமே என்றெல்லாம் எழுதியிருக்கிறார் என்றால், அந்தக் கட்டுரையிலே அவர்களுக்கே உரிய எவ்வளவு "குசும்புத்தனம்" இடம் பெற்றுள்ளன என்பதை இனியாவது திராவிட மக்கள் புரிந்து கொண்டு, அதற்கேற்ப செயல்பட முன் வர மாட்டார்களா என்ற ஆதங்கத்தில்தான் இந்தக் கடிதம்!

அன்புள்ள

மு.க.

10-6-12

3633. யார் பெற்ற பிள்ளைக்கு; யார் "தாய் முறை" கோருவது?

உடன்பிறப்பே,

புதுக்கோட்டை தொகுதி இடைத் தேர்தல் சூறாவளி பிரச்சாரத்திற்காக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று மதியம் தனி விமானத்தில் புறப்பட்டுச் சென்று ஒன்பது இடங்களிலே பிரச்சாரம் செய்துவிட்டு, நேற்றிரவே சென்னை திரும்பியிருக்கிறார். அந்தத் தொகுதியிலே திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிட வில்லை. இருந்தாலும் ஜெயலலிதாவுக்கு தி.மு. கழகத்தையும் என்னையும் தாக்கிப் பேசா விட்டால் பேச்சு வராது போலும்! தனது பேச்சின் தொடக்கத்தில், அ.தி.மு.க.வின் ஆதரவோடு அந்தத் தொகுதியில் வெற்றி பெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சகோதரர் முத்துக்குமரன் மரணமடைந்ததையொட்டி இடைத் தேர்தல் நடைபெறுகிறது என்று மறக்காமல் சொல்லியிருக்கிறார். ஆனால் அந்தத் தொகுதியில் யாரை நிறுத்துவது என்ற பிரச்சினை எழுந்தபோது, அந்தத் தொகுதியில் ஏற்கனவே பொதுத்தேர்தலில் நின்றவர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் என்பது மறந்து போய் விட்டது போலும்! அங்கே அ.தி.மு.க. நிற்குமென்று தன்னிச்சையாகவே அறிவித்தார்கள். அது ஏற்கனவே தோழமைக் கட்சியாகிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நின்ற தொகுதி ஆயிற்றே, குறைந்தபட்சம் அரசியல் நாகரிகம், பண்பாடு கருதியாவது அந்தக் கட்சியின் தலைவர்களை அழைத்து ஒரு வார்த்தை கேட்டுக் கொள்வோம் என்றுகூட நினைக்கவில்லை. அப்படி அழைத்துக் கேட்டால்கூட, அதற்கு மறுப்பு தெரிவிக்கின்ற தலைவரா அந்தத் தலைவர்? எனவே மரியாதைக்காக ஒருமுறை அழைத்துக் கேட்டிருக்கலாம்! ஆனால் அதற்குக்கூட மனம் வரவில்லை. ஆனால் வேட்பாளரை நிறுத்தி விட்டு, தற்போது வாக்களிக்கின்ற நேரம் வந்ததும் இறந்துபோன முத்துக் குமரனின் குடும்பத்தினரை கோட்டைக்கே அழைத்து முதல் அமைச்சர் ஜெயலலிதா தரிசனம் தருகிறார். அந்தக் கட்சியின் தலைவர்களை அழைத்து

கோட்டையில் பேச்சு நடத்தி, புகைப்படத்தை ஏடுகளிலே வெளியிடுகிறார், தற்போது புதுக்கோட்டைக்குச் சென்று பிரச்சாரத்தைத் தொடங்கிய போதும் சகோதரர் முத்துக்குமரன் அகால மரணமடைந்ததை யொட்டி நடைபெறும் இடைத்தேர்தல் என்றெல்லாம் ஞாபகத்தோடு சொல்லியிருக்கிறார்!

புதுக்கோட்டை தேர்தல் பிரச்சாரத்தில் ஜெயலலிதா பேசும்போது, "சங்கரன்கோவில் இடைத்தேர்தல் பிரச்சாரத்தின்போது நடைபெறுவது "இடைத்" தேர்தல் அல்ல; ஜெயலலிதா தலைமையிலான ஆட்சியின் செயல்பாடுகளை "எடை" போடும் தேர்தல் என்று சொன்ன தி.மு.க. தலைவர் கருணாநிதி, இந்த "இடைத்" தேர்தலை எதிர்கொள்ள முடியாமல் "நடை"யைக் கட்டி விட்டார்" என்று நாம் அந்தத் தொகுதியில் போட்டியிடாமல் புறக்கணித்ததைப் பற்றி கிண்டல் செய்திருக்கிறார்.

அவரே தனது பேச்சில் புதுக்கோட்டை நகராட்சியின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக அரசின் சார்பில் சிறப்பு உதவித் தொகையாக 50 கோடி ரூபாய் வழங்கப்பட்டதையும், மேலும் நூற்றாண்டு விழா நினைவுத் தூண் மற்றும் வளைவுகள் அமைக்க உத்தரவிட்டிருப்பதையும் சொல்லியிருக்கிறார். இடைத்தேர்தல் நடைபெறும் தொகுதியில் இவ்வாறு பிரத்யேகமாக அரசின் சார்பில் தேர்தல் விதி முறைகளுக்கு மாறாக செய்வது சரிதானா என்பதை தேர்தல் ஆணையம் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. அதையெல்லாம் ஏற்கனவே உணர்ந்த காரணத்தாலும், தேர்தல் அறிவிப்புக்கு முன்பேயே அமைச்சர்கள் பட்டாளத்தையே அந்தத் தொகுதியிலே கொண்டு போய் குவித்து காவல் துறையினரின் துணையோடு பணத்தை வாரி வாரி இறைத்த காரணத்தாலும்தான் திராவிட முன்னேற்றக் கழகம் அந்தப் புதுக்கோட்டை இடைத் தேர்தலிலே போட்டியிடுவதில்லை என்று அறிவித்தது.

இதற்கு முன்பு அ.தி.மு.க. இடைத் தேர்தல்களில் "நடை"யைக் கட்டிய நிகழ்ச்சிகள் நடந்ததே கிடையாதா? 18-8-2009 அன்று கம்பம் சட்டமன்றத் தொகுதியில் இடைத் தேர்தல் நடைபெற்றபோது அ.தி.மு.க. அங்கே நிற்கவில்லை. தி.மு.க. சார்பில் கம்பம் ராமகிருஷ்ணன் அங்கே போட்டியிட்டபோது, அவரை எதிர்த்து தே.மு.தி.க. தான் போட்டியிட்டது.

18-8-2009 அன்று திருவைகுண்டம் தொகுதியில் இடைத் தேர்தல் நடைபெற்ற போது, தி.மு. கழகம் அரசியல் நாகரிகத்தோடு அதற்கு முன்பு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அந்தத் தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் கட்சிக்கு விட்டுக் கொடுத்து - காங்கிரஸ் வேட்பாளராக திரு. சுடலையாண்டி போட்டியிட்ட போது, அந்தத் தொகுதியில் அ.தி.மு.க. போட்டியிடாமல் "நடை"யைக் கட்டியதை ஜெயலலிதா மறந்து விடலாமா?

அதுபோலவே அதே நாளில் நடைபெற்ற தொண்டாமுத்தூர் தொகுதி இடைத் தேர்தலில் அ.தி.மு.க. போட்டியிட்டதா? கிடையாதே! தி.மு.க. வின் தோழமைக் கட்சியான காங்கிரஸ் கட்சிதான் நமது அணியின் சார்பில் போட்டி யிட்டது. அப்போது ஜெயலலிதா "நடை"யைக் கட்டினாரே தவிர, போட்டியிடவில்லையே?

அது மாத்திரமல்ல; அதே நாளில் நடைபெற்ற பர்கூர் தொகுதி இடைத் தேர்தலிலும் ஜெயலலிதா "நடை"யைக் கட்டினாரே தவிர, போட்டியிடவில்லையே? தமிழ்நாட்டு மக்களுக்கு ஞாபகம் இருக்காது என்ற நம்பிக்கையில் புதுக்கோட்டையில் சென்று தி.மு.க. "நடை"யைக் கட்டியதாகச் சொன்னாரா?

இன்னும் சொல்ல வேண்டுமா? இளையான் குடியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் என்ன நிலை? அ.தி.மு.க. போட்டியிடவே இல்லை! என்ன காரணம்? "நடை"யைக் கட்டிய செயல் தானா?

2006ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரை தி.மு. கழக ஆட்சியில் நடைபெற்ற 11 சட்டமன்ற இடைத் தேர்தல்கள் அனைத்திலும் தி.மு. கழகமும், அதன் தோழமைக் கட்சியான காங்கிரசும்தான் வெற்றி பெற்று, ஜெயலலிதாவின் அ.தி.மு.க. ஆறு இடங்களில் போட்டியிட்டு ஒரு இடத்தில் கூட வெற்றி பெறவில்லை என்பதும், குறிப்பாக பென்னாகரம் தொகுதியில் 27-3-2010 அன்று நடைபெற்ற இடைத் தேர்தலில் கழக வேட்பாளர் பி.என்.பி. இன்ப சேகரன் 77,669 வாக்குகளையும், இரண்டாவதாக பா.ம.க. வேட்பாளர் ஜி.கே.எம். தமிழ்க் குமரன் 41,285 வாக்குகளையும், மூன்றாவதாகத்தான் ஜெயலலிதாவின் அ.தி.மு.க. 26,787 வாக்குகளையும் பெற்று - குறிப்பாக அ.தி.மு.க. அந்தத் தேர்தலில் மூன்றாவதாக வந்தது மட்டுமல்ல; டெபாசிட் தொகையையே பறி கொடுத்தது.

இதையெல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்ற நினைப்போடு ஜெயலலிதா புதுக்கோட்டைக்குச் சென்று அங்கே எதிர்த்துப் போட்டியிடுகின்ற கட்சிகளை "டெபாசிட்" இழக்கச் செய்ய வேண்டுமென்று கிண்டல் செய்து பேசியிருக்கிறார்.

அ.தி.மு.க. வின் தலைவராக அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதல் அமைச்சராக இருந்தபோதே, அண்ணாநகரிலும், மயிலாடுதுறையிலும் நடைபெற்ற இடைத் தேர்தல்களில் தி.மு.கழகம் வெற்றி வாகை சூடியிருக்கிறது. எனவே அம்மையாரே "நா காக்க"!

புதுக்கோட்டையில் பேசிய ஜெயலலிதா; மின்சாரத் தடை காரணமாக பொதுமக்கள் வருத்தமாக இருப்பார்கள் என்பதை தான் அறிவேன் என்றும், அதற்குக் காரணம் ஏற்கனவே இருந்த தி.மு. கழக ஆட்சிதான் என்றும், வருங்காலங்களில் மின் தேவை நிறைவு செய்யப்படும் என்று கூறியதோடு, எந்தெந்த மின் திட்டங்களிலிருந்து எவ்வளவு மின்சாரம் விரைவில் கிடைக்கும் என்றதோர் பட்டியலையும் அங்கே பேசியிருக்கிறார், இல்லை படித்திருக்கிறார்! அவர் படித்த பட்டியலிலே உள்ள அனைத்து மின் நிலையங்களும்

தி.மு. கழக ஆட்சியிலே அடிப்படை கட்டமைப்புப் பணிகள் தொடங்கப்பட்ட திட்டங்கள் என்பதை நான் பலமுறை அறிக்கைகள் மூலமாகச் சொல்லியிருக்கிறேன்.

உதாரணமாக எண்ணூர் அனல் மின் நிலைய இணைப்பு மூலமாக 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் திட்டம், தி.மு. கழக ஆட்சியில்

8-12-2006இல் 3,136 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. அதன் உற்பத்திதான் 2013 ஆகஸ்டில் தொடங்கவுள்ளது. கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தைத்தான் ஜெயலலிதா ஏதோ தனது ஆட்சியில், தன் முயற்சியால் வருகின்ற திட்டம் போல புதுக்கோட்டையில் சென்று பேசியிருக்கிறார்.

மேட்டூர் அனல் மின் நிலையத்தில் 3,100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக் கூடிய ஒரு திட்டம்

2-5-2007இல் தொடங்கப்பட்டது. கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட அத்திட்டத்தின் உற்பத்திதான் விரைவிலே வரவுள்ளது.

வடசென்னை அனல் மின் நிலையத்தில் 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக் கூடிய வகையில் 2,475 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 26-6-2007இல் கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டத்தின் உற்பத்தி மிக விரைவில் வரவுள்ளது.

உடன்குடியில் பி.எச்.ஈ.எல். மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் இணைந்து கூட்டுத் திட்டத்தின்கீழ், ஒவ்வொன்றும் 800 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக் கூடிய இரண்டு திட்டங்கள் 15-10-2007இல் 8,362 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கழக ஆட்சியில் தொடங்கப் பட்டது. இந்தத் திட்டத்தைத்தான் மீண்டும் தற்போது இந்த ஆட்சியிலே தொடங் கவுள்ளதாக ஜெயலலிதா அறிவித்தார்.

2006இல் தி.மு. கழக ஆட்சி அமைந்த பிறகு, வருங்காலத் தேவையைக் கருத்தில் கொண்டு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக 2010-2011இல் 1400 மெகாவாட் மின்சாரமும், 2011-2012இல் 3316 மெகாவாட் மின்சாரமும், 2012-2013இல் 1222 மெகாவாட் மின்சாரமும், 2013-2014இல் 1860 மெகாவாட் மின்சாரமும் - ஆக மொத்தம் 7798 மெகாவாட் மின்சாரம் பல்வேறு மின் திட்டங்களின் மூலமாகக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டது.

2006ஆம் ஆண்டு தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்த பின்னர் பல்வேறு புதிய தொழிற்சாலைகள் ஆங்காங்கு தொடங்கப்பட்டதால் மின் தேவை அதிகமாயிற்று. 2001 முதல் 2006ஆம் ஆண்டுவரை ஆட்சியிலே இருந்த அ.தி.மு.க.வின் தலைவி ஜெயலலிதா, எதிர்காலத் தேவையைக் கணக்கிட்டு இந்த அளவிற்கு அப்போதே முயற்சிகள் எடுத்திருப்பாரானால், தற்போது மின் பற்றாக்குறையே ஏற்பட்டிருக்காது. தமிழ்நாட்டு மக்கள் அவதிக்கு ஆளாகியும் இருக்க மாட்டார்கள்.

இதையெல்லாம் புதுக்கோட்டை தொகுதி வாக்காளப் பெருமக்கள் அறிய மாட்டார்கள் என்ற தைரியத்தில், முதலமைச்சர் ஜெயலலிதா அங்கே போய் கழக ஆட்சியினால்தான் மின்சாரப்

பற்றாக்குறை, நான்தான் வந்து அவற்றை நிவர்த்தி செய்தேன் என்றெல்லாம் கதை விட்டிருப்பதை நன்றாகவே அறிவார்கள். சிலரை சில நாள் ஏமாற்றலாம், பலரை பல நாள் ஏமாற்றலாம், ஆனால் எல்லோரையும் எப்போதும் ஏமாற்ற முடியாது!

அன்புள்ள,

மு.க.

11-6-2012

3634. தலைமைச் செயற்குழு, தக்க முடிவெடுக்கும்!

உடன்பிறப்பே,

"குட்டக் குட்ட குனிவது முட்டாள்தனம்; குனியக் குனியக் குட்டுவது அதைவிட முட்டாள்தனம்" என்று கிராமங்களில் சொல் வார்கள். அதைப்போல இன்றைய ஆட்சியினர் நம்மைக் குட்டிக் குட்டிக் குனிய வைத்திட நினைக்கிறார்கள். பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு. மக்கள் அ.தி.மு.க.வுக்கு வாக்களித் திருக்கிறார்கள். ஆட்சியில் இருந்து தாராளமாக ஆளட்டும். ஜனநாயகத்தில் அது அனுமதிக்கப்பட்ட ஒன்று. ஆனால் ஆட்சியில் அமர்ந்து விட்டோம் என்பதற்காக எதிர்க்கட்சிகளை அடக்கி ஒடுக்கிட வேண்டும், அழித்து விட வேண்டும், சர்வாதி காரியாக நடந்திட வேண்டுமென்று எண்ணினால் அவர்களுடைய கட்சிக்காரர்கள் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் எல்லோரும் எப்போதும் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று கருதிடக் கூடாது.

சேலம் மாவட்டக் கழகத்தின் செயலாளர் தம்பி வீரபாண்டி ஆறுமுகம், சுமார் 75 வயதுடையவர். கழகத்தில் தீவிரமாகப் பணியாற்றக் கூடியவர். அடக்குமுறைகளுக்கு அஞ்சாதவர். நெருக்கடி கால கொடுமை களையே நேரில் சந்தித்தவர். இதய நோயாளி. கடந்த ஓராண்டு காலத்திற்கு முன்பு "அப்பல்லோ" மருத்துவமனையிலே இருந்த போது, நான் நேரிலே இரண்டு மூன்று முறை சென்று பார்த்தேன். தப்பிப் பிழைத்தார். அவர்மீது எத்தனை வழக்குகள்?

அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் வராததுமாக 15-7-2011 அன்று அங்கம்மாள் காலனி நிலத்தை மோசடி செய்ததாக, 8 பிரிவின் கீழ் முதல் வழக்கு பதிவு செய்யப்பட்டது. 17-7-2011இல் சேலம் பிரிமியர் ரோலர் மில் நிலத்தை மோசடி செய்ததாக,

9 பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. 29-7-2011 அன்று தாசநாயக்கன்பட்டியைச் சேர்ந்த பாலமோகன்ராஜ் என்பவர் நிலத்தை ஆக்கிரமித்ததாக, 5 பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்த போலீசார், 30-7-2011 அன்று வீரபாண்டி ஆறுமுகத்தை கைது செய்து, கோவை சிறையில் அடைத்தனர்.

4-9-2011 அன்று கோயமுத்தூர் ஜுவல்லரி உரிமையாளர்களின் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக 8 பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்த போலீசார், கோவை சிறையில் இருந்து வெளியில் வந்த அவரை மீண்டும் இரண்டாவது முறையாக கைது செய்தனர். 6-10-2011 அன்று அக்ரோ கூட்டுறவு சங்க நில மோசடி வழக்கு,

14 பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் முதல் குற்றவாளியாக முன்னாள் எம்.எல்.ஏ. வீரபாண்டி ராஜேந்திரன் சேர்க்கப்பட்ட நிலையில், முதல் தகவல் அறிக்கையில் வீரபாண்டி ஆறுமுகம் பெயர் சேர்க்கப்படவில்லை. பின் நடந்த புலன் விசாரணையில் வீரபாண்டி ஆறுமுகம் பெயர் சேர்க்கப்பட்டது.

2-6-2012 அன்று நள்ளிரவு 12.45 மணிக்கு அங்கம்மாள் காலனிக்குள் புகுந்த ரவுடிகள், குடிசைகளை அடித்து நொறுக்கி தீ வைத்துக் கொளுத்தினர். ரவுடிகளுடன் சேர்ந்து கூட்டு சதி செய்ததாக வீரபாண்டி ஆறுமுகம் மீது வழக்கு பதிவு செய்த போலீசார், ஜூன் 3ஆம் தேதி, சென்னையில் அவரை கைது செய்து வேலூர் சிறையில் அடைத்தனர். இந்த வழக்கில் தான் வீரபாண்டி ஆறுமுகத்தை குண்டர் தடுப்புச் சட்டத்தில் 18-6-2012 அன்று கைது செய்வதற்கான உத்தரவை பிறப்பித்திருக்கிறார்கள்.

இதில் எந்த ஒரு வழக்கிலாவது விசாரணை நடைபெற்று, சாட்சிகள் விசாரணை முடிந்து குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டதா? அதற்குள் ஏன் இந்தக் கொடுமைகள்? அவர் தவறு செய்தவர் என்றே வைத்துக் கொள்வோம். சட்டப்படி எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்பதையும் ஒப்புக் கொள்வோம். அவரை சேலத்திலே கைது செய்து அவர் இதய நோயாளி என்பது தெரிந்திருந்தும் அங்கிருந்து கோவைக்கு வேனில் ஏற்றி அழைத்துச் செல்வதும், அங்கிருந்து வேனிலேயே சேலத்தில் அழைத்து வருவதும், பிறகு நீதி மன்றம் ஜாமீனில் விடுதலை செய்த பிறகு அடுத்தடுத்து

வழக்குகளைத் தொடுப்பதும், சென்னையிலே அவர் சாப்பிட உட்காருகின்ற நேரத்தில் கைது செய்து மருந்துகளைக் கூட எடுத்துக் கொள்ளவிடாமல் இழுத்துக் கொண்டு வேனில் ஏற்றி சென்னையிலிருந்து சேலத்திற்கு அழைத்துச் செல்வதும், பிறகு திரும்பவும் சென்னைக்கு அழைத்து வந்து புழல் சிறையிலே அடைப்பதும் - அடுத்த நாள் காலையில் அவரை சிறையிலே சென்று பார்க்க நானும், ஸ்டாலினும், துரைமுருகனும் வருவதாகத் தெரிவித்தவுடன், விடியற்காலையிலேயே புழல் சிறையிலே இருந்து வேலூர் சிறைக்கு மாற்றுவதும் என்ன கொடுமை? மனித நெஞ்சம் படைத்தவர்கள் நினைத்துப் பார்க்கட்டும். உண்மையான குற்றவாளிகளுக்குக்கூட கருணை காட்ட வேண்டும் என்பதுதானே நீதி! ஆறுவது சினம் என்பதுதானே முதுமொழி! வீரபாண்டி ஆறுமுகத்தின் வழக்குகளில் அவர் குற்றவாளி என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டதா? அதற்குள் ஏன் சங்கிலித் தொடர்போல இந்தக் கொடுமைகள்? மீனவர் சமுதாயத்தில் பிறந்த கே.பி.பி. சாமி என்ன குற்றம் செய்துவிட்டார்? அவர் கழகத்தில் செய்த தியாகத்திற்காக, உழைப்புக்காக அமைச்சர் பதவி தரப்பட்டது. அமைச்சர் பதவி வகித்தது அவர் செய்த குற்றமா? அவர் மீது குண்டர் சட்டம்! அவர் தம்பி கைது! பிள்ளைகள் கைது! நள்ளிரவிலே அவருடைய வீட்டிற்கு காவல் துறையினர் சென்று, மனைவி மக்களிடம் விசாரணை என்ற பெயரால் தாக்குதல்! என்ன நடக்கிறது இந்த நாட்டிலே? வேறு எந்த மாநிலத்திலாவது இந்தக் கொடுமைகள் உண்டா? குற்றம் செய்துவிட்டார்கள் என்றால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கட்டும். நீதிமன்றத்தில் விசாரணை நடக்கட்டும். நீதிபதிகள் தவறு என்று தண்டனை கொடுத்தால் ஏற்றுக் கொள்ளட்டும். அதற்குள் ஏன் இந்த அவசரம்?

மதுரை மாநகர் மாவட்டக் கழகத்தின் செயலாளர் தளபதி. அவரை எத்தனை முறை கைது செய்வார்கள்? கைது செய்ததுதான் செய்தார்கள். நீதி மன்றம் ஜாமீனில் விடுதலை செய்தது. அவர் வீட்டிற்குச் சென்று மனைவி மக்களைப் பார்க்கக்கூடவிடவில்லை. மீண்டும் கைது. ஒரு நாள் பொறுத்து, அவர் வீட்டிற்குச் சென்ற பிறகு, வீட்டிலே சென்று அடுத்த நாள் மீண்டும் கைது செய்திருக்கக் கூடாதா?

மற்றொருவர் திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் கலைவாணன். அவரை எத்தனை முறை கைது செய்வீர்கள்?

என்ன குற்றம்? சமச்சீர் கல்வித் திட்டத்தை ஆதரித்து நடை பெற்ற அறப்போரில் மாணவர்கள் கலந்து கொண்டு பள்ளிகளைப் புறக்கணித்தனர். அதிலே ஒரு மாணவர் கலந்துகொண்டு இல்லம் திரும்பும்போது அந்த மாணவர் சென்ற பேருந்து, லாரி ஒன்றோடு மோதியதில் அந்த மாணவன் இறந்துவிட்டார். இதற்கும் கலைவாணனுக்கும் என்ன தொடர்பு? ஆனால் அவர் மீது; போராட்டம் நடத்தியதால்தான் மாணவர் இறக்க நேரிட்டது என்று குற்றச்சாட்டு! இது அரசியல் காழ்ப்புணர்வுடன் போடப்பட்ட வழக்கு என்று கழக வழக்கறிஞர் அசன் முகமது வாதிட்டதை நீதிபதி ஏற்று ஜாமீனில் வெளியே செல்ல உத்தரவிட்டார். அவர் வீட்டிற்குச் செல்வதற்கு முன்பு மற்றொரு வழக்கு. திருச்சிக்குச் சென்ற கழகப் பொருளாளரை வரவேற்க கலைவாணன் அங்கே சென்ற அதே நேரத்தில் திருத்துறைப் பூண்டியில் ஒரு வெற்றிலைப் பாக்கு கடையிலே போய் தகராறு செய்தார் என்று வழக்கு. அதற்காக குண்டர் சட்டம்! வேடிக்கையாக இல்லையா? வினோதமாக இல்லையா?

சென்னை மாவட்டக் கழகச் செயலாளர், சட்டப்பேரவை உறுப்பினர் ஜெ. அன்பழகன். தந்தை காலத்திலிருந்து கழகத்திற்காகப் பாடுபட்டு வரும் குடும்பம். சென்னையிலே கைது செய்து, கோவைக்கு இழுத்துச் சென்றிருக்கிறார்கள். எப்படிப்பட்ட வஞ்சம் இது? என்ன ஆயிற்று அந்த வழக்கு?

விழுப்புரம் மாவட்டக் கழகச் செயலாளர் பொன்முடி, திருச்சி மாவட்டக் கழகச் செயலாளர் கே.என். நேரு, திண்டுக்கல் மாவட்டக் கழகச் செயலாளர் ஐ. பெரியசாமி, கோவை மாவட்டக் கழகச் செயலாளர் பொங்கலூர் பழனிச்சாமி, திருப்பூர் மாவட்டக் கழகச் செயலாளர் வெள்ளக்கோவில் சாமிநாதன், காஞ்சிபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன், விருதுநகர் மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.எஸ். எஸ்.ஆர். ராமச்சந்திரன், நெல்லை மாவட்டக் கழகச் செயலாளர் கருப்பசாமி பாண்டியன் என்று மூத்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் மீதெல்லாம் தேடிச் சென்று புகார்களை வாங்கி கைது செய்தார்கள். அந்த வழக்குகள் எல்லாம் என்னவாயிற்று? அத்தனை மாவட்டக் கழகச் செயலாளர்கள் வீடுகளிலும் சோதனை? சென்னையிலே பகுதிக் கழகச் செயலாளராக இருந்த தனசேகரன், கட்சிக்காக உழைத்த

தைத் தவிர வேறு என்ன செய்துவிட்டார்? அவர்மீது குண்டர் சட்டம்! வேறு எந்த ஆட்சியிலாவது ஓராண்டு காலத்தில் ஓர் அரசியல் கட்சியைச் சேர்ந்த இத்தனை பேர் மீது குண்டர் சட்டம் பாய்ந்தது உண்டா?

முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் புரசை ரெங்கநாதன் என்ன பாவம் செய்தார்? கட்சியிலே தீவிரமாக செயல்பட்டு வருகிறார். அது தவறா? எத்தனை வழக்குகள் அவர் மீது? குண்டர் சட்டம் வேறு! தற்போது என்னவாயிற்று? அவரை போலீஸ் காவலில் வைத்து விசாரிக்க வேண்டுமென்று கேட்டபோது உயர் நீதிமன்ற நீதிபதி அந்த வழக்கில் போலீஸ் காவல் தேவையற்றது, போலீஸ் காவலில் வைத்து விசாரிக்க அனுமதிக்க முடியாது என்றே கூறினார்.

ஈரோட்டில் என்.கே.கே.பி. ராஜா மாவட்டக் கழகச் செயலாளர். நள்ளிரவு 2 மணி அளவில் காவல் துறையினர் காம்பவுண்டு சுவர் ஏறிக் குதித்து, வீட்டிற்குள் சென்று கைது செய்திருக்கிறார்கள். அவரை ரிமாண்டில் வைக்க எந்தச் சான்றுகளையும், காரணங்களையும் போலீசார் தெரிவிக்கவில்லை என்று நீதிபதியே சொல்லியிருக்கிறார். அடிப்படை ஏதுமில்லாத, பூர்வாங்க ஆதாரம் எதுவுமில்லாத இதுபோன்ற கைது நடவடிக்கைகள் சட்டப்படி அனுமதிக்கத் தக்கவையா?

பொட்டு சுரேஷ் - மதுரையைச் சேர்ந்த கழகத் தோழர். அவர் மீது குண்டர் சட்டம். என்ன வாயிற்று? உயர்நீதி மன்ற நீதிபதிகள், திரு. நாகப்பன் அவர்களும், திரு. டி. சுதந்திரம் அவர்களும் அளித்த தீர்ப்பில், "குண்டர் தடுப்புச் சட்டத்தில் அடைக்கும் அளவுக்கு அவர் பொது அமைதிக்கும் பொது ஒழுங்குக்கும் குந்தகம் விளைவித்தார் என்பதற்கு எந்த ஒரு ஆதாரமும் இல்லை. எனவே அவரை குண்டர் சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்த உத்தரவை ரத்து செய்கிறோம்" என்று விடுதலை செய்தார்கள். எத்தனை முறை நீதிபதிகள் இந்த அரசைக் கண்டித்திருக்கிறார்கள்? இருந்தும் அதே பாதையில் இப்படிப்பட்ட பயங்கரப் பயணம் தொடர்கிறதென்றால் என்ன பொருள்?

திருச்சியில் மாவட்டக் கழகத் துணை செயலாளர், குடமுருட்டி சேகர் மீது குண்டர் சட்டம். என்னவாயிற்று? இன்னும் எத்தனை கழகத் தோழர்கள் மீது வழக்கு? சட்டப் பேரவை உறுப்பினர் கரூர்

கே.சி. பழனிச்சாமி - நாடாளு மன்ற உறுப்பினர் ரிதீஷ் - அனிதா ராதா கிருஷ்ணன், சட்டப்பேரவை உறுப்பினர் - கோவை மாநகரச் செயலாளர் வீரகோபால் - முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கோவை மணி - திருச்சியில் மாநகரச் செயலாளர் அன்பழகன் - மதுரையில் அட்டாக் பாண்டி, எஸ்.ஆர்.கோபி - ஜெயராமன் கைது - காஜாமலை விஜய் - கோவை பாரி - மதுரை வி.கே. குருசாமி - சட்டப்பேரவை உறுப்பினர் லால்குடி சவுந்தரபாண்டியன் - அன்பில் பெரியசாமி - கோவை மாவட்ட துணைச் செயலாளர் இ. ஆனந்த், பகுதிச் செயலாளர் சிவா, பொதுக்குழு உறுப்பினர் பசுபதி, மாநகர துணைச் செயலாளர் மதனகோபால், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் என்.புருசோத்தமன், வட்டச் செயலாளர் காயத்ரி பாலன் - கொரடாச்சேரி ஒன்றியச் செயலாளர் ஆர். பாலச்சந்திரன், திருத்துறைப்பூண்டி நகரச் செயலாளர் ஆர்.எஸ். பாண்டியன் - சேலத்தில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வீரபாண்டி ஆ. இராசா, கவுசீகப் பூபதி, பாரப்பட்டி சுரேஷ், பகுதிச் செயலாளர் எஸ். சுப்பிரமணி - ஈரோடு மாவட்டத் துணைச் செயலாளர் விசுவநாதன், குமார் முருகேஷ், ராஜேந்திரன் - திருப்பூர் மாவட்ட துணைச் செயலாளர் டி.கே. நாகராசன் - திண்டுக்கல் மாவட்டம் முரளி, க. விஜயன், த. மாரியப்பன், முருகேஸ்வரி, எஸ். முகமது இப்ராகிம், த.அசோக் - திருச்சி மாவட்டத்தில் செல்வம், ரவி, பெரியசாமி - மதுரையில் பொதுக்குழு உறுப்பினர்கள் கொடி. சந்திரசேகர், டாக்டர் நவநீதகிருஷ்ணன், கிருஷ்ணபாண்டி, முரளி என்கிற பத்மநாபன், பாண்டி, ஒச்சுப்பாலு என்று நீண்ட பட்டியல் - கைது செய்யப்பட்டவர்கள்.

கழகத்தை சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் மீது பொய் வழக்குகளைப் புனைந்து நடவடிக்கை எடுப்பதில்தான் காவல் துறை அக்கறை காட்டுகின்றது. அ.தி.மு.க. வைச் சேர்ந்த எம்.எல்.ஏ., பரஞ்சோதி மீது புகார் கூறப்பட்டு பதிவு செய்யப்பட்ட வழக்கில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யும்படி நீதிமன்றமே உத்தரவு பிறப்பித்திருந்தது. ஆனால் காவல் துறையினர் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய தயக்கம் காட்டி வந்தனர். எனவே புகார் கொடுத்தவர் மீண்டும் நீதி மன்றத்தில் இதைப் பற்றி முறையிட்டதன் பேரில் ஜூன் 19ஆம் தேதிக்குள் பரஞ்சோதி மீதான குற்றப் பத்திரிகையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் திருச்சி

ஜே.எம். 4வது நீதி மன்றத்தில் ஜூன் 19ஆம் தேதி இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, போலீசார் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யவில்லை. மாஜிஸ் திரேட் ராஜாராம் பரஞ்சோதி மீது ஏன் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவில்லை என்று காவல் துறையினரிடம் கேட்டபோது, "எம்.எல்.ஏ., பரஞ்சோதி போலீசாருக்கு சரியான ஒத்துழைப்பு கொடுக்கவில்லை, மேலும் அவரது கையெழுத்தை சரிபார்க்க கால தாமதமாகிறது" என்று பதிலளித்திருக்கிறார்கள். நீதிபதி வழக்கு விசாரணையை ஜூலை 9ஆம் தேதிக்கு ஒத்தி வைத்ததோடு, அன்றையதினம் பரஞ்சோதி மீது போலீசார் கண்டிப்பாக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டும் என்று கெடு விதித்துள்ளார்.

இந்தக் கொடுமையும் பழிவாங்குதலும் தொடர்ந்து கொண்டே வருகிறது. யாரை வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் கைது செய்யலாம் என்ற போக்கு! கழகத்தைச் சேர்ந்தவர்கள் மீது மட்டுமல்ல; தங்களுக்குப் பிடிக்காதவர்கள் மீதெல்லாம், தாங்கள் நினைத்ததைச் சாதிக்க வேண்டுமென்பதற்காக காவல் துறையினரின் துணையோடு இந்தக் கைது நடவடிக்கைகள நடை பெறுகின்றன. அண்ணாவின் பெயரை கட்சியிலே வைத்துக்கொண்டு இத்தகைய நடவடிக்கைகள் நடைபெறலாமா? அதற்காகத்தான் நாளை 22-6-2012 அன்று காலையில் கழகத்தின் அவசரச் செயற்குழு நடைபெறவுள்ளது. இந்த அடக்குமுறையைக் கண்டித்து ஜனநாயக ரீதியாகவும், சட்ட விதிமுறைகளின் படியும் என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப் பற்றி நமது செயற்குழுவிலே விவாதித்து முடிவெடுப்போம்!

அன்புள்ள,

மு.க.

21-6-2012

3635. களம் காணத் துடிக்குது, கழகப்படை!

உடன்பிறப்பே,

22-6-2012 அன்று நடைபெற்ற கழகத் தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் - வருகிற ஜூலை 4ஆம் தேதியன்று காலை தொடங்கி சிறை நிரப்பும் போராட்டம் நடத்துவதென்றும், அதை நடத்துவதற்கான காரணங்கள் என்ன என்பது பற்றியும் விளக்கமாகத் தெரிவித்ததோடு - போராட்டத்திற்கு முன்னேற்பாடாக மாவட்டத் தலைநகரங்களிலும், வட்டம் மற்றும் பெரு நகரங்களிலும் அறப்போர் விளக்கப் பொதுக் கூட்டங்கள் நடத்துவதென்றும் முடிவுசெய்ததோடு - அறப்போர் விளக்கப் பொதுக்கூட்டங்கள் நடைபெறும் இடங்களையும், அதில் கலந்து கொள்வோர் பற்றிய விவரங்களையும் விரைவில் தலைமைக் கழகம் அறிவிக்குமென்று சொல்லப்பட்டிருந்தது.

கழகத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர்களாக சுமார் 500 பேர் இருக்கிறார்கள். முப்பதுக்கு மேற்பட்ட மாவட்டக் கழகங்கள் இருக்கின்றன. அதுதவிர மாநகர் மாவட்டங்கள் இருக்கின்றன. கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளர்களாக தம்பிகள் ஆ. இராசாவும், திருச்சி என்.சிவாவும் செயற்குழு தீர்மானத்திற்குப் பிறகு அவசர அவசரமாக மாவட்டக் கழகச் செயலாளர்களையும், கழகத் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகியோரையும் தொடர்புகொண்டு கலந்தாலோசித்து பொதுக்கூட்டம் நடைபெறும் தேதிகளையும், பேச்சாளர்களையும் அறிவித்ததோடு, மற்ற பேச்சாளர்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எந்தெந்தப் பேச்சாளர்கள் என்ற பட்டியலையும் “முரசொலி”யில் அறிவித்திருந்தார்கள். நான்கூட அதைப் பார்த்தவுடன் கொள்கை பரப்புச் செயலாளர்களைத் தொடர்பு கொண்டு, எந்தெந்தப் பேச்சாளர்கள், எந்தெந்தத் தேதிகளில், எந்தெந்த ஊர்களில் என்ற விவரம் வெளியிடப் பட்ட பட்டியலில் தெளிவாகவும், விவரமாகவும் இல்லையே

என்று சுட்டிக்காட்டினேன். அதற்குள் சில பேச்சாளர்களுக்கு தங்கள் பெயர்கள் குறிப்பிடப்படவில்லையே என்று கோபம், வருத்தம்; அறப்போராட்ட அணிவகுப்பில் இடம் பெறாமல் போய் விடுவோமோ; என்ற ஆதங்கத்தால்!

நேற்று (25-6-2012) மாலையில் நானும், பொதுச்செயலாளரும் தலைமைக் கழகத்திலே அமர்ந்து கொள்கைப் பரப்புச் செயலாளர்களோடு கலந்துபேசி மாவட்டக் கழகச் செயலாளர்களோடு தொடர்புகொண்டு அறப்போர் விளக்கப் பொதுக் கூட்டங்கள் எங்கெங்கே நடைபெறும் என்ற விவரங்களைத் தொடர்ந்து வெளியிடவும் செய்து, அந்தப் பட்டியலும் இன்று - "முரசொலி"யிலே வெளிவந்துள்ளது.

கழக முன்னணியினரிடத்திலும், தொண்டர்களிடத்திலும் இந்தப் போராட்டம் குறித்து இந்த அளவிற்கு எழுச்சியும், ஆர்வமும் இருந்த போதிலும், ஆளுங்கட்சியின் விளம்பரத்துக்காக காத்துக் கிடக்கும் இரண்டு ஏடுகளுக்கு இந்த எழுச்சியையும் வேகத்தையும் பொறுத்துக் கொள்ள முடியாமல் பொய்ச் செய்தி வெளியிட்டு, தங்கள் எரிச்சலைத் தீர்த்துக்கொள்ள முயன்றிருக்கிறார்கள். குறிப்பாக "தினமலர்", 24-6-2012 தேதிய இதழில், "நமது நிருபர்" தந்த செய்தியாக, "தி.மு.க.வில் அதிருப்திக் குரல் போராட்ட அறிவிப்பால் போர்க்கொடி" என்ற தலைப்பில் - கட்சி நலனுக்காக இல்லாமல் தனிப்பட்ட ஆதாயங்களுக்காக தொண்டர்கள் சிறைக்குச் செல்ல வேண்டுமா என்றெல்லாம் கேட்பதாக தங்கள் "ராஜ விசுவாசத்தைக்" காட்டிக் கொண்டுள்ளார்கள். அதைப் பார்த்து விட்டு "தினமணி" நாளிதழோ, அதே "நமது நிருபர்" கொடுத்த தகவலாக, "சவாலில் தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள்-கலக்கத்தில் தொண்டர்கள்" என்ற தலைப்பில் போராட்டத்தைத் தொண்டர்கள் ஆதரிக்கவில்லை என்று தங்களின் "அம்மா அபிமானத்தை" தெரிவித்து மகிழ்ந்துள்ளார்கள்.

இப்படிப்பட்டவர்களின் காழ்ப்புணர்ச்சியும், வயிற்றெரிச்சலும் நமக்குப் புரிகிறது என்ற போதிலும் இந்தச் செய்திகளைப் பார்த்துவிட்டு, ஒவ்வொரு கழகத் தோழனும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு எப்படியும் மகத்தான வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்பதிலும், சிறைக்குப் போயே தீர வேண்டும் என்பதிலும் வேகமாக இருப்பதையும், ஏன் தொண்டர்களை விட, கழக முன்னணியிலே இருப்பவர்களே,

சிறைக்குச் செல்லத் தயாராகி விட்டோம் என்பதையும் என்னைச் சந்திக்கும் போதெல்லாம் ஆர்வத்தோடு சொல்லி வருகிறார்கள்.

ஆனாலும் பேச்சாளர்கள் கூட்டத்தில் என்னை விட்டு விட்டார்களே, போராட்டக் களத்திற்கு என்னை அழைக்காமல் இருந்து விட்டார்களே, என் பெயரைக் குறிப்பிடவில்லையே என்பதில் சிலருக்கு வருத்தம்! விரல்விட்டு எண்ணத்தக்க ஒருசிலர் இவ்வாறு கோபித்துக் கொண்ட போதிலும், ஒட்டுமொத்தமாக இந்தப் போராட்டத்திற்காக கழகத் தோழர்கள் இடையே ஏற்பட்டுள்ள எழுச்சியைப் பற்றி பல மாவட்டக் கழகச் செயலாளர்களும், முன்னணியினரும் தொடர்ந்து தொடர்பு கொண்டு செய்திகளைச் சொல்லும்போது மகிழ்ச்சியாக உள்ளது.

செயற்குழுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அடுத்த நாளிலிருந்து தொடர்ந்து இரண்டு மூன்று நாட்கள் "முரசொலி"யைப் பிரித்தால் எல்லா மாவட்டங்களிலும், பகுதிகளிலும் மாவட்டக் கழகக் கூட்டங்களும், பகுதிக் கழகக் கூட்டங்களும் நடைபெறும் விவரங்கள் - நிர்வாகிகளின் அவசரக் கூட்டங்கள்! இதோ இன்றைய முரசொலியில் விழுப்புரம் மாவட்ட தி.மு.க. செயலாளர் தம்பி பொன்முடி விடுத்துள்ள அறிவிப்பில்; அவருடைய மாவட்டத்தில் ஜூலை 4ஆம் தேதியன்று எட்டு இடங்களில் மறியல் இடங்கள் எவையெவை, அங்கே தலைமை யேற்பவர் யார், முன்னிலை வகிப்போர் யார் என்றும் நீண்ட பட்டியல் வெளிவந்துள்ளது.

திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர், தம்பி கலைவாணன் அந்த மாவட்டத்தில் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை ஒவ்வொரு மணிக்கும் ஒரு அணியாகப் பிரித்து, ஒவ்வொரு அணியும் யாருடைய தலைமையில் கலந்து கொள்ளும் என்று தட்டச்சு செய்து எனக்குப் பட்டியலை அனுப்பியிருக்கிறார்.

அதுமாத்திரமல்ல; சில மாவட்டங்களில் கழகத்தினரிடையே இதற்கு முன்பு இருந்த சிறு சிறு மாச்சரியங்களையெல்லாம் மறந்து விட்டு, இந்தப் போராட்டக் களத்திலே உணர்வு பூர்வமாக ஒன்றாகச் செயல்படுகிறார்கள் என்ற செய்திகளும் மன நிறைவளித்திடும் வண்ணம் வந்துகொண்டுள்ளன. உதாரணத்திற்கு ஒன்று. நேற்றையதினம் கழக நாடாளுமன்ற உறுப்பினர் தம்பி ரிதீஷ் ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார்.

கழகச் செயற்குழு நடைபெற்றபோது அதிலே பேசிய அந்த மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி சுப. தங்கவேலன், தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைவரும் ஒற்றுமையாக இந்தப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று பேசியதை யொட்டி, நான் பேசும்போது "ராமனாதபுரம் மாவட்டத்திலே கழகத் தோழர்கள் ஒற்றுமையாகப் போரிடுவோம் என்று அறிவித்திருப்பதே, இந்தப் போராட்டம் வெற்றி பெறும் என்பதை உணர்த்துகிறது" என்று குறிப்பிட்டிருந்தேன். அதைப்பற்றி தம்பி ரிதீஷ் எழுதும்போது, "தாங்கள் செயற்குழுவில் எங்கள் மாவட்டத்தைப் பற்றி வருத்தப்பட்டபோது மிகவும் வேதனையாக இருந்தது. உங்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பதுதான் தொண்டர்களாகிய எங்களைப் போன்றவர் களின் கடமை. இனிமேல் எங்கள் மாவட்டத்தில் நீங்கள் வருந்தும்படியாக எந்த நிகழ்ச்சியும் நடைபெறாது. தாங்கள் வருந்தும்படி ஏதாவது நடந்திருந்தால் எங்களை மன்னிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார். உள்ளூர் கோபதாபங்களின் காரணமாக ஒருசில மாவட்டங்களில் உள்ள கோஷ்டிப் பூசல்களை ஜூலை 4ஆம் தேதிய போராட்டம் ஒற்றுமைப்படுத்தும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். நீர் இடித்து நீர் விலகி விடுமா என்ன?

தொண்டர்களின் ஆர்வத்தையும், எழுச்சியையும் காணும்போது, இந்தப் போராட்டம் மிகப் பெரிய வெற்றியினை அடையும் என்பதில் சந்தேகம் இல்லை. மேலும் இந்தப் போராட்டத்தை நாம் தேவையில்லாமல் நடத்தவில்லை. போராடவேண்டும் என்பதற்காகவும் நடத்தவில்லை . கடந்த ஓராண்டுக் காலத்தில் அ.தி.மு.க. ஆட்சியினர் நடத்தி வருகின்ற அராஜகங்கள் எத்தனை? கழகத்தினர் எத்தனை பேர் மீது பொய் வழக்குகள்? எத்தனை பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்? எத்தனை பேர் மீது அடுக்கடுக்கான புகார்களைச் சுமத்தி காவல் துறை மூலமாக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? எத்தனை பேர் மீது குண்டர் சட்டம் போடப்பட்டுள்ளது? அந்தக் குண்டர் சட்டங்கள் பிறப்பித்தது சரியானது என்று ஏதாவது ஒரு வழக்கிலாவது சொல்லப்பட்டிருக்கிறதா? நீதிபதிகள் இந்தப் பொய் வழக்குகளுக்கு எதிராக எத்தகைய கண்டனங்களையெல்லாம் தெரிவித்திருக்கிறார்கள்? அதைப்பற்றி இந்த ஆட்சியினர் ஏதாவது பதில் சொல்கிறார்களா?

அ.தி.மு.க. ஆட்சியினர் எதிர்க்கட்சியினரை மட்டுமா பழி வாங்குகிறார்கள்? தங்களுக்கு யார் யாரைப் பிடிக்கவில்லையோ, யார் யாரை அடக்கி ஆள வேண்டுமென்று எண்ணுகிறார்களோ அவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் அறிய மாட்டார்களா? உதாரணமாக அவருடைய உடன்பிறவாச் சகோதரி சசிகலா, இன்றைக்கும் அவருடனே, அவர் வீட்டிலேயே இருப்பவரின் கணவர் நடராஜன் மீது 6 வழக்குகள் - விளார் பகுதியைச் சேர்ந்த ராமலிங்கம் தனக்குச் சொந்தமான 15 ஆயிரம் சதுர அடி நிலத்தை அபகரித்து விட்டதாக நடராஜன் தரப்பு மீது புகார் கொடுத்தார். வின்சென்ட் ஆல்பர்ட் என்பவர் தனது மனைவி மேரி பெயரில் உள்ள 4200 சதுர அடி வீடு மற்றும் கடைகளை நடராஜன் தரப்பினர் இடித்துத் தள்ளி ஆக்கிரமிப்புச் செய்ததாக புகார் கொடுத்தார். தஞ்சை அன்பு நகரைச் சேர்ந்த ரங்கராஜன் என்ற ஓய்வு பெற்ற வட்டார வளர்ச்சி அலுவலர் விளாரில் உள்ள தனது 25 சென்ட் நிலத்தை ஆக்கிரமித்து விட்டதாகப் புகார் கொடுத்தார். திருச்சி கொட்டப்பட்டு பகுதியைச் சேர்ந்த வரதராஜன் நிலத்தை விற்றதில் பண மோசடி செய்து ஏமாற்றியதாகப் புகார் கொடுத்தார். தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி அருகே சகுந்தலா என்பவருக்குச் சொந்தமான வீட்டை இடித்து ஆக்கிரமித்ததாகவும், விளார் கிராமத்தில் அமலபுஷ்ப மேரிக்குச் சொந்தமான 4,800 சதுர அடி பரப்பளவுள்ள இரு மனை இடங்களை நடராஜன் தூண்டுதல் காரணமாக உறவினர் கள் மிரட்டி பத்திரம் பதிவு செய்து கொண்டதாகவும் கூறப்பட்ட புகாரின் பேரில் நடராஜன் மற்றும் சிலர் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு - இந்த வழக்குகளின் காரணமாக அவர் கைது செய்யப்பட்டார். அந்த வழக்குகள் எல்லாம் என்னவாயிற்று?

வீட்டை இடித்து ஆக்கிரமித்தது தொடர்பான புகாரைக் கொடுத்தவரே திடீரென்று வாபஸ் பெற்றார். எப்படி அவர் வாபஸ் பெற்றார்? முதலில் எதற்காக புகார் கொடுத்தார்? நீதிமன்றத்தின் நேரம் எவ்வளவு வீணடிக்கப்பட்டது? பொய்ப்புகார் என்றால் அதை நம்பி காவல் துறை எப்படி நடவடிக்கை எடுத்தது? அது பொய்ப்புகாரா? உண்மையான புகாரா? பூர்வாங்க ஆதாரம் ஏதும் உள்ளதா? என்று விசாரித்திருக்க வேண்டாமா? உண்மையான புகார் என்று தெரியாத பட்சத்தில் கைது செய்யலாமா? உண்மையான எத்தனையோ புகார்கள் மீது நடவடிக்கை எடுக்க

முன்வராத போலீசார், பொய்ப்புகார் மீது எப்படி அவசரப்பட்டு நடவடிக்கை எடுத்தார்கள்? அதுவும் ஜெயலலிதா, சசிகலா மீது நடவடிக்கை எடுத்து நாளேடுகளில் அறிக்கை கொடுத்தவுடன், திடீரென்று புகார்கள் எப்படி வந்தன? சசிகலா மீண்டும் வந்து விட்டதால்தான், புகார் கொடுத்தவர்கள் அவற்றைத் திரும்பப் பெறுகிறார்களா? அவர்களாக திரும்பப் பெறுகிறார்களா அல்லது திரும்பப்பெற வைக்கப்படுகிறார்களா? அதற்குரிய விலை என்ன?

அந்த நடராஜன் சிறையிலிருந்து வெளியே வந்த பிறகு 12-5-2012 அன்று கொடுத்த பேட்டியில் என்ன சொன்னார்? "என் மீது போடப்பட்ட வழக்குகள் அனைத்தும் பொய் வழக்குகள். என் மீது போடப்பட்ட ஆறு வழக்கில் 2 பேர் தற்போது வாபஸ் பெற்றுள்ளனர். நில அபகரிப்புச் சட்டத்தை என்மீது மோசடியாகப் பயன்படுத்தி உள்ளனர். இதற்காக தலைமைச் செயலாளர், முதன்மைச் செயலாளர், உள்துறைச் செயலாளர், டி.ஜி.பி., திருச்சி ஐ.ஜி., டி.ஐ.ஜி., உள்ளிட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க சென்னை ஐகோர்ட்டில் 3 ரிட் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளோம். ஜெ. வீட்டில் இருந்து நான் வெளியேறி 20 ஆண்டுகள் ஆகிறது. என்னை கட்சியில் இருந்து நீக்கியதாக அறிக்கை வெளியிட்டார். நான் கட்சியில் உறுப்பினராகவே இல்லை. அப்படி இருந்ததாக அவர்களால் நிரூபிக்க முடியுமா? அவர்கள் என்ன செய்தாலும் அமைதியாக இருந்தேன். இனி அப்படி இருக்க மாட்டேன். நேரடியாக அரசியலில் இறங்குவேன். 2011 தேர்தல் அறிக்கையை தயாரித்துக் கொடுத்ததே நான்தான். பொன்ராஜ், பன்னீர் செல்வம் ஐ.ஏ.எஸ்., ஆகியோர்தான் லேப்டாப் உள்ளிட்ட இலவசங்களைச் சேர்த்தோம். அந்த அறிக்கையின் முதல் பிரதி என்கிட்டேதான் இருக்கு. சசிகலா மீண்டும் சேர்வதற்கு முன்னாடி அவர் பெயரில் வந்த அறிக்கை, அவர் கொடுத்த அறிக்கை அல்ல. என் மனைவிக்கு அறிக்கை தயாரிக்கத் தெரியாது. 3 முறை முதல்வராக இருப்பவராலேயே ஒரு அறிக்கை தயாரிக்க முடியாது. என்னை மாதிரி ஒரு இளிச்சவாயன் தான் ரெடி பண்ணித்தரணும். அப்படிச் செய்தாலும் ஒரு குறிப்புக் கூட இல்லாமல் பேசத் தெரியாது. என்னை நில அபகரிப்பில் கைது செஞ்சீங்களே, எத்தனை ஏக்கரை மீட்டீங்க? சார்ஜ் ஷீட்டாவதுபோட முடியுமா? சென்னையிலிருந்து தஞ்சாவூருக்கு 5 மணி நேரத்தில் காரில் போயிடலாம். என்னை கைது செய்து 12 மணி நேரம் அலைக்

கழிச்சாங்க. டி.ஐ.ஜி. அமல்ராஜ் தஞ்சாவூர் பக்கத்தில் செங்கிப் பட்டியில் ஒரு நடுக்காட்டில் வண்டியை நிறுத்தி வைத்துவிட்டார். எதற்கு? என்கவுண்டரில் என்னைச் சாகடிக்கவா? திருச்சி ஐ.ஜி. அலெக்சாண்டர் மோகன் தஞ்சாவூரில் ஒரு போலீஸ் ஸ்டேஷனில் உட்கார்ந்துக்கிட்டு எல்லா இன்ஸ்பெக்டர்களையும் கூப்பிட்டு என்மேலே ஏதாவது ஒரு கேஸ் போட்டுட்டு வாங்கன்னு உத்தரவு போடுறாராம்

இப்படியெல்லாம் பேட்டி கொடுத்து ஏடுகளில் எல்லாம் வெளிவந்ததே? இந்த அ.தி.மு.க. அரசு இதற்கு என்ன பதில் சொல்கிறது? இவர் ஒருவர் மட்டுமா? திவாகரன் மீதான வழக்கு என்னவாயிற்று? ராவணன் மீதான வழக்கு என்னவாயிற்று? இதைக் கேட்டால் குற்றமா? தினமணியும் தினமலரும் சீறுவதா?

மக்கள் ஐந்தாண்டுகளுக்கு வாக்களித்திருக்கிறார்கள் என்றால் தாராளமாக ஆண்டு விட்டுப் போகட்டும். கையிலே அதிகாரம் இருக்கிறது என்பதற்காக எதை வேண்டுமானாலும் செய்வதா? அதற்காகத்தான் ஜூலை 4ந்தேதிய போராட்டம். இன்று புதன் கிழமை. அடுத்த புதன்கிழமைதான் சிறை நிரப்பும் போராட்டம். ஒரு வாரம்தான் உள்ளது. அதற்கான முனைப்பான முயற்சிகளில் இன்றைக்கே ஈடுபடத் தயாராவீர்! அதற்கான அறப்போர் விளக்கக் கூட்டங்களை அமைதியான முறையில் தமிழகம் எங்கும் நடத்திடுவீர்! 22ஆம் தேதி புரசைவாக்கத்தில் கடலெனத் திரண்ட மக்களிடையே நான் குறிப்பிட்டபடி "தமிழன் யாருக்கும் தாழான் - யாரையும் தாழ்த்த மாட்டான்" என்பதை நிரூபித்திடுவீர்.

அன்புள்ள,

மு.க.

27-06-2012

3637. "இன்னே செல்க! இனிதே வெல்க!" என வாழ்த்தி வழியனுப்புகிறேன்!

உடன்பிறப்பே ,

22-6-2012 அன்று அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் என்னுடைய தலைமையில் கூடிய தி.மு.கழகத்தின் அவசரத் தலைமைச் செயற்குழு கூட்டத்தில் நாம் ஒருமனதாக நிறைவேற்றிய தீர்மானத்தில் - சட்ட நீதியை நிலைநாட்டவும், சர்வாதிகார அநீதியை எதிர்த்து வெற்றி காணவும் - களம் கண்டு போராட என்றைக்குமே கலங்காத கழகக் கண்மணிகள் ஒன்று திரண்டு அறப் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய நேரம் வந்து விட்டது என்பதை இந்தச் செயற்குழு சுட்டிக் காட்டுவதோடு; அதற்கான சிறை நிரப்பும் போராட்டத்தை வருகிற ஜூலை 4 அன்று காலை தொடங்கி நடத்துவதென செயற்குழு தீர்மானிப்பதோடு; அதற்கு முன்னேற்பாடாக மாவட்டத் தலைநகரங்களிலும், வட்டம் மற்றும் பெரு நகரங்களிலும் அறப்போர் விளக்கப் பொதுக் கூட்டங்களை நடத்துவது என்றும் செயற்குழு முடிவு செய்கிறது என்று கூறியதற்கேற்ப - தமிழகம் முழுவதும் கழகத்தின் தலைமைக் கழகப் பேச்சாளர்கள், பல்லாயிரம் பேர் திரண்ட அறப்போர் விளக்கப் பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டு, ஜூலை 4 ஆம் தேதியன்று கழகம் எதற்காக சிறை நிரப்பும் போராட்டத்தை நடத்த முன் வந்துள்ளது என்பதை விளக்கியிருக்கிறார்கள்.

தி.மு.கழகம் ஆளுங்கட்சியில் இல்லையே; எனவே சிறை நிரப்பும் போராட்டத்திற்கு அவ்வளவாக வரவேற்பு இருக்காது என்று அ.தி.மு.க. அரசும்; தொண்டர்களிடம் போராட்டத்தில் கலந்து கொள்வதற்கான ஆர்வம் இல்லை என்று "தினமணி", "தினமலர்" போன்ற ஏடுகளும் செயற்கையான செய்திகளை வெளியிட்டு மகிழ்ந்து வருகின்றன. ஆனாலும் தலைமைக் கழகத்திலே உள்ளவர்கள் பெருமை கொள்ளத்தக்க அளவிற்கு

மாவட்டம் முழுவதிலுமிருந்து வருகின்ற செய்திகள் இந்த அறப் போராட்டத்திற்கு எத்தகைய எழுச்சியும் ஆர்வமும் தொண்டர்களிடையே பெருக்கெடுத்துள்ளது என்பதை நமக்குத் தெரிவித்து வருகின்றன. ஒவ்வொரு மாவட்டக் கழகச் செயலாளர்களும் தங்கள் தங்கள் மாவட்டங்களில் எத்தனை இடங்களில் அறப்போராட்டம் நடைபெறும், அதற்கு யார் தலைமை வகிப்பார்கள், யார் முன்னிலை வகிப்பார்கள் என்ற அறப் போராட்ட விவரங்களையெல்லாம் பட்டியலிட்டு "முரசொலி"யிலே வெளியிட்டிருக்கிறார்கள். இந்த அறப்போரில் நானும் கலந்துகொள்ள வேண்டுமென்று எனக்கும் பேரவாதான்! ஏனென்றால் ஆர்ப்பாட்டக் கூட்டத்தில்கூட, மற்றவர்களைக் கலந்துகொள்ளச் செய்துவிட்டு ஒதுங்கியிருந்து ஓய்வெடுத்துப் பழக்கப்பட்டவன் நானல்ல. ஒவ்வொரு போராட்டத்திலும் நான் கலந்து கொண்டு, நான் வழியனுப்பப்பட்டிருக்கிறேனே தவிர, வழியனுப்புவோனாக என்றைக்கும் இருந்தது இல்லை. சிறை நிரப்பும் போராட்டத்தில் கலந்து கொள்பவனாக நான் அறிவிக்கப்படா விட்டாலும், தாம்பரம் கூட்டத்தில் நான் கூறியதைப்போல, இந்த வரிசையில் நின்று, அது தடைப்பட்டால் அடுத்த வரிசை, அந்த வரிசையும் தடைப்பட்டால் கடைசி வரிசை. அந்த வரிசையிலே கருணாநிதியும் இருப்பான் என்பதையும் நினைவூட்டி, முதல் வரிசையில் சிறையில் நான் இல்லாவிட்டாலும் என்னுடைய உள்ளமும் உணர்வும் சிறைக்குள்ளே சிறகடித்து உலவிக் கொண்டேயிருக்கும் என்பதை நீ நன்றாகவே அறிவாய்!

தற்போது நாம் நடத்துகின்ற அறப்போராட்டத்தைப் போல கடந்த காலங்களில் நாம் நடத்திய போது, அந்த அறப்போராட்டத்தை ஏற்பாடு செய்து, அதிலே கலந்து கொள்ளவும் செய்த நமது கழக முன்னோடிகள் மீது அ.தி.மு.க. ஆட்சியினர் தொடர்ந்து பழிவாங்கும் நடவடிக்கைகளிலே ஈடுபட்டு வருவதைத் தாங்கிக் கொள்ள முடியாமல், இதற்கு மேலும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது என்ற அளவில் செயற்குழு நிறைவேற்றிய தீர்மானத்தின்படி தான் இந்தப் போராட்டமே நடைபெறுகிறது. இந்த ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள் குறித்து நாமும், எதிர்க்கட்சியினரும் தொடர்ந்து எழுப்பி வரும் வினாக்கணைகளுக்கு எந்தவிதமான பதிலும் சொல்ல முடியாத

இந்த ஆட்சியினர்; அவர்களுக்கு மிகவும் வேண்டிய, அவர்கள் இல்லத்திலேயே தங்கியிருக்கிற உடன்பிறவா சகோதரியின் கணவர், தான் கைது செய்யப்பட்டது பற்றி, இந்த அரசின் மீதும், முதலமைச்சர் மீதும் பல்வேறு குற்றச்சாட்டுகளை எடுத்து வைத்து அளித்த பேட்டிக்குக்கூட இவர்களால் இன்று வரை பதிலளிக்க முடியவில்லை. எப்படியோ முதலமைச்சரின் பெயர் அன்றாடம் ஏடுகளிலே வரவேண்டும் என்பதற்காக, சட்டப்பேரவை நடைபெற்றபோது எப்படியாவது தேடிப் பிடித்து 110வது விதியின் கீழ் அறிக்கை படிப்பதைப் போல, தற்போதும் "அரசு செய்தி வெளியீடு" என்ற பெயரால் ஓர் அறிவிப்பை வெளியிடச் செய்கிறார்கள்.

திருவேற்காடு கோயிலில் 1006 இலவசத் திருமணங்கள் என்ற பெயரால் எவ்வளவு விளம்பரங்கள்? எத்தனை ஆரவாரங்கள்? எவ்வளவு கட்-அவுட்கள்? என்று அத்தனை ஆடம்பர ஆர்ப்பாட்டங்களையும் செய்து விழா கொண்டாடினார்கள். அவர்களுக்கு வேண்டிய பத்திரிகைகளே அனைவரும் முகம்சுளிக்கும் அளவுக்கு நடந்த அந்த ஆர்ப்பாட்டங்களை யெல்லாம் கிண்டலும், கேலியும் செய்து எழுதியிருந்தன. ஆனால் என்னவாயிற்று? திருமணம் முடிந்த மறுநாளே மணமக்களில் பல ஜோடிகள், தங்களின் பிள்ளை குட்டிகளோடு காட்சி அளித்ததை புகைப்படங்களோடு எடுத்து பல வார ஏடுகள் வெளியிட்டு - எத்தகைய திருமணங்களை முதலமைச்சர் மக்களின் வரிப்பணத்தைக் கொண்டு நடத்தி வைத்திருக்கிறார் என்பதை நாட்டு மக்களுக்குத் தெளிவாக்கின. இலவசத் திருமணங்களில் கலந்து கொண்ட மணமக்களையெல்லாம் ஆளுங்கட்சியின் அமைச்சர்களும், மாவட்டச் செயலாளர்களும் தேர்ந்தெடுத்து, அதிகாரிகளிடம் அந்தப் பட்டியலைக் கொடுத்துத்தான் அந்தத் திருமணப் பட்டியலில் சேர்க்கப்பட்டு, அம்மையார் திருமணத்தை நடத்தி முடித்து வைத்தார். ஆனால் இவர்களின் வண்டவாளத்தை வார ஏடுகள் ஐயம் திரிபற வெளியிட்டுக் காட்டியதும், ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்பதைப் போல அறநிலையத் துறையின் ஆணையரை அவசர அவசரமாக வேறு எந்தப் பணியும் வழங்கப்படாமல் மாறுதல் செய்திருக் கிறார்கள். அது மாத்திரமல்லாமல் அந்த அதிகாரிக்கு கீழே பணியாற்றிய

நான்கைந்து அரசு அதிகாரிகளையும் தற்காலிகப் பணி நீக்கம் செய்திருக்கிறார்கள். அங்கன்வாடி, சத்துணவு காலிப் பணி இடங்களை எந்தவித பரிந்துரைக்கும் கையூட்டுக்கும் இடமின்றி நிரப்புவதற்கு விரைவான நடவடிக்கை எடுத்த விருதுநகர் மாவட்ட ஆட்சியர் பாலாஜி என்பவரை மாறுதல் செய்து வேறு பணி இடம் எதுவும் கொடுக்காமல் காத்திருப்போர் பட்டியலில் இந்த அரசு வைத்திருக்கிறது. எதற்கெடுத்தாலும் இந்த ஆட்சியினர் செய்கின்ற தவறுகளுக்கெல்லாம் அரசு அதிகாரிகள் தான் பலிகடாக்களாக ஆகிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அரசு அதிகாரிகளின் வயிற்றெரிச்சலும், மனப்புண்ணும் ஆளு வோரை என்றாவது ஒரு நாள் நிச்சயம் பதில் சொல்ல வைக்கும். இந்தப் பிரச்சினைகள் பற்றியே கவலைப்படாமல் முதலமைச்சர் "குளுகுளு" கொடநாட்டில் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறார். அவர் பெயரில் மட்டும் அன்றாடம் ஒரு அறிவிப்பு! செய்திக் குறிப்பின் வாயிலாக நாட்டை ஆட்சி செய்து கொண்டி ருக்கின்றது. இதே தவறு தி.மு. கழகம் ஆளுங் கட்சியாக இருந்த போது நடைபெற்றிருந்தால் தமிழ்நாட்டில் உள்ள மற்றக் கட்சிகள் எல்லாம் எந்த அளவிற்கு சீறிப்பாய்ந்து அறிக்கை விட்டிருப்பார்கள். அடுத்த நிமிடமே முதலமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டும், ஆட்சியைக் கலைக்க வேண்டும், மத்திய அரசே நடவடிக்கை எடு என்றும் ஜெயலலிதா அறிக்கை மேல் அறிக்கையாக விட்டுத் தள்ளியிருப்பார்.

ஆளுங்கட்சியைச் சேர்ந்த சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் எல்லாம் எந்த அளவிற்கு ஊழல் செய்கிறார்கள், லஞ்சம் வாங்குகிறார்கள் என்று எதிர்க்கட்சியினர் அல்ல, அதே கட்சியைச் சேர்ந்த முதலமைச்சரே ஒப்புக் கொண்டு பட்டவர்த்தனமாகப் பேசி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஏடுகளும் அதனை பக்கம் பக்கமாக வெளியிட்டுள்ளன. எனவே ஆளுங்கட்சி மாமன்ற உறுப்பினர்கள் தவறு செய்யவில்லை என்று சொன்னால், முதலமைச்சர் தவறாகக் குற்றஞ்சாட்டியதாக பொருளாகிவிடும். முதலமைச்சர் அவர்களை யெல்லாம் கடிந்து கொண்டால் போதுமா? அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டாமா? வரி கொடுக்கும் மக்கள் இதையெல்லாம் கேட்கமாட்டார்களா? அந்த ஆளுங்கட்சியைச் சேர்ந்த மாமன்ற உறுப்பினர்கள் திரும்பக் கேட்கிறார்களே, நாங்கள் தான்

இளிச்சவாயர்களா? அமைச்சர்கள் தவறு செய்யவில்லையா? மாவட்டச் செயலாளர்கள் தவறு செய்யவில்லையா, ஆளுங்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் தவறு செய்யவில்லையா? தலைமைக்குத் தர வேண்டுமென்று கூறி வாங்குகின்ற கமிஷன் தொகையைக் குவித்து வைத்திருப்பவர் யார்? என்று பொதுமக்கள் கேட்காமல் கேட்கும் கேள்விகளுக்கு இந்த ஆட்சியினரின் பதில் என்ன? கொட நாட்டிலே ஓய்வு எடுப்பது தானா?

ஜூன் மாதம் முடிந்து, ஜூலையும் பிறந்து விட்டது. ஜூன் மாதம் 12 ஆம் தேதியே திறக்கப்பட வேண்டிய மேட்டூர் அணை இன்னமும் திறக்கப்படவில்லை. தஞ்சை, திருவாரூர், நாகை, திருச்சி டெல்டா மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் குறுவை இந்த ஆண்டு அவ்வளவு தானா என்று வேதனைக் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். மின்சாரம் எப்போது வரும், எப்போது போகும், யாருக்குத் தெரியும்? ஆட்சி என்று ஒன்று தமிழ்நாட்டில் நடக்கிறதா? அல்லது கொடநாட்டில் உறங்கி ஓய்வு எடுக்கிறதா?

இதற்கெல்லாம் பதில் சொல்ல வக்கற்ற ஆட்சியினர், எதிர்க்கட்சியினரையும், தங்களுக்குப் பிடிக்காதவர்களையும் தேடிப்பிடித்து ஏதோ ஒரு அரைகுறைப் பொய்ப் புகாரை எழுதி வாங்கிக் கொண்டு அதன் மீது நடவடிக்கை என்ற பெயரால் கைது செய்வதும், சிறையில் அடைப்பதும், நீதி மன்றம் வழங்கும் ஜாமீனில் வெளியே வந்தால் மீண்டும் ஒரு வழக்கைப் போடுவதும், அதிலும் வெளியே வந்து விட்டால் "குண்டர் சட்டம்" என்று போட்டு வாட்டி வதைப்பதும் என்ற அராஜகத்தை அட்டியின்றி நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

எந்த அளவிற்கு இந்த அரசினர் பொய் வழக்குகளைப் போட்டு பழி வாங்குகின்றனர் என்பதற்கு இதோ நேற்றையதினம் மதுரை உயர் நீதிமன்ற நீதிபதி வழங்கிய தீர்ப்பே பொருத்தமான உதாரணம்!

மதுரை மாநகர கழகப் பிரமுகர் வி.கே. குருசாமி மற்றும் அவருடைய மருமகன் வழக்கறிஞர் எஸ். பாண்டி மீது மதுரை அண்ணா நகரைச் சேர்ந்த செல்வராஜ் என்பவர் - 2010ஆம்

ஆண்டு பிப்ரவரி மாதம், அவரது 7 சென்ட் நிலத்தையும், அதில் இருந்த கட்டிடங்களையும், மதுரை மாநகராட்சி கிழக்கு மண்டலத் தலைவராக இருந்த வி.கே. குருசாமியும், அவரது மருமகன் வழக்கறிஞர் பாண்டியும் அபகரித்துக் கொண்டதாக கொடுத்த புகாரின் அடிப்படையில் அ.தி.மு.க. அரசின் காவல் துறை எந்த விதமான விசாரணையும் நடத்தாமல் உடனடியாக வி.கே.குருசாமியையும், பாண்டியையும் கைது செய்தார்கள். அந்தச் சொத்துக்களை 2008ஆம் ஆண்டிலேயே எஸ். பாண்டி உரிய விலை கொடுத்து வாங்கியதற்கான ஆவணங்கள் உள்ளன என்றும், காவல்துறை விசாரிக்காமல் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும், வழக்கினை ரத்து செய்ய வேண்டுமென்றும் மதுரை உயர் நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இந்த வழக்கை விசாரித்த மதுரை உயர்நீதி மன்ற நீதிபதி ஏ. செல்வம் அவர்கள், 2010ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக, 29-7-2011 அன்று புகார் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தாமதத்துக்கான விளக்கம் அளிக்கப்படவில்லை. அரசியல் காரணங்களுக்காக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கலாம் என்ற மனுதாரரின் தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளப்படும் நிலையில் உள்ளது. எனவே மனுதாரர்கள் மீதான இந்த நில **அபகரிப்பு வழக்கை ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது என்று கூறியிருக்கிறார்.**

இந்தத் தீர்ப்பிலிருந்து அ.தி.மு.க. அரசு எந்த அளவிற்குப் பொய்ப் புகார்களைக் கொடுத்து, காவல் துறையின் மூலம் கழகத்தினரை பழி வாங்குகிறது, கைது செய்கிறது என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

இதற்கெல்லாம் விடிவையும், விடையையும் தேடித்தான் செயல்படும் உண்மையான எதிர்க்கட்சி என்ற முறையில் தி.மு. கழகம் நாளை சிறை நிரப்பும் அறப் போராட்டத்தை அறிவித்து நடத்துகின்றது. இந்தப் போராட்டத்திற்குத் தமிழ்நாட்டு மக்கள் தங்கள் இதயபூர்வமான ஆதரவினைத் தந்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அறப்போரினை மிகப் பெரிய வெற்றியாக - ஆட்சியினருக்கு நல்ல பாடம் புகட்டுகின்ற அளவிற்கும் ஆக்க வழிகாட்டுகின்ற முறையிலும் நடத்திட

தொண்டர்களும், கழக முன்னணியினரும் ஒருங்கிணைந்து ஒற்றுமையோடு பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அறப்போர் நமக்கு புதிதல்ல; எப்போதும் போல இதனையும் சிறப்பாகச் செய்து முடிப்பாய் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறேன்! வீணர்கள் புலம்பட்டும்! வீடணர்கள் ஏதாவது உளறிக் கொண்டிருக் கட்டும்! வீரனே! தீரனே! விழிக்கனல் வழியப் புறப்படுவாய்! மொழிப் போர் நடத்திய உன் வரலாற்றை இன்றும் பழிப்போர் சிலர் உளர்! அந்த இழி செயலை இடறிவிட்டு - மக்கள் குறை தீர்க்க - அவர்தம் இன்னல்களைய - அறிவிக்கப்பட்டுள்ள அறப்போர்க்களத்திற்கு இன்னே செல்க! இனிதே வெல்க! என்று வாழ்த்துகிறேன்! வழியனுப்புகிறேன்!

அன்புள்ள,

மு.க.

3-7-2012

3637. என் உயிரினுமேலான அன்பு உடன்பிறப்புக்காள்!

அராஜக அ.தி.மு.க. ஆட்சியினருக்கு புத்தி புகட்ட
அணி திரளுவீர், சிறை நிரப்புவீர் என்ற இந்த
எளியோன் வேண்டுகோளை ஏற்று;


கிளம்பிற்று காண் தமிழச் சிங்கக் கூட்டம்

எங்கே இருக்கிறது அந்த சிறைச்சாலை?
அங்கே இருக்கிறதா எங்களுக்கும் போதுமான இடம்?
ஆயிரக்கணக்கில் கூட வரமாட்டார்கள் என்றார்!
இலட்சக்கணக்கில் இதோ தயார் என்று

அலைஅலையாய் அணி திரண்ட
அன்புச் செல்வங்களே!
வெட்டி வா என்றுரைத்தால்
கட்டி வரும் கண்மணிகளே!

உங்கள் பாத கமலங்களில் நன்றி குவிக்கிறேன்

நன்றி! நன்றி! நன்றி!



தலைவர், தி.மு.க.
05-07-2012

3638. பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மையாமோ?

உடன்பிறப்பே,

இதுவரை தமிழகச் சரித்திரத்திலேயே இல்லாத அளவிற்கு ஆட்சியை எதிர்த்து; ஜனநாயக விரோத-மக்கள் விரோத-அராஜக நடவடிக்கைகளை எதிர்த்து நடைபெற்ற சிறை நிரப்பும் போராட்டத்தில் 2,32,797 பேர் கலந்து கொண்டு கைதாகின்ற அளவிற்கு நடைபெற்று, செய்தியாளர்களே அதைப் பற்றி அதனை மிகப் பெரிய வெற்றியாக கருதுகிறீர்களா என்றெல்லாம் கேட்கக் கூடிய அளவிற்கு நடைபெற்றுள்ளது. அ.தி.மு.க. ஆட்சியாளர்களே, சிறையிலே இவ்வளவு பேர்களையும் வைத்துக்கொள்ள வழியின்றி கீழே விழுந்தாலும் மீசையிலே மண் ஒட்டவில்லை என்பதைப் போல ஏதோவொரு காரணத்தைச சொல்லி கைது செய்யப்பட்டவர்களையெல்லாம் உடனடியாக விடுவித்திருக்கிறார்கள்.

இந்த வெற்றியை ஆளுங்கட்சியினரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை, "அவாள்" நடத்தும் ஏடுகளால் பொறுத்துக்கொள்ள முடிய வில்லை, என்ற போதிலும் நாங்களும் தமிழர்கள்தான் என்று சொல்லிக்கொள்ளும் "தினத்தந்தி" போன்ற இதழ்களே, ஆளுங் கட்சியின் தயவை எப்படியாவது பெற்றே தீர வேண்டுமென்ற எண்ணத்தோடு, முதல் பக்கத்தில் போராட்டம் பற்றிய செய்தியை வெளியிடும்போது "நில அபகரிப்பு வழக்குகளை எதிர்த்துப் போராட்டம்" -- "ஜெயலலிதா உத்தரவின்பேரில் கைதான தி.மு.க.வினர் விடுவிப்பு" என்று அ.தி.மு.க.விற்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு எழுதியிருப்பதைக் காணும்போதுதான் "இது என்ன கூத்து?" என்றுதான் எண்ண வேண்டியுள்ளது.

இந்த அறவழிப் போராட்டம் என்பது நில அபகரிப்பு வழக்குகளை எதிர்த்து மட்டும் நடைபெற்ற போராட்டமா? "தினத்தந்தி" பதில் கூறுமா? 22-6-2012 அன்று நடைபெற்ற

தி.மு. கழக தலைமைச் செயற்குழுவின் அவசரக் கூட்டத்தில்தான் அறப்போராட்டம் பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தில் தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

"காவிரி டெல்டாப் பகுதிகளில் கனவாகிப்போன குறுவைச் சாகுபடி; கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய அண்டை மாநிலங்களின் ஆரோக்கியமற்ற அணுகுமுறைகளினால் தீர்க்கப்படாமல் நீண்டு கொண்டே வரும் நதி நீர்ப் பிரச்சினைகள்; அரிசி விலை உயர்வு, மளிகைப் பொருள்கள் - காய்கறிகள் விலை உயர்வு; பேருந்துக் கட்டண உயர்வு, பால் விலை உயர்வு, இல்லாத மின்சாரத்திற்கு இதுவரை இல்லாத கட்டண உயர்வு; ஆசிரியர்கள் இட மாறுதலிலிருந்து கட்டட அனுமதி வரை அனைத்து முனைகளிலும் தலைவிரித்தாடும் ஊழல் சாம்ராஜ்யத்துக்கே உரிய முறைகேடுகள் - கையூட்டுக் கலாச்சாரம்; பொதுத் தேர்தலின்போது போட்டி போட்டுக்கொண்டு செய்யப்பட்ட அறிவிப்புகளின் அலங்கோல நடைமுறைகள்; நீதிமன்றக் கண்டனங்கள் என தமிழகத்தின் கழுத்தை நெரித்து நிலைகுலையச் செய்திடும் நிர்வாகப் பிரச்சினைகள் எண்ணிக்கையிலும், பரிமாணத்திலும் நாள்தோறும் வளர்ந்து அனைத்துத் தரப்பு மக்களின் வாழ்க்கையையும் புரட்டிப் போட்டுக் கொண்டிருக்கும் நெருக்கடியிலிருந்து; திசை திருப்பும் தந்திரமாகவே, "விளம்பரமேளா", "காணொலிக் காட்சி மாயா ஜாலங்கள்", "கழகச் செயல்வீரர்கள் கைது - குண்டர் சட்டம்" "நீதி மன்றங்களால் ஏற்றுக் கொள்ளப்படாததும், சுட்டிக்காட்டி தலையில் குட்டிக்காட்டப்பட்டதுமான கழுத்தை நெரிக்கும் காட்டு மிராண்டித்தனமான சட்டப் பிரயோகங்கள்" ஆகிய வற்றை அ.தி.மு.க. அரசு தொடர்ந்து செய்து வருகிறது என்பதைத் தமிழ்நாட்டவர் உணரத் தலைப்பட்டுவிட்டனர்" என்றெல்லாம் விரிவாக எழுதிவிட்டுத்தான் "இதையெல்லாம் கண்டித்து" சிறை நிரப்பும் போராட்டம் நடத்தப் போவதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் "தினத்தந்தி" நாளேடு இவ்வளவையும் மறைத்துவிட்டு, நில அபகரிப்பு வழக்குகளை எதிர்த்து தி.மு.க. போராட்டம் நடத்துவதாக தலைப்புக் கட்டி செய்தி வெளியிடுவது பத்திரிகா தர்மத்திற்கு உகந்தது தானா?

தீர்மானம் நிறைவேற்றியதோடு மட்டுமல்ல; 25-6-2012 தேதிய "முரசொலி"யில் கேள்வி-பதில் பகுதியிலும், இந்த அறப்போராட்டம் என்னென்ன காரணங்களுக்காக நடத்தப்படுகிறது என்பதையும் நான் விளக்கியிருக்கிறேன். அதையும் "தினத்தந்தி" மறைத்துவிட்டதன் மர்மம் என்னவோ? "தினத்தந்தி"க்கும் "மாலை முரசு"க்கும் நடைபெறும் பங்காளிச் சண்டையில் ஆட்சியாளர்கள் தங்களுக்கு அனைத்து வகையிலும் ஆதரவாக இல்லையென்ற ஆதங்கத்தில் இப்படியெல்லாம் செய்தி வெளியிட்டால், அம்மையாரின் கடாட்சம் தங்கள் பக்கம் திரும்பாதா என்று "தினத்தந்தி" எதிர்பார்த்து நிற்பதை நாம் அறிவோம். அதற்காக தி.மு.க. மீது காழ்ப்பினைக் காட்டுவது நியாயம்தானா?

"தினத்தந்தி" இப்படியெல்லாம் வெளியிடுகின்றபோது "அவாள்" ஏடான "தினமலர்" ஏடோ, இந்த அறப்போராட்டம் அறிவித்த நாளிலிருந்து, இந்தப் போராட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆதரவு இல்லை, தொண்டர்கள் சிறை செல்லத் தயாராக இல்லை, போராட்டத்தில் அதிகம் பேர் கலந்துகொள்ளமாட்டார்கள், தி.மு.க.வில் பலத்த எதிர்ப்பு என்றெல்லாம் அன்றாடம் எந்த அளவிற்கு உண்மையைத் திரித்தும், குறைத்தும், திசை திருப்பும் முறையிலும் செய்திகளை வெளியிட முடியுமோ அந்த அளவிற்குச் செய்திகளை வெளியிட்டு வந்தது. ஆனால் "தினமலர்" ஆசிரியர் முகத்தில் கரியை அள்ளிப் பூசுவதைப்போல கழகக் கண்மணிகள் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் எதற்கும் தயார் என்று கலந்து கொண்டு இந்த அறப்போராட்டத்தை அனைவரும் போற்றிடும் மாபெரும் வெற்றிப் போராட்டமாக ஆக்கித் தந்திருக்கிறார்கள். அதைக் கண்ட பிறகாவது "தினமலர்" திருந்த வேண்டாமா? மாறாக அவர்களுடைய இன்றைய இதழில், சிறை நிரப்பும் போராட்டம் தோல்வியில் முடிந்தது என்றும் தி.மு.க. சிறை நிரப்பும் போராட்டம் புஸ்ஸ்...என்றும், நாகப்பாம்பு தனக்கேயுரிய "உஸ்" ஒலி எழுப்புவது போல "புஸ்" என்று முதல் பக்கத்தில் செய்தி வெளியிடுகிறதென்றால் ஏன் இந்தப் பொய் பிழைப்பு? இப்படியெல்லாமா பொய்களைக் காசாக்க முயலுவது?

இதற்கும் மேலாக - ஒரு மாத காலமாக "கொட நாடு" எஸ்டேட்டில் தங்கி தமிழ்நாட்டு மக்களுக்காக அல்லும் பகலும் உழைத்துக் கொண்டிருக்கின்ற அம்மையார் முதல்வர் ஜெயலலிதா - அவசர அவசரமாக விடுத்துள்ள அறிக்கையில், தான் ஏற்கனவே

பலமுறை தெரிவித்தபடி நில அபகரிப்பு புகார்கள் முந்தைய தி.மு.க. ஆட்சியின்போதே பொதுமக்களால் கொடுக்கப்பட்டிருந்தன. எனினும், நிலத்தை அபகரித்தவர்கள் தி.மு.க.வினர் என்பதால், புகார்களின் மீது நடவடிக்கை எதுவும் முந்தைய தி.மு.க. அரசால் எடுக்கப்படவில்லை, எனவே தற்போது நடவடிக்கை எடுக்கிறோம் என்று கூறியிருக்கிறார்.

உண்மையிலேயே இந்தப் புகார்கள் எல்லாம் தி.மு. கழக ஆட்சிக் காலத்திலா கொடுக்கப்பட்டன?

கழகப் பொருளாளர் தம்பி மு.க.ஸ்டாலின் மீது புகார் அரசுக்கு எப்போது தரப்பட்டது?

29-11-2011 அன்றுதான். அப்போது எந்த ஆட்சி தமிழகத்திலே நடைபெற்றது? அ.தி.மு.க. ஆட்சி தானே? தி.மு.கழக ஆட்சியில் வந்த புகார் என்று முதலமைச்சர் ஜெயலலிதா சொல்லியிருப்பது பொய்தானே? முதலமைச்சர் பொய் சொல்லலாமா? சொந்த கையெழுத்தையே தன் கையெழுத்து இல்லை என்று நீதி மன்றத்திலே சொன்னவர், பொய் சொல்வது புதிதல்ல!

மதுரை கழகத் தோழர் வி.கே. குருசாமி மீது அ.தி.மு.க. அரசு நடவடிக்கை எடுத்து, கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு உயர் நீதிமன்றம் அவரை விடுதலை செய்திருக்கிறது. அவர் மீது புகார் அரசுக்குக் கொடுக்கப்பட்டது எப்போது தெரியுமா? 29-7-2011. அப்போது ஆட்சியிலே இருந்தது யார் தெரியுமா? தி.மு.க. அல்ல, அ.தி.மு.க! ஜெயலலிதாவின் கூற்று பொய் என்பதற்கு இந்த ஒரு உதாரணம் போதாதா?

ஐ.பி.எஸ். அதிகாரி துக்கையாண்டி மீது நில அபகரிப்பு புகார் கூறப்பட்டு, அவர் ஓய்வு பெறும் நாளில் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டாரே, அவர்மீது அரசிடம் புகார் கொடுக்கப்பட்டது எப்போது? 29-6-2012. அந்தத் தேதியில் தி.மு.க. அரசா ஆட்சியிலே இருந்தது? அம்மையார் பதில் சொல்வாரா?

ஏன் ஜெயலலிதா அம்மையாருக்கு மிகவும் வேண்டிய சசிகலா நடராசன், திவாகரன், ராவணன் போன்றவர்கள் மீதெல்லாம் அ.தி.மு.க. அரசு நடவடிக்கை எடுத்து கைது செய்ததே, அவர்கள் மீதெல்லாம் புகார்கள் எப்போது வந்தன? தி.மு.க. ஆட்சிக் காலத் திலா? அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தானே? இந்தப் புகார்கள்

எல்லாம் எந்த ஆதாரத்தோடு ஏற்றுக் கொள்ளப்பட்டன? அவைகள் எல்லாம் இன்று என்ன ஆயின?

நில அபகரிப்பு குறித்து தி.மு.கழக ஆட்சியிலும் புகார்கள் வந்தது உண்டு. உதாரணம் கூறட்டுமா? சி.பி.எம். கட்சியின் தலைவர்கள் எல்லாம் தலைமைச் செயலகத்திற்கே வந்து என்னைச் சந்தித்து புகார் மனு கொடுத்தார்கள். நில அபகரிப்பு பற்றித்தான் புகார். அதில் முதலமைச்சருக்கு வேண்டிய வர்கள் சிறுதாவூரில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சொந்தமான இடத்தை அபகரித்து விட்டதாகவும், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டு புகார் கொடுத்தார்கள். அந்தப் புகார்கள் குறித்து தற்போது அ.தி.மு.க. ஆட்சியிலே திடீர் நடவடிக்கை எடுத்து கைது செய்வதைப் போலச் செய்யாமல், முறைப்படி நீதியரசர் தலைமையில் விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. அந்த நீதிபதியும் அரசுக்கு அறிக்கை கொடுத்தார். அந்த அறிக்கை அரசிடம்தான் உள்ளது. அ.தி.மு.க. அரசு அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்தது? பதில் சொல்வார்களா?

உடன்பிறப்பே, "வாய்மையே வெல்லும்" என்பதற்கேற்ப, எப்படியோ "தினத்தந்தி"யை மீறி - "தினமலர்" இதழை மீறி - அ.தி.மு.க. ஆட்சியினரை மீறி - காவல் துறையை மீறி - நாம் நடத்திய அறப்போராட்டம் மாபெரும் வெற்றி அடைந்துள்ளது. அந்த வெற்றிக்குக் காரணமான உன் பாத கமலங்களில் என் நன்றியைக் குவித்திருக்கிறேன். "காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ? பேரெதிர்ப் பால் உண்மைதான் இன்மையாமோ?"

அன்புள்ள,

மு.க.

6-7-2012

3639. இவை எல்லாமே அரசியல்தானா?

உடன்பிறப்பே,

சிலர், நாட்டுக்கு, சமுதாயத்துக்கு எவ்வளவோ நன்மைகள் செய்வார்கள்; இருந்தாலும் அவர்களைக் கண்டால் ஒரு "சிலருக்கு" ஓர் "அலர்ஜி"! அந்தச் சிலரில் ஒருவர்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் இன்றைய மாநிலச் செயலாளர் தோழர் ராமகிருஷ்ணன். அவருக்கு என்ன காரணத்தாலோ, "தி.மு.க." என்றால் பிடிக்காது. தி.மு.க. தற்போது தமிழகத்தின் ஆளுங்கட்சியாக இல்லை. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் போல தி.மு. கழகமும் தற்போது ஒரு எதிர்க்கட்சிதான். ஆனால் தோழர் ராமகிருஷ்ணனுக்கு ஆளுகின்ற கட்சியைக் குறை சொல்வதைவிட, தி.மு. கழகத்தின் மீது எரிச்சலைக் கக்குவது என்றால் எப்படித்தான் இனிக்குமோ; நமக்குத் தெரியவில்லை! இன்றைய ஆளுங் கட்சியான அ.தி.மு.க.; மார்க்சிஸ்ட்களை மதிப்பதேகூட இல்லை. மார்க்சிஸ்டுகளை மட்டுமல்ல, அவர்களோடு கடந்த பொதுத் தேர்தலில் தோழமையாக இருந்து, அ.தி.மு.க; ஆளுங்கட்சியாக வருவதற்கு துணை புரிந்துள்ள முக்கிய கட்சிகளையெல்லாம் கூடப் பிடிப்பதே இல்லை, மதிப்பதே இல்லை. இருந்தாலும் அதை நண்பர் ராமகிருஷ்ணன் அவ்வளவாக கண்டு கொள்வதில்லை.

நேற்றையதினம் தோழர் ராமகிருஷ்ணன், அவர்களுடைய அதிகாரபூர்வமான நாளேடான "தீக்கதிர்" இதழில் ஒரு கட்டுரை எழுதி யுள்ளார். அந்தக் கட்டுரையை இரண்டு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு, முதல் பகுதியிலே தி.மு. கழகத்தின் மீது எந்த அளவிற்கு வெறுப்பைக் கக்க வேண்டுமோ அந்த அளவிற்கு கக்கிவிட்டு, இரண்டாவது பகுதியில் அ.தி.மு.க. பற்றியும் வேண்டா வெறுப்பாக, "அவர்களைப் பற்றியும் எழுத வேண்டியிருக்கிறதே" என்று மனம் நொந்து அந்தக் கட்டுரையைத் தீட்டியிருக்கிறார். ஜனநாயக முறைப்படி, மாற்றுக் கட்சியான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அந்தத் தாக்குதலுக்கும் பதிலளிக்க வேண்டியது கழகத்தின் கடமை என்ற உணர்வோடுதான் நான்

பின்வரும் விளக்கத்தை அளிக்க முன்வந்துள்ளேனே தவிர, தோழர் ராமகிருஷ்ணனைப் பற்றி தனிப்பட்ட முறையில் எனக்கு எந்தக் காலத்திலும் தவறான எண்ணம் கிடையாது. விஷயத்திற்கு வருகிறேன்.

தோழர் ராமகிருஷ்ணன் தன் கட்டுரையைத் தொடங்கும்போது, தி.மு. கழகம் நடத்திய அறப்போராட்டம் பற்றியும், அந்தப் போராட்டம் எதிர்பார்த்ததை விட வெற்றி அடைந்துள்ளதாக நான் கூறியுள்ளது பற்றியும் எழுதிவிட்டு, "பெட்ரோல் விலை உயர்வு, உர விலை உயர்வு, பஸ் கட்டண உயர்வு, பால் விலை உயர்வு, மின் கட்டண உயர்வு என கடுமையான கட்டண, விலை உயர்வுகளால் மக்கள் பாதிக்கப்பட்டனர், அப்போதெல்லாம் அறிக்கை மட்டுமே விடுத்த தி.மு.க., பெயரளவுக்கு ஆர்ப்பாட்டம் நடத்திய தி.மு.க., தற்போது தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மீதான நில அபகரிப்பு வழக்கு களை எதிர்த்து சிறை நிரப்பும் போராட்டம் நடத்தியுள்ளது" என்று தனது கண்டனத்தைத் தெரிவித்துவிட்டு, "எந்தப் பிரச்சினைக்காக எப்படிப்பட்ட வடிவத்தில் போராடுவது என முடிவு செய்வது அந்தந்த கட்சிகளின் உரிமை, அதற்குள் நாம் தலையிட விரும்பவில்லை" என்று தன் மனச்சாட்சிக்கும் பதிலளித்துள்ளார்.

எத்தகைய போராட்டம் என்பதை முடிவு செய்யும் உரிமை அந்தந்த கட்சிக்கு உரியது என்று அவரே சொல்லிவிட்டு, மக்கள் பிரச்சினைகளுக்காக பெயரளவுக்கு ஆர்ப்பாட்டம் நடத்திய தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்டோர் மீதான வழக்குகளை எதிர்த்து சிறை நிரப்பும் போராட்டம் நடத்தியது ஏன் என்று கேட்கிறார். மக்கள் பிரச்சினைகளுக்காக கவலைப்படாமல், தி.மு. கழகத்தைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் மீது வழக்கு என்றதும் அதற்காக மட்டும் சிறை நிரப்பும் போராட்டத்தை தி.மு.க. அறிவித்து விடவில்லை . தி.மு. கழகத்தின் மீது தற்போது தான்; வழக்கு, கைது. பழிவாங்கும் நடவடிக்கை தொடங்கப்படவில்லை. 2011ஆம் ஆண்டில் ஜூலை திங்களிலேயே, ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததும் வராததுமாக; கழக முன்னாள் அமைச்சர்கள் மீது கைது நடவடிக்கை ஆரம்பமாகி விட்டது. 30-7-2011 அன்று வீரபாண்டி ஆறுமுகம், ஜெ.அன்பழகன், எம்.எல்.ஏ. ஆகியோரும், அதே நாளில் திருவாரூரில் பொருளாளர் மு.க.ஸ்டாலின், பூண்டி கலைவாணன் ஆகியோரும், 2-8-2011 அன்று புரசை

ரெங்கநாதனும், 4-8-2011 அன்று ஈரோட்டில் என்.கே.கே.பி. ராஜாவும், 6-8-2011 அன்று திருப்பூர் மாநகர துணைச் செயலாளர் டி.கே.டி. நாகராஜும், 10-8-2011 அன்று திருச்செந்தூரில் அனிதா ராதாகிருஷ்ணன், எம்.எல்.ஏ.வும், சேலம் தம்மம்பட்டி நகரக் கழகச் செயலாளரும், 17-8-2011 அன்று கோவையில் பொங்கலூர் மணியும், 25-8-2011 அன்று முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு, திருச்சி மாநகரக் கழகச் செயலாளர் அன்பழகன், கோவை மாவட்டக் கழகச் செயலாளர் பொங்கலூர் பழனிச்சாமி மற்றும் பைந்தமிழ் பாரி, மாநகரச் செயலாளர் வீரகோபால் ஆகியோரும், 27-8-2011 அன்று லால்குடியில் சவுந்தரபாண்டியன் எம்.எல்.ஏ.வும், காங்கேயத்தில் முன்னாள் பேரூராட்சித் தலைவர் ஏ.சி. கோவிந்தசாமியும், 29-8-2011 அன்று மதுரையில் முன்னாள் மேயரின் கணவர் கோபிநாத்தும், 1-9-2011 அன்று திருச்செங்கோடு நகராட்சித் தலைவரும், 9-9-2011 அன்று சென்னையில் பகுதிக் கழகச் செயலாளர் க.தனசேகரனும், மதுரையில் ஜெயராமனும், 10-9-2011 அன்று நெல்லையில் கருப்பசாமி பாண்டியனும், 11-9-2011 அன்று மதுரையில் மின்னல்கொடியும், 18-9-2011 அன்று விழுப்புரத்தில் முன்னாள் அமைச்சர் பொன்முடியும், 19-9-2011 அன்று கரூரில் கே.சி.பழனிச்சாமி எம்.எல்.ஏ.வும், 23-9-2011 அன்று சென்னையில் முன்னாள் அமைச்சர் கே.பி.பி. சாமியும், 2-11-2011 அன்று கே.பி.பி. சாமியின் சகோதரர்களும், ஐசரி கணேசும், 16-11-2011 அன்று நாடாளுமன்ற உறுப்பினர் ரிதீஷும், 3-6-2012 அன்று மீண்டும் முன்னாள் அமைச்சர்கள் வீரபாண்டி ஆறுமுகமும், ஐ.பெரியசாமியும், என்.சுரேஷ்ராஜன், கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மதுரை மாநகர மாவட்டச் செயலாளர் தளபதியும், முன்னாள் அமைச்சர் வெள்ளக்கோவில் சாமிநாதன், மதுரையில் குருசாமி, அட்டாக் பாண்டி, பொட்டு சுரேஷ், வீரபாண்டி ஆ.இராஜா, திருச்சி குடமுருட்டி சேகர் என்று கழக முன்னணியினர் கடந்த ஓராண்டுக் காலமாக தொடர்ந்து கைது செய்யப்பட்டு, அவர்கள் ஜாமீனில் நீதிமன்றத்தால் விடுவிக்கப் பட்ட பிறகும், மீண்டும் அவர்கள் மீது ஏதோ பொய்ப் புகார்களைப் பெற்று வழக்கு தொடுத்தும், அதிலும் ஜாமீன் பெற்றால் அவர்கள் மீது குண்டர் சட்டத்தைப் பிறப்பித்து சிறையிலே அடைத்தும் தொடர்ந்து நடந்து வந்த பிறகு வேறு வழியில்லாமல் அத்தகைய பழி வாங்கும் போக்கினைக் கண்டிக்கும் வகையிலே மாத்திரமல்லாமல், அத்துடன் மக்கள் பிரச்சினைகளையும்

இணைத்து கழகத் தலைமைச் செயற்குழு வினைக் கூட்டி அதிலே ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி அதற்குப் பிறகுதான் சிறை நிரப்பும் போராட்டம் அறிவிக்கப்பட்டு முறைப்படி நடை பெற்றுள்ளது. ஆனால் இத்தனையையும் மார்க்சிஸ்ட் தலைவர் ராமகிருஷ்ணன் வசதியாக மறந்துவிட்டு அல்லது மறைத்துவிட்டு தி.மு. கழகம் மக்கள் பிரச்சினைகளுக்காகப் போராடாமல், முன்னாள் அமைச்சர்களின் கைதுக்காக மட்டும் சிறை நிரப்பும் போராட்டத்தை நடத்தியிருப்பதாகக் குற்றஞ்சாட்டுவது நியாயம்தானா? அதுதான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலையா?

தோழர் ராமகிருஷ்ணன் அத்துடன் நிறுத்தவில்லை. தி.மு.க.விற்கு பதில் சொல்லும் ஆளுங்கட்சிக்கு ஆதரவாக நில அபகரிப்பு குறித்து எத்தனை புகார்கள் வந்துள்ளன, எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன, எவ்வளவு நிலம் மீட்கப்பட்டுள்ளது என்று அ.தி.மு.க. அரசு பேரவையில் அளித்த விளக்கங்களையெல்லாம் தனது அறிக்கையிலே தொகுத்துக் காட்டியிருக்கிறார். அது அவருடைய கடமையென்று கூடக் கூறலாம்! ஆனால் அவருடைய அறிக்கையிலேயே மொத்தம் பெறப்பட்ட நில அபகரிப்பு வழக்குகள் 703 என்றும், அதிலே தி.மு.க. வினர் மீது மட்டும் 42 வழக்குகள்தான் என்றும் அரசு தகவல் தெரிவிக்கிறது என்று சொல்லியிருப்பதி லிருந்தே, தி.மு.கழகத்தினர் மீது எந்த அளவிற்கு அரசு காழ்ப்புணர்ச்சியோடு விரைந்து நடவடிக்கை எடுக்கின்றது என்பதையும், மற்றவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் அக்கறை காட்டவில்லை என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தொடர்ந்து தனது அறிக்கையில் சேலம் அங்கம்மாள் காலனி பிரச்சினை குறித்து விரிவாக எழுதியிருக்கிறார். அதிலே தி.மு. கழக ஆட்சியின்போது, பள்ளப்பட்டி காவல் நிலைய ஆய்வாளரும், சேலம் வருவாய் கோட்டாட்சியரும் கூறியதையும் தெரிவித்திருப்பதிலிருந்து கழக ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப் பட்டது என்று நான் செய்தியாளர்களிடம் கூறியதைத்தான் உறுதி செய்துள்ளார். அதன்பிறகு அந்தக் காலனியிலே உள்ளவர்கள் தாக்கப்பட்டது குறித்து, தற்போது அ.தி.மு.க. அரசு தம்பி வீரபாண்டி ஆறுமுகம் மீது எடுத்துள்ள நடவடிக்கை நீதிமன்றத்திலே உள்ளது. வழக்கு விசாரணை இன்னமும் முடியவில்லை.

விசாரணை முடிந்து தவறு என்று நீதிபதி கூறினால் நடவடிக்கை எடுக்கட்டும். ஆனால் இந்த அரசே நீதிபதியாகி, 75 வயதுக்கு மேலான முன்னாள் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் ஒரு இதய நோயாளி என்பது தெரிந்திருந்தும், நீதிமன்றம் ஜாமீனில் விடுவித்த பிறகும், வேண்டுமென்றே வழக்குக்கு மேல் வழக்குப் பதிவு செய்வதும், ஜாமீனில் வெளியேவர முடியாமல் குண்டர் சட்டத்தைப் பிறப்பித்திருப்பதும், சேலம் சிறை, கோவை சிறை, புழல் சிறை, வேலூர் சிறை என்று அங்குமிங்கும் வேனிலேயே இழுத்தடிப்பதும் நியாயம் என்று ராமகிருஷ்ணன் கருதுகிறாரா? அது பழிவாங்கும் செயலா? அல்லவா? அவருடைய கட்சியிலே மாவட்டக் கழகச் செயலாளர் ஒருவர் மீது நடவடிக்கை எடுத்தால் எந்த அளவிற்கு கண்டன அறிக்கைகளைக் கொடுத்து, போராட்டம் நடத்துகிறார்கள்? ஆனால் கழகத்தின் முன்னாள் அமைச்சர் மீது தொடர்ந்து பழிவாங்கும் நடவடிக்கைகளை அரசு எடுக்கும் போது, அதற்காகப் போராட்டம் நடத்துவது தவறா? அப்படி போராட்டம் நடத்தும்போதுகூட, அதற்காக மட்டுமே போராட்டம் நடத்தாமல் மக்கள் பிரச்சினைகளையெல்லாம் இணைத் துக் கொண்டுதானே தி.மு. கழகம் போராட்டம் நடத்தியது. செயற்குழு தீர்மானத்திலேயே "காவிரி டெல்டாப் பகுதிகளில் கனவாகிப் போன குறுவைச் சாகுபடி; கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய அண்டை மாநிலங்களின் ஆரோக்கியமற்ற அணுகுமுறைகளினால் தீர்க்கப்படாமல் நீண்டு கொண்டே வரும் நதி நீர்ப் பிரச்சினைகள்; அரிசி விலை உயர்வு, மளிகைப் பொருள்கள் - காய்கறிகள் விலை உயர்வு; பேருந்துக் கட்டண உயர்வு, பால் விலை உயர்வு, இல்லாத மின்சாரத்திற்கு இதுவரை இல்லாத கட்டண உயர்வு; ஆசிரியர்கள் இட மாறுதலிலிருந்து கட்டட அனுமதி வரை அனைத்து முனைகளிலும் தலைவிரித்தாடும் ஊழல் சாம்ராஜ்யத்துக்கே உரிய முறைகேடுகள் - கையூட்டுக் கலாச்சாரம்; பொதுத் தேர்தலின் போது போட்டி போட்டுக் கொண்டு செய்யப்பட்ட அறிவிப்புகளின் அலங்கோல நடைமுறைகள்; நீதி மன்றக் கண்டனங்கள் என தமிழ கத்தின் கழுத்தை நெரித்து நிலைகுலையச் செய்திடும் நிர்வாகப் பிரச்சினைகள் எண்ணிக்கையிலும், பரிமாணத்திலும் நாள்தோறும் வளர்ந்து அனைத்துத் தரப்பு மக்களின் வாழ்க்கையையும் புரட்டிப் போட்டுக்கொண்டிருக்கும் நெருக்கடியிலிருந்து; திசை திருப்பும் தந்திரமாகவே, "விளம்பர மேளா", "காணொலிக் காட்சி மாயா

ஜாலங்கள்", "கழகச் செயல் வீரர்கள் கைது - குண்டர் சட்டம்" "நீதி மன்றங்களால் ஏற்றுக் கொள்ளப்படாததும், சுட்டிக்காட்டி தலையில் குட்டிக்காட்டப்பட்டதுமான கழுத்தை நெரிக்கும் காட்டு மிராண்டித்தனமான சட்டப் பிரயோகங்கள்" ஆகியவற்றை அ.தி.மு.க. அரசு தொடர்ந்து செய்துவருகிறது என்பதைத் தமிழ் நாட்டவர் உணரத் தலைப்பட்டுவிட்டனர்" என்றெல்லாம் விரிவாக எழுதிவிட்டுத்தான் "இதையெல்லாம் கண்டித்து" சிறை நிரப்பும் போராட்டம் நடத்தப் போவதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதை ராமகிருஷ்ணன் மறைத்துவிட்டு அறிக்கை விட்டிருப்பது சரிதானா என்பதை அந்தக் கட்சியிலே உள்ள தோழர்களாவது எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இத்தனை விளக்கங்களையும் தந்திருக்கிறேன்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியிலே உள்ள தோழர்களும், முன்னணியினரும் ஆளுங்கட்சியைக் கடுமையாக விமர்சிக்கின்ற நேரத்தில் மேலிடத்திலே உள்ள ஓரிருவர் முதலமைச்சரைப் பாராட்டுகிறார்கள் என்றால், அதற்கான காரணத்தை நம்மால் யூகித்துக் கொள்ள முடிகிறது. ஆனால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலே ஏன் இந்த கொள்கை மாறுபாடு?

தோழர் ராமகிருஷ்ணன் தனது அறிக்கையின் முதல் பகுதியிலே தி.மு. கழகத்தின் மீது இந்த அளவிற்கு குற்றச்சாட்டுகளை அடுக்கி யிருந்தாலும், அவரது அறிக்கையின் இரண்டாவது பகுதியிலே ஆளுங்கட்சியான அ.தி.மு.க. வினர் நடத்திய நில அபகரிப்பு பற்றியும் எழுதியிருப்பது நமக்கு ஓரளவு ஆறுதலைத் தருகிறது. ஆனால் அப்போதும்கூட, ஆளுங்கட்சியைக் குறை கூறும்போதே, ஆட்சியிலே இல்லாத தி.மு.கழகத்தையும் அத்துடன் சேர்த்துக் கொண்டு இணைத்து தாக்கி அறிக்கை விடுவது என்பது - ஆளுங்கட்சி யின் தலைமை எங்கே தங்களைக் கோபித்துக் கொண்டுவிடப் போகிறதோ என்றெண்ணி, கழகத்தையும் ஆளுங்கட்சியோடு சேர்த்துக் கொண்டு சம நிலையில் அறிக்கை விடு கிறதோ என்றுதான் எண்ண வேண்டியுள்ளது.

தி.மு. கழகம் ஆளுங்கட்சியாக இருந்த போது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் என்னைத் தலைமைச் செயலகத்திலே சந்தித்து, அ.தி.மு.க. வின் தலைவிக்கு மிகவும் வேண்டியவர்கள் சிறுதாவூர் கிராமத்தில் தலித்களுக்கு தரப்பட்ட நிலங்களையெல்லாம் ஆக்ரமித்து விட்டார்கள் என்று புகார்

கொடுத்ததையும், அந்தப் புகாரின் மீது கழக அரசு நடவடிக்கை எடுத்து, விசாரணைக் கமிஷன் அமைத்ததையும், அந்த விசாரணைக் கமிஷன் நீதிபதி திரு.சிவசுப்பிரமணியம் அவர்கள் அறிக்கை கொடுத்ததையும், அந்த அறிக்கை தற்போது அ.தி.மு.க. ஆட்சியிலே எந்தவிதமான நடவடிக்கைக்கும் உள்ளாகாமல் இருப்பதையும் பற்றி மௌனமாக இருப்பது ஏன்? தி.மு. கழகம் என்றால் மட்டும் வெறுப்பைக் காட்ட முன் வருவது ஏன்? இவை எல்லாமே அரசியல்தானா?

அன்புள்ள,

மு.க.

09-07-2012

3640. என்ன நடக்கிறது தமிழகத்தில்?

உடன்பிறப்பே,

நாட்டிலே ஒரு ஆட்சி உண்மையிலேயே (?) நடக்கிறது! அந்தக் காலத்தில் அரசர் அமைச்சரை அழைத்து "மந்திரி, மாநகர் தனில் மாதம் மும்மாரி மழை பொழிகிறதா?" என்று கேட்பாராம். தற்போது அரசருக்குப் பதிலாக, நமது முதல் அமைச்சர், கொடைநாட்டிற்கே அமைச்சர்களையும், அதிகாரிகளையும் அழைத்து, நாட்டிலே மழை ஒழுங்காகப் பெய்கிறதா என்று விசாரித்துக் கொண்டிருக்கிறார். முதலமைச்சர் கொடைநாட்டில் இத்தனை நாட்கள் தங்கவும், அவரைப் பார்ப்பதற்காக அதிகாரிகளும், அமைச்சர்களும் "யாத்திரை" செய்ய ஆகின்ற செலவு எவ்வளவு? அதெல்லாம் மக்கள் தரும் வரிப் பணம்தானே? இன்றைய அ.தி.மு.க. ஆட்சியிலே நேற்று ஒரு நாளில் மட்டும் என்னென்ன நடைபெற்றதாக இன்று ஏடுகளில் வந்துள்ள செய்திகளை மட்டும் தொகுத்துக் காட்டுகிறேன்; நீயே புரிந்து கொள், ஆட்சி நடைபெறுகிறதா இல்லையா என்று!

- சென்னை சைதாப்பேட்டையில் லஞ்சம் வாங்கியதை புகைப்படம் எடுத்தது தொடர்பாக இரண்டு தலைமைக் காவலர்கள், சங்கர் - ஷாஜகான் ஆகியோர் சாலையில் கட்டிப் புரண்டு சண்டை போட்டிருக்கிறார்கள்.
- சென்னை கிண்டி ரேஸ்கோர்ஸ் வளாகத்தில் க. ரமேஷ் என்ற 45 வயதான தொழிலதிபர் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.
- சென்னை கொருக்குப்பேட்டையைச் சேர்ந்த அருள் என்ற ஆட்டோ டிரைவர் அடித்துக் கொலை.
- ஆவடியில் தங்கியிருந்த கல்லூரி மாணவர் சக்திகுமார் மர்மச் சாவு.
- கோவை அவிநாசி சாலையில் குடிபோதையில்

பெண்ணிடம் தகராறு செய்திருக்கிறார் போக்குவரத்து சப் இன்ஸ்பெக்டர் கருப்பையா.

- ஆளுங்கட்சியான அ.தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர் வி.பி. கலைராஜன் வீடு தாக்கப்பட்ட வழக்கை சி.பி., சி.ஐ.டி விசாரணைக்கு உயர் நீதி மன்ற நீதியரசர் மாற்றியிருக்கிறார்.

- சென்னை ஆயிரம் விளக்கு குடிசைப் பகுதியில் பத்து குடிசைகள் தீப்பிடித்து எரிந்து நாசமாகின. ஒரே மாதத்தில் இதே பகுதியில் நடைபெற்ற மூன்றாவது தீ விபத்து இது.

- சென்னை பல்லாவரத்தில் அரசுப் பேருந்து ஒன்று மோதி அண்ணா பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த 23 வயதுள்ள மாணவன் எம். சுப்ரமணி உயிரிழந்துள்ளார்.

- அதே பல்லாவரம் மேம்பாலத்தில் தனியார் பொறியியல் கல்லூரி பேருந்து ஒன்று திடீரென்று தீப்பிடித்து எரிந்திருக்கிறது.

- பணியிடம் ஒதுக்காத காரணத்தால் நான்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர்.

- பவானிசாகர் அணை நீர்மட்டம் “கவலைக்கிடம்” - கேள்விக்குறியாகும் விவசாயம்

- அரிசி பதுக்கல்காரர்கள் மீது கடும் நடவடிக்கை தேவை என்று இந்திய ஜனநாயகக் கட்சி நிறுவனர் வலியுறுத்தி யிருக்கிறார்.

- செங்கல்பட்டு, பூவிருந்தவல்லியில் உள்ள அகதிகள் சிறப்பு முகாம்களை மூடக் கோரி நாம் தமிழர் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டு ஆயிரம் பேர் கைதாகி, விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

- நாமக்கல் அரசு மருத்துவமனையிலிருந்து பச்சிளம் குழந்தை ஒன்று கடத்தப்பட்டுள்ளது.

- கம்பம் அருகே அங்கன்வாடி மையத்தில் நான்கு வயது குழந்தை ரோஷிணிக்கு சூடு வைத்திருக்கிறார்கள்.

- மதுரை அரசு மருத்துவமனை வளாகத்தில் செவிலியர் பள்ளி மாணவி பூமாரி என்பவர் தற்கொலை செய்து கொண்டு இறந்திருக்கிறார்.
- விருதுநகர், திருச்சுழி அருகே இரண்டு பிரிவினரிடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து நடைபெற்ற கல்வீச்சு சம்பவத்தில் 3 அரசு பேருந்துகள் உட்பட 5 பேருந்துகள் நாசமடைந்துள்ளன.
- ராமநாதபுரம் அருகே மேலக்கோட்டை கிராம அஞ்சலக அதிகாரி போலியாக கையெழுத்திட்டு 51 ஆயிரம் ரூபாய் கையாடல் செய்துள்ளார்.
- புழல் சிறையில் விசாரணைக் கைதி மணி என்பவர் தூக்குப் போட்டு தற்கொலை.
- திருமுல்லைவாயலில் விவேக்குமார் என்ற அதிகாரி வீட்டில் 18 பவுன் நகை திருட்டு.
- தமிழகம் முழுவதும் 11 மேம்பாலப் பணிகள் நிறைவடையாமல் உள்ளன - அந்தரத்தில் விடப்பட்ட நெடுஞ்சாலைத் துறைப் பணிகள்.
- ஆறு பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர் பதவி காலி - பதவியைப் பிடிக்க பலரும் கோட்டைக்கு படையெடுப்பு.
- நெல்லுக்குத் தட்டுப்பாடு - உயர்கிறது அரிசி விலை - ஆலைகளில் உற்பத்தி நிறுத்தம்.
- மத்திய நிதியைப் பயன்படுத்தாத தமிழக அரசு - ஜெயலலிதாவுக்கு மத்திய அமைச்சர் ஜெய்ராம் கடிதம்.
- "சில்மிஷ" ஆசிரியர் மீது நடவடிக்கை இல்லை - முதல்வர் உத்தரவை செயல்படுத்தாமல் கல்வித் துறை அலட்சியம்.
- மடத்துக்குளம் அருகில் மணல் லாரி டிரைவரிடம் எஸ்.ஐ. லஞ்சம்.
- தூத்துக்குடியில் அமைச்சர் செங்கோட்டையனை முற்றுகையிட்ட மக்கள்.

- போலீஸ் வெப்சைட்டில் திருட்டு - அனானிமஸ் குழு மீது சந்தேகம்.
- மதுரையில் வீடு ஒதுக்குவதில் முறைகேடு.
- சேலம் மத்திய சிறையில் கஞ்சா கடத்திச் சென்ற சிறை அதிகாரி.
- விருதுநகரில் கலெக்டர் நியமனம் தாமதம் - வளர்ச்சிப் பணிகள் பாதிப்பு.
- கூடலூர் அருகில் 17 டன் வெடி பொருள்களுடன் லாரி பறிமுதல்.
- அம்பத்தூரில் திறந்தவெளியில் சத்துணவு சமையல் - அரசு பள்ளியில் அவலம்.
- பூவிருந்தவல்லியில் மீனாட்சி என்ற பெண்ணிடம் செயின் பறிப்பு.
- கோயம்பேடு மார்க்கெட்டில் மீண்டும் முளைக்கும் ஆக்கிரமிப்புக் கடைகள் - கண்டு கொள்ளாத நிர்வாகக் குழு
- சென்னை நகருக்கு தட்டுப்பாடின்றி குடிநீர் கிடைக்குமா - கிருஷ்ணா நீர்வரத்து குறைந்தது.
- கூடுதல் கட்டணம் கேட்டு பள்ளிக் குழந்தை மதுமிதாவை ஆசிரியர் அறைந்தார்.
- மது சப்ளையில் முறைகேடு - டாஸ்மாக் உதவி மேலாளர் சஸ்பென்ட்.
- கோவை அருகே கார் கண்ணாடியை உடைத்து 3.50 லட்சம் ரூபாய் திருட்டு.
- வாலாஜா அருகே இலவச ஆடுகளை விற்ற முப்பது பேர்.
- திருப்பூரில் தொழிலாளி வீட்டில் ஐம்பொன் சிலை
- பொதிகை ரயிலில் பெண்ணிடம் முறைகேடு.

உடன்பிறப்பே, இன்று காலையில் ஏடுகளில் வந்துள்ள செய்திகளைத்தான் இங்கே எடுத்து எழுதியிருக்கிறேன். இவற்றைப் பற்றியெல்லாம் கவனிக்க முதல் அமைச்சரோ, மற்ற

அமைச்சர்களோ தலைநகரிலே இருக்கிறார்களா? ஆனால் அன்றாடம் முதல் அமைச்சர் பெயரால் ஒரு அறிவிப்பு மட்டும், துப்புரவுப் பணியாளர் நியமனம், வருவாய்க் கிராமங்கள் உயர்வு, கவுரவ விரிவுரையாளர் நியமனம் என்று மட்டும் கொடநாட்டிலே இருந்தவாறே "பேக்ஸ்" மூலமாகவே வந்து கொண்டிருக்கின்றன. அந்த அறிவிப்புகள் எல்லாம் முறையாக அமைச்சாகளுடனும் அதிகாரிகளுடனும் விவாதிக்கப்பட்டு, அதன் பிறகு வெளி வர வேண்டியவை அல்லவா? அவ்வாறு அந்த அறிவிப்புகள் வருகின்றனவா? செயல்படுத்தப் போகின்ற அறிவிப்புகள்தானே விவாதித்து முடிவெடுக்கப்பட்டு அதன் பிறகு வெளியிடப்படும். இந்த அறிவிப்புகள் எல்லாம், வெறும் அறிவிப்புக்காக மட்டும்தானே என்று கேட்கலாம்! அரசு என்று ஒன்று அமைந்த பிறகு, அந்த அரசு செயல் படுகிறதோ இல்லையோ, செயல்படுவது போன்ற தோற்றமாவது இருக்க வேண்டாமா? முதலமைச்சர் நினைத்தால் சசிகலா மீதும், அவருடைய கணவர் மீதும், அவர்களுக்கு வேண்டிய ராவணன், திவாகரன் போன்ற வர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பார்! அடுக்கடுக்கான வழக்குகளைப் பதிவு செய்வார். தற்போது அந்த வழக்கிலே குற்றம் சாட்டப்பட்ட ராவணனை கொடைநாட்டிற்கே அழைத்துப் பேசுகிறார் என்பது உண்மை யென்றால் இவைகள் எல்லாம் யாரை ஏமாற்றுகின்ற செயல்கள்? அவர்கள் மீதெல்லாம் போடப்பட்ட வழக்குகள் என்னவாயிற்று? நடராஜன் மீது புகார் என்றார்கள். பிறகு கொடுக்கப்பட்ட புகார்கள் திரும்பப் பெறப்பட்டன என்கிறார்கள். அப்படி யென்றால் பொய்ப் புகார் கொடுத்தவர்கள் மீது என்ன நடவடிக்கை? அந்தப் புகார் பொய்யானதா, மெய்யானதா என்று காவல் துறை முறையாக முதல் நிலை விசாரணை நடத்தாதது ஏன்? காவல் துறையினரின் அந்தத் தவறான நடவடிக்கைக்குக் காரணம் என்ன? அந்த வழக்கிலே சம்பந்தப்பட்டவர் சிறையிலிருந்து வெளியே வந்ததும், அவரை "என்கவுண்டர்" செய்ய முயற்சி நடைபெற்றதாக இந்த ஆட்சியினர் மீது குற்றம் சாட்டினாரே; அதற்கு இந்த அரசின் பதில் என்ன? அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையையே அவர்தான் தயாரித்துக் கொடுத்தேன் என்றார். முதல் அமைச்சருக்கு பேசவே தெரியாது, நான்தான் எழுதிக் கொடுத்தேன் என்றார். அவைகள் எல்லாம் உண்மைகளா? இந்த அரசு அதற்கு எந்தப் பதிலும் சொல்லாமல் இருப்பதிலிருந்து, அவர் சொன்னதெல்லாம் உண்மை என்றுதானே மக்கள் நம்புவார்கள். அதன்பிறகு அவர் வாயே திறக்கவில்லையே?

என்ன காரணம்? வாயைத் திறக்கக் கூடாது என்று அடக்கி வைக்கப்பட்டு விட்டாரா? இந்த அரசினால் பயமுறுத்தப்பட்டு விட்டாரா?

குற்றம் சாட்டப்பட்டு, சிறையிலே அடைக்கப்பட்ட ராவணன் முதல் அமைச்சரைச் சந்திப்பதற்காக கொடைநாடு வந்தார் என்று ஏடுகளில் வந்த செய்தி உண்மையா இல்லையா? அது உண்மை என்றால், அவர் என்ன பேசுவதற்காக வந்தார்? அந்த உண்மைகள் எல்லாம் நாட்டிற்குத் தெரிய வேண்டியது இல்லையா? எதிர்க்கட்சியினரைப் பழி வாங்குவது ஒன்றுதானே முறையாக நடக்கிறது! வேறு என்ன நடக்கிறது நாட்டிலே? இதற்கு ஆட்சி என்றா பெயர்; "காட்சி"கள் தானே மாறி மாறி அரங்கேறுகின்றன!

அன்புள்ள,

மு.க.

13-7-2012

3641. குழப்பம் எனக்கூறி குதர்க்கம் விளைக்காதீர்!

உடன்பிறப்பே,

இலங்கையில் உள்ள ஈழத் தமிழர்களின் உரிமைகளைக் கோரிப் பெற வேண்டும் என்பதிலும்;

இலங்கையில் நடைபெற்ற ஆயுதப் போராட்டத்திற்குப் பிறகு; சிங்கள ராணுவம் ஈழத் தமிழர்களை அழித்து ஒழித்திட முனைந்துள்ள இந்த நேரத்தில்;

எஞ்சியுள்ள இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்கவும் - அவர்களின் வாழ்வாதாரங்களை வலுப்படுத்தவும் - அவர்களுக்கு போரினால் ஏற்பட்ட இன்னல்களைக் களைந்திடவும் - எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கலாம்; எதில் நாட்டம் செலுத்தலாம்; எத்தகைய ஆதரவு கோரலாம்; போருக்குப் பிறகும், ஒரு பொதுவான அமைதி அங்கே ஏற்படாமல் தொடர்ந்து சிங்கள ராணுவத்தின் அட்டூழியங்கள் தமிழர்கள் மீது தொடர்வதைக் கண்டிக்கவும்; அவற்றிலிருந்து இலங்கையிலுள்ள ஈழத் தமிழர்களைக் காப்பாற்றவும்;

அறவழியில் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதுதான் ஆகஸ்ட் 12ஆம் தேதி சென்னையில் நாம் நடத்த இருக்கின்ற மாநாட்டின், திட்டமாகவும், தீர்மானமாகவும் இருக்கும் என்பதையும்;

மாநாட்டில் இத்தகைய தீர்மானங்கள் விவாதிக்கப்படுவதாலோ - அல்லது நிறைவேற்றப்படுவதாலோ "தமிழ் ஈழம்" என்ற குறிக்கோளை திராவிட முன்னேற்றக் கழகம் கைவிட்டு விட்டதாக கற்பனை செய்து கொள்ள வேண்டாம் என்று, அந்த மாநாட்டைப்

பற்றிய விளக்கங்களை அளித்த செய்தியாளர்கள் கூட்டத்தில் நான் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறேன்.

ஆனால் சில செய்தி ஏடுகள் மற்றும் சில நண்பர்கள் தெளிவாக நான் அளித்த அந்தப் பேட்டியையே குழப்பம் என்று குதர்க்க வாதம் செய்வதையும்; நாம் தமிழ் ஈழக் கோரிக்கையையே கை விட்டு விட்டோம் என்பதைப் போல பேசுவதையும், எழுதுவதை யும், அறிக்கைகள் விடுவதையும் காணும் போது; எந்தக் கருத்தை தி.மு. கழகம் மக்கள் முன்னால் எடுத்து வைத்தாலும்; அதற்கு மாறுபட்ட கருத்தைச் சொல்லி குழப்பம் ஏற்படுத்த முயற்சி செய்வதையோ, நமது கருத்தைக் கேலி செய்வதையோ வாடிக்கை யாகக் கொண்டுள்ளவர்களிடமிருந்து நாம்

வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது. அவர்களின் ஒட்டு மொத்த கருத்தெல்லாம், நாம் சொல்லுகின்ற கருத்து என்ன என்பதைவிட, நாம் என்ன சொன்னாலும் எதிர்ப்பதுதான் தங்கள் வாழ்நாள் திட்டம் - பிறவிப்பயன் என்று நினைப்பவர்களிடமிருந்து - நம்முடைய கருத்தை ஏற்று ஆதரவு தெரிவிப்பார்கள் என்று நாம் நினைக்க முடியாது.

தனித் தமிழ் ஈழம் வேண்டும், அதுவும் இன்றைக்கே வேண்டும், அதற்கு ஆயுதங்களை ஏந்த வேண்டும் என்று நாம் சொன்னால், உடனே "ஆகா, இவர் இப்படிச் சொன்னதால் தான் இலங்கைத் தமிழர்கள் அடிபட்டு சாக வேண்டி இருக்கிறது, அவர்களின் அழிவுக்கு இவர்தான் காரணம்" என்பார்கள். முதலில் இலங்கைத் தமிழர்களின் தற்போதைய துன்பங்கள் தீரவேண்டுமென்றும், மற்றவற்றைப் பற்றி நேரம் பார்த்துச் சிந்தித்துச் செயல்படலாம் என்றும் சொன்னால், "ஆகா, பார்த்தீர்களா, தமிழ் ஈழம் கொள்கையையே விட்டு விட்டார்" என்பார்கள். எனவே அவர்களின் தரத்திற்கு அதைத்தான் எதிர்பார்க்க முடியும்.

இலங்கையில் தமிழ் இனம் - சிங்கள ராணுவத்தால் நடத்தப்பட்ட மனித நேயம் மற்றும் மனித உரிமைக்கு எதிரானத் தாக்குதலில்; பெரும் அழிவுக்கும் அவதிக்கும் உள்ளாகி ஆதரவற்ற நிலையில் கை கொடுப்பார் யாரும் இல்லையா? கருணை

காட்டுவோர் எவருமில்லையா? என்று கண்ணீரும் கம்பலையுமாக தேம்பித் திரிகின்ற இந்த நேரத்தில் அவர்களின் காயங்களுக்கு மருந்து போடவும், ரணம் பட்ட உடல்களுக்கு அவசர சிகிச்சை செய்யவும், இனியும் இத்தகைய அழிவுக்கு உள்ளாகாமல் அவர்கள் காப்பாற்றப்படவும்; உடனடி நிவாரணமாக என்ன செய்யலாம்? இந்திய அரசானாலும் - உலக நாடுகளில் உதவிக்கு வரக்கூடிய அரசுகளானாலும் அவற்றையெல்லாம் வலியுறுத்தி, ஈழத் தமிழர்களின் வாட்டம் போக்கிட உடனடி நடவடிக்கை என்ன என்பதைச் சிந்தித்து, விவாதித்து, செயல்படுத்துவதுதான் இந்த மாநாட்டைக் கூட்டுகின்ற நம்முடைய கடமையும், கலந்து கொள்கிறவர்களுடைய கடமையும் ஆகும்.

அந்தக் கடமைகளைப் பற்றி விரிவாக விவாதித்து ஈழத் தமிழர்களைப் பாதுகாக்கவும் உரிய தீர்மானங்களை நிறைவேற்றவும், அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான செயல் திட்டங்களை வகுக்கவும் நாம் தொடங்குகிற உடனடி முயற்சிதான் இந்த மாநாடு.

இந்த மாநாடு பற்றிய விளக்கங்களை அளிப்பதற்கு நான் கூட்டிய செய்தியாளர்கள் கூட்டத்தில்,

“இந்த டெசோ மாநாட்டில் தனி ஈழம் கோரி வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்ற வாய்ப்பு இருக்கிறதா?” என்று கேட்டபோது, நான் விரிவாக அளித்த பதிலை மீண்டும் இப்போது நினைவூட்ட விரும்புகிறேன். அந்தப் பதில் வருமாறு :-

“தனி ஈழத்தைப் பற்றி கருத்து இருக்கிறதே தவிர, அதை இப்போதே அழுத்தந்திருத்தமாகச் சொல்லி, அதற்கான கிளர்ச்சிகளை நடத்துவதாக உத்தேசமில்லை. ஏனென்றால் அங்கே நடைபெற்ற ஆயுதப் போராட்டத்திற்குப் பிறகு, ஆயுதப் போராளிகளை சிங்கள ராணுவம் அழித்து ஒழித்துள்ள இந்த நேரத்தில் எஞ்சியுள்ள இலங்கைத் தமிழர்களைப் பாதுகாப்பது, அவர்களின் வாழ்வாதாரங்களை வளப்படுத்துவது, அவர்களுக்கு போரினால் ஏற்பட்ட இன்னல்களைக் களைவது, இவற்றில் எப்படியெல்லாம் நடவடிக்கை

எடுக்கலாம், நாட்டம் செலுத்தலாம், ஆதரவு கோரலாம் என்பதற்காகத்தான் இந்த மாநாட்டைக் கூட்டி, அதிலே கலந்து கொள்கின்றவர்களின் அறிவுரை, கருத்துரை ஆகிய வற்றையும் நாங்கள் முக்கியமாகக் கருதி, அவற்றின் அடிப்படையில் அமைதியான முறையில் அற வழியில் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதுதான் இந்த மாநாட்டை நடத்துகின்ற எங்களுடைய நோக்கமாகும்"

என்று நான் தெளிவாகவே குறிப்பிட்டதோடு;

"தமிழ் ஈழம் இதுவரை எனது நிறைவேறாத கனவு என்று நான் அன்று சொன்னதை எப்போதும் சொல்வேன், இப்போதும் சொல்கிறேன். என்னுடைய நிறைவேறாத ஆசை அதுதான். தனித் தமிழ் ஈழம் என்று முன்பு நான் சொன்னதை இப்போதும் சொல்வதற்கு தயங்கவில்லை. தனி ஈழம் ஒரு காலத்தில் அமையலாம். அதற்கும் ஒரு கால அவகாசம் வேண்டும்"

என்றும் நான் திட்டவட்டமாக என்னுடைய உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்கிறேன்.

மேலும் செய்தியாளர்கள் சந்திப்பில், "பொது வாக்கெடுப்பு பற்றிய எந்தக் கருத்தும் விவாதத்திற்கான கருத்துரு தொடர்பான அறிக்கையில் சொல்லப்படவில்லையே?" என்று கேட்கப்பட்ட போது,

"இந்த மாநாட்டிற்கு வருகின்ற பிரதிநிதிகளின் கருத்துக்களை யெல்லாம் அறிந்த பிறகு, முடிவெடுப்பது தான் ஜனநாயகம் என்ற காரணத்தால், நான் எதையும் முன்கூட்டியே சொல்லி யாரையும் கட்டுப்படுத்த விரும்பவில்லை, அது நல்லதுமல்ல"

என்றும் விளக்கியிருக்கிறேன்.

இவ்வளவிற்கும் பிறகும் ஒரு சிலர் தமிழ் ஈழத்தைக் கருணாநிதி விட்டு விட்டார் என்றெல்லாம் கற்பனை உலகத்தில் சஞ்சரிப்பார்களானால், அவர்கள் அப்படியே சஞ்சரிக்கட்டும். நாம் நம் வழியிலே நடப்போம்.

இதிலே ஒன்றும் குழப்பம் இல்லை. எப்படியாவது இதையும் குழப்ப வேண்டும் என்று எண்ணுகிற குதர்க்கவாதிகளுக்கு, செய்தியாளர்கள் கூட்டத்தில் நான் அளித்துள்ள இந்த விளக்கமே தக்க பதிலாக அமையும் என்று நான் நம்புகிறேன்.

அன்புள்ள,

மு.க.

19-7-2012

3642. முரசொலி எண்ணிக்கை மும்மடங்கு பெருக வேண்டும்!

உடன்பிறப்பே,

“பாரோட்டிப் போற்றி வந்த பழமை லோகம்
ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்!”

என்று கொள்கை முழக்கம் செய்து, துண்டு வெளியீடாக வெளிவந்த ‘முரசொலி’க்கு இப்போது வயது 70. ‘முரசொலி’யின் தொடக்கம் 1942ஆம் ஆண்டு என்பதைக் கணக்கிட்டு இதனைச் சொல்லுகிறேன். ‘முரசொலி’ துண்டு வெளியீடாக வெளிவரு வதற்கு ஐந்தாண்டுகளுக்கு முன்பே ;

“இராப்பகல் எந்தப் பொழுதும், தமிழின்
ஏற்றம் கருதித் துடிப்பவனே! – அன்று
ஈரேழு வயதில் எடுத்த கொடியை
இன்றும் தூக்கிப் பிடிப்பவனே!”

என நமது இயக்கத்தின் இலட்சியக் கவிஞன் கவிச்சுடர் கவிதைப்பித்தன் குறிப்பிட்டிருப்பது போல, ஈரேழு வயதில் எடுத்த கொடியை இன்றும் தூக்கிப் பிடிப்பவனாக இருக்கிறேன் என்பதை என் பகைவரும் மறுக்கமாட்டார். 1937லேயே இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து,

“ஓடிவந்த இந்திப்பெண்ணே கேள் – நீ
தேடிவந்த கோழையுள்ள நாடு இதல்லவே!”

என்று பாடி திருவாரூர்த் தெருக்களில் மாணவர் பேரணி நடத்தியவன் நான்! பள்ளிச் சிறுவனாக இருந்த நேரத்திலேயே, ‘முரசொலி’ துண்டு வெளியீடு எனது கைகளை அலங்கரிக் கும். நண்பர்கள், உறவினர்கள், வேற்றார், மாற்றார் என்று மாறுபாடில்லாமல் அனைவரின் பார்வைக்கும் திருவாரூர்

கிருஷ்ணா அச்சகத்திலிருந்து நான் வெளியிடும் 'முரசொலி' துண்டுத்தாள் சென்று, கனல்கக்கும் கருத்து விருந்தினை அளித்திடத் தவறியதே இல்லை!

"வரட்டுமே வள்ளலார்" என்ற தலைப்பில் ஒரு வெளியீடு! நாத்திகர்களான நண்பர்கள் மட்டு மல்லாமல், ஆத்திகரான பல பெரியோர்களும் "ஆமாம்" அருட்பெருஞ்சோதி இராமலிங்கர் மீண்டும் வந்தால்தான்;

"சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணே நீர் அழிதல் அழகலவே"

என்று அவர் சொன்னதைப் போல்; அறிவுறுத்தி வீழ்ந்து கிடக்கும் மக்களை விழிக்கச் செய்திட முடியும் என்று நகர்ப்புறத் தெருக்களிலும் நாளங்காடி வீதிகளிலும் பேசியதைக் கண்டு, நானும் என் நண்பன் தென்னனும் மகிழ்ச்சி பொங்கிடக் குதித்திருக்கிறோம்.

குழந்தைப் பருவத்தில் இருந்த 'முரசொலி'யை அச்சியற்றி, வார வெளியீடாக வழங்குவதற்குத் துணை புரிந்த கருணை எம்.ஜமாலை - கிருஷ்ணா அச்சக உரிமையாளர் நாராயண சாமியை மறக்கத்தான் முடியுமா?

திருவாரூரில் அச்சகத்திற்குக் குறுக்கே ஓடிக் கொண்டிருக்கும் ஓடம்போக்கி நதியைத் தாண்டுவதற்குக் கட்டப்பட்டிருந்த மூங்கில் பாலத்தைக் கடந்து, 12 மணி நள்ளிரவிலும் பலத்த இடிமழையிலும் 'முரசொலி' வார இதழ் ஏடுகளை மூட்டையாகக் கட்டித் தலையில் தூக்கிக் கொண்டு போன அந்தக் காட்சியைத் தான் மறையும் வரையில் மறக்கத்தான் முடியுமா?

கையூன்றி ஊர்ந்திடும் குழந்தைப் பருவம் கடந்து, நடைபயின்று நாலா திக்கிலும் பரவிய வார ஏடு 'முரசொலி'யின் கொள்கை வைராக்கியத்தைக் குலைத்திட யாராலும் இயலாது. மனமார ஏற்றுக் கொண்ட தலைவர்கள் பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் அடியொற்றி நடந்து, இன்று எழுபது ஆண்டுகளை எட்டிப் பிடித்திருக்கிறது.

‘முரசொலி’ என்றால் அது காட்டாறுகளைக் கடந்து, தென்றல் தீண்டியதில்லை, தீயைத்தான் தாண்டி வந்தோம் என்று நெஞ்சை நிமிர்த்தி நடைபோட முடிகிறது என்றால்; இந்த இயக்கத்தின் இலட்சோப இலட்சம் கழகக் கண்மணிகள் காட்டும் ஆர்வமும், தமிழ் மக்களின் பரிவும், பாசமும்தான் காரணம் என்பேன்!

‘முரசொலி’ தொடங்கிய காலத்திற்கும் இந்த காலத்திற்கும் இடையே இயக்கம் வளர்க்க, இலட்சிய முரசு கொட்ட எத்தனையோ அறிஞர்கள், காவலர்கள், ஏடுகள் மூலம் எடுத்து வைத்த முயற்சிகள் எல்லாம் அதே அளவில் இன்று தொடராத நிலையிலும்; ‘முரசொலி’ மட்டும் என்னைப் போல, இன்னும் ஆயுள் நீண்டும் ஓங்கி வளர்ந்தும் வருவதற்குக் காரணம் என்னைவிட - என் குடும்பத்துப் பிள்ளைகளை விட - ‘முரசொலி’யை நான் மூத்த பிள்ளையாகக் கருதி, அதன் முழக்கத்தை நிறுத்தாமல், பாதுகாத்து வருவதால்தான் என்பதை உடன்பிறப்புகளாகிய நீவிர் நன்கறிவீர்!

இடையிலே ஓரிருமுறை இடைக்காலமாக ‘முரசொலி’யை நிறுத்த நேரிட்டபோது; இலக்கிய ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், சமுதாய ரீதியாகவும் கருத்து வேறுபாடு கொண்டு கடுமையாக என்னை எதிர்த்த பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், ‘முரசொலி’ அலுவலகத்திற்கே வந்து, “இதை ஏன் இடையிலே நிறுத்த நினைக்கிறாய்! தமிழ்நாடு இன்றுள்ள நிலையில், இன எதிரிகள் அனைவரின் கையிலும் பல ஏடுகள் இருக்கும்போது ‘முரசொலி’யை நிறுத்திவிட்டால் அவர்களுக்குப் பதில் சொல்ல யார் இருக்கிறார்கள்?” என்றும்; “அதனை மீண்டும் தொடர்ந்து நடத்த வேண்டும்” என்றும் அன்புக் கட்டளை பிறப்பித்தார். பெருஞ்சித்திரனார் போன்ற பேரறிஞர்கள், பிரியமுள்ள நண்பர்கள், தன்மான உணர்வுடைய தமிழினக் காவலர்கள் அனைவருமே வற்புறுத்தி ‘முரசொலி’யைத் தள்ளாட விடாமல் தடுத்து நிறுத்தியதால்;

வாட்டம் போக்கி, வலிமை பெற்று
தடந்தோள் தட்டி முழங்கிடும் வீரனாக

மீண்டும் ‘முரசொலி’ தமிழர்களின் இல்லந்தோறும், உன்போன்றோர் உள்ளந்தோறும் ஒலிக்கத் தொடங்கியதை நீ நன்றாகவே அறிவாய்!

'முரசொலி' அலுவலகத்தைச் சுற்றி இரவு 12 மணிக்கு எதிரிகளின் படையெடுப்பு! என்னையும் முரசொலி மாறனையும் கைது செய்து போலீசார் அணிவகுப்பு! எங்களுக்கோ கழகத் தொண்டர்கள் மட்டுமே பாதுகாப்பு! இந்த நிலையிலும் புலவர் பெருஞ்சித்திரனாரின் பொன்மொழிகளை மறக்காமல் - இறுதியாக அண்ணாவின் ஆணையை ஏற்று -'முரசொலி' தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

ஓர் ஏடு வளர - அதனால்
நாடு மகிழ
இயக்கம் செழித்திட
இலட்சியத்தை வென்றிட

இன்றுள்ள சமுதாய - பொருளாதார... அரசியல் களத்தில் வென்றிட மட்டுமல்ல; தலைநிமிர்ந்து நின்றிடவும் 'முரசொலி' போன்ற ஓர் ஏடு தேவை என்பதை அனைவரும் அறிந்திருக்கி றோம்; அனுபவ ரீதியாகவும் உணர்ந்திருக்கிறோம். அறிந்தால் மட்டும் - உணர்ந்தால் மட்டும் போதுமானதல்ல என்பதால்; அறிந்தவர்களும் உணர்ந்தவர்களுமான உடன்பிறப்புக்களாகிய நீங்கள் - ஒரு போரில் நால்வகைச் சேனைகளும் ஈடுபடுவது போல - ஒவ்வொருவரும், நமது பிரச்சார பலத்திற்கு உண்மையாக விளங்கக்கூடிய 'முரசொலி' போன்ற ஏடுகளை முனைந்து வலுப்படுத்திட வேண்டுமல்லவா? அதற்கு கடைகளில் விற்பனையாகும் 'முரசொலி' இதழ்களின் எண்ணிக்கை மும்மடங்கு பெருகவேண்டும். ஊருக்கு ஓர் நமது கிளைக் கழகங்கள் உள்ள இடங்களில் எல்லாம் 'முரசொலி' இதழைப் படித்திடும் ஆர்வமுடையோர் ஒவ்வொரு நாளும் பெருகிட வேண்டும்! இதற்கு ஆவன செய்திட 'முரசொலி' அலுவலகத்தின் சார்பில் வகுக்கப்படும் திட்டங்களை - அறிவிக்கப்படும் வேண்டு கோள்களை அட்டியின்றி நிறைவேற்றிட ஒவ்வொருவரும் முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்!

அன்புள்ள

மு.க.

24-7-2012

3643. “எல்லாம் நானே” என்பது நல்லோர் போற்றும் வழியல்ல!

உடன்பிறப்பே,

முதல் அமைச்சர் ஜெயலலிதாவின் 23-7-2012 அன்றைய அறிவிப்பு - 5 அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகங் களையும் சென்னை அண்ணா பல்கலைக் கழகத்துடன் ஒருங்கிணைத்து ஒரே பல்கலைக் கழகமாக ஆக்கப் போகிறார்களாம்! தி.மு. கழக ஆட்சியினால் எடுக்கப்பட்ட முற்போக்கு முடிவுகளையெல்லாம் மாற்ற வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் செயல்படுகின்ற ஜெயலலிதா, மாணவர்களின் கல்வியிலும் தலையிட்டு தமிழகத்தின் வருங்காலச் சந்ததிகளைப் பாதிக்கும் செயலில் ஈடுபடுவது தான் மிகுந்த வேதனையாக உள்ளது. அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், அம்மையார் ஜெயலலிதாவிற்கு “அண்ணா ” என்றாலே அவருக்கு தி.மு. கழகம் என்ற நினைவுதான் ஏற்படுகிறது! அவருடைய கட்சிக்கே “அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்” என்று அண்ணா பெயரில் எம்.ஜி.ஆர். கட்சி ஆரம்பித்ததையும், அவர்களின் கட்சிக் கொடியிலேயே அண்ணா அவர்களின் படம் இடம் பெற்றிருப்பதையும் மறந்து விட்டு, அல்லது நினைவில் இருந்தாலும் அதை நெருப்பாக நெஞ்சிலே நிறுத்தி வைத்துக் கொண்டு - அண்ணா அவர்களின் நூற்றாண்டு நினைவினையொட்டி ஆசியா கண்டத்திலேயே மிகப் பெரிய அளவிற்கு நூலகம் கட்டினால், ஜெயலலிதாவிற்கு அண்ணா பெயரால் உள்ள நூலகம் என்பதை மறந்து, அதைக் கட்டியது கருணாநிதி ஆயிற்றே என்ற எண்ணம்தான் தோன்றுகின்றது! உடனே அந்த நூலகத்தை மாற்றுவதற்கான முயற்சியிலே ஈடுபடுகிறார்.

அதைப் போலவேதான் அண்ணா அவர்களின் நினைவிடத்தை விட, எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிட வாயில்

உயரமாக இருக்க வேண்டுமென்று திட்டம் வகுத்து அதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இந்த வரிசையில்தான் தி.மு. கழக ஆட்சியிலே 5 இடங்களில் அண்ணா பெயரில் தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்கள் என்றவுடன், அதனால் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மாணவர்கள் பெருமளவுக்குப் பயன்பெறுவார்களே என்ற எண்ணம் வராமல், மாணவர்கள் எக்கேடு கெட்டால் எனக்கென்ன, அண்ணாவின் பெயரை ஐந்து இடங்களில் இல்லாமல் செய்து விட்டேன், பாருங்கள் என்று செயல்படுகிறார். இப்படித்தான் கடந்த ஆண்டு ஆட்சிக்கு வந்ததும் வராததுமாக சமச்சீர் கல்வித் திட்டத்தை ஏற்க முடியாது, அந்தப் பாடத் திட்டப் புத்தகங்களையெல்லாம் தூக்கியெறிய வேண்டுமென்று பள்ளிக் கல்வி பாழாகிடும் வகையிலே செயல்பட்டார். நல்லவேளையாக நீதிமன்றம் மிகுந்த கவனத்தோடு செயல்பட்ட காரணத்தால் சமச்சீர் கல்வித் திட்டம் பிழைத்தது. அந்த வரிசையில்தான் தற்போது பொறியியல் உயர் கல்வியின் தரத்தை மேம்படுத்திடும் 5 அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்களையும் ஒன்றாக ஒருங்கிணைக்கப் போகிறேன் என்கிறார்.

மாணவர்களின் ஆரம்பக் கல்விக்கு வித்திட்டவர் காமராஜர் என்றால், தமிழகத்தின் மாணவர்களின் உயர்கல்விக்கு உறுதியாக வித்திட்ட ஆட்சி கழக ஆட்சி என்று சொல்லுமளவிற்கு, கழக ஆட்சிக் காலத்தில் பல்கலைக் கழகங்களும், மருத்துவக் கல்லூரிகளும், பொறியியல் கல்லூரிகளும், கலைக் கல்லூரிகளும் மாநிலம் முழுவதும் பரவலாகப் பெருகின. மாணவர்கள் உயர்கல்வி பெறுவதற்கான அத்தனை முயற்சிகளும் கழக ஆட்சியில் முறையாக எடுக்கப்பட்டன. இன்னும் சொல்லப்போனால் உயர் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதற்கெனத் தனி அமைச்சகமே கழக ஆட்சியிலேதான் ஏற்படுத்தப்பட்டது. அதையும் யாராவது நம்முடைய முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு செல்வார்களேயானால், கழக ஆட்சியிலே உருவாக்கப்பட்டது என்பதற்காக அதுவும் தேவையில்லை; மீண்டும் கல்வித் துறைக்காக ஒரே அமைச்சரே போதும் என்ற ஒரு முடிவினை அறிவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

23-7-2012 அன்று வெளிவந்துள்ள "டெக்கான் கிரானிகல்" ஆங்கில நாளிதழில், இந்த ஒருங்கிணைப்பு பற்றி

எழுதும்போது, மூத்த கல்வியாளர்கள் வரவேற்றபோதிலும், காலப்போக்கில் இந்த முடிவு நல்லதல்ல என்று கூறுகிறார்கள் என்றே எழுதியுள்ளது. ("It was not a good move in the long run, they pointed out") மேலும் அந்தக் கல்வியாளர்கள் கூறும்போது, "பரவலாக்குதல் என்பது கல்வி உள்ளிட்ட எல்லாத் துறைகளிலும் நன்மை பயக்கக் கூடியதுதான். பரவலாக்குதல் மூலமாக கல்வியின் தரம் உயரும். மேலும் கண்காணித்தலும், முறைப்படுத்துதலும் எளிமையாக இருக்கும், ஆனால் இதற்கு மாறாக ஒரே இடத்தில் மையப்படுத்துதல் என்பது பல்வேறான பிரச்சினைகளுக்கு வழி வகுக்கும்" ("The Professors argued that decentralization was always good, including in education, which would enhance the quality of education and help in easy monitoring and regulation, while centralisation would only open a Pandora's Box.") என்றும் "டெக்கான் கிரானிகல்" வெளியிட்டுள்ளது. அது மாத்திரமல்ல; புகழ் பெற்ற ஒரு பொறியியல் கல்லூரியின் முதல்வர் இதைப்பற்றிக் கூறும்போது, அண்ணா பல்கலைக் கழகத்தை இவ்வாறு ஒருங்கிணைப்பது என்பது பொறியியல் கல்விக்கு எந்த வகையிலும் உதவாது என்றும், சான்றிதழ்களை அச்சடித்து வழங்குவதும், தேர்வுகளை நடத்துவதும், 500க்கு மேற்பட்ட பொறியியல் கல்லூரிகளை மேற்பார்வையிடுவதும் ஏராளமான தொந்தரவுகளை உண்டாக்கும் என்றும் கூறினார் என்று அந்த ஆங்கில ஏடு எழுதியிருக்கின்றது.

25-7-2012 தேதிய "இந்து" நாளிதழ் "Anna University merger worries part-time students" என்ற தலைப்பில் Students say their course will not be recognized by Anna University, Chennai örgjiThis will make it difficult for them to join a Ph.D. Programme in AU, Chennai என்றும் தலைப்பிட்டு பெரிய அளவிற்கு வெளியிட்டுள்ளது.

யார் எழுதினால் என்ன? யார் சொன்னால் என்ன? அவற்றையெல்லாம் கேட்டுச் சிந்திக்கக்கூடிய அரசா தமிழகத்திலே இருக்கிறது? தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று சொல்கின்ற வரட்டுப் பிடிவாத அரசு அல்லவா இங்கே நடக்கிறது!

3-5-2007 அன்று பேரவையில் உயர் கல்வித் துறை மானியத்தில் அ.தி.மு.க. சார்பில் பேசிய இன்றைய அமைச்சர், திரு. சி.வி. சண்முகம், அண்ணா பல்கலைக் கழகம் திருச்சியிலும், கோவையிலும் அமைக்கப்பட்டதைத் தவறு என்று சொல்லவில்லை. பல்கலைக் கழகங்களைப் பிரிக்கக் கூடாது

என்றும் சொல்ல வில்லை. என்ன சொன்னாரென்றால், "திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக் கழகம் என்று சொல்வதற்குப் பதிலாக, அண்ணா பல்கலைக் கழகம், திருச்சி, அண்ணா பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் - அதாவது ஐ.ஐ.எம். பெங்களூர், ஐ.ஐ.எம். டெல்லி, அலகாபாத் என்று சொல்வது போல சொன்னால் நன்றாக இருக்கும் என்ற ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்" என்றுதான் தெரிவித்திருக்கிறார்.

அண்ணா பல்கலைக் கழகத்தை தமிழகத்தின் ஐந்து பகுதிகளிலே ஏற்படுத்துகின்ற முடிவை தி.மு. கழகம் ஏதோ திடீரென்று அறிவிக்கவில்லை. 2006ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்பே வெளியிட்ட கழகத் தேர்தல் அறிக்கையில் பக்கம் 39இல் "அனைத்துப் பொறியியல் கல்லூரிகளையும், அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைத்ததால் ஏற்பட்டுள்ள நடைமுறை நிர்வாகக் குழப்பங்கள் நீங்குவதற்கும் முறையான சீரான கல்வி எல்லா நிலைகளிலும் உறுதி பெறுவதற்கும் வழி காணுவோம்" என்று தெரிவித்திருந்தோம். தெரிவித்து விட்டு சும்மா இருந்து விடவில்லை. "சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்" என்பதற்கிணங்க, 2006ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்ததும், தமிழகத்தில் உள்ள கல்வியாளர்களுடன் கலந்தாலோசனை செய்து, 2006-2007ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே, பக்கம் 20, பத்தி 50இல் "தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டதற்கிணங்க பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்விக்கான தேவை பெருகி வருவதாலும்; அக்கல்வியில் தனிச் சிறப்புமிக்க உயர் பட்டப் படிப்புக்கான அவசியம் வளர்ந்து வருவதாலும், சென்னையிலுள்ள அண்ணா பல்கலைக் கழகத்தைப் போன்ற தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்களை திருச்சியில் ஒன்றும், கோவையில் ஒன்றுமாக நிறுவிடவும் இந்த அரசு முடிவெடுத்துள்ளது" என்று அறிவித்திருந்தோம்.

உயர்கல்விக்காக தற்போது மட்டுமல்ல; 1969 முதல் 1976ஆம் ஆண்டு வரையில் நான் முதலமைச்சராக இருந்த காலத்திலேயே அதற்கு முன்பு இல்லாத வகையில், 68 கலைக் கல்லூரிகள் தமிழகத்திலே தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அவற்றில் அரசுக் கல்லூரிகள் 18; தனியார்கள் தொடங்கிய கல்லூரிகள் 50; அரசுக் கல்லூரிகளில் மகளிர் கல்லூரிகள் 8; தனியார் கல்லூரிகளில் மகளிர் கல்லூரிகள் 21.

1947 ஆகஸ்ட் 15ஆம் நாள் இந்தியா விடுதலை பெற்ற போது, இந்தியாவில் இருந்த மொத்தப் பல்கலைக் கழகங்களின் எண்ணிக் கையே 20 தான். அவற்றில் தமிழ்நாட்டில் இருந்த பல்கலைக் கழகங்கள் இரண்டே இரண்டு தான். 1971இல் இந்தியாவில் இருந்த பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை 83. அப்போது தமிழ்நாட்டில் இருந்த பல்கலைக் கழகங்கள் மூன்று. தமிழ்நாட்டில் தொடங்கப்பட்ட அந்த மூன்றாவது பல்கலைக் கழகம் 1971ஆம் ஆண்டு சூன் முதல் நாள் கோயம்புத்தூரில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆகும். அந்த வேளாண்மைப் பல்கலைக் கழகம் கூட, 1969 ஆம் ஆண்டு நவம்பரில் பஞ்சாப் முதலமைச்சர் திரு. குர்னாம்சிங் அவர்களின் அழைப்பினையேற்று குருநானக் அவர்களின் 500வது பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்வதற்காக நான் சென்றிருந்த போது, லூதியானாவில் உள்ள விவசாயப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டேன். அந்தப் பல்கலைக் கழகத்தைப் பார்வையிட்டதின் விளைவாகத்தான் கோவையில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டது. வேளாண்மைக்காக மட்டுமல்ல; கால்நடை ஆராய்ச்சிக்காகவே ஆசியாவிலேயே முதன் முதலாகப் பல்கலைக் கழகம் ஒன்று சென்னையிலே கழக ஆட்சியிலேதான், அடியேன் முதல் அமைச்சராக இருந்த போதுதான் தொடங்கப்பட்டது.

அதைப் போலவே சட்டக் கல்விக்கென்று தனி பல்கலைக் கழகம் ஒன்றை அண்ணல் அம்பேத்கர் பெயரில் குடியரசுத் தலைவராக இருந்த கே.ஆர். நாராயணன் அவர்களை அழைத்துத் தொடங்கி வைத்ததும் கழக ஆட்சியில், நான் முதல் அமைச்சராக இருந்த போதுதான்.

திருச்சியில் பாவேந்தர் பாரதிதாசன் பல்கலைக் கழகமும், நெல்லையில் மனோன் மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகமும், சேலத்தில் தந்தை பெரியார் பல்கலைக் கழகமும், வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக் கழகமும், சென்னையில் தமிழ்நாடு எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகமும் தொடங்கப்பட்டது தி.மு. கழக ஆட்சியிலேதான். தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழகம் சென்னையில் தொடங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மத்திய அரசின் பல்கலைக் கழகங்கள் ஒன்றுகூட இல்லாத நிலையை எடுத்துக் கூறி வலியுறுத்திய தி.மு.கழக அரசின்

சீரிய முயற்சிகளின் பயனாக திருவாரூர் மத்தியப் பல்கலைக் கழகம் தொடங் கப்பட்டுள்ளது. திருச்சியில் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் தொடங்கப்பட மத்திய அரசு அனுமதி வழங்கி, அதற்குத் தேவையான நிலத்தையும் கழக அரசு வழங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் அப்படி என்ன பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை அதிகமா? 27.6 கோடி மக்கள் தொகை கொண்ட அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 2500 பல்கலைக் கழகங்களும், 12.7 கோடி மக்கள் கொண்ட ஜப்பானில் 726 பல்கலைக் கழகங்களும், 8.2 கோடி மக்கள் தொகை கொண்ட ஜெர்மனியில் 350 பல்கலைக் கழகங்களும், தமிழ்நாட்டை விடக் குறைந்த அளவில் 6 கோடி மக்கள் தொகை கொண்ட இங்கிலாந்தில் 125 பல்கலைக் கழகங்களும் உள்ளன. ஆனால் 110 கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியாவில் 415 பல்கலைக் கழகங்களே உள்ளன. அவற்றில் 7 கோடி மக்கள் தொகை கொண்ட தமிழ்நாட்டில் 28 நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள் உட்பட மொத்தம் 53 பல்கலைக் கழகங்கள் மட்டுமே உள்ளன. இந்த இலட்சணத்தில்தான் தமிழகத்தின் முதலமைச்சர் ஜெயலலிதா ஐந்து பல்கலைக் கழகங்களுக்கு மூடுவிழா நடத்துகின்ற மாபெரும் சாதனையிலே ஈடுபட்டுள்ளார். புதிய புதிய கல்வி நிறுவனங்களை - பல்கலைக் கழகங்களை உருவாக்குவதில்தான் எல்லோரும் முனைப்போடு ஈடுபடுவார்கள். ஆனால் ஏற்கனவே செயல்பட்டு வருகின்ற ஐந்து பல்கலைக் கழகங்களை மூடுகின்ற முயற்சியிலே ஈடுபடுகின்ற ஒரு முதலமைச்சரை எங்கேயாவது பார்க்க முடியுமா? மற்றவர்கள் எல்லாம் ஆக்குகின்ற முயற்சியிலே ஈடுபடுகிறார்கள் என்றால் இவர் மட்டும்தான் அழிக்கின்ற முயற்சியிலே ஈடுபடக்கூடிய ஆற்றலுடையவர் (?) என்பதை மெய்ப்பிக்க முயலுகிறாரோ? அவருடைய ஒரே நோக்கம் எல்லாம் “கருணாநிதி” செய்த காரியமா? மூடுவிழா நடத்துங்கள் முதலில் அதற்கு என்றுதான் கருதுகிறாரே தவிர, மக்கள் நலன், மாணவர்கள் நலன் என்பதை யெல்லாம் பார்ப்பவராக இல்லை.

2009ஆம் ஆண்டு டாக்டர் யச்பால் அவர்கள் தலைமையில் உயர் கல்வியைப் புதுப்பித்தலுக்கான குழு ஒன்று அமைக்கப் பட்டு, அந்தக் குழு அளித்த அறிக்கையில், “பாடத்திட்டம், தேர்வு, கல்லூரிகளின் தரம் ஆகியவற்றை நிர்வகிப்பதில் இந்த இணைவிப்புக் கல்லூரி முறை பல்கலைக் கழகங்களுக்குப் பெரும்

சுமையாக உள்ளது. மேலும் பல்கலைக் கழக அதிகாரிகளின் தாமதம், கட்டுப்பாடு, போதிய ஆதரவின்மை ஆகியவற்றால் ஆற்றல் மிக்க கல்லூரிகள் சிரமப்படுகின்றன. அதே வேளையில் கல்லூரிகளின் குறுகிய நோக்கம், பல்கலைக் கழகச் செயல்பாடுகளில் அவற்றின் எதிர் மறையான பங்களிப்பு ஆகியவற்றால் ஆற்றல் மிக்கப் பல்கலைக் கழகங்களின் செயல்பாடு பாதிக்கப்படுகிறது" என்று தெரிவித்துள்ளது.

ஆராய்ச்சிக்குத் தேவையான உள்கட்டமைப்பு ஒருசில கல்லூரிகளில் மட்டுமே உள்ளது. அங்கும் ஒருசில ஆசிரியர்கள் மட்டுமே ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றனர். அங்கு மாணவர்கள் ஆராய்ச்சியில் ஈடுபடுவது என்பது பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளது. ஆனால் பல்கலைக் கழகங்களில் ஆராய்ச்சிக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் இருப்பதுடன், அங்குள்ள பெரும்பான்மையான ஆசிரியர்கள் ஆராய்ச்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். அதற்குத் தேவையான நிதி ஆதாரங்கள் மத்திய அமைப்புகளிடமிருந்தும், அயல் நாட்டு அமைப்புகளிடமிருந்தும் பெற முடிகிறது. எனவே, ஆற்றல் மிக்கவர்களின் மையமாகப் பல்கலைக் கழகங்கள் ஆகிவிடுவதால் புதிதாகத் திட்டமிடவும், புதிய பாடத் திட்டங்களைக் கொண்டு வரவும் வாய்ப்பு ஏற்படுகிறது. இணைவிப்புக் கல்லூரிகள் என்ற சுமையுடன் திறமையாக நிர்வகிக்கப்பட முடியாத அளவிற்கு பல்கலைக் கழகங்கள் பெரிதாக இல்லாமல், அதன் வளர்ச்சிக்கு உகந்த அளவில் பல்கலைக் கழகங்கள் இருந்தால் புதிய பாடத் திட்டங்களை விரைவாகவும், சரியாகவும் நடைமுறைப்படுத்த இயலும்.

இந்தியாவில் உயர்கல்வி முறையை ஆய்வு செய்து, அதன் வளர்ச்சிக்குத் தேவையான பரிந்துரைகளை அளிப்பதற்காக மத்திய அரசு 1948இல் டாக்டர் ராதாகிருஷ்ணன் குழு, 1966இல் டாக்டர் கோத்தாரி கல்விக் குழு, 2006இல் டாக்டர் சாம் பிட்ரோடா குழு, 2009இல் டாக்டர் யச்பால் குழு ஆகியவற்றை நியமித்தது. இந்தக் குழுக்கள் அனைத்துமே இந்தியாவில் உயர் கல்வி வளர்ச்சிக்கு புதிய பல்கலைக் கழகங்கள் தொடங்கப்பட்டு, பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை அதிகமாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தின. டாக்டர் சாம் பிட்ரோடா குழுவும், டாக்டர் யச்பால் குழுவும் அடுத்த பத்தாண்டுகளுக்குள் இந்தியாவில்

1500 பல்கலைக் கழகங்கள் தொடங்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தன. ஆனால் இந்த ஆராய்ச்சியாளர்களுக்கெல்லாம் தோன்றாத புரட்சிகரமான(!) யோசனை அல்லவா நம்முடைய முதலமைச்சருக்குத் தோன்றியுள்ளது.

1978ஆம் ஆண்டு வரையில் தமிழ்நாட்டில் இருந்த பொறியியல் கல்லூரிகள் அனைத்தும் சென்னை மற்றும் மதுரைப் பல்கலைக் கழகங்களுடன் இணைவிக்கப்பட்டிருந்தன. 1978இல் அ.தி.மு.க. ஆட்சியில்தான் சென்னை கிண்டியில் இருந்த பொறியியல் கல்லூரி மட்டும் அண்ணா பல்கலைக் கழகமாக மாற்றப்பட்டது. மற்ற பொறியியல் கல்லூரிகள் அனைத்தும் 2001 வரையில் தமிழ்நாட்டில் உள்ள ஆறு கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகங்களுடன் இணை விக்கப்பட்டிருந்தன. 2001இல் தமிழ் நாட்டில் இருந்த 247 பொறியியல் கல்லூரிகளை அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணை வித்து அதை ஒரு இணைவிப்புப் பல்கலைக் கழகமாக மாற்றப்பட்டது. அந்தப் பல்கலைக் கழகத்தின்கீழ் மாநிலம் முழுவதுமுள்ள 247 பொறியியல் கல்லூரிகளை நிர்வகிப்பது என்பது ஓர் இயலாத நிலை என்பது உணரப்பட்டது. அதனால்தான், 2006இல் கோயம்புத்தூரில் 200 பொறியியல் கல்லூரிகள் இணைவிப்புடன் கூடிய அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகமும், திருச்சியில் 85 கல்லூரிகளுடன் கூடிய அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகமும் 1-2-2007 முதல் செயல்படத் தொடங்கின. 2007இல் திருநெல்வேலியில் 67 கல்லூரிகளுடனும், 2010இல் சென்னையில் 170 கல்லூரிகளுடனும், மதுரையில் 49 கல்லூரி களுடனும் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்கள் தொடங்கப்பட்டன.

ஆகமொத்தம் தமிழ்நாட்டின் ஐந்து அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்களும் ஆராய்ச்சியில் முதன்மைக் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காக சென்னை கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக் கழகம், ஒருமைப் பல்கலைக் கழகமாகவும் செயல்பட்டு வந்தது.

ஆனால் கடந்த ஆண்டு ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. அரசு, அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்கள் ஒழிக்கப்பட்டு, தமிழ் நாட்டில் உள்ள 571 பொறியியல் கல்லூரிகளும் கிண்டி அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைவிக்கப்படும் என்று,

கல்வியாளர்களைக் கலந்தாலோசிக்காமலேயே மாணவர்களின் நலனையும், ஆராய்ச்சியின் சிறப்பையும் கவனத்தில் கொள்ளாமலேயே ஒருதலைப்பட்சமாக அறிவித்து, அதற்கான சட்டத்தையும் இயற்றியுள்ளது.

உலக நாடுகள் எல்லாம் ஆண்டுக்கு ஆண்டு பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கையை அதிகமாக்கிக் கொண்டு செல்லும் நேரத்தில், தமிழக முதல்வர் ஜெயலலிதா ஒரு புதிய கருத்தை தனது கண்டுபிடிப்பாகச் சொல்லியிருக்கிறார். அதாவது "அதிக எண்ணிக்கையில் பல்கலைக் கழகங்கள் தொடங்கினால் மட்டும் கல்வியின் தரத்தில் எந்தவிதமான உயர்வும் ஏற்படாது" என்று தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

ஜெயலலிதாவின் கருத்து ஏற்கத்தக்க ஒன்று என்றால், சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழ்தான் தமிழ்நாட்டிலே உள்ள அனைத்துக் கல்லூரிகளும் இடம் பெறும் என்ற அறிவிப்பை அல்லவா செய்ய நேரிடும்? வருங்காலத்தில் ஜெயலலிதா அப்படியொரு அறிவிப்பைச் செய்யப் போகிறாரா? தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தேவையில்லை. அனைத்தும் தலைமைச் செயலாளரின் நேரடிப் பார்வையிலே இயங்கும் என்றும், மாவட்டங்களிலே உள்ள காவல் துறை கண்காணிப்பாளர்கள் அலுவலகங்களையெல்லாம் ரத்து செய்துவிட்டு நேரடியாக டி.ஜி.பி. தலைமையிலே ஒருங்கிணைத்து இயங்கும் என்றும் ஜெயலலிதா அறிவிக்கப் போகிறாரா? பரவலாக்கப்பட்டதை யெல்லாம் மாற்றி, மையப்படுத்தி ஒரு குடைக் கீழ்க் கொண்டு வரப் போகிறாரா?

ஒன்றுக்கும் மேற்பட்ட தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்கள் இயங்கும்போது, வளர்ச்சிக்காக அப்பல்கலைக்கழகங் களிடையே ஆரோக்கியமான போட்டி நிலவும். பல்கலைக் கழகங்கள் நாட்டின் பொருளாதார மற்றும் உயர் கல்வி முன்னேற்றத்திற்காக இயங்குவதால் நாட்டில் அவை அமைந்துள்ள பகுதிகளிலே நல்ல முன்னேற்றம் ஏற்படக் கூடும். பல்கலைக் கழகங்கள் அமைந்துள்ள மாவட்டங்களிலும், அவற்றைச் சார்ந்துள்ள பகுதிகளிலும், அவற்றின் தன்மை மற்றும் தரத்திற்கேற்றவாறு ஆராய்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் மிகுதியாகவும் விரைவாகவும் செயல்படுத்தப்படும்.

சென்னையில் மட்டும் ஒரே ஒரு பல்கலைக் கழகம் இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், எந்த ஒரு வேலைக்கும் குறிப்பாக மதிப்பெண்கள் குறித்த விசாரணைகள் செய்வது, ஆய்வுக் கட்டுரை சார்ந்த பணிகள் போன்றவற்றிற்காக மாணவ மாணவிகள் தொலைதூர நகரங்களிலிருந்து சென்னைக்கு வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். இதன் மூலம் பெற்றோர் களுக்கும் மாணவ மாணவிகளுக்கும் வீண் அலைச்சலும் மன உளைச்சலும் பண விரயமும் கால விரயமும் உண்டாகும்.

பல்கலைக்கழக மானியக் குழு (University Grants Commission) அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை (Department of Science and Technology) போன்ற மத்திய அரசு நிறுவனங்களும், அமெரிக்கா, ஐரோப்பா நாடுகளில் உள்ள இது போன்ற கழகங்களும் இந்தியப் பல்கலைக் கழகங்களுக்கு, ஆராய்ச்சி மற்றும் உயர் கல்விக்கு மானியம் வழங்குகின்றன. இத்தகைய மானியங்கள் மிகுந்த அளவில் தமிழகத்திற்கு வருவதற்கான வாய்ப்பு உள்ளது. உதாரணமாக, ஐந்து கோடி ரூபாய் மானியம் ஒரு பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்படுமெனில், ஆறு பல்கலைக் கழகங்கள் மொத்தமாக முப்பது கோடி ரூபாய் மானியம் பெறும் அளவுக்கு நிலை உயரும். இதன் மூலம் பல்கலைக் கழகங்கள் உரிய வளர்ச்சியினை எவ்விதத் தடங்கலும், தடையுமின்றி பெறும்.

தேசிய அறிவுசார் கழகம் (National Knowledge Commission) மற்றும் இதர இந்திய தொழில் நுட்பக் கழகங்கள் சமீபத்தில் நடத்திய கணிப்பில், இன்னமும் 1,500 பல்கலைக் கழகங்கள் இந்தியாவிற்குத் தேவை என்றும், அவை விரைவில் நிறுவப்பட வேண்டும் எனவும் தெரிய வந்துள்ளது. எனவே, தற்போது தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டுமே தவிர, குறைக்கப்படக் கூடாது.

ஐந்து தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்களை ஒன்றாக்கி ஒரே தொழில் நுட்பப் பல்கலைக் கழகமாக்கினால், தமிழகத்திலுள்ள பல அறிவியல் மற்றும் கலைத் துறைக்கான பல்கலைக் கழகங்களும் ஒன்றாக இணைக்கப்பட வேண்டுமென்ற ஒரு சூழ்நிலை ஏற்படலாம்.

பல்கலைக் கழகங்கள் மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளில் அமைவதால் அந்தந்தப் பகுதிகளிலும் தனித்தனியாக தொழில்

வளர்ச்சியடையும். மேலும் பல மாணவ மாணவியர் அவரவர் பெற்றோர்களுடன் தங்கி உயர் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெறலாம். இதனால் மாணவர்களுக்குப் பாதுகாப்பும், ஆரோக்கியமான உணவும், இருப்பிடமும், மன அமைதியும் அதிக அளவில் கிடைப்பதால், அவர்களின் அறிவு வளர்ச்சி ஆராய்ச்சியிலும் மற்ற முன்னேற்றத்திற்காகவும் உறுதுணையாக அமைகின்றன. அந்தந்த மாவட்டம் மற்றும் மாநிலங்களிலே தொழிற்சாலைகள் வளர்ச்சி அடைவதால், சென்னை மாநகரில் ஏற்படும் மக்கள் தொகை நெரிசல் குறையும்.

ஒரு பல்கலைக் கழகத்துடன் சுமார் 100 கல்லூரிகள் வரையில் இணைவிக்கப்படலாம் என்றுதான் பல்கலைக் கழக மானியக் குழு கூறியுள்ளது. ஆனால் தற்போது ஜெயலலிதா எடுத்துள்ள முடிவின்படி 571 கல்லூரிகள் அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைவிக்கப்படவுள்ளன. இதனால் அண்ணா பல்கலைக் கழகத்திற்கு நிர்வாகச் சுமை அதிகரிக்கும். அங்குள்ள ஆசிரியர்கள் ஆராய்ச்சிப் பணியில் கவனம் செலுத்த முடியாது. தென் மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

கழக ஆட்சியில் ஐந்து பல்கலைக் கழகங்களை புதிதாகக் கொண்டு வந்தோம்; அ.தி.மு.க. ஆட்சியில் மேலும் ஐந்து பல்கலைக் கழகங்களை உருவாக்கினோம் என்றால் பெருமையா? தி.மு. கழக ஆட்சியில் உருவாக்கிய ஐந்து பல்கலைக் கழகங்களை இல்லாமல் செய்தது பெருமையா? முற்போக்கு நடவடிக்கையை மாற்றி, பிற்போக்காக்குவது தான் வளர்ச்சியா? ஏன்தான் எதிர்மறை எண்ணம் கொண்ட இந்த அ.தி.மு.க.விற்கு வாக்களித்தோமோ என்று எண்ணுகிறீர்களா? அது போதும் இப்போது!

அன்புள்ள,

மு.க.

26-07-2012

3647. ஈழத்தமிழர் இன்னல் களைந்திட வாரீர்!

உடன்பிறப்பே,

இன்று 1-8-2012 இன்னும் இடையில் பத்தே நாட்கள்தான் உள்ளன. 12-8-2012 ஞாயிற்றுக் கிழமை அன்று நமது "டெசோ" அமைப்பின் சார்பில் நாம் நடத்தும் ஈழத் தமிழர் வாழ்வுரிமைப் பாதுகாப்பு மாநாடு. அந்த மாநாட்டினையொட்டி காலை 10 மணியளவில் சென்னை, தியாகராய நகரில் கலைவாணர் சிலை அருகில் அமைந்துள்ள "அக்கார்ட்" ஓட்டலில் ஆய்வரங்கம் (கான்கிளேவ்) என் தலைமையிலே நடைபெறவுள்ளது. ஆய்வரங்கத்தில் கருத்துக்கள் பரிமாற்றம் நடைபெறும். மாலையில் நடைபெறவுள்ள பொது மாநாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்கள் எவ்வாறு வடிவமைக்கப் பட வேண்டும், ஈழத் தமிழர்கள் பிரச்சினையில் நம்முடைய கோரிக்கைகள், வேண்டுகோள்கள் என்னென்ன என்பதைப் பற்றியெல்லாம் அந்த ஆய்வரங்கில் கலந்து பேசி தீர்மானிக்கப்படும்.

மாலை 4 மணி அளவில் ராயப்பேட்டையில் உள்ள ஒய்.எம்.சி.ஏ. திடலில் பொது மாநாடு நடைபெறவுள்ளது. அந்த மாநாட்டில்தான் உன்னையும், உன்னோடு வருகின்ற நமது உடன்பிறப்புகளையும் சந்திக்க இயலும். ஆய்வரங்கத்திலும், மாலை பொது மாநாட்டிலும் மத்திய அரசின் வேளாண்மைத் துறை அமைச்சர், இந்தியாவின் மூத்த அரசியல்வாதிகளில் ஒருவரான அருமை நண்பர் மாண்புமிகு சரத் பவார் அவர்கள்; எனது அந்தக் காலத்து நண்பர் "காஷ்மீரத்து சிங்கம்" ஷேக் அப்துல்லா அவர்களின் திருமகனும், மத்திய அரசின் மரபு சாரா எரிசக்தித் துறை அமைச்சருமான மாண்புமிகு பரூக் அப்துல்லா அவர்கள்; ஐக்கிய ஜனதா தளக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நண்பர் திரு. சரத் யாதவ் அவர்கள்; லோக் ஜனசக்தி கட்சித் தலைவரும், என்னுடைய நீண்ட நாள் நண்பரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. ராம்விலாஸ் பாஸ்வான் அவர்கள்; சமாஜ்வாதி கட்சியின் பொதுச் செயலாளரும்,

நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திரு. ராம் கோபால் யாதவ் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

இலங்கையிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நண்பர் திரு.மாவை சேனாதிராஜா, நண்பர் திரு. சுமந்திரன், நண்பர் திரு. யோகேஸ்வரன், நண்பர் திரு. க. சரவண பவன் ஆகியோரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் நண்பர்கள் திரு. கஜேந்திர குமார் பொன்னம்பலம், திரு. செல்வராஜா கஜேந்திரன், திருமதி பத்மினி சிதம்பரநாதன், வழக்கறிஞர் திரு. விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகியோரும், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எ. செல்வம் அடைக்கலநாதன் அவர்களும், நவ சமா சமாஜா கட்சியின் தலைவர் டாக்டர் திரு. விக்கிரம பாகு கர்ணரத்தினே அவர்களும், வருகை தந்து ஈழத் தமிழர்களின் உணர்வுகளையும் உள்ளக்கிடக் கையையும் தெரிவிக்கவிருக்கிறார்கள்.

மேலும் நைஜீரியாவிலிருந்து ஈடோ, வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர், மாண்புமிகு ஓஸிகேனா போய் டொனால்டு; நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அப்துல் ரசாக் மோமோ; சுவீடன் பாராளுமன்ற உறுப்பினர் திரு. நஸீம் மாலிக்; மொராக்கோவிலிருந்து திரு.டைடாமுகம்மது;திரு. அஃபெகோமுபாரக்; துருக்கியிலிருந்து முனைவர் திரு. கெமால் இல்திரிம்ஸ்; மலேசியாவிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் திரு. யுஸ்மாடி யூசுஃப்; மற்றும் திரு. ஆனந்த் குருசாமி ஆகியோரும் வருகை தந்து ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளை முழுமையாக உணர்ந்துள்ள காரணத்தால் தமது ஆதரவினை நல்கி உரையாற்றவிருக்கிறார்கள்.

இவர்கள் தவிர உலகின் பல்வேறு பகுதிகளிலே உள்ள ஈழத் தமிழர்கள் நமது "டெசோ" மாநாட்டில் பங்கு பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்குமா என்று "இண்டர்நெட்"வாயிலாக தகவல் கேட்டவண்ணம் உள்ளனர். மேலும் பலர் பார்வையாளர்களாக கலந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர்.

மாநாட்டுப் பணிகள் காலையிலும் மாலையிலும் அன்றாடம் அண்ணா அறிவாலயத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டு அதன்படி மாநாட்டுக்கான தொடக்கப் பணிகளும், ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. டெசோ அமைப்பில் நமது கழகத்தின்

சார்பில் உறுப்பினராக உள்ள பொதுச் செயலாளர், இனமானப் பேராசிரியர் அவர்கள் அண்ணா அறிவாலயம் வந்து மாநாட்டுப் பணிகளில் தனது அனுபவமிக்க யோசனைகளைச் சொல்லி வருகிறார். மற்றொரு உறுப்பினரான சகோதரி சுப்புலட்சுமி ஜெகதீசன் ஈரோட்டில் இருப்பதால் அன்றாடம் சென்னை அலுவலகத்திற்கு வரமுடியா விட்டாலும், நேரம் கிடைக்கின்ற போதெல்லாம், தொலைபேசி வாயிலாக மாநாட்டிற்கான ஆலோசனைகளைச் சொல்லி வருகிறார். டெசோ அமைப்பின் உறுப்பினர்களில் ஒருவரான தமிழர் தலைவர் இளவல் வீரமணி அவர்கள் பணி காரணமாக அமெரிக்கா செல்வதாகவும், மாநாட்டுப் பணிகளைக் கவனிக்க விரைவில் திரும்பி விடுவேன் என்றும் என்னிடம் கூறிவிட்டுச் சென்றவர், அமெரிக்காவில் உடல் நலம் பாதிக்கப்பட்ட காரணத்தால், அங்கே சிகிச்சை பெற்று வருகிறார். எப்படியும் மாநாட்டிற்கு வந்து விடுவதாக அங்கிருந்து எனக்கு கடிதம் எழுதியுள்ளார். டெசோ அமைப்பின் மற்றொரு உறுப்பினரும் விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தின் தலைவருமான தம்பிதிருமாவளவன் என் இல்லத்திற்கு வந்து மாநாட்டுப் பணிகளிலே தனது கடமை என்ன என்று விசாரித்ததோடு, மாநாடு குறித்த யோசனைகளையும் நல்கினார். மற்றொரு உறுப்பினரான தம்பி சுப. வீரபாண்டியன், அவரது பணி காரணமாக லண்டன் சென்றவர், இந்த மாநாட்டிற்காகவே தமிழகம் திரும்பியுள்ளார். காலையிலும், மாலையிலும் அண்ணா அறிவாலயத்திற்கு வந்து இந்த மாநாடு குறித்த பணிகளிலே எனக்கு மிகவும் பேருதவியாக இருந்து வருகிறார்.

"டெசோ" உறுப்பினர்களைத் தவிர்த்து, மாநாடு குறித்த ஏற்பாடுகளை கழகக் கண்மணிகள், தம்பிகள் பொருளாளர் மு.க. ஸ்டாலின், துணைப் பொதுச் செயலாளர் துரைமுருகன், அமைப்புச் செயலாளர்கள் டி.கே.எஸ். இளங்கோவன், எம்.பி., கல்யாணசுந்தரம், முனைவர் பொன்முடி, வழக்கறிஞர்கள் கே.எஸ். ராதாகிருஷ்ணன், அசன் முகமது ஜின்னா ஆகியோரும், மாநாட்டின் விளம்பரம் மற்றும் அழைப்பிதழ் பணிகள் போன்றவற்றை எ.வ. வேலு அவர்களும் ஓய்வில்லாமல் கவனித்து வருகிறார்கள். இலங்கையிலே உள்ள தமிழர் தலைவர்களிடம் எல்லாம் தம்பி கே.எஸ். ராதாகிருஷ்ணன் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு, அவர்களையெல்லாம் நம்முடைய மாநாட்டிற்கு அழைக்கும் பணியிலே ஈடுபட்டுள்ளார். வட இந்தியத்

தலைவர்களுடன் பேசி மாநாட்டிற்கு அழைப்பதற்கான பணிகளை நாடாளுமன்றக் கழகக்குழுத் தலைவர் டி.ஆர். பாலு கவனித்து வருகிறார். ஆய்வரங்கம் நடத்துவதற்கான ஏற்பாட்டினையும் விருந்தினர் தங்குவதற்கான ஏற்பாட்டினையும் மத்திய இணை அமைச்சர் ஜெகத்ரட்சகன் செய்து வருகிறார். பொது மாநாடு நடைபெறுவதற்கான மேடை அமைப்பு பணிகளை சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் ஜெ. அன்பழகன் கவனித்து வருகிறார்.

இந்த மாநாட்டின் மைய நோக்கக் கருத்துருக்களை விளக்கி கையேடு ஒன்றும் "டெசோ" சார்பில் ஆங்கிலத்திலும் தமிழிலும் தயாரிக்கப்பட்டு 16-7-2012 அன்றே ஏடுகளுக்குத் தரப்பட்டுள்ளது. இந்தக் கையேட்டிற்குத் தேவையான முக்கியமான குறிப்புகளை மாநிலங்களவை உறுப்பினர் திருமதி. கனிமொழி திரட்டித் தந்துள்ளார். இந்தக் கையேடு தயாரிப்பில் தம்பி அசன் முகமது ஜின்னா முக்கியப் பணி ஆற்றியுள்ளார்.

இந்த மாநாட்டில் நாம் நிறைவேற்றவுள்ள தீர்மானங்கள் எல்லாம் போரினால் பாதிக்கப்பட்டும், இடம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களின் வாழ்வாதாரங்களை வளப்படுத்தி உயர்த்துவதற்கும், ஜனநாயக உரிமைகளோடு கண்ணியத்துடன் வாழ்வதற்கும், அதற்கு தாய்த் தமிழகத்திலே உள்ள நாமும், இந்திய அரசும் எந்த வகையில் எல்லாம் உதவிட முடியும் என்பதை வலியுறுத்துவதற்காகவுமான முயற்சியிலே ஈடுபட்டுள்ளோம். ஈழத்தில் தொடர்ந்து வாழ்வதற்கு வழியில்லாமல் உலகில் உள்ள பல்வேறு நாடுகளில் குடியேறி புலம் பெயர்ந்த தமிழர்கள் என்ற பெயராலும், அகதிகள் என்ற பெயராலும் அல்லாடிக் கொண்டிருக்கும் நமது தமிழ் இனத்தவர் மீண்டும் இலங்கை திரும்பி அமைதியானதும், உரிமையுடன் கூடியதுமான வாழ்க்கை முறையை மேற்கொள்ளுவதற்கு ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச நிறுவனங்களின் மூலம் என்னென்ன செய்ய முடியும் என்பதைப் பற்றியும் இந்த மாநாட்டின் ஆய்வரங்கில் நாம் கலந்து பேசி முடிவெடுக்கவுள்ளோம்.

இந்த மாநாடு குறித்து நாம் அறிவித்த போது, தமிழகத்திலே உள்ள சில நாளேடுகள் அதைப்பற்றி எப்படியெல்லாம் விமர்சனம் செய்தன என்பதை நீ படித்தறிந்திருப்பாய்! மாநாடு நடக்காது என்றும் - மத்திய அரசு அனுமதி கொடுக்காது என்றும் - மாநில அரசு தடை செய்யப் போகிறது என்றும் - கழக முன்னணியினர்

ஆதரவு இந்த மாநாட்டிற்கு இல்லை என்றும் - மாநாடு வெற்றி பெறாது என்றும் தங்களால் முடிந்த அளவிற்கு விளம்பரம் தேடிக் கொடுத்தார்கள். அந்த ஏடுகள் எல்லாம் இன்னமும் வெளிவந்து கொண்டுதான் உள்ளன. அந்த ஏடுகள் எந்த அளவுக்கு தமிழ் இன உணர்வைப் பாதுகாத்திடப் பணியாற்றுகின்றன என்பதைக் காலம் தீர்மானிக்கட்டும்.

ஈழத்தமிழர்களின் பிரச்சினைகள் முடிந்து விட்டதா? 29-7-2012 தேதியிட்ட "தினமலர்" நாளேட்டில் "கடலில் முளைக்கிறது புது ஆபத்து - ஊடுருவும் சீனாவுக்கு உதவுகிறது இலங்கை" என்ற தலைப்பிலே ஒரு கட்டுரை வந்துள்ளது. அதில் "போர் முடிந்த கையுடன் தனது நாட்டில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று சீனாவிடம் இலங்கை கேட்டுக் கொண்டதுடன் சீன இன்ஜினியர்களுக்கு ரத்தினக் கம்பள வரவேற்பும் கொடுத்தது. இன்ஜினியர்கள் என்ற போர்வையில் சீன ராணுவத்தின் கட்டுமானப்பிரிவு இன்ஜினியர்கள் இலங்கையில் கால் வைத்தனர். இலங்கையின் தென் முனையில் உள்ள அம்பாந்தோட்டையில் பிரமாண்ட கடற்படை தளத்தை இலங்கை அனுமதியுடன் சீனா அமைத்து வருகிறது. அது மட்டுமல்லாமல், சீன கடற்படையின் தயாரிப்பான அதிவிரைவு ரோந்து படகுகள் இந்திய கடல் எல்லைப் பகுதி வரை ஊடுருவி சீண்டிப் பார்க்கத் தொடங்கின" என்றெல்லாம் செய்திகள் வந்துள்ளன.

இலங்கைக் கடற்படை வீரர்களுடன் சீனர்களும் உள்ளனர் என்றும் இது குறித்து மத்திய அரசு கண்காணிக்க வேண்டும் என்றும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ராமேஸ்வரம் மீனவர்கள் எச்சரிக்கை குரல் கொடுத்துள்ளனர் என்றும் தொடரும் அந்தக் கட்டுரையின் இறுதியில், "சீன கடற்படை வீரர்களின் உதவியுடன் தனுஷ்கோடி அருகே சர்வதேச கடல் எல்லையில் உள்ள 7வது தீடைப் பகுதியில் தற்காலிக கடற்படை முகாம் பணிகளை இலங்கை கடற்படை சுறுசுறுப்பாக மேற்கொண்டுள்ளது. இது குறித்து தி.மு.க. தலைவர் கருணாநிதி சில நாட்களுக்கு முன்னர் மத்திய அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார். இனியும் இலங்கை விஷயத்தில் மத்திய அரசு மவுனம் சாதிப்பது இந்தியாவின் பாதுகாப்புக்கு சாதகமானது அல்ல என்று மீனவர்கள் எச்சரிக்கின்றனர்" என்றும் "தினமலர்" எழுதியுள்ளது. இதைப்பற்றியெல்லாம் மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு

சென்று, இந்தியத் திருநாட்டின் பாதுகாப்புக்கெதிரான அச்சுறுத்தல்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நாம் கோர வேண்டாமா? இதற்கெல்லாம் விடை காணுவதற்காகத்தான் 12ஆம் தேதி டெசோ மாநாட்டினை நாம் நடத்துகிறோம். - "போற்றுவோர் போற்றட்டும், புழுதி வாரி தூற்றுவோர் தூற்றட்டும், நம் கடன் தமிழர்க்கு பணி செய்து கிடப்பதே" என்று, நம்மால் முடிந்த வரை, நம்முடைய குரல் ஈழத் தமிழர்களுக்காக ஒலிக்கும், ஓங்கி ஒலித்துக் கொண்டே இருக்கும்.

இலங்கையில் சிங்களவர்களின் ஆதிக்க வெறியினால் ஏற்பட்ட கலவரங்களில் பெரிதும் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்களின் காயங்களுக்கும் - அவர்கள் வாழ்வில் ஏற்பட்ட துன்ப துயரங்களுக்கும் மருந்து போடுகின்ற மாநாடு தான் டெசோ மாநாடு! இந்த மாநாட்டிற்கான மைய நோக்கத்தைப் புரிந்து கொண்டு அனைவரும் பங்கேற்க வேண்டுமென உன் அண்ணன் அழைக்கின்றேன்.

அன்புள்ள,

மு.க.

02-08-2012

3648. விவசாயிகள் வேதனையும், விதவிதமான அறிக்கைகளும்!

உடன்பிறப்பே,

முதலமைச்சர் ஜெயலலிதா "கொடநாடு" எஸ்டேட் ஓய்வு மாளிகையிலிருந்து 25-7-2012 அன்று விடுத்த அறிக்கையில், குறுவை சாகுபடியில் விவசாயிகளுக்கு அதிக இழப்பு ஏற்படாமலிருக்கத் தேவையான நடவடிக்கைகளை அவருடைய தலைமையிலான தமிழக அரசு எடுத்துள்ளது என்றும் - தமிழ்நாட்டில் இதுவரை 4.52 லட்சம் ஏக்கர் பரப்பில் நெல் சாகுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் - குறுவை சாகுபடி இந்த ஆண்டு குறைந்துவிட்டது, நெல் உற்பத்தி பெருமளவு பாதிக்கும் என்றெல்லாம் பத்திரிகைகளில் வெளிவரும் செய்திக் கட்டுரைகள் மக்களிடையே தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்தக் கூடியவை என்றும் - 28-5-2012 அன்றும் 15-6-2012 அன்றும் நீர்வரத்து நிலை பற்றி, அவர் ஆய்வு செய்ததாகவும் - இந்த ஆண்டு குறுவை சாகுபடி 1,37,000 ஏக்கரில் செய்யப்படும் என்றும் - விவசாயத்திற்காக 12 மணி நேரம் தொடர்ந்து மின்சாரம் வழங்கப்படுகிறது என்றும் - தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள இக்கால கட்டத்தில் தமிழ்நாட்டில் இதுவரை 3 லட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது என்றும்; ஜூலை மாத இறுதிக்குள் இன்னும் 1.52 லட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்படும் என்றும் தெரிவித்திருந்தார். தமிழகத்திலே உள்ள அனைத்து ஏடுகளிலும் முதலமைச்சர் ஜெயலலிதாவின் இந்த அறிக்கை பெரிதாக வந்திருந்தது.

முதலமைச்சரே தெரிவித்த இந்தச் செய்திகள் எல்லாம் உண்மைதானா? இந்த ஆண்டு ஜெயலலிதா அறிக்கையில் கூறிய அளவிற்கு நெல் சாகுபடி செய்யப்படுகிறதா? முதலமைச்சர் டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடியில் பாதிப்பு இல்லை என்று அறிக்கை விட்டதற்கு முதல் நாள் வந்த செய்தி என்ன தெரியுமா?

"டெல்டாவில் குறுவை சாகுபடி இல்லை - ரூ. 840 கோடி நெல் உற்பத்தி பாதிப்பு" என்ற தலைப்பில், "டெல்டா மாவட்டங்களில் நடப்பாண்டு குறுவை சாகுபடி செய்யாததால், எட்டு லட்சம் டன் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. டெல்டா மாவட்டங்களில் நடப்பாண்டு, மூன்று லட்சம் ஏக்கரில் விவசாயிகள் குறுவை சாகுபடி செய்யவில்லை. தரிசாக விடப்பட்டுள்ளது. ஆறு லட்சம் டன் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது" என்று எழுதியிருக்கின்றன.

இதிலே எது உண்மை? முதலமைச்சர் அறிக்கையிலே கூறியது உண்மையா? நாளேடுகளில் வந்த தகவல் உண்மையா?

26-7-2012 தேதிய மற்றொரு நாளேட்டில் "குறுவை சாகுபடி பாதிப்பு - 2 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு - டெல்டா விவசாயிகள் வேதனை" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள செய்தியில் - கடந்த 2011இல் டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி, தஞ்சை மாவட்டத்தில் 1,00,707 ஏக்கர், திருவாரூர் மாவட்டத்தில் 97,250 ஏக்கர், நாகை மாவட்டத்தில் 1,07,120 ஏக்கர் என ஒட்டு மொத்தமாக 3,05,077 ஏக்கரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டது. இந்த ஆண்டு மேட்டூர் அணை திறக்கப்படாததால் டெல்டா மாவட்டங்களில் நிலத்தடி நீரை நம்பி "பம்ப் செட்" மூலம் 30 ஆயிரம் ஏக்கரில் மட்டுமே குறுவை சாகுபடி நடைபெற்றுள்ளது என்று எழுதியுள்ளது.

பாரதிய கிசான் சங்க மாநிலப் பொதுச் செயலாளர் திரு. அய்யாக்கண்ணு குறுவை பொய்த்தது, சம்பா தாளடியாவது தப்புமா என்று கேட்டிருப்பதோடு, விவசாயிகள் கடன் வலையில் சிக்கித் தவித்து வருவது மட்டுமல்லாமல், தற்கொலைக்குத் தள்ளப்படும் நிலை உருவாகி வருகிறது என்று சொல்லியிருக்கிறார்.

ஒருங்கிணைந்த டெல்டா மாவட்ட விவசாய சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆறுபாதி கல்யாணம் கூறும்போது, இந்த ஆண்டு சுமார் 16 லட்சம் டன் உணவு தான்ய உற்பத்தி இழப்பு ஏற்படும் என்பதால் இரண்டாயிரம் கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படும் என்றும், விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் வறட்சி நிவாரணமாக ஏக்கர் ஒன்றுக்கு பத்தாயிரம் ரூபாய் இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்.

காவிரி டெல்டா பாசன விவசாயிகள் நலச் சங்கச் செயலாளர் திரு. ராஜாராம் அவர்கள், "விவசாயிகள் வாங்கிய அனைத்துக்

கடன்களையும் ரத்து செய்ய வேண்டும், டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த மாநிலமாக அறிவிக்க வேண்டும்" என்று கூறியிருக்கிறார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்ட மன்ற உறுப்பினர் திரு. கே. பால கிருஷ்ணன், "ஏற்கனவே குறுவை சாகுபடி செய்ய முடிய வில்லை, தற்போது சம்பா சாகுபடியும் கேள்விக் குறியாகி உள்ளது" என்று தெரிவித்திருக்கிறார்.

31-7-2012 அன்று திருவாரூரில் நடைபெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட அளவிலான கூட்டத்தில், காவிரி டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங் களாக அறிவித்து, போர்க்கால வேகத்தில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்துள்ளார்கள்.

நேற்றைய (2-8-2012) "தீக்கதிர்" நாளேட்டில் ஐ.வி. நாகராஜன் அவர்கள் "கானல் நீராகும் டெல்டா மாவட்ட விவசாயம்" என்ற தலைப்பில் ஒரு நீண்ட கட்டுரை தீட்டியுள்ளார்.

குறுவை விவசாயம் பொய்க்கவில்லை, பத்திரிகைகள் பெரிதுபடுத்துகின்றன என்று கொடைநாடு எஸ்டேட்டிலிருந்து முதலமைச்சர் அறிக்கை விடுகிறார். ஆனால் டெல்டா மாவட்டங்களில் உள்ள நிலை குறித்து அந்த ஏடு என்ன எழுதியுள்ளது தெரியுமா?

"காவிரி டெல்டா பகுதிகளான திருச்சி, தஞ்சை, நாகை, திருவாரூர் ஆகிய மாவட்ட விவசாயிகள் போதிய அளவு மின்சாரம் இல்லாத காரணத்தினால் கோடை விவசாயத்தைக் கைவிட்டனர். தற்போது மேட்டூர் அணையும் திறக்கப்படாத காரணத்தினால் நிலத்தடி நீரினைக் கொண்டு குறுவை சாகுபடியை துவக்கலாம் என்று நினைத்தனர். பருவ மழை பொய்த்துப்போன நிலையில் இதற்கும் நிலத்தடி நீர் எந்த அளவிற்குக் கை கொடுக்கும் என்று கவலையில் உள்ளனர். இந்த ஆண்டு குறுவை சாகுபடி 3 லட்சம் ஏக்கருக்கு மேல் செய்ய வேண்டிய விவசாயிகள், தற்போது வெறும் 30 ஆயிரம் ஏக்கரில் மட்டுமே குறுவை சாகுபடி செய்துள்ளனர். இதன் காரணமாக ரூ. 2 ஆயிரம் கோடி வருவாய் இழப்பும், உணவு உற்பத்தி பாதிப்பும் ஏற்படும் என்று விவசாயிகள் அச்சம் தெரிவித்துள்ளனர். இந்தப் பின்னணியில் திருச்சி, தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்ட விவசாயிகளையும் - விவசாயத் தொழிலாளர்

களையும் பாதுகாக்கக் கோரி விவசாயிகள் சங்கமும், விவசாயத் தொழிலாளர் சங்கமும் கூட்டாக கோரிக்கை மாநாடு, முற்றுகைப் போராட்டம் என்று நடத்தி, ஆட்சியாளர்கள், அதிகாரிகள் கவனத்தை ஈர்த்துள்ளனர். சாகுபடியை இழந்து நிற்கும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூபாய் பத்தாயிரமும், விவசாயத் தொழிலாளர்களின் குடும்பம் ஒன்றுக்கு ரூபாய் பத்தாயிரமும் நிவாரணமாக வழங்கிட வேண்டும் என்ற கோரிக்கையோடு, காவிரி டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்துள்ளது" - என்று எழுதியுள்ளது.

ஆனால் இதையெல்லாம் அப்படியே மறைத்து விட்டு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதற்கான அனைத்து உத்திகளையும் தனது தலைமையிலே உள்ள அரசு கடைப்பிடித்து வருவதாகவும், கர்நாடக அரசு ஜூன் மாதம் முதல் ஒரு சொட்டுத் தண்ணீர் கூடத் திறந்து விடாத நிலையிலும், குறுவை சாகுபடியில் விவசாயிகளுக்கு அதிக இழப்பு ஏற்படாத வகையிலான நடவடிக்கைகளை தனது தலைமையிலான தமிழக அரசு எடுத்துள்ளது என்று 25-7-2012 அன்று அறிக்கை விடுத்திருக்கிறார். நமது முதலமைச்சர் இந்த அளவிற்கு அறிக்கை விடுத்த பிறகு, கர்நாடக அரசு எப்படி மேட்டூர் அணைக்கு தண்ணீரை திறந்துவிடும் என்று ஜெயலலிதாதான் விளக்க வேண்டும்.

டெல்டா மாவட்ட ஏழையெளிய விவசாயிகள் கூட, ஆடிப் பதினெட்டாம் தேதியன்று தங்கள் ஊர்களிலே உள்ள சிறிய சிறிய ஆறுகளுக்குச் சென்று மகளிர் எல்லாம் ஒன்று கூடி விழா எடுத்து கொண்டாடுவார்கள். ஆனால் அம்மையாரின் தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சியில் இந்த ஆண்டு தாய்மார்கள் ஆடிப் பதினெட்டாம் பேறு விழாவினைக்கூடக் கொண்டாட வழியின்றி வேதனையில் ஆழ்ந்திருக்கும்போது, உண்மைக்கு மாறான அறிக்கைகளை முதலமைச்சரே வெளியிடுகின்ற நிலைதான் உள்ளது.

மேலும் முதலமைச்சர் தனது அறிக்கையில், கடந்த மே மாதம் 28ஆம் நாளன்று இதுகுறித்து ஆய்வுக் கூட்டம் ஒன்றினை நடத்தியதாகத் தெரிவித்திருக்கிறார். ஆனால் மே 29ந்தேதியிட்ட

அவர்களுடைய அதிகாரபூர்வ பத்திரிகையிலேயே அம்மையார் அத்தகைய ஆய்வுக் கூட்டம் ஒன்றினை நடத்தியதாக எந்தச் செய்தியும் வரவில்லை. ஒருவேளை அம்மையார் ஆய்வு நடத்தி, எளிமை கருதி அந்தச் செய்தியை ஏடுகளுக்குத் தராமல் கூட இருந்திருக்கலாம். ஏனென்றால் அம்மையார்தான் விளம்பரம் விரும்பாதவர் ஆயிற்றே?

ஆனால் அம்மையார் ஆய்வு நடத்தியதாகச் சொல்லும் அதே மே 28ஆம் தேதியன்று டெல்லியில் அம்மையாரின் வலியுறுத்தலை ஏற்று, காவிரி கண்காணிப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றதாகவும், அதில் தமிழக அரசு சார்பில் தலைமைச் செயலாளர் தேபேந்திரநாத் சாரங்கி, பொதுப்பணித் துறைச் செயலாளர் எம். சாய்குமார், பொறியாளர்கள் சிவசங்கரன், ஆர். சுப்பிரமணியன் ஆகியோர் பங்கேற்று தமிழக அரசின் நிலைப்பாட்டை எடுத்துரைத்ததாகவும் செய்தி வந்திருக்கின்றது. எனவே டெல்லியில் தலைமைச் செயலாளரும், பொதுப்பணித் துறை செயலாளரும் இருந்திருக்கின்ற நிலையில், சென்னையில் அவர்கள் எவ்வாறு ஆய்வுக் கூட்டம் நடத்தினர் என்று தெரியவில்லை.

அதைப்போலவேதான் ஜூன் 15ஆம் நாளன்று பயிர்ச் சாகுபடி மற்றும் நீர்வரத்து நிலையினை ஆய்வு செய்ததாக முதலமைச்சர் ஜெயலலிதா அறிக்கையில் கூறியிருக்கிறார். அதுபற்றிய செய்தியாவது அவர்களுடைய அதிகாரபூர்வ ஏடு உட்பட எதிலாவது வந்திருக்கிறதா என்று பார்த்தால், அந்தச் செய்தியும் வரவில்லை. மாறாக அன்றைய தினம் தான் புதுக்கோட்டை இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை நடைபெற்று, அனைவரும் வெற்றிக் கொண்டாட்டம் நடத்திக் கொண்டிருந்திருக்கிறார்கள். அந்த நேரத்தில் அம்மையார் பயிர்ச் சாகுபடி மற்றும் நீர்வரத்து நிலையினை ஆய்வு செய்ததாக அறிக்கை விடுத்துள்ளார். இனிமேல் அவர்கள் ஆமாம், அந்த நாட்களில் நாங்கள் ஆய்வு நடத்தினோம், ஏடுகளுக்குச் செய்தியினைக் கொடுக்க விரும்பவில்லை, ஏனென்றால் நாங்கள் விளம்பரத்தை விரும்பாதவர்கள் என்று வேறு ஒரு அறிக்கை கூட விடலாம். ஆனால் குறுவை பாதிப்பு இல்லை என்றோ, விவசாயி கள் பாதிக்கப்படவில்லை என்றோ முதல்வரின் அறிக்கையிலே சொல்லியிருப்பது முற்றிலும் தவறான செய்தியாகும்.

மக்களை "முட்டாள்களின் சொர்க்கத்தில்" நிறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு, இந்தக் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள டெல்டா மாவட்ட மக்களுக்கு என்னென்ன உதவிகளைச் செய்யலாம் என்பது பற்றி இனியாவது உண்மையான ஆய்வு ஒன்றினை அதிகாரிகளைக் கொண்டு நடத்தி, அதிலே நல்ல முடிவுகளை மேற்கொண்டு, விவசாயிகளுக்கு கடன் நிவாரணமளித்தல், தலா பத்தாயிரம் ரூபாய் வீதம் இழப்பீடு அளித்தல் போன்றவற்றை வழங்குவது குறித்த முடிவெடுத்து; ஏடுகளின் வாயிலாக அவற்றை நாட்டுக்குத் தெரிவிக்க முதலமைச்சர் முன்வர வேண்டுமே தவிர - தவறான தகவல்களைத் தெரிவித்து நாட்டு மக்களை, குறிப்பாக விவசாயிகளைக் குழப்பாமல் இருப்பதே நல்லது.

அன்புள்ள,

மு.க.

05-08-2012

3649. வழக்கை எதிர்நோக்குகிறோம்!

உடன்பிறப்பே,

முதலமைச்சர் ஜெயலலிதா என்மீது அவதூறு வழக்கு ஒன்றைத் தொடுத்திருக்கிறாராம்! "டெசோ" மாநாட்டினை வெற்றிகரமாக நடத்திட வேண்டுமென்பதில் ஆர்வமாக இருந்ததால் என்மீது தொடுக்கப்பட்ட வழக்கினைப் பற்றி கவனிக்காமல் இருந்து விட்டேன். எதற்காக வழக்கு தெரியுமா?

கடந்த மாதம் 30ஆம் தேதி (30-7-2012) "முரசொலி" கேள்வி-பதில் பகுதியில்; "தமிழகத்தில் இதுவரை எத்தனையோ முதலமைச்சர்கள் இருந்திருக்கிறார்கள், அவர்களில் எந்தவொரு முதலமைச்சராவது பதவியில் இருக்கும்போதே இரண்டு மாத காலத்திற்கு ஓய்வு என்று ஏதோ ஒரு ஊரில் போய் தங்கியது உண்டா?" என்ற கேள்விக்கு, "இதே கேள்வியைத்தான் பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாசும் கேட்டிருக்கிறார். இந்த அளவிற்கு அவர்களுக்கு ஓய்வு தேவைப்படுகிறது போலும். அதைப்பற்றிய கவலை, அவருக்கு வாக்களித்தவர்களுக்கு அல்லவா ஏற்பட வேண்டும்" என்று நான் பதில் அளித்திருந்தேன். என்னுடைய இந்தப் பதில் ஜெயலலிதாவின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் இருப்பதாக என்மீதும், அதை வெளியிட்ட பதிப்பாளர் முரசொலி செல்வம்மீதும் தமிழக அரசு சார்பில் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

ஜெயலலிதா ஓய்வெடுப்பதைப் பற்றி இந்தக் கேள்வியில் பதிலாக நான் மட்டும் கூறவில்லை. டாக்டர் ராமதாஸ் அவர்கள் சொன்னதையும் குறிப்பிட்டுக் காட்டியிருந்தேன். அதற்காக என்மீது வழக்கு போட்டபோதே, ஓய்வெடுப்பதைப் பற்றி டாக்டர் ராமதாஸ் அவர்கள்தானே கேட்டார், நல்ல வேளையாக அவர்மீது வழக்கு இல்லை என்று எண்ணினேன். ஆனால் இன்றைக்கு அவர் மீதும் வழக்கு போட்டு விட்டார்கள். அவர்கூட ஜெயலலிதா கொடநாட்டில் ஓய்வெடுக்கிறார் என்று சொல்லவில்லை. அவர்

சொல்லியிருப்பது, "இந்தியாவில் எந்த முதலமைச்சராவது, இருக்கிற வேலையை எல்லாம் விட்டுட்டு ஓய்வு எடுக்கிறேன்னு மாசக் கணக்கில மலையில உட்கார்ந்துட்டு இருக்காங்களா?" என்றுதான் கேட்டிருக்கிறார். உடனே நமது முதலமைச்சர் அவரைத்தான் டாக்டர் ராமதாஸ் களங்கப்படுத்தி பேசிவிட்டார் என்று வழக்கு போட்டிருக்கிறார்கள்.

30-7-2012 அன்று நான் கேள்வி-பதில் பகுதியில் ஒரு கேள்விக்கு மட்டும் பதில் அளிக்கவில்லை. "மத்திய அரசின் திட்டங்களை மறைக்கின்ற மாய்மாலம்" என்ற தலைப்பில் மொத்தம் ஆறு கேள்விகளுக்குப் பதிலளித்திருந்தேன். முதல் கேள்வி காஞ்சிபுரத்தில் கழக ஆட்சியில் அமைக்கப்பட்ட "பேரறிஞர் அண்ணா கைத்தறி பட்டுப் பூங்கா" பற்றியதாகும். ஏற்கனவே வைக்கப்பட்டுள்ள இந்தப் பூங்காவின் பெயர் எழுதப்பட்டுள்ள புகைப் படத்தையே வெளியிட்டு, அந்தப் பூங்கா எப்போது அறிவிக்கப்பட்டது, அதிலே மத்திய அரசின் பங்கு என்ன, மாநில அரசின் பங்கு என்ன, அந்தத் திட்டத்தை தற்போதுதான் ஜெயலலிதா அறிவிப்பதைப் போல கூறியிருப்பது சரிதானா என்று நான் கேட்டிருக்கும் கேள்விகளாகும். இதற்கு அரசு சார்பில் இதுவரை பதிலளிக்கவில்லை, வழக்கு போடவில்லை. காரணம் மறைக்கப்பட்ட உண்மைகள் குறித்து நான் எழுப்பிய கேள்வியில் இந்த ஆட்சியினரை, முதலமைச்சரைக் களங்கப்படுத்தவில்லையாம்! இந்தக் கேள்விக்காக ஏன் வழக்கு போடவில்லை? ஒருவேளை எனது இந்தப் பதிலை உண்மை என்று ஜெயலலிதா ஒப்புக் கொண்டுவிட்டாரா?

இரண்டாவது கேள்வி, இந்த ஆட்சியில் விலைவாசி பற்றியதாகும். அதற்கும் முதல் நாள் பொதுவான ஏடுகளில் வெளிவந்த விலைவாசிகளைப் பற்றிக் குறிப்பிட்டு, அ.தி.மு.க. ஆட்சியிலே எந்த அளவிற்கு விலைகள் உயர்ந்திருக்கின்றன என்ற புள்ளி விவரங்களைக் கொடுத்திருந்தேன். அ.தி.மு.க. ஆட்சியில் தொடர்ந்து ஏறிவரும் விலைவாசியினாலும் இந்த ஆட்சியினருக்கு களங்கம் ஏற்படுத்தப்படவில்லையாம்! இதற்காக ஏன் என் மீது வழக்கு தொடுக்கவில்லை? அ.தி.மு.க. ஆட்சியில் விலைவாசிகள் உயர்ந்து விட்டன என்று தன்னிலை விளக்கம் தருகிறார்களா?

மூன்றாவது கேள்வி, அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு "மாமூல்" கொடி கட்டிப் பறக்கிறதே என்ற கேள்வியாகும்.

அதற்கும் "காவல் நிலையத்தின் கதை" என்ற தலைப்பில் "ஆனந்தவிகடன்" வார இதழில் வெளிவந்த விவரங்களையே கொடுத்து எந்த அளவிற்கு "மாமூல்" கொடி கட்டிப் பறக்கிறது என்பதை விலாவாரியாக எழுதியிருந்தேன். காவல் துறையைக் கையிலே வைத்துள்ள முதல் அமைச்சருக்கு "மாமூல்" பற்றிய விபரங்களாலும் களங்கம் ஏற்படவில்லையாம்! ஏனென்றால் ஒவ்வொரு நாளும் காவல் துறையின் சில அதிகாரிகள் லஞ்சம் வாங்குவது பற்றி செய்திகள் வந்து கொண்டே இருக்கிறதே?

இன்னொரு கேள்வி "இந்தியா டுடே" பத்திரிகையில் வெளிவந்த ஒரு கட்டுரையில் செங்கோட்டையன் பதவி நீக்கம், கட்சி மற்றும் ஆட்சியில் சசிகலாவின் ஆதிக்கம் மீண்டும் வருவதைக் காட்டுகிறது என்பது பற்றியதாகும். வெளிச்சத்திற்கு வரும் உள்கட்சி நிலைமைகளாலும் முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு எந்தக் களங்கமும் இல்லையாம்!

ஐந்தாவது கேள்வி, அரசின் மிகப் பெரிய திட்டங்களையும் பாலங்களையும் தலைமைச் செயலகத்தில் இருந்தவாறே திறந்து வைக்கும் முதலமைச்சர் ஒரு வங்கியின் சிறிய ஏ.டி.எம். மையத்தை நேரில் கலந்து கொண்டு திறந்து வைத்திருக்கிறாரே என்பதாகும். அதிலும் பெரிய திட்டங்களைத் தொடங்கி வைக்க முடிவெடுக்காத நிலையில் சிறிய ஏ.டி.எம். மையத்தைத் தொடங்கி வைத்ததில் எந்த ஆட்சேபணையும் இல்லையாம்!

ஆனால் "தமிழகத்தில் எந்தவொரு முதலமைச்சராவது பதவியில் இருக்கும் போதே, இரண்டு மாத காலத்திற்கு ஓய்வு என்று ஏதோ ஒரு ஊரில் தங்கியது உண்டா" என்ற கேள்விக்கு, "இதே கேள்வியைத் தான் பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாசும் கேட்டிருக்கிறார். அந்த அளவிற்கு அவர்களுக்கு ஓய்வு தேவைப்படுகிறது போலும்! அதைப் பற்றிய கவலை அவருக்கு வாக்களித்தவர்களுக்கு அல்லவா ஏற்பட வேண்டும்" என்று பதில் அளித்திருந்தேன். இந்தப் பதிலிலே முதலமைச்சர் ஜெயலலிதாவை களங்கப்படுத்துவது போல ஏதாவது உள்ளதா என்பதைத் தமிழ்நாட்டு மக்கள், நடுநிலையாளர்கள் விருப்பு வெறுப்பின்றிச் சிந்திக்கக் கூடியவர்கள்தான் கூற வேண்டும்.

அரசு வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ள மனுவில் கொடநாடு எஸ்டேட்டில் முதலமைச்சர் ஓய்வு எடுத்ததாகச் செய்தி

போடப்பட்டுள்ளது, அந்தச் செய்தி தவறானதாகும், உண்மைக்கு மாறானதாகும், முதலமைச்சர் கொடநாட்டில் ஞாயிற்றுக் கிழமைகளில்கூட முதலமைச்சர் ஆற்ற வேண்டிய பணிகளை ஆற்றினார் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்.

முதலமைச்சர் ஜெயலலிதா ஓய்வு எடுக்கிறார், அது தவறு என்று நான் என் பதிலில் கூறவே இல்லை. இதற்கு முன்பு எந்த முதலமைச்சராவது அவ்வாறு ஓய்வு என்ற பெயரில் தங்கியது உண்டா என்ற கேள்விக்கு, இதே கேள்வியை டாக்டர் ராமதாஸ் அவர் களும் கேட்டிருக்கிறார், அந்த அளவிற்கு அவர்களுக்கு ஓய்வு தேவைப்படுகிறது போலும், அதைப் பற்றிய கவலை அவருக்கு வாக்கு அளித்தவர்களுக்கல்லவா ஏற்பட வேண்டும் என்றுதான் பதில் அளித்திருக்கிறேன். இதில் என்ன தவறு உள்ளது?

இன்னும் சொல்லப்போனால், இதற்கு அடுத்த கேள்விக்கு நான் பதில் கூறும்போதே, "நமது முதலமைச்சர் ஜெயலலிதா கொடநாடு சென்றும் ஓய்வெடுக்கவில்லை, அன்றாடம் அறிக்கை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்" என்று எழுதியிருக்கிறேனேதவிர, முதலமைச்சர் ஓய்வெடுத்துக் கொண்டிருப்பதாக அந்தப் பதிலிலே கூறப்படவில்லை. இந்த நிலையில் என்மீது வழக்கு தொடுத்திருப்பது வேடிக்கையாக இல்லையா?

முதலமைச்சர் ஒன்றரை மாதங்களுக்குப் பிறகுகூட தலைநகரம் திரும்பியிருக்க வேண்டியதில்லை. விரும்பி மாற்றிக் கொண்ட சென்னை, கோட்டை அலுவலகத்துக்கே வராமல்; கொடநாட்டில் இருந்தபடியே வழக்கம் போல அவர் தன் பணிகளைத் தொடரலாம். அவர் மட்டுமல்ல; அவரது அமைச்சரவையிலே உள்ள ஒவ்வொரு அமைச்சரும் தத்தமது ஊர்களிலேயே தங்கிக் கொண்டு, கடமை ஆற்றலாம். ஏன் அதிகாரிகள் எல்லாம் கூட அவரவர்கள் வீடுகளிலேயே தங்கிக் கொண்டு கோப்புகளையெல்லாம் வீட்டிலே இருந்தபடியே கையெழுத்திட்டு அனுப்பலாம். இது பேச்சுரிமை-எழுத்துரிமை-கருத்தை வெளியிடும் உரிமையுள்ள ஜனநாயக நாடு என்று நினைத்துக்

கொண்டு அதைப்பற்றி யாராவது வாயைத் திறந்தால் உடனே அரசு வழக்கறிஞர்களைக் கொண்டு நீதிமன்றங்களிலே வழக்குகளைத் தொடுக்கலாம்.

ஒரு ஜனநாயக நாட்டில் பேச்சுரிமை உண்டு, எழுத்துரிமை உண்டு. ஆனால் தமிழகத்திலே எத்தனை வழக்குகள்? என் மீது வழக்கு - என் மகன், மு.க. ஸ்டாலின் மீது வழக்கு - இன்றைக்கு டாக்டர் ராமதாஸ் மீது வழக்கு - எதிர்க்கட்சித் தலைவர் மீது வழக்கு - பத்திரிகைகள் மீதெல்லாம் வழக்கு - நக்கீரன் மீது வழக்கு - முரசொலி மீது வழக்கு - தினகரன் மீது வழக்கு - இந்தியா டுடே மீது வழக்கு - இந்து பத்திரிகை மீது வழக்கு - டைம்ஸ் ஆப் இண்டியா மீது வழக்கு - ஆனந்த விகடன் மீது வழக்கு! என்ன நடக்கிறது தமிழ்நாட்டிலே?

நான் எழுதிய பதிலில் அதாவது முதலமைச்சர் ஜெயலலிதா கொடநாடு சென்றும் ஓய்வெடுக்கவில்லை என்ற வார்த்தைகளுக்குப் பிறகும் என் மீது அவதூறு வழக்கைத் தொடுத்துள்ள ஜெயலலிதா அவர்கள், கடந்த காலத்தில் தி.மு. கழக ஆட்சியின் போது முதலமைச்சராக இருந்த என்னைப் பற்றி வெளியிட்ட ஒரு சில விமர்சனங்களை உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

- கோடி கோடியாய்க் கொட்டி வைத்திருக்கும் கஞ்சப் பிரபு!
- எச்சில் கையால் காக்கையைக் கூட விரட்டாத மனிதர்!
- புத்தக வியாபாரம் நடத்தி வேடிக்கைப் பிச்சையெடுத்து வீட்டுக்குப் பணம் சேர்க்கிறார்.
- அவர் ஒரு தீய சக்தி.
- மைனாரிட்டி தி.மு.க. அரசின் முதலமைச்சர் கருணாநிதியின் நிர்வாகத் திறமையின்மையாலும், சுயநலப் போக்கினாலும், தீவிரவாத ஆதரவுப் போக்கினாலும், தமிழக மக்கள் தொடர்ந்து துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.
- ஒகேனக்கல் திட்டத்தை நிறைவேற்ற துணிவில்லாத, வக்கில்லாத, திராணியற்ற முதலமைச்சர், கோழைத்தனமான முதலமைச்சர் கருணாநிதி பதவி விலக வேண்டும். இத்தகைய முதலமைச்சர் தமிழ்நாட்டிற்குத் தேவையில்லை.
- டிக்கெட் இன்றி சட்டை பாக்கெட்டில் பணமின்றி திருவாரூரிலிருந்து திருட்டு ரெயில் ஏறி வந்தவர்.

இவ்வாறு என்னைப் பற்றி குறிப்பிட்டது மாத்திரமல்ல; மேலும் பல அகில இந்தியத் தலைவர்களைப் பற்றி ஜெயலலிதா தெரிவித்த களங்கமில்லாத சில வார்த்தைகளைச் சொல்லட்டுமா?

- திருமதி சோனியா காந்தி பற்றி வெளிநாட்டுக்காரி என்றும், இந்திய பணத்தைக் கொள்ளை அடிக்கிறார் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.
- திரு. வாஜ்பாய் அவர்களைப் பற்றி நடுநிலை தவறி நடக்கிறார் என்றார்.
- திரு. அத்வானி அவர்களைப் பற்றி செலக்டிவ் அம்னீசியா என்றார்.
- திரு. நரசிம்மராவ் அவர்களைப் பற்றி செயல்படாத பிரதமர் என்றும் அவருக்கும் தனக்கும் தலைமுறை இடைவெளி என்றும் குறிப்பிட்டார்.
- திரு. ராஜீவ் காந்தி கொலையில் மூப்பனாருக்கும் பங்கு உண்டு என்று சேலத்தில் பேசினார்.
- திரு. சென்னா ரெட்டி தன்னிடம் தவறாக நடந்து கொண்டார் என்று பேரவையிலேயே சொன்னார்.
- திரு ராஜீவ் காந்தி பத்து மணிக்கே தூங்கச் சென்று விட்டார் என்றார்.
- திரு. சந்திரபாபு நாயுடு மோசடி பேர்வழி என்றார்.
- மக்கள் திலகம், எம்.ஜி.ஆரை ஜானகி அம்மையார் மோரில் விஷம் வைத்துக் கொன்று விட்டார் என்றார்.
- திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியத்தை இவ்வளவு அகம்பாவம் கூடாது என்றார்.
- கர்நாடக மாநில அரசையே கலைக்க வேண்டுமென்றார்.

இப்படியெல்லாம் பேசி அகில உலகப் புகழ் பெற்றவர் தான் நான் ஏதோ எழுதி அவரைக்களங்கப்படுத்தி விட்டதாக வழக்கு தொடுத்துள்ளார். அந்த வழக்கைச் சந்திக்க நான் தயார். வழக்கு வரட்டும். அப்போது இந்த உலகத்திற்கு சொல்லப்பட வேண்டிய பல செய்திகள் வெளிவரும். முதன் முதலாக முதல் அமைச்சரே சென்று மாதக்கணக்கில் தங்குகின்ற அளவிற்கு

உள்ள அந்த கொடைநாடு எஸ்டேட் யாருடையது? அது எப்படி வாங்கப்பட்டது? என்ன விலை? அந்தக் கொடநாடு அரண்மனையை ஜெயலலிதா முதலமைச்சர் என்ற முறையில் அதிகாரப்பூர்வமாகத் தங்குவதற்கு சட்டம் இடமளிக்கிறதா? அந்த இடம் தனியாருக்குச் சொந்தமானது என்றால், அங்கே ஒரு முதலமைச்சர் சென்று தங்குகின்ற காரணத்தால், அந்தத் தனியார் இந்த அரசிலே உள்ளவர்களிடம் செல்வாக்கைக் காட்டி காரியம் சாதித்துக் கொள்ள முடியுமல்லவா? உள்ளூரிலே உள்ள மக்களுக்கு அந்த எஸ்டேட் வழியாக செல்லக் கூடிய வாய்ப்பு இருந்ததுகூட தடுக்கப்பட்டு, அது உச்ச நீதிமன்றம் வரை நடைபெற்று, அந்தப் பாதையை அனுமதிக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றமே அனுமதித்ததே, அது பற்றிய விவரம் என்ன? முதலமைச்சர் அங்கே சென்று தங்கிய காரணத்தால், அவரைச் சந்திக்க அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் எல்லாம் சென்றார்களே, அதற்கான செலவு எவ்வளவு? அது யாருடைய பணம்? மக்களின் வரிப் பணமா அல்லது சொந்தப் பணமா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை காண்பதற்காகவாவது வழக்கை எதிர்நோக்குவோமாக!

அன்புள்ள,

மு.க.

15-8-2012



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

செப்டம்பர் 2022